1884
Q26 m211, M49
M4P.20
162394

நற்போதகம்
1884
V 30



குப் பிரயோஜனமாகவும் நன்மையாகவும் அன்பாய்ச் செய்யப்பட்டவைகளாயிருக்கின்றன. லேவியர் ஆசாரியர்போல தீர்க்கதரிசிகளும் விவாகஞ் செய்திருந்தார்கள். 1 இரா. 20: 25. விவாகம் யாவராலும் கனமாய் எண்ணப்படவேண்டியது. இந்த விதவையின் புருஷன் பக்தியுள்ளவன். அப்படிப்பட்டவனென்று எலிசாவும் அறிந்திருந்தார். பாகாலுக்கு முழங்காற்படியிடாத 7000-பேரில் இவரும் ஒருவர்தான். இவரோ கடன்பட்ட எளியவராய் மரித்துப்போனார். ஏசபேலுடைய பல துன்பங்களினால் இவர் கடன் இறுக்கக்கூடாமலிருக்கலாம். அந்த விதவை பிழைக்கும்படி அவளுக்கு உதவியாக (2) குமாரர் தவிர வேறொன்றுமில்லை. கடனாளிகள் அவர்களைத் தங்களுக்கு அடிமைகளாக்கவோ அல்லது மற்றவர்களுக்கு விற்றுப்போடவோ (யாத். 21: 2. லேவி. 25: 39. ஏசா. 50: 1. மத். 18: 25.) நியாயப்பிரமாணத்தின்படி வந்தார்கள். எலிசா நான் என்ன செய்வேன். நானும் எளியவனாயிற்றே. கடன்காரருக்குக் கடனைக்கொடுக்க உனக்கு என்ன உண்டென்று கேட்கவே அவள் ஒரு குடம் எண்ணெய் என்றாள். அவருடைய சொற்படி அயல் வீட்டுக்காரரிடத்தில் வெறும் பாத்திரங்களை வாங்கி கதவைப் பூட்டிக்கொண்டு அவைகளில் கொஞ்சம் கொஞ்சமாய் வார்க்க பாத்திரங்களெல்லாம் எண்ணெயால் நிரம்பிற்று. மற்றவர்கள் இந்த அற்புத செயலைத் தடுக்காமலும் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு போய் விடாமலிருக்கவும், அவள் மாத்திரம் அதின் நன்மையை அடையவும், கடன்காரர் பாத்திரம் நிரம்பப்படுமுன் அவைகளைப் பறித்துக்கொள்ளாமலிருக்கவும் அவள் ஜெபத்தோடும் துதியோடும் அந்த வேலைசெய்வதற்குத் தடைவராதபடிக்கும் இது தேவனுடைய செய்கையென்று தெளிவாய் அறிந்துகொள்ளும்படிக்குமே கதவைப் பூட்டச்சொன்னார். இப்படியே சரேப்தா ஊர்க் கைம்பெண்ணின் மாவும் அதிகரித்தது. இந்தப் பெரிய அற்புதத்தால் அவளுடைய கடனும் நீங்கிற்று. அவளும் அவள் பிள்ளைகளும் பிழைப்பதற்கும் வகையாயிற்று.

## (6) எலிசா சூனேமியாளுக்குப் புத்திரபாக்கியங் கொடுத்தது.

2 இரா. 4: 8—17.

பிள்ளையில்லாதவர்களாயும், வயதுசென்றவர்களாயுமிருந்த ஆபிரகாம், ஈசாக், மனோவா, எல்க்கானா என்பவர்களுக்கு அற்புதமாய் ஒரு குமாரன் கிடைத்ததுபோல சூனேமியாளுக்கும் கிடைத்தது. சூனேம, ஈசக்கார் கோத்திர நாட்டில் கர்மேல் மலைக்குச் சமீபமாயிருந்தது. சமாரியாவுக்கும் கர்மேலுக்கும் நடுவேயிருந்தபடியால் தீர்க்கதரிசி அடிக்கடி அந்தப் பாதையாய்க் கடந்துபோவார். 2: 25. ஐசுவரியமுள்ள இந்தப் பெண்பிள்ளை தன் வீட்டில் தீர்க்கதரிசியை உபசரித்தும் அவரால் தன் வீட்டுக்கு ஆசீர்வாதங் கிடைக்கும்படி அவர் விருப்பத்தோடே எப்போதும் தன் வீட்டில் வந்து தங்கவும் போதிக்கவும் அவருடைய தயவைப் பெறவும் ஆசையுள்ளவர்களாய்த் தன் மேல்வீட்டில் அவருக்கென்று வசதியான ஒரு அறையையும், அவர் ஜெபிக்கவும், வாசிக்கவும், எழுதவும், படுக்கவுந்தக்க ஜாமான்களையும் ஆயத்தப்படுத்தி வைத்தாள். ஆபிரகாம் தேவதூதர்களை உபசரித்தபோது அவருக்கு ஒரு குமாரன் பிறப்பானென்ற வாக்குத்தத்தம் பெற்றதுபோல் சூனேமியாளும் எலிசா தீர்க்கதரிசியை

உபசரித்ததால் அவளுக்கும் ஒரு குமாரன் பிறப்பானென்ற அன்பான வாக்குத்தத்தஞ் செய்யப்பட்டது. (ஆதி. 18: 10, 14.)

தீர்க்கதரிசி இஸ்ரவேலின் இராஜாவுக்கும் ஆபத்துக்காலத்தில் அவன் சேனைக்கும் தண்ணீர் கிடைக்கச்செய்த பெரிய தயவினாலே அவளுக்காக இராஜாவிடத்தில் பரிந்துபேசலாமென்று சொல்லியிருப்பார். அவளோ அதிகச் சொத்துள்ளவளும் தன் இனத்தாரால் நன்றாய் மதிக்கப்பட்டவளுமானதால் இராஜ அரண்மனையில் என்னவகையான உத்தியோகமும் தயவும் வேண்டாமென்றபடியால் எலிசா தன் வேலைக்காரனிடத்தில் ஆலோசித்துக்கொண்டு அவளுக்குப் பிரியமும் அவசியமுமான நன்மையை அவளுக்காக தேவனிடத்தில் மன்றாடச் சித்தமானார். சூனேமியாள் எலிசாவுக்கு ஒரு வீட்டைக் கட்டிக்கொடுத்தபடியால் அவளுக்கும் தேவன் ஒரு வீட்டைக் கட்டிக்கொடுத்தார்.

## (7) சூனேமியாள் மகன் இறந்துபோனபோது எலிசா அவனை உயிரோடே எழுப்பினார்.

2 இரா. 4: 18—38.

இந்தப் பையன் பெற்றோருக்கு முதிர்வயதில் பிறந்தபடியால் அவர்களுக்கு அதிகப் பிரியம். அவன் இளவயதின் துன்பங்களைக் கடந்து, தன் தகப்பனோடே வயலுக்குப்போகத்தக்க திறமையுண்டாயிற்று. தகப்பனோ வயலின் அறுப்பைப் பார்க்கிலும் தன் செல்லப் பிள்ளையைப் பார்ப்பதே அவனுக்கு அதிகப் பிரியம். குளிர்ச்சியினாலோ, சூரிய வெப்பத்தினாலோ அவனுக்கு மண்டை நோவுண்டாயிற்று. உடனே அவன் அந்தப் பிள்ளையைத் தாய் வசம் ஒப்புவித்தான். அவள் மடியில் வைத்து உறக்காட்டவே, அவன் இறந்துபோனான். காலையில் சுகம். மதியம் மரணம். இந்தக் குழந்தை ஜெபத்தினாலும், வாக்குத்தத்தத்தினாலும், முதிர்வயதிலும் கிடைத்த பிள்ளை. அருமைப் பிள்ளை இறந்துபோனது அவளுக்கு எவ்வளவோ கிலேசத்தை உண்டுபண்ணவேண்டியது. இந்தத் துயரவேளையில் அந்தப் பக்தியுள்ள தாய் முறுமுறுக்கவுமில்லை, அழவுமில்லை. எப்படியும் அவன் திரும்பவும் உயிர்ப்பிக்கப்படுவானென்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது. எபி. 11: 9. சரேப்தா ஊர் கைம்பெண்ணின் மகன் இறந்துபோனபோது எலியா உயிரோடெழுப்பின சரித்திரம் கேட்டிருப்பாள். எலியாவின் ஆவி எலிசாவின்மேல் இறங்கியிருப்பதையும் அறிந்திருந்தாள். கிருபையாய்த் தந்த தேவன் கிருபையாய்த் திரும்பவும் தருவாரென்று விசுவாசித்தாள். எபி. 11: 35. இந்த விசுவாசத்தினாலே குழந்தையை அடக்கஞ்செய்யப் பிரயெத்தனஞ்செய்யாமல், தீர்க்கதரிசிக்கும் தேவநாமத்துக்கும் நிந்தை வராமலிருக்கவும், புருஷன் துக்கத்துக்குள்ளாகிப் புலம்பாமலிருக்கவும், அவனைத் தீர்க்கதரிசியின் படுக்கையில் கிடத்திப்போட்டு செய்தி அறிவிக்கும்படி கர்மேல் மலையிலிருக்கிற தீர்க்கதரிசியண்டைக்கு விரைவாய்ப் பிரயாணஞ்செய்தாள். அவள் ஓய்வுநாட்களிலும், மாதப்பிறப்புகளிலும் பக்தியுள்ளவர்களோடே போய் அவரோடே ஜெபிக்கிறதும், தேவனைத் துதிக்கிறதும் வழக்கம். இக்காலத்தில் அப்படிப்பட்ட விசேஷித்த நாட்களில்லாததால் புருஷன் ஆக்ஷேபித்தாலும், தாழ்மையாய் உத்தரவுபெற்றுக்கொண்டு கர்மேல் மலையிலுள்ள கல்



விச்சாலையிலிருக்கிற எலிசாவண்டைக்குப் போகவே அவரும் கேயாசியைவிட்டு சுகசெய்தியை விசாரிக்க முற்றும் தெளிவாய் அவனிடத்தில் சொல்ல மனமில்லாமல், வெகு பணிவாய் நியாயம் பாராட்டி தீர்க்கதரிசியிடத்தில் தன் துயரத்தை அறிவிக்கிறாள். நான் அன்னாளைப்போல ஒரு குமாரனை விருப்பமாய்க் கேட்கவுமில்லை. இராகேலைப்போல நீர் எனக்குப் பிள்ளை தராவிட்டால் செத்துப்போவேனென்று சொல்லவுமில்லையே. நீர் எனக்கு வலிய ஒரு குமாரனைத் தந்தீர் அவன் இப்போது இறந்துபோனான். அவனை உயிர்ப்பிக்க உம்மாலாகுமென்று விசுவாசத்தோடே பேசுகிறாள். எலிசா கேயாசியைக் கூப்பிட்டு, மோசேயின் கோலைக்கொண்டு தேவன் அநேக அற்புதங்களைச் செய்தாரே. (யாத். 14: 16.) சால்வையினாலும் அதிசயம் நடந்ததே. (2 இரா. 2: 8.) அதை நினைத்து தமது கோலைக் கொடுத்து அதை அந்தப் பிள்ளையின் முகத்தில் உயிர்போகுமுன் வைக்கும்படி தீவிரமாயும் (லூக். 10: 4.) இரகசியமாயும் அற்புத சங்கதி நடக்கும்படி அனுப்பவே சூனேமியாள் கேயாசியை நம்பாமலும், தீர்க்கதரிசி இவ்வளவு தூரத்திலிருந்து அற்புதம் நடப்பிக்கக் கூடாதவரென்று (மத். 9: 18. 13: 58. 17: 20.) எண்ணினதாலும், எலிசாவே கூட வரும்படிக்கு அலட்டிக் கேட்கிறாள். கேயாசியும் கற்பிக்கப்பட்டபடி செய்தும் பிள்ளை பிழைக்கவில்லை என்றான். அதின்பேரில் தீர்க்கதரிசி போய்க் கதவைப் பூட்டிக்கொண்டு ஜெபத்தியானஞ்செய்து, சவத்தின்மேல் குப்புறப் படுத்து, தேவவல்லமையால் அதை உயிர்ப்பித்தார். (1 இரா. 17: 21. அப். 20: 10.) நாம் ஜெபத்தில் தளர்ந்துபோகாதபடிக்கு தேவன் நமக்கு நன்மைசெய்யுமட்டும் பொறுமையோடே காத்திருக்கும்படி படிப்பிக்கிறார். அற்புதங்கள் சிலவை உடனேயும், சிலவை படிப்படியாயும் நடக்கின்றன. (1 இரா. 18: 44, 45. மாற். 8: 24, 25.) முதல் ஆதாம் படைக்கப்பட்டபோது தேவன் அவனுக்கு ஜீவசுவாசத்தை ஊதுகையில் அவனுக்கு உயிர் உண்டாயிற்றென்பதற்கு அடையாளமாகத் தும்மினானென்ற பாரம்பரையுண்டு. அந்தப்படி இந்த குழந்தையும் தும்மினதால் அதற்கு உயிர் வந்ததென்ற நிச்சய அடையாளமாயிற்று. சிலர் தும்முகிறதினாலே தலையிலுள்ள நோயெல்லாம் அகன்றுபோமென்பார்கள். தாயானவள் வெகு வணக்கமாயும் சந்தோஷமாயும் பிள்ளையை எடுத்துப்போய், (அப். 20: 12.) தேவன் கொல்லவும், உயிர்ப்பிக்கவும் வல்லவரென்றும், ஜெபமானது மரணத்தை ஜெயிக்க வல்லமையுள்ளதென்றும், விசுவாச வல்லமை இன்னதென்றும் இந்த அற்புதத்தில் கண்டு எல்லாரும் தேவனை மகிமைப்படுத்தக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம்.

## (8) எலிசா கில்காலில் நஞ்சுகலந்த கூழைச் சுத்தமாக்கினது.

இவர் முன் எலியாவோடே கில்காலிலிருந்து வந்தவர். அங்கே தீர்க்கதரிசிகளின் பள்ளிக்கூடமுண்டு. பஞ்சமுள்ள இந்தக்காலத்தில் அவர்களைப் போதிக்கவும், தைரியப்படுத்தவும் அங்கே போனார். எலியாவின் காலத்தில் ($3\frac{1}{2}$) வருஷம் பஞ்சமிருந்ததுபோல எலிசாவின் காலத்திலும் ஜனங்களின் அக்கிரமங்களினிமித்தம் (7) வருஷம் பஞ்சமிருந்தது. (8: 1.) தீர்க்கதரிசிகளின் புத்திரர் மற்றவர்களுக்குப் போதிக்கும்படியாக எலிசாவின் ஞானத்தைக் கேட்கும்படிக்கு அவனுக்கு முன்பாக உளுக்கார்ந்திருந்தார்கள். 2: 3. அப். 22: 3. லூக். 10: 39. தீர்க்கதரிசிகளின் புத்

கிரர் தமது பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கையில் அவர்களுக்கு பஞ்சகாலத்தில் உயர்ந்த போசனங் கிடையாததால் கூழ்க்காய்ச்சும்படி எலிசா தமது வேலைக்காரனுக்குக் கற்பித்தார். இப்படியே கிறிஸ்துநாதரும் இரண்டு சமையங்களில் தமது போதகத்தைக் கேட்டவர்களுக்கு அற்புத வகையாய்ப் போஷித்தார். வேலைக்காரன் கூழ்க்காய்ச்சுகையில் கீரைப் பிடுங்கப்போனவன் பேய்க்கும்மட்டிக் கீரையைக் கொண்டுவந்து அவைகளை அறிந்து பானையிலே போடவே போசனமுழுவதுங் கசப்பாய்ப் போயிற்று. ஒருவரும் அதில் சாப்பிடக்கூடவில்லை. இந்தச் செடி மோசமுள்ளதென்று உடனே தெரியவந்தது. (யோபு 12: 11.) முன் உப்பினால் கசப்புத் தண்ணீரை நல்ல தண்ணீராக்கினவர் இப்போது மாவினால் கசப்புக் கூழைச் சுத்தமாக்கினார். கூழைக் கட்டியாக்க முன்னாடியே மாவுபோட்டிருந்தாலும் அது மனித கையால் போடப்பட்டது. இப்போது இந்த மாவே மாறுதலை உண்டாக்காமல் தேவவல்லமையினாலே எலிசாவின் கையினாலே போட அது சுத்தமாயிற்று. இப்போது கூழில் சாவுமில்லை, சேதமுமில்லை. (யாத். 15: 25. 2 இரா. 2: 21. 5: 10. யோவா. 9: 6.) இந்த அற்புதத்திலும், அடுத்த அற்புதத்திலும் எலிசா தமது போதகர்தைக் கேட்டவர்களுக்குப் போசனங்கொடுக்க அதிகக் கவலையுள்ளவரென்பதைக் காட்டுகிறார். சங். 37: 19.

## (9) எலிசா 100-மனிதரை 20-கோதுமை அப்பத்தால் திருப்தியடையச் செய்தார்.

2 இரா. 4: 42—44.

இஸ்ரவேலின் ஒரு பக்தியுள்ள மனிதன் பாகால் சாலிசாவிலிருந்து (1 சாமு. 9: 4.) தேவனுடைய மனுஷனுக்கு (1 சாமு. 9: 7.) முதற்பலனான (20) வாற்கோதுமை அப்பங்களைகொண்டுவந்தான். இந்த அப்பம் ஆசாரிமார் லேவிமாருக்குரியது. (எண். 18: 12.) தீர்க்கதரிசிகளும் ஆசாரிமாருடைய வேலைகளைப் பார்த்தபடியாலும், பக்தியுள்ள இஸ்ரவேலர் எருசலேமுக்குப் போகக்கூடாதபடியாலும், பக்தியுள்ள இஸ்ரவேலர் முதற்படைப்புகளைத் தீர்க்கதரிசிகளுக்குக் கொடுத்தார்கள். இப்படிப்பட்ட நன்கொடைகளினாலேயே தீர்க்கதரிசிகளின் பள்ளிக்கூடங்களும் ஆதரிக்கப்பட்டு வந்தன. வெகு தொலையிலிருந்து ஒருவன் (20) அப்பம் கொண்டுவந்திருந்தால் சமீபத்திலுள்ள எத்தனையோ பக்தர் எலிசாவையும் தீர்க்கதரிசிகளின் புத்திரரையும் போஷித்திருக்கமாட்டார்கள். இந்த 20-சிறு அப்பங்களால் 100-பேரை அதிசயமாய்ப் போஷிப் யுமிருந்தது. மத். 14: 20. மத். 15: 37. யோ. 6: 13. லூக். 9: 17. [illegible]னும் இப்படியே தமது சபைக்கு வாக்குத்தத்தஞ்செய்திருக்கிறார். சங். 132: 15. தேவனுக்குச் செய்யவேண்டிய ஊழியத்தில் யார் யார் தங்கள் காலத்தைச் சந்தோஷமாய்க் கழிக்கிறார்களோ அவர்கள் எப்படியும் அதிசயமாய்ப் போஷிக்கப்படுவார்களென்று இந்த (2) அற்புதங்களினாலும் கிறிஸ்துநாதர் செய்த அற்புதங்களினாலும் படிக்கிறோம்.



# வருஷாந்த ஜெபவாரம்.

1884ஆம் ஜனுவரிமீ 6-முதல் 13உ-வரை.

## ஜெபவாரத்தில் ஒவ்வொருநாளும் விண்ணப்பஞ் செய்யவும் புத்திசொல்லவும் ஆலோசனையாக குறிக்கப்பட்டிருக்கிற விஷயங்கள்.

### ஜனுவரிமீ 6உ ஞாயிறு.

பிரசங்கங்கள்:—"நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினால் நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்." யோவான் 14: 13, 14. 1 யோ. 5: 14, 15.

### ஜனுவரிமீ 7உ திங்கள்.

ஸ்தோத்திரம்:—தேவகிருபைக்குள் நாம் அழைக்கப்பட்டும் தெரிந்துகொள்ளப்பட்டும் இருக்கிறதற்காகவும், கடந்த வருஷத்தில் நேரிட்ட சகலவித துன்பங்களினின்றும் விபத்துகளினின்றும் காக்கப்பட்டிருக்கிறதற்காகவும், தெய்வீக விசாரணையின் கீழ் நமக்குக் கிடைத்திருக்கிற திவ்ய ஈவுகளுக்காகவும், சகல ஜாதிகளும் அனுபவித்திருக்கிற சமாதான சௌக்கியத்துக்காகவும், சுவிசேஷ பிரசங்கத்துக்கு தகுந்த சாவகாசங்கள் கிட்டினதற்காகவும், பல தேசங்களிலும் ஜனங்கள் ரக்ஷணை கண்டடைய செய்யப்பட்ட பிரயத்தனங்களை ஆவியானவர் பலிதமாக்கினதற்காகவும், ஐக்கிய ஜெபத்தின் பலனாக வேதத்திற்கும் நல்லொழுக்கத்திற்கும் இருந்த இடறல் விலகிப்போனதற்காகவும், வேதாகம வாசிப்பில் அதிகத் தாற்பரியம் உண்டாகியிருப்பதற்காகவும் ஸ்தோத்திரம். சங். 103: 145. 50: 23. 2 நாளா. 20: 20—29. எபே. 1-அதி. 1 பேது. 1: 1—9. 1 சாமு. 2: 1—10. உபா. 32: 1—10. பிலிப். 4: 1—9. ஏசா. 12-அதி.

### ஜனுவரிமீ 8உ செவ்வாய்.

பாவ அறிக்கை:—குடிவெறி, கர்த்தருடைய நாளை அலட்சியம்பண்ணுதல், சிற்றின்ப ஆசைப் பெருக்கம், அவபக்தியின் அதிகரிப்பு, செல்வங்களைத் தகாதவிதமாய் செலவுசெய்தல், சிட்சைகள் தேவனாலேயே உண்டாகின்றன என்று திட்டமாய் உணர்ந்து அறிக்கைசெய்யாதிருத்தல், தேவவசனத்தை அசட்டைசெய்தல் முதலிய தேச பாவங்களை அறிக்கையிடுதல்; தங்கள் அழைப்புக்கு விரோதமான ரண்டகம், பொறுமைத் தாழ்வு, அன்புத்தாழ்ச்சி, திவ்ய ஊழியத்தில் இருக்கவேண்டிய சுறுசுறுப்பிலும் வைராக்கியத்திலும் குன்றுதல், அகதிகள் அறிவிலிகள் கெட்டுப்போனோர் முதலியவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளில் காணப்பட்ட வீழ்ச்சை முதலிய தனிப் பாவங்களை அறிக்கையிடுதல்; பரிசுத்த ஆவியானவர் சகலருக்குள்ளும் பாவ உணர்வைப் பிறப்பிக்கவும், எத்திறத்

தோருக்கும் பாவமன்னிப்பும், இருதய சுத்தியும், தேவசித்தத்துக்கு அமையும் குணமும், சுத்தாங்க கீழ்ப்படிதலும், திவ்ய ஊழியத்தில் உட்கருத்தான வாஞ்சையும் கிருபையாய் அருளிச்செய்யவேண்டும் என்று ஜெபம். சங். 51. எசா. 58-அதி. புலம்பல் 3: 40—42. 56—58. யாக். 4: 1—17. 1 கொ. 3: 1—23. 1 யோ. 1: 5. 2: 11. மத். 3: 1—12. வெளி. 3: 14-22. எபே. 2: 1—7. 3: 12—14.

### ஜனுவரிமீ 9உ புதன்.

குடும்பங்களுக்காகவும், இளைஞரைப் போதிக்கிறவர்களுக்காகவும் ஜெபம்:—பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு தேவவசன சத்தியத்தை புகட்டி அவர்களைக் கிறிஸ்துவினிடத்துக்கு வழிநடத்தும் கடமையை அதிகமாய் உணரவும்; சிறுவரும் வாலிபரும் சோம்பலும் அயோக்கியமுமான பழக்கங்களில் சிலிக்காமல் தேவவசனத்தை மதிக்கவும் தங்கள்மேல் அதிகாரமுள்ளவர்களுக்கு கர்த்தருக்குள் அடங்கி நடக்கவும் தேவன் கிருபை அளிக்கவேண்டும் என்றும்; கட்டுப்பாட்டுக்குள் அடங்காத துஷ்டப் பிள்ளைகளை நற்சீர் பொருந்தப்பண்ணவும், ஆரோக்கியமும் பிரயோசனமுமான கிறிஸ்தவ கல்வி புகட்டவும், மிதபோகத்திலும் சுசியிலும் சிலிக்கப்பண்ணவும் செய்யப்படும் எவ்வகை முயற்சியையும் தேவன் ஆசீர்வதிக்கவேண்டுமென்றும் ஜெபம். சகலவித சர்வகலாசாலைகளுக்காகவும், சாதாரண பள்ளிக்கூடங்களுக்காகவும் அவைகளில் படிப்பிக்கிற உபாத்திமாருக்காகவும், கிறிஸ்தவ இளைஞர் கூட்டங்களுக்காகவும், ஓய்வுநாள் பள்ளிக்கூடங்களுக்காகவும், மற்றும் இவைபோன்ற நல்ல ஏற்பாடுகளுக்காகவும் ஜெபம். ஆதி. 18: 17—19. உபா. 6: 1—9. எசா. 54: 1—10. நியா. 13: 8—25. சங். 78: 1—8. நீதி. 8-அதி. எபே. 6: 1—18. பிலிப். 2: 3—16. யாக். 1: 2—15.

### ஜனுவரிமீ 10உ வியாழன்.

கிறிஸ்து சபைக்காக ஜெபம்:—கிறிஸ்து சபை சகலவித சீர்கேடுகளும் பாவங்களும் அறக் கழுவப்படவும், ஒவ்வொரு அங்கத்தானும் பரிசுத்தஆவியினால் நிறையவும், தங்களுக்கு கிறிஸ்துவோடு இருக்கிற ஐக்கியத்தைப் பரீக்ஷித்தறியவும்; மற்றவர்களுக்கு அருளப்பட்டிருக்கிற திவ்ய வரங்களை மதிப்பதினாலும், சுவிசேஷ பிரசங்கத்திலும், பரிசுத்தத்திற்கும் அன்புக்கும் நற்கீர்த்திக்கும் அடுத்தவைகளை செதிப்படுத்த முயற்சிப்பதிலும் வைராக்கியங் காட்டுவதினாலும் கிறிஸ்துவோடு தங்களுக்கிருக்கிற ஒருமைப்பாட்டை உலகத்துக்குத் தெளிவாய் விளங்கப்பண்ணவும்; பிரிவினைகள் ஒழிந்து சகலரும் கிறிஸ்துவின் சிந்தையுடையவர்களாகவும், கிறிஸ்துவின் வருகையை சகலரும் வாஞ்சையோடு எதிர்பார்த்து, ஆயத்தப்படவும் தேவ அனுக்கிரகம் உண்டாகவும் ஜெபம்; போதகன்மாருக்காகவும் பாஸ்றர்மாருக்காகவும் சுவிசேஷகன்மாருக்காகவும் மற்றும் திவ்ய பணிவிடையாட்களுக்காகவும் ஜெபம். எசா. 64-அதி. 1 கொரி. 3-அதி. யோ. 15: 1—19. மத். 25: 1—13. கொலோ. 3: 1—15. எபே. 4: 1—16. 1 தெச. 5: 14—24. 1 கொ. 12: 12—26. வெளி. 22: 12-21.

### ஜனுவரிமீ 11உ வெள்ளி.

ஜாதிகளுக்காக விண்ணப்பம்:—ராஜ்யங்களின் அதிபதிகளுக்காகவும், அதிகாரமுள்ள மற்றவர்களுக்காகவும் ஜெபம்; நீதியான தேசப் பிரமாணங்கள் இயற்றப்படவும், நெறிகேட்டுக்கும் குரூரத்திற்கும் அவ



பக்திக்கும் அநுகூலமானவை அகற்றப்படவும்; யுத்தங்கள் ஓயவும் துன்மார்க்கரின் சதியோசனைகள் அபத்தமாகவும்; ஒருவனையொருவன் கனம்பண்ணும் குணமும், சகிப்பனையும், பிறர் நன்மையைக் கருதும் சுபாவமும் தழைத்தோங்கவும்; அவிசுவாசமும் தேச பிரமாணங்களுக்கு அடங்காக் குணமும் வேரற்றுப்போகவும்; ஆரோக்கியமான கல்வி விர்த்தியாவதினால் முறைகேடான வழக்கங்களும் கொள்கைகளும் நிலைகுலைந்து அழியவும்; அபின் வியாபாரம் ஒழியவும்; மதுபான நிவிர்த்திக்கும் ஜனசமுதாய பரிசுத்த நடக்கைக்கும் அனுகூலமாய்ச் செய்யப்படும் சகல பிரயத்தனங்களும் நிலைவரமான ஆசீர்வாதம்பெற்று வர்த்திக்கவும்; கர்த்தருடைய நாள் அதிகப் பரிசுத்தமாய் ஆசரிக்கப்படவும் ஜெபம். 1 தீமோ. 2: 1—8, சங். 67. சங். 144. எசா. 32-அதி. ரோ. 13-அதி. 1 பேது. 2: 13—25. நீதி. 16: 1—17. ஓசே. 14-அதி.

### ஜனுவரிமீ 12உ சனி.

கிறிஸ்தவ மிஷன்களுக்காக ஜெபம்:—அறுப்பின் எஜமான் தமது அறுப்புக்கு உன்னதத்திலிருந்து இறங்கும் அருள்பெற்ற பணிவிடையாட்களை அனுப்பவும்; அனுப்பப்படுகிறவர்கள் சகல மோசத்தினின்றும் ஆபத்தினின்றும் காக்கப்படவும், பேர்க்கிறிஸ்தவர்களுக்குள்ளும், மகமதியருக்குள்ளும் அஞ்ஞானிகளுக்குள்ளும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தைரியமாய்க் கூற பெலனடையவும்; தேவனுடைய பூர்வ ஜனமாகிய யூதர் இயேசுவே ரக்ஷகர் என்று அறிக்கையிடவும்; பற்பல மிஷன் சங்க ஆசாமிகள்மேல் பரிசுத்தஆவியின் அருட்பிரசாதம் இறங்கவும்; கிறிஸ்தவர்கள், புறமதஸ்தருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் கடமையை பலமாய் உணரவும், விசுவாசத்தில் இன்னும் குழந்தைகளாய் இருக்கிறவர்கள் ஊன்றக் கட்டப்படவும்; சகல மிஷன்களிலும் ஊக்கமும் கல்வித் திறமுமுள்ள சுதேச போதகன்மார் எழும்பவும் ஜெபம். மத். 9: 36—38. 28: 18--20. ரோ. 11: 25—36. மாற். 4: 3—20. அப். 2: 29—41. யோவேல் 2: 23—32. 1 தெச. 1: 2—10.

ஸ்தொக்கோல்ம் நகரத்தில் கூடப்போகிற பலதேச மிஷனரிமார் கூட்டத்தின்மேல் தேவாசிர்வாதம் இறங்கவும் ஜெபம்.

### ஜனுவரிமீ 13உ ஞாயிறு.

பிரசங்கங்கள்:—"நாங்கள் உங்களில் வைத்திருக்கிற அன்புக்கொப்பாய் நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கிற அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும், கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து, இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது நீங்
நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக பிழையற்ற பரிசுத்த
—ராகும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக." 1 தெச. 3: 12, 13. பிலிப். 3: 20, 21.

கவனிப்பு. மேற்சொல்லப்பட்ட தினங்களில் ஜெபத்துக்குக் கூடும்போது தனித்து ஜெபித்துக்கொள்ளும்படி இடைக்கிடையே கொஞ்சம் சமையம் விட்டுக் கொடுக்கிறது உத்தமம்; விசேஷமாய்ப் பாவ அறிக்கை செய்யும் தினத்திலும் குடும்பங்களுக்காக ஜெபம்பண்ணும் நாளிலும் இப்படிச் செய்யவேண்டும்.

# நற்கருணை மாலை.

(தொடர்ச்சி.)

35-வினா. இராப்போசனம் பரிமாறப்படும்போதெல்லாம் கிறிஸ்து பலியிடப்படுகிறாரென்று பாப்புமார்க்கத்தார் சொல்லுகிறதுபோல் நாமும் சொல்லலாமா?

விடை. சொல்லக்கூடாது. ஏனென்றால் எல்லாருக்காகவும் அவர் ஒரேதரம் பலியிடப்பட்டாயிற்று. ஆகையால் அவரைப் பலி செலுத்துகிறவர்களாயல்ல, அவருடைய பாடுகளையும் மரணத்தையும் அவைகளாலுண்டாகிற நன்மைகளையும் நினைவுகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்துகிறவர்களாக இதைக் கொண்டாடுகிறோம்

36-வினா. உனக்காக ஒரேதரம் பலியாக மாண்ட உன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றி உன் நம்பிக்கையென்ன?

விடை. அவர் என்னைப் பாவத்தினின்று இரக்ஷித்து, பிதாவாகிய தேவனிடத்தில் என்னைச் சேர்க்கத்தக்க கிருபையும் வல்லமையுமுள்ள இரக்ஷகரென்று நம்புகிறேன்.

37-வினா. பிதாவாகிய தேவனிடத்திற் சேர இவரையல்லாமல் வேறே வழிவகையுண்டா?

விடை. "நானே வழியும்" "வாசலும்" என்று சொல்லுகிற அவரைத் தவிர வேறே வழியில்லை. யோவா 14: 6.

38-வினா. உன்னைப்பற்றி நீ எண்ணிக்கொள்ளவேண்டியதென்ன?

விடை. நான் தேவனுடைய கட்டளையை மீறினவனும் இரக்ஷிப்புக்குத் தூரமானவனும் என்றெண்ணுகிறேன்.

39-வினா. இந்த உலகத்தைப்பற்றி உன் எண்ணமென்ன?

விடை. அது ஆவியை அரிக்கிறதும், கானல்போல மாய்கையாயுமிருக்கிறதென்று எண்ணுகிறேன்.

40-வினா. பாவத்தைப்பற்றி நீ நினைக்கிறதென்ன?

விடை. அது அதிகக் கொடிதான தீமையென்றெண்ணி, என் சொந்தப் பாவத்தைக்குறித்து மனஸ்தாபப்பட்டுக் கர்த்தரிடத்தில் திரும்புகிறேன், அதற்கு அவர் சகாயஞ்செய்வாராக.

41-வினா. அப்படியானால் நீ செய்யவேண்டியதென்ன?

விடை. அநித்தியமான உலகப்பொருளில் நான் என் மனதைச் செலுத்தமாட்டேன்,

42-வினா. மறு உலகத்தைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

விடை. அது மாறாததும் மகிமையுள்ளதும் என்றெண்ணி, அதற்காக ஜாக்கிரதையோடு என்னை ஆயத்தப்படுத்தி வருகிறேன். கர்த்தர் அதற்கு வேண்டிய கிருபைபுரிவாராக.

43-வினா. சன்மார்க்கமாய் உன் ஜீவநாட்களைக் கழிக்க உனக்கு விருப்பமிருக்கிறதா?

விடை. ஆம். கர்த்தரோடு ஐக்கியப்பட்டு நடப்பதே எல்லா இன்பங்களிலும் மிகப் பெரிது.

44-வினா. உன் ஆத்தும ஸ்திதி சீர்கெட்டதாயிருக்கிறதென்று தீர்மானிப்பதெப்படி?



விடை. ஆவிக்குரிய காரியங்களைவிட மாம்சத்துக்குரிய காரியங்களுக்காக அதிகமாய்க் கவலைப்பட்டு, பாவமென்று தெரிந்த ஒரு காரியத்தில் நான் நிலைத்திருந்தால் என் நிலைமையும் சீர்கெட்டதென்றெண்ணுவேன்.

45-வினா. உன் ஆத்தும நிலைமை சீருள்ளதாயிருக்கிறதென்று எப்படி நிதானிக்கலாம்?

விடை. என் ஆத்துமாவைப்பற்றி அதிகக் கவலை எனக்கிருக்கும். மேலும் பாவத்தோடு போராட்டம்பண்ணி, செய்கிற யாவையும் என் மனச்சாட்சியின்படி நீதியாய்ச் செய்ய [எவ்வளவு பெலவீனங்கள் நேரிட்டாலும்] பிரயாசப்படுவேன்.

46-வினா. கர்த்தருடைய பந்தியிற் சேருமுன் உன்னை எப்படி ஆயத்தப்படுத்திக்கொள்வாய்?

விடை. என் ஆத்தும சீரைப்பற்றி நன்றாய்ச் சோதிக்கிறதினால் ஆயத்தப்படுத்திக்கொள்வேன்.

47-வினா. இதற்கிசைய பவுலப்போஸ்தலன் சொல்லுகிற யோசனை என்ன?

விடை. எந்த மனிதனும் தன்னைத்தான் சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன் என்கிறார். 1 கொரி. 11: 28.

48-வினா. சோதிக்கிறதெப்படி?

விடை. வழக்கமாய் என்ற எண்ணத்தினாலாவது, மற்றவர்களால் பக்திமான் என்றெண்ணப்படவேண்டும் என்கிற சிந்தனையினாலாவது சேராமல், ஆவிக்குரிய விஷயத்தில் நான் தேறிவருகிறேனோவென்று சோதிக்கவேண்டும்.

49-வினா. ஆவிக்குரிய விஷயங்களைப்பற்றி எப்படிச் சோதிக்கலாம்?

விடை. இந்தக் கிருபையின் உடன்படிக்கையில் உண்மையாய்ச் சேர்ந்திருக்கிறேனோவென்றும், பழைய பாவங்களையெல்லாம் விட்டு புதிய மனுஷனாயிருக்கிறேனோவென்றும் ஆராய்கிறதினால் சோதிக்கலாம்.

50-வினா. கர்த்தருடைய பந்தியிற் சேருமுன் வேறென்ன செய்யவேண்டும்?

விடை. தேவன் தமதாவியையும் கிருபையையும் தந்தருளவேண்டுமென்று ஊக்கமாய் வேண்டுதல்செய்யவும், எனக்காக மரித்த கிறிஸ்துவிற் காணப்படும் அன்பைத் தியானிக்கிறதோடு எல்லா மனிதரோடும் அன்பாயிருக்கிறேனோவென்று சோதித்தறியவும் வேண்டும்.

51-வினா எதைக்கொண்டு நம்மைச் சோதிக்கலாம்?

விடை. பரிசுத்தாவியின் உதவியைக்கொண்டும், தேவவசனத்தைக் கொண்டுமே.

52-வினா. பரிசுத்தாவியின் உதவி அவசியமா?

விடை. நாம் இரக்ஷிப்படையும் வழியைக் காட்டி, இருதயத்தைப் பரிசுத்தஞ்செய்கிறவரானதால் அவருடைய உதவி அவசியம்.

53-வினா. தேவவசனத்தைக்கொண்டு எப்படிச் சோதிக்கலாம்?

விடை. "எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமைக்கு அபாத்திரர்" என்ற சத்தியப்படி (ரோ. 3: 23.) நாம் பாவஞ்செய்து தேவனுக்கு முன் குற்றவாளிகளாயிருக்கையில், என்னென்ன

பாவங்கள், துர்க்குணங்கள் என்னில் மறைந்திருக்கிறதென்று ஜெப சிந்தையோடு உற்று ஆராய்கிறதினால் சோதிக்கலாம். இஸ்ரவேலர் விளக்கைக் கொளுத்தி, புளித்த மாவுண்டோ வென்று வீட்டைச் சோதித்ததுபோல நாமும் திருவசனமாகிய விளக்கைக்கொண்டு நமது இருதயமாகிய வீட்டைச் சோதிக்கவேண்டும்.

54-வினா. கர்த்தருடைய இராப்போசன பந்தியிற் சேரத்தக்கவர்கள் யார்?

விடை. திடப்படுத்தலைப் பெற்றிருக்கிறவர்களும், அதைப் பெறுவதற்கு ஆசையாயும் ஆயத்தமாயுமிருக்கிறவர்களுமே.

55-வினா. இந்தப் பந்தியிற் சேரவேண்டியதவசியமா ?

விடை. 1. "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று இராஜ கட்டளையாய்த் தெரிவித்திருக்கிறதினாலும்;

2. அந்தக் கட்டளைப்படி அதுமுதல் இதுவரையுமுள்ள கிறிஸ்தவர்கள் அதை அநுசரித்துவருகிறதினாலும்;

3. நீதிமானாக இருதயத்தோடு விசுவாசிக்கவேண்டுமேயானால் இரக்ஷிக்கப்படும்படி இந்தச் சாக்கிரமெந்தின் மூலமாய்க் கிறிஸ்துவின் மரணத்தை அறிக்கைபண்ணவேண்டியதிருக்கிறதினாலும் இதிற் சேரவேண்டியது பொதுப்பட அவசியம்.

☞ கிறிஸ்துவின் மரணத்தை அறிக்கைபண்ணும் இந்த ஏற்பாடானது கிறிஸ்தவர்களை அஞ்ஞானிகளைவிட்டுப் பிரிக்கிறவைகளில் இது ஓர் எல்லைக்கல் என்று சொல்லப்படலாம். ஞானஸ்நானம் வித்தியாசப்படுத்தும் ஏற்பாடாயிருந்தபோதிலும் இராப்போசனத்தைப்போல் கடைசிவரையும் அது கிறிஸ்துவின் மரணத்தை அறிவிக்காததினாலே இது விசேஷித்த வகையாய் நம்மை உலகத்தாரைவிட்டுப் பிரிக்கும் முறையாகவுமிருக்கிறது.

56-வினா. இராப்போசனஞ் சேரவேண்டியவர்களிடத்திலிருக்கவேண்டிய தகுதியென்ன ?

விடை. குணப்படுதல், விசுவாசம், அன்பு, பரிசுத்தம், தாழ்மை, கீழ்ப்படிதல் முதலிய நற்குணங்களே. கலியாண வஸ்திரம் தரியாதவன் விருந்திற்கு அபாத்திரனானதுபோல, இவ்வித நற்குணங்களில்லாதவர்கள் இதற்கு யோக்கியர் அல்ல.

57-வினா. இராப்போசனப் பந்தியிற் சேர்வதால் பிரயோசனமென்ன ?

விடை. இந்தப் பந்தியிற் சேர்ந்து இதன்மூலமாய்க் கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூர்ந்து அவைகளைத் தியானிப்பதினால் நமக்குள்ளிருக்கும் பாவத்தின் பெலனைக் குறைக்கிறது. உலகத்தைப்பற்றிய வெறுப்புண்டாகிறது. துர்ஆசைகள் இன்பங்கள் அழிகிறது பரலோக வாஞ்சைமேலிடுகிறது.

58-வினா. கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூர்வதென்பது எதைக் குறிக்கிறது ?

விடை. 1. அவருடைய மரண சரித்திரத்தையும்;

2. அவருடைய மரணத்தாற் சம்பாதிக்கப்பட்ட புண்ணிய பலன்களையும் குறிக்கிறது.



## சமாசாரத்திரட்டு.

கான்பூரிலுள்ள ஒரு வியாபாரியும், கன்ட்ராக்டருமான பஹாரி பாப்ஜி என்பவர் பசுக்களை ஐரோப்பியரும் மற்றவரும் கொல்லக்கூடாதென்று கவர்னர் ஜனரலுக்கு விண்ணப்பம் செய்வதாய்க் கல்கத்தாவுக்கு வந்திருக்கிறார்.

லண்டனில் ஒரு ஆஸ்பத்திரிக்கு மிஸ்டர் என். பி. கண்டேவியா என்ற இந்தியா தேசத்தார் ஒருவரை ஜனங்களுக்கு மருந்துகொடுக்கும்படி மெடிகல் ஆபீசர் வேலைக்கு நியமித்திருக்கிறார்கள். அங்கிலேயர் இங்கு வந்து வேலைசெய்வதுபோல நம்மவர் அங்கே போய் உத்தியோகஞ்செய்யத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

ருஷியா தேசத்திற்குப் போய் அங்கே ஒரு காலீஜில் சமஸ்கிருத பண்டிதராயும் பிறகு ஜர்மனி தேசத்துக்கும் ஸ்விட்சர்லண்டு தேசத்துக்கும் வந்து அந்தப் பாஷைகளையும் கற்றுக்கொண்டு தந்த நிஷிகண்ட சட்டோபாத்தியா என்ற பங்காள கனவானொருவரை நிசாம் சீமை ஹைதராபாத்திலுள்ள காலேசுக்கு அதிபராக ௱-ரூபாய் சம்பளத்தில் நியமித்திருக்கிறது. ஐரோப்பியரானால் அதிகச் சம்பளம் கொடுப்பார்கள்.

சென்னபட்டணத்தைச் சேர்ந்த சிந்தாதிரிப்பேட்டையில் சர்ச்சு ரோட்டில் இருக்கிற ஒரு பங்களாவின் மேல் மெத்தையில் குடியிருந்த ஒருவர் ஒரு நாளிரவில் படுத்து நித்திரைசெய்தபோது சிறு சிறு மண்கட்டிகள் தம்மேல் விழக் கண்டு திடுக்கிட்டெழுந்திருந்தார். நெருப்புக்குச்சைக் கொளுத்திப் பார்க்கையில் மேற்கூரை படிப்படியாய் இறங்கிவிழப்போகிறதைக் கண்டு சீக்கிரமாய்க் கீழ்த்தட்டில் இறங்கி வெளியேறிவிட்டதினால் உயிர் தப்பிப் பிழைத்தார். அசந்த நித்திரையில் சிறுமண்கட்டிகள் விழுந்து அவரை எழுப்பி அவர் வெளியேறின மாத்திரத்தில் வீடு இடிந்தது ஆச்சரியம்! இதுவே தெய்வச்செயல்.

விஷபேதி எங்கும் நடமாடுகிற இந்தக் காலத்தில் அடியிற் காட்டிய சட்டங்களைக் கவனித்து நடப்பது உத்தமம்.

1. நீ வழக்கமாய்ச் சாப்பிடும் போஜனத்தை மட்டாயும் கிரமமாயும் சாப்பிடு; அழுகலான பழங்கள், காய்கறிகள், கருவாடு இவைகளைச் சாப்பிடாதே; சாப்பாடு சூடாயிருக்கும்போது சாப்பிடு. உப்பு சற்று அதிகங் கூட்டிக்கொள்; பழையது சாப்பிடாதே. முக்கியமாய் இராத்திரியில் அதைச் சாப்பிடாதே.

2. ஈரமான இடத்திற்குச் சமீபமாயாவது காற்றுள்ள இடத்திலாவது, வெறுந்தரையிலாவது படுக்காதே.

3. உன் வீடு, கொல்லை எல்லாம் சுத்தியாய் வை; உன் வீட்டை வெள்ளையடி; நிதசரி ஸ்நானம்பண்ணு.

4. ஆற்று ஜலத்தையல்ல கிணற்று ஜலத்தைப் பானம்பண்ணு; வெந்நீர் விசேஷமானது.

5. பேதிகாலத்தில் பயப்படாதே. கடவுளுக்குச் சித்தமிருந்தால் நீ காக்கப்படுவாய். பயத்தினால் யாதொரு நன்மையில்லை; பேதிகாலத்தில் பயப்படுவதால் அநேகர் வியாதிப்படுகிறார்கள்.

**ஜனுவரி௴ நாள்-31. மார்கழி௴ 20உ முதல், தை௴ 20உ வரை.**

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| செ | 1 | ௨௦ | நீதமான்...மகிழுவான். சங். 68. 10. |
| பு | 2 | ௨௧ | புறஜாதிகள் யாவரையும் இகழுவீர். 59: 8. |
| வி | 3 | ௨௨ | இக்கட்டில் எங்களுக்கு உதவிசெய்யும். 60: 11. (61: 7 |
| வெ | 4 | ௨௩ | அவர் தேவனுக்கு முன்பாக என்றென்றைக்கும் நிலைத்திருப்பார். |
| ச | 5 | ௨௪ | ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள். 62: 8. |
| ஞா | 6 | ௨௫ | உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன். 63: 2. |
| தி | 7 | ௨௬ | நீதிமான் கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவரை நம்புவான். 64:10. |
| செ | 8 | ௨௭ | வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர். 65:11. |
| பு | 9 | ௨௮ | தேவனே, எங்களைச் சோதித்தீர். 66:10. |
| வி | 10 | ௨௯ | உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும். 67: 2. |
| வெ | 11 | ௩௦ | ஆண்டவர் வசனம் தந்தார். 68: 11. |
| ச | 12 | ௧ | என் குற்றங்கள் உமக்கு மறைந்திருக்கவில்லை. 69: 5. |
| ஞா | 13 | ௨ | தேவனே, என்னிடத்தில் தீவிரமாய் வாரும் 70: 5. |
| தி | 14 | ௩ | பெரிதானவைகளை நீர் செய்தீர். 71:19. |
| செ | 15 | ௪ | இடுக்கண்செய்கிறவனை நொறுக்குவார். 72: 4. (27. |
| பு | 16 | ௫ | உம்மைவிட்டுச் சோரம்போகிற அனைவரையும் சங்கரிப்பீர். 73: |
| வி | 17 | ௬ | உம்முடைய உடன்படிக்கையை நினைத்தருளும். 74: 20. |
| வெ | 18 | ௭ | தேவனே, நியாயாதிபதி. 75: 7. |
| ச | 19 | ௮ | பிரபுக்களின் ஆவியை அடக்குவார். 76: 12. |
| ஞா | 20 | ௯ | நம்முடைய தேவனைப்போல பெரிய தேவன் யார்? 77: 13. |
| தி | 21 | ௧௦ | சீயோன் பர்வதத்தையும் தெரிந்துகொண்டார். 78: 68. (79: 4. |
| செ | 22 | ௧௧ | எங்கள் சுற்றுப்புறத்தாருக்குப் பரியாசமும் சக்கந்தமுமானோம். |
| பு | 23 | ௧௨ | தேவனே, எங்களைத் திருப்பிக்கொண்டு வாரும். 80: 3. |
| வி | 24 | ௧௩ | நீ எனக்குச் செவிகொடுத்தால் நலமாயிருக்கும். 81:8. |
| வெ | 25 | ௧௪ | தேவனே, எழுந்தருளும் பூமிக்கு நியாயத்தீர்ப்புச் செய்யும், 82: 8. |
| ச | 26 | ௧௫ | இதோ...உம்முடைய பகைஞர் தலையெடுக்கிறார்கள். 83:2. |
| ஞா | 27 | ௧௬ | உம்மை நம்பியிருக்கிற மனுஷன் பாக்கியவான். 84:12. |
| தி | 28 | ௧௭ | கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும். 85:10. |
| செ | 29 | ௧௮ | உமது அடியேனுடைய ஆத்துமாவை மகிழ்ச்சியாக்கும். 86: 4. |
| பு | 30 | ௧௯ | அவர் அஸ்திபாரம் பரிசுத்த பர்வதங்களில் இருக்கிறது. 87:1. |
| வி | 31 | ௨௦ | உம்முடைய கோபம் என்னை இருக்குகிறது. 88: 7. |

## விசேஷ நாட்கள்.

1. கிறிஸ்து விருத்தசேதனத் திருநாள்.
6. கிறிஸ்துப் பிறந்த திருநாளுக்குப் பின்வரும் 2-ம் ஞாயிறு.
   பிரசன்னத் திருநாள்.
12. பௌரணமி.
13. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் 1-ம் ஞாயிறு.
20. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் 2-ம் ஞாயிறு.
25. பரி. பவுல் குணப்பட்ட திருநாள்.
27. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் 3-ம் ஞாயிறு
29. அமாவாசை

# நற்போதகம்.

௨. பெப்ருவரி௴. ௲௮௮௪௵.

**Exposition of the Church Catechism.**

## ஞானோபதேசவினாவிடை

வியாக்கியானம்.

### ௰-ம் அதிகாரம்.

கர்த்தருடைய இராப்போசனம்.

(தொடர்ச்சி.)

**வினா.** கர்த்தருடைய இராப்போசனத்திலே குறிக்கப்படுகிற காரியமாகிய உள்ளான பங்கு என்ன?

**விடை.** கர்த்தருடைய இராப்போசனத்திலே மெய்யாகவும் நிச்சயமாகவும் விசுவாசிகள் வாங்கி உட்கொள்ளுகிற கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமே.

**வினா.** அப்பமும் திராக்ஷரசமும் பிரதிஷ்டையாக்கப்பட்டபின் மாறுதல் அடைகின்றனவா?

**விடை.** இல்லை. அவைகள் பிரதிஷ்டையாக்கப்பட்டபின்பும் இன்னமும் அப்பமும் ரசமுமாகவேயிருக்கின்றன.

நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? 1 கொரி. 10: 16.

நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். 1 கொரி. 11: 26.

**வினா.** மெய்யாகவும் நிச்சயமாகவும் வாங்கி உட்கொள்ளுகிறது என்பதின் கருத்தென்ன?

விடை. அவைகள் ஆவிக்குரிய வகையாய் உட்கொள்ளப்படுகிறது. அதாவது இராப்போசனத்திலே கிறிஸ்துவினுடைய சரீரம் ஆவிக்குரிய திவ்விய பிரகாரமாக மாத்திரம் கொடுக்கப்பட்டும் வாங்கப்பட்டும் புசிக்கப்பட்டும் வருகிறது.

நீங்கள் மனுஷ குமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும் அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணுமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை. யோவா. 6: 53, 55, 56.

விசுவாசி நிச்சயமாகவே கிறிஸ்துநாதராலும் அவருடைய மரண புண்ணியங்களினுலும் வரும் நன்மைகளுக்குப் பங்காளியாயிருக்கிறுன. அவனுடைய பாத்திபம் இந்தச் சாக்கிரமெந்தின்மூலமாய் முத்திரையிடப்படுகிறது.

ஒரு மனிதன் பூமியிலே தன் சிநேகிதனேடு உலகப் பிரகாரமாய்ச் சிநேகமாயிருப்பதுபோல, விசுவாசி தன் இரக்ஷகரோடு பரலோகத்தில் இருக்கும் சிநேகத்துக்கொப்பாய் ஆவிக்குரிய வகையாய்க் கிறிஸ்துவுடன் ஐக்கியமாய் இருக்கிறுன். இந்தச் சாக்கிரமெந்து தேவன் மனிதரிடத்தில் வைத்திருக்கிற பிரியத்திற்கும், அவர் மேல் நாம் வைக்கிற விசுவாசம் பலப்படுவதற்கும், அவர் நமக்குள்ளே அந்தரங்கமாய்க் கிரியைசெய்கிற யத்தனயாகவுமிருக்கிறது.

வினு. இவைகளாலே நாம் பெற்றுக்கொள்ளும் நன்மைகளென்ன ?

விடை. அப்பத்திஞலும் திராக்ஷரசத்திஞலும் நம்முடைய சரீரம் பெலனடைந்து தேற்றப்படுகிறதுபோல, கிறிஸ்துவின் சரீரத்திஞலும் இரத்தத்திஞலும் நம்முடைய ஆத்துமா பெலனடைந்து தேற்றப்படுகிறதே.

அப்பத்தைப் புசிப்பதும் திராக்ஷரசத்தைப் பானம்பண்ணுவதும், விசுவாசத்திஞல் நம்முடைய இருதயங்களில் நன்றியறிதலோடே கிறிஸ்துவை நமக்கு ஆகாரமாய் உட்கொள்ளும் வகையைக் குறிக்கிறது. அப்பமும் திராக்ஷரசமும் சரீரத்தைப் போஷிக்கிறதுபோல கர்த்தருடைய இராப்போசனம் மெய்விசுவாசிகளினுடைய ஆத்துமாவைப் போஷிக்கிறது. ஏனென்ருல் நாம் அப்பொழுது ஞானப் பிரகாரமாய்க் கிறிஸ்துவின் மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணுகிறேம் ; கிறிஸ்து நமக்குள் வாசமாயிருக்க நாம் கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறேம்; கிறிஸ்து நம்மோடு ஒன்ருயிருக்க நாம் அவரோடு ஒன்ருயிருக்கிறேம். அது விசுவாசியை அவனுடைய பரதேச பிரயாணத்தில் தாங்கி, அவனுடைய வழியில் தடைசெய்கிற சத்துருக்களை எதிர்க்கும்படி தைரியப்படுத்தி, பாவஞ்செய்யாதபடி அவனுக்குத் திவ்விய பலத்தைக் கொடுக்கிறது.

இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணுவதிஞலே, நம்முடைய சரீரங்கள் சரியான போசனத்திஞல் ஆதரிக்கப்படுவதுபோல நம்முடைய ஆத்துமாக்கள் இரக்ஷிக்கப்பட கிறிஸ்துநாதருடைய பிராயச்சித்தத்தின்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறதாக வெளிப்படுத்துகிறேம். ஆகாரம் சாப்பிடாவிட்டால் நம்முடைய சரீரம் பிழைக்கமாட்டாததுபோல, விசுவாசத்திஞலே நாம் கிறிஸ்துவின் பிராயச்சித்தத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் நம்முடைய ஆத்துமாவுக்கு ஒரு நன்மையுமில்லை.



மனுஷனுடைய இருதயத்தை மகிழ்ச்சியாக்கும் திராக்ஷரசத்தையும் அவனுடைய இருதயத்தை ஆதரிக்கும் ஆகாரத்தையுட விளைவிக்கிறுர். சங். 104: 15.

உமது நேசம் திராக்ஷரசத்தைப் பார்க்கிலும் இன்பமானது. உன். 1: 2.

ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான். யோவா. 6: 35, 51.

மேலும் இந்தச் சாக்கிரமெந்தைச் சேர்வதிஞலே தேவனேடு நெருங்கிய ஐக்கியத்தை அடைகிறேம். ஊக்கமான நன்றியறிதலைக் காண்பிக்கிறேம். நம்மை அவருக்குப் புதிதாய்ப் பிரதிஷ்டைசெய்கிறேம்.

வினு. இந்தச் சாக்கிரமெந்து நம்முடைய ஆத்துமாக்களைப் பெலப்படுத்தித் தேற்றுகிறதற்கு எப்படி உதவுகிறது ?

விடை. விசுவாசத்தோடு இதைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு, தேவ கிருபையிஞலே அவனுடைய விசுவாசம் பலப்படுகிறது. கிறிஸ்து அவனுடைய ஆத்தும ஆகாரமாயிருக்கவேண்டுமென்கிற விருப்பம் அவனுக்கு உறுதிப்படுகிறது. இந்தச் சாக்கிரமெந்தை ஏற்றவிதமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறவர்கள், தங்கள் சரீரத்தையும் ஆத்துமாவையும் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கும்படி, தேவனுடைய இரக்கங்களிஞலே சக்தியுடையவர்களாகிருர்கள்.

வினு. கர்த்தருடைய பந்தியைச் சேருகிறவர்களெல்லாரும் தங்கள் ஆத்துமாக்களில் இந்தப் பிரயோசனத்தை அடைகிருர்களா ?

விடை. இல்லை. தங்களுடைய பலவிதமான பாவங்களை உணர்ந்து, உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, அடைக்கலத்திற்காக கிறிஸ்துவினிடத்தில் ஓடிவருகிறவர்கள் மாத்திரம் இந்த நன்மைகளுக்குப் பங்காளிகளாகிருர்கள். மற்றவர்களெல்லாரும் புறம்பான அடையாளத்திற்கு மாத்திரம் பங்காளிகளாகக் கூடும்.

அபாத்திரமாய்ப் போஜனம்பண்ணுகிறவன் கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததிஞல் தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிருன். 1 கொரி. 11: 29.

வினு. கர்த்தருடைய இராப்போஜனத்தை அபாத்திரமாய்ப் புசித்துப் பானம்பண்ணுகிறவர்கள் யார் ?

விடை. கர்த்தருடைய இராப்போஜனத்திற்கு தூராசாரமாய் அல்லது சுயநீதியைப் பாராட்டுகிறவர்களாய் வருகிறவர்களும் ; பாவப்பாரத்தையும், தங்கள் இருதயத்தின் நோயையும் உணராதவர்களும் ; மெய்க்குணப்படுதலும் விசுவாசமும் அன்பும் இல்லாதவர்களுமே. தங்களை எந்த வகையான பாவப்பழக்கங்களுக்கு இடங்கொடுக்கிறவர்களும் இராப்போஜனத்திற்குத் தகுதியற்றவர்கள். ஏனென்ருல் அவர்களுடைய ஜெபங்களும் துதிகளும் வாஞ்சனையாகவேயிருக்கிறது.

நீங்கள் அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப்பிறப்பையும், ஓய்நாளையும், ஜனக்கூட்டத்தையும், என் ஆத்துமா வெறுக்கிறது ; அவைகள் எனக்கு வருத்தமாயிருக்கிறது. உங்களைக் கழுவிச் சுத்

திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்குமுன்பாக அகற்றிவிட்டு, தீமைசெய்யுதலை விட்டு ஓயுங்கள். ஏசா. 1: 13—16.

வினா. இவ்வித நடக்கையினால் உண்டாகும் மோசமென்ன?

விடை. அவர்கள் தங்களுக்கு விரோதமாகத் தேவகோபத்தை மூட்டி, பற்பல வியாதியினாலும் அநேகவித மரணத்தினாலும் தங்களைத் தண்டிக்கும்படி அவரை ஏவுகிறவர்களாயிருக்கிறார்கள்.

இதினிமித்தம் உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்குக் கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம். 1 கொரி. 11: 30—32.

கொரிந்தியர் அடைந்த சிட்சை, அவர்கள் குணப்பட்டுக் கிருபையைத் தேடுவதினாலே அவர்கள் நித்தியஆக்கினைக்கு நீங்கலாகும்படிக்கு அனுப்பப்பட்ட சிட்சையாயிருந்தது.

---

# இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

என்றசொல் விசைமுடி வெய்திடா முனம்
கொன்றுயிர் களைகவெங் குருசில் ஏற்றியிங்
நின்றவன் றனைப்பர பாசை நீக்குக
வன்றொடர்ப் படுசிறை மறங்கொள் வேலினாய். 1121

மன்னர்மன் னனுக்கிறை வரியொ லாதெனச்
சொன்னவன் சொல்லருந் தேவ தூஷணம்
பன்னியோன் இவனைநீ பார மார்த்திகன்
என்னநீ விடுதலை யிசைப்ப தென்கொலாம். 1122

மற்றிவன் றனைவிடில் மன்னர் மன்னனுக்
குற்றநண் பினனெனும் உரிமைப் பாடிலாய்
செற்றமோ டிவனுயிர் சிதைத்தி செய்பழி
பற்றுக வழிவழி யெம்மிற் பார்த்திவ. 1123

அஞ்சிடேல் சிலுவையில் அறைந்து கொல்கெனச்
செஞ்செவே பலமுறை செவிடு பட்டிட
விஞ்சிய கூக்குரல் விளைத்திட் டாரரோ
நஞ்சினுங் கொடியநெஞ் சுடைய நாஸ்திகர். 1124

புரவலன் யூதர்செய் புரளி போர்த்தலில்
உரமிலா தஞ்சியாங் கொருபு றஞ்செலீஇ
வரமனோ கரனையெவ் வயினின் றுற்றனை
பரமனோ தெரியெனப் பரிவிற் கேட்டனன். 1125

உம்பர்நா யகனெதி ருரைகொ டாமையில்
வெம்பியா னுனைக்கொல விடுக்க வாயினும்



இம்பருண் டெனக்கதி கார மென்றுநீ
நம்புதி யேகொலாம் நவிற்று கென்றலும். 11

உன்னத நியமமா யுமக்கி ராவிடில்
என்னவோர் விரோதமு மியற்றொ ணாதெனக்
கன்னதா கலினுமக் கெனைய ளித்தவர்க்
குன்னரும் பாவமுண் டென்ன ஓதினார். 1127

இத்தகு திருமொழி யெம்மை யாளுடை
வித்தகன் விளம்பலும் வேந்தன் விட்டிடற்
கெத்தனை முயன்றும் எட்டுணைநன் றின்றியே
பித்தரிற் றிகைத்துளம் பேதுற் றனரோ. 1128

சிலுவையி லறையறை யென்னுந் தீச்சொலாம்
வலுவயிற் செவியிரு மருங்குந் தைத்தலாற்
கொலுவயி னாசனங் குறுகிக் கூறினான்
உலவையிற் சருகென உழலும் உள்ளத்தான். 1129

தழுமியீர் றம்முறை குறிக்கொண் டியாதுமோர்
வழுவிலாற் கீந்தனன் மரண தண்டனை
பழியிதென் பாலல வென்று பாவர்முன்
கழுவினான் கரகநீர் கவிழ்த்துக் கைகளை. 1130

ஏவமி லொருவருக் கிறுதி காட்டியே
தாவரும் பெரும்பழி சமைப்பன் தானுறு
ஜீவனுக் காயினும் ஜெகத்துக் காயினும்
ஆவது கருதிலா னார்கொ லாமிவன். 1131

புறத்துறு களையினைப் போற்றிப் புண்ணியத்
திறத்தையே விளைக்கின்ற பயிரைத் தேய்த்திகல்
மறத்தையே உலகிடை வளர்த்து மன்னிய
அறத்தைவே ரறுப்பவன் ஆர்கொ லாமிவன். 1132

பங்கமில் பரமசற் குருப வித்திர
அங்கரோ வக்குரு சறைந்து கொல்கென
வெங்கொலை நாவினால் விளம்பு வான்வினைந்
தங்கையைக் கழுவுவான் ஆர்கொ லாமிவன். 1133

விஞ்சிய வுணர்வினை வீட்டி நீதிசெய்
நெஞ்சிய லுரத்தையும் நீத்துத் தன்மனை
வஞ்சிசொல் கனாத்திற மறந்து வஞ்சருக்
கஞ்சிநஞ் சருந்துவான் ஆர்கொ லாமிவன். 1134

உலகரக்ஷணியமுண் டாக உன்னதர்
இலகுகைக் கருவியா யிருந் தியற்றியோன்
அலகறு முன்குறித் தலின் அமைந்திடா
விலகிய பிலாத்தெனும் வேந்தன் காண்டியால். 1135

இத்திற முன்குறிப் பியைந்தி டாதவுன்
மத்தரோ கருவியாய் வாய்ந் திருந்தனர்
உத்தமன் ஆக்கையுத் தரித்த பாகெள்
அத்தனைக் கும்மென அறிதி மைந்தநீ. 1136

நெய்விளக் கிடிலிருள் நீங்கு மாறுபோல்
மெய்விளக் கிடில்வினை வீயும் அல்லது
பொய்விளக் கிடுபுறச் சமய போதத்தால்
கைவிளக் கிடில்வினை கழியு மேகொலாம். 1137

உக்கிர தீவினை உஞற்றி ஒண்பழிச்
சிக்கறக் கைகழூஉ மதியின் தீக்ஷணம்
செக்கினை விழுங்கிப்பின் சீரணித்திடச்
சுக்குநீ ரருந்துமச் சூழ்ச்சி யொக்குமால். 1138

கள்ளனா கியபர பாசைக் காவல்விட்
டெள்ளரும் யேசுநா யகனை யீனமாய்
விள்ளரும் ஆக்கினை விதித்தல் கேட்டுடன்
துள்ளினர் களித்தனர் துட்ட யூதரே. 1139

வேந்தனுக் கிணைகொடு வெய்ய மள்ளர்தாம்
போந்துபுண் ணியன்றனைப் புடை வளைந்தனர்
பாந்தளிற் சீறினர் பற்றி யீர்த்தனர்
காந்துபுன் மனத்தருங் கைக லந்தனர். 1140

புக்கனர் மாளிகைப் புறத்தங் கோர்சிறை
மக்களுட் பதடிக ளாய வன்கணார்
தொக்கனர் பலர்பல தூஷ ணஞ்சொலிக்
கொக்கரித் திகழ்ந்தனர் குழுமி யோலொலாம். 1141

முன்னுடை களைந்தொரு முருக் கலர்ந்தெனச்
செந்நிற அங்கிமேற் றிகழச் சேர்த்தினர்
கொன்னுனை யழுந்திவெங் குருதி பீறிடப்
பின்னிய முண்முடி சிரத்துப் பெய்தனர். 1142

கோலெனக் கையிலொரு கோலை நல்கினார்
காலினை முடக்கிமுன் னின்று காவல
மாலுறும் அரசநீ வாழ்க வாழ்கவென்
றோலிடேஉப் பரிகசித் தூறி னார்பலர். 1143

கைதுறுங் கோலினைக் கவர்ந்து கண்டகர்
வெய்துறத் தலைமிசை யடித்து வேதனை
செய்தனர் உமிழ்ந்தனர் திருமுகத்தினே
வைதனர் தெளித்தனர் மறங்கொள் நீசரே. 1144

மலர்ந்தசெந் தாமரை யனைய வாண்முகம்
புலர்ந்துசெங் குருதியாற் பூசுண் டெஞ்சிய
துலர்ந்தது தாலுவுங் கருணை ஊற்றிருந்
தலர்ந்தநேத் திரங்களுங் குழிபட் டாழ்ந்தவே. 1145

நிந்தனை மொழிதிருச் செவி நிறைந்தன
நொந்தபுண் ணிடையெரி நுழைந்த வாமெனப்
பந்தனை மேனியிற் படிந்த செம்புனீர்
சிந்தின புண்ணியத் திவலை போன்மென. 1146

துன்றிய துடற்பலங் குருதி கோத்துயிர்
பொன்றிய தெனமுகம் பொலி விழந்ததால்



கன்றிகோர் துலைந்தது கனக காத்திரம்
ஒன்றிய எழினலம் ஒருவிப் போயதால். 114'

ஓதரும் வேதனை உழந்தும் ஒன்னலார்
நோதக வொருமொழி நுவலு வாரலர்
ஏதிலரோ பொறைக் கிரங்கு வாருமில்
பாதகம் பாதகம் பரம பாதகம். 1148

மாரணத் தீர்ப்பிடு மன்னனோ அலன்
கோரணிப் படுத்துமக் கொடியரோ அலர்
ஆரணன் பாடுகள் அனைத்தினுக்கு முற்
காரணம் நமதுதீக் கருமங் காண்டியால். 1149

வாவென வந்ததிவ் வுலகம் வந்தபோற்
போவெனீ ஒல்லையிற் புவன கோசரம்
ஆவன யாவையு மகலும் நீறிஅத்
தேவிவை சகிப்பதென் சிந்தை தேர்திநீ. 1150

வேறு.

வரிசை தப்பிய மன்னன் அநீதியும் வம்பர்
குரிசி லைக்குரு சேற்றி யுயிர்ப்பழி கொள்ளும்
பரிசு மோடிப் பரந்தது பற்று செந்தீயில்
புரிசை மாநகர் உள்ளம் எரிந்து புகைந்த. 1151

புகரி லாதநம் புண்ணியர்க் குற்றமை மேன்மேல்
நகர மாந்தர் செவிசுடக் கேட்டலும் நைந்தே
நிகரி லாக்கொடும் பாதகம் நேர்ந்ததிங் கென்னாப்
பகரு வாரங் கவ்ரவர்க் கொல்வன பன்னி. 1152

நாசம் நங்குலத் துற்றதின் றேடென நைவார்
ஈசன் மைந்தனை யோகொலை செய்வது மென்பார்
தேசிகன் வயின் எப்பிழை கண்டிது செய்தார்
நீசரொன்று நெடிதுயிர்த் தேங்கினர் நிற்பார். 1153

மின்ன லின்றி விழுந்ததிவ் வெள்ளிடி யென்பார்
கன்னல் ஒன்றிலித் தொன்னக ரஞ்சுடு காடாய்
மன்னு மென்பர் சிலர்சிலர் வானிருள் மல்கித்
துன்னு ஜோதி களுந்தொலை யும்மெனச் சொல்வார். 1154

தலை கவிழ்ந்தல கந்தடு மாறலிற் றண்ணீர்
நிலைய மேலிடு மென்பர் சிலர்சிலர் நீண்ட
மலையு மண்டல முந்துக ளாகிடும் வானும்
குலையு மண்டமுங் குப்புறுமென்பர் கொதித்தே. 1155

கண்ணி ருண்டு கலங்குவ ரோர்சிலர் காந்தும்
புண்ணு ளத்தோ டழுங்குவ ரோர்சிலர் பொங்கித்
துண்ணென் றுட்கித் துடிப்பவ ரோர்சிலர் சூழ்ந்த
தெண்ணி யெண்ணி யிரங்குவ ரோர்சில ரேங்கி 1156

கரவிற் காட்டிக் கொடுத்தவக் கள்வனிற் கள்ளக்
குரவ ரேகொடி யாரென்ப ரோர்சிலர் கூறில்

வு நீருல கத்திதை யொத்த நியாயம்
ருவிற் றண்டுகொ லோவென்ப ரோர்சிலர் வெம்பி. 1157

ன்கொல் மேதினி கீண்டு வெடித்தில தென்பார்
என்கொல் வான மிடிந்து விழுந்தில தென்பார்
என்கொல் வாரிதி நீர்சுவ றுதது மென்பார்
என்கொ லோமுடி வித்துணை தாழ்த்தது மென்பார். 1158

கண்ப டைத்தில மேலிது காண்கில மென்பார்
மண்ப டைத்த பிணிக்கினி மாற்றிலை யென்பார்
புண்ப டைத்தநெஞ் சோடுயிர் போகல வென்று
எண்ப டைத்தவர் இன்னன பன்னிடு மெல்லை. 1159

மோச மாயருள் மூர்த்தியை முப்பது வெள்ளிக்
காசை நச்சியொன் னார்கையிற் காட்டிய கள்வன்
மாசி லானை வதைத்துயிர் மாய்க்கெனும் வன்சொல்
நீச நெஞ்சினிற் றைத்தது நெட்டிலை வேல்போல். 1160

(இன்னும் வரும்.)

---

## எலிசா செய்த அற்புத செய்கைகள்.

(தொடர்ச்சி.)

### (10) சீரியாவின் படைத்தலைவனாகிய நாகமான் தன் குஷ்டரோகத்தினின்று குணமாக்கப்பட்ட அற்புதம்.

2 இரா. 5-அதி.

நமது இரக்ஷகருடைய அற்புதங்கள் காணாமல்போன ஆடுகளாகிய இஸ்ரவேலருக்கடுத்ததாயினும், மேசையிலிருந்து விழும் துணிக்கை போல, கானானின் ஸ்திரீக்கு அற்புதம்செய்யப்பட்டதுபோல எலிசாவும் நாகமானுக்கு இந்த அற்புதத்தைச் செய்தார். நாகமான், பெரிய பட்டணத்தில் பெரிய மனுஷன், ஆஸ்திமான், கனவான், மகா பராக்கிரமசாலி இஸ்ரவேலுக்கு விரோதமாய் அவனால் சூரியருக்கு ஜெயத்தை தேவன் கொடுத்திருந்தார். அக்கால வழக்கப்படி இஸ்ரவேலின் கிராமங்களில் சூரியர் விழுந்து முறியடித்து கொள்ளையடித்து, (1 சாமு. 30: 8. 2 இரா. 13: 21. 24: 2.) சிறைப்பிடித்துப் போகிறதுமுண்டு. அந்தப்படிக்கு நாகமான் வீட்டில் இஸ்ரவேல் தேசத்துப்பெண், வேலைக்காரியாயிருந்தாள். அவள் இஸ்ரவேலின் தேவனுக்கு மகிமையும், இஸ்ரவேலருக்கு கனமும், எலிசாவுக்குப் புகழ்ச்சியுமுண்டாகக் கருவியாயிருந்தாள். (அப். 8: 4.) அந்தச் சிறைப்பட்ட பெண், தன் எஜமானுக்கு நன்மையுண்டாக விரும்பினாள். பாபிலோனிலுள்ள யூதர் தங்கள் சிறையிருப்பின் தேசத்திலுள்ளவர்களுக்குச் சமாதானத்தை விரும்பினார்கள். (எரேமி 29: 7.) எலிசா இஸ்ரவேலில் ஒரு குஷ்டரோகியையுங் குணமாக்கவில்லை. (லூக். 4: 27.) நாகமான் தூரப்பயணம், வியாதியினால் பலவீனம், சத்துருக்களின் தேசமென்று நின்றுபோகாமல், உடனே வெகு ஜனங்களோடும், வெகு மதிகளோடும் இராஜாவின் நிருபமும் வாங்கிக்கொண்டு, இஸ்ரவேலின் தேசத்து அரசனண்டை வரவே, குஷ்டரோகத்தை நீக்க மனிதரால் கூடாதே, எண். 12: 12. அது மரணத்துக்கேதுவான வியாதியாயிற்றே, நான் கொல்லவும், உயிர்ப்பிக்கவுந்தக்க தேவனோவென்று நேபுகாத்நேச்சார் சொன்னதுபோல சொல்லி, சீலையைத் துக்கத்தினாலே கிழித்தான். இதைத் தீர்க்கதரிசி அறிந்து தம்மிடத்தில் அனுப்பச் சொல்ல, நாகமான் அவரைக் கனஞ்செய்யும்படி வெகு பவுசோடே புறப்பட்டுப்போய், கதவண்டையில் ஏழைபோல் நின்று அவர் வருகைக்குக் காத்திருக்க, அவரோ ஆள் அனுப்பி, அவன் விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் பரீக்ஷிக்கவும், தேவ வல்லமை விளங்கச்செய்யவும் நோக்கமாக, "நீ போய் யோர்தானில் ஏழ்தரம் ஸ்நானம்பண்ணு" என்று சொல்லச் சொன்னார். நாகமான் தான் மிகவும் அற்பமாயும், பரியாசம்பண்ணப்பட்டவனாகவும் எண்ணி, வெகு து க்கமாயும் கோபமாயும் எரிச்சலாயும் திரும்பவே, அவன் தன் வேலைக்காரர் ஆலோசனை கேட்டுச்செய்ய சுத்தமானான். இந்தவகையாய் தேவநாமத்துக்கும், தேவப்பிரமாணத்துக்கும் மகிமையுண்டாயிற்று. இயேசுவானவர் குணமாக்கின 10-குஷ்டரோகிகளில் ஒருவன் நன்றிசெலுத்த வந்ததுபோல (லூக். 17: 16.) சூரியனான நாகமானும் நன்றியறிதலைக் காண்பிக்கத் தீர்க்கதரிசியண்டை வந்தான். இந்த அற்புத செய்கையால் அவன் விக்கிரகாராதனையையும் விட்டு புறேசெலுத்தானான். அவனுடைய குணப்படுதல் உண்மையுள்ளதுமல்ல. எலிசாவும் அவனிடத்தில் வெகுமானமும் வாங்க மனமில்லை. மற்றவர்களிடத்திலிருந்து வெகுமதி வாங்குவது தீர்க்கதரிசிகளின் வழக்கமென்றாலும் (4: 12.) சூரியர், தேவஊழியக்காரருடைய பக்தி, அன்பு, உதாரகுணம் எவ்வளவு பெரிதென்று அறியவும், உலகப்பொருட்களைத் தீர்க்கதரிசிகள் வெறுக்கிறவர்களென்று காண்பிக்கவும், இந்தப் புது மார்க்கத்தில் நாகமான் உறுதிப்படவும் நோக்கமாக அவன் காணிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

### (11) நாகமானின் குஷ்டரோகம் கேயாசிக்கு வரும்படி செய்தது.

நாகமான் சீரியன்; இராஜ சிநேகிதன்; படைத்தலைவன்; அநேக வேலைக்காரர் வைத்திருந்தான். அவர்களெல்லாரும் ஞானமும் நல்ல தன்மையுமுள்ளவர்களென்றறிகிறோம். 13-வச. தேவனுடைய மனிதனாகிய பரிசுத்த தீர்க்கதரிசியாகிய எலிசாவுக்கோ ஒரே வேலைக்காரனிருந்தான். அவனும் பொய்யனும், பொருளாசைக்காரனுமாயிருந்தான். வெகு தூரத்தில் லெலிசாவைப்பற்றிக் கேட்ட சூரியர் அவரைக் கனஞ்செய்ய, எப்போதும் எலிசாவோடே கூடவிருந்து அவருடைய அற்புதங்களைக் கண்ட கேயாசி பொல்லாதவனாகிறான். கிறிஸ்துநாதருடைய சீஷரில் யூதாஸ் ஒருவன் பசாசாயிருந்ததுபோலிருந்தான். கேயாசியுடைய பாவமென்ன? (1) பண ஆசையே. இதுவே எல்லாத் தீமைக்கும் வேரானது. 1 தீமோ. 6: 9. (2) காணிக்கையை ஏற்றுக்கொள்ளாத தன் எஜமானைக் குற்றஞ்சாட்டுகிறான். (3) தன் எஜமான் அனுப்பினதாக சுத்த முழுப் பொய் சொல்லுகிறான். (4) தன் எஜமான் மனமாறி திரும்பக் காணிக்கை கேட்க விட்டதால் நாகமான் எலிசாவைத் தகாத மாய் எண்ணவும், அவரைத்

தூஷிக்கவும் இடம்பண்ணினான். (5) பவுல் அப்போஸ்தலனின் சத்துருக்களைப்போல (1 கொரி. 12: 16, 17.) நாகமான் மெய்மார்க்கத்தைவிட்டு விலகக் காரணமாயிருந்தான். (6) தான் அநியாயமாய்ச் சம்பாத்தியம்பண்ணினதை மறைத்ததும் பெரிய பாவம். ஆகான் எரிகோவில் சாபத்தீடான பொருட்களை எடுத்து மறைத்ததுபோலும், அனனியா, சப்பிராள் மறைத்ததுபோலும் கேயாசி செய்தான். இவன் எப்பிராயீமைப்போல நினைத்தான். ஓசே. 12: 8. இந்தப் பாவங்களையெல்லாம் தீர்க்கதரிசன ஆவியாய் எலிசா அறிந்து அவனைக் கண்டித்தார். உடனே அவன் வெட்கத்தோடும், நிந்தையோடும், மற்றச் சபைகளையும் இனத்தாரையும் விட்டுப் பிரிந்து குஷ்டரோகியாய்ப் போனான். லேவியர் 13, 14-அதி. பயங்கரமான குஷ்டம் வந்தது. (எண். 12: 10. 2 நாளா. 26: 19, 20.) கேயாசி செய்த பாவம் பொருளாசையாகிய விக்கிரகாராதனை பொய்யாணையினால் தேவநாமத்தை நிந்தித்தல், பொய், களவு (அப். 5: 3.) தேவனுடைய சருவஞானம்; நீதி, பரிசுத்தம் என்ற இலட்சணங்களை அவமதித்தல்; சூரியர் முன்பாக இடறலையுண்டுபண்ணுதல் முதலிய பாவங்களைச் செய்ததினிமித்தம் குஷ்டரோகம் அவனை மாத்திரமல்ல, அவன் வித்தாரையும் என்றைக்கும் பிடித்தது. நீதி. 21: 6. தந்திரத்தினாலும் அநியாயங்களினாலும் சம்பாதிக்கிற பொருட்கள் மனிதருக்கு ஆறுதலைக் கொடாது.

### (12) எலிசா, ஜலத்தில் இரும்பை மிதக்கப் பண்ணினது.

---

கில்காலிலுள்ள தீர்க்கதரிசிகளின் புத்திரர். 4: 38. எலியா எலிசா தீர்க்கதரிசிகள் செய்த அற்புதங்களினால் பெருக்கமாகிறதைக் கண்டு, ஜெபிக்கவும் தேவனைத் துதிக்கவும் தேவப்பிரமாணங்களைப் படிக்கவும், மற்றவர்களுக்குப் போதிக்கவும் வேண்டிய வேலையை விட்டுவிட்டு, அக்காலத்திலிருந்த விக்கிரகாராதனை முதலிய அக்கிரமங்களினாலே ஜனங்கள் அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க ஏதுவில்லாதபடியால் அவர்கள் தாமே தங்களுக்காக வீடு கட்டும்படி யோர்தானில் மரம் வெட்டப்போனார்கள். போனவிடத்தில் இரவலாக வாங்கப்பட்ட கோடாலி கை கழன்று ஆழத்தில் விழுந்ததை எலிசா இயல்புக்கு மிஞ்சி, இரும்பைத் தண்ணீரில் மிதக்கச்செய்தார்.

### (13) சூரியர் எலிசாவைப் பிடிக்க, சேனை அனுப்பினபோது, அவர்களிலும் தம்மோடிருக்கிறவர்கள் அதிகமென்று பார்க்க, எலிசா தமது வேலைக்காரனுடைய கண்களைத் திறந்தார்.

---

2 இரா. 6: 14—17.

---

எலியாவைப் பிடிக்க, 50-சேவகர் அனுப்பப்பட்டபோது, அவர்களுக்குச் சம்பவித்த செய்தி சூரியாவின் இராஜாவுக்குத் தெரிந்திருக்கலாம். ஓர் 50-அல்லது ஈர் 50-பேர் வான அக்கினியால் அழிந்தாலும், மீதியானவர்கள் அவனைப் பிடித்துக்கொண்டு வருவார்களென்று இராஜன் நினைத்து ஒரு சேனை அனுப்பினான். அது இரவில் எலிசா இருந்த பட்டணத்தை வளைந்துகொள்ள, அதைக் காலையில் கண்ட எலிசாவின் வேலைக்காரன் பயப்படவே, தீர்க்கதரிசி அவர்களிலும் நம்மோடிருக்கிறவர்கள்



அதிகம் என்றார். (2 நாளா. 32: 7. சங். 55: 18. ரோ. 8: 31.) வேலைக்காரன் ஓடிப்போனாலும் தப்ப வழியில்லை. யுத்தஞ்செய்யப் பார்த்தாலும் தப்பவுங் கூடாத காரியமென்று கலங்கினான். அவனுக்குள் விசுவாசமில்லை. (சங். 3: 6. 27: 3.) தீர்க்கதரிசி தம்மை இரக்ஷிக்க வந்திருக்கிற தூத சேனையை தரிசன வகையாய் அறிந்திருந்தார். ரோ. 8: 31. இந்த வேலைக்காரன் தேவனுடைய மகத்துவங்களை அறியாதவனும், கேயாசிக்குப் பின்வந்தவனுமானதால், தம்மைச் சூழவிருக்கிற தூதர் சேனையையும், அக்கினி இரதங்களையும் பார்க்கும்படி அவன் கண்கள் திறக்கப்பட எலிசா ஜெபித்தார். ஆதி. 32: 2. மத். 26: 35. 2 இரா. 2: 11. சங். 34: 7. சகரி. 1: 8. 6: 1—7.

### (14) எலிசா, தம்மைப் பிடிக்கவந்த சூரிய சேனையைக் குருட்டாட்டம் பிடிக்கச் செய்தார்.

2 இரா. 6: 18—24.

---

சூரியர்மேல் வந்த குருட்டாட்டம் தாங்கள் பிடிக்கவேண்டியவர் இன்னாரென்று அறியக்கூடாத மந்தாரமே. அவர்களுக்கு முழுவதுமாய்க் கண் தெரியாமற்போகவில்லை. அவர்கள் முன் போகிறவர் பிறகாலே பின் செல்லமாட்டார்களே. மூளையில் என்ன மாறுதலோ, ஆகாயத்தில் என்ன மந்தாரமோ தெரியாது. அவர்களுக்கு வந்த குருட்டாட்டம் பாதி மந்தாரம்போலிருந்தது. (ஆதி. 19: 11.) அவர்களுக்குக் கலக்கமுண்டாயிற்று. அவர்களிருக்கிற இடம் தோத்தானென்றும், அவர்களோடே பேசுகிறவர் எலிசாவென்றும் அறியக்கூடாமற்போனார்கள். ஏசா. 59: 10. யோபு 12: 24, 25. எலிசாவின் வேலைக்காரன் கண் திறக்கப்படவே, சூரியர் கண் தெரியாமல்போனதினால், தேவவல்லமை, ஞானம் என்ற இலட்சணங்களை நாம் தெளிவாய்ப் பார்க்கிறோம். யோ. 9: 39.

### (15) எலிசாவின் சரித்திரத்தில் வருகிற கடைசி அற்புதம், எலிசாவின் எலும்பில் பட்ட சவம் உயிர் அடைந்தது.

---

2 இரா. 13: 20, 21.

---

இந்த அற்புதம் எலிசா மெய்யாய் தேவஊழியக்காரனென்றும், அவர் சொன்ன தீர்க்கதரிசனமெல்லாம் சத்தியமென்றும் சாக்ஷிசொல்லுகிறது. எலிசா மரித்தும் அற்புதஞ்செய்கிறபடியால் இவர் இன்னும் ஜீவித்திருக்கிறார் என்றும், தேவன் மரித்தோரின் தேவனாயிராமல், ஜீவனுள்ளோரின் தெய்வமென்றும் அறிகிறோம். இதினால் உயிர்த்தெழுதலுண்டு, மறுமையுமுண்டென்ற உபதேசங்கள் உறுதிப்படுகிறது. கிறிஸ்துநாதருடைய மரணம், அடக்கம் இவைகளால் விசுவாசிகள் ஜீவனையடைவார்களென்ற உபதேசத்துக்கு இது முன்னடையாளம்போலுள்ளது. இஸ்ரவேலருக்குள் இறந்துபோனவனை அடக்கஞ்செய்யப்போனவர்கள் கொலையும், கொள்ளையுஞ் செய்யவருகிற மோவாபியர் தண்டைக் கண்டு பயந்து, சவத்தை எலிசாவின் கல்லறையில் போட்டார்கள். எலிசாவின் எலும்பில் பட்டவுடனே செத்தவன் எழுந்ததால், தேவன் எலிசாவுக்குப் பெரிய கனம் வரச்செய்தார். இதினால் யோவாஸ் இராஜாவும் இஸ்ரவேலரும் சூரியரை மேற்கொள்வார்களென்றறியச் செய்தார். ஜனங்கள் எல்லாரும்

தங்கள் ஆபத்துள்ள காலத்தில் ஆறுதலாயிருக்கவும், மறுமைக்குத் தங்களை ஆயத்தஞ்செய்யவும் இதினால் எச்சரிப்படையச் செய்தார். யோசேப்புஸ் இந்தச் சரித்திரத்தை வேறுவகையாய்ச் சொல்லுகிறார். சில கள்ளர் அத்திசையாய்ப்போன ஒரு யாத்திரைக்காரனைப் பிடித்துக் கொள்ளை அடித்துக் கொன்று எலிசாவின் கல்லறையில் எறியவே அவன் உயிரடைந்தான் என்பதே. இது சரியல்ல, [illegible]ன் எலியா பரத்துக்குப் போனபோது அவரைக் கனஞ்செய்தார். எலிசா மரித்தபிற்பாடு அவனைக் கனஞ்செய்தார். எசா. 11: 10.

## கேள்விகள்.

1. எலிசா செய்த அற்புதங்களை ஒழுங்காய்ச் சொல்லும்?
2. அற்புதமாவதென்ன? அதின் நோக்கமுமென்ன?
3. எலிசா செய்த அற்புதங்களையும், கிறிஸ்துவானவர் செய்த அற்புதங்களையும் ஒப்பிட்டுப்பார்த்து, அவைகளுக்கிருக்கிற சம்பந்தமும், வித்தியாசங்களும் சொல்லும்?
4. எலியா, எலிசா செய்த அற்புதங்களினால் இஸ்ரவேல் தேசத்துக்கு உண்டாகிய நன்மைகளெவை?
5. எலிசா செய்த அற்புதங்களில் சிலவை கொடுமையாய்ச் சொல்லப்படுகிறதே. அதற்கு சமாதானமென்ன?
6. அற்புதத்துக்கு வேண்டிய இலட்சணங்களென்ன? இது அருள் வேதத்துக்கு எப்படி அத்தாக்ஷியாயிருக்கிறது?
7. எலிசா தீர்க்கதரிசி செய்த அற்புதங்களில் நாம் என்னென்ன பாடங்கள் படிக்கிறோம்?
8. எலிசா நடப்பித்த அற்புத செய்கைளில் அவரில் விளங்கிய குணசீலங்களென்ன?

---

## வேதசித்தாந்தப் பிரமாணங்கள்.

### IV-ம் பிரமாணம்.

முகவுரை.

(தொடர்ச்சி.)

I. சீஷர்கள் நமது கர்த்தருடைய சரீரத்தைத் திருடியிருப்பார்கள் என்பது எவ்வளவு கூடாத காரியம். 2. பிரதானஆசாரியரும் பிலாத்துவும் இதற்காகவே காவல்வைத்திருந்தார்கள். 3. அந்தக்காலம் பௌரணையாயிருந்தது. 4. சேவகர் விழித்துவிடாதவிதமாய்ச் சீஷர்கள் கல்லை எப்படி உருட்டக்கூடும். 5. நமது இரக்ஷகருடைய பிரேதத்தைத் தூக்கிக்கொண்டு போய்விடுவதனால் அவர்களுக்குப் பலன் என்ன? 6. பிரேதச் சீலைகள் ஒழுங்காய் மடித்து வைக்கப்பட்டிருந்தன. நமது கர்த்தரை ஒரு ஆள் மாத்திரமல்ல பலர் ஒரே நேரமாத்திரமல்ல பல சமயங்களிலும், தூர



த்திலே மாத்திரமல்ல சமீபத்திலும் பார்த்தார்கள். கிறிஸ்து இரக்ஷகருடைய சரீரம் உயிர்த்தெழுந்தமையால் நம்முடைய சரீரமும் உயிர்த்தெழும். ஆனபடியால் அதைக்குறித்துத் தர்க்கிக்க அவசரமில்லை

II. நமது கர்த்தர் பரமேறினார் என்பது. 1. முன்னுரைக்கப்பட்டிருந்தது. சங். 24: 7. சங். 68: 18. மீகா. 2: 13. 2. ஏனோக்கும் எலியாவும் பாவநிவிர்த்தியின் நாளில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்த பிரதான ஆசாரியனும் அதற்கு முன்னடையாளங்கள். 3. நிறைவேறினதற்கு வாக்கியங்கள். மாற்கு 16: 19. நடபடி 1: 9. எபேசியர் 4: 8.

III. நமது கர்த்தர் வீற்றிருக்கிறார் என்பது. 1. முன்னுரைக்கப்பட்டிருந்தது. சங். 110: 1. 2. நிறைவேறினது. மாற்கு 16: 9. நடபடி 2: 34. எபே. 1: 20. கொலோ. 1: 31. நமது கர்த்தர் வீற்றிருப்பது அவருடைய ஆதிக்கத்தையும் அவர் நிறைவேற்றின பாவநிவிர்த்தியின் சம்பூரணத்தையும் அவர் நமக்காகப் பரிந்துபேசுகிற மத்தியஸ்தத்தையும் காட்டுகிறது. அப். 7: 55-லும் ஜெபபுஸ்தகத்தில் பரி. ஸ்தேவானுடைய நாளுக்குரிய சுருக்க ஜெபத்திலும் நமது கர்த்தர் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

IV. நமது கர்த்தர் நியாயந்தீர்க்க வருவார் என்பதில். 1. நியாயந்தீர்ப்பவர் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே. யோவா. 5: 22—27. 2. நியாயந்தீர்க்கப்படுகிறவர்கள் எல்லா மனிதருமே. அவர்கள் அவருடைய வருகைக்குமுன் மரித்தவர்களாயிருந்தாலும் சரி, அவருடைய வருகையில் உயிரோடிருக்கிறவர்களானாலும் சரியே. 2 தீமோ. 4: 1, 2. நடபடி 10: 42. 3. நமது கர்த்தர் கொடுக்கும் நியாயத்தீர்ப்பு கன்னிகைகளைப்பற்றிய உவமையிலும் தாலந்துகளையும் திரவியத்தையும் வாங்கின ஊழியக்காரரின் உவமையிலும் செம்மறி ஆடுகளையும் வெள்ளாடுகளையும் பிரிக்கிற மேய்ப்பன் உவமையிலும் காட்டியிருக்கிறது. 4. நமது கர்த்தர் நியாயந்தீர்க்கும் காலம் கடைசிநாளே.

---

### V-ம் பிரமாணம்.

பரிசுத்தஆவியானவரைக் குறித்து.

பரிசுத்த திரித்துவத்தில் முதலாம் இரண்டாம் ஆட்களைக்குறித்துப் பேசி இப்பொழுது மூன்றாவது ஆளைக்குறித்துப் பேசுகிறோம். பரிசுத்த ஆவியானவரைக்குறித்துச் சொல்லிய உபதேசம் முந்தின இரண்டு உபதேசங்களைப்போல விரிவாக இராததால் 6-ம் எட்வார்டு இராஜாவின் காலத்தில் மார்க்க சீர்திருத்தத்தை உண்டுபண்ணினவர்களும் ஆகஸ்பர்டு அறிக்கைசெய்தவர்களும் தேவாவியானவரைக்குறித்துச் சொல்லிய வேறொரு பிரமாணத்தை எழுதாமல் முதலாம் பிரமாணத்திலும் விசுவாசப் பிரமாணங்களிலும் அவரைக்குறித்துச் சொல்லியதே போதுமென்று விட்டுவிட்டார்கள். ஆனால் 1552—1562 வருஷங்களுக்கு இடையில் கள்ள உபதேசங்களைத் தடுக்கும்படியாக இந்தப் பிரமாணத்தையும் மார்க்க சீர்திருத்திகள் கட்டினார்கள். லத்தீன் கிரேக்குப் பாஷைகளில் ஆவியானவர் என்னும் பதம் “சுவாசம்” என்று அர்த்தங்கொள்ளும் பதங்களாயிருக்கின்றன. பரிசுத்த திரித்துவத்தில் மூன்றாவதானவர் பரிசுத்த ஆவியென்று சொல்லப்படுகிற காரணம். 1. அவர் தமது சுபாவதன்மையின்படி பரிசுத்

தராயிருக்கிறதினாலும், 2. அவர் பரிசுத்தத்தைக் கொடுக்கிறவராயிருக்கிறதினாலுமே. பரிசுத்தஆவியானவர் அருளும் கிருபை வரப்பிரசாதம் 2—வகைப்படும். 1. முந்திக்கொளளும் கிருபையும் 2. துணைநிற்கும் கிருபையுமே. பரிசுத்தஆவியானவருக்கு வழங்குகின்ற இன்னொரு நாமம் தேற்றுகிறவர் (Paraclese) என்பது நமது இரக்ஷகருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. 1 யோவா. 2: 1.

இந்தப் பிரமாணத்தில் கவனிக்கவேண்டிய காரியங்கள் 3.

I. பரிசுத்தஆவியானவர் பிரத்தியேகமான ஆளாயிருக்கிறார் என்பதும்.

II. பரிசுத்தஆவியானவர் மெய்த்தேவன் என்பதும்.

III. அவர் புறப்படுகிறவர் என்பதுமே.

I. பரிசுத்தஆவியானவர் பிதாவுக்கும் குமாரனுக்கும் வேறாயிருக்கிறார் என்பதைக்குறித்து முதலாம் பிரமாணத்தைக் குறித்த வியாக்கியானம் இரண்டாம் பிரிவில் D--பார்.

II. அவர் மெய்த்தேவனாயிருக்கிறார் என்பதைக்குறித்து முதலாம் பிரமாண வியாக்கியானம் II-ம் பிரிவு B-பார்.

III. பரிசுத்தஆவியான்வர் புறப்படுகிறவர் என்பதைப்பற்றியது முதல் முதல் எழுதப்பட்ட நீசேயா விசுவாசப்பிரமாணத்தில் (325) பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன் என்ற வார்த்தைகள் மாத்திரம் இருந்தன. 361-ம் வருஷத்தில் கொனஸ்தந்திநோபுரியில் கட்டின சங்கத்தார் "ஜீவனைக் கொடுக்கிறவருமாய்ப் பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருமாய்ப் பிதாவோடும் குமாரனோடும் தொழுதுதோத்திரிக்கப்படுகிறவருமாய்த் தீர்க்கதரிசிகள் மூலமாய் உரைத்தவருமானவர்" என்ற வார்த்தைகளைச் சேர்த்தார்கள்.

இதற்கு வேதரூபகாரம்.

1. பரிசுத்தஆவியானவர் பிதாவினின்று புறப்படுகிறார். யோவான் 15: 26. 14: 26. 2. அவர் குமாரனிடத்திலிருந்து புறப்படுகிறார். ரோமர் 8: 9. கலாத். 4: 6.

பரிசுத்தாவியானவர் பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறபடியால் அவர் பிதாவின் ஆவியென்றும் தேவஆவியென்றும் அழைக்கப்படுகிறது போல (1 கொரி. 2: 2. மத். 10:20.) அவர் குமாரனிலிருந்து புறப்படுகிறபடியினாலேதான் அவர் குமாரனுடைய ஆவி என்றும் கிறிஸ்துவின் ஆவியென்றும் அழைக்கப்படவேண்டும். யோவா. 15: 26. 14: 26—போன்ற நேரான வசனங்கள் இல்லாதபடியால்தான் அவர் குமாரனின்று புறப்படுகிறவரோ என்ற ஆக்ஷேபனை நேரிட்டது. ஆகிலும் அந்த ஆக்ஷேபனை மேற்சொல்லிய நியாயத்தால் நிராகரிக்கப்படுகிறது.

## நற்கருணை மாலை.

(தொடர்ச்சி.)

59—வினா. அவருடைய மரண சரித்திரத்தைச் சொல்லுக?

விடை. அவர் கெத்சமனேயில் ஆத்துமாவில் அடைந்த அகோர வேதனை, யூதாஸ் அவரைக் காட்டிக்கொடுத்தது, பேதுரு மறுதலித்தது, மற்றவர்கள் அவரைக் கைவிட்டது, பிரதானஆசாரியன்



பொந்தியுப்பிலாத்து ஆகிய இவர்கள்முன் நடந்த விசாரணையில் அவர் நடத்தப்பட்டது, சிலுவையிலறையப்பட்டு மரித்து அடக்கம்பண்ணப்பட்டதுமாகிய விசேஷங்களே.

60—வினா. கிறிஸ்துநாதருடைய மரணத்தால சம்பாதிக்கப்பட்ட புண்ணிய பலன்களெவை?

விடை. பாவமன்னிப்பு, நீதி, தேவனோடு ஒப்புரவாகுதல், நித்திய ஜீவன் முதலியவைகளே.

61—வினா. இராப்போசனப் பந்தியிற் சேர்ந்தவர்கள் அதிற் சேராமல் பின்வாங்கி நிற்கலாமா?

விடை. கூடாது. இப்படிப்பட்டவர்கள் "கர்த்தர் வருமளவும்" "நீங்கள் வாங்கிப் புசியுங்கள்" என்கிற தேவகட்டளையை மீறுகிறார்கள். பிறந்தவன் மரணமட்டுஞ் சாப்பிடவேண்டியது போல இதைக் கர்த்தர் வருமளவும் அநுசரித்து வரவேண்டும்

62—வினா. இந்த விருந்திற் சேராதபடி பலவித வீணான போக்குச் சொல்லுதல் தேவனால் ஒப்புக்கொள்ளப்படக் கூடியதா?

விடை. இராஜவிருந்திற்கு வராதவர்கள் சொன்ன போக்கு ஒப்புக்கொள்ளப்படாததுபோல (மத். 22—அதி.) இந்த விருந்துக்கு வராதவர்கள் சொல்லுகிற போக்கும் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது

63—வினா. அப்படியானால் நம்முடைய கடமையென்ன?

விடை. சாப்பிடவும், நித்திரைசெய்யவும் சமையமில்லையென்று ஒருவன் போக்குச்சொல்லாதிருப்பது எப்படியோ அப்படியே இது விஷயத்திலும் போக்குச்சொல்லி நின்றுபோகாதிருக்க வேண்டும்.

64—வினா. ஞானஸ்நானம்பெற்றாற் போதும், நான் இன்னமும் நல்ல கிறிஸ்தவனல்லவென்று இராப்போசனப் பந்தியிற் சேர பயந்து பின்வாங்கி நிற்கலாமா?

விடை. நிற்கக்கூடாது, ஞானஸ்நானத்தினால் நாம் மறுபடியும் பிறந்தாலும் நாம் தேவபக்தியிலும் பரிசுத்தத்திலும் வளர்ந்தேறி புருஷத்துவமுள்ளவர்களென்று காணப்படும்படி இந்தப் பந்தியிற் சேர முந்திக்கொள்ளவேண்டியது.

65—வினா. பின்வாங்குஞ் சிந்தையுள்ளவர்களுக்குக் கர்த்தருடைய வசனம் கொடுக்கிற எச்சரிப்பான வார்த்தை என்ன?

விடை. "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும் அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலுமிருந்தால் உங்களுக்குள்ளே ஜீவன் இல்லை" என்பதே. யோவா. 6: 53.

66—வினா. இராப்போசனம் சேராமல் பயத்தினால் பின்வாங்கி நிற்கிற பாவிகளுக்குத் தைரியமுண்டாக்குகிற எது என்ன?

விடை. தேவன் கிருபையாய்ப் பண்ணியிருக்கிற வாக்குத்தத்தங்களே.

67—வினா. தைரியங்கொடுக்கத்தக்கதான தேவனுடைய சில வாக்குத்தத்தங்களைச் சொல்லு?

விடை. "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்பதும். மத். 11: 28

"என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" என்பதும்; யோவா. 6: 37.

"நெரிந்த நாணலை முறிக்காமலும் மங்கியெரிகிற திரியை அணையாமலுமிருப்பார்" என்பதும். மத். 12: 20.

"உன் பாவங்களினால் என்னைச் சங்கடப்படுத்தி, உன் அக்கிரமங்களினால் என்னை வருத்தப்படுத்தினாய், நான் நானே உன் மீறுதலை என்னிமித்தங் குலைத்துப்போடுகிறேன், உன் பாவங்களை நினையாமலுமிருப்பேன்" என்பதுமே. ஏசா. 43: 24, 25.

68-வினா. சிறுவயதில் ஞானஸ்நானம்பெற்றவர்கள் சொல்லுகிறபடி அதாவது இந்த வாலிப வயதில் இதிற் சேர அவசரம் என்ன? காலம் இருக்கிறது, இன்னொரு சமையம் பார்த்துக்கொள்ளலாம் என்பதுபோல எண்ணி, ஏற்ற காலத்தை வீணாய்க் கடத்தலாமா?

விடை. கடத்தக்கூடாது. இப்படிப்பட்டவர்கள் ஞானஸ்நான உடன்படிக்கையை மறந்தவர்களும், தேவகட்டளையையும் அழைப்பையும் அசட்டைபண்ணுகிறவர்களுமாயிருந்து, தேவனைவிட தங்களை ஞானமுள்ளவர்கள்போல எண்ணி, அவரின் அன்பையும் இரக்கத்தையும் எண்ணாமலிருக்கிறதால் தங்கள் ஆத்துமாவுக்குக் கெடுதியைச் சம்பாதித்துக்கொள்ளுகிறவர்களாயிருக்கிறார்கள். மேலும் நாளையென்பது நம்முடைய நாளல்ல. நாளையென்றிருந்தால் ஒருவேளை நமது மனம் கடினப்பட்டுப் போகுமே. பேலிக்ஸ் தகுந்த சமையத்தைவிட்டுப் போவதாய் இன்னொரு நல்ல சமையம் கிடைக்கவில்லையே. ஆகையால் தங்களுக்கிருக்கிற நல்ல காலத்தைப் பற்றிக்கொண்டு, இந்தப் பந்தியின்மூலமாய் தங்களுக்கு வாக்குப்பண்ணியிருக்கிற நன்மைகளைப் பெற்றுக்கொள்ள உடனே இதிற் சேரவேண்டும். அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது.

69-வினா ஞானஸ்நானத்துக்கும் இராப்போசனத்துக்கும் வித்தியாசமென்ன?

விடை. 1. ஞானஸ்நானமானது ஒரே தடவையும், இராப்போசனமானது பல முறையும் அநுசரிக்கப்படுகிறதாயிருக்கிறது.

2. ஞானஸ்நானமானது ஞானஜீவன்போலவும், கர்த்தருடைய இராப்போசனமானது அந்த ஜீவனை வளர்க்கிறதுபோலவும் இருக்கிறது.

3. ஞானஸ்நானமானது நமது விசுவாசத்தை விளங்கச்செய்வதும் இராப்போசனமானது அதை மேன்மேலும் பலப்படுத்துவதுமாயிருக்கிறது.

## சேபத்தியாயியுடைய ஜீவிய சரித்திரம்.

இவள் பாளையங்கோட்டை அடைக்கலபுரத்திலுள்ள கிறிஸ்தமான பெற்றோர்களிடத்தில் பிறந்தவள். கடந்த வருஷத்தில் நேரிட்ட விஷபேதியால் இம்மையைவிட்டுப் பிரிந்து மறுமைக்குட்பட நேரிட்டது. சிறுபிராயத்தில் இவள் அடைக்கலபுரம் கிராமப்பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டு தேர்ச்சியடைந்தபின் மகாகனம்பொருந்திய சார்ஜென்ற் அத்தியக்ஷரவர்கள் அம்மாளவர்கள் பள்ளிக்கூடத்திற்கும், சேரற்றக்கர் கல்விச்



சாலைக்கும் அனுப்பப்பட்டாள். அவ்விடங்களில் அவள் கல்வியைக் கற்றுக்கொண்டதோடு தேவபக்தியையும் கற்றுக்கொண்டாள். இவள் விவாகஞ்செய்யாத வாலிப ஸ்திரீயாயிருந்தபோதிலும், அவளுடைய கிரியைகளெல்லாம் அவள் தேவபக்தியைக்குறித்துச் சாட்சியிடுகின்றன. அவளுடைய வீட்டிற்குப்போனால் பின்வருமாறு அநேக வேதவாக்கியங்களைத் தன் சொந்தக் கையால் எழுதி, வர்ணமிட்டு, சுவரில் தொங்கவைத்து, வீட்டை அலங்கரித்திருக்கும் காட்சி பார்க்கலாம்.

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்."
"இதோ என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்."
"தேவன் நமது பக்ஷத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?"
"நான் பரதேசியாய்த் தங்கும் வீட்டில் உமது பிரமாணங்கள் எனக்குக் கீதங்களாயின." &c

பரிசுத்த வேதாகமம், பாடுபட்ட தியானம் இப்புஸ்தகங்களை வாசிப்பதிலும் ஜெபம்பண்ணுவதிலும், ஜெபக்கூட்டங்களுக்குப் போவதிலும், தேவாலயத்திற்குப்போய் பிரசங்கங்களை வெகு கவனமாய்க் கேட்டு வீட்டிற்கு வந்து பெற்றோர்களிடத்தில் அவைகளை வினாவி ஞாபகப்படுத்திக்கொள்ளுவதிலும் வெகு கிரமமும் அபேட்சையும் உள்ளவள். இது விஷயங்களைக்குறித்து கனம்பொருந்திய கெம்பர் அம்மாளவர்கள் இவளைப்பற்றிக் கூறும் சாக்ஷி மிகவும் புகழப்படத்தக்கது.

1883-ம் ௵ டிசம்பர்௴ 27௳ வியாழக்கிழமை இரவு ஒரு மணிக்குத் திடீரென்று விஷபேதி துவக்கி வெகு வருத்தப்பட்டாள். மறுநாள் சாயந்தரம் 6-மணிக்கு மரணம் தனக்கு வெகு சமீபமாயிருக்கிறதை அறிந்து, தன் கண்களைச் சுவர்ப்புறமாய் ஏறெடுத்து "கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்." "இதோ உன்னை என் உள்ளங்கைகளில் வரைந்திருக்கிறேன்." என்னும் வசனங்களை வாசித்து, தாயை அழைத்து நான் புறப்பட ஆயத்தமாயிருக்கிறேன், நீங்கள் கொஞ்சநேரம் என பக்கத்தில் இருங்கள் என்று சொன்னாள். தாய் மகளைப் பார்த்து மகளே! நீ எங்களுக்கு வெகு ஒழுங்காயும் தாழ்மையாயும் நடந்துவந்தாயே, தேவனுக்கும் அப்படியே நடந்துவந்திருக்கிறாயா? நாங்கள் விருத்தாப்பியராகும் காலத்தில் நீ எங்களை ஆதரிப்பாய் என்றல்லவா இருந்தோம், எங்களுக்கு என்ன சொல்லுகிறாய் என்று கேட்க, மகள் ஆம் நான் கர்த்தருக்கும் கீழ்ப்படிந்து நடந்துவந்தேன். நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? அவர் உங்களெல்லாரையும் ஆதரிப்பார். என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன் என்று சொல்லுகிறாரே என்று சொல்லி சற்று அமைதலாயிருந்தாள். பின்பு திடீரென்று "கர்த்தர் என்னை அழைக்க இதோ வந்துவிட்டார்." உங்களெல்லாருக்கும் தோத்திரம், தாயாருக்குத் தோத்திரம், ஐயாவுக்குத் தோத்திரம், என்னைப் பார்க்கவந்தவர்கள், வராதவர்கள் எல்லாருக்கும் தோத்திரம் என்று சொல்லி தன் இருகரங்களையும் குவித்தாள். தாய் மகளைப் பார்த்து மகளே! நீ எங்களை ஏன் தோத்திரிக்கிறாய்? கர்த்தரைத் தோத்திரி. ஒரு தேசத்துக்கு வழிபுறப்படுகிறவள்போல வழியனுப்புகிறாயே எங்கே போகிறாய்? எப்போது திரும்பி வருவாய்? நாங்கள் உன்னை இனி எப்போது காண்போம் என்று கேட்க, மகள் இதிலும் மேன்மையான தேசத்திற்குப் போகிறேன், மறுமையில் எல்லாரையும் கூட்டிச் சேர்க்கும் கடைசிநாளில் ஒருவரையொருவர் கண்டுகொள்ளலாம். தம்பி சாமுவேலைக் கூப்பிடுங்கள் என்றாள். அவன் வந்தபோது அவள் அவனைப் பார்த்து தம்பி! நீ நாள்தோறும் கோவிலுக்கு ஒழுங்

காய்ப் போ, கர்த்தருக்குப் பயந்து நட, தாயாருக்கும் தகப்பனாருக்கும் கீழ்ப்படிந்து நட, பள்ளிக்கூடத்திற்கும் ஒழுங்காய்ப் போ, நான் நிறுத்திய அடையாளத்திலிருந்து ஒழுங்காய் வாசித்து வா, இவைகளையெல்லாம் செய்துவருவாயா என்று கேட்க, அவன் நல்லது அப்படிச்செய்கிறேன் என்றான். அவள் அவனைப் பார்த்து நீ சொல்லுவாய், ஆனால் செய்யமாட்டாய். அப்படிச்செய்வேன் என்பதின் உறுதிக்கடையாளமாக "நீ கிட்டிவந்து என்னை முத்தஞ்செய்" என்றாள். அவன் கிட்டிப்போய் அவளை முத்தஞ்செய்யவே நான் போய் வருகிறேன் என்று எல்லாரையும் வழியனுப்பிக்கொண்டு மகா மகிழ்ச்சியுடனே இவ்வுலக துக்கசாகரத்தின் அலைகளைக் கடந்து நித்திய ஜீவகரை சேர்ந்தாள். வயசு. 18.

"கர்த்தருக்குட்பட்டு மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள், அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்." ஆபேல் மரித்தும் இன்னும் பேசுகிறதுபோல இவள் மரித்தும் இன்னும் பேசுகிறாள் என்று சொல்லலாம்.

வாசிப்பில் அவள் நிறுத்திய அடையாளம். சங். 53. பாடுபட்ட தியானம் 1-பங்கு 53-ம் பக்கம் யோவான் 18: 19—21.

"நீ உத்தமனை நோக்கி செம்மையானவனைப் பார்த்திரு, அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்."

---

## சமாசாரத்திரட்டு.

ராஜமஹேந்திரியில் பிராமண விதவை விவாகம் ஒன்று நடந்தது.

சில நாட்களுக்குமுன் தஞ்சாவூருக்கு வந்திருந்த 16-மணங்கு பாரமுள்ள பல்லாரி தேசத்து மனிதனொருவன் திருச்சினாப்பள்ளியில் இறந்துபோனதாயும் அவன் வயிற்றைக் கீறிப்பார்த்ததில் பொன் கட்டியும் கோரோசனையுமிருந்ததாகவும் வதந்தி.

நூலாம்படைப் பூச்சியின் ஒரு சிறு நூல் ஒரு மயிரிழைக் கனதியில் 20-லட்சத்தில் ஒரு பங்குக்குச் சமம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. வித்தியாசாஸ்திரி ஒருவர் ஒரு நூலாம்படைப் பூச்சியிலிருந்து 3480-கஜ நீளமான நூல் எடுத்தாராம். கொஞ்சங்குறைய மூன்று மைலுக்குச் சமம்.

இந்த மாசம் ஓர் வால் நக்ஷத்திரம் கண்ணுக்குப் புலப்படுகிறது.

ஆக்கிராவுக்கடுத்த ஊரில் ஒரு ஸ்திரீ ஒரு அடி நீளமுள்ள தாடியுடையவளாயிருக்கிறாளாம். அவளைக் கல்குத்தா விநோத காட்சிசாலைக்கு அனுப்பவேண்டுமென்று ஒரு பத்திரிகையின் லிகிதர் சொல்லுகிறார். மீசையும் முளைத்திருந்தாலோ, வெகு வேடிக்கையாய்த்தானிருக்கும்.

நோர்வை தேசத்தில் ஒரு ஸ்திரீயைச் சர்ப்பங் கடிக்க, இவன் அதைத் தன் கையிற் பிடித்துக்கொண்டு கடிக்கச் சர்ப்பம் மாண்டது. இரண்டு மணிக்குப்பின் இவளும் மாண்டாள்.

கவர்ணர் ஜெனரல் இதற்குமுன் சென்னபட்டணத்திற்கு வந்திருப்பார். அவர் வரவு நோக்கி சுதேசிகளும் ஐரோப்பியரும் பல வந்தனப் பத்திரங்களும் மற்றும் உபசரணைகளும் ஆயத்தஞ்செய்தார்கள். சென்னபட்டணத்திற்கு வந்தபின் அங்கிருந்து நிஜாம் அரசனின் மகுடாபிஷேகத்துக்காக ஐதிரபாத்துக்குப் போவார். அதற்காக அந்தப் பட்டணத்திலும் அநேக ஆயத்தங்கள் நடக்கின்றன. கவர்ணர் ஜெனரலோடு சென்னைக் கவர்ணரும் போவார்.



இலபட் சட்டத்தினால் உண்டான கலக்கம் ஒருவாறு தணிந்தது. சுதேச நீதியதிபர்களில் அதி உயர்ந்த வரிசையைச் சேர்ந்தவர்கள் ஐரோப்பியரை குற்றவிசாரணை செய்யலாம்; என்றாலும் கட்சி விரும்பிக்கொண்டால் ஐரோப்பியரான மத்தியஸ்தர்களை ஏற்படுத்தவேண்டும்.

திருநெல்வேலி.—திருநெல்வேலியில் வாசம்செய்து, திருநெல்வேலியிலும், பாளையங்கோட்டையிலுமுள்ள அந்தர்ப்புரத்து கனம் தங்கிய ஸ்திரீகளுக்கு, இயேசு இரக்ஷகரின் இரக்ஷண்ய உபதேசத்தைப் போதித்து, வாசிப்பு, தையல்முதலிய பாடங்களைப் போதித்து வந்த கனம் லூயிஸ் அம்மாளவர்கள் ஜனுவரி௴ 21௳ விஷபேதி கண்டு, வரவர வியாதி அதிகரித்து 24௳ காலையில் பாளையங்கோட்டையில் மகாகனம் பொருந்திய சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள் பங்களாவுக்குக் கொண்டுவரப்பட்டு, வியாதி மடங்காமல் ஷை தினம் இரவு 10-மணிக்கு தேகவியோகமாகி, கர்த்தருடைய இராஜ்யத்துக்குட்பட்டார்களென்பதை துக்கத்துடன் அறிவிக்கிறோம்.

---

## நோட்டீஸ்.

நாளது வருஷம் பெப்ருவரி௴ முதலாம்தேதிமுதல் திருச்சினாப்பள்ளி, எஸ். பீ. ஜீ. ற்ரேனிங் பெண்பாடசாலையில் முதல்படி வகுப்பு ஒன்று ஏற்படுத்தப்படும். பீஸ் குறைந்த தாரிப்பு அணா 8. தங்கள் பெண்களுக்கு விசேஷித்த சாப்பாடும், கின்னரப்பழக்கமும் சித்திரம் வரைதலும் கிடைக்கவேண்டுமென்று விரும்பும் பெற்றோர் மாசம் 2-ரூபாய்க்குக் குறையாமல் கொடுக்கவேண்டும். இப்பாடசாலைக்குத் தங்கள் பெண்களை அனுப்ப விரும்பும் கிறிஸ்தவர்களல்லாத இதர சமயத்தார் தங்கள் பெண்களுக்காக சர்க்காரால் கிடைக்கும் உபகாரத்தைப் பெற்றுக்கொண்டு, சாப்பாடுமுதலிய ஒழுங்குகளைத் தங்கள் மனம்போல செய்துகொள்ளலாம்.

பாடசாலையின் கல்வி அபிவிர்த்திக்கு அனுகூலமாக சீமையிலிருந்து ஒரு துரைசானியும் வந்திருக்கிறார்கள்.

ஷை பாடசாலையில் தங்கள் பெண்களைச் சேர்க்க விரும்பும் பெற்றோர், மானேஜர் கனம் ஜே. எல். உலவற் ஐயரவர்களுக்கு எழுதிக்கொள்ளவேண்டியது.

பெப்ருவரிமீ நாள்-29 தைமீ 21உ முதல், மாசிமீ 20உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வெ | 1 | ௨௧ | கர்த்தரின் கிருபைகளை என்றைக்கும் பாடுவேன். சங். 89:1. |
| ச | 2 | ௨௨ | எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும். 90:14. |
| ஞா | 3 | ௨௩ | அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும். 91:4. |
| தி | 4 | ௨௪ | நீதிமான் பனையைப்போல் செழிப்பான். 92:12. |
| செ | 5 | ௨௫ | கர்த்தர் உன்னதத்திலே வல்லமையுள்ளவர். 93:4. |
| பு | 6 | ௨௬ | உம்முடைய ஆறுதல்கள் என் ஆத்துமாவைத் தேற்றுகிறது. 94:19. |
| வி | 7 | ௨௭ | இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களானால். 95:8. |
| வெ | 8 | ௨௮ | அவருடைய இரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள். 96:2. |
| ச | 9 | ௨௯ | எல்லா தேவர்களிலும் நீரே மிகவும் உயர்ந்தவர். 97:9. |
| ஞா | 10 | ௧ | அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார். 98:9. |
| தி | 11 | ௨ | நம்முடைய தேவனாகிய கர்த்தர் பரிசுத்தமுள்ளவர். 99:9. |
| செ | 12 | ௩ | அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள். 100:4. |
| பு | 13 | ௪ | தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்கமாட்டேன். 101:3. |
| வி | 14 | ௫ | என் கூப்பிடுதல் உம்மிடத்தில் சேர்வதாக. 102:1. |
| வெ | 15 | ௬ | கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். 103:13. |
| ச | 16 | ௭ | பாவிகள் பூமியிலிருந்து நிர்மூலமாகி. 104:35. |
| ஞா | 17 | ௮ | கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக. 105:3. |
| தி | 18 | ௯ | எக்காலத்திலும் நீதியைச்செய்கிறவர்களும் பாக்கியவான்கள். 106:3. |
| செ | 19 | ௰ | மூடர் தங்கள் பாதக மார்க்கத்தால்...ஒடுங்கிப்போகிறார்கள். 107:17. |
| பு | 20 | ௧௧ | இக்கட்டில் எங்களுக்கு உதவிசெய்யும். 108:12. |
| வி | 21 | ௧௨ | நான் சிறுமையும் எளிமையுமானவன். 109:22. |
| வெ | 22 | ௧௩ | வழியிலே அவர் நதியில் குடிப்பார். 110:7. |
| ச | 23 | ௧௪ | அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது. 111:9. |
| ஞா | 24 | ௧௫ | நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன். 112:6. |
| தி | 25 | ௧௬ | அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார். 113:7. |
| செ | 26 | ௧௭ | பூமியே, நீ ஆண்டவருக்கு முன்பாக அதிரு. 114:7. |
| பு | 27 | ௧௮ | கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார். 115:12 |
| வி | 28 | ௧௯ | விசுவாசித்தேன், ஆகையால் பேசுவேன். 116:10. |
| வெ | 29 | ௨௰ | கர்த்தரின் உண்மை என்றென்றைக்குமுள்ளது. 117:2. |

## விசேஷ நாட்கள்.

2. பரி. கன்னிமரியாள் சுத்திகரிப்புத் திருநாள்.
3. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும் 4-ம் ஞாயிறு.
10. செப்துவகெசிமா ஞாயிறு.
11. பௌர்ணமி.
17. செக்சகெசிமா ஞாயிறு.
24. க்வின்குவகெசிமா ஞாயிறு.
    பரி. அப். மத்தியாவின் திருநாள்.
26. அமாவாசை.
27. லெந்தென்னும் நாட்களில் முதலாம் நாள்.

# நற்போதகம்.

௩. மார்ச்சுமீ. ௲அஅச௵.

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை வியாக்கியானம்.

### ௰-ம் அதிகாரம்.

### கர்த்தருடைய இராப்போசனம்.

(தொடர்ச்சி.)

வினா. கர்த்தருடைய இராப்போசனத்துக்குச் சேருகிறவர்கள் என்ன செய்யவேண்டும்?

விடை. அவர்கள் முன் செய்த பாவங்களுக்காக உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, புதுஜீவனுள்ளவர்களாய் நடக்க உறுதியாய்த் தீர்மானம்பண்ணுகிறோமா என்றும்; தேவன் கிறிஸ்துவின்மூலமாய் அருளிய இரக்கத்தில் உயிருள்ள விசுவாசம் வைத்து, அவருடைய மரணத்தை நன்றியறிதலோடே நினைவுகூருகிறோமா என்றும்; எல்லா மனிதரிடத்திலும் அன்பாயிருக்கிறோமா என்றும், தங்களைச் சோதித்து அறியவேண்டும்.

எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். 1 கொரி. 11: 28.

நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்தறியுங்கள். 2 கொரி. 13: 5.

மனஸ்தாபம் இன்றியமையாத அவசியம். நாம் முன் செய்த நடக்கைகளை ஞாபகப்படுத்தி, அவைகளை கர்த்தருடைய கற்பனைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். எந்தப் பாவத்துக்கும் இடங்கொடுக்கிறவர்களாகவும், மனஸ்தாபப்படாதவர்களாகவும், விட்டு

விடாதவர்களாகவும் இருப்போமானால் இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தில் சேரக்கூடாது.

நீ முன் செய்த பாவங்களுக்காக உண்மையாய் மனஸ்தாபப்படுகிறாயென்று எப்படி அறியலாம்?

புதுஜீவனுள்ளவனாய் நடக்கும்படி, முன் செய்த பாவங்களை வெறுப்போடு அருவருக்கும் குணம் காணப்படுவதினாலேயே அறியலாம்.

தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரக்ஷிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. 2 கொரி. 7: 10, 11.

நீ இவ்வகையான தேவனுக்கேற்ற துக்கம் அடைந்திராவிட்டால், தேவன் தமது ஆவியை உனக்குக் கொடுக்க அவரை நோக்கிக் கெஞ்சு. ஏனென்றால் அவர் பாவத்தைக்குறித்து உலகத்தைக் கண்டித்து உணர்த்துகிறவராயிருக்கிறார். யோவா. 16: 8.

எந்த வகையாயாவது நீ செய்திருக்கும் தப்பிதங்களை நினைவுகூர். உன் சொந்தக் குற்றங்களை ஞாபகத்துக்குக் கொண்டுவா. அவைகள் கிறிஸ்துநாதருடைய திருஇரத்தத்தின் அவசியத்தை உனக்கு உணர்த்தலாம். நீ குத்தின அவரை நோக்கிப் பார்த்து புலம்பு. தாவீது இராஜாவைப்போல "கர்த்தாவே என்னைப் பரீட்சித்து, என்னைச் சோதித்துப் பாரும்" (சங். 26: 2) என்று ஜெபம் பண்ணு.

உயிருள்ள விசுவாசமும், கர்த்தருடைய பந்தியைச் சேருகிறவர்களுக்கு அவசியமானது. ஏனென்றால் விசுவாசத்தினாலே மாத்திரம் நாம் கிறிஸ்துவானவரை அனுபவித்து, அவருடைய மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணுகிறோம். கிறிஸ்தவனுடைய ஜீவன், கிறிஸ்துவில் போஷிக்கப்படுவதினாலேயே, கிருபையில் இடைவிடாமல் வளருகிறது.

விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு சேரக்கடவோம். எபி. 10: 22.

ஒருவன் தனக்கு இந்த விசுவாசம் இருக்கிறதா இல்லையா என்பதை எப்படி அறிவான்?

தேவன் கிறிஸ்துவின்மூலமாய் அருளிய இரக்கத்தின் உயிருள்ள அறிவினாலும், நீதியின் கனிகளைக் கொடுப்பதினால் விளங்கும் சாட்சியினாலுமே.

அன்பினாலே கிரியைசெய்கிற விசுவாசம். கலா. 5: 6.

விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும். யாக். 2: 17.

கிறிஸ்துநாதருடைய மரணத்தை நன்றியறிதலோடே நினைவுகூறுதலும் அவசியமானது. இதன்பொருட்டு, நாம் நம்மைத் தாமே "அந்தகாரத்திலும், மரண இருளிலும் கிடந்த நிர்ப்பாக்கியமுள்ள பாவிகள்" என்பதை ஞாபகப்படுத்துகிறோம். வாயினாலே பொதுப்பட பாவஅறிக்கைசெய்வது லேசான காரியம். இருதயத்தோடு அதை உணராவிட்டால், நாம் கிறிஸ்துவை நம்முடைய இரக்ஷகராக மதிக்கிறவர்களல்ல. இதனால் மனத்தாழ்மையைக் காண்பிக்கும் வார்த்தைமட்டும் உபயோகமற்றதாயிருப்பதுபோல, துதிசொல்லும் வார்த்தையும் பிரயோசனமற்றதாயிருக்கும்.



வினா. எல்லா மனிதரிடத்திலும் அன்பாயிருப்பது ஏன் அவசியம்?

விடை. இது அன்பின் விருந்தாயிருப்பதினாலேயே. ஆதலால் இருதயத்தின் எவ்வித பட்சமற்ற குணமும், தகுதியின்மையும், தேவன் நம்மை ஏற்றுக்கொள்ளாதபடி செய்கிறதாயிருக்கிறது. பழிவாங்கும் ஆவிக்கு அன்பின் விருந்து ஏற்றதல்ல. இந்தச் சாக்கிரமெந்தினாலே நாம் எல்லாரும் தலையாகிய கிறிஸ்துநாதருக்குள் ஒரே சரீரத்தின் அவயவங்களென்று அறிக்கையிடுகிறோம். நாம் ஒரே சரீரமாயிருப்பதினாலே, ஒருவருக்கொருவர் இருதயத்திலும், ஒருவர்மேல் ஒருவர் வைக்கும் பட்சத்திலும் பிரிவினையற்றவர்களாயிருக்கவேண்டும் என்றும்; அன்பும் பட்சமுமே ஒவ்வொருவருடைய ஆவியும், இலட்சணமுமாயிருக்கவேண்டும் என்றும்; தேவனுடைய சமுகத்திலும், அனுபவிக்கும் சலாக்கியத்திலும், கிறிஸ்துவின் அன்பிலும், நமக்காக ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற மகிமையிலும் ஒருமைப்பாடுடையவர்களென்றும் அறிக்கையிடுகிறோம்.

நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து. மத். 5: 23, 24.

நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள். யோவா. 13: 36.

1 கொரி. 5: 8. 10: 17. 11: 17. 13: 2. எபே. 4: 3, 31, 32. எபி. 10: 24. 1 யோவா. 4: 11.

வினா. கர்த்தருடைய இராப்போசனத்துக்குச் சேருகிறவர்கள் எவ்வித குணத்தோடு வரவேண்டும்?

விடை. நம்முடைய இரக்ஷகரின் மரணத்துக்குக் காரணமாயிருந்த நம்முடைய பாவங்களைப்பற்றிய உண்மையுள்ள மனஸ்தாபத்தோடும், அவருடைய மரணத்தினால் நமக்குண்டான நன்மைகளுக்காகப் பரிசுத்த சந்தோஷத்தோடும், நன்றியறிதலோடும்; தேவகிருபையினாலே நம்மையும், நம்முடைய சரீரத்தையும் ஆத்துமாவையும், புத்தியும் பரிசுத்தமும் ஜீவனுமுள்ள பலியாக ஒப்புக்கொடுப்போமென்ற தீர்மானத்தோடும்; எல்லா மனுஷரிடத்திலும் விசேஷமாய் தேவனுடைய ஜனங்களிடத்தில் வைக்கும் மெய்யான அன்போடும் வரவேண்டும். ஐயோ! எத்தனையோ பேர் இந்தப் பரிசுத்த பந்திக்கு அடிக்கடி வந்தாலும், இருதயத்தில் யாதொரு எழுப்புதலில்லாமல் வந்து, வெளியாசாரமாக மட்டும் அனுசரித்து, குளிர்ச்சியுள்ளவர்களாயும், உலகத்துக்கடுத்தவர்களாகவுமே வெளியே போகிறார்கள்.

இந்த திவ்விய விருந்துக்கு பயபக்தியும், வணக்கமுமுள்ள எல்லாரும் அழைக்கப்படுகிறார்கள்; நமக்கு இந்தக் கலியாண வஸ்திரமில்லாவிட்டால் (மத். 22: 12.) நாம் இந்தப் பரிசுத்த இரகசியத்தில் பங்காளிகளாகமாட்டோம். பரி—லூக்கா 13: 26—ல் சொல்லியவர்களைப்போல், ஆண்டவருடைய சமுகத்தில் போஜனபானம்பண்

ணினோமே என்று எவ்வளவாய் நியாயம்சொன்னாலும், அக்கிரமசெய்கைக்காரரே என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று உத்தரவு அருளப்படும்.

இப்படிப்பட்ட சிந்தை நமக்கில்லாவிட்டால் நாம் அதற்காக ஜெபம்பண்ணவேண்டும். இக்கடமையை அசட்டைசெய்வதற்கு நம்முடைய பாவங்களைப் போக்காகச் சொல்லக்கூடாது. கிருபையில் வளருகிறதற்காகவே இச்சாக்கிரமெந்து நியமிக்கப்பட்டது. அப்பத்தைப் பிட்கையில் கிறிஸ்து தமது சீஷருக்கு அறியப்பட்டார் என்பதை நினைக்கவேண்டும். லூக். 24: 35.

அவர் விசுவாசத்தை உண்டாக்குகிறவரும், மனந்திரும்புதலைக் கொடுக்க நியமிக்கப்பட்டவருமாயிருக்கிறார். ஆகையால் நாம் இந்த நியமத்தின் வழியாய் அவரண்டைக்கு வந்து, அதில் அவர் அருளும் நன்மைகளுக்குப் பங்காளிகளாவோமாக.

நாம் நம்முடைய குறைவை உணர்ந்து, நம்மைத் தாழ்த்தி, கிறிஸ்துவை உண்மையாய்த் தேடுவோமானால், தேவன் நம்மைத் தள்ளவுமாட்டார், நம்மிலிருந்து தமது கிருபையை நீக்கவுமாட்டார். வீண்போக்குகளினாலே கிறிஸ்துவின் நியமத்தை அசட்டைசெய்வோமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயும், தேவனுக்கு விரோதமான குற்றவாளிகளாயுமிருப்போம். இங்கே நாம் கர்த்தருடைய இராப்போசனத்துக்கு அபாத்திரரானால், ஆட்டுக்குட்டியானவரின் மகிமையான விருந்துக்கு எப்படிப் பாத்திரராவோம்?

கிறிஸ்துவின் அன்பை ருசிக்க அழைக்கப்பட்டவர்கள், அவர் தம்முடைய சீஷருக்கு "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று கொடுத்த கடைசி கட்டளையை அசட்டைசெய்வது எவ்வளவு பெரிய தப்பிதம். (கர்த்தருடைய இராப்போசனத்துக்கு முன்னடையாளமாயிருந்த) பஸ்கா ஆசரிப்பை அசட்டைசெய்த ஆத்துமா இஸ்ரவேல் சபையில் இராமல் அறுப்புண்டுபோவானாகில் (யாத். 12: 19.) தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தம்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான்? எபி. 10: 29. அடிக்கடி பரிமாறப்படுகிற அவருடைய பந்தியின் அழைப்பை அங்கிகரித்துக்கொள். இருதயத்தின் ஆயத்தம் தேவனுக்கேற்றதாயிருக்கும்படி விண்ணப்பம்செய். நீ இப்பொழுது விசுவாசத்தில் பெலவீனமுள்ளவனாயிருந்தாலும், இந்த நியமத்தினால் நீ அவரில் நிலைத்திருப்பாயானால் உன்னுடைய பெலன் கழுகின் பெலனைப்போல புதிதாகும்: நீ ஓடுவாய், இளைத்துப்போகாய்: நடப்பாய், சோர்ந்துபோகமாட்டாய் என்பதைச் சிந்தித்து நடந்துகொள்வாயாக. ஆமென்.

முடிந்தது.



# II. எலிசா சொன்ன தீர்க்கதரிசனம்.

## (1) மோவாபியர்மேல் ஜெயம் கிடைக்குமென்று சொன்ன தீர்க்கதரிசனம்.

2 இரா. 3: 18, 19.

யோசபாத்தினிமித்தம் எல்லாருக்கும் தாகம் தீர்க்கும்படி போதுமான தண்ணீர் வரும்படி தேவன் கிருபைசெய்வதுமல்லாமல், நீங்கள் கேளாததும், எதிர்பாராததுமான ஜெயத்தையும் தேவன் உங்களுக்குத் தருவார் என்கிறார். அந்தச் சேனைகள் எல்லாம் தண்ணீரில்லாமையால் தொய்ந்துபோனபோது, அவர்கள் மோவாபியரை ஜெயிப்போமென்ற நம்பிக்கையேயில்லை. இந்த மோவாபியர் தேவனுடைய ஜனங்களுக்கு எப்போதும் விரோதிகளும், குரூரமான சத்துருக்களும் இந்தச் சமயத்தில் கலகஞ்செய்தவர்களுமானதால், தேவன் இவர்களால் அவர்களை அழிக்கும்படி சித்தமானார். உபா. 20: 19. இது புறநடையான கட்டளையுமாயிருக்கிறது. இவர்கள் எவனுக்குத் தீர்வைசெலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வைச் செலுத்துங்கள் என்ற கட்டளையை மீறினதால் மோவாபியரில் மீதியானவர்கள் பசியால் வருந்தும்படிக்கு விடப்பட்டார்கள்.

## (2) சீரிய இராஜனுடைய இரகசிய ஆலோசனையை வெளிப்படுத்தல்.

2 இராசா 6: 8—10.

எலிசா தமது தீர்க்கதரிசன ஆவியால் இஸ்ரவேலின் இராஜாவுக்கு சூரிய இராஜாவின் யுத்தத்துக்குரிய ஆலோசனைகளையும், கூடிவருகிற இடங்களையும், சத்துருக்கள் வருகிற திசைகளையும் தெளிவாய் முன்னறிந்து வெளிப்படுத்தினார். இஸ்ரவேலின் இராஜா அநேக விசை சூரியரின் உபாய தந்திரங்களுக்குத் தப்பிக்கொள்ளும்படி எச்சரிக்கப்பட்டார். தேவனுடைய ஜனங்களின் சத்துருக்கள் இஸ்ரவேலருக்குத் தீமைசெய்வதில் ஓயவில்லை. நெகே. 4: 11. சூரியருடைய உபாய தந்திரங்கள் யாவும் தேவனுக்குத் தெரியப்படாதவையல்ல. அவைகளைத் தேவன் முன்னறிந்து, தீர்க்கதரிசியைக்கொண்டு பலதரமாக இஸ்ரவேலின் இராஜாவை எச்சரிக்கிறார். சூரியருடைய மோசத்துக்குத் தப்பிக்கொள்ள இராஜன் தீர்க்கதரிசியால் எச்சரிக்கப்பட்டபடி நடந்துகொண்டான். ஆனாலும் தன் பாவத்தைவிட்டு சீர்ப்படும்படி தீர்க்கதரிசி சொன்ன எச்சரிப்பைக் கேட்டானில்லை. நாகமானோடே கூடவந்த சூரியர், எலிசாவின் அற்புத செய்கைகளை, கண்டவர்களாயும், கேயாசின் பாவங்களைத் தீர்க்கதரிசி அறிந்துகொண்டவராய், அவனைக் கண்டித்ததைக் கேட்டவர்களாயுமிருந்தபடியால், சூரியாவின் இராஜா கலங்கினபோது, தீர்க்கதரிசியின் மகத்துவத்தைச் சொல்லியிருக்கலாம்.

## (3) இராஜன் தம்மைக் கொலைசெய்யும்படி அனுப்பின ஆளை அறிந்து முன்னறச் சொன்னது.

2 இரா. 6: 32, 33.

எலிசா தாம் தங்கியிருந்த வீட்டில், சில மூப்பரும் அதாவது வைதீக லௌகீக அதிகாரிகளும், அல்லது தீர்க்கதரிசிகளின் புத்திரரும் அரண்மனையிலாவது, பட்டாளத்திலாவது, பட்டணத்திலாவது வல்லமையும் உத்தியோகமும்பெற்ற பக்தியுள்ள பெரியோர்களும், தீர்க்கதரிசியோடே உளுக்கார்ந்திருந்தார்கள். அக்காலத்தில் யோராம் என்ற இராஜா எப்படிப் பொல்லாதவனோ பொதுப்பட அவன் பிரபுக்களும் உத்தியோகஸ்தரும் அப்படியே. என்றாலும், தீர்க்கதரிசியுடைய பரிசுத்த போதனை நடக்கையினாலும், மகத்துவ அதிசயங்களினாலும் அவரால் பெற்றுக்கொண்ட பற்பல நன்மைகளினாலும் அநேகர் தேவனண்டைக்கு மனந்திரும்பி, மெய்மார்க்கத்தைச் சார்ந்தவர்களாயிருந்தார்கள். இவர்களில் ஏகூவும் ஒருவனாயிருக்கலாம். இப்படிப்பட்ட பக்தர் பஞ்சமுள்ள காலத்தில் தீர்க்கதரிசியால் ஆறுதலும் ஆலோசனையும் அடையவும்; அவர்கள் விடுதலையடைய தேவவல்லமைக்காகக் கெஞ்சும்படி கேட்கவும் கூடிவந்திருந்தார்கள். இப்படி வந்தவர்களுக்கு மறுசெய்தி சொல்லுமுன்னமே, அவர் தேவனால் முன்னறிந்து தம்மிடத்திற்கு வந்திருந்த மூப்பரிடத்தில், "என் தலையை வாங்க அந்தக் கொலைபாதகன் மகன் ஆள் அனுப்பினான் பார்த்தீர்களா" என்றார். கர்த்தருடைய தீர்க்கதரிசிகளைக் கொன்ற 1 இரா. 18: 4. 21: 9. ஆகாப்பின் மகன் தானே யோராம். இவனும் தன் செய்கையில் அப்படிப்பட்டவனே. (யோவா. 8: 44.) இராஜனும் முந்தி ஆள் அனுப்பிவிட்டு, பயங்கரமான அந்தத் தீர்ப்பை நிறைவேற்ற அவன் தானும் பிறகாலே வந்தான். அவன் பஞ்சம் வருவதற்கு கர்த்தருக்குக் கோபம் மூட்டின தன் பாவங்களை நினைக்காமல், தன் தாயின் வேசித்தனங்களையும் அறியாமல், தேவன்பேரில் குற்றஞ்சாட்டி அவருடைய தீர்க்கதரிசியைக் கொல்ல வருகிறான். இப்படிப்பட்ட தண்டனைகள் வரும்போது பக்தியுள்ள ஏலி, தாவீது, யோபு பொறுமையாய் இது கர்த்தருடைய செய்கையென்று அறிக்கையிட்டார்கள். யோராமோ, கோபங்கொண்டவனாய் "கர்த்தருக்குக் காத்திருக்கவேண்டியதென்ன" வென்கிறான்.

## (4) சமாரியாவில் தானியம் மலிவாயிருக்குமென்று தீர்க்கதரிசனஞ் சொன்னது.

2 இரா. 7: 1, 2.

தீர்க்கதரிசி தன்னைக் கொலைசெய்யவந்த ஆளோடே அல்லது இராஜனோடே (18-வச.) கர்த்தருடைய உதவிக்குக் காத்திருக்கவேண்டியதில்லை என்று சொன்னவனோடே தேவன் தமது ஜனங்களுக்குச் செய்யும் வல்லமையை நாளைக்குப் பார்ப்பீரென்று சொல்லி (உபா. 32: 36.) "நாளை சமாரியாவின் வாசலில் இந்நேரத்தில் மீ. விற்கப்படும்" என்றார். பட்டணத்தின் வாசல் திறக்கப்படும், சமாரியாவின் முற்றிக்கை நீங்கிப்போகும், வழக்கம்போல சந்தை நடக்கும். (நியாயாதி. 5: 1) என்கிறார். அதின் நிறைவேறுதலை இந்த அதிகாரத்தில் அறியலாம்.



## (5) சமாரியாவில் தானியம் மலிவாய் விற்குமென்று சொன்ன தீர்க்கதரிசனத்தை நம்பாத பிரதானிக்குச் சொன்ன பயங்கர முடிவைப்பற்றிய தீர்க்கதரிசனம்.

2 இரா. 7: 2.

இராஜாவுக்குக் கைலாகுகொடுக்கிற பிரதானி ஒருவன் கர்த்தர் வானத்திலிருந்து மன்னாவைப்போல தானியத்தைப் பெய்யச்செய்வாரென்றாலும் இப்படி நடக்குமாவென்று அவிசுவாசமாய்ச் சொன்னான். அப்போது தீர்க்கதரிசி "நீ உன் கண்களினாலே அதைக் காண்பாய், ஆனாலும் அதிலே சாப்பிடமாட்டாய்" என்றார். அவிசுவாசம் பயங்கரமான பாவமே. கானான்தேசத்தை இஸ்ரவேலர் தூரத்தில் கண்டார்கள். அவிசுவாசத்தால் அதில் பிரவேசிக்கவில்லை. அந்தப் பிரதானி ஜனங்களுக்குள் குளப்பமும், கலகமும் நடவாதபடிக்கு மறுநாளில் தானியம் விற்கப்படுகையில் நியமிக்கப்பட்டிருந்தான். ஒர்வேளை சத்துராதிகளான சூரியர் உள்ளே வந்துவிடாதபடிக்கு வாசல் காக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கலாம். ஜனங்கள் அவனை நெருக்கி மிதித்ததினால் செத்துப்போனான். 17: 18. யோபு 20: 23.

## (6) சமாரியாவில் 7-வருஷம் பஞ்சம் வருவதைப்பற்றிய தீர்க்கதரிசனம்.

2 இரா. 8: 1.

இவர் சொன்ன காலம், எலிசா சூனேமியாள் வீட்டிலிருந்தபோது சொல்லியிருக்கலாம். நாகமான் சரித்திரத்துக்கு முன்பும், 6-அதில் சமாரியர் முற்றிக்கைப் போடப்படுமுன்னும் சொல்லியிருக்கவேண்டியது. சூனேமியாள் தீர்க்கதரிசியை உபசரித்ததினிமித்தம், அவள் பஞ்சத்துக்குத் தப்பிக்கொள்ள அவளுக்கு முன்னறச் சொல்லுகிறார். எலியாவின் காலத்தில் 3½-வருஷம் பஞ்சம். எலிசாவின் காலத்திலே (7) வருஷம் இரட்டிப்பான காலம். ஏனென்றால் இஸ்ரவேலர் முன்னிலும் அதிகமாய் தேவதண்டனைகளையும், எச்சரிப்புக்களைக் கவனியாமலும், எலிசா தீர்க்கதரிசியின் மகத்துவமான பலத்த அற்புத செய்கைகளைக் கண்டு, புத்தியடையாமலும் முரட்டாட்டமும் திருத்தப்படக்கூடாத நிலைமையிலிருந்தார்கள். லேவி. 26: 21. 24: 28. சூனேமியாள் யூதேயாதேசத்தில் போய்க் குடியிருந்தால், யோராம் இராஜாவுக்குப் பிரியமாயிராதென்று எண்ணி, பெலிஸ்தியர் தேசத்தில் (7) வருஷம்போய்த் தங்கியிருந்தாள். பெலிஸ்தர் தேசத்திலோ பஞ்சமில்லை. கிருபையின் எத்தனங்களைப்பெற்ற இஸ்ரவேலர் அதை அசட்டைசெய்து வந்ததினாலே பெலிஸ்தரிலும் அவர்களுக்கு அதிகத் தண்டனை வந்தது. இந்தப் பஞ்சக்காலத்தில்தான் 4-அதி. 38—44 ல் சொல்லிய அற்புதங்கள் நடந்திருக்கலாம்.

## (7) பெனாதாத்தின் மரணத்தைப் பற்றிய தீர்க்கதரிசனம்.

2 இரா. 8: 7—10. கி. மு. 885.

எலிசா, தம்மால் குணமான நாகமானைப் பார்க்க தமஸ்குவுக்குப்போயிருக்கலாம். அவன் ரிம்மோனைப் பணிந்துகொள்ள மனமில்லாமல் தமது உத்தியோகத்தை விட்டிருப்பான். அவனுக்குப் பதிலாக ஆசகேல் நியமிக்கப்பட்டிருப்பான். பஞ்சத்தின் தொல்லையினாலாவது விசேஷமாய் 1 இரா. 19: 15. சொல்லப்பட்ட கட்டளையை நிறைவேற்றும்படி தேவ உத்தரவால் தமஸ்குவுக்குப் போயிருக்கலாம். அக்காலத்தில் பெலமும், ஐசுவரியமுமுள்ள பெனாதாத் இராஜா வியாதியாயிருந்தான். நாகமான் குணமாக்கப்பட்டதுமுதல் சூரியாவிலே எலிசா தேவனுடைய மனுஷன் என்ற பேர் பெரும்பாலும் வழங்கி வந்தபடி இராஜாவுக்கு அறிவித்தார்கள். அகசியா இராஜா தான் பிழைப்பேனோவென்பதை விசாரிக்க எக்ரோனின் தேவனண்டைக்கு ஆளனுப்ப, 2 இரா. 1: 2. இந்த புறஜாதியான் தன் தேவனாகிய ரிம்மோனிடத்தில் ஆள் அனுப்பாமல், தேவனுடைய தீர்க்கதரிசியினிடத்தில் விசாரிக்க அனுப்பினது கவனிக்கவேண்டியது. கொஞ்சக்காலத்துக்குமுன் அவன் தீர்க்கதரிசியை சத்துராதியாக எண்ணி அவரைப் பிடித்துவர, திரள் சேனையை அனுப்பியிருக்க, (6: 14.) இப்போது தீர்க்கதரிசிக்குக் கனமாக வெகுமதிகளை அனுப்புகிறான். இது ஆச்சரியம். இராஜன் தன்னைத் தாழ்த்தி தீர்க்கதரிசியண்டை தான் போக அபாத்திரனென்று எண்ணி, தன் படைத்தலைவனிடத்தில் தன்னைத் தீர்க்கதரிசிக்கு மகனென்று சொல்ல சொல்லி தன் சுகத்தைப்பற்றி விசா க்கச் சொல்லுகிறான். அதற்கு தீர்க்கதரிசி இந்த வியாதியினால் சாக ட்டான், ஆனால் வேறே வகையினால் சாவான் என்றார். சிலர் மெய் ாகச் சாகவே சாவான் என்றும், அவன் மெய்யாக பிழைப்பானோ' வன்று வாசிக்கவேணுமென்றும் சொல்லுகிறார்கள். (10-வச.)

## (8) ஆசகேல் இஸ்ரவேலரைப் பீறிப்போடுவதைப்பற்றிய தீர்க்கதரிசனம்.

2 இரா. 8: 11—15.

எலிசா ஆசகேலுடைய துர்க்குணத்தையும், அவன் இஸ்ரவேலருக்குச் செய்யும் தீமைகளையும் நினைத்தும், ஆசகேல் சலித்து வெட்கப்படுமட்டும் தீர்க்கதரிசி அழுதார். 10: 32. 12: 17. 13: 3, 7. ஆசகேல் தன்னைத் தாழ்த்தினாலும் அவன் இராஜாவாகும்போது அப்படி நடப்பிப்பானென்று முன்னற அறிந்து சொன்னார். கனமானது மனிதருடைய குணங்களை மாற்றிப்போடும். அப்படியே நிறைவேறியும் வந்தது. இஸ்ரவேலர் இராஜ்யத்திலும், யூதா இராஜ்யத்திலும் பலபல கொடுமைகளைச் செய்தான்.

## (9) சீரியர் மூன்று முறை ஜெயிக்கப்படுவதைப்பற்றி யோவாசுக்குச் சொன்ன தீர்க்கதரிசனம்.

2 இரா. 13: 14—19. கி. மு 825.

யோவாஸ் இராஜா தீர்க்கதரிசியின் பேரிலுள்ள அன்பினாலாவது,



மரியாதையினாலாவது அழாமல் தனக்கும் தன் இராஜ்யத்துக்கும் வெகு நஷ்டம் வந்ததென்பதை அறிந்து அழுதான். 2 இரா. 2: 12. இவன் அன்பினால் அழுதிருப்பானென்றால் தீர்க்கதரிசியின் ஆலோசனையைக் கேட்டு, கன்றுக்குட்டி ஆராதனையை விட்டுவிட்டு தேவன் அண்டைக்கு மனந்திரும்பியிருப்பான். ஆனாலும் இராஜா சூரியரை ஜெயிப்பானென்பதை நிச்சயப்படுத்துகிறார். சூரியரிலிருந்து தன் இராஜ்யத்தை விடுவிக்கும்படி யுத்தஞ்செய்யவேணுமென்பதற்கு அடையாளமாக, வில்லையும் அம்புகளையும் பிடிக்கும்படி தீர்க்கதரிசி சொல்லுகிறார். தேவனே அவனுக்கு ஜெயத்தைத் தருவார். யுத்தஞ்செய்வதில் மாத்திரம் ஓயக்கூடாது என்றார். அதற்கடையாளமாக (1) சூரியாவுக்கு நேரே அம்பை எய்யச்சொன்னார். 16: 17. தேவஉத்தரவின்படி எய்வதால் ஜெயம் கிடைக்கும். (2) தீர்க்கதரிசி தமது கையை இராஜாவின் கையில் வைத்து எய்யச்சொன்னது எப்போதும் தேவபெலத்தைத் தேடுவதைக் காட்டுகிறது. சங். 18: 34. 144: 1. இராஜாவின் பலத்த கைக்குத் தீர்க்கதரிசியின சாகத்தக்கதான நடுக்கமுள்ள கை அதிக வல்லமை கொடுத்தது (3) சீரியர் கானானுக்குக் கிழக்கேயிருந்தபடியால் அந்தத் திசைக்கு நேரே எய்யும்படி கற்பிக்கப்பட்டார். ஜெயமுண்டென்ற வாக்குத்தத்தம் (சங். 18: 14.) (4) "ஆபேக்கிலே சீரியரை முறியடிப்பீர்" என்றார். அங்கேதான் சீரியருக்கும் இஸ்ரவேலருக்கும் பெரிய யுத்தங்கள் நடந்தன. 1 சாமு 4: 1. 29: 1. 1 இரா. 20: 30. மூன்று முறை தான ஜெயங்கொள்வதற்கு அடையாளமாக மூன்று முறை தரையில் அடித்தார் இம்மட்டும் தான் அவனுக்கு ஜெயங்கிடைக்கும்படி தேவன சித்தமானார் அவனுடைய அவிசுவாசம் விக்கிராராதனை என்ற பாவங்களினால் முடிய ஜெயங் கிடைக்கவில்லை. தீர்க்கதரிசி அநேக விசை அடிக்கவில்லையென்பதாய் விசனங்கொண்டார். ஆனால் அவருக்கு அவன் எத்தனை தடவை ஜெயம் அடைவான் என்பதைப்பற்றித் தெரியாது. இந்தத தீர்க்கதரிசனம் பின்பு ஒரு வகையில் நிறைவேறிற்று. 25-வச.

## கேள்விகள்.

1. தீர்க்கதரிசனங்களுக்குரிய இலட்சணங்களென்ன? அந்தந்த இலட்சணங்கள் எலிசாவின தீரிக்கதரிசனங்களுக்குச் சரியாயிருக்கிறதா?

2 தீர்க்கதரிசனங்களாலுண்டாகிய நன்மைகளென்ன? எலிசாவுடைய தீர்க்கதரிசனங்களாலுண்டாகிய நன்மைகளென்ன?

3. தீர்க்கதரிசனங்களுக்கும் அற்புதங்களுக்குமிருக்கிற வித்தியாசமும் சம்பந்தமுமென்ன?

4. எலியா, எலிசா சொன்ன தீர்க்கதரிசனங்களில் சிலவை வெகு சமீபமான காலத்தில் நிறைவேறியிருக்கின்றன எவைகள்? எப்படி?

5. எலியாவும் எலிசாவும் இராஜாக்களைக் கண்டிக்கிறதில் வெகு தைரியமும் முகத்தாக்ஷணியமுமில்லாதவர்களென்பதை ரூபியும்?

6. தீர்க்கதரிசிகளுடைய வேலைகளென்ன? எலிசாவும் அந்தந்த வேலைகளைச் செய்தவரென்று ரூபியும்?

7. தேவன் பொல்லாதவர்களுக்கும் நன்மைசெய்கிறாரென்பதை எலிசா சொன்ன தீர்க்கதரிசன சங்கதிகளால் ரூபியும்?

8. இனிவருங் காரியங்களை முன்னறச் சொல்லாதவர்களும் தீர்க்கதரிசிகளென்னப்படுகிறார்கள். யார் யார்? ஏன்?

9. தீர்க்கதரிசி தேவகோபத்துக்குத் தப்பும்படி மூன்னற ஜனங்களை எச்சரிக்கவேண்டியதே. அந்தப்படி ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் எப்படி எச்சரித்தார்கள்? எலிசா தீர்க்கதரிசியும் எச்சரித்தாரா?

10. தீர்க்கதரிசிகள் பல பல துன்பங்களுக்கும், மரணத்துக்கும் எதுவாயிருந்திருக்கிறார்களென்பதற்கு எலிசாவின் சரித்திரத்தில் குறிப்பாய்க் காட்டி, அப்படியே துன்பப்பட்ட தீர்க்கரையும் விரிவாய்ச் சொல்லும்?

11. தீர்க்கதரிசிகளுடைய வேலைகளில் சிலவை இக்காலத்துப் போதகன்மாருக்கும், எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் அடுத்ததென்று காட்டும்?

12. எலியாவும், எலிசாவும் இஸ்ரவேல் சபைக்கு இரதமும், குதிரைவீரருமாயிருந்தார்களா?

---

# இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

இதயத் துள்ளுற வூன்றலும் இன்றென லாகிப்
புதைய வூற்ற அகக்கரி மெல்லெனப் போந்து
வதை புரிந்தருள் வள்ளலை மாய்க்க வகுத்தாய்
எதை விழைந்துயிர் வாழுதி கேளென் றிடிக்கும். 1161

பணம் விடங்கொள் பணமுடி யென்பது மற்றக்
குணம் விளக்குவ தாட்கொலி யென்பதுங் கொள்ளாய்
மணம் விழைந்திறும் வண்டென லாயினை மாளாப்
பிணம் எனத்திரிந் தாரவு ருற்றனை பேதாய். 1162

களவி னற்பொரு ளைக்கவர் வானசை தூண்டும்
அளவி லுன்னைய தட்டின னவது கொள்ளாய்
உளவ றிந்துனக் குற்றுழி யுண்மை யுரைக்கும்
வளவ னமெனை யற்பமு மெண்ணலை மாற்றோய். 1163

பொருளை நச்சினை போத மிலாய் புரையில்லா
அருளின் வாழ்வினை ஆக்கினைத் தீர்ப்பினு ள்ளாக்கி
மருளு றும்புலை மக்க ளொடேயெரி வாய்ந்த
இருளு றுங்கொடும் பாதலத் தெய்துவை யின்றே. 1164

பழிக்குப் பாவத்துக் கஞ்சலை பல்லவர் தூற்றும்
மொழிக்கு நாணலை முன்பினுற் றுய்ந்திலை முற்றும்
அழிக்கு நீசப்ப சாசுக் கடித்தொழும் பாய்நேர்
வழிக்கு வாரலின் றுயினை யால் மதி மாண்டோய். 1165

விதிவி லக்கை யிகந்தவன் மெய்ந்நெறி விட்ட
பதித ரிற்பதி தன்கொலை பாதகன் நட்பிற்
சதிபு ரிந்தசண் டாளன் தனைத்தெரி கிற்பில்
மதியி லீஉனை யன்றியிம் மாநிலத் தியார்கொல். 1166

அறந் திறம்பிய ஆயுள் படைத்தலில் யாக்கை
இறந்து பாழ்பட லீனமன் றுலிவ் விகத்தில்



பிறந்திராயெனில் நன்றெனப் பேசிய மாற்றம்
மறந்து விட்டனை யாங்கொல் மறந்திறம் பில்லாய். 1167

நன்றி கொன்றனை நல்லுணர் வற்றனை நாசம்
துன்றி நின்றனை தொன்னெறி தூர்த்தனை தூர்த்த
பொன்றி னும்வசை போவதின் றுற்புவி மீதே
பின்றி நின்றுநின் றென்னினிச் செய்குவை பேதாய். 1168

மேவ லாரா யுவந்தனை முப்பது வெள்ளிக்
காவ லாயரு ளாளனை விற்றனை யந்தோ
ஜீவ நல்லமு தத்தை யுகுத்தனை தீராத்
தீவி டத்தை யருந்தினை உய்வினித் தீர்ந்தாய். 1169

ஆற்ற மற்ற குருதி நிலத்துகக் கொண்டு
விற்ற காசெனும் வெந்தழல் உன்மடி மேவப்
பற்ற வைத்தனை யேகொடும் பாழ்மதி யின்னும்
உற்ற வோர்துணை காசென உன்னுதி போலாம். 1170

என்ற கத்துறு சாக்ஷி யிடித்திடித் தின்ன
வன்றி றற்கொ டுறுத்த மறுத்தொரு மாற்றம்
நன்றி கெட்ட யுதாசு நவிற்றிலன் நாடில்
என்று முண்மைக் கெதிருரை யின்றென லாமால். 1171

கடிந்து புண்படுத் தும்மனச் சாக்ஷியைக் காய்ந்து
கொடிந்தி டானெனி னும்புகல் முட்டின னெந்தான்
மடிந்து போயில னியினிவ் வாதையை மாற்ற
முடிந்தி டாதென உள்ளம் வலித்தனன் மூண்டான். 1172

வள்ள லார்திருக் கோயிலை வல்லினைந் துற்றான்
கள்ள வேடக் குரவரைக் கண்டெதிர் காட்டி
என்ன ருங்குணத் தியேசுவை நுங்கையி லீந்தேன்.
வெள்ளி யிற்படு முப்பது காசிதை வெஃகி. 1173

பேச ருங்கொடும் பாதகம் பேணிய பித்தேன்
மாசி லாதவி ரத்தம் வடிந்துக வாங்கிக்
காசு கொண்மி னெனவவர் கொள்ளலர் காசை
வீசி யேகினன் பேய்பிட ருந்திட வெம்பி. 1174

எப்பெ ருங்கொடும் பாவிகளுங்க ரையேற
இப்பு விக்க ணுதித்தரு ளுங்கும ரேசன்
துப்பு றழ்ந்தசெஞ் சேவடிச் சூழலைத் துன்னான்
வெப்பு றழ்ந்த நிரையக் கிடங்கிடை வீழ்வான். 1175

பனித்த சிந்தைய பாமரன் சென்றொரு பாங்கர்
தனித்த சூழலில் நாண்கொடு தற்கொலை செய்தே
அநித்த தேகத்தை வீழ்த்தினன் ஆருயிர அந்தோ
இனித் திரும்பரி தாகிய துர்க்கதி யெய்த. 1176

நன்மை தீமையை நாடி நவிற்றும் நலங்கூர்
தன்ம சாக்ஷியை மெய்த்துணை யாக்கிய தக்கோர்
ஜென்ம சாபல் லியமடை வாரதைச் செற்ற
கன்மி கள்ளெவ ருங்கடைத் தேறலர் காண்டி. 1177

சுடுகை னற்சுடர் நச்சு பதங்கமுந் தூண்டில்
இடுமி றைச்சி நுகர்ந்திடு மீனமு மென்ன
நடுவி கந்த பொருளெனும் நஞ்சை நயப்போர்
கெடுவர் ஆருயிர் ஐயுறலே பெருங் கேதம். 1178

பழியும் பாவமும் தன்னொடு பற்றவும் பாரில்
ஒழிவி லாவசை யும்மவ கீர்த்தியும் ஓங்கி
வழிவ ழிக்கு நிலவவும் வைத்துயிர் மாண்டு
கழிவி லாவிருட் கங்குலுட் புக்கனன் காரி. 1179

காரி வீசி யெறிந்தவக் காசொரு காசில்
சோரி தோயந்தன வென்றொரு துண்டு நிலத்தைப்
பூரியர் விலை கொண்டு புதைத்திடும் ஈமச்
சேரி யாக்கினர் தீர்க்கர்முன் செப்பிய சீர்போல். 1180

வேறு.

தன்னுயிர்போய் யாக்கை தலைகீ ழுறவிழுந்து
சென்னி தகர்ந்து குடர்சிதறிச் செத்தொழிந்த
துன்னரிய சாமித் துரோகிசெய லிற்றாகப்
பண்ணருநம் மான்சிலுவைப் பாடுகளை உன்னுவாம். 1181

பொல்லாத யூதர்களும் போர்ச்சேவகர் குழுவும்
வல்லானை யெள்ளிப் புறக்கணித்த வாய்மதமாய்ச்
சொல்லாத நிந்தைமொழி சொல்லித் துணிந்தியற்றும்
பொல்லாங்கை எல்லாநம் மீசன் பொறுத்திருந்தார். 1182

புற்றரவிற் சீறிப் புடைவளைந்து புல்லியர் தாம்
சுற்றி விளைத்தகொடும் துன்பந் தனியுழந்து
முற்றுங் கிரகணத்தில் மூழ்கு தினகரன்போல்
செற்றமிலாத் தேவமைந்தன் தேசிழந்து தேம்பினார். 1183

செவ்வங்கியைக் களைந்து தேவர்பிரான் முன்தரித்த
அவ்வங்கியைத் தரித்தே ஆசமயம் பல்பேசித்
தெவ்வர் குழுமிச் சிலுவை தனைச்சுமத்திக்
கவ்வை நகர்கலுழக் கட்டிக் கொடுபோனார். 1184

நோக்கிலனு வொவ்வொன்றும் நூறா யிரங்கோடி
மாக்கயத்தின் சும்மை மலிந்தபா வந்திரட்டி
ஆக்கு சிலுவை அமலன் சிரத்தேந்திக்
சாக்கை கட்டனாகக் கல்வாரி நோக்கினார். 1185

வள்ளல் குருராயன் மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை
எள்ளி அவதரித்த எம்மான் சருவேசன்
கொள்ளை புரிந்து கொலைத்தீர்ப்புப் பெற்றுவரு
கள்ள ரிருவரொடுங் கல்வாரி நோக்கினார். 1186

மாரணத்தின் கூடொடிய வன்பேய் தலைநசுங்க
ஆரணஞ்சொல் லுண்மை அவனிமிசை விளங்கப்
பூரணமா ரக்ஷணிய புண்ணியங்கை கூடுதற்குக்
காரணமாஞ் செய்கைமுற்றக் கல்வாரி நோக்கினார். 1187



ஈசன் வினைநோக்கி யீனநர ராப்பிணித்த
பாச வினைநோக்கிப் பரிந்துநடு நின்றுவரும்
பேசரிய துன்பப் பிரளயத்தை நோக்கியிந்தக்
காசினியை நோக்கினார் கல்வாரி நோக்கினார். 1188

அற்புதமும் வானத் தகரீரியும் புனிதச்
சொற்பயில்வும் எல்லாச் சுகுணங்களும் இவரோ
தற்பரனென் றேலமிடச் சண்டாளர் தாமிதனை
அற்பமும் எண்ணாத தறவும் அநியாயம். 1189

தத்துநீர் வேலித் தராதலத்தோர் செய்தவினை
அத்தனையுந் தாங்கி யலமந்தும் ஆங்கமைந்து
சத்தமிடா தேகும் தகன பலிமறியாம்
உத்தமரும் சாந்தமாய் ஊரூடு செல்கின்றார். 1190

கையயர்ந்து வாய்புலர்ந்து கண்ணிருண்டு காதடைத்து
வெய்ய சிலுவை சுமந்தலசி மெய்வருந்தித்
துய்ய திருவடிகள் சோர்ந்துநடை தள்ளாடி
அய்யன் மறுகூடுவரக் கண்டார் அணிநகரார். 1191

கல்லியல்வன் னெஞ்சவஞ்சக் கண்ணிலாப் பாதகராம்
பு[illegible]யரோ யன்றியிந்தப் பொல்லாங்கு போந்தமைகண்
டெல்லவருந் தக்கம் உயிர்க்கிறுதி யெய்ந்தன போல்
அல்லல் உழந்தலமந் தாக்கை நிலைதளர்ந்தார் 1192

மாதருக்குள் ஆசிபெற்ற மங்கலையாம் அன்னைமரி
காதலனுக் கோவிக் கதிநேர்ந்த தென்றுமன
வேதனைப்பட் டாற்றாது மெல்லியலார் தாங்குழுமி
வீ[illegible] யிருமருங்கு மொய்த்தார் வாய்விட்டழுது. 1193

காந்தள் மலர்செங் கமலமல ரைப்புடைப்பப்
பூந்தண் கருங்குவளைப் போதுநீர் முத்துகுப்பத்
தேந்தளவு தெக்காறுஞ் சேதாம் பலையலர்த்தி
யாந்தண் டலைக்குயிலின் மென்மொழியார் மாழ்கினார். 1194

தீயடைந்த வல்லியெனத் தேம்பிச் செயலழிந்தும்
மாயும்வகை யினறாய் மறுகுற் றுயிர் பதைப்பப்
போயடைந்த செம்மருங்கும் பொற்பெருசலேம்நகரத்
தாயிழையார் வாய்விட் டழுத குரலோசை. 1195

கண்டார் பதைத்தார் கலுழ்ந்தார் கரைந்தழுதார்
கொண்டார் துணுக்கம் கொதித்தார் கடுவிடத்தை
உண்டார் போலேங்கி உயங்கி நெடிதுயிர்த்துத்
திண்டாடி நின்றினைய செப்புவா ராயினார். 1196

ஆவா இதென்ன அறவும் அநியாயமென்பார்
தாவா அறமோ தலைசாய்ந் திறுவதென்பார்
மூவா முதல்வன் முனியாத தென்னென்பார்
ஓவா துழலெம் முயிர்க்கொழிவின் றோவென்பார். 1197

இம்மைந்தன் ஆவிக் கிறுதிவரக் கண்டுமரி
அம்மையுயிர் வாழாள் அவனி மிசையென்பார்

செம்மைதிறம் பாத்தூய தேவ சினந்திருகி
மும்மை யுலகும் முடியுங் கணத்தென்பார். 1198

மாண்டா ருயிரளிக்கும் மாமருந்தை வேரோடு
கீண்டெறிவார் இந்தக் கெடுதோ ஷிகளென்பார்
கீண்டெறிவார் இந்தக் கெடுதோ ஷிகளெனினும்
மீண்டு முளைக்கவொரு வேளைவரா தோவென்பார். 1199

புன்றொழிலர்க் கஞ்சிநடுப் போற்றாதார் பொங்கியழ
மன்றோரஞ் சொல்லியுயிர் வாழ்வதுபோ வாழ்வென்பார்
மன்றோரஞ் சொன்னான மனைபாழாய் வன்குடியும்
பொன்றி யெருக்கலரும் பொய்யா திதுவென்பார். 1200

நள்ளிநர ஜீவரக்ஷை நல்கவரு ஞானகுரு
வள்ளலுக்கு வன்கொலையும் மாபாதகம் புரிந்த
கள்ளனுக்குக் காவல் விடுதலையுங் கட்டளைத்து
விள்ளுவதோ நீதிபுரி வேந்தருக்குச் சீலமென்பார். 1201

(இன்னும் வரும்.)

---

# BIBLE & PRAYER UNION.

## வேதவாசிப்பு ஜெப ஐக்கியம்.

இந்த வாசிப்புக் கூட்டமானது, “எப்பிராயீமின் பதினாயிரங்களும் மனாசேயின் ஆயிரங்களும்”போல, சீக்கிரம் பெருகிற்று. இதின் மெம்பர்கள் உலகத்தின் பல தேசங்களிலும் பரவி இருக்கிறார்கள். எவ்வகையும் எந்த நிலைமையுமுடையவர்கள் இதில் உண்டு. இந்தக் கூட்டத்தினால் ஒருவேளை விசேஷித்த யாதொரு பிரயோஜனம் தெரியாதிருக்கலாம். ஆனால் இக்கூட்டத்திற் சேர்ந்திருக்கிற இரண்டு லக்ஷத்துக்கதிகமான பேர் பரிசுத்த வேதத்தைக் கிரமமாய் வாசித்து வருகிறார்கள் என்பது இந்த ஐக்கிய வாசிப்புக் கூட்டத்தினால் விளைந்த நன்மைகளில் ஒன்றென்பதற்குச் சந்தேகமில்லை. இவ்வைக்கியம் துவக்கமுதல் விருத்தியடைந்து வருகிறது. கிறிஸ்தவர்களாகிய சகோதரர் அநேகர் இந்த வாசிப்பு ஒழுங்கைக் கையாளுவதில் மிகுந்த உற்சாகம் காட்டிவருகிறார்கள். ஓர் ஊரில் இதைப்பற்றி முதலாவது பேசப்பட்டபோது, சபையில் ஒருவர் தாம் வேதத்தை ஒழுங்காய் வாசிக்கும்படி ஒரு வகை தெரியவேண்டுமென்று அநேக நாளாய் விரும்பிக்கொண்டேயிருந்ததாகவும்; தேவசெயலாய் இந்த ஒழுங்கைப் பற்றிக் கேள்விப்பட்டதாகவும் சொன்னார். அவரும் அவருடன் பலரும் இவ்வைக்கியத்தின் மெம்பர்களாயிருக்கிறார்கள். இன்னொரு சபையில் ஒரு போதகர் இந்த விஷயத்தைக்குறித்து, ஓய்வுநாள் பள்ளிக்கூடத்தின் வகுப்பைச் சேர்ந்த வாலிபருக்குச் சொல்லவே, அவ்வகுப்பு முழுவதும் இம்முறையை அநுசரித்துக்கொண்டார்கள். அந்த வகுப்பிலிருந்த வாசிக்கத் தெரியாத ஒருவன் தான் வேதத்தை இவர்களோடே சேர்ந்து வாசிக்க வேண்டுமென்றே மிகுந்த பிரயாசத்தோடு வாசிப்புக் கற்றுக்கொண்டான். ஐக்கிய வேதவாசிப்புக்குரிய அட்டவணை பிரத்தியேகமாய் அச்சிட்டிருக்



கிறது. நற்போதகத்தின் அன்றாடகத் தியான வாக்கியங்களும் இவ்வொழுங்கின்படியே அந்த அதிகாரங்களிலிருந்து வரிசையாய் எடுத்து எழுதப்பட்டும் வருகிறது. இதை எம் இஷ்டர் யாவரும் கவனித்திருப்பார்கள்.

வேதவாசிப்பில் அப்பியாசமுடைய சிலர் தாங்கள் வேதாகமத்தில் சில அதிகாரங்களை மாத்திரம் கண்ணுக்கு நேரிட்டபடி அங்கும், இங்குமாய் ஏடுகளைத் திருப்பி வாசித்து வந்ததினால், ஒரு விசையாவது அதை முற்றும் வாசித்து முடிக்கவில்லையே என்பார்கள். இவர்கள் வேறு ஒழுங்குகளைக் கையாடக்கூடாத பட்சத்தில் நாம் மாதந்தோறும் பெற்றுவரும் நற்போதகத்தில் அன்றாடகத் தியானத்தின் அடியில்வரும் அதிகாரங்களை விடாமல் வாசித்து வருவார்களானால் $3\frac{1}{4}$-வருஷத்துக்குள் இவ்வொழுங்கின்படி வேதத்தை முழுதையும் ஒருதரம் முடிக்கக் கூடும்.

ஐக்கிய மெம்பர்களில் ஒருவர் “நோட்ஸ்” என்ற வேதக்குறிப்பிட பிரதிக்கு ஐக்கிய வேதவாசிப்பின் அருமையையும் அதினாலுண்டாகும் நன்மைகளையும் பற்றிப் பின்காட்டியபடி எழுதுகிறார். “வேதவாசிப்பு ஜெப ஐக்கியத்தில் கனம்தங்கிய ஸ்திரீகள் அநேகர் புதிதாய்ச் சேர்ந்திருக்கிறார்கள். தாய்மாரின் வேதவாசிப்பு வகுப்பு போன வருஷமுழுவதிலும் ஒழுங்காய் நடந்தேறி வந்தது. ஒவ்வொரு அதிகாரத்திலுமிருந்து குறித்திருக்கும் வாக்கியங்களைக் கவனிக்கிறதிலும், அவற்றைப் புதியஏற்பாட்டு வாக்கியங்களோடு ஒத்துப்பார்க்கிறதிலும், அவர்கள் விசேஷ பிரியங்காட்டி வருகிறார்கள். வேதத்தின் அதிசயங்களைக் காணவும், திவ்ய சத்தியங்களின் ஒற்றுமையை உணரவும் இவ்வொழுங்கு அவர்களுக்கு அதிக உதவியாயிருக்கிறதென்று சந்தோஷத்தோடே அறிவிக்கிறார்கள். என் பாடசாலை மாணாக்கருக்குள்ளும் வேதவாசிப்பு சென்ற வருஷத்தில் பொதுப்பட கிரமமாய் நடந்தேறி வந்தது. வேதவாசிப்பு ஜெபத்திற்கென்று ஓய்வுநாள் காலைதோறும் சராசரி 50-பேர் உற்சாகமாய்க் கூடுகிறார்கள். ஒரு மாணாக்கன் தான் விடுமுறைக்குப் போயிருந்தபோது 39-பேர் இந்த ஐக்கியத்திற் சேரக் கருவியாயிருந்தான். இம்முறையானது சகோதர ஐக்கியத்திற்கு முதல்தரமான உதவியாயிருக்கிறது. மேலும் நாம் நினைக்கிறதற்கு அதிகமாய்த் தேவாசீர்வாதத்தைக் கொண்டுவருகிறதென்று எண்ணுகிறோம்” என்பதே. இன்னொருவர் எழுதுகிறதாவது, “நான் இவ்வளவு காலமும் கிறிஸ்தவனாக இருந்தபோதிலும், ஒரு நாளாவது வேதம் வாசித்திருப்பதில்லை. வேதவாசிப்பு ஜெப ஐக்கியத்தின் மெம்பராகச் சேர்ந்தபின்போ நான் தப்பாமல் வேதம் வாசித்து வருகிறேன்.” வேறொருவர் “இந்த ஐக்கிய ஒழுங்கின் வாசிப்பு கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள என்விசுவாசம் வளர்ந்து பலப்படுகிறதற்கு எத்தனமாயிருக்கிறது; இவ்வுலக கவலைதொல்லைகளால் நெருக்கப்படுகையிலும், நான் காணப்படாதவைகளை நோக்கிக்கொள்ள இது நல்ல துணையாயிருக்கிறது” என்று சொல்லுகிறார். ஆகையால் மேற்காட்டிய வாசிப்பில் இன்புற்றிருக்கிற யாவரும் கர்த்தருடைய வசனம் சகலராலும் மாட்சிமைப்படும்படி தங்களாலானமட்டும் பிரயாசப்படக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

G. S.

---

# நற்கருணை மாலை.

(தொடர்ச்சி.)

70-வினா. ஞானஸ்நானத்தை ஒரே தடவையும் இராப்போசனத்தைப் பல முறையும் அநுசரிப்பானேன்?

விடை. ஞானஸ்நானமானது திருச்சபைக்குட்படுகிற வாசலாயிருப்பதால் அதை ஒரே தடவையும், இராப்போசனமானது அதற்குட்பட்டவர்கள் அதில் நிலைத்திருக்கிறோம் என்பதைக் காட்டுங் குறிப்பாயிருப்பதால் அதைப் பலமுறையும் அநுசரிக்க வேண்டியதாயிருக்கிறது.

71-வினா. இராப்போசனப் பந்தியிற் சேருகிறவர்களெல்லாரும் இரக்ஷிக்கப்படுவார்களென்று நினைக்கலாமா?

விடை. நினைக்கக்கூடாது; உண்மையான இருதயத்தோடும், உத்தம விசுவாசத்தோடும் இந்தப் பந்தியிற் சேர்ந்தாலன்றி மற்றப்படி இரக்ஷிக்கப்படக்கூடாது. திருஷ்டாந்தமாக யூதாஸ்காரியோத்து இந்தப் பந்தியிற் சேர்ந்தும் இரக்ஷிக்கப்படாமல் கெட்டுப்போனானே.

72-வினா. அப்படியானால் நாம் இந்தச் சாக்கிரமெந்தை எவ்விதமாய்ப் பெற்றுக்கொள்ளவேண்டும்?

விடை. வணக்கத்தோடும் பாவத்துக்காக மனஸ்தாபப்படும் துக்கத்தோடும், விசுவாசத்தோடும், அன்புள்ள சிந்தையோடும் இதைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

73-வினா. பந்தியிற் சேரப்போகுமுன் மனதில் செய்துகொள்ளவேண்டிய ஜெபம் என்ன?

விடை. இரக்கமுள்ள தேவனே, உமது பந்திக்கு என் நீதியை நம்பி வராமல், உமது அளவற்ற இரக்கத்தையே நம்பி வருகிறதால என்னைக் கிருபையாய் ஏற்றுக்கொண்டருளும். கிருபைக்கடலே! உமது குமாரனின் சரீரத்தால் என் பாவ சரீரம் சுத்தமாகி, அவர் இரத்தத்தால் என் ஆத்துமா கழுவப்படுவதற்கும், நான் எப்பொழுதும் அவருக்குள்ளும் அவர் எனக்குள்ளும் வாசமாயிருப்பதற்கும் ஏற்றவிதமாய் அவருடைய சரீரத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணக் கிருபை செய்யும், ஆமென் என்பதே.

74-வினா. முழங்காலில் நின்று அப்பத்தை வாங்குமுன் அவரவர் தம் தம் மனதில் சொல்லிக்கொள்ளவேண்டியதென்ன?

விடை. எனக்காகக் கொடுக்கப்பட்ட என் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரம் என் சரீரத்தையும் ஆத்துமாவையும் நித்திய ஜீவனுக்கென்று காக்கக்கடவது. கிறிஸ்து எனக்காக மரணம் அடைந்தாரென்று நினைவுகூரும்படி நான் இதை வாங்கிப் புசித்து விசுவாசத்தினால் என் இருதயத்தில் நன்றியறிதலோடே அவரை எனக்கு ஆகாரமாய் உட்கொள்வேனாக என்பதே.

75-வினா. கிறிஸ்துநாதரை நமக்கு ஆகாரமாகப் புசித்தல் என்பதின் கருத்தென்ன?



விடை. யூதருக்குள் போதனை உபதேசமிவைகளை அங்கிகரிக்கிறது புசித்தல் என்று சொல்லப்படும். (நீதி. 9: 5. யோவா. 6–அதி.) அந்தப்படியே சிலுவையைப்பற்றிய உபதேசத்தை, அதாவது சிலுவையிலறையுண்ட கிறிஸ்துவே என் ரக்ஷகர்; அவர் புண்ணியமே எனக்குப் போதுமென்று உறுதியாய் அங்கிகரிக்கிறதும் அவரைப்பற்றி தியானிக்கிறதுமே புசித்தல் என்னப்படும்.

76-வினா. இராப்போசனத்தில் கிறிஸ்துவின் சரீரத்தை வாங்கிப் புசிக்கிற எத்தனம் எது?

விடை. விசுவாசமே.

77-வினா. அப்பத்தைக் கையில் வாங்கி உட்கொண்டபின் மனதில் தியானித்துக்கொள்ளவேண்டியதென்ன?

விடை. ஜீவ அப்பமாகிய கிறிஸ்துவே என் ஆத்துமாவை சொஸ்தமாக்கிப் பலப்படுத்தியருளும்; அல்லது உமது சிலுவைப்பாடுகளினிமித்தம் என்னை இரக்ஷித்தருளும் தயவுள்ள கர்த்தாவே என்று தியானித்துக்கொள்ளவேண்டியது.

78-வினா. பாத்திரத்தை [ரசத்தை] வாங்குமுன் மனதில் செய்துகொள்ளவேண்டிய தியானமென்ன?

விடை. எனக்காகச் சிந்தப்பட்ட என் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் என் சரீரத்தையும் ஆத்துமாவையும் நித்தியஜீவனுக்கென்று காக்கக்கடவது. கிறிஸ்துவின் இரத்தம் எனக்காகச் சிந்தப்பட்டதென்று நினைவுகூரும்படி இதைப் பானம்பண்ணி நன்றியறிந்தவனாயிருப்பேனாக என்பதே.

79-வினா. இரசத்தை உட்கொண்டபின் மனதிற் செய்யவேண்டிய தியானத்தைச் சொல்லு?

விடை. என் தேவனே! உமது இரத்தமாகிய ஜீவஊற்றினால் என்னைச் சுத்திகரித்தருளும் என்பதே.

80-வினா. இவைகளை வாங்கிக்கொண்டபின் தான் இருந்த இடத்திற்கு வந்து முழங்காலில் நின்று செய்யவேண்டிய தனிச்செபத்தைச் சொல்லு?

விடை. இரக்கமுள்ள தேவனே! நீர் என்னை உமது சாயலாகச் சிருஷ்டித்து, பின்பு நான் உமக்குச் சத்துருவானபோது என்னை மீட்டுக்கொள்ள உம்மை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து இந்நாள்வரையும் என்னைக் கிருபையாய் நடத்திவந்திருக்கிறதுமன்றி இந்தச் சாக்கிரமெந்தின்மூலமாய் உமது சரீரத்தையும் இரத்தத்தையும் ஆத்தும ஆகாரமாயும் பானமாயும் எனக்கு அருளிச்செய்திருக்கிற தயவுக்காகவும் அவைகளாலுண்டாயிருக்கிற ஆறுதலுக்காகவும் உம்மைத் துதிக்கிறேன். நானும் இந்தப் பந்தியிற் சேர்ந்திருக்கிறவர்களெல்லாரும் எப்போதும் உம்முடையவர்களாய் உமது ஆவியின் நடத்துதலுக்கிணங்கி நடக்கும்படிக்கும், எங்கள் விசுவாசம் நாளுக்குநாள் பெருகிப் புதுஜீவனும் பரிசுத்த அன்பும் அடைந்தவர்களாய் உம்மைச் சேவித்து நடக்கும்படிக்கும் கிருபைசெய்யும் ஆமென் என்பதே.

81-வினா. இதற்குப்பின் செய்யவேண்டியதென்ன?

விடை. எசேக்கியாவும் அவன் ஜனங்களும் பஸ்காவை ஆசரித்து

மனமகிழ்ச்சியாயிருந்ததுபோல (2 நாளா. 30: 23—26.) நாமும் கர்த்தருக்குள் ஆனந்த சந்தோஷமடைந்து, அகற்றிவிட்ட பாவங்களுக்கு நேரே திரும்பாமல், தேவகிருபையை முன்னிட்டு புதுஜீவமார்க்கமாய் நடந்துவர எச்சரிகையாயிருக்கவேண்டும்.

82-வினா. மெய்க்கிறிஸ்தவர்கள் இதில் கர்த்தருக்குள்ளாக ஆனந்த சந்தோஷமடைவதற்குக் காரணமென்ன?

விடை. கிறிஸ்துவை அவர்கள் ஆவியில் தரிசித்ததினாலும், தேவனோடு செய்த உடன்படிக்கையை அவருக்கு முன்பாகப் புதுப்பித்துக்கொண்டவர்களாய் நல்ல தீர்மானங்களைச் செய்துகொண்டதினாலும், நித்திய ரட்சிப்புக்குக் கிறிஸ்துவுக்குள்ளாக சுதந்தரராயிருக்கிறோம் என்ற நம்பிக்கையினாலும் சந்தோஷமடைகிறார்கள்.

83-வினா. எந்தெந்த வகையாய்த் தங்கள் உடன்படிக்கையைப் புதுப்பித்துக்கொள்ளுகிறார்கள்?

விடை. புத்தியோடும் (Intelligently) கருத்தோடும் (Considerately) தாழ்மையோடும் (Humbly) உற்சாகத்தோடும் (Cheerfully) உண்மையோடுமே. (Sincerely)

84-வினா. அவர்கள் செய்துகொண்ட தீர்மானங்கள் எவையென்று சுருக்கமாய்ச் சொல்லு?

விடை. 1. சகல பாவங்களையும் வெறுத்துவிடுவோம் என்பதும்.
2. சகல கடமைகளையும் நிறைவேற்றிவருவோம் என்பதுமே.

85-வினா. தாங்கள் செய்த தீர்மானங்களை நிறைவேற்றிவர யாருடைய உதவியை நாடுகிறார்கள்?

விடை. "என்னையல்லாமல் உங்களால் ஒன்றுஞ் செய்யக்கூடாது" என்றும் (யோவா. 15: 5) "என் கிருபை உனக்குப் போதும் பலவீனத்திலே என் வல்லமை பரிபூரணமாய் விளங்கும்" என்றும் (2 கொரி. 12: 9.) வாக்குரைத்திருக்கிற கிறிஸ்துநாதருடைய உதவியை நாடுகிறார்கள்.

86-வினா. இந்தச் சாக்கிரமெந்தை அபாத்திரமாய்ப் பெறுகிறவர்கள் யார்?

விடை. கர்த்தரோடு ஐக்கியப்பட்டு நடக்கிறோமென்று புறம்பாகச் சொல்லி அறிவீன யூதரைப்போல் கிறிஸ்துவை அற்பமாக எண்ணி, உள்ளாகப் பாவத்தில் நிலைத்திருக்கிறவர்களே.

87-வினா. இப்படிப்பட்டவர்களின் நிலைமையென்ன?

விடை. கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்தறியாமல் தங்களுக்கு ஆக்கினைத்தீர்ப்புண்டாக இதைப் போசித்துப் பானம் பண்ணுகிறதால் "இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை" என்கிற தீர்ப்பைப்பெற்று, தேவகோபத்துக்குள்ளாகிறார்கள். அப். 8: 21. 1 கொரி. 11: 27, 28.

88-வினா. இதைப் பத்திரமாய் வாங்குகிறவர்கள் அடையும் நன்மையென்ன?

விடை. அவர்கள் விசுவாசம் வளர்ந்து பெலப்படுகிறது. தேவகோபத்தின் பிள்ளைகளாயிருந்த அவர்கள், கிருபையின் பிள்ளைகளானதால் அவர்கள் உள்ளத்தில் ஆறுதல் பெருகி, நித்தியஜீவ விருந்தின் அச்சாரத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

89-வினா. இராப்போசனஞ் சேர்ந்தபின், ஓய்வுநாள் கழிந்தது, சாக்கிர



மெந்துக்குரிய அநுசரிப்புகளும் செய்து தீர்ந்தது. செய்ய வேண்டிய வேலையெல்லாம் செய்தாயிற்று என்றாற்போல ஒரு கிறிஸ்தவன் எண்ணிக் கவலையீனமாயிருக்கலாமா?

விடை. இருக்கக்கூடாது. ஏனென்றால் கிறிஸ்தவன் தன் ஜீவியமுழுவதும் தன்னைப்பற்றி எச்சரிக்கையுள்ளவனாயிருந்து இந்தச் சாக்கிரமெந்தின்மூலமாய் தேவனோடு ஐக்கியமாயிருக்கிறேன் என்பதை தன் நடக்கையால் காண்பிக்கவேண்டியவனாயிருக்கிறபடியால், "தேவனே நான் பண்ணின பொருத்தனைகள் என்மேலிருக்கிறது" என்றும் (சங். 56: 12.) "என் வாய் மீறாதபடி தீர்மானம்பண்ணினேன்" என்றும் (சங். 17: 3.) தாவீதைப்போல சொல்லி, தான் அநுதினமும் தேவாவியின் கிருபைக்காக மன்றாடி, தேவவசனத்தைக் கையிற் பிடித்துக்கொண்டு, தன்பேரில் சுமத்தப்பட்ட கடமைகளை மரணபரியந்தமும் உண்மையாய் நிறைவேற்றி வரக் கவலையுஞ் சாக்கிரதையுமுள்ளவனாயிருக்கவேண்டும்.

"உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பிடித்துக்கொண்டிருங்கள்." வெளி. 2: 25.

"மரணபரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்." வெளி. 2: 10.

---

## சமாசாரத்திரட்டு.

இந்தியா கவர்ணர் ஜெனரல் அவர்கள் சென்ற ... சம் சென்னபட்டணத்திற்கு வந்து ஒருநாள் தாமதித்து பிற்பாடு நிஜாம் அரசனின் பட்டாபிஷேகத்திற்காக ஐதிராபாத்துக்குப் போனார்கள். அப்பட்டணத்தில் அவருக்கு மகா உசித மரியாதைகள் செய்யப்பட்டதுமன்றி சம்பிரமமான விருந்துகளும் கொண்டாட்டங்களும் நடந்தேறின. அவ்விடத்தில் ஒரு வாரம் இருந்து சென்னபட்டணத்திற்குத் திரும்பி முக்கியமான கல்விஸ்தாபனங்களையெல்லாம் பார்வையிட்டுக்கொ... சென்ற மாசம் மத்தியில் கல்குத்தாவுக்குத் திரும்பிவிட்டார்கள். ... சென்ற சாலர் ஜங் மந்திரியின் புதல்வனை ஐதிராபாத்தின் புதிய ... நியமகம்பெற்றிருக்கிறார். அவர் 6-அடி 5-அங்குலம் உயரமான ... மனுஷன்.

இந்தியாவுக்கப்பால் முக்கியமாய்க் கவனிக்கத்தக்க சம்பவங்கள் எகிப்துதேசத்தில் நடந்தன. தென் எகிப்தில் மகாதி என்னும் ஒரு தலைவன் அநேக மகமதியரைச் சேர்த்துக்கொண்டு பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களால் நடத்தப்பட்ட எகிப்திய சேனைகளை மடங்கடித்தான். சமாதானத்திற்காக செய்யப்பட்ட பல உபாயங்கள் வியர்த்தமாய்ப் போயின. மகா செல்வாக்குள்ளவராகிய காடன் சேனாபதி மேற்படி காரியத்துக்காக முயற்சிக்கும்படி அங்குள்ள காட்டூம் பட்டணத்துக்கு அனுப்பப்பட்டார். அவருடைய பிரயெத்தனங்கள் அநுகூலமாகி வருகின்றன.

ராணியவர்கள் ஸ்கோத்லாந்தில் தங்கும் இக்காலத்தில் தமது ஜீவிய சரித்திரக் குறிப்புகளடங்கிய ஒரு புஸ்தகம் பிரசித்தஞ்செய்ய எத்தனமாயிருக்கிறார்கள்.

மார்ச்சுமீ நாள்-31. மாசிமீ 20உ முதல், பங்குனிமீ 20உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ச | 1 | உ0 | நீதியின் வாசல்களைத் திறவுங்கள். சங். 118: 19. |
| ஞா | 2 | உக | உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி. 119: 77, 174. |
| தி | 3 | உஉ | என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன். 120: 1. |
| செ | 4 | உங | அவர் உன் ஆத்துமாவைக் காப்பார். 121: 7 |
| பு | 5 | உச | உன்னில் சமாதானமிருப்பதாக. 122: 8 |
| வி | 6 | உரு | எங்களுக்கு இரங்கும் கர்த்தாவே! 123: 3 |
| வெ | 7 | உசா | நம்முடைய சகாயம்.. கர்த்தருடைய நாமத்தில் உள்ளது. 124: 8 |
| ச | 8 | உஎ | தங்கள் கோணலான வழிக்குச் சாய்கிறவர்களை. 125: 5. |
| ஞா | 9 | உஅ | சீயோனின் சிறையிருப்பைக் கர்த்தர் திருப்பும்போது. 126: 1. |
| தி | 10 | உகூ | இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். 127: 4. |
| செ | 11 | ங | கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார். 128: 5. |
| பு | 12 | க | துன்மார்க்கருடைய கயிறுகளை அவர் அறுத்தார். 129: 4. |
| வி | 13 | உ | என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது. 130: 6. (131: 2. |
| வெ | 14 | ங | என் ஆத்துமா பால்மறந்த குழந்தையைப்போல் இருக்கிறது. |
| ச | 15 | ச | கர்த்தர் தாவீதுக்கு உண்மையாய் ஆணையிட்டார். 132: 12. |
| ஞா | 16 | ரு | ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார். 133: 3. |
| தி | 17 | சா | கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள். 134: 2. (13. |
| செ | 18 | எ | கர்த்தாவே! உம்முடைய நாமம் என்றென்றைக்குமுள்ளது. 135: |
| பு | 19 | அ | அவர் கிருபை என்றுமுள்ளது. 136: 23. |
| வி | 20 | கூ | எருசலேமை என் முக்கியமான மகிழ்ச்சியிலும். 137: 6. |
| வெ | 21 | க0 | கர்த்தர் எனக்காக யாவையுஞ்செய்துமுடிப்பார். 138: 8. |
| ச | 22 | கக | என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும். 139: 3. |
| ஞா | 23 | கஉ | கொடியவனுக்கு என்னை விலக்கி ரட்சியும். 140: 4. |
| தி | 24 | கங | என் ஆத்துமாவை வெறுமையாக விடாதேயும். 141: 8. |
| செ | 25 | கச | ஜீவனுள்ளோர் தேசத்திலே என் பங்குமாயிருக்கிறீர். 142: 5. |
| பு | 26 | கரு | என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது. 143: 6. (144: 15 |
| வி | 27 | கசா | கர்த்தரை தெய்வமாகக்கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது. |
| வெ | 28 | கஎ | [illegible] என் தேவனே! 145. 1. (9. |
| ச | 29 | கஅ | அ[illegible]ற்ற பிள்ளையையும் விதவையையும் ஆதரிக்கிறார். 146 |
| ஞா | 30 | ககூ | சீயோனே, உன் தேவனைத் துதி. 147: 12. |
| தி | 31 | உ0 | பூமியிலுள்ளவைகளே! கர்த்தரைத் துதியுங்கள். 148: 7. |

## விசேஷ நாட்கள்.

2. லெந்தென்னும் நாட்களில் 1-ம் ஞாயிறு.
9. லெந்தென்னும் நாட்களில் 2-ம் ஞாயிறு.
12. பௌரணமி.
16. லெந்தென்னும் நாட்களில் 3-ம் ஞாயிறு.
23. லெந்தென்னும் நாட்களில் 4-ம் ஞாயிறு.
25. பரி. கன்னிமரியாள் மங்களவாக்குத் திருநாள்.
27. அமாவாசை.
30. லெந்தென்னும் நாட்களில் 5-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

ச. ஏப்பிரல்மீ. தூஅஅச ௵.

## எலியாவின் சரித்திரம்.

எலியா தீர்க்கதரிசிகளில் முக்கியமானவர். இவர் மெல்கிசேதேக்கைப்போல தாய்தகப்பன் பேர் சொல்லப்படாதவர்; துவக்கமும் தெரிவிக்கப்படாதவர். ஆதி. 14: 18. எபி 7: 3. பூர்வீகத்தில் தீர்க்கதரிசிகள் பரிசுத்த மனிதனென்றும், ஞானதிருஷ்டிக்காரனென்றும் அழைக்கப்படுவார்கள். இவர்களே நியாயப்பிரமாணத்தை நன்றாய்க் கற்றுக்கொண்டு ஜனங்களுக்குப் போதிக்கிறவர்கள். தங்கள் பக்தியுள்ள நடக்கைகளினாலே மற்றவர்களுக்கு நல்ல மாதிரி காட்டுகிறவர்கள். இவர்கள் பொதுப்பட பட்டணங்களிலுள்ள தீர்க்கதரிசிகளின் பள்ளிக்கூடங்களில் ஜெபத்திலும், படிப்பிலும், வேலையிலும் தரித்திருப்பார்கள். அவர்களுடைய வேலையோ உலகக் கவலைகளைவிட்டு முற்றும் பிரிந்ததாயிருக்கும். 1 இரா. 19: 19, 20. ஆமோ. 7: 14. அவர்களுடைய உடை, மயிர் உடையும், வார்க்கச்சையுமே. (2 இரா. 1: 8.) ஏசாயா இரட்டை உடுத்தியிருந்தார். (ஏசா. 20: 2.) பொய்த்தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகள்போல, வஞ்சிக்கும்படி மயிர்ப்போர்வை போர்த்துக்கொள்வார்களாம். சகரி. 13: 4. இவர்களுடைய உடைகள் எப்படி அற்பமானதோ, அவர்களுடைய ஜீவனமும் எளிமையாமே. அவர்கள் பெற்றுக்கொள்ளும் வெகுமதிகள், அப்பம், கனி, தேனுமே. 2 இராசா 4: 42. 10: காட்டுக்கீரை (2 இரா. 4: 38—41.) எலியாவுக்கு தேவதூதன் அப்பமும் தண்ணீரும் கொடுத்தான். 1 இரா. 19: 6—8. ஒபதியா கர்த்தருடைய தீர்க்கதரிசிகளுக்கு அப்பம் கொடுத்துக் காப்பாற்றினான். 1 இரா. 18: 4, 13. அவர்களுடைய துறவறமும், அற்ப உடையும், மற்றவர்கள் பரியாசம்பண்ணவும் நிந்திக்கவும் எதுவாயிற்று. 2 இரா. 2: 23. ஆனாலும் ஞானமும் பக்தியுமுள்ள இராஜாக்கள் தீர்க்கதரிசிகளுக்குப் பயந்து அவர்களைக் கனஞ்செய்ததுமுண்டு. 1 இராசா. 18: 7.

எலியா (தேவனே கர்த்தர்) தன் பேர்ப்படி தேவனால் அனுப்பப்பட்டும், தேவனை தமக்குச் சொந்தமுமாக்கினவர். இஸ்ரவேலை தேவன் அண்டை திருப்பினவர். பாகாலின் ஆராதனையைத் தள்ளி மெய்த்தேவாராதனையை வெகு பலத்தோடும், வீரியத்தோடும் ஸ்தாபித்தவர். யூதர்கள் அவரைப் பரத்திலிருந்து வந்த தேவதூதனென்பார்கள். அவர் பாடென்ன

மனிதன்தான். (யாக். 5: 17.) இவர் கி. பி. மு. 910–ல் இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாப்பின் காலத்தில் தோன்றினவர். ஆகாப் இராஜன் எரோபெயாமுடைய பாவமாகிய கன்றுக்குட்டி ஆராதனையோடேகூட தன் பெண்சாதி எசபேலின் ஏவுதலின்படி பாகாலின் ஆராதனையையும் கூட்டினான். இதற்காக எலியா தைரியமாயும், வைராக்கியமாயும் இராஜாவைக் கடிந்துகொண்டார். இராஜன் குணப்படாதபோது 3½–வருஷம் பஞ்சம் வரச்செய்த அற்புத செய்கையால் புத்தி வருத்தினார். ஆகாப் விட்டுவிட்ட இஸ்ரவேலின் தேவனே ஜீவனுள்ள மெய்த்தேவனென்றும் தாம் அவருடைய தீர்க்கதரிசியென்றும், தேவன் அவர்களுடைய விக்கிரகாராதனையினால் வெறுப்புள்ளவராயிருக்கிறாரென்றும், ஆகாபும் அவன் ஜனங்களும் நன்றாய் அறிந்துகொள்ளும்படிக்கும் இப்படிப் பஞ்சத்தை வரச்செய்தார். எரேமி. 14: 22. மெய்மார்க்கத்தைப் போதிக்கவேண்டிய ஆசாரியரும் லேவியரும் தேசத்தைவிட்டுப் போய்விட்டார்கள். 2 நாளா. 11: 13, 14. எலியா மாத்திரம் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளில் மீதியானவர். இவர் விசுவாசமுள்ளவரானதால், காகத்தாலும் அஞ்ஞான விதவையினாலும், பின்பு தேவனாலும் அதிசயமாய்ப் போஷிக்கப்பட்டார். எலியாவின் சரித்திரத்தில் ஜெபமே அவருக்குப் போஜனமும் பானமுமாக இருந்ததென்று வாசிக்கிறோம். ஆகாப் இராஜா நாபோத்தின் தோட்டத்தை அநியாயமாக எடுத்துக்கொண்டபோது எலியா அவனைப்பற்றிச் சொல்லிய சாபம், 2–வருஷத்தில் நிறைவேறிற்று. எசபேலைப்பற்றிச் சொல்லிய சாபம், 15–வருஷத்துக்குப்பின் ஏகூவால் நிறைவேறிற்று. மற்றத் தீர்க்கதரிசிகள் யோசியா அரசனைப் பற்றியும், 1 இரா. 13: 2. ஏசாயா கோரேசைப்பற்றியும் அவர்கள் பிறக்குமுன் தீர்க்கதரிசனம் உரைத்ததுபோல, யூதஇராஜாவாகிய யோராமைப் பற்றியும் எலியா தீர்க்கதரிசனமாக நிருபம் எழுதி வைத்திருந்தார். (2 நாளா. 21: 12–15.) அவர் இராஜாக்களைப் பலமாய் எதிர்த்தும், கண்டித்தும், தீர்க்கதரிசிகளின் புத்திரர்மூலமாய் நியாயப்பிரமாணத்தைப் போதித்தும், மார்க்கத்தையும் சீர்ப்படுத்தியும், அவர் தோன்றி 14—20–வருஷத்துக்குப்பின், வெகு மகிமையாய் உயிரோடே பரத்துக்கெழுந்துபோனார். இவர் கிறிஸ்துநாதர் மறுரூபப்பட்டபோது, மோசேயோடே அவருடன் சம்பாஷிக்க வந்தவர். மத். 17: 3.

### எலியாவின் காலத்தில் நடந்த சம்பவங்களைக் காட்டிய கால அட்டவணை.

| | | |
|---|---|---|
| கி. மு. 918. | ஆகாப் தோன்றி, பாகாலின் ஆராதனையை ஸ்தாபித்தல். | 1 இரா. 16: 29. மீ. |
| 916. | யூதஇராஜாவாகிய ஆசா, காலில் வியாதியுண்டானபோது, கர்த்தரைத் தேடாமல், பரிகாரியைத் தேடினது. | 1 நாளா. 16: 12. |
| 914. | யோசபாத் இராஜாவாகி தேவகற்பனையைக் கைக்கொண்டார். | 2 நாளா. 17: 1–6. |
| 912. | யூதாவெங்கும் நியாயப்பிரமாணத்தைப் படிப்பிக்கச் செய்தான். | 2 நாளா. 17: 7–19. |
| 910. | இஸ்ரவேலருக்குள் சீர்திருத்தமுண்டாக 3½– வருஷம் எலியா மழையில்லாமலிருக்க ஜெபித்தல். | 1 இரா. 17. |



| | | |
|---|---|---|
| கி. மு. | எலியாவை காகமும், சரேப்தா கைம்பெண்ணும் போஷித்தல். | 1 இரா. 17. |
| 906. | கர்மேல் மலையில் நடந்த அற்புதத்தால் மார்க்கம் சீர்திருத்தப்பட்டது. உபா. 13: 6—11. மழைபெய்தது. | 1 இரா. 18. |
| | எசபேலுக்குப் பயந்து, எலியா ஓடிப்போனதும், ஓரேபில்தேவன் எலியாவுக்குத் தரிசனமானதும். | 1 இரா. 19–அதி. |
| 902. | யோசபாத், யோராமுக்கு அத்தாலியாளை விவாகஞ்செய்தது. | 2 நாளா. 18: 1. |
| 901. | ஆகாபுக்கு விரோதமாய் சூரியர் 2–தடவை வந்தபோது, தேவன் தமது தீர்க்கனைக்கொண்டு உதவி செய்தார். | 1 இரா. 20–அதி. |
| 900. | பெனாதாத்துடன் ஆகாப் புத்தியீனமாய் உடன்படிக்கைசெய்தான். | 1 இரா. 20: 31–34. |
| 899. | ஆகாப் நாபோத்தைக் கொன்று அவன் தோட்டத்தை எடுத்துக்கொண்டதற்காகக் கண்டிக்கப்படல். | 1 இரா. 21–அதி. |
| 897. | ராமோத் கிலேயாத்தைக் கைப்பற்ற யுத்தம். | 1 இரா. 22. |
| 896. | ஆகாப்போடே யோசபாத் சேர்ந்ததற்காக ஏகூ தீர்க்கதரிசி அவனைக் கண்டித்தல். | 2 நாளா. 19: 1–4. |
| | மோவாபியர் கலகஞ்செய்து பிரிந்துபோனார்கள். | 2 இரா. 1: 1. |
| 897. | அகசியா இராஜாவானது. ... ... | 1 இரா. 22: 40. |
| 896. | அகசியாவுடைய விக்கிரகாராதனையினிமித்தம், அவனுடைய மரணத்தைப்பற்றி எலியா தீர்க்கதரிசனமுரைத்தல். | 2 இராசா 1. |
| | அகசியாவோடே யோசபாத் கூட்டு வியாபாரஞ்செய்ததற்காக எலியேசர் கண்டித்தல். | 2 நாளா. 20: 35. |
| | யோசபாத் யூதாவெங்கும் மார்க்க சீர்திருத்தஞ் செய்தார். | 2 நாளா. 19: 20. |
| 896. | யோசபாத்துக்கு விரோதமாய், மோவாபியர் அம்மோனியர் ஏதோமியர் வந்தபோது, அவர் செய்த ஜெபத்துக்கு யகாசியேலைக்கொண்டு தேவன் உத்தரவு அருளினது. ஜெயத்துக்காக பெராக்காவில் கர்த்தரைத் துதித்தல். | 2 நாளா. 20. |
| 896. | ஆகாப்பின் குமாரன் யோராம் இராஜாவாகி, பாகாலின் சிலையை அகற்றினாலும் கன்றுக்குட்டி ஆராதனைசெய்தான் | 2 இரா. 3: 1—3. |
| | எலியா. பேத்தேல், எரிகோவிலுள்ள தீர்க்கதரிசிகளின் பள்ளிக்கூடங்களுக்குப் போய் அவர்களை ஆறுதல்படுத்தி, மகிமையாய்ப் பரத்துக்கு எழுந்துபோனார். | 2 இராசா 2. |

## கேள்விகள்.

1. எலியா செய்த அற்புதங்களைச் சொல்லும்? அதில் கர்மேல் மலையின்மேல் நடந்த சங்கதி அற்புதமென்று ரூபிக்கத்தக்க ஏழு குறிப்புகளைச் சொல்லும்?

2. எலியா சொன்ன தீர்க்கதரிசனங்களென்ன? அவை எப்படி நிறைவேறிற்று?

3. எலியா செய்த மார்க்க சீர்திருத்தமென்ன? அவர் தீர்க்கதரிசிகளில் எப்படி முக்கியமானவர்?

4 எலியா ஜெபத்தோடே தமது வேலைகளை நடப்பித்தாரென்பதற்குக் குறிப்புகள் சொல்லும்?

5. எலியா சரித்திரத்தில் அவரிடத்தில் விளங்கிய குணகுணங்களை எடுத்து விபரமாய்ச் சொல்லும்?

6. எலியாவின காலத்திலிருந்த யூதா, இஸ்ரவேல் இராஜாக்களையும், அவர்கள் சரித்திரச் சுருக்கத்தையும் சொல்லும?

7. எலியாவின் காலத்தில் தேவசித்தத்தை அறிவிக்க வெளிப்பட்ட தீர்க்கதரிசிகள் யார்? அவர்கள் எப்போது என்ன சமயத்தில் எதைப்பற்றித் தீர்க்கதரிசனமுரைத்தார்கள்?

8. ஆகாப்புடைய மரணத்தைப்பற்றித் தீர்க்கதரிசனம் உரைத்தவர்களார்? என்? அவை எப்படி நிறைவேறிற்று?

9. இஸ்ரவேலர் இரண்டு நினைவுகளால் குந்தி குந்தி நடந்தார்களென்பதற்கு அநுமானமுள்ள உதாரணமுரைக்கவும்?

10. எலியா ஒரேப் மலைக்குப்போனதேன்? அங்கே தேவன் காக்ஷியளித்த விதமும், கட்டளையிட்டதுமென்ன?

11. எலியா 50-போர்ச்சேவகரை வானத்திலிருந்து அக்கினி வருவித்து அழித்தாரோ என்? இப்படிப்பட்ட வகையாய்ச் சொன்ன சீஷர்களைக் கிறிஸ்துநாதர் கடிந்துகொண்டதேன்?

12. எலியா ஏன் எப்படிப் பரத்துக்கு எழுந்துபோனார். அதினால் நாம் படிக்கிற பாடமுமென்ன?

13. பஞ்சகாலத்தில் கேரீத் ஆற்றில் தண்ணீரில்லாமலிருக்கப் பலிபீடத்தை நிரப்பத்தக்கதாக எலியாவுக்குத் தண்ணீரேது?

14. எலியா யாருக்கு முன்னடையாளமானவன்? எப்படி? வேதவாக்கியங்களால் ரூபியும்?

15. எலியாவின் பேர் புதியஏற்பாட்டில் என்ன சம்பந்தமாய் எங்கெங்கெல்லாம் வருகிறது?

---

III. எலிசா தீர்க்கதரிசியின் காலத்தில் நடந்த சம்பவங்களைக் காலக்கணிதத்தோடே காட்டிய அட்டவணை

| | | |
|---|---|---|
| கி. மு. 895. | யோராம் இஸ்ரவேலில் இராஜாவாகி, தன் தகப்பன் செய்த பாகாலின் சிலைகளை அகற்றி, மார்க்கத்தை ஓர்வகையாய்ச் சீர்ப்படுத்தினாலும், கன்றுக்குட்டி ஆராதனையை விடவில்லை. | 2 இரா 3: 1-3. |
| ,, | கலகஞ்செய்த மோவாபியரை அடக்கும்படி யோசபாத்தோடும், ஏதோமின் இராஜாவோடும் போய் ஜெயித்தல். | 2 இரா. 3: 6-27. |



| | | |
|---|---|---|
| கி. மு. | மோவாபின் இராஜாவாகிய மேஷா, தன் முதற்குமாரனைப் பலியிட்டது | 2 இரா. 3: 27. |
| 894. | எலிசா, நாகமானைக் குணமாக்கினது. ... | 2 இரா. 5-அதி. |
| 893. | பலதரமாய் எலிசா தம்மையும், இஸ்ரவேலின இராஜாவையும், சீரியர் கையினின்று இரக்ஷித்தான். | 2 இரா. 6: 8-23. |
| 892. | சமாரியா சீரியரால் முற்றிக்கைபோடப்பட்டது. | 2 இரா. 6: 24. |
| | யோராம் எலிசாவைக் கொல்ல விரும்பினது. | 2 இரா. 6: 32, 33. |
| | சீரியா ஓடிப்போனதால் பஞ்சம் நீங்கி, செழிப்பானது. | 2 இரா. 7-அதி. |
| 892. | யோசபாத் தன் மக்களுக்கு யூதேயாவில் அரணுள்ள பட்டணங்களைக் கொடுத்து, அவன் மூத்த மகனாகிய யோராமை, 32-வயதில் 2 ம் விசை இராஜாவாக்கினான். | 2 நாளா. 21: 3. (1 நாளா 29:22.) |
| | யோராம் தன் பெண்சாதி அத்தாலியாளால் ஏவப்பட்டு, தன் சகோதரரைக் கொன்றுபோட்டான். | 2 நாளா. 21:4-6. |
| | பாகாலின் ஆராதனையையும் ஸ்தாபித்தான். ... | 2 இரா. 8: 18. |
| 891. | சமாரியாவில் ஏழு வருஷம் பஞ்சம். ... ... | 2 இரா. 8: 1. |
| 889. | யோசபாத் மரிக்க, ஏதோம், லீப்னா கலகஞ்செய்தது. | 2 நாளா. 8: 20-22. |
| | யூதாவின் இராஜாவாகிய யோராமுடைய மரணத்தைப்பற்றிய எலியாவின் தீர்க்கதரிசனம். | 2 நாளா. 21: 12. |
| 887. | பெலிஸ்தரும், அரபியரும் எருசலேமைக் கொள்ளையடித்து யோவகாசைத்தவிர மற்ற யோராமின் மக்களைக் கொன்றது. | 2 நா. 21: 16, 17. |
| 885. | யோராம் ஒருவரும் விரும்புவாரில்லாமல் செத்தான். | 2 நா. 21: 19, 20. |
| | எலிசா தமஸ்குவுக்குப்போய் 2 ம் பெனாதாத்தின் மரணத்தையும் ஆசகேலின் கொடுமைகளையும் முன்னறிவித்தல். | 2 இரா. 8: 7-15. |
| | யோவகாஸ் என்ற அகசியா 22-வயதில் இராஜாவாகி, தன் தாயின் ஆலோசனைப்படி ஆகாபின் விக்கிரகாராதனையை ஸ்தாபித்தான். | 2 நாளா. 22: 1-4. |
| 884. | சூரியாவின் இராஜாவாகிய ஆசகேலோடே யுத்தஞ்செய்த யோராமுக்கு உதவிசெய்து, அவன் காயத்தைப் பார்க்கும்படி எஸ்ரேயேலுக்குப் போனான். | 2 இரா. 8: 28. |
| | ஏகூ எலிசாவின் உத்தரவால் இராஜாவாக அபிஷேகம்பெற்று, 1 இரா. 19: 16-ல் சொல்லியபடி ஆகாபின் வீட்டாரையும், பாகாலின் ஆராதனையையும் அழித்தல். | 2 இரா. 10-அதி. 2 நாளா. 22:7-9. |

| | | |
|---|---|---|
| | ஏகூவுடைய உண்மையினிமித்தம் நாலு தலைமுறைகளாய் இஸ்ரவேலை ஆளச் சகாயம் பெற்றான் | 2இரா. 10:29-33 |
| | ஆசகேல் யோர்தானைக் கடந்து மேற்கொண்டது. | |
| கி. மு. 884. | ஆகாபின் வம்சத்தில் கடைசியான அத்தாலியாள் தாவீதின் வம்சமான எல்லாரையுங் கொன்று, இராஜ்யபாரஞ்பண்ணினாள். அகசியாவின் மகன் யோவாசை பிரதான ஆசாரியனாகிய யோய்தாவின் மனைவி யோசேபியாத் 6-வருஷம்தேவாலயத்தில் வளர்த்தாள். | 2 நாளா. 22: 10-12. |
| 878. | அத்தாலியாளின் 7-ம் வருஷத்தில் திரும்பவும் தாவீதின் வம்சத்தில் 8-வயதான யோவாசை யோய்தா இராஜாவாக்கினான். அத்தாலியாள் கொல்லப்பட்டாள். | 2 இரா.11: 4-21. 2 நாளா. 23. |
| | யோய்தா பாகாலைத் தகர்த்து பூசாசாரியாகிய மாத்தானைக் கொன்று தேவாராதனையைப் புதுப்பித்தான். | 2 நாளா. 24. |
| | யோய்தா 130-வயதுள்ளவனாய் (கி. மு.850) சாகுமட்டும் யோவாஸ் உண்மையாய் நடந்து வந்தான். | |
| 864. | யோவாசின் விவாகம். அமத்சியா பிறந்தது. | 2நாளாளா. 24: 3. |
| 862. | யோனா தீர்க்கதரிசி, இஸ்ரவேலுக்கும் நினிவேக்கும் சவுககாக அனுப்பப்பட்டது. | யோனா 1: 4-அதி. |
| 856. | யோவாஸ் 23-ம் வயதில் தேவாலயத்தைப் பழுதுபார்த்தான். | 2 இரா. 12: 6. |
| 849. | ஏகூவின் மகன் யோவகாஸ் இஸ்ரவேலுக்கு இராஜாவாகி, கன்றுகுட்டி ஆராதனையைப்பின்பற்றினதால் சூரியாவின் இராஜா ஆசகேல் இஸ்ரவேலை நொறுக்கி (ஆமோஸ் 1: 3-5.) அவனை மிகவும் தாழ்த்திப்போட்ட | 2 இரா. 13-அதி. |
| 842. | தால் அவன் கர்த்தனை மன்றாட, யோனா எலிசாவின் வாக்குப்படி அவன் மகன், பேரன் காலத்தில் ஜெயமுண்டாயிற்று. | 2 இரா. 13: 19., 14: 25, 27. |
| 840. | யூதேயாவில் யோவாஸ் பிரபுககளின் பேச்சைக் கேட்டு, விக்கிரகாராதனையை ஸ்தாபித்தான். | 2 நாளா. 24: 17. |
| | கடிந்துகொண்ட சகரியா தீர்க்கதரிசியை நன்றிகெட்டவனாய்க் கல்லெறிந்து கொலைசெய்தான். | 2 நா. 24: 20-22. மத். 23: 35. |
| 840. | இதினால் சீரியர் யோவாசின் பெரிய சேனையைத் துரத்தி, பிரபுக்களைக் கொன்று, 4-இராஜாக்கள் சேகரித்த பரிசுத்தப் பொருள்களை வாங்கிகொண்டு போனான். | 2 இரா. |
| 839. | இதினால் யோவாஸ் மகா வேதனைக்குள்ளாகி, தன் வேலைக்காரரால் கொலைசெய்யப்பட்டான். | 2 நாளா. 24: 25. 2இரா.12: 17-21. |



| | | |
|---|---|---|
| 839. | யோவாசின் மகன் அமத்சியா யூதேயாவில் இராஜா. | 2 இரா. 14: 1. |
| | ஆசகேலின் மகன் பெனாதாத் III-சீரியாவின் இராஜா. | 13: 24. |
| கி. மு. | அமத்சியா தன் தகப்பனைக் கொன்ற கொலைபாதகரைக் கொலைசெய்தான். மோசேயின் பிரமாணத்தின்படி அவர்களுடைய பிள்ளைகளைக் கொலைசெய்யவில்லை. | 2நாளா. 25: 1-4. |
| | கர்த்தருடைய தீர்க்கதரிசியின் வாக்குப்படி, கூலிக்குப் பொருந்தின 100000-இஸ்ரவேலரை அனுப்பிவிட்டது. | 2 நா. 25: 7-13. |
| | இவர்களோ யூதாவில் 3000-பேரை வெட்டிக் கொள்ளையிட்டார்கள். ஏதோமியரை முறியடித்தான். | 2நா. 25: 11, 12. |
| 827. | அமத்சியா ஏதோமின் தெய்வங்களை வணங்கினதால் கண்டிக்கப்பட்டபோது தீர்க்கதரிசியை அசட்டைசெய்தல். | 2நா. 25: 14-16. |
| 826. | அமத்சியா பெருமையினால் யோவாசோடே சண்டைக்குப் போய்த் தாழ்த்தப்பட்டது. 810-ல் மரித்தான். | 2 நா. 25: 17-24. |
| 838. | இஸ்ரவேலின் இராஜாவாகிய யோவாஸ், மரணப்படுக்கையிலிருக்கிற எலிசாவைப் பார்க்கவந்ததும், அவன் அவிசுவாசத்தால் தேவதயவை இழந்துபோனதும். | 2 இரா. 13: 14. |
| | எலிசாவின் கல்லறையில் போடப்பட்டவன் உயிரடைந்தது. | 2 இரா. 13: 20, 21. |

## கேள்விகள்.

1. எலிசாவின் காலத்திலிருந்த இஸ்ரவேல், யூதஇராஜாக்களின் சரித்திரச் சுருக்கத்தை எழுதுங்கள்.

2. அவர் காலத்தில் இஸ்ரவேல் சபையின் நிலைமை எப்படி?

3. கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை அசட்டைசெய்து தங்களிஷ்டப்படி நடந்துகொண்ட இராஜாக்கள் ஆர்? எப்படி? அதினால் அவர்களுக்கு வந்த தண்டனையென்ன?

4. பாகாலின் ஆராதனை எவ்வளவு காலமாயிருந்தது? அதை ஆதரித்த இராஜாக்களார்? அது யாரால் முற்றும் எப்படி அழிக்கப்பட்டது?

5. எலிசாவின் காலத்திலிருந்த யூதா இஸ்ரவேல் இராஜாக்களுக்கு ஒரே பேர் இருக்கவேண்டிய முகாந்தரமென்ன? பாகாலின் ஆராதனையினால் யூதாவுக்கு வந்த நஷ்டங்களென்ன?

6. ஏசபேல், அத்தாலியாள் இவர்களுடைய குணகுணங்களென்ன? அவர்களுடைய முடிவும் அதினால் நமக்குண்டான படிப்பும் என்ன?

7. யூத இராஜாவாகிய யோராம் காலத்திலும், இஸ்ரவேலின் இராஜாவாகிய ஏகூவின் காலத்திலும் என்னென்ன தீர்க்கதரிசனங்கள் எப்படி நிறைவேறின?

8. எலிசாவின் காலத்தில், மோசேயின் நியாயப்பிரமாணப் புஸ்தக மிருந்ததென்பதற்கு ஏதாவது குறிப்புகளுண்டா?

9. "மூடருக்குத் தோழனாயிருக்கிறவனே நொறுங்குண்பான்" என்பதற்கு உதாரணமுரைக்கவும்.

10. இராஜாக்கள் கல்லறையில் அடக்கஞ்செய்யப்பட்ட பிரதான ஆசாரியர் யார்? அவருடைய நடபடிக்கைகளென்ன?

11. முதலாவது காணிக்கைப்பெட்டி செய்தவர் ஆர்? ஏன்?

12. வசனத்தை அசட்டைபண்ணுகிறவன் தன்னால் கெட்டுப்போகிறானென்பதற்கு" (நீதி. 13: 13) உதாரணங்களென்ன?

13. "அகந்தை வந்தால் இலட்சையும் வரும்." (நீதி. 11: 2.) என்ற சத்தியம் எந்தெந்த இராஜாக்களில் நிறைவேறிற்று?

14. சண்டைக்குக் காரணமாயிருக்கிறவன் தண்ணீர் மதகைத் திறக்கிறவனுக்குச் சரி! இந்தச் சத்தியத்தை மெய்ப்படுத்தும்?

15. மத்தேயு சுவிசேஷ அட்டவணையில் விடப்பட்டிருக்கிற யூதா இராஜாக்களார்? ஏன்? அதினால் என்ன படிக்கிறோம்?

16. எந்தெந்தக் காலங்களில் எவ்வளவு காலமாய்ப் பஞ்சம் வந்ததென்பதை வேதமுழுவதிலும் வாசிக்கிறோம். அதில் எலிசாவின் காலத்திலுண்டான பஞ்சம் கொடுமையானதென்று காணபியும்? ஏன்?

17. ஏகூ ஆகாப்பின் வீட்டாரை எப்படிச் சங்கரித்தான்? அவனுடைய பக்திவைராக்கியத்துக்குக் கிடைத்த பலனென்ன? அதை ரூபியும்?

18 சீரியர், மோவாபியர், ஏதோமியர், பெலிஸ்தர், அராபியர் இவர்களுடைய வரலாறுகளைச் சொல்லும்?

19. இஸ்ரவேல், யூதசபையானது மனந்திரும்பும்படிக்கு அவர்களுக்கிருந்த கிருபையின் ஏத்தனங்களென்ன?

20. கன்றுக்குட்டி ஆராதனையை இஸ்ரவேலின் எல்லா இராஜாக்களும், ஓர்வகையாய்ப் பக்தியுள்ளவர்களுங்கூட விடாமலிருந்ததற்கு முகாந்தரமென்ன?

21. ரெகாபியர் ஆர்? அவர்கள் ஆசாரமென்ன? அவர்களில் யார் யாரைப்பற்றி வேதத்தில் என்ன என்ன வாசிக்கிறோம்?

---

# இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

---

நோல்லாது விட்டுவிடக் கொற்றவன்பல் கால்முயன்றும்
பொல்லாருக் கஞ்சிப் புகன்றான் கொலையென்பார்
பொல்லாருக் கஞ்சிப் பொதுநீதியைப் புரட்டி
அல்லாத செய்வார்க் கறங்கூற்றே யாமென்பார். 1202

காட்டிக் கொடுத்தோன் கழுத்தி லொருகயிற்றைப்
பூட்டிமன வாதையினாற் பொன்றினனும் பொல்லாங்கு
சாட்டிக் கொலைபுரிசண் டாளர்மனச் சாக்ஷியுந்தம்
பாட்டிற் கிடப்பதென்ன பாவமதி பாவமென்பார். 1203



நிந்தனையாஞ் செந்நெருப்பு நெஞ்சைக் கொளுத்திடவும்
நொந்தொருசொற் சொல்லாத நோன்மை நுனித்துணரில்
மைந்தருக்கிச் சாந்தம் வருமோ மகேசனெனும்
சிந்தை செறுநருக்குச் சேராத தென்னென்பார். 1204

சேந்தா மரைபோற் றிகழுந் திருவதனம்
அந்தோ வதங்கி அழகுகுடி போயதென்பார்
நந்தாக் கருணை நறுந்துளிக்குங் கண்மலர்கள்
சிந்தா குலம்பொதிந்து தேசிழந்து விட்டதென்பார். 1205

உன்னதமெய்ஞ் ஞானம் உவந்துகுடி கொண்டதிருச்
சென்னிபுடை யுண்டிரத்தம் சிந்துவதோ செவ்விதென்பார்
மன்னுதிரு மேனிமுற்றும் வாரடியாற் கன்றிநைந்து
சின்னமுற லாவதுவோ தெய்வமே ஓவென்பார். 1206

பெண்ணீர்மை குன்றாத பெய்வளையார் இவ்வண்ணம்
புண்ணீருந் தீயிற் புகைந்தா ருயிர்பொடிப்பக்
கண்ணீரின் துன்பக் கடற்கெல்லை காணாராய்
எண்ணீ ராய்ச்செல்லும் எம்பெருமான் பின்சென்றார். 1207

மைத்தடங்கண் ணீர்சொரிய வாய்விட் டழுதரற்றிச்
சித்த முடைந்து தொடர்ந்துவருசேயிழையார்
பத்திமையும் சிந்தைப் பருவரலுங் கண்டிரங்கி
உத்தமசற் போத உபசாந்த ரீதுரைப்பார். 1208

எருசலேம் புத்திரிகா ளென்பொருட்டுக் கலுழாதே
துரிசறமற் றும்பொருட்டுஞ் சுதர்பொருட்டுங் கலுழ்ந்திடுமின்
வரிசைபெறு மகப்பெறா மலடிகள் பாக்கியரென்று
உரைசெறியத் தகுநாளிங் குளதாமென் பதையுணர்ந்தே. 1209

அன்றுபுக லிடமரிதாய் அவரவரோ துயர்விஞ்சிக்
குன்றுகளே மலைக்குலமே யெமைமூடிக் கொள்ளுதிரால்
என்றுரைப்பர் பசுமரத்துக் கிதுசெய்வா ரெனிலந்தோ
தொன்றுலாந்து படுமரத்துக் கெதுசெய்யார் துணிவொன்றி. 1210

என்றுதய ருறுமடவார்க் கிரங்கியிருந் துயரோடு
நன்றுமொழிந் தடர்சுமையால் நலிவெய்தித் தளர்ந்தேகத்
துன்றுசிலு வையையாங்கோர் வழிப்போக்கன் தொடுத்தேந்தி
ஒன்றிவரு கெனக்கொலைஞர் உத்தமரைக் கொடுபோனார். 1211

பெண்டிரெலாம் அழுதாற்றப் பிள்ளைக ளெலாங்கதறக்
கண்டுகேட் டவரிரங்கிக் கரைந்துருகிக் கருத்தழிய
மண்டுதுய ரெனுந்தீயால் வயிறெரியக் கடிநகரம்
பண்டெரிவீழ்ந் தழிசோதோம் பதிபோலப் பதைத்தேங்க. 1212

பொருவரிய பரலோகப் புத்தேளிர் புதுமையிதில்
மருவுவதெம் முடிவோவென் றையுற்று மறுக்கமுறப்
பருவரல்கொண் டைம்பூத பௌதிகமாத் திரையாய
சருவசிருட் டியுந்திகைத்துத் தமைமறந்து நிலைகுலைய. 1213

தூழனுலிற் பிரியாத குருத்துவமா ரருட்சீடர்
அழலனைய துயர்நலிய அழுதுகரந் துடன்செல்லப்

பழுதறுமெய்ப் பழம்பொருளை மகவாக்கும் பசுந்தோகை
தழலிடுபூங் கொடியேபோல் சாம்பியுயிர் தளர்ந்தேக. 1214

எண்ணிலா மறவோர்தம் இகல்நெஞ்சு பறையறைய
உண்ணிலவு விசுவாசத் தூரவோர்நெஞ் சுள்ளழியப்
புண்ணியருக் குறுங்கொலையின் புணர்ப்புன்னிப் பொருமியழு
கண்ணீரும் பெருமூச்சுங் ககனதுருத் தியிலடைய. 1215

இப்பரிசு பெருந்துக்கக் குறிமல்கி யெவ்வுயிரும்
செப்பரிய துயருழப்பச் செருசலையைப் புறம்போக்கி
ஒப்பரிய முதுமூலத் தொருபொருளைக் கொண்டேய்த்தார்
மைப்படுவன் மனக்கொலைஞர் வதைபுரிவான் கொலைக்களத்தில். 1216

ஈண்டினியான் புகல்வதெவன் எம்பெருமான் திருமேனி
தீண்டினார் சிலுவையொடு சேர்த்தினார் செங்கையிலும்
காண்டகுசே வடியிலும் வெவ்விருப்பாணி கடாவினார்
நீண்டசிலுவையையெடுத்து நிறுத்தினார் நிலங்கீண்டு. 1217

மற்றிரண்டு திருடரையும் வலப்புறத்து மிடப்புறத்தும்
செற்றமொடு குருசேற்றிக் கொலைமாக்கள் செயலொழிய
சொற்றமறைத் திருவசனந் துலக்கமுறச் சுருதிமுதல்
குற்றவா ளிகளோடு நடுநின்றார் குருசுமிசை. 1218

தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெந்தாய்
இன்னதென அறிகில்லார் தாம்செய்வ திவர்பிழையை
மன்னியுமென் றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம் அருள்வள்ளல். 1219

இத்தகைய அரும்பொறையும் மனநலமு மியைந்தவரோ
வித்தகனுக் கடித்தொழும்ப ரெனத்தகுமெய்க் கிறிஸ்தவர்மற்
றித்தகைய குணமிலரும் கிறிஸ்தவரென் றிசைபெறுதல்
செத்தவரைத் துஞ்சினவ ரெனவுரைக்குஞ் சீர்மைத்தால். 1220

கீண்டிருப்பு முளையுடலைக் கிழித்துருவி வதைப்புண்டு
மாண்டுபடும் போதிவர்க்கு மன்னியுமென் றுரைத்தமொழி
ஈண்டிவரோ யுலகினுக்கோர் இரக்ஷகரென் றெடுத்துரைக்கும்
வேண்டுமோ இனிச்சான்று மிதைவிடுத்து வேறொன்றே. 1221

மன்றாடும் அருட்ஜீவ வசனத்தை வன்மறவோர்
ஒன்றாகப் பொருள்செய்யார் உடைகளைந்து பங்கிட்டார்
குன்றாத நசரேயன் யூதருக்குக் குலவேந்தன்
என்றாக டியமான எழுத்திட்டார் சிலுவைமிசை. 1222

கேடணவு தலைவரொடு கெழுமியபல் யூதர்களும்
மாடணவிக் காக்குநரும் வழிவருபுன் மனத்தவரும்
பாடணவி வருந்துநம பரமசுதனைப் பழித்துத்
தூடணங்கள் பலபேசித் துணிந்துபுறக் கணித்திகழ்ந்தார். 1223

வணங்காத முரண்கழுத்தர் வல்லுருக்கிற் கடினமுறீஇக்
குணங்காணுக் கொடுமனத்தர் கூறியதீ மொழியொன்றோ
அணங்காருங் குருசுமரத் தறையுண்ட வொருதிருட்டுப்
பிணங்காணு யிகழ்ந்ததுவும் பிதற்றியது பெருமானை. 1224



அடுங்கொலைஞர் பொருட்டமலன் அகங்கனிந்த அருட்டிறமும்
கெடுங்கொடிய ருணர்வின்றிக் கிளந்தபழி மொழிச்செருக்கும்
நடுங்கியுயிர் நலிசோரன் நச்சுமனத் தியற்கையுமோர்ந்
தொடுங்குயிர்மற் றொருசோரன் உளம்பொறுக்கா துரைக்கின்றான். 1225

எஞ்சுறா மரணத்தீர்ப் பியைந்துழந்து மேழைநீ
அஞ்சுவாய் அலையேயிவ் வமையத்தும் அமலனுக்கு
நஞ்சனைய நமக்கிது நேர்ந்ததுமெய் நடுநிலைமை
விஞ்சியாம் விளைத்தகொடு வினைப்பயனை யடைகின்றேம். 1226

மற்றிதனை யுணராது வன்னெஞ்சோய் மாசணுகா
நற்றவனை யிகழுவது நன்மையோ நன்மையலாற்
குற்றமிவ ரிடத்துளதேற் கூறுதியென் றறக்கடிந்து
தெற்றெனவுட் குழைந்துரைத்தான் ஜீவவழித் தலைநின்றான். 1227

கள்ளநாள் முழுதுமறம் உஞற்றியாக் கினையுழக்குங்
உள்ளனிவ னெனினுமனங் கண்டறிந்த சத்தியத்தைத்
தெள்ளிதுடன் வெளிப்படுத்திச் சிந்தையுடைந் துளந்திரும்பிக்
கொள்ளையிடத் துணிந்தான் நித்தியவாழ்வைக் குறிக்கோடி. 1228

சாக்குறிக ளடுக்காமுன் தனுகரணந் தளராமுன்
மீக்கிளரு நெடுமூச்சு விரவாமுன் விழிமயங்கி
நாக்குழறி வீழாமுன் நல்லுணர்வுற் றருட்கள்ளன்
நோக்கினான் தலைதிருமி நுவலரும்புண் ணியப்பொலிவை. 1229

காண்டகைய பெருங்கருணைக் கற்பகத்தை யெதிர்கண்டு
மாண்டகைய அன்பினொடு மானதாஞ் சலிவழங்கி
ஆண்டகை நும்மரசியலில் அடியேனை நினைந்தருள
வேண்டினே னெனவிரந்து வேண்டினான் மிகவிரும்பி. 1230

கள்ளமிலா அருட்கள்ளன் கசிந்துகரு ணையைநம்பி
உள்ளுணர்வோ டினிதுரைத்த வொருமன்றாட் டுயிர்நல்கும்
வள்ளல்திரு வுளத்தழுந்த மலங்காய்நீ பரதீசில்
உள்ளபடி யின்றேயென் னுடனிருப்பா யெனவுரைத்தார். 1231

வேறு.

எம்மா திரமும் படுபாவியென் றெள்ளுகள்ளன்
அம்மா வுயிர்போ மளவிற்கதி யாக்கநச்சிப்
பெம்மா னருளுக் கிலக்காகிமெய்ப் பேறுபெற்றான்
கைம்மா றிலாத கிருபைத்திறங் காண்டிமைந்த. 1232

தன்னேரில் நின்று கலுழுந்தனித் தாயை அன்பின்
முன்னாக நின்ற வொருசீடனை முற்றிநோக்கி
அன்னாயிவன் உன்மகன் மற்றுனக் கன்னைநண்ப
என்னாவருள் இன்னுரை தந்தனர் என்றுமுள்ளார். 1233

ஆயிற் சிறந்த அறமாவதிவ் வாழ்வைப்பில்
தாயிற் சிறந்த தமரின்றெனத் தக்கஅன்பாம்
சேயிற் சிறந்த அருளாயகன் சிந்தையார
வாயிற் சிறந்த மொழிகாட்டுமிம் மாண்பையோர்தி. 1234

அன்பின் றலைநின் றருள்பெற்றவத் தொண்டன்ஜயன்
துன்பின்றலை நின்று கருத்தொடு சொற்றவாய்மை
என்பின் குருமட் டிதயத்தி விருத்தியன்னை
தன்பங் கினளாவவள் சொற்றலை தாங்கிநின்றான். 1235

வாழிப்பெரு மானை வதைத்துயிர் மாய்க்கவல்ரும்
பாழித் துயரின் படலம்மெனப் பாரைமூடி
வழிக்கரு மாலை வளைந்தென வொல்லையும்பர்
ஆழிக் கதிரைப் புதைத்தோங்கிய தந்தகாரம். 1236

எல்லா வுலகத் தவர்பாவமும் ஏற்றதேவ
நல்லாடுயர் வேதிகை மேவலும் நம்பனீதிச்
செல்லாரழல் தீத்திட வப்பலி தீரவெழுந்த
அல்லார்புகை யாமென வோங்கிய தந்தகாரம். 1237

வாதிக்கு மதீத வஞ்ஞான மகாந்தகாரம்
நீதிக்கதி ரோனை மறைத்திடு நீர்மைகண்டு
சாதிக்க மாட்டா துலகுக்கொளி தந்துநின்ற
ஜோதிக்கதிர் குன்றிட மையிருள் தொக்கதெங்கும். 1238

காராழி பொங்கிக் ககனம்புதை பட்டதென்கோ
பாராதி யந்தம் புரிநீமைப் படாமிதென்கோ
தீரா அனந்தத் திரள்கூடிச் செறிந்ததென்கோ
பேரா தோர்யாமம் வரைதுற்றி நட் டெற்றிதன்னை. 1239

மெய்யான தீபங் கிறிஸ்தியேசெனு மெய்ம்மை கண்டாம்
உய்யா வுயிருக் குயிராமுயிர் ஒயுமெல்லை
மையார்கண் ணிருண்டிட வாஞெளி யாவுமட்கி
வெய்யோ னொளியுங் கரந்தாரிருள் மேயவாற்றால். 1240

மெய்யுற்ற தெய்வம் பசுபாசம் விளக்கி நாளும்
கையுற்ற நெல்லிக் கனியின்மறை காட்டஇன்னும்
ஐயுற் றலையும் புலைமார்க்கர் அகத்தில் நஞ்சில்
மையுற்ற கூட்டில் இருள்தொக்கது மண்ணும் விண்ணும். 1241

ஊறுற்றிடு காரிருள் மூடி யுடற்றவஞ்செப்
பீறுற்றுள முட்கி அயர்ந்து பிதற்றியாதும்
தேறுற் றிலவாய்ச் செயலற்ற ஜெகத்தெலாம்பல்
கூறுற்ற ஜீவ வருக்கங்குலை வுற்றமாதோ. 1242

பெருந்தீப் பிழம்பும் பிறங்காதொளிர் பெற்றிகுன்றிக்
கருந்தீயென லாயின கண்ணொளி யற்றிமைத்தல்
பொருந்தாது முழுக்குரு டாயின பொன்றிலொளித்
திருந்தா ரெவரும் வையுஞ்சரித் தின்றுகாண்டி. 1243

ஊர்த்தங் கலகை யிருட்கும்பியி விட்டபூவை
ஆர்த்தன்பு வடங்கொ டிழுக்குநம் மையனுற்றல்
பார்த்தும்பர் நின்ற பலதேவ கணங்கள் பையுள்
போர்த்தங் கிடைந்தார் நரகத்திருள் போர்த்ததென்றே. 1244

நளியுண்ட முந்நீ ருலகத்து நலம்பெயகொண்டுத்
துளியுண் டுணவுண்டு பல்போக சுகாயவும்ன...



டளியுண் டருளுண் டறமுண்டிவை யாயவெல்லாம்
ஒளியுண் டெனிலுண் டிலதேலிலை யொன்றுமன்றே. 1245

(இன்னும் வரும்.)

---

## தீர்க்கதரிசனம், அருள்வேதத்திற்கு அத்தாக்ஷி.

(தொடர்ச்சி.)

5. தீரு. உலகத்தில் மிகவும் பிரபலமாயிருந்த பட்டணங்களிலி தொன்று. மெதித்திரேனியாக்கடலின் கீழ்கரையிற் கட்டப்பட்டிருந்தது. இப்பட்டணத்தைப்பற்றி பாபிலோன் இராஜாவாகிய நேபுகாத்நேச்சராற் பிடிக்கப்படுமென்றும் 70 வருஷங்களுக்குப்பின்பு திரும்பவுங் கட்டப்படு மென்றும் கடைசியாய் அழிக்கப்பட்டு வலைகளை விரிக்கிற இடமாய்ச் சமுத்திரத்திலிருக்குமென்றும் விபரமாய்த் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. உரைக்கப்பட்டபடியே கிரமங்கிரமாய் நேபுகாத்நேச்சாரும் எகிப்திய சிரிய ராஜாக்களும் அந்தப் பட்டணத்தைப் பாழாக்கினார்கள். அது தன் பூர்வ நிலைமையை இழந்ததுமன்றி மீன்பறவர் குடியிருக்கும் ஒரு சிற்றூராகிவிட்டது. கி. பி. 1816ம் வருஷத்தில் பக்கிங்காம் துரை அந்த இடத்தைப்போய்ப் பார்த்தபோது 5000-ம் அல்லது 8000-ம் ஜனங்கள் குடியிருந்தார்கள் என்று சொல்லியிருக்கிறார். மற்றும் கிறிஸ்தவப் பிரயாணிகளும் போய்ப் பார்த்து தீர்க்தரிசனம் நிறைவேறினதை மெய்ப்பித்திருக்கிறார்கள். தற்காலத்தில் அதற்குச் சூர் என்று பேர்.

6. பாபிலோன். கல்தேயா தேசத்தின் தலைமைப் பட்டணமாகிய இது 15-மைல் சற்சதுரமாகக் கட்டப்பட்டிருந்தது. அதின் சுவர்கள் 350-அடி உயரம். நிலைகளும் கதவுகளும் பித்தளையாற் செய்யப்பட்ட 100-வாசல்களுமிருந்தன. ஐப்பிராத்து நதி அதின்மத்தியாய் ஓடியதால் மிகவுஞ் செழிப்பாயும் வியாபாரத்திற் பேர்போனதாகவும் இருந்தது. இவைபோலும் பலவித சிறப்புகளோடு அதில் விக்கிரகாராதனை கொடுங்கோன்மை, ஒடுக்கம், அகங்காரம், பொருளாசை, வெறி, பொய்முதலிய அக்கிரமங்களும் நிறைந்திருந்தன. இவைகளினிமித்தம் அந்தப் பட்டணத்திற்கு விரோதமாய் அநேக தீர்க்கதரிசனங்கள் ஏசாயா, எரேமியா, தானியேல முதலான பல தீர்க்கதரிசிகளாலுரைக்கப்பட்டன. சத்துருக்கள் அதை முற்றிக்கைபோட்டு சடுதியாய்ப் பிடித்துக்கொள்வார்களென்றும் அதின் கோவில் கொள்ளையடிக்கப்படுமென்றும் அது தாழ்த்தப்பட்டு ஒருக்காலும் எழும்பாமலும் அதில் ஒருவருங் குடியிராமலும் மண்மேடுகளாகிவிடுமென்றும் உரைக்கப்பட்டன; உரைக்கப்பட்டபடியே கோரேஸ் என்னும் பாரசீக இராஜன் இப்பட்டணத்தை முற்றிக்கைபோட்டுப் பிடித்தான். டேரியஸ் என்பவன் அதின் மதிலையும் வாசல்களையும் இடித்துத் தூளாக்கினான். சர்க்சீஸ் என்பவன் கிரேக்குதேசத்தில் தோல்வியடைந்து திரும்பிவரும்போது பாபிலோனின் கோவிலைக் கொள்ளையிட்டான். மகா அலெக்சந்தர் அப்பட்டணத்தைப் புதுப்பிக்கும்படி யோசித்தும் அவனுடைய சடுதியான மரணத்தினால் அந்தப் பிரயத்தனம் நின்றுபோய்விட்டது. அவனு

டைய சேனாபதியாகிய செலுக்கஸ் நிக்கனோர் என்பவன் அப்பட்டணத்தினின்று 5-லட்சம் ஜனங்களைச் சிறைபிடித்து செலுக்ககஸ் என்ற புதிய பட்டணம் ஒன்றிற்குக் கொண்டுபோனான். மீந்திருந்த சொற்ப ஜனங்களும் ஜல்தியாய்ச் சிதறிப்போய்விட்டார்கள். சுமார் 1700-வருஷங்களுக்கு முன்னமே அந்தப் பட்டணம் பாழாகி தற்காலத்தில் அது இருந்த இடமும் திட்டமாய்த் தெரியாமல்போய்விட்டது.

7. எருசலேம். (1) இது யூதேயா நாட்டின் தலைமைப் பட்டணமாயிருந்தது. யூதஜாதியாருடைய சிறந்த தேவாலயம் இதிலே கட்டப்பட்டிருந்தது. இப்பட்டணத்தின் அழிவைப்பற்றி கிறிஸ்துநாதர் பல தீர்க்கதரிசனங்களை உரைத்தார். சத்துருக்கள் அந்தப் பட்டணத்தைச் சூழ மதில் போட்டுப் பிடித்து அதின் குடிகளைக் கொன்று தரையாக்கிப் பட்டணத்தையும் அதின் தேவாலயத்தையும் ஒரு கல்லின்மேலொரு கல்லிராதபடி அழித்து நாசமாக்கிவிடுவார்களென்றும் அது அழிகிற காலத்தில் கள்ளக் கிறிஸ்துக்கள் அநேகர் தோன்றுவார்களென்றும் வானத்திலும் பூமியிலும் அநேக அதிசயங்கள் தோன்றும் என்றும் பஞ்சங்கள் யுத்தங்கள் பூமியதிர்ச்சிகள் விஷநோய்கள் உண்டாகுமென்றும் உரைக்கப்பட்டன. அப்படி உரைத்த 40-வருஷத்திற்குப்பின் கழுகுகொடியை உடைய ரோமர் எருசலேம் பட்டணத்தை முற்றிக்கைபோட்டுப் பிடித்தார்கள். முற்றிக்கையில் அழிந்தவர்கள் 1357600-பேர். 97000-பேர் சிறைகளாக எடுக்கப்பட்டார்கள். கள்ளக்கிறிஸ்துக்களாலும் கள்ள தீர்க்கதரிசிகளாலும் ஏமாத்தப்பட்டு வனாந்தரத்திற்குச் சென்று அநேகர் மடிந்தார்கள். தேவாலயத்திலேயே அநேகர் அக்கினிக்கிரையானார்கள். இவ்விதமாய் எருசலேம் பட்டணத்தையும் அதிற் கட்டப்பட்டிருந்த சிறந்த தேவாலயத்தையும் ரோமர் சுட்டெரித்து ஒரு கல்லின்மேலொரு கல் இராதபடி கலப்பைகளினால் உழுதுபோட்டார்கள். அவர்களுடைய அதிபதியாகிய தீத்து என்பவன் தேவாலயத்தை அழியாமலிருக்கும்படி கொடுத்திருந்த கண்டிப்பான உத்தரவையும் போர்ச்சேவகர் அசட்டைபண்ணி இவ்விதமாய் நாசப்படுத்தினார்கள். அன்றியும் உரைக்கப்பட்டபடியே சீமோன், மேகஸ், டாசிடியஸ் முதலிய பல கள்ளக்கிறிஸ்துக்கள் எழும்பி எண்ணிறந்த யூதரை மோசம்போக்கினார்கள். வானத்திலும் பூமியிலும் அநேகம் அதிசயங்கள் தோன்றின. யுத்தம் பஞ்சம் பூமியதிர்ச்சி முதலிய பல காரியங்களும் நடந்தன. மேற்காட்டிய சகல சம்பவங்களையும் யூதசரித்திராசிரியனாகிய யோசேபபென்பவனும், உரோமை சரித்திராசிரியனாகிய தாசித்தஸ் என்பவனும் வெகு விபரமாகவும் நுட்பமாகவும்எழுதியிருக்கிறார்கள்.

வேறே திருஷ்டாந்தங்களுமுண்டு. தீத்துராயன் அடைந்த வெற்றிக்குப் புகழ்ச்சியாக ரோமாபுரியில் வில்வளைவான ஒரு மண்டபம் செய்யப்பட்டிருப்பதைத் தற்காலம்வரை காணலாம். அதிலே தீத்து என்பவன் யூதஜாதியாரைக் கீழ்ப்படுத்தி எருசலேம் பட்டணத்தை அழித்தான் என்ற அர்த்தமாய் அட்சரங்கள் வெட்டியிருக்கின்றன. தேவாலயத்திலிருந்த பொன்விளக்கு அப்பங்கள் வைக்கிற மேசை எக்காளங்கள் முதலிய பல விருதுக்களோடு தீத்துராயன் ரோமாபுரிக்குத் திரும்பிவருகிற ஜெயகோலமும் அந்த மண்டபத்தின் ஒரு பக்கத்தில் காட்டியிருக்கிறது. அன்றியும் அந்த வெற்றிக்கு ஞாபகமாக அநேகம் பித்தளை நாணயங்கள் செய்யப்பட்டு சில காசுகள் தற்காலத்திலும் இருக்கின்றன. அவைகளிலும் யூதேயா நாடு ஜெயிக்கப்பட்டுப் போனதினால் ஒரு ஸ்திரீ துக்கமுகமாய் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருப்பதுபோல சொரூபம் வரைந்திருப்பதைக் கா



ணலாம். (2) புறஜாதியாரின் காலம் நிறைவேறும்வரைக்கும் அதாவது புறஜாதியார் யாவரும் குணப்படுமட்டும் எருசலேம் பட்டணம் புறஜாதியாரால் மிதிக்கப்படுமென்றும் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டது. அப்படியே 1800-வருஷங்களுக்குமேலாய் அது புறஜாதியார் கைவசத்திலிருந்து வந்திருக்கிறது. மேற்காட்டியபடி ரோமர் அதை வசப்படுத்தினார்கள். அவர்கள் அரசாட்சியிலிருக்கும்போது கி. பி. 2-ம் நூற்றாண்டில் யூதர்கள் திரண்டு எருசலேம் பட்டணத்தைத் தம் வசப்படுத்திக்கொள்ளும்படி பிரயத்தனம்பண்ணவே ரோமை ராயனாகிய ஆதிரியான் என்பவன் அவர்களைக் கீழ்ப்படுத்தி ஆயிரக்கணக்காய்ச் சங்காரம்பண்ணி மரணதண்டனையினால் அப்பட்டணத்திற்குச் சமீபத்திலும் யூதர்கள் வராதபடி தடுத்தான். 4-ம் நூற்றாண்டிலிருந்த கிறிஸ்துமத விரோதியாகிய யூலியான் ராயன் கிறிஸ்துநாதருடைய தீர்க்கதரிசனத்தை அவமாக்கும்படி எருசலேமில் தேவாலயத்தைத் திரும்பக் கட்டவும் யூதர்களை பல திசைகளிலிருந்துங் கூட்டிச் சேர்த்து அப்பட்டணத்திற் குடியேற்றவும் வேண்டிய பிரயத்தனமெல்லாம் பண்ணினான். அஸ்திபாரந் தோண்டினதில் அக்கினியுண்டைகள் உள்ளிருந்து எழும்பினதினால் வேலை நடந்தேறக் கூடாமல் நின்றுவிட்டது. அஞ்ஞான சரித்திராசிரியனாயிருந்த அம்மேனியஸ்மார்செல்லீனஸ் என்பவன் இது சங்கதியைப்பற்றித் தான் எழுதிய புஸ்தகத்தில் வெகு விபரமாய்ப் பிரஸ்தாபித்திருக்கிறான். இவனுடைய சாட்சியை மறுக்கக் கூடியது யார்? 614-ம் வருஷத்தில் பார்சியர் அதைப் பிடித்தார்கள். 637-ம் வருஷத்தில் சரசேனர் அதைப் பிடித்து. 1079-ம் வருஷவரை தங்கள் வசத்தில் வைத்திருந்தார்கள். 800-ம் வருஷக்காலங்களாய் அது துருக்கருடைய அரசாட்சிக்குட்பட்டிருக்கிறது. இவ்விதமாய்ப் புறஜாதியாரால் எருசலேம் மிதிக்கப்பட்டே வந்திருக்கிறது. கிறிஸ்துநாதர் உலகத்திற் சஞ்சரித்த காலத்தில் யூதர்கள் ரோமை ராஜாங்கத்திற்குட்பட்டிருந்ததினால் வருவார் என்று அவர்கள் எதிர்பார்த்த மேசியாவானவர் வந்து தங்களை ரோமர் கையினின்று விடுதலையாக்கி இரக்ஷிப்பாரென்றெண்ணியிருந்தார்கள். ஏசுக்கிறிஸ்துநாதரோ அவர்களுடைய எண்ணப்படியல்ல சகல இருதயங்களையும் ஞானப்பிரகாரமாய் ஆளுகிற இராஜாவாக வந்தார். யூதர்கள் அவரை மேசியாக ஒப்புக்கொள்ளாமல் விரோதித்து அநியாயமாய்ச் சிலுவையிலறைந்துகொன்றார்கள். அன்றியும் தங்கள் பட்டணம் அழிந்த காலத்தில் எழும்பிய கள்ளக்கிறிஸ்துக்களையும் கள்ள தீர்க்கதரிசிகளையும் நம்பி ரோமருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள். இது காரணங்களினால் சங்காரம் சிறைமுதலிய சகிக்கமுடியாத உபத்திரவங்களைத் தாங்களும் அனுபவித்து தங்கள் பட்டணத்திற்கும் இவ்வித நாசத்தை வருவித்துக்கொண்டார்கள்.

8. கிறிஸ்தவர்கள் படுந் துன்பம். கிறிஸ்துநாதர் தம் சீஷர்களை உலகத்தார் பகைத்து நிந்தித்து துன்பப்படுத்துவார்களென்று வெகு விபரமாய்ச் சொல்லியிருந்தார். அப்படியே கிறிஸ்தவர்கள் கிறிஸ்துமதம் ஸ்தாபிக்கப்பட்ட நாள்முதல் துன்பப்படுத்தப்பட்டு வருகிறார்கள். யூதஜாதியாராலும் ரோமை இராயர்களாலும் சரசேனர் துருக்கர்முதலிய பல ஜாதிகளாலும் ரோமாபுரிப் பாப்புக்களாலும் மற்றும் பலராலும் எண்ணிமுடியாத துன்பங்கள் கிறிஸ்தவர்களுக்கு நேரிட்டிருக்கின்றன. கிறிஸ்துமதம் பிரபல்யமான சகல தேசங்களிலும் தீவுகளிலும் கிறிஸ்தவர்கள் துன்பப்படுத்தப்பட்டார்கள். இராஜாக்கள் பிரபுக்களாலுண்டான இவ்விதத் துன்பங்களையல்லாமல், கிறிஸ்தவர்கள் தங்கள் ஜாதியாராலும் உற்றா

ருராலும் துன்பம் அடைந்து வருகிறார்கள். மெய்க்கிறிஸ்தவனுக்கு அகத்திலும் புறத்திலும் துன்பமிருந்தே வருகின்றது.

9. கிறிஸ்துமத பிரபல்யம். கிறிஸ்துமத பிரபல்யத்தைப்பற்றிப் பழைய புதியவற்பாடுகளில் அனந்தம் தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டிருக்கின்றன. சிலவற்றைப் பார்ப்போம். (1) கடவுள் ஆபிரகாமென்ற ஒரு மகாத்துமாவோடே உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுமென்று உரைத்திருந்தார். இப்படி உரைத்து 1800-வருஷங்களானபின் இத்தீர்க்கதரிசனம் நிறைவேற ஆரம்பித்து இன்னமும் நிறைவேறிக்கொண்டே வருகிறது. எப்படியெனில் கிறிஸ்துநாதர் ஆபிரகாமின் வம்சத்திற் பிறந்து தமது மதத்தை ஸ்தாபித்தார். அம்மதமானது இன்னமும் பரம்பிக்கொண்டே வருகிறது. கிறிஸ்துமதமானது கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல, அவர்களைச் சூழ்ந்திருக்கிறவர்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்கிறது என்பதை யார் ஆட்சேபிக்கக் கூடும். (2) ஆபிரகாமின் பேரனாகிய யாக்கோபு என்பவர் தன் குமாரரை அழைத்துக் கடைசிநாட்களில் அவர்களுக்கு நேரிடுங் காரியங்களைத் தீர்க்கதரிசனமாய் உரைத்தபோது யூதாவென்று பேருடைய ஒரு மகனைக்குறித்து சமாதானக் கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதுமில்லை. நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களைவிட்டு ஒழிவதுமில்லை. ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள் என்று உரைத்திருந்தார். அப்படியே யூத ராஜ்யம் ஒன்று ஏற்பட்டு அனேகம் இராஜாக்கள் அரசாண்டார்கள். அந்த யூதா வம்சத்திலேயே சமாதானக் கர்த்தராக கிறிஸ்துநாதர் உற்பத்தியானார். ஆயினும் தீர்க்கதரிசனத்தின் கடைசிப் பாகமாகிய ஜனங்கள் அவரிடத்திற் சேருவார்கள் என்பது இப்போதும் நிறைவேறி வருகிறது. ஜனங்கள் திரள் திரளாகவும் குடும்பங் குடும்பமாகவும் தனித்தனியாகவும் கிறிஸ்துமார்க்கத்தில் அமைந்து சமாதானக் கர்த்தராகிய கிறிஸ்துநாதரிடத்திற் சேர்ந்து வருகிறார்கள். (3) தானி. 7: 13, 14. "இந்தத் தரிசனங்களில் நான் பார்த்துக்கொண்டிருக்கையில் 'இதோ மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார். அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் இராஜரீகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும் அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்." இது தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி தானியேல் தீர்க்கதரிசியானவர் கண்ட தரிசனமாம். இத்தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டு 500-வருஷமானபின் ஏசுக்கிறிஸ்து என்ற சிறந்த பேர் விளங்கிய ஒருவர் பூலோகத்தில் தோன்றி தான் உன்னத தேவனுடைய குமாரனென்று தெரியப்படுத்தி ஒரு இராஜ்யத்தையும் ஸ்தாபித்தார். அவர் பூமியின் எத்திசையிலும் கர்த்தாவாகவும் இராஜாவாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டுவருகிறார். அவர் ஸ்தாபித்த இராஜ்யமாகிய கிறிஸ்து மதம் 1800வருஷங்களுக்கு அதிகமாய் இருந்துவருகிறது. சதாகாலமுமாயிருக்குமென்றுஞ் சொல்லியிருப்பதினால் உலகமுடியும்வரை இம்மதம் பூமியில் நிலைத்திருப்பதற்கு ஆட்சேபமென்ன? (4) மத்தேயு 13: 13. "பரலோக ராஜ்யம் புளித்தமாவுக்கொப்பாக இருக்கிறது. அதை ஒரு ஸ்திரீ எடுத்து முழுவதும் புளிக்கும்வரைக்கும் மூன்றுபடி மாவில் அடக்கிவைத்தாள்." பரலோக இராஜ்யம் என்பது கிறிஸ்து மதமேயல்லாது வேறல்ல; இந்த மதமானது ஆரம்பத்தில் இருந்த இடந் தெரியாமலிருந்தாலும் தீர்க்கதரிசன



மாய் உரைக்கப்பட்டபடி ஒருவருக்கும் தெரியாதவிதமாய் தெய்வீகமான தன் சுயசக்தியினாலேயே படிப்படியாய் அதிகரித்து பூலோகமெங்கும் பரம்பியும் பரம்பிக்கொண்டும் வருகிறது.

---

யோவான் 19: 17. லூக். 23: 28.

## எருசலேம் குமாரி கேட்க சுவாமி மறுமொழி.

கலித்துறை.

நடக்கரிதாயிருகாலுந் தள்ளாட நலியவுடல்
எடுக்கரிதாய சுமையேனெடுத்தனை? என் என்றுகேள்
கடக்கரிதாய சமுசார பாரங்கடத்துதற்குக்
கொடுக்கின்றதேவ பிதாகூலிக்காய் மனங்கொண்டதுவே.

ஆடையெங்கே? எந்தன் நன்மனைக்கானது அங்கஞ்செந்நீர்?
வாடிமயங்குஞ் சிறுவர்க்குப் போஜனவர்க்கஞ் செல்வம்?
கூடுமவர் கடன் தீர்த்தேன் இப்பாரக்குருசெடுக்க
சூடிய முண்முடி சும்மாடுமீந்தது தோகையமே.

பார்க்கப் பெரியவன் பிள்ளையன்றோ இந்தப் பாவிகடன்
தீர்க்கவுடன் படுங்காரணமேன்? தெய்வநீதிபரன்
ஆர்க்கத்தடிகொண்டடிக்க அபயம்அபயம் என்றாள்
பார்க்குள்ளொருவருங் காணேனவள் துயர்பார்ப்பதற்கே;

எட்டிநடக்கப் பருங்கற்கள்கால் சற்றிடறிவிட்டால்
திட்டென் சிலுவைமுடியுடன் தாக்குது சேவகர்கள்
பொட்டெனப்போ நடவென்பாரதட்டுவர் போந்தமட்டும்
திட்டியுறுக்குவர் பாராய் செருசலைத்தேமொழியே.

அங்கப்பழுது குருடம்மணம் பழையாதன்வித்து
வெங்கப்பயமகள் மீதேதுகாணில்விடாத நட்பு?
தங்கப்பத்திராசனத் தென்றேடிருக்க என்றந்தை தெரி
சிங்கத்துரை மக்களன்றோ எனக்கச் சியோனணங்கே.

எனக்கென்றழா திரிதெல்லாம் உனக்கெனக்கேதுமில்லை
மனக்கவலை கொடுன்பாவத்தைப் போக்குமாதேவபிதா
தனக்குமகிமை யுனக்குமெய்ஜீவன் சகலபவ
வினைக்குங் கிருபைபலியாகினேனிவண் மெல்லியரே.

---

இருச்சபை சொல்வது.

இ-ம் நீலாம்புரி. ஜம்பைத்தாளம்

பல்லவி.

மறக்குமோ கிறிஸ்தேசுபாசம் சிலுவை
மரணத்தில் என்மீது அவர்வைத்த நேசம்.

### சரணங்கள்.

அரசுபுரி துரைகள் கைவிட்டார் குருசில்
அறையும் அறையும் அகற்றுமென்றூர் நட்டார்
பொருவில் நம்மனவாக்குக் கெட்டார் சிரம்
பூண்ட முண்முடியோடதோ புறப்பட்டார்.— மறக்

வலியகலி மரணமும் பிரியார் என்னை
வலிய வந்தாட்கொண்ட இயேசுவுயிர்க் குரியார்
பொலிவுறுகிரோனைய புரியார் தாம்
போதமுன்செல்வரோ இன்னம் வழியறியார்.— மறக்

தெரியுதோ திருமேனிக்காயம் முன்
தீர்க்கர் சொல்லல்லாது வேறில்லை மாயம்
வரிவரியாவாசி நேயம் கெட்ட
வஞ்சகந் தீரவேறில்லையோருபாயம்.— மறக்

அடிமீது அடிவைத்துச் செல்வார் எங்கும்
ஆர்தானும் அறியாத பிரியமொழி சொல்வார்
கொடியபவதோஷவினை கொல்வான் அஃதோ
கொண்டுபோறூர் சிலுவை வந்திங்கே நில், பார்.— மறக்

தோளிலே குருசுமோர் பாரம் அஃது
சுமந்துபோக கொல்கதாவுமோ தூரம்
மாளவென்றேகின்ற சாரம் கேட்டென்
வன்னெஞ்சம் உருகாதோ மாத்திரை நேரம்.— மறக்

பார்பார் சிரசாதிபாதம் அந்தப்
பைம்பொன்றிருமேனிபீறுணும் வினோதம்
சேர்பார் மகாவுதிரசேதம் சிந்தச்
சென்னெறிதொறுங் காணுமெய்ஞ்ஞான போதம்.— மறக்

---

## சமாசாரத்திரட்டு.

சேலத்தில் நடந்த கலகத்தைப்பற்றியும், அதன்மூலமாய் விளைந்த வியாச்சியங்களையும் அவைகளின் தீர்ப்பையும் விவரமாக எழுதி அவ்விடத்திலிருக்கும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரான கனவான்களும் பாரிசவுக்காரிகளுமாக 7300-பேர்வரையும் அந்த விண்ணப்பத்திற் கையொப்பமிட்டு அந்தக் கலகத்தில் குற்றமுள்ளவர்களாய்த் தீர்க்கப்பட்டு சீர்மேலேத்தப்பட்டவர்களைப்பற்றித் திருவுள்ளத்திற் சற்று சிந்திக்கவேண்டுமென்பதாய் ஹைக்கோர்ட்டு வைக்கீல் ஒருவர்மூலமாய் சென்ற வாரத்தில் மாட்சிமைதங்கிய கவர்ணர் ஜெனரலவர்களுக்கு மன்றாட்டுப் பத்திரம் ஒன்று கொடுக்கப்பட்டது. இதற்கு அவர்கள் இனித் தான் ஒன்றும் செய்யமுடியாதென்றும் ஹைக்கோர்ட்டார் தீர்ப்புக்குமேல் தான் தலையிட முடியாதென்றும் சொல்லிவிட்டார்களாம்.



கல்கத்தாவில் உருவத்திலும், நிறத்திலும், உயரத்திலும், பேச்சிலும் மற்ற உடை நடை பாவனைகளிலும் சிறிதும் பேதமின்றி காசியென்றும் கிருஷ்ணேவென்றும் இரண்டு சகோதரர்கள் இருக்கிறூர்கள். அவர்கள் எல்லா விஷயங்களிலும் அபேதமாயிருக்கின்றமையன்றி, கலியாணஞ் செய்துகொண்டால் அவர்கள் மனைவியருக்குத் தங்கள் கணவன் இன்னானென்று கண்டுபிடிப்பது அருமையாதலால், விபசாரத்துக்கு ஏதுவாகுமென்றும், அவர்கள் ஒருவரை ஒருவர் மிகுந்த அன்பாய் இணைபிரியாமல் நேசிக்கின்றபடியால், தமக்கு மனைவிமார் வந்தவுடன் ஒருவனை விட்டு ஒருவன் பிரிய நேரிடும் என்று கலியாணம்செய்துகொள்ளவில்லையாம். ஒருநாள் தெருவில் தயிர்க்காரன் ஒருவன் தயிர் விற்க, அவனிடத்தில் வேடிக்கைசெய்யக் கருதி அவர்களில் ஒருவன் தயிர் கேட்க, தயிர்க்காரன் 12-சேர் தயிர் கொடுத்தான். அவன் அது போதாது என்றான்; அதற்குத் தயிர்க்காரன் 12-சேரும் குடித்துவிடுவாயானல் எனக்கு நீ விலை கொடுக்கவேண்டியதில்லை என்றான். உடனே அவன் அப்படியே ஆகட்டுமென்று அதில் பாதி குடித்து "தயிர்க்காரா சற்று இரு உள்ளேபோய் நொடியில் வந்துவிடுகிறேன்" என்று உள்ளே புகுந்து தன் சகோதரனை வெளியே அனுப்பினான், அவன் வந்து மற்றப் பாதியையும் வேலைதீர்த்துவிட்டான். இது கண்டு தயிர்க்காரன் அவனை அடையாளம் கண்டுபிடிக்க வகையில்லாமல் வெறுங்கையனாய் வீடுபோய்த் தன் மனைவிக்கு இந்த விந்தையை அறிவித்தான். திரு—னி.

பிரிட்டிஷ் துரைத்தனத்தாருக்கும் எகிப்தில் மகாதி என்ற ஒரு தலைவனுக்கும் நடக்கிற யுத்தம் சீக்கிரத்தில் முடியாதுபோல் தோன்றுகிறது. சூவாக்கீம் என்ற இடத்தில் நடந்த சண்டையில் 4000-பேர்வரை மாண்டாலும் அதிபதிகள் இன்னும் சமாதானமாகவில்லை. மகாதியின் தளகர்த்தனைப் பிடித்து ஒப்புவிப்போருக்கு மிகுந்த பொருள் கொடுக்கப்படுமென்று பிரசித்தம்செய்யப்பட்டது.

உஷ்ணமிகுதியினாலே சென்னை, பங்களூர் முதலிய இடங்களில் வைசூரி மெத்த அகோரமாயிருக்கிறது.

இதுவரையில் ஒரு ஸ்திரீ புலியைக் கொன்றதாக நாம் கேட்டதில்லை இப்பொழுது மதிராசிலும் கொஞ்சக்காலத்துக்குமுன் சிக்கந்தராபாத்திலுமிருந்த பார்டர் ரெஜிமெண்டின் ஒரு கர்னலின் பெண்ஜாதியானவள் தன்னுடைய துபாக்கியால் ஒரு புலியைக் கொன்றாள். இதுதான் ஒரு ஸ்திரீ புலியைக் கொல்வதின் முதல் உதாரணம்.

மகாகனம்பொருந்திய சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள் நாளது ஏப்பிரல்மீ 5வ சனிக்கிழமை காலை 12-மணிக்கு புகைரதமேறி, சேலம் ஜில்லாவிலுள்ள ஷிவராய் மலைக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் இரண்டு மாசம் அவ்விடத்தில் பின்னிடுவார்கள்போலும். மகத்துவ தேவன் அவர்கள் பயணத்தை ஆசீர்வதித்து, ஏற்றகாலத்தில் அவர்கள் நல்ல சுகத்துடனும், பலத்துடனும் ஆவியின் வரத்துடனும் திரும்பவந்து அநேக ஆத்துமாக்களுக்குப் பெரிய ஆதாயமாயிருக்கக் கிருபைசெய்வாராக.

---

## எப்பிரல்மீ நாள்-30. பங்குனிமீ 21௨ முதல், சித்திரைமீ 20௨ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| செ | 1 | ௨௧ | கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மேல்பிரியம்வைக்கிறார். சங். 149:4. |
| பு | 2 | ௨௨ | சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக அல்லேலூயா. 150: |
| வி | 3 | ௨௩ | ஞானமானது வெளியே நின்று கூப்பிடுகிறது. நீதி. 1:20. (6. |
| வெ | 4 | ௨௪ | நீ உன் செவியை ஞானத்திற்குச் சாய். 2:1. |
| ச | 5 | ௨௫ | கர்த்தருக்குப் பயந்து தீமையைவிட்டு விலகு. 3:7. |
| ஞா | 6 | ௨௬ | எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். 4:23. |
| தி | 7 | ௨௭ | உன் வழியை அவளுக்குத் தூரப்படுத்து. 5:8. |
| செ | 8 | ௨௮ | உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. 6:20. (7:2. |
| பு | 9 | ௨௯ | என் கட்டளையைக்...காத்துக்கொள், அப்பொழுது பிழைப்பாய். |
| வி | 10 | ௩0 | என்னை வெறுக்கிறவர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறவர்கள். |
| வெ | 11 | ௧ | என் அப்பத்தைப் புசித்து...திராட்சரசத்தைப் பானம்பண்ணுங் |
| ச | 12 | ௨ | நீதிமானோ நித்திய அஸ்திபாரமுள்ளவன். 10:25. (கள். 9:5. |
| ஞா | 13 | ௩ | நீதியோ மரணத்துக்குத் தப்புவிக்கும். 11:4. |
| தி | 14 | ௪ | நீதிமானுடைய வேர் கனி கொடுக்கும். 12:12. |
| செ | 15 | ௫ | உண்மையுள்ள ஸ்தானாபதியோ ஒளஷதம். 13:17. |
| பு | 16 | ௬ | பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி. 14:34. |
| வி | 17 | ௭ | மேன்மைக்கு முன்னானது தாழ்மை. 15:33. |
| வெ | 18 | ௮ | அழிவுக்கு முன்னானது அகந்தை. 16:18. |
| ச | 19 | ௯ | இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான். 17:17. |
| ஞா | 20 | ௧0 | மூடன் ஞானத்தில் பிரியங்கொள்ளான். 18:2. |
| தி | 21 | ௧௧ | ஆத்துமா அறிவில்லாமலிருப்பது நல்லதல்ல. 19:2. |
| செ | 22 | ௧௨ | அறிவுள்ள உதடுகளோ விலையுயர்ந்த ரத்தினம் 20:15. |
| பு | 23 | ௧௩ | சிற்றின்பப் பிரியன் தரித்திரனாவான். 21:17. |
| வி | 24 | ௧௪ | வெளியிலே சிங்கம்...என்று சோம்பேறி சொல்லுவான். 22:13. |
| வெ | 25 | ௧௫ | ஐயோ! . யாருக்கு இரத்தங் கலங்கின கண்கள். 23:29. |
| ச | 26 | ௧௬ | துன்மார்க்கருடைய விளக்கு அணைந்துபோம். 24:20. |
| ஞா | 27 | ௧௭ | வழக்காடப் பதற்றமாய்ப் போகாதே. 25:8. |
| தி | 28 | ௧௮ | படுகுழியை வெட்டுகிறவன் தானே அதில் விழுவான். 26:27. |
| செ | 29 | ௧௯ | விவேகி ஆபத்தைக்கண்டு மறைந்துகொள்ளுகிறான். 27:12. (16. |
| பு | 30 | ௨0 | பொருளாசையை வெறுக்கிறவன் தீர்க்காயுசைப் பெறுவான். 28: |

### விசேஷ நாட்கள்.

6. உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முந்தின ஞாயிறு.
10. பௌர்ணமி.
11. பெரிய வெள்ளிக்கிழமை.
13. உயிர்த்தெழுந்த திருநாளாகிய ஈஸ்தர் பண்டிகை.
20. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 1-ம் ஞாயிறு.
25. பரி. மாற்கு சுவி. திருநாள்.
அமாவாசை.
27. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 2-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

௫. மேமீ. ௲௮௮௪ ௵.

## மகா வித்வானாகிய படலர் என்பவரால் இயற்றப்பட்ட நூல்.

### முகவுரை.

அனுமான அத்தாக்ஷிக்கும் ரூபகார அத்தாக்ஷிக்கும் இருக்கும் முக்கியமான பேதமென்னவென்றால், ரூபகார அத்தாக்ஷியில் சிறிதென்றும் பெரிதென்றும் அளவில்லை. அனுமான அத்தாக்ஷியில் பூரணமான நிச்சயத்தைக் கொடுக்கும் அத்தாக்ஷிமுதல் சொற்பமான சம்சயத்தை மாத்திரம் பிறப்பிக்கும் அத்தாக்ஷிவரையிலுள்ள சகல வகையான அத்தாக்ஷிகளுமுண்டு. ஒரு காரியத்திற்கு அனுகூலமான அனுமானங்கள் எவ்வளவுண்டோ அவ்வளவு அதற்குப் பிரதிகூலமான அனுமானங்களும் இருக்கத்தக்கதானதால் சொற்ப அனுமானத்தைக்கொண்டே ஒரு காரியத்தை நிஜமென்று தீர்மானிக்கிறதற்குக் கூடாது. அப்படிப் பிரதிகூலமான அனுமானங்கள் யாதொன்றுமில்லாதிருந்தாலும் சொற்ப அனுமானத்தினாலே மாத்திரம் ஒன்றை அதிக நிச்சயமானதென்று தீர்மானித்துச் சொல்லவுங் கூடாது. சொற்பமான அனுமானங்களினாலே நிச்சயம் பிறக்கக்கூடாதிருந்தாலும் அந்தச் சொற்ப அனுமானங்களே பலதரம் மடித்து மடித்துத் தோன்றுமானால் நிச்சயம் பிறக்கிறதற்கிடமாகும். திருஷ்டாந்தமாக சமுத்திர ஏற்றவற்றத்தை முதல் விசையாகப் பார்க்கிற ஒருவனுக்கு அது மறுநாளும் உண்டாகுமென்று எண்ணுகிறதற்கு வெகு சொற்பமான அனுமானம் இருந்தபோதிலும் அது தினந்தோறும் உண்டாகிக்கொண்டிருக்கிறதை அநேகம் ஆண்டுகள்தோறும் சகலமான மனிதர்களும் பார்த்து வந்திருக்கிறதினாலே அது நாளைக்கும் உண்டாகுமென்பது வெகு நிச்சயமான காரியமாயிருக்கிறது.

முன்னொரு காரியத்தை நடந்திருக்கக் கண்டிருப்பதினால் அதற்கு ஒப்பாயிருக்கிற வேறொரு காரியமும் இனிமேல் நடக்கலாமென்கிற அபிப்பிராயம் மனதிலுண்டாகிறது. அப்பேர்ப்பட்ட காரியம் ஓரோர் காலத்தில் மாத்திரம் சம்பவிப்பதென்று கண்டிருந்தால் அவை இனிமேலும் சம்பவிக்குமென்று ஒரு அனுமானமும், அவை சாதாரணமாய் நடக்

கப்பட்டவையென்று கண்டிருந்தால், அவை இனிமேலும் நடக்கலாமென்று ஒரு கருத்தும், அவை எப்போதும் நடந்துகொண்டிருப்பதாகக் கண்டிருந்தால், அவை இனிமேலும் நடக்குமென்று பூரணமான நிச்சயமும் மனசிலுண்டாகிறது. இதினால் ஒரு குழந்தை இருபது வருஷம் பிழைத்திருக்குமானால் புருஷத்தத்துவத்தை அடையுமென்றும், அது சாப்பிடுகிற உணவானது அதின் பிராணனைக் காப்பாற்றுமென்றும், இந்த உணவு இத்தனை தினத்துக்கு இல்லாமல்போனால் அதின் பிராணன்போய் விடுமென்றும் நமக்குள் ஒரு எண்ணம் உண்டாகிறது. ஒரு தொழில் துறையில் பிரவேசிப்பதற்குமுன் அது சித்தியாகும் சித்தியாகமாட்டாதென்று நம்புவதும் அஞ்சுவதும், இன்ன விஷயங்களில் பிறர் இன்னின்ன பிரகாரஞ்செய்வார்களென்று யோசிப்பதும், இன்ன காரணங்களால் இன்ன காரியங்கள் உண்டாகிறதென்று துணிவுகொள்வதும் என்னத்தினாலாகிறதென்றால், நம்முடைய விஷயத்திலாவது மற்றவர்களிடத்திலாவது மேற்சொல்லிய நம்பிகைை அச்சம் யோசனை துணிவுகளைப் பிறப்பிக்கத்தக்க பல காரியங்களை நாம் முன்னால் பார்த்திருப்பதினாலே அப்பேர்ப்பட்ட காரியங்கள் பின்னும் உண்டாகும்போது, அப்பேர்ப்பட்ட நம்பிக்கை அச்சம் யோசனை துணிவுகளே நம்முடைய மனசில் உண்டாகிறது. உஷ்ண தேசத்தில் எக்காலத்தும் வாசஞ்செய்தவனாகிய ஒரு அரசன் தண்ணீரை எப்போதும் இளக்கமாயிருப்பதை மாத்திரம் பார்த்திருந்தவனாதால் ஒப்புமை நியாயத்தினாலே தண்ணீர் ஒரு காலத்தும் இறுகிக் கட்டியாகமாட்டாதென்று வாதித்தான். அதுபோலுமே அந்த ஒப்புமை நியாயத்தினாலேயே சீதள மண்டலத்திலுள்ளவர்கள் நீர் இறுகுவதற்கு எதிர் அனுமானம் ஒன்றுமில்லையென்றும், ஜனுவரி மாசத்தில் ஏதாவதொரு குறித்த தினத்தில் நீரை இறுகச்செய்யும் கெண்டைப்பனியிருந்தாலும் இருக்கலாமென்றும், அந்த மாசத்தில் எப்படியாவதொரு தினத்தில் அது இருக்குமென்பது நம்பக்கூடியதென்றும், மாரிகாலத்தில் ஏதாவதொரு தினததில் சந்தேகமில்லாமல் பனிக்கட்டி இருக்குமென்றும் எண்ணுகிறார்கள்.

அனுமான அத்தாக்ஷியின் தன்மையை யோசிக்கையில் அது மிகவும் பூரணமான உறுதியற்ற அத்தாக்ஷியாயும், குறைவான சத்துவங்களையுடைய சிருஷ்டிகளுக்கு மாத்திரம் அனுகூலப்படுகிறதாயுமிருக்கிறது. என்னத்தினாலென்றால் சர்வஞ்ஞராயிருக்கிற கடவுளுக்கு இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற திரிகாலங்களிலுமுள்ள சகல காரியங்களிலும் ஒன்று உண்மை, ஒன்று பொய்யென்று உடனே அறிந்துகொள்ளும்படியான அறிவு இருப்பதினாலே அவருக்கு அனுமான அத்தாக்ஷி யாதொன்றும் வேண்டியதில்லை. நமக்கோவெனில் அனுமான அத்தாக்ஷியை இல்லாமல் இம்மையிலுள்ள காரியங்கள் ஒன்றேனும் நடவாது. (பூரணமான அத்தாக்ஷிகளில்லாமையினாலே) ஒரு காரியத்தைத் தீர்மானிக்கிறதற்கு வருத்தமாயிருக்கிற காலங்களில் நாம் வழக்கமாய்ச் செய்கிறதெனனவென்றால் அதிகத் திரவிய செலவுக்கிடமான முயற்சிகளில் நாம் பிரவேசிக்கிறபோது நாம் கோரியிருக்கிற காரியத்திற்குப் பிரதிகூலமான காரியங்கள் மாத்திரமல்லாமல் அனுகூலமான காரியங்கள் எவ்வளவு சொற்பமாயிருந்தபோதிலும் அல்லது பிரதிகூலமான காரியங்களிருந்தும் அவைகளைப் பார்க்க அனுகூலமான காரியங்கள் எவ்வளவு சொற்பம் அதிகமாயிருந்தாலும் போதுமென்று துணிந்து நாம் கோரியிருக்கிற காரியங்களில் பிரவேசிக்கிறோம்.

ஒரு காரியஞ் சரியோ சரியல்லவோவென்று சந்தேகமுண்டாகிற



காலத்தில் அது சரிதானென்று எண்ணுவதற்கு எவ்வளவு சொற்பமாகிலும் அனுமானமிருந்தால் அதுவே போதுமென்று துணிந்து விவேகிகளும் தங்கள் சொந்தக் காரியங்களில் ஜாக்கிரதையுள்ளவர்களும் அதைச் செய்யவேண்டுமென்று தீர்மானித்துக்கொள்ளுகிறது வழக்கம். இன்ன காரியங்கள் தங்களுக்கு அனுகூலமாகுமென்று அறிந்திருக்கிற காலத்தில் மாத்திரமல்ல, அவைகளைக்குறித்து யோசிக்கையில் அவைகள் ஒருவேளை தங்களுக்கனுகூலமாய் முடியுமென்று தோன்றுகிற காலத்திலுங் கூட அவைகளை அனுசரித்து நடக்கவேண்டியது விவேகம் என்று எண்ணப்படுகிறது. அல்லாமலும் சில பாரியான காரியங்களிலுங்கூட மேலே சொன்ன அனுமானங்களைவிட லேசான அனுமானங்களிருந்தாலும், ஒரு காரியத்தை நம்பக்கூடாதென்பதற்கு எவ்வளவு நியாயங்களுண்டோ அவ்வளவு நியாயங்கள் மாத்திரம் அதை நம்பலாமென்பதற்கிருந்தபோதிலும் அல்லது அதிலுங் கொஞ்சமாக இருந்தபோதிலும் அது போதுமென்றெண்ணி நடப்பது விவேகமென்று எண்ணப்படுகிறது ஒரு காரியம் தனக்கு ஜெயமாகமாட்டாதென்று எண்ணுகிறதற்கு எவ்வளவு நியாயமுண்டோ அவ்வளவு நியாய மாத்திரம் அது ஜெயமாகுமென்று எண்ணுகிறதற்கு இருந்தபோதிலும் அல்லது தனக்கு அபஜெயமுண்டாகுமென்று எண்ணுகிறதற்கேற்ற அனுமானங்கள் அதிகப்பட்டிருந்தபோதிலும் அப்பேர்ப்பட்ட காரியத்தில் பிரவேசித்து அதை மிகுந்த முயற்சியோடே செய்யாமற்போல் அவனைப் பைத்தியகாரனென்றெண்ணப்படும் என்பதற்கு சாதாரணமாக நடந்துவருகிற பல காரியங்களைத் திருஷ்டாந்தமாகச் சொல்லலாம்.

அனுமானப் பிரமாணத்தினுடைய தன்மை, ஆதாரம், அளவு இவைகளைப்பற்றி விஸ்தாரமாய்ச் சொல்லவேண்டிய அவசியமில்லை ஒப்புமைப் பிரமாணமானது என்ன காரணத்தினால் மனிதருடைய மனதில் ஒரு அனுமானத்தையும் கருத்தையும் அதினால் பூரண நிச்சயத்தையும் உண்டாக்கிறதென்றும், இந்த ஒப்புமைப் பிரமாணத்திற்கு இயல்பாயுள்ள குற்றங்கள் இன்னவென்றும், இவ்விடத்தில் விவரிப்பது என்னுடைய நோக்கமல்ல இது முழுதும் நியாயசாஸ்திரத்திற்குரியது. அதில்முதலாய் இவைகள் விஸ்தாரமாய் விஸ்தரிக்கப்படவில்லை. இந்த ஒப்புமைப் பிரமாணத்தின அளவையும் தன்மையையும் பெலனையும் எடுத்து அத்தியாயங்களாய்ப் பிரித்து ஒரு நூலாகத் திரட்டுவது கூடுமோ கூடாதோ எனறு சொல்வதும் இயலாது.

மனோதர்மங்களையும் அவைகளின் செய்கைகளையும் பற்றி நூலாசிரியர் இந்தச் சம்பந்தமாக விரிவாக எழுதாமலிருந்தபோதிலும் ஒரு காரியத்தைத் தீர்மானிக்கிறதற்கும், தீர்மானித்து நடக்கிறதற்கும் ஒப்புமைப் பிரமாணமானது பலவகையில் அதிக உபயோகமானதும் பலமானதுமாயிருக்கிறதென்று நாம் நிச்சயித்துக்கொள்வதற்கு இது தடையாகமாட்டாது. தர்க்கமே தொழிலாயிருக்கிறவர்களும், ஒரு காரியததை விவரித்துச் சொல்வதற்கு நமக்குள்ள சக்தி அளவுக்குத்தக்கதாய் ஒரு காரியதை விவரித்தாலும் அதிலும் தெளிவான விபரம் வேண்டுமென்பவர்களும் ஒப்புமைப் பிரமாணம் இவ்வளவுதூரம் பலமுள்ளதோ பலமற்றதோவென்று நிச்சயிக்கக்கூடாத சில திருஷ்டாந்தங்களையும், ஒப்புமைப் பிரமாணம்போல தோன்றியும் ஒப்புமைப் பிரமாணத்திற்குரிய பலம் சற்றேனுமில்லாத சில திருஷ்டாந்தங்களையும் எடுத்துக் கூறினுங் கூறலாம். குதர்க்கத்தினால் இப்படியெல்லாஞ் சொல்லலாமென்றாலும் இந்த ஒப்புமைப் பிரமாணத்தினா

லுண்டாகிற நியாயமானது இயல்பான நியாயமாயும் சரிநியாயமாயும் துணிவுபெறத்தக்க நியாயமாயுமிருக்கிறது. என்னத்தினாலென்றால் நாளையத்தினம் சூரியன் உதயமாகுமென்றும் அது உதித்தால் விர்த்தவடிவாய்த் தோன்றுமேயன்றி சதுரவடிவாய்த் தோன்றாதென்றும் சொல்லும்போது யாராவது அதை ஆக்ஷேபிக்கிறவர்களுண்டா?

## பாபிலோன் சிறையிருப்பு.

*அனுபந்தம்.*

கி. பி முன் 747-ல் அசூரியா இராஜ்யம் நிலைத்து 1300-க்குபின் அதின் கடைசி இராஜாவாகிய சருதனபாலு மரித்தவுடனே இராஜ்யம் இரண்டாகப் பிரிந்துபோயிற்று. (பாபிலோன் இராஜ்யம் அசூரியா இராஜ்யம்) பாபிலோன் இராஜ்யத்துக்கு கடைசியாய் கவர்னராயிருந்த பெலிசிஸ் என்பவன் பாபிலோன் கல்தேயா அராபியா நாடுகளை ஆண்டான். மேதியாவின் கவர்னராகிய அர்பாசிஸ், நினிவே, மேதியா முதலிய வட நாடுகளை ஆண்டான். இவன் வேதாகமத்தில் திக்லாத் பிலேசர் என்னப்படுகிறான. 2 நாளா. 15: 29. 16: 7, 10. பெலிசிஸ் என்பவன் நாபோநாசர் என்னப்படுகிறான். வேதாகமத்திலோ பாலாதான் என்று அழைக்கப்படுகிறான். யூதஇராஜாவாகிய எசேக்கியாவுக்கு ஸ்தானாபதிகள் அனுப்பின பாபிலோன் இராஜாவாகிய மெரோதாக் பாலாதான் என்பவனுக்கு அவன் தகப்பனாம். (எசா. 39: 1.) தேவன் தமது ஜனங்களின் பாவங்களினிமித்தம் அவர்களைத் தண்டிக்கும்படிக்கு சவுக்குகளாயிருக்கும்படி எழுப்பியிருக்கிறார்.

கி. பி. முன் 742-ல் திகலாத் பிலேசராண்ட 6-ம் வருஷத்தில் அக்கிரமமும் அவபக்தியும் நிறைந்த ஆகாஸ் இராஜாவைத் தண்டிக்கும்படி சூரியாவின் இராஜாவாகிய ரேத்சீனையும், இஸ்ரவேலின் இராஜாவாகிய பெக்காவையும் தேவன் எழுப்பினபோது, (2 நாளா. 28. 2 இரா. 16.) இவர்கள் எருசலேம் பட்டணத்தைப் பிடித்து, தாவீதின் வம்சத்தை அழித்து தபியேலின் குமாரனை யூதேயாவில் இராஜாவாக்கும்படி யோசித்து வருகையில் (எசா. 7-அதி.) தேவன் எசாயா தீர்க்கதரிசியைக் கொண்டு, அந்தப் பொல்லாத இராஜாவுக்கு 2-விசேஷித்த அடையாளத்தைக் காட்டி (எசா. 8-அதி. எசா 7: 14.) அந்த 2-இராஜாக்களும் வெறுமையாய்த் திரும்பிப்போகச் செய்தார். ஆகாஸ் இராஜா இந்தப் பெரிய தயவைக் கண்டும், அவன் குணப்படாமல் தன் விக்கிரகாராதனையில் நிலைத்திருந்தான். (2 நாளா. 28: 2-5) இதினால் மூந்தின 2-இராஜாக்களும், 3-சேனைகளாக வந்து (2 இரா. 16-அதி.) ரேத்சீன் அநேக கொள்ளைப்பொருள்களையும், சிறைகளையும் தமஸ்குவுக்குக் கொண்டுபோனான். பெக்கா யுத்தஞ்செய்து 120,000-பேரைச் சங்கரித்து, சிக்ரி என்பவன் எருசலேமைப் பிடித்து இராஜாவின் மகனையும், பிரபுக்களையுங் கொன்று, திரளான கொள்ளைப்பொருளைச் சேர்த்தும், 200,000-பேரைச் சிறைபிடித்தும் போனார்கள். இந்தச் சிறைகள் திரும்பவும் தங்கள் தேசத்துக்கு வந்துவிடும்படி தேவன் கிருபைசெய்தார். மறுபடியும் யூதேயா தேசம் ஏதோமியராலும் பெலிஸ்தராலும் பலமாய் ஒடுக்கப்பட்டது.



இப்படியிருந்தும், ஆகாஸ் இராஜா குணப்படாமல் தன் இருதயத்தைக் கடினப்படுத்திக்கொண்டான். இவன் துன்பகாலத்தில் தேவனைத் தேடாமல் மனித சகாயத்தைத் தேடினான். தேவாலயத்திலுள்ள பொன்னையும், வெள்ளியையுமெடுத்து அசூரின் இராஜாவாகிய திகலாத் பிலேசருக்கு அனுப்பி தன் சத்துருக்களை அடக்கும்படி தனக்கு உதவிசெய்ய வரவேணுமென்று கேட்டான். அவனோ சீரியாவையும், பலஸ்தீனாவையும் தன் இராஜ்யத்தோடே சேர்த்துக்கொள்ள இதுதான் சமையமென்று சேனையோடே புறப்பட்டு, 10-தலைமுறைகளாய் நிலைத்த சூரியா இராஜ்யத்தை தன் வசமாக்கி, (1 இரா. 23: 25.) ரேத்சீனைக் கொன்றுபோட்டான்.

பின்பு தெற்கே வந்து யோர்தானுக்கப்பாலுள்ள இஸ்ரவேலுக்குச் சம்பந்தமான எல்லாப் பட்டணங்களையும் கலிலேயா நாட்டையும் பிடித்துக்கொண்டான். திக்லாத் பிலேசர் ஆகாஸ் தனக்கு இன்னும் அதிகப் பணம் கொடுக்கும்படி நோக்கமாய் எருசலேமுக்கு நேராகப் போனபோது ஆகாஸ் தேவாலயத்திலுள்ள பாத்திரங்களை வெட்டி உருக்கிக்கொடுக்கவே அவன் தமஸ்குவுக்குப் போய்விட்டான். ஆகாசு முன்னிலும் அதிகமாய் நெருக்கப்பட்டான். (2 இரா. 16. 2 நாளா. 28 ) இதெல்லாம் இஸ்ரவேலுக்கும் யூதாவுக்கும் அழிவுண்டாகும்படி சம்பவித்தன இதினால் யூதேயா இராஜ்யத்துக்குரிய ஆஸ்தி வருமானத்துக்குரிய தென் திசையிலுள்ள கப்பல் வியாபாரமும் நின்றுபோயின.

### இஸ்ரவேல் இராஜ்யம் (3) தடவையாய் அசூரியா இராஜாக்களால் சிறைப்பட்டுப்போனது

முதலாவது கி. பி. முன் 740-ல் திக்லாத் பிலேசர் இஸ்ரவேலின் இராஜாவாகிய பெக்காவின் காலத்திலே வந்து அநேகம் ஜனங்களைச் சிறைபிடித்து அவர்களை மேதியர் தேசமாகிய ஏலா, ஆபோர், ஆரா என்ற தூரமான தேசங்களுக்குக் கொண்டுபோய்க் குடியேற்றுவித்தான 2 இரா. 16: 9. 1 நாளா. 5: 26 இந்தவகையாய் ஆமோஸ் சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. ஆமோ 5: 26, 27. ஸ்தேவான் இந்தத் தீர்க்கதரிசனத்தை எடுத்துச் சொல்லும்போது (அப், 7: 43.) பாபிலோனுக்கு அப்பாலென்கிறார். இதினால் மேதியா தேசம் அசூரியாவின் இராஜ்யத்துக்குள் அடக்கமென்று தெளிவாய்த் தோன்றுகிறது. இஸ்ரவேலின் இராஜாவாகிய பெக்கா தன் இராஜ்யத்தின் வடபாகம், கீழ்பாகம் இழந்தபின் எப்பிராயீம், மனாசே கோத்திரங்கள் மாத்திரம் மீதியாயிருந்தபடியால் ஜனங்கள் அவனை இகழ்ந்து நிந்தித்து பந்துக்கட்டுச்செய்து, ஏலாவின் மகன் ஓசேயா அவனைக் கொன்றுபோட்டான். 2 இரா. 15: 30. பெக்கா 20-வருஷம் ஆண்டபின் இஸ்ரவேலில் ஓசேயா இராஜாவாகும்வரையும் (௯) வருஷமாய் இராஜாவேயில்லை, குடிகள் ஆண்டார்கள். இதினால் (எசா 7: 16-ல்) சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. திக்லாத் பிலேசர் ஆண்ட 19-வருஷத்துக்குப்பின் அவன் குமாரனாகிய சல்மனேசர், தோபியாவின் ஆகமத்தில் எனிமேசர், ஓசேயா தீர்க்கதரிசனத்தில் (10: 14-) சால்மோன் என்றழைக்கப்பட்டவன் சூரியா சமாரியாவுக்கு வந்து ஓசேயாவை இஸ்ரவேலில் இராஜாவாக்கி, தனக்குள் கப்பங்கட்டும்படி நியமித்துப்போனான். (2 இரா. 17.) அச்சமையத்தில் பேத்தேலிலுள்ள கன்றுக்குட்டி விக்கிரகத்தை எடுத்துப்போனான். தாணில் வைக்கப்பட்டதை 10-வரு

ஷத்துக்குமுன் திக்லாத் பிலேசர் கொண்டுபோனான். இதினால் இஸ்ரவேலர் வணங்கும்படி அவர்களுக்கு ஒன்றும் அகவில்லாததால் மெய்த்தேவனை ஆராதிக்கும்படி எருசலேமுக்குப் போனார்கள். ஓசியாவும் தடுக்கவில்லை எசேக்கியா இராஜா பஸ்காவை ஆசரிக்கும்படி இஸ்ரவேலரை அழைத்தபோது எல்லாரும் சந்தோஷமாய் வந்தார்கள். (2 நாளா 30: 10—18.) இஸ்ரவேலை ஆண்ட இராஜாக்களில் இந்தக் கடைசி இராஜாவே மார்க்க விஷயத்தில் நல்லவனென்கலாம். சகலவித விக்கிரகாராதனையையும் அழிக்கும்படி பார்த்திருந்தான். (2 நாளா. 31: 1. 27: 2)

II. இரண்டாம் சிறையிருப்பு கி. பி. முன 721. எசேக்கியா இராஜாவின் 4-ம் வருஷத்தில் இஸ்ரவேலின் இராஜாவாகிய ஓசேயா எகிப்தின் இராஜாவாகிய சபாக்கோன அல்லது சோ என்றவனைச் சார்ந்து அசூரின் இராஜாவுக்குக் கப்பங்கொடாதபடியால் சல்மனேசர் சமாரியாவை (3) வருஷம் முற்றிக்கைபோட்டு பட்டணத்தைப் பிடித்து ஓசேயாவை விலங்குமாட்டி ஜனங்களைச் சிறையாக்கி, தகப்பன் குடியேற்றின தூரமான இடங்களுக்கு அனுப்பிவிட்டான். (2 இரா 18.) இந்தச் சமையத்தில்தான் திஸ்பி பட்டணத்தானாகிய தோபித் தன் மனைவி அன்னாளோடும் தன் மகன் தோபியாசோடும் அசூரியாவுக்குச் சிறைப்பட்டுப்போய் சல்மனேசர் என்ற இராஜாவுக்கு (Purveyor) உக்கிராணக்காரனானான். சல்மனேசர் 14-வருஷம் ஆண்டபின் அவன் மகன் சனகெரிப் (8) வருஷம் ஆண்டான். எசா. 20: 1-ல் சாரகோன் எனப்பட்டவன் இவனே. எசேக்கியா இராஜாவின் தகப்பன் ஆகாஸ், திக்லாத் பிலேசருக்குக் கொடுத்த கப்பத்தைக் கொடுக்காதபோது யுத்தத்துக்கு வந்த விபரம். எசா. 36: 38-பார். 2 இரா. 18. 2 நாளா. 32-முதல் பார். இக்காலத்தில் சனகெரிப்புக்குப் பயந்து, மெரோடாக் பாலாதான் என்ற பாபிலோன் இராஜா தானாபதிகளை அனுப்பி எசேக்கியாவோடே சமாதான உடன்படிக்கைசெய்து கொண்டான். அப்போது எசேக்கியா இராஜா தன் அரண்மனைகளிலுள்ள எல்லாப் பொருட்களையும் பெருமையினால் அவர்களுக்குக் காண்பித்தபோது எசாயா தீர்க்கதரிசி அவன் குடும்பம் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போகுமென்றார். (எசா. 39 2 இரா. 2.0)

III. இஸ்ரவேலருடைய மூன்றாம் சிறையிருப்பு. கி. பி. முன் 677-ல் மனாசேயின் 22-ம் வருஷத்தில் நடந்தது. எசர்காதோன் பாபிலோனில் இராஜாவில்லாமையால் அதையும் சேர்த்துக்கொண்டு, சமாரியாவுக்கு வந்து மீதியான இஸ்ரவேலரைச் சிறைபிடித்துப்போனான். 2 இரா. 17: 24. சமாரியா பாழாய்ப் போகாதபடிக்கு பாபிலோன், கூத்தா, ஆவா, ஆமாத், செபர்வாயீம் பட்டணங்களிலிருந்து ஜனங்களை அங்கே குடியேற்றுவித்தான். எஸ்றா. 4: 2. இந்த எசர்காதோனே ஆஸ்நாப்பார் என்னப்படுகிறான். யூத இராஜாவாகிய மனாசே செய்த அக்கிரமங்களினிமித்தம் பாபிலோனுக்கு விலங்கிடப்பட்டு சிறுமையடையவும் தேவன் அவனைக் கைவிட்டார்.

இஸ்ரவேல் இராஜ்யம் எப்படி (3) தடவையாகச் சிறைப்பட்டுப் போனதோ, யூதா இராஜ்யமும் அப்படியே (3) தடவையாகச் சிறைப்பட்டுப்போனது. யூதர்கள் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போகு முன்னமே யூதர்கள் தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பும்படி எச்சரிக்கப்பட்டார்கள். எரேமி. 1: 2. 25: 3. யோசியாவின் 18-ம் வருஷத்தில் பிரதான ஆசாரியனாகிய இல்க்கியா மோசேயின் நியாயப்பிரமாணப் பிரதியை எடுத்து இராஜாவிடத்தில் காண்பித்து, உபா. 28-அதிகாரத்தின் சா



பங்களை வாசித்தபோது எல்லாரும் பயந்து, தீர்க்கதரிசியாகிய உல்தாளிடத்தில் விசாரித்தபோது (2 நாளா. 34: 22—28.) சகல பாவங்களும் இந்த ஸ்தலத்தின்மேலும், குடிகள்மேலும் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் உரைத்ததாகச் சொல்லப்பட்டுமிருக்கிறது. எகிப்தியர் அசூரியாவுக்கு வராதபடி காக்கத்தக்கதாக பாபிலோன் இராஜா இஸ்ரவேல் தேசமுழுவதையும் யோசியாவுக்குக் கொடுத்திருப்பான். ஆதலால் பார்வோன் நேகோ அத்தேசவழியாய் கர்கேமேசுக்குப் போகையில் யோசியா எதிர்கொண்டுபோய் யுத்தஞ்செய்து மெகிதோவில் செத்தான். (2 நாளா. 35.) இந்த நல்ல இராஜா இறந்துபோனதால் தேசத்துக்கு அழிவும் துன்பமும் நேரிடுமென்று எரேமியா முன்னறிந்தும் புலம்பல் பாடினார். (2 நாளா. 35: 25) எருசலேமின் அழிவின்பேரிலும் புலம்பல் பாடியிருப்பதுபோல இதற்கும் பாட்டுண்டு. யோசியா மரித்தபின்பு ஜனங்கள் அவனுடைய மகன் யோவாகாசை இராஜாவாக்கினார்கள். (2 நாளா. 36: 1.) இவனுக்கு வேறே பேர் ஷல்லும்; இவன் மிகவும் பொல்லாதவன். (3) மாசத்துக்குப்பின் பார்வோன் நேகோ ஐப்பிராத் நதியண்டையில் பாபிலோனியரைத் துரத்தி, அரணான கர்க்கேமிஸ் பட்டணத்தைப் பிடித்து திரும்பவருகையில் தன் சம்மதமில்லாமல் இராஜாவானதால் அவனை சீரியாவிலுள்ள ரிப்லாவுக்கு வரச்செய்து அவனை விலங்கிட்டு, எகிப்துக்குச் சிறையாகக் கொண்டுபோனான். அங்கே அவன் செத்தான்.

நேகோ எருசலேமுக்கு வந்து கி. பி. முன் 610-ல் யோசியாவின் 2-ம் குமாரனாகிய யோயாக்கீமை எலியாக்கீமென்று பேரிட்டு, இராஜாவாக்கி, 100-தாலந்து வெள்ளியும் 1-தாலந்து பொன்னுங் கொடுக்கும்படி திட்டஞ்செய்துபோனான்.

யோசியா இராஜாவின் காலத்திலே யூதர்கள் தங்கள் பாவங்களைவிட்டு மனந்திரும்பும்படி முன்னற பல தீர்க்கதரிசிகளால் எச்சரிக்கப்பட்டார்கள். யோயாக்கீம் பலவகையான அருவருப்புகளைச் செய்துவந்தபோதும் எரேமியா இராச அரண்மனைக்குப்போய் அவர்களுக்கு வரப்போகிற ஆக்கினையைப்பற்றியும், (எரேமி. 22) தேவாலயத்துக்குப் போய் அங்கேயிருக்கிற சகல ஜனங்களுக்கும் அவர்கள் மனந்திரும்பாவிட்டால் அவர்களுக்கு வரும் அழிவைப்பற்றியும் (எரேமி. 26.) முன்னறத் தீர்க்கதரிசனம் உரைத்தார். இதினால் ஆசாரியருக்குக் கோபமாகி அவரைப் பிடித்து, அவரைக் கொலைசெய்யும்படி இராஜனுடைய ஆலோசனை சங்கத்தாரிடத்தில் கொண்டுவந்தார்கள். பிரபுக்களில் ஒருவனாகிய அகீக்காம் எரேமியா கொலைசெய்யாதபடி அவனுக்குச் சகாயமாயிருந்தான். (எரேமி. 26: 24.) இந்த அகீக்காம் மீதியான யூதரின்மேல் அதிகாரியாக வைக்கப்பட்ட கெதலியாவின் தகப்பனும். 2 இரா. 25: 22 இந்த அகீக்காம், வேதபாரகனும் யோசியா அரசனுக்கு பிரதான மந்திரியும், சம்பிரதியுமாகிய (2 இரா. 22: 10.) சாப்பானுடைய மகன். இந்த அகீக்காம் அக்காலத்தில் பேர்பெற்ற பிரபுக்களாகிய செமரியா (எரேமித 36: 10.) எலியேசர், (எரே 29: 3) சனகிரிம் சங்கத்துக்குத் தலைவனாகிய யாசனியா (எசே. 8: 11) என்பவர்களுக்குச் சகோதரனும். ஆகையினாலேதான் தீர்க்கதரிசியைக் காப்பாற்றத்தக்க வல்லவரானார்.

இந்தக் காலத்திலேதான் கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய உரியாவும் எரேமியாவின் வார்த்தைகளுக்குச் சரியாக இந்த நகரத்துக்கும் இந்த தேசத்துக்கும் விரோதமாக தீர்க்கதரிசனம் சொன்னான். எரேமி. 26: 20-24. யோயாக்கீம் இராஜா அவனைக் கொன்றுபோட எத்தனித்தபோது எகிப்

துக்கு ஓடிப்போனான். அவனை எகிப்துக்கு ஆள்விட்டுக் கொண்டுவந்து பட்டயத்தால் கொன்றுபோட்டான். இதுவும் இராஜனுடைய அக்கிரமத்தின் பெருக்கத்துக்கும் அவன்மேல் வந்த தேவகோபத்துக்கும் திருஷ்டாந்தம்.

இந்தக் காலத்திலேதான் எரேமியாவைப்போல ஆபகூக், செப்பனியா என்ற தீர்க்கதரிசிகளும் எருசலேமின் அழிவைப்பற்றி தீர்க்கதரிசனமுரைத்திருக்கிறார்கள். ஆப. 1: 1—11. செப்பனியா 1: 1—18. யூதர்கள்மேல் தேவகோபத்தை வருவித்த கல்தேயரைப்பற்றி ஆபகூக் சொல்வதுபோல (1: 5.) செப்பனியா கல்தேயரைப்பற்றி ஒன்றுஞ் சொல்லவில்லை. இவன் யோசியாவின் காலத்தில் தீர்க்கதரிசனமுரைத்ததாகச் சொல்லியிருக்கிறது (செப். 1: 1.) அவனுடைய தகப்பனின் பாட்டன் எசேக்கியாவென்றிருப்பதால், இராஜ வம்சமாயிருக்கலாம்.

யோயாக்கீம் அரசாண்ட 3-ம வருஷத்திலே பாபிலோனின் இராஜாவாகிய நாபோபொலாசார் எனபவன் எகிப்தின் இராஜாவாகிய பார்வோன் நேகோ, கார்கேமிஸ் கோட்டையைப் பிடித்ததும், சூரியா பலஸ்தீனா கலகஞ்செய்ததையும் அறிந்து, தான் விருத்தாப்பியமும் பெலவீனனுமாயிருக்கிறதால் தன்னோடே தன் மகன் நேபுகாத்நேச்சாரும் அவிடங்களில் போய் யுத்தஞ்செய்யத் திட்டம்பண்ணினான். இந்தக் காலமுதல் தான் நேபுகாத்நேச்சாரின் ஆளுகை துவக்குகிறதாக யூதர் கணக்கிடுகிறார்கள். தானி 1: 1. இதற்கு 2-வருஷத்துக்குப்பின் தகப்பன் மரித்துப்போனதால் அதற்குப்பின்புதான் அவனுடைய ஆளுகையின் துவக்கமென்று பாபிலோனியர் கணக்கிடுகிறார்கள் இந்தக்காலம் யூதாவின் இராஜாவாகிய யோயாக்கீமின் 3-ம் வருஷம் அந்தமாயும் 4-ம் வருஷத்தின் துவக்கமாயுமிருக்கிறது. எரேமி. 25: 1. இது எரேமியா தீர்க்கதரிசி தமது வேலையைத் துடங்கின 23 ம் வருஷமாம இவர் யோசியாவின் 13-ம் வருஷத்தில் தீர்க்கதரிசனமுரைத்தவர்.

## கேள்விகள்.

1. பாபிலோன் சிறையிருப்புக்குமுன் அதைப்பற்றித் தீர்க்கதரிசனமுரைத்தவர்களார்? எப்படி?

2. பாபிலோனியர், கல்தேயர், அசூரியர் இவர்களார்?

3. பாபிலோன் சிறையிருப்பு சமபவிக்க நேரிட்ட முகாந்தரங்களென்ன?

4. இஸ்ரவேல் இராஜ்யத்தார் யாரால் எத்தனை தடவையாய் எங்கே சிறைப்பட்டுப்போனார்கள்.

5. எசேக்கியா, யோசியா இராஜாக்கள் காலத்தில் எருசலேமின் அழிவைப்பற்றி தீர்க்கதரிசனமுரைக்கப்பட்டதா? அவர்கள் காலத்தில் ஏன் சிறையிருப்பு வரவில்லை.



# இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

இற்றுக உச்சி தொடுத்தேழரை யென்னுநாழி
முற்றுக முயங்கிய வல்லிருள் முற்றுமெல்லை
எற்றேகை விடுத்தனி ரெனனையென் தேவனேயென்
றுற்றாருட் டாதையை நோக்கியோ ரோலமிட்டார். 1246

எவ்வாறு நம்மான் திருவுள்ள மினைந்ததேயோ
எவ்வாறு தூய திருமேனி யினைந்ததேயோ
எவ்வாறு தந்தை யிதயஞ்சகித் திட்டதேயோ
எவ்வாறென வுள்ளுவல் விள்ளுவல் ஏழையானே. 1247

செற்றாரெலி யாவை விளித்தனன் ஜீவரக்ஷை
பெற்றார்வது காண்டுதுமென்று பிதற்றிநிற்க
வற்றாவருள் வாரிதி தாக மரீஇயதென்னச்
சொற்றார் சுருதி மொழிமுன்னுறச் சொற்றவாறே. 1248

எல்லா உலகும் உடையார்பொருள் யாவுமுள்ளார்
தொல்லாதி மூலப் பரஞ்சோதியர் தோற்றநாசம்
ஈல்லார் ஒரு தாகமநாதிதொட் டெய்தலாலே
கொல்லாது விடாதவோர் தாகமுங் கொண்டிரந்தார். 1249

காதற் றொருவன் கடலாம்பியைக் காடிதோய்த்தே
ஓதற்ற ஈசோப் பெனுங்கோல்கொ டுயர்த்திநீட்டிக்
கோதற் றிலாத குமரேசனுக் குக்கொடுத்தான்
மாதுக்க துக்கம் ஜலப்பஞ்சமும் வந்திவற்கே. 1250

பல்லாயிர கோடிய ஜீவரைப் பாவபந்தத்
தல்லார்சிறை மீட்டவர்க் கோர்மிட றாரவுண்ணீர்
இல்லா திறுங்காற் புளிங்காடி யியைந்த தந்தோ
எல்லேமுக் காக மடிவார்க்குல கீயுநன்றே. 1251

மருவா ரளித்த புளிங்காடியை வாங்கியன்பின்
உருவாய்ந்தவர் யாவு முடிந்ததென் றுய்த்தியம்பி
ஒருவாத எந்தாய் உயிர்நல்கினன் உங்கையென்றுத்
திருவாய் மலர்ந்து தலைசாய்த்தனர் ஜீவன்விட்டார். 1252

வேறு.

ஜீவாதி பதியேக திரித்துவத்தி லொன்றான தேவமைந்தன்
தாவாத கருணையினாற் பேரன்பு மயமான தனுக்கொண் டண்டி
மூவாத முதனீதி இரக்கசம ரசம்புரிவான் முதுநீர் வையம்
சாவாத படிதானே பலியாகி ஜீவன்விட்ட தகைமை பாராய். 1253

ஆந்ததங்கற் பனைமீறிச் சண்டாள ராகிநன்றி தனையெண்ணுமல் (சாய்
புந்தியற்றுக் கொடுங்கூளிக் கடித்தொழும்பு புரிந்தொழுகும் பொல்லாருக்

அந்தரியா மிப்பொருளாய் அகிலாண்ட கோடிகளை யாட்டுவிக்கும்
விந்தையுளார் மனுவாகி உயிர்விடுத்தவிந்தையைப்போல் விந்தையுண்டோ.

தனக்குலவாப் பெரும்பேறு தரவந்து விழிக்கெதிரோ சான்றுகாட்டி
மனக்கினிய உபதேசம் வகுத்தசரு வேசனொரு மைந்தன் றன்னைப்
பணிக்கவதைத் துயிர்கவர்ந்த பாருலகைத் தகிக்காமல் பரமதாதை
சினக்கனலை யவித்தெழுந்த ஜீவகாருணிய நிலைதேறற் பாற்றே. 1255

வேறு.

அலகிலாப் பரமநீதி யாயதென் னெண்ண மென்று
இலகுவா னுறையிற் சேர்த்தி யெரிந்தெழு கோப மாறி
உலகினுக் கொருவ ராகி உத்தரித் ததனை யுள்ளிக்
குலவியே தாதை பக்கல் குதுகலித் திருந்ததம்மா. 1256

பரமகா ருணியம் பொங்கிப் பலித்ததென் னெண்ணமென்று
பரமனே கரனா வாழ்த்தி வாழ்த்தி நாத்தழுதழுப்ப
உரமிலா ஆன்மகோடி உய்ந்தமை யுள்ளி யுள்ளித்
தரமிலா துவகை யோங்கத் தாதைபாற் சிறந்த தன்றே. 1257

வேறு.

ஜீவனை யிழந்தவிச் செகத்துக் கீறிலா
ஜீவன்வந் தியையவுஞ் செறித்த நித்திய
ஜீவவா யிலுக்கொரு திறப்புண் டாக்கவும்
ஜீவனின் அதிபதி ஜீவன் விட்டனர். 1258

கோழையிப் பியைமணி குறித்துக் கூட்டுதற்
காழிநீர் குளித்துழூச் சடக்கு மாக்கள்போல்
ஏழைநரான்மகோ டிகளை யீட்டுதற்
கூழியான் மரணத்துள் ளொடுங்கி னாரோ. 1259

கண்ணிய அன்பினாற் கட்டுண் டோங்கிய
தண்ணளிச் சலதியில் முழுகித் தாழ்வுறீஇ
உண்ணிகழ் பொறையினா லுயிர்ப் பொடுங்கினார்
புண்ணிய மூலகெலாம் பொலியத் தோன்றினார். 1260

முடிந்தது சஞ்சல முடிந்தபாடுகள்
முடிந்தது வறுமைநோய் முடிந்த சிந்தனை
முடிந்தது தீர்க்கர்சொல் முடிந்த முன்குறி
முடிந்தது கருதிய கரும முற்றுமே. 1261

முடிந்தது பாவவி மோசனப் பலி
முடிந்தது பழமறைச் சடங்கு முற்றிலும்
முடிந்தது குவலயத் திரக்ஷை மொய்ம்புற
முடிந்தது ஜீவிய முழுது மென்பவே. 1262

இத்தகு வனவெலாம் பொருந்த ஈறிலா
மூத்தனார் முடித்தலில் முடிந்த தென்றொரு
வித்தக வாய்மொழி விளம்பித் தாமுடை
அத்தனுக் காவியை அளித்த வொல்லையே. 1263

கிழிந்ததா லயத்திரை யிரண்டு கீற்றவாய்க்
கிழிந்த தாசாரியர் கேசூழுளம்



கிழிந்தது முதுமறைக் கிரியைச் சாஸனம்
கிழிந்தது தூடணங் கிளந்த வாயெலாம். 1264

அதிர்ந்தது கிடுகிடென் றூழிசூழ் புவி
அதிர்ந்தது பாதலத் தரச னுளகை
அதிர்ந்தது கிறுகிறுத் தநீத மன்றலை
அதிர்ந்தது புறமதத் தஸ்தி வாரமே. 1265

பிளந்தது வயின்றொறும் பெரு மலைக்குலம்
பிளந்தது வஞ்சகப் பிசாச னெஞ்சுரம்
பிளந்தது சந்நிதி மறைத்த பித்திகை
பிளந்தது தீவிடம் பிறங்கு பைத்தலை. 1266

திறந்தது தூயவர் சேம வைப்பிடம்
திறந்தது கதிக்குறு ஜீவ வாயிலும்
திறந்தது கருணையின் திருவிழிக் கடை
திறந்தது செறுத்துள ஜீவ வூற்றரோ. 1267

நற்சுதந் தரநமக் கருள நாயகன்
தற்சுதந் தரவுயிர் விடுத்த தன்மையைக்
கற்சுதந் தரமுறு கடின நெஞ்சுடை
அற்சுதந் தரரறிந் தகங் கலங்கினார். 1268

நிகழ்ந்த சம்பவங்கள் காக்குநர்தம் நெஞ்சினை
அகழ்ந்திட அஞ்சிமெய் யாக மற்றிவர்
இகழ்ந்திடற் பாலரோ ஈச னோர்சுதன்
புகழ்ந்து போற்றிடத்தகும் புனிதரா மென்றார். 1269

நோக்குநின் றவரொலாந் துயரக் காட்சியோ
டக்கணத் தசம்பவ மாய யாவையும்
சிக்கறத் தெரிந்துநெட் டுயிர்த்துத் தேம்பியே
துக்கமுற் றழுதுளந் துளங்கி யேகினார். 1270

கிழிபடு மிதயத்துக் கெழீஇய நண்பினர்
வழிபடு கலிலெய மாதர் மற்றுளார்
விழிபுனல் சொரிதர வெதும்பிச் சேய்மையிற்
கழிதுய ரொடுமனங் கவன்று நின்றனர். 1271

ஞானமா கியவொரு நாதன் தாங்கிய
மானவ தேகத்தை வரைந்திட் டாவியை
வானநா யகன்கரம் வழங்கக் கண்ணுறீஇத்
தானமும் வானமும் தழங்கும் வேலைவாய். 1272

கொற்றவ னுத்தரங் கொண்டு யூதர்கள்
சொற்றவா றுயவண் துதைந்த சேவகர்
குற்றுயிர்ச் சோரரைக் குறுகித் தொன்முறை
தெற்றெனக் கான்முறித் துயிரைச் சிந்தினார். 1273

அன்பினோர் வடிவத்தை ஆவி நீத்தலில்
என்பினை முறித்தில ரெனினும் ஈட்டியால்
வன்புறத் திருவிலா மருங்கு குத்தினான்
கொன்பயி லொருமறக் கொடுங்க ணனனே. 1274

அனந்தரம் உலகினுக் கருளி யாண்டகை
தினந்தரு மான்மசஞ் சீவி யேயென
வனந்தரு திருவுடல் வடுப்பட் டவ்வழிக்
கனந்தரு குருதியு நீருங் கான்றதால். 1275

பாவவெங் கோடையிற் பாடண் டெஞ்சிய
தாவரு மாத்துமப் பயிர் தழைத்திட
பூவரு புண்ணியப் பொருப்பி னோர்புடை
ஜீவநீ ரூற்றுக்கள் திறந்த தென்பவே. 1276

ஓர்ந்திடாப் பத்தனோ ரடியில் ஒண் சிலை
ஆர்ந்தநன் னீர்சுரந் தளித்த வாறுபோல்
கூர்ந்த ஈட்டியின்வழி குருதி கோத்தநீர்
ஆர்ந்ததிவ் வாக்கைநின றவளி யுய்யவே. 1277

முடிவன யாவையு முடிய நோக்குறு
நெடிதுயிர்த் திரங்கியுன் ளழிந்து நின்றவோர்
அடியன்யோ சேப்புமம் மாண்டை யாளுகை
படிமிசை வரவெதிர் பார்த்திருப்பவன். 1278

மிக்கசம் பத்துளான் யூத வேதியர்
தொக்கசங் கத்தினோர் தலைமைச் சூழ்ச்சியான்
புக்கனன் அரசிடம் புனித யாக்கையென்
பக்கலிற் றருகெனப் பரிந்து வேண்டினன். 1279

தீகிலுடை மன்னவன் தீரத் தேர்ந்துபின்
அகிலலோ கேஸ்வரன் அருளி யாக்கையை
இகலில்யோ சேப்பினுக் கீந்து நீயினித்
தகுமுறை யியற்றுதி சமாதி பேயெனறான். 1280

(இன்னும் வரும்.)

---

## பிரசங்கக் குறிப்பு.

"ஏசுக்கிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரையே யன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்." 1 கொரி. 2: 2.

---

பவுல் அப்போஸ்தலனுடைய பிரசங்கம் தெளிவானதாயிருந்தது. முதலாம் வசனத்திற் சொல்லியபடி "தேவனைப்பற்றிய சாக்ஷியை சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கவில்லை." ஏனெனில் அது அவருடைய தீர்மானம். அவர் அப்படியே தீர்மானஞ்செய்துகொண்டார். (பிரசங்க வாக்கியம்.)

பவுலப்போஸ்தலன் யோசனையில்லாமல் இத்தீர்மானம்செய்யவில்லை. மற்ற அறிவுக்கும் கிறிஸ்துவைப்பற்றிய அறிவுக்கும் இருக்கிற தாரதம்மியங்களை நன்றாய்ச் சீர்தூக்கிப் பார்த்ததின்பேரில்தான் இந்தத் தீர்மானம் செய்திருக்கிறார்.



அவருடைய பிரசங்கம் ஏசுக்கிறிஸ்து. பரிசுத்தாவியானவரால் அவருடைய கண்கள் திறக்கப்பட்டபிற்பாடு அவர் படித்ததும் மற்றவர்களுக்குப் போதித்ததும் ஏசுக்கிறிஸ்து. அவருடைய காலக்ஷேபம் யாவும் ஏசுக்கிறிஸ்து. எப்படிப்பட்ட கிறிஸ்து? சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்து. கிறிஸ்துநாதரைப்பற்றிய சகல விசேஷங்களிலும் சிலுவையின் மரணமே விசேஷமானது. ஆகையால்தான் சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்து என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிச் சொல்வதற்கு இன்னொரு முகாந்தரம் உண்டு. அது 1 கொரி. 1: 22, 23-ம் வசனங்களிற் கண்டிருக்கிறது. என்னவெனில், "யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள். கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள். நாங்களோ சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம். அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்" என்பதே. இவர்களுக்குள்ளிருந்த தப்பான எண்ணத்தை நீக்கும்படியாகவே சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிறோம் என்று பேசுகிறார்.

எல்லா மனுஷரும் அறியவேண்டிய ஒரே ஒரு உபதேசமுண்டு. சிலுவையிலறையப்பட்ட ஏசுக்கிறிஸ்துவைப்பற்றிய உபதேசந்தான். பிலி. 3: 8-ல் சொல்லியபடி கிறிஸ்து ஏசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்றெண்ணவேண்டியது. ஏனெனில் அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது. கொலோ. 2: 3. இயூடாக்சஸ் என்பவன் சூரியனுடைய மாக்ஷிமையைப் பார்த்து தான் பிறந்தது சூரியனைப் பார்க்கும்படியாகத்தானென்று சொன்னான். அப்படியே ஒவ்வொரு கிறிஸ்தவனும் தான் பிறந்தது ஏசுக்கிறிஸ்துவின் மகத்துவத்தைப் பார்க்கவும் அதில் மகிழவுந்தானென்று நிதானிக்கவேண்டும்.

I. கிறிஸ்தேசுவைப்பற்றிய அறிவைத் தனிப்படப் பார்ப்போம்.

1. ஏசுக்கிறிஸ்துவைப்பற்றிய அறிவு வேதாகமங்களின் சாரமாயிருக்கிறது. பழையஏற்பாட்டிலும் புதியஏற்பாட்டிலும் கிறிஸ்துநாதரைப்பற்றியே எழுதப்பட்டிருக்கிறது. இரண்டு ஏற்பாடுகளும் கிறிஸ்துநாதரில் சந்தித்து நிற்கின்றன. பழையஏற்பாட்டில் கிறிஸ்துநாதர் வருவாரென்றும் புதியஏற்பாட்டில் வந்தாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பழையஏற்பாட்டில் கிறிஸ்துநாதர் தொட்டிலில் கிடக்கிற சிறுபிள்ளையைப்போல இருக்கிறார். கூர்ந்துபார்த்தால் அவரைக் காணலாம் புதியஏற்பாட்டில் அவரை லேசாய்க் கண்டுகொள்ளலாம். வேதாகமமாகிய பூட்டைத் திறந்து பார்க்கவேண்டுமானால் திறவுகோலாகிய கிறிஸ்துநாதரைப்பற்றிய அறிவு வேண்டும். துப்புவாதியினால் சங்கதி வெளிப்படுவதுபோல கிறிஸ்துவானவரால் வேதசங்கதிகள் துலாம்பரமாகும். கிறிஸ்துநாதரை அறியாதவன் வேதம் அறியாதவன்.

2. கிறிஸ்துவைப்பற்றிய அறிவு சகலத்திற்கும் ஆதாரமாயிருக்கிறது.

(1) நமக்குக் கிடைக்கும் சகல கிருபைகளுக்கும் ஆதாரம். சகல கிருபைகளும் அறிவிலிருந்து ஆரம்பிக்கின்றன. கொலோ. 3: 10-ல் சொல்லியபடி புதிய மனுஷன் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்படுகிறான் ஆகையால் அறிவில்லாமல் ஒருவரும் புதிதாக்கப்படமாட்டார்கள். வெளிச்சம் பழைய சிருஷ்டிப்பின் ஆரம்பமாயிருந்ததுபோல புதிய சிருஷ்டிப்பிலும் வெளிச்சமே ஆரம்பிக்கின்றது. ஏனெனில் பரிசுத்தஆவியானவரின் முதல் கிரியை கண்களைத் திறப்பதுதான். பாவியானவன் தன்னைப் பாவியென்று உணர்ந்து தன் பாவம் நீங்குவதற்கு வழியாக வந்த தன்

தலைவனை அறிந்து அவரண்டையிற் போகிறான். அவரை அறிய அறிய அவர்மூலமாய்க் கிருபையின்மேற் கிருபையைப் பெறுகிறான். 2 பேது. 3: 18-ல் ஏசுக்கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் என்றெழுதியிருக்கிறது.

(2) நாம் செய்யவேண்டிய கடமைகளுக்கும் கிறிஸ்துநாதரைப்பற்றிய அறிவு ஆதாரமாயிருக்கிறது.

விசுவாசம். கிறிஸ்துநாதரைப்பற்றிய அறிவில்லாமல் விசுவாசிக்கக் கூடாது. ஏசா. 53: 11-ல் என் தாசராகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அனேகரை நீதிமான்களாக்குவார் என்றெழுதியிருக்கிறது.

நம்பிக்கை. கிறிஸ்துவைப்பற்றிய அறிவில்லாமல் நம்பிக்கை வைப்பது கூடாது. அவரே நம்பிக்கைக்குக் காரணராயிருக்கிறார். கொலோ. 1: 27-ல் அவரே மகிமையின் நம்பிக்கையாயிருக்கிறார் என்றெழுதியிருக்கிறது.

ஜெபம். தன் ஜெபம் அங்கிகரிக்கப்படவேண்டுமானால் கிறிஸ்துவைப்பற்றிய அறிவு வேண்டியது அவசியம்.

(3) கிறிஸ்துவைப்பற்றிய அறிவு சகல ஆறுதல்களுக்கும் ஆதாரமாயிருக்கிறது. கிறிஸ்துநாதர் சகல ஆறுதல்களுக்கும் ஊற்றாயிருக்கிறார். அவரிடத்திலிருந்து சகல ஆறுதல்களும் வருகின்றன. பிலி. 3: 3-ல் சொன்னபடி விசுவாசிகள் கிறிஸ்து ஏசுவுக்குள் மேன்மைபாராட்டி ஆறுதலடைகிறார்கள். கழுவேற்றும்போதும் சிறைச்சாலையில் வைக்கும்போதும் அக்கினிச்சூளையில் போடும்போதும் கொல்லப்படும்போதும் மரண சமயத்திலும் விசுவாசிகள் மகிழ்ச்சியாயிருப்பது இந்த ஆறுதலினாலேதான்.

(4) கிறிஸ்துவைப்பற்றிய அறிவு ஆத்தும இரக்ஷிப்புக்கு ஆதாரமாயிருக்கிறது. யோ, 17: 3-ல் சொல்லியபடி ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பிய ஏசுக்கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன். கிறிஸ்துவை அறிவது நித்தியஜீவனானால் அவரை அறியாதிருப்பது நித்திய நரகம். கிறிஸ்துவானவர் மோக்ஷத்திற்கு வாசலாயிருப்பதுபோல அவரை அறிகிற அறிவு அவரைத் திறந்து காட்டுகிற திறவுகோலாயிருக்கிறது. அஞ்ஞானிகள் எவ்வளவு அறிவையும் சிறப்பையும் கனத்தையும் பெற்றாலும் மோசமான நிலைமையில்தான் இருக்கிறார்கள். அவசியமான ஒரு காரியத்தை அவர்கள் அறியவில்லை. ஆத்தும ரக்ஷிப்பைத் தரக்கூடிய கிறிஸ்துநாதரைப்பற்றிய அறிவு அவர்களுக்கில்லை. 1 கொரி. 1: 21-ல் சொல்லியபடி உலகம் தன் சுயஞானத்தினால் தேவனை அறியவில்லை.

ஆகையால் கிறிஸ்துவைப்பற்றும் அறிவானது சகல கிருபைகளுக்கும் நாம் செய்யவேண்டிய கடமைகளுக்கும் விசுவாசிகளுக்குக் கிடைக்கும் ஆறுதல்களுக்கும் ஆத்தும ரக்ஷிப்புக்கும் அவசியம் வேண்டியதாயிருக்கிறது.

3. கிறிஸ்துவைப்பற்றும் அறிவு ஆழமும் விஸ்தாரமாயிருக்கிறது. மற்ற அறிவுகளெல்லாம் ஒன்றும் இல்லாததுபோலிருக்கிறது. ஆழமுள்ளதும் எல்லையில்லாததுமான சமுத்திரம்போல கிறிஸ்துவைப்பற்றும் அறிவிருக்கிறது. அந்த அறிவுக்குள் அடக்கமான யாவும் உடனே தெரியமாட்டாது. ஒருகாலத்தில் ஒன்று தட்டுப்படும். இன்னொருகாலத்தில் வேறொன்று தட்டுப்படும். லுத்தர் என்பவர் சொன்னது "அகஸ்ற்றீன் என்பவர் காணாத ஒரு காரியத்தை நான் கண்டேன். நான் காணாத காரியத்தை எனக்குப் பின்வருகிறவர்கள் காண்பார்கள்" என்றார். கிறிஸ்துவை அறிவது புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சீமையில் ஜனங்கள் குடியேறு



வதுபோலிருக்கிறது. கடற்கரையில் உட்கார்ந்து அப்புறம் படிப்படியாய் உள் நாட்டிற்குச் செல்லுவார்கள். தேர்ந்தவர்கள் என்றெண்ணப்படுகிற அனேகர் இன்னும் கடற்கரையில் இருக்கிறவர்களாகவே இருக்கிறார்கள்.

4. கிறிஸ்துவைப்பற்றிய அறிவு மேன்மையும் மாக்ஷிமைபொருந்தியதுமாயிருக்கிறது. தேவதூதர்கள் இன்னம் இந்த அறிவைப் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அறிவாகிய ஆழத்திற்குள் உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துநாதர் வெளிப்படுத்திய சத்தியங்களென்ன? எபே. 3: 11-ல் சொல்லியபடி தேவனுக்குள் ஆதிமுதல் மறைத்திருந்த ரகசியங்கள்தான். அந்த ரகசியங்களை அளவிட்டு முடியாது. அந்த ரகசியங்களைக் கிறிஸ்துநாதர்தான் தெரியப்படுத்தினார். ஏனெனில் யோ. 1: 18-ல் தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை நமக்கு வெளிப்படுத்தினார் என்று சொல்லியிருக்கிறது. அன்றியும் சுவிசேஷத்திற் கண்ட கிறிஸ்துவைப் படிப்பதினால் 2 கொ. 3: 18-ல் சொன்னபடி நாம் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே கண்டாற்போல கண்டு ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுவோம்.

II. கிறிஸ்துநாதரைப்பற்றிய அறிவை மற்ற அறிவுகளோடு சம்பந்தப்படுத்திப் பார்ப்போம்.

1. மற்ற அறிவுகள் யாவும் இயல்பாயுண்டாகும். இந்த அறிவோ இயல்புக்குமேற்பட்டது. மத். 11: 27-ல் பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான். குமாரனும் குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனுந் தவிர வேறொருவனும் பிதாவை அறியான் என்றெழுதியிருக்கிறது. உலக ஞானிகள் தங்கள் ஞானத்தினால் கிறிஸ்துவைக் கண்டுபிடிக்கமாட்டார்கள். உலகக் கல்வியறியாத ஒரு கிறிஸ்தவன், அந்த ஞானிகளுக்கு எவ்வளவோ மேற்பட்டவனாக இருக்கிறான்.

2. மற்ற அறிவுகளை அனேகர் அடைந்துகொள்ளக் கூடாது. ஞானிகளுக்குத்தான் சரிப்படும். கிறிஸ்துவைப்பற்றிய அறிவோ அற்ப சாதாரண அறிவுள்ளவர்களும் அடையக்கூடியதாயிருக்கிறது. ஞானிகளுக்குப் புலப்படாத காரியங்கள் பேதைகளுக்கு ஆவியின் போதனையினால் புலப்படுகின்றன. மத். 11: 25-ல் பிதாவே இவைகளை ஞானிகளுக்கு மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தினீர் என்றிருக்கிறது. 1 கொரி. 1: 26–27 ல் கிறிஸ்தவர்களைப்பற்றி அவர்கள் மாம்சத்தின்படி ஞானிகளில்லை, வல்லவர்களில்லை; பைத்தியமானவர்கள், பலவீனமானவர்கள் என்றெழுதியிருக்கிறது.

3. மற்ற அறிவை எவ்வளவாய்ப் பெற்றுக்கொண்டாலும் அது அவர்களுக்கு மோக்ஷத்தைத் தரமாட்டாது. மோக்ஷத்திற்கு வாசலாகிய கிறிஸ்துநாதர் அவர்களுக்கில்லை. பாவத்தைப் போக்கும் பலியை அவர்கள் அறியவில்லை. சன்மார்க்கம் இல்லை, சன்மார்க்கமாய் நடக்க முன் மாதிரி அவர்களுக்கில்லை. பாவத்தின் வல்லமையை நீக்குவதற்கு பரிசுத்தஆவியின் சகாயம் இல்லை. அவர்களுடைய அறிவானது அவர்களுடைய இருதயத்தையாவது நடக்கையையாவது மாற்றவில்லை. சத்தியத்தை அனியாயத்தினால் அடக்குகிற பொல்லாதவர்களென்றும் ரோ. 1: 18. தேவனை அறிந்தும் அவரை மகிமைப்படுத்தாமல் தங்கள் சிந்தையிலே வீணரானார்களென்றும் 1: 21-ல் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவைப்பற்றிய

அறிவோ பலமுள்ளதாயிருக்கிறது. 2 கொ. 3: 18–ல் சொல்லியபடி பரிசுத்தாவியால் அவருடைய சாயலாக மாற்றுகிறது. யாவரும் இரக்ஷிப்படையச் செய்கிறது. இவைகளே கிறிஸ்துவைப்பற்றிய அறிவின் சிறப்புகள்

அனுமானங்கள்.

1. கிறிஸ்துவின் உபதேசமானது மனுஷர்களை இரக்ஷிப்புக்கேற்ற ஞானிகளாக்கப் போதுமானதாயிருக்கிறது. உலகத்திலுள்ள சகல ஞானத்தையும்விட இதுவே சிறந்ததும் ஆத்துமாவுக்குப் பிரயோஜனமுள்ளதுமாயிருக்கிறது. ஏழைக் கிறிஸ்தவனே! அனேகர் கல்விமான்களாயிருக்கிறார்களென்றும் நீ ஒன்றும் அறியாதவனாயிருக்கிறாய் என்றும் அதைரியப்படவேண்டாம். கிறிஸ்துவை மாத்திரம் அறிந்திருப்பாயானால் அது போதும். அந்த அறிவு உன் ஆத்துமாவுக்கு ஆறுதலையும் இரக்ஷிபபையுந் தரும் ஞானிகள் அனேகர் நரகததிலும் வாசிக்கத்தெரியாதிருந்த பேதைக்கிறிஸ்தவர்கள் அனேகர் மோக்ஷத்திலும் இருக்கிறார்கள்.

2. கிறிஸ்துவை அறிந்தும் அறியாதவர்களாய் அனேகர் இருக்கிறார்கள். அவர்கள் நிலைமை பரிதாபம். வேதம் என்ன சொல்லுகிறது? அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையைவிட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்குமென்று 2 பேது. 2: 21–ல் சொல்லியிருக்கிறது. அப்படிப்பட்டவர்களிடத்திலிருக்கிற அறிவு பாவத்தையும் ஆக்கினையையுங் கூட்டுகிறதாகவே இருக்கிறது.

3. நமக்குப் பிரியமான சகலமும் அவரை அறியும் அறிவுக்குள்ளிருப்பதால் வேறே படிப்புகளில் மட்டுக்கு மிஞ்சி நுழைய மல் சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துநாதரை மாத்திரம் படிப்போமாக. அவரை அறிவது நித்தியஜீவன். அந்த அறிவிலிருந்து கனிகள் உண்டாகின்றன ஆகையால் அவர் ஜீவவிருக்ஷம் என்னப்படுகிறார். அந்த விருக்ஷமானது வெளி. 22: 2–ல் சொல்லிபடி 12–விதமான கனிகளைத் தரும். அது மாதந்தோறும் கனிகொடுக்கும். எசே. 47: 12–லும் காண்க. ஆகையால் நாம் நம்மை, நம்முடைய காலத்தை, நம்முடைய பலத்தை இந்த மேலான படிப்பு விஷயத்திற் செலவழிப்போமாக.

போதனே.

1. வேதஅறிவை அசட்டைசெய்யாதிருப்போமாக. நீ அறிவை வெறுத்தாய்; வேதத்தை மறந்தாய்; நானும் உன்னை மறப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

2. அறிந்த அறிவு போதுமென்று எண்ணாதிருப்போமாக. மேலும் மேலும் படிக்கவேண்டும். வேதஅறிவில் வளரவேண்டும். சிலர் வேதத்திலுள்ள இரண்டொரு உபதேசங்களை அல்லது சில சங்கதிகளை அறிந்துகொண்டவுடனே தாங்கள் அனேகத்தை அறிந்துகொண்டதாக எண்ணிக்கொள்வார்கள். இது எவ்வளவு அறியாமை. பரிசுத்தவான்களுக்குள்ளேயும் ஒரு குறைவுண்டு. வேதம் ஆழமானதென்றும் தாங்கள் மெம்பவும் பிரயாசையெடுக்கவேண்டுமென்றும் அறிவார்கள். அறிந்தும் அது நம்மால் முடியாதென்று சொல்லிவிடுவார்கள். இதுவும் பாவம் உங்கள் விளக்குகள் எரிகிறவைகளாயிருக்கட்டும் என்று வேதம் சொல்லுகிறது. வேதஅறிவே அந்த விளக்கு. வேதவாசிப்பு, தியானம் இல்லையானால் விளக்கு அணைந்துபோம். ஆகையால் வேதத்தை வாசித்து அதிலுண்டான அதிசயங்களைப் பார்க்கும்படி பரிசுத்தஆவியானவர் நம்முடைய கண்களைத் திறப்பாராக.

---



## விஷபேதி நீங்க விண்ணப்பம்.

இராகம். துசாவந்தி. ரூபகதாளம்.

பல்லவி.

தேவ தேவனே அடியவர்
தியக்கந் தீராயா.

அனுபல்லவி.

மூவுலகுக்கும் ராஜனே முழுப்பாவிகட்குபதேசனே கன
முக்கியமான மகத்துவராஜ கிறிஸ்துவே வலபக்கமேவிய.— தேவ

1 அந்தகாரத்தமிழ்ந்த எங்களை ஆண்டுகொண்டவா
அடியவர்பவமாற்றக் குருசில்மாண்டெழுந்தவா
சொந்தஅடியார் கெஞ்சியதுதி
தோத்திரப்பலி ஏற்றியே இப்போ
தொழுகிறோம் நிதம் அழுகிறோம் பதம்
விழுகிறோம் முற்றும் முழுதுங் காத்தருள்.— தேவ

2 நாட்டிய குருசேறி எங்களைமீட்டுக்கொண்டவா
நாதனின்வலம் சென்றெமக்கு மன்றாடிநின்றவா
கூட்டங்கூட்டமாய் நாட்டில்ஜனத்தை
கொள்ளைநோய்கள் வந்தள்ளுதே இந்த
கூக்குரல்தொனி கேட்குமே வினை
தீர்க்கஉன்விழி நோக்குமேன் பர.— தேவ

3 சோதோம் நகரத்தழிவினில் ஜனம்சுட்டெரிக்கையில் உன்
சொந்த அடியார்தப்பிடும்படி துணைபுரிந்தவா
ஏதுமறியாப்பேதையடியார்
ஏசுவின்பதம் நாடியே நாங்கள்
எட்டுறோம் உமைகிட்டுகிறோம் வாசல்
தட்டுறோம் வினைவிட்டு நீக்கையா.— தேவ

4 எகிப்தின்வாதை இசரேலிலிறங்காமல் தீர்த்தவா
எந்நாளும் உன்மந்தையை உறங்காமல் காத்தவா
சகித்திட அரிதானபிணிவந்
திகத்தினில்ஜனம் தன்னையடித்து
தள்ளுதே கொள்ளைகொள்ளுதே உந்தன்
பிள்ளைகட் கெந்தன்வள்ளலேதுணை.— தேவ

5 சமுத்திரஜலம் ரண்டுபிரிவாய்த் தான்வகுத்தவா
தரையின்வழி உன்ஜனம் நடக்கச்சத்துருவையழித்தவா
அமைத்திடமுடியாத நோய்வந்
ததிர்ச்சியாய்ப் பலமுயற்சிபண்ணியே
அடிக்குதே மனந்துடிக்குதே உமைப்
பிடிக்கிறோம் எமைநடத்திக் காத்திடும்.— தேவ

6 யோர்தான்நதியின் ஜலத்தை ஓர்புறம்ஒதுக்கிச்சேர்த்தவா
உந்தனடியார் உள்ளங்கால் நனை யாமல்காத்தவா
பாரினில் விஷபேதி மும்முரம்
ஆரவாரங்கொண்டெழும்புதே உமைப்
பற்றுமடியார் சற்றெனுங்குறை
வற்றுவாழ்ந்திட சித்தம்வைத்தருள்.— தேவ

7 அக்கினிச்சூளையில் மூன்றுதாசரை யழித்திடாமலே அவர்
அருகுலாவி யக்கினியின் மணம் படாமற்காத்தவா
துக்கமான இக்கொள்ளைநோய் உன்
சொந்தஜனத்தை அணுகிடாமலே
சொல்லையா துணைநில்லையா எங்கள்
நல்லையா மகத்தல்லேலூயா.— தேவ

8 ஆறுதலாகச் சபையனைத்து முன்னடைக்கலம் ஐயா
தேறுதலாவி தந்துனது மந்தையைத் திடப்படுத்தையா
கூறும் நின்திருச்சமுகத்திற் கரம்
குவிக்கிறோம் உனைத்துதிக்கிறோம் கிர்பை
கூரையா விழிபாரையா
வினைதீரையா, எமக்காரையா கதி.— தேவ

---

## சமாசாரத்திரட்டு.

அங்கிலேய ராணியார் விக்டோரியா பெருமாட்டி தமது கஷ்டப் புத்திரனுடைய தேகவியோகத்தினால் விசாரங்கொண்டிருப்பதைமுன்னிட்டு வைத்தியர்கள் இராணியாரை டிராம்ஸ்டாட் என்கிற பட்டணத்துக்குப்போய்த் தங்கியிருக்கச் சொன்னதுபோலவே அப்பட்டணம் நானது மீ 17வ வந்து தங்கினார்கள்.

பம்பாயில் ஒரு சுதேச சிறுவனை ஓர் ஐரோப்பிய வாலிபன் சுட்டுவிட்டானாம். எப்படியெனில், ஒருநாள் சில ஐரோப்பிய வாலிபர்கள் பம்பாய் நகர்ப்புறத்தில் வேட்டையாடிக்கொண்டு வந்து ஒரு இடத்தில் தங்கினார்கள். அங்கு சில சுதேச சிறுவர்களிருந்தார்கள். இவர்கள் அவ்வைரோப்பிய சிறுவர்களைப் பார்த்துப் பரியசித்தார்கள்போலும். அதற்காக அவர்களில் ஒருவன் தன் கையிலிருந்த துப்பாக்கியால் சுட்டுவிட்டான். சுட்டவனை மாஜிஸ்டிரேட் ஜாமீன்பேரில் விடுதலைசெய்தார்.

இடிவிழல். ஆர்க்காட்டு நபாபுக்காக நூதனமாய்க் கட்டிவரும் அமீர் மஹால் என்னும் கட்டடத்தில் சென்ற திங்கட்கிழமைக் காலை இடி விழுந்து சுவர்கள் வெடித்து கதவுகள் பிளந்து பூமியில் பிரவேசித்தது. உயிர்ச்சேதம் ஒன்றுமில்லை.

பரங்கிமலையில் குடியிருக்கும் ஸ்காட் என்னும் ஐரோப்பிய வாலிபன் சென்ற செவ்வாய்க்கிழமைக் காலை ஜட்காவண்டியிலேறி சைதாப்பேட்டை ஆற்றின் வழியாய்ச் செல்லுகையில் அவ்வாற்றில் வெள்ளம் அதிகப்பட்டு அவ்வண்டியையும், குதிரையும் கவிழ்த்துவிட்டது. அதிலிருந்த ஸ்காட் என்னும் வாலிபனைக் காணோம். இவனை வெள்ளத்தில்



அடித்துக்கொண்டு போய்விட்டதுபோலும். வாலிபனுக்கு நீந்தவுந் தெரியாதாம்.

வைசூரி. சென்னையில் இந்நோய் தணிந்து வருகிறது. ஆனால் வெளி ஜில்லாக்களில் செங்கல்பட்டு, மதுரை, கோயம்புத்தூர் முதலிய பட்டணங்கள் பெருநஷ்டமடைகின்றன.

எழும்பூரில் சுமார் பத்துப் பிராயமுடைய சுதேச இளைஞன் ஒரு குளத்தில் ஸ்நானஞ்செய்யப்போய் தண்ணீர்க்குள்ளடக்கமாகிவிட்டான். சடுதி மரணசோதினை நடந்தேறியது.

போலீஸ் பென்ஷன் சேவகன் இரங்கைய நாயுடு என்பவன் தன் மனையாள் மீதிலிருந்த கோபத்தினால் தன் உயிரைப் போக்கிக்கொள்வதாயும் அதனால் தன் பெண்சாதி கழுத்திற்குக் கயிறுகுமென்றுஞ் சொல்லிக்கொண்டு வந்தபடியே சென்ற சனிக்கிழமை இரவு நாகமணித் தோட்டத்திலிருக்கிற ஒரு கிணற்றில் விழுந்து இறந்துவிட்டான். சடுதிமரண சோதினை நடந்தேறியது.

சென்ற மீ 21வ சிந்தராயலு என்பவர் வீட்டுக்கூரைக்கு வாங்கின ஓட்டை வண்டியின்மேலேற்றிக்கொண்டு வரும்போது வண்டியதிர்ச்சியால் வண்டியின்பேரில் குந்தியிருந்தவர் தரையில் விழவே சக்கரம் அவர் வயிற்றின்மீதேறிவிட்டது. ஜெனரல் ஆஸ்பத்திரியில் பரிகாரஞ்செய்தும் மாளாமலிறந்துவிட்டார். சடுதிமரணச் சோதினைக்காரர்கள் சென்ற புதன் கிழமை பிரேதத்தைச் சோதித்துப் பார்த்தார்கள்.

சென்ற மீ 18வ அறுதியான வாரத்தில் சென்னை ராஜதானியிலிறந்தவர்களின் தொகை 462. இதில் அம்மையினால் 161–பேர்கள், சீதபேதி வயிற்றுக்கடுப்பில் 45–பேர்கள், விஷபேதியால் 1–பேர். மற்றவர்கள் பற்பல வியாதியால். இவர்களுள் ஐரோப்பியர் 2–ஈஸ்டிந்தியர்கள் 9–சுதேசக் கிறிஸ்தவர்கள் 19-மகமதியர் 65. மற்றவர்கள் இந்துக்கள்.

கேஞ்சாம். வைசூரியும் பலவீனம். ஒரு தாலூகாவில் மட்டில் காய்ச்சல்.

கிருஷ்ணா. வைசூரியும், விஷபேதியும், காய்ச்சலும், கோமாரியும் எங்கும் பரவியிருக்கிறது.

கூத்—னி.

பேர்ஷியா எவ்வளவு நாகரீகமில்லாத தேசம்! அங்கே விதிக்கப்பட்ட சில தண்டனைகளாவன, திருடினால் கையையாவது, காலையாவது, இரண்டையுமாவது வெட்டிவிடுகிறது. குப்புறத்தள்ளி கால் விரலில் ஒன்று இரண்டு முறிந்துவிழுகிறவரையில் அடிக்கிறது. காதை கதவுடன் சேர்த்து ஒரு ஆணியை அடிக்கிறது. மூக்கில் நாண்கயிறு கட்டி தெருத்தெருவாக இழுக்கிறது. கால்களையும் கைகளையும் தொழுக்கட்டையில் மாட்டி தினம் 2–ஈச்சம்பழத்தையும் கொஞ்சம் தண்ணீரையும் ஆகாரமாகக் கொடுத்து 15–நாள், 20–நாளுக்கு அப்படியே விட்டுவிடுகிறது.

திரு—னி.

---

**மேமீ நாள்-31. சித்திரைமீ 21உ முதல், வைகாசிமீ 20உ வரை.**

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வி | 1 | ௨௧ | வேதத்தைக் காக்கிறவனே பாக்கியவான். நீதி. 29: 18. |
| வெ | 2 | ௨௨ | தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள். 30: 5. |
| ச | 3 | ௨௩ | உன் வாயைத் திறந்து, நீதியாய் நியாயந்தீர். 31:9. |
| ஞா | 4 | ௨௪ | எல்லாம் வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது. பிர. 1: 8. |
| தி | 5 | ௨௫ | மதியீனத்தைப் பார்க்கிலும் ஞானம் உத்தமம். 2:13. (8:11. |
| செ | 6 | ௨௬ | தேவன்...செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான். |
| பு | 7 | ௨௭ | ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம். 4: 9. |
| வி | 8 | ௨௮ | பணப்பிரியன் பணத்தினால் திர்ப்தியடைவதில்லை. 5:10. |
| வெ | 9 | ௨௯ | இந்த ஜீவனில் நன்மையின்னதென்று அறிந்தவன் யார்? 6:12. |
| ச | 10 | ௩0 | ஞானம் தன்னை உடையவர்களுக்கு ஜீவனைத் தரும். 7:12. (8: 4. |
| ஞா | 11 | ௩௧ | ராஜாவின் வார்த்தை எங்கேயோ அங்கே அதிகாரம் உண்டு. |
| தி | 12 | ௧ | மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள். 9: 5. |
| செ | 13 | ௨ | அடைப்பைப் பிடுங்குகிறவனைப் பாம்பு கடிக்கும். 10:8. |
| பு | 14 | ௩ | இளமையதும் வாலிபமும் மாயையே. 11:10. |
| வி | 15 | ௪ | தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள். 12:13. |
| வெ | 16 | ௫ | உத்தமர்கள் உம்மை நேசிக்கிறார்கள். உன். 1: 4., |
| ச | 17 | ௬ | என் பிரியமே! என் ரூபவதியே! எழுந்துவா. 2: 10. |
| ஞா | 18 | ௭ | என் ஆத்துமநேசரைக் கண்டேன். 3: 4. (4: 10 |
| தி | 19 | ௮ | என் சகோதரியே!...உன் நேசம் எவ்வளவு மதுரமாயிருக்கிறது. |
| செ | 20 | ௯ | உன் நேசர் எதினால் விசேஷித்தவர்? 5: 9. |
| பு | 21 | ௧0 | அருணோதயம்போல் உதிக்கிற இவள் யார்? 6: 10. |
| வி | 22 | ௧௧ | நான் என் நேசருடையவள். 7: 10. |
| வெ | 23 | ௧௨ | அவருடைய கண்களில் கடாட்சம்பெறலானேன். 8: 10. (1: 18. |
| ச | 24 | ௧௩ | வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசா. |
| ஞா | 25 | ௧௪ | நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். 2:3. (3:10. |
| தி | 26 | ௧௫ | நன்மையுண்டாகும் என்று நீதிமான்களுக்குச் சொல்லுங்கள். |
| செ | 27 | ௧௬ | கர்த்தரின் கிளை அலங்காரமும் மகிமையுமாயிருக்கும். 4: 2. |
| பு | 28 | ௧௭ | மேட்டிமையானவர்களின் கண்கள் தாழ்ந்துபோம். 5: 15. |
| வி | 29 | ௧௮ | சேனைகளின் கர்த்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர். 6:3, |
| வெ | 30 | ௧௯ | நீ பயப்படாமல் அமர்ந்திருக்கப் பார். 7: 6. |
| ச | 31 | ௨0 | அவர் உங்களுக்குப் பரிசுத்த ஸ்தலமாயிருப்பார். 8: 14. |

## விசேஷ நாட்கள்.

1. பரி. அப். பிலிப்பு, யாக்கோபு என்பவர்களின் திருநாள்.
4. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 3-ம் ஞாயிறு.
10. பௌர்ணமி.
11. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 4-ம் ஞாயிறு.
18. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 5-ம் ஞாயிறு.
22. பரத்துக்கேறின திருநாள்.
25. பரத்துக்கேறின திருநாளுக்குப் பின்வரும் ஞாயிறு.
அமாவாசை.

162394

# நற்போதகம்.

கூ. ஜூன்மீ. ௲அஅச ௵.

## பாபிலோன் சிறையிருப்பு.

பாபிலோனின் முதலாம் சிறையிருப்பு. கி. பி. மு. 606.

(தொடர்ச்சி.)

சாலொமோனின் மரணகாலத்தில் இராஜ்யம் இரண்டாகப் பிரிந்த பின்பு இஸ்ரவேல் இராஜ்யம் 254 ௵ நிலைத்து அழிந்துபோயிற்று. யூதா இராஜ்யம் 388 ௵ நிலைத்திருந்தபின்பு பாபிலோனியரால் அழிவு துடங்கிற்று. இந்தச் சிறையிருப்பின் துவக்கத்தில் பார்வோன் நேகோவின் சேனை முறியடிக்கப்படுவதைப்பற்றி எரேமியா தீர்க்கதரிசனமுரைத்தார். (எரே. 46: 1—12) அந்தப்படி நேபுகாத்நேச்சார் கர்கேமிஸ் அரணைத் திரும்பப் பிடித்துக்கொண்டு தென்திசையாய் நோக்கிவருகையில், அவனுக்குப் பயந்து ரெகாபியர் எருசலேமில் வந்து அடைக்கலம் புகுந்திருந்தார்கள். அச்சமையத்தில்தான் யூதர் மருள விழுவதை எடுத்துக் காட்டி, ரெகாபியருடைய கீழ்ப்படிதலின்படி தேவனுக்குக் கீழ்ப்படிய புத்தி சொல்லுகிறார். (எரே. 36-அதி.) இக்காலத்தில்தான் யூதாவும் அதற்கடுத்த தேசங்களும் நேபுகாத்நேச்சரால் 70-வருஷமாய்ச் சிறைப்பட்டுப் போகுமென்பதை முன்னற எரேமியா தீர்க்கதரிசனமுரைத்திருக்கிறார். (25-அதி) இதெல்லாம் யூதர்கள் தங்கள் பாவங்களைவிட்டுச் சீரடைவார்களென்றால் அவர்கள்மேல் வரத்தக்க தேவகோபம் நின்றுபோகும்படியாக முன்னறச் சொல்லப்பட்டது. அவர்களோ தங்கள் இருதயத்தைக் கடினப்[illegible]னார்கள். இந்த (70) வருஷம் எதுமுதல் என்பது கவனிக்கப்பட[illegible]டியது. முதலாம் சிறையிருப்புமுதலென்றால் (எஸ்றா. 1: 1-ல்) சொல்லிய காலத்தில் முடியும். இந்தக் காலத்தில் கொஞ்சம்பேர்தான் சிறைப்பட்டுப்போனார்கள். இதற்கு 7-வருஷத்துக்குப்பின்பும், 2 இரா. 24: 15, 16. சிதேக்கியாவின் 11-ம் வருஷத்திலும் 3-ம் விசையாக யூதர் சிறைப்பட்டுப்போனார்கள். சிலர் 70-ம் வருஷமென்பது 2-ம் சிறையிருப்புக் காலமுதலென்று கணக்கிடுவது சரியென்பார்கள். எரே. 29: 1-ல் மி. சிறையிலுள்ளவர்களுக்கு 70-வருஷம் முடிவானபின் மீட்கப்

பீட

ஐ௵ம211.M49 M49.20

பட்டு வருவீர்களென்கிறார். இந்தக் கொள்கைதான் எசேக். 40: 1-னால் உறுதிப்படுகிறது. அங்கே பட்டணம் பிடிபட்டு 14-ம் வருஷமென்பது அவர்களுடைய சிறையிருப்பின் 25-ம் வருஷமே. இந்த 2-ம் சிறையிருப்புக் காலமுதல் பார்சுதேசத்து இராஜாவாகிய தரியுவின் விடுதலைவரைக்கும் (தானி. 4: 31 ) 70௵. இந்த 70-வருஷங்களில் நேபுகாத்நேச்சார் ஆண்டது 36-வருஷம். (2 இரா. 25: 27.) எவில்மெரோதாக்; (32௵) பெல்சேஷார் 2௵. தானி. 8: 1.

எரேமியா, யோசியா அரசனின் 13-ம் வருஷத்தில் தீர்க்கதரிசனமுரைத்தபடியால் அந்த யோசியாவின் ஆளுகையில் 19-வருஷமும் இந்த யோயாக்கீம் காலத்தில் 4-வருஷமும் ஆக 23-வருஷங்களில் தாம் எருசலேமுக்கும் யூதேயாவுக்கும் விரோதமாய்ச் சொன்ன தீர்க்கதரிசனங்கள் யாவையும் புஸ்தகச்சுருளில் எரேமியா வாயால் சொல்ல பாருக் எழுதி அதை உபவாச நாளில் எல்லா ஜனங்களும் கூடிவந்திருக்கையில் வாசிக்கும்படி சொன்னார். எரே. 36: 1—8. இது யூதர் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பும்படியாகவும், தங்கள் அக்கிரமங்களை தேவன் மன்னிக்கும்படியாகவும், தேவன் செய்ய நினைத்திருக்கிற தீங்குகளைக்குறித்து அவர்கள் கேட்டுச் சீரடையவும் நோக்கமாக எல்லாரும் கேட்க வாசிக்கப்பட்டது. இந்த யூதர் கூடிவந்த நாள் ஓர் பெரிய உபவாச நாளாம். இது வருஷாந்தர உபவாச நாளாயிருக்கமாட்டாது. (லேவி. 23: 27.) யோயாக்கீம் இராஜா தங்களுக்கு வரும் ஆக்கினைக்குத் தப்பும்படி உபவாசஞ்செய்யும்படி பறைமுறையிட்ட நாளாயிருக்கலாம். யோயாக்கீம் உரியாவைக் கொன்ற மூர்க்கனாயினும், பாருக் பயப்படாமல் இராஜாவின் வீட்டில் பிரபுக்களுக்கு முனபாக வாசித்தான். பிரபுக்கள் இராஜாவிடத்தில் தெரியப்படுத்த அவன் கொஞ்சம் வாசிக்கக் கேட்டபின் புஸ்தகச்சுருளை அறுத்துச் சுட்டெரித்தான். எரேமியாவையும், பாருக்கையும் இராஜா கொல்லத் தேடினபோது தேவன் அவர்களை மறைத்தார். முந்தின சுருளுக்கொத்தபடி திரும்பவும் தேவன் எரேமியாவை எழுதச்செய்து யோயாக்கீமைக் கண்டித்தார். (எரே. 36: 27—29.) யோயாக்கீமைக்குறித்து "தாவீதின் சிங்காசனத்தின்மேல் உட்காரும்படி அவன் வம்சத்தில் ஒருவனுமிரான். அவன் பிரேதமோ பகலின் அஷ்ணத்துக்கும் இரவின் குளிருக்கும் எறிந்துவிடப்படும்'' என்று சாபமாகச் சொல்லப்பட்டது. (எரே. 36: 30, 31.) இராஜனுடைய மரணம் எப்படிப்பட்டதென்று தெரியாது. கழுதையைப்போல எறிந்துபோடப்பட்டான். (எரே. 22: 19.) புலம்புவாரில்லாமல் எறிந்துபோடப்பட்டான். பாருக் தனக்கு நேரிட்ட துன்பத்துக்குப் பயந்து, புலம்பினதினாலே தேவன் அவனுக்கு ஆறுதலாக புஸ்தகச்சுருளில் சொன்னபடி எருசலேமுக்குத் தீங்குகளும், அழிவும், பாழும், சம்பவிக்கும்போது அவன் விடுதலையடைந்து அவனுடைய உயிர் அவனுக்கு கொள்ளைப்பொருள்போலிருக்குமென்று முன்னறி தீர்க்கதரிசனமுரைக்கப்பட்டது. (எரே. 45-அதி.)

நேபுகாத்நேச்சார் அசூரியா இராஜ்யத்தைக் கீழ்ப்படுத்தி, விரோதிகளை ஜெயித்து, எகிப்தியரைத் துரத்தினபின்பு (எரே 46: 2.) யோயாக்கீம் தன்னை (3) வருஷம் சேவித்தபின்பு கலகஞ்செய்தபடியினாலே யூதேயாவுக்கு விரோதமாய் வந்து யுத்தஞ்செய்தான். எகிப்தின் இராஜா இவனை நீ நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாய்க் கலகஞ்செய்கிறதானால் நான் உனக்கு உதவிசெய்வேனென்று வாக்குக்கொடுத்திருந்தபடியால் அப்படிச் செய்தான். (2 இரா. 24: 1.) நேபுகாத்நேச்சார் அது முகாந்தரம்பற்றி, கல்



தேயர், சீரியர், மோவாபியர், அம்மோனியர் என்ற திரள் சேனையோடே எருசலேமுக்கு வந்து அதைப் பிடித்து, யோயாக்கீமைச் சிறையாக்கி, பாபிலோனுக்குக் கொண்டுபோகும்படி விலங்குபோட்டான். (2 நாளா. 36: 6.) எருசலேமை முற்றிக்கைபோட்டுப் பிடித்த காலம். (தானி. 1: 1, 2.) யோயாக்கீமின் 3-ம் வருஷம் கடைசியும் 4-ம் வருஷத்தின் துவக்கமுமே. எரே. 25: 1. இது நமக்கு நவம்பர் மாசத்துக்குச் சரியான 9-ம் மாதமாகிய கிஸ்லேயு மாதத்தின் 18உயில் சம்பவித்ததாம். யூதர்கள் இந்நாள்வரையும் இந்தநாளில் அதே சங்கதியை நினைக்கும்படியாக உபவாசம்செய்து வருகிறார்கள்.

நேபுகாத்நேச்சார் யோயாக்கீமை விலங்குபோட்டவுடனே அவன் தன்னைத் தாழ்த்தி, இராஜாவுக்குக் கப்பங்கொடுக்கிறவனாகச் சம்மதித்து, நேபுகாத்நேச்சாருக்குக் கீழமைந்து அரசாண்டான். (2 இரா. 24: 1—4.) இப்படியே சம்பவிக்குமென்று தீர்க்கதரிசிகள் முன்னறி தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார்கள். எசாயா (2 இரா. 20: 17. 21: 12—14. எசா. 39: 7.)

நேபுகாத்நேச்சார் எருசலேமைவிட்டு எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தஞ்செய்யப்போகையில் அண்ணர்களின் தலைவனாகிய அஸ்பேனாசுவுக்கு இராஜ அரண்மனையிலுள்ள இராஜ குமாரரையும், பிரபுக்களையும் பாபிலோனுக்குச் சிறைகளாகக் கொண்டுபோகும்படி கற்பித்தான். இந்தச் சமையத்தில் எரேமியா, யோயாக்கீமுடைய மரணம் அடக்கமிவைகளைப்பற்றித் துக்கமாய் அறிவித்தார். (எரே. 22: 17—19.) 100-வருஷத்துக்குமுன்னே எசாயா தீர்க்கதரிசி எசேக்கியா இராஜாவுக்குச் சொன்ன தீர்க்கதரிசனம் இப்போது நிறைவேறிற்று (எசா. 39: 7. 2 இரா. 20: 18.)

இந்தச் சமையத்தில்தான் நேபுகாத்நேச்சார் தேவனுடைய வீட்டிலுள்ள பாத்திரங்களை எடுத்துக்கொண்டுபோய் பாபிலோனில் தன் தேவனாகிய பேல் வீட்டில் வைத்தான். அவன் தன் தேவனாகிய பேலினாலே தனக்கு ஜெயமும் கனமும் கிடைப்பதாக எண்ணி அப்படிச் செய்திருப்பான். (1 சாமு. 31: 9 ) பெலிஸ்தரும் இப்படியே செய்தார்கள். நியாயா. 16: 23, 24. இஸ்ரவேல் ஜனங்களுக்கு இவைகள் தேவகோபத்தால் சம்பவித்திருக்க விக்கிரகாராதனைக்காரர் வேறுவிதமாய் எண்ணிக்கொண்டார்கள். (எசா. 10: 5—16.) இந்தவகையாய். ஜனங்கள் சிறைப்பட்டுப் போனார்கள். இராஜகுமாரர், பிரபுக்கள், பாபிலோன் இராஜாவுக்கு அண்ணகரும் அடிமைகளுமானார்கள். தேவாலயப் பாத்திரங்களும் எடுபட்டுப் போயிற்று. இராஜாவும் கப்பங்கொடுக்கிறவனானான். தேசமுழுவதும் பாபிலோன் இராஜாவுக்கு அடிமையாயிற்று. எரேமியா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்ட (70) வருஷம் சிறையிருப்பு (எரே. 25: 11. 29: 10.) இப்போது துவக்கிற்று.

இப்படிச் சிறைப்பட்டுப்போனவர்களில் தானியேல், அனனியா, மிசாவேல், அசரியா என்னும் இராஜ குமாரரும் பிரதானிகளின் தலைவனால் கொண்டுபோகப்பட்டார்கள். (தானி. 1: 6.) இவர்கள் இராஜ அரண்மனையில் வேலைசெய்யவேண்டியவர்களில் விசேஷித்தவர்களானதால் அண்ணகர்களென்னப்பட்டார்கள். யூனக் என்ற வார்த்தை, மெய்காவலர், அண்ணகர், பிரதானி என்ற பொருள்கொள்ளும். (எஸ்த. 4: 5-ல்) ஆததாகும், எஸ்த. 6: 2-ல் பிக்தானாவும், தேரேசும், (7: 9-ல்) அர்போனாவும், தானி. 1: 3-ல் அஸ்பேனாசும் இராஜாவுடைய (அண்ணகரில்) பிரதானிகளின் தலைவர்களாம். எருசலேமிலிருந்து கொண்டுபோகப்பட்ட இராஜ குலத்தாரில் தானியேலும் அவன் சகோதரரும் பீர்லைவக்கு அழ

கரும், தேகத்தில் மாசில்லாதவர்களும், புத்தியில் ஞானிகளும், கல்வியில் நிபுணரும், சேவகத்தில் திறமையுள்ளவர்களுமாயிருந்தார்கள். தானி. 1: 3. இவர்கள் இராஜாவை சேவிக்கிறதற்குமுன கல்தேயருடைய பாஷைகளையும், கல்விகளையும் 3-வருஷமாய்க் கற்றார்கள். இவர்கள் தங்கள் தேவனையும், மார்க்கத்தையும் மறந்துபோகத்தக்கதாக தேவனே நியாயாதிபதி என்றருத்தமுள்ள தானியேலுக்கு பேலே அவன் உயிரைக் காப்பாற்றுமென்று அருத்தமுள்ள பெல்தேஷாத்சாரென்றும், தேவகிருபை என்றருத்தமுள்ள (1 நாளா. 3: 23.) அனனியாவுக்கு கல்தேயர் வணங்கின "சூரியனாகிய திவ்ய வெளிப்படுத்தல் என்றும, தேவபலமென்றருத்தமுள்ள மிஷாவேலுக்கு ஷாக் என்ற வேனுஸ் என்ற தேவியின்பேரால் மேஷாக்கென்றும் தேவசகாயமென்றருத்தமுள்ள அசரியாவுக்கு கல்தேயர் வணங்கின தேவியாகிய அக்கினிதேவதையின் ஊழியனென்று அருத்தமுள்ள ஆபேத்நேகோவென்றும், பிரதானியானவன அவர்கள் சுன்னத்தடைந்தபோது பெற்ற எபிரேயப் பெயர்களை அவர்களைக் கல்தேயராக்கவும் விக்கிரகாராதனைக்காரராக்கவும் நோக்கமாக கல்தேயருடைய பேர்களாக மாற்றினான். இப்படியே யோசேப்பை பார்வோன் சாப்நாதபன்னேயாவென்றான். ஆதி. 41: 45. பார்வோன் நேகோ எலியாக்கீமை, யோயாக்கீமென்றழைத்தான். 23: 34 பாபிலோன் இராஜா மத்தனியாவை சிதேக்கியாவென்றழைத்தான். (2 இரா. 24: 17.) இவர்கள் கல்தேயருக்குள் வழக்கமான குறிசாஸ்திரம், சகுனசாஸ்திரம் படிப்பிக்கப்படவில்லை. மாகியருடைய சாஸ்திரம் படிக்கவில்லை. கல்தேயருடைய மார்க்க விஷயங்களைப் படிப்பிக்கக் கற்பிககப்படவுமில்லை. போசனத்தினால் தீட்டுபபடாதபடிக்குத் தங்களைக் காத்துக்கொண்டார்கள். இவைகளாலுங் கறைப்படும்படி தேவன் இடங்கொடுக்கவில்லை. கல்தேயருடைய சரித்திரம், சட்டங்கள், வித்தைகள், கணிதங்கள், வானசாஸ்திரங்கள், யுத்தசாஸ்திரங்கள் இவைகளைக் கற்றிருப்பார்கள்.

இஸ்ரவேலர் சிறைப்பட்ட (கி. மு. 606) வருஷத்திலே 18-வயதான தானியேலும் அவன் சகோதரரும், இராஜாவின் சமுகத்தில் நிற்கத்தக்க உத்தியோகஞ்செய்யும்படி பழக்குவிக்கத் தெரிந்துகொள்ளப்பட்டார்கள். நேபுகாத்நேச்சாருடைய கல்விச்சாலையில் 3-வருஷம் படித்துவருகையில், தங்கள் பேர்கள் மாற்றப்பட்டாலும், தங்கள் மார்க்கத்தை மாற்றாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்தார்கள். விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட போசனத்தினாலாவது, நியாயப்பிரமாணத்தில் விலக்கப்பட்ட பன்றி இறைச்சியினாலாவது, லேவி. 11: 15. தீட்டுப்படாதபடிக்கும், கொழுத்த போசனத்தைச் சாப்பிடுவதினால் நிணந்துன்னி தன் தேவனை அசட்டைபண்ணாதபடிக்கும் (உபா. 32: 14, 15. எசே. 16: 49 ஓசே. 13: 6. ரோ. 13: 13,) மோசேயைப்போல தங்கள் இனத்தார் சிறையிருப்பிலிருக்கையில் தாங்கள் மாத்திரம் புசித்து குடித்து மகிழ்ச்சியிராதபடிக்கும், (எபி. 11: 24—26.) இப்படியாகத் தீமைக்கேதுவான போசனங்களுக்கு விலக்கமாயிருந்தார்கள். (அப். 11: 23) இந்த வாலிபருக்கு தேவன் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார். அந்நிய தேசத்தில் துன்பப்படுகிறவர்களுக்கு தேவனால் கிடைத்த நன்மை, (சங். 106: 46.) இது அவர்களுடைய குற்றமில்லாமைக்கும் பரிசுத்தத்துக்கும் வந்த பலன். (சங். 16: 7) இதுவே ஜெபத்தின் பலனம். (1 இரா. 8: 50.) இதுவே தேவன் அவர்களோடிருந்தாரென்பதற்கு அத்தாக்ஷி. (ஆதி. 39: 3, 4, 21.)



இந்த 4-வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையுங் கொடுத்தார். இந்த ஞானம தேவனால் அவர்களுக்குக் கிடைத்தது. யாக். 1: 5, 17. தேவனுக்கு அருவருப்பாகிய (உபா. 18: 9, 14 ) மாகியருடைய பேய் ஆராதனைக்குரிய (யாக். 3: 15.) சாஸ்திரங்களை இவர்கள் படியாமல் நியாயமும் சத்தியமுமான கல்தேயருடைய சாஸ்திரஙகளைக் கற்றுவந்தார்கள்.

நேபுகாத்நேச்சார் (அவன தகப்பன் மரித்தபின்) அரசாண்ட 2-ம் வருஷத்தில் தானியேல் சிறையான 5-ம் வருஷத்திலே அல்லது யோயாக்கீமின் 9-ம் வருஷத்தில் தானியேலும் அவன கூட்டாளிகளும பரிக்ஷிக்கப்பட்டு பெரிய உத்தியோகஸ்தரானார்கள் இந்தக்காலத்தில்தான் நேபுகாத்நேச்சார் மினுக்குள்ள சிலையைப்பற்றி சொப்பனங் கண்டான். இதை சாஸ்திரிகளும், ஜோசியரும், கல்தேயரும் வியாகதிபண்ணக் கூடாதபோது தானியேலே வியார்த்திசெய்தார். இதனால் நேபுகாத்நேச்சார் தானியேலைப் பெரியவனாக்கி, அவனைப் பாபிலோன் மாகாண முழுவதுக்கும் அதிபதியாகவும் பாபிலோனின சகல ஞானிகளினமேலும பிரதான அதிகாரியாகவும் நியமித்தான். (தானி 2: 48 ) சிறையிருப்பில் இஸ்ரவேலர் காக்கப்படும்படி மொர்தேகாய் ஆகாஸ்வேரின் காலத்திலிருந்ததுபோல தானியேலும் அவர் கூட்டாளிகளும் மேன்மையான உத்தியோகத்தில் வைக்கப்பட்டார்கள்.

நேபுகாத்நேச்சார் யோயாக்கீமின் 4-ம் வருஷத்திலே எகிப்தியரோடே சண்டைசெய்து, கர்கேமிஸ் பட்டணத்தை முற்றிக்கைபோட்டுப் பிடித்துக்கொண்டான். இதற்குப்பின் சூரியா பெனிக்கியா நாடுகளிலுள்ள அநேக நாடுகளையும் பட்டணஙகளையும் கீழ்ப்படுத்துகிற வேலையிலிருந்தான். அந்த வருஷம் அக்டோபர்மீ துவக்கத்தில் எருசலேமை முற்றிக்கைபோட்டு ஒரு மாசத்துக்குப்பின் அதைப் பிடித்துக்கொண்டான் இது முதல் பாபிலோனின் 70-வருஷம் சிறையிருப்பு துவக்கவேணுமென்பார்கள்.

இந்தக்காலத்தில் ஆசியாவின் வடபாகத்தை 28-வருஷம் ஆண்ட சித்தியர், அர்மோனியா, கப்பதோசியா, பொந்து, கொல்கீஸ், ஐபீரிய நாடுகளைவிட்டுத் துரத்தப்பட்டார்கள். இவர்களை மேதியர் வெகுகாலமாய்த் துரத்தக்கூடாதிருக்க, வஞ்சனையாய் விருந்துக்கு அழைக்கப்பட்டு, வெறிக்கச்செய்து, அந்தச் சித்தியரைக் கொலைசெய்து மீதியானவர்களைத் துரத்திவிட்டார்கள். மறுபடியும் அவர்கள் ஆலீஸ் நதிவரையும் தங்கள் இராஜ்யத்தை விஸ்தீரணமாக்கினார்கள்.

கல்தேயர் எருசலேமைவிட்டுப் போனபின், யோயாக்கீம் தேவனால் தனக்குச் சம்பவித்த தண்டனைகளினால் சீரடையாமல், முன்போல துன்மார்க்கமும், அவபக்தியுமான வழியில் நடந்து அந்தப்படி யூதாவும் எருசலேமும் தேவனுக்குக் கோபமூட்டினார்கள். எரேமியா தீர்க்கதரிசி அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரண்டைக்கு மனந்திரும்பும்படிக்கு புத்தி சொன்னாலும் கேட்கவில்லை. அவர்கள் கல்தேயர் தங்கள தேசத்தில் பிரவேசித்து, சிலரைச் சிறைப்பிடித்துப்போன முந்தின வருஷத்தின் (9-ம் மாதமாகிய) கிஸ்லேயு மாதத்தின் 18-ம் தேதியை பெரிய உபவாச நாளாக ஆசரிக்கும்படி இராஜா விளம்பரஞ்செய்தான். எரேமியா இதுதான் சமையமென்று அறிந்து, தன் தீர்க்கதரிசனச் சுருளை இரண்டாம் விசை பாரூக் தேவாலயத்தில் கொண்டுபோய் எல்லாருடைய காதுகளும் கேட்க வாசிக்கும்படி செய்தார். எருசலேமியர் இதைக் கேட்பதினால் பயந்து, தங்கள்

கடமையைச் செய்யும்படி ஓர்வேளை நல்ல மனமுண்டாகுமென்று தேவ உத்தரவினால் வேதபாரகனாகிய கெமராவின் அறையில் (தேவாலயத்தில்) போய் வாசிக்கவே அதை கெமாரியாவின் மகன மிகாயா பிரபுக்கள் அண்டையில் பாருக்கைக் கூட்டிப்போய் நிறுத்த அவர் எல்லாருடைய காதுகளுங் கேட்க வாசித்தார். (எரே. 36: 9—11.) பாருக்கும் எரேமியாவும் ஒருவரும் காணாதபடி மறைந்துகொள்ள கற்பிக்கப்பட்டார்கள். பின்பு இராஜனிடத்தில் சுருளை வாசிக்க, கத்தியால் வெட்டி சுருளைத் திரும்பவும் சுட்டெரித்தான். இந்தச் சுருளைச் சுட்டெரித்ததற்காக யூதர்கள் இதுவரையும் அந்த நாளை உபவாச நாளாக ஆசரித்து வருகிறார்கள். யோயாக்கீம் சுட்டெரித்த புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் திரும்பவும் எரேமியா சொல்ல, பாருக் எழுதினான். ஜனங்கள் குணப்படாததால் இன்னும் அவைகளுக்கொத்த அநேகம் வார்த்தைகளும் அவைகளோடே சேர்க்கப்பட்டது. இராஜன் சுருளைச் சுட்டெரித்தபோது அவனுக்குப் பயங்கரமான ஆக்கினை கூறப்பட்டது. (எரே. 36: 30, 11.)

முதலாவது இந்தச் சுருள் யோயாக்கீமின் 4-ம் வருஷத்தில் வாசிக்கப்பட்டது. (எரே. 36: 1.) இரண்டாம் சுருள் யோயாக்கீமின் 5-ம் வருஷத்தில் வாசிக்கப்பட்டது. (எரே. 36: 9 ) முதலாவது சுருள் வாசிக்கப்பட்டபோது எரேமியா காவலில் வைக்கப்பட்டிருந்தார். (எரே 36: 5.) 2-ம் விசை சுருள் வாசிக்கப்பட்டபோது எரேமியா விடுதலையடைந்திருந்தார். (எரே. 36: 26 ) அதினால்தான் அவர் மறைந்துகொள்ள இடமாயிற்று. ஆகையால் இரண்டுதரமாக சுருள் வாசிக்கப்பட்டதென்பது நிச்சயம்.

நேபுகாத்நேச்சார் எருசலேமைவிட்டுப்போனபின், அந்த வருஷமுழுவதும் எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தஞ்செய்து, சூரியா பலஸ்தீனா நாடுகளைக் கீழ்ப்படுத்தி, ஐப்பிராத் நதிக்கும எகிப்து நதிக்கும் நடுவேயுள்ள எகிப்து இராஜாவுக்குச் சம்பந்தமானதெல்லாவற்றையும் பிடித்துக்கொண்டான். (2 இரா. 24: 7.) ஐப்பிராத் சூரியாவுக்கு வடகீழ் எல்லையும், எகிப்து நதி (நீலநதியல்ல,) யூதேயாவுக்கு தென்மேற்கு எல்லையுமாயிருந்தது. ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம்செய்யப்பட்ட தேசமும் (ஆதி. 15: 18.) யோசுவாவால் (15: 14.) பங்கிடப்பட்ட தேசமும் இவ்வளவு விஸ்தீரணத்திலிருந்தது.

யோயாக்கீமின் 5-ம் வருஷமுடிவில் நேபுகாத்நேச்சாரின் தகப்பன் பாபிலோன் இராஜாவாகிய நாபோ பொலேசர் 21-வருஷம் ஆண்டபின் மரித்ததை நேபுகாத்நேச்சார் கேட்டு, சிறைகளையும் கொள்ளைப்பொருள்களையும் பின்னாலே படைத்தலைவர்கள் வசம்விட்டு, குறுக்குவழியாய் சிம்மாசனம் ஏறும்படி பாபிலோனுக்கு விரைந்து ஓடிப்போய் இராஜ்யத்தைக் கைப்பற்றினான். இந்தவகையாய் கல்தேயா, அசூரியா, அராபியா, சூரியா, பலஸ்தீனா இவ்வளவு தேசங்கள் அடங்கிய பெரிய இராஜ்யத்தை நேபுகாத்நேச்சார் 43-வருஷம் அரசாண்டான். அவன் தன் தகப்பனோடு சேர்ந்து ஆண்ட 2-வருஷமும் சேர்த்து யூதர் கணக்கிடுவார்கள். பாபிலோனியரும் தானியேலும் அவன் மாத்திரம் அரசாளத் துவக்கின காலமுதல் கணக்கிடுவார்கள்.

யோயாக்கீமின் 7-ம் வருஷத்தில் (கி. பி. முன், 603 ) அதாவது நேபுகாத்நேச்சாரின் 2-ம் வருஷத்தில் (தானி. 2.) யூதருடைய கணக்கின்படி நேபுகாத்நேச்சாருடைய 4-ம் வருஷத்தில் நேபுகாத்நேச்சார் கண்ட பொற்சிலை தரிசனத்தை தானியேல் வியார்த்திசெய்து பெரியவனா



னார். இப்போது தானியேலுக்கு 22-வயது. இவருடைய சிநேகிதர் பேரில் சாதுராக், மேஷாக், ஆபேத்நேகோ என்றவர்களும் கனமான உத்தியோகத்துக்கு நியமிக்கப்பட்டார்கள். தானியேல் இராஜ காரியமாய்த் தூரதேசத்துக்குப்போயிருக்கையில் நேபுகாத்நேச்சார் நாட்டின பொற்சிலையை வணங்காததினிமித்தம் அக்கினிச் சூளையில் போடப்பட்டதும், அதிசயமாய் விடுதலையானதும், அதினால் இராஜன் இவர்களுக்குக் கன உத்தியோகங்கொடுத்ததும் (தானி 3-அதி.) கவனிக்கப்படத்தக்க விஷயங்களாம். யோயாக்கீம் பாபிலோன் இராஜாவை மூன்று வருஷம் சேவித்தபின்பு, நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாய்க் கலகஞ்செய்து கப்பங்கொடாமல் எகிப்தின் இராஜாவாகிய பார்வோன் நேகோவோடே சமாதான உடன்படிக்கைசெய்துகொண்டான். (2 இரா. 24: 1.) கி. பி. முன். 603-ல் நேபுகாத்நேச்சார் தமக்கிருந்த பல வேலைகளினால் அவனைத் தண்டிக்கும்படி தாமே வராமல் தமக்குள் அடங்கின அம்மோனியர், மோவாபியர், சூரியர் ,அராபியர்மேல் அதிகாரிகளாக நியமிக்கப்பட்ட கவர்னர்களுக்கு யோயாக்கீமின்மேல் படையெடுத்துப்போய் யுத்தஞ்செய்து பல திசையிலும் சென்று கொள்ளையடித்துச் சிறைப்படுத்த உத்தரவுசெய்தான். (2 இரா. 24: 4.) இவர்கள் 3-வருஷக்காலமாய்ப் பல திசைகளிலுமிருந்து வந்து கொள்ளையடித்துப்போய் யோயாக்கீமின் 11-ம் வருஷத்தில் (கி. பி. முன் 599.) எல்லாரும் சேர்ந்து வந்து எருசலேமை முற்றிக்கைபோட்டு (2 இரா 24: 10 ) இப்படி முற்றிக்கைபோட்டிருக்கையில் யோயாக்கீம் அவர்கள்மேல் பாய்ந்ததினால் அவர்கள் அவனைப் பட்டயத்தினால் கொன்று, எருசலேமின் வாசல்களுக்குப் புறம்பே பெரும்பாதையில் அவன் உடலை எறிந்துபோட்டார்கள். இந்தவகையாய் எரேமியா சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (எரே. 22: 18, 19 36: 30 ) ஓர் கழுதை புதைக்கப்படுகிற வண்ணமாய் வெளியே இழுத்தெறியப்பட்டு, பெரிய நிந்தைக்கேதுவான வகையாய் அவனுடைய உடல் ஆகாயத்தில் தூசியினால் மூடப்படுவதற்கேதுவாயிற்று.

கி. பி முன். 660-ல் யோயாக்கீமோடே சமாதான உடன்படிக்கை செய்துகொண்ட பார்வோன் நேகோவும் 16-வருஷமாண்டபின் இறந்துபோக எகிப்தின் இராஜ்யத்துக்கு அவனுடைய மகனாகிய (Psammis) சாமிஸ் அரசாள வந்தான்.

கி. பி. முன். 598-ல் யோயாக்கீமின் மகன் யோயாக்கீன் (தேவன் நிலைக்கச்செய்வார்) என்பவன் 18-ம் வயதிலே தன் தகப்பன் பட்டத்துக்கு வந்தான். (2 இரா. 24: 8.) ஆனால் அவன் அரசாளத் துவக்கினபோது 8-வயதென்று 2 நாளா. 36: 9-ல் சொல்லியிருக்கிறது. ஓர்வேளை இவன் தன் தகப்பனோடே இளமையில் 8-வயதில் அரசாளத் துவக்கி 18-ம் வயதில் தனிமையாய் அரசாண்டிருப்பான். அல்லது 8-வயதென்பது அவனுடைய வயதைக் குறியாமல் பாபிலோன் முதலாம் சிறையிருப்பின் காலத்தைக் குறிக்கும். (எரே 25: 1. 2 இரா. 23: 36) ஒத்துப்பார் யோயாக்கீனின் முதலாம் வருஷமே அந்த 8-வருஷமாம். இந்த யோயாக்கீனுக்கு வேறே பேர் எகோனியா (1 நாளா. 3: 16. எரே. 24: 1.) இவன் தன தகப்பன் செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். ஆகையால் எரேமியா தீர்க்கதரிசி வசையாக அவனைக் கோனியா என்கிறார். (எரே. 22: 24—30.) "கோனியா வலதுகையின் முத்திரை மோதிரமாயிருந்தாலும், அதிலிருந்து கழற்றி எறிந்துபோடுவேன்" என்று தீர்க்கதரிசி அவன்மேல் தேவசாபத்தைக் கூறுகிறார்.* யோயாக்கீம்

மரித்தபின் நேபுகாத்நேச்சாருடைய வேலைக்காரர் அதாவது அவனுக்குக் கீழ்ப்பட்ட நாடுகளின் அதிபதிகள் இனனும் எருசலேமை முற்றிகைபோட்டிருந்தார்கள். (2 இரா. 21: 10, 11.) யூதர்கள் யோயாக்கீனை நேபுகாத்நேச்சார் சம்மதமில்லாமல் இராஜாவாக்கினதாலும், எகிப்தோடே சேர்ந்து கலகஞ்செய்யத்தக்க சமுசயமுள்ளவனென்று அறிவிக்கப்பட்டதாலும், நேபுகாத்நேச்சார் தாமே தமது இராச சேனையோடே எருசலேமுக்கு விரோதமாய் வந்து அடைகோட்டைப்படுத்தி நெருக்கினதால், யோயாக்கீன் இனி தன்னைக் காத்துக்கொள்ளக்கூடாதென்று அறிந்து, 3-மாசத்துக்குப்பின் தன்னையும், தன் தாயையும், பிரபுக்களையும், வேலைக்காரரையும், நேபுகாத்நேச்சாருக்கு ஒப்புவித்தான். இவன் உடனே விலங்கிடப்பட்டும் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டுபோகப்பட்டும், நேபுகாத்நேச்சாரின் மரணம்வரை அதாவது 37-வருஷம் சிறையில் வைக்கப்பட்டுமிருந்தான். 2 இரா. 24: 13, 16.

## கேள்விகள்.

1. இந்த முதலாம் சிறையிருப்பில் சம்பவித்த காரியங்களென்ன? இதற்குரிய ஆரம்பமும் முகாந்தரமுமென்ன?

2. இந்தச் சிறையிருப்பில் எரேமியா சொன்ன தீர்க்கதரிசனங்களென்ன? ஏன் அப்படி உரைத்தார்?

3. இந்தச் சிறையிருப்பைப்பற்றி தீர்க்கதரிசனமுண்டா?

4 இந்தக் காலத்திலிருந்த பக்தியுள்ள பிரபுக்களார்? இவர்களால் எரேமியாவுக்குக் கிடைத்த சகாயமென்ன?

5. தேவன் தமது ஜனங்களைத் தண்டித்தாலும், அவர்கள்மேல் இரக்கமுமுள்ளவரென்பதைக் காண்பியுங்கள்?

## பிரசங்கக் குறிப்பு.

"நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன்" என்றார்.
யோவா. 11: 11.

தேவபக்தியுள்ள ஓர் குடும்பத்தில் நடந்த வரலாறு இதிலுண்டு. இவர்கள் பெத்தானியாவிலுள்ளவர்கள். கிறிஸ்துவானவர் பண்டிகை ஆசரிக்கப்போகும்பொழுது இவ்விடம் வந்து இரண்டொருநாள் தங்கிவிட்டுப் போவது வழக்கம். இவ்விடத்தில் மூவர் ஒரு குடும்பத்தில் கர்த்தரால் நேசிக்கப்பட்டிருந்தார்கள். ஆனாலும் லாசரு வியாதிப்பட்டான். வியாதி எல்லாருக்கும் வரும் வியாதிப்பட்டதை அறிந்தும் அவர் உடனே வந்து குணமாக்காமல் தாமதித்திருந்தார்.

I. கிறிஸ்துவானவருடைய உற்ற சிநேகரின் நிலைமையின்னது என்று கவனிப்போமாக.

"நம்முடைய சிநேகிதன்." கிறிஸ்துவானவருடைய சீஷன் அவருடைய சிநேகிதனாயிருக்கிறான். ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதனாக



எண்ணப்பட்டான். யோவா. 15: 10. இப்பேர்ப்பட்டவர்களைப்பற்றி நான்கு விசேஷங்களை அறியவேண்டும்.

(1) உள்ளபடி ஒருவரும் கிறிஸ்துவானவருடைய சிநேகிதராயிருக்கத்தக்கவர்களல்ல. சுபாவப்படி நாம் அவருக்குப் பகைஞர். மத். 7: 11.

(2) சுவிசேஷத்தால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற ஒப்புரவாகுதலின்மூலமாய் மாத்திரம் நாம் கிறிஸ்துவானவருக்குச் சிநேகிதராகலாம். சுவிசேஷத்தின் மூலமாகவே நாம் இந்த நிலைமைக்கு வரவழைக்கப்படுகிறோம். அவர் பாவத்தைப் பகைத்தாலும் பாவிகளின் நேசராயிருக்கிறாரென்று சுவிசேஷங் கூறியறிவிக்கிறது.

(3) இப்படி ஒப்புரவாக்கப்பட்டவர்களின் நிலைமை மகா மேம்பாடுள்ளது. இவர்களுடைய நிலைமைக்கு மேற்பட்டதொன்றுமில்லை. யோ. 15: 15. 1 கொரி. 3: 22.

(4) அவரோடு ஒப்புரவாக்கப்பட்டவர்கள் அவருடைய ஜனத்தோடு உறவுபாராட்டுவார்கள். நல்லவர்கள் நல்லவர்களையே சேர்ந்துகொள்ளுவார்கள்.

II. இயேசுவானவர் பிரசங்க வாக்கியத்தை உரைத்த சமயத்தில் லாசரு உள்ளபடி மரித்திருக்க, அவன் நித்திரைசெய்ததாக அவர் சொன்னதேன் என்று கவனிப்போமாக.

மரித்துப்போன பெரியோரைப்பற்றி "போய்விட்டார்கள்" "விழுந்துபோனார்கள்" "சீவித்துப்போனார்கள்" என்று மரியாதையாகச் சொல்லுவோமேயல்லாது, செத்துப்போனார்களென்று சொல்லமாட்டோமே. யூதருக்குள்ளும் இவ்வித வழக்கமிருந்தது. அவர்கள் மரணத்தைப் "படுத்துக்கொள்ளுதலுக்கும்" "நித்திரைக்கும்" ஒப்பிட்டு உரைப்பதுண்டு. உபா. 31: 16. யோபு 7: 21. தானி. 12: 2. புதியஏற்பாட்டிலும் நித்திரையென்று அது பாவித்துரைக்கப்பட்டிருக்கிறது. 1 கொரி. 11: 15. 1 தெச. 4: 14.

இப்படிப் பாவித்துரைப்பது சரிதானென்று ஐந்து காரியங்களால் காண்பிக்கிறேன்.

(1) நித்திரைசெய்கிறவனுடைய கண்கள் மூடியிருக்கும். அவனுடைய சரீரப்புலன்கள் முயற்சியாயிராமல் அவை அடக்கமாயிருக்கும். மரித்தவனுக்குமிப்படியே. ஆனாலும் ஒரு வித்தியாசமுண்டு. அவன் மூச்சுவிடுவான். இவனுக்கு மூச்சிராது. அவனுடைய உடல் அனலாயிருக்கும். இவனுடையதோ குளிர்ந்துபோயிருக்கும். அவனுக்கு நாடியோட்டமிருக்கும். இவனுக்கோ நாடி விழுந்துபோயிருக்கும்.

(2) நித்திரைக் காலம் இளைப்பாறுங் காலமாயிருக்கிறது. பகலெல்லாம் வேலைசெய்த மனுஷன் இராவில் இளைப்பாறுதலை அடைய நித்திரைசெய்கிறான். மரணமும் அப்படியே. ஆனால் தூங்குகிற மனுஷனை அலட்டித் தொந்தரிப்போமோ! அப்படியே மரிக்கிற மனிதருக்காக நாம் மிகுதியுந் துக்கிப்பது போதாது.

(3) நித்திரைக்காலம் வேதனைக்கு விலகிய காலம். நன்றாய் வேலைசெய்தவன் நித்திரைசெய்தால் வலி தோன்றாது. மரணத்திலும் அப்படியே.

(4) நித்திரை சரீரத்துக்கு மாத்திரமுரியது. ஆத்துமமோ நித்திரைசெய்கிறதில்லை. மரணமும் ஆத்துமத்துக்கல்ல, சரீரத்துக்கு மாத்திரமுரியது.

(5) நித்திரை கொஞ்சக்கால மாத்திரமிருக்கும். மரண நித்திரையும் அப்படியே. நாம் மரித்தாலும் என்றென்றைக்கும் மரித்துக் கிடப்பதில்லை, எக்காள சத்தம் தொனித்தவுடனே நாமெல்லாரும் உயிர்த்தெழுவோமே.

## பலிதம்.

1. கிறிஸ்துவானவர் உங்கள் சிநேகிதர் தானா? அவர் லாசருவைத் தமது சிநேகிதனென்றழைத்தார். உங்களையும் அப்படி அழைக்கப் பாத்திரராயிருக்கிறீர்களா? அவர்பேரிலே "வாங்கா விசுவாசமும்" "மாறாப் பக்ஷமும்" "ஓயா அந்நியொந்நிய ஐக்கியமும்" உங்களுக்கிருக்கிறதா? இம்மூன்றும் இருந்தால் நீங்கள் அவருக்குச் சிநேகிதர்தான்.

2. நித்திரையாகிய மரணத்துக்கு ஓர் ஆயத்தம் அவசியம். ஆமோ. 4: 12. நல்ல ஆயத்தத்தோடு நித்திரைக்குட்படுகிறவர்களே நல் இளைப்பாறுதலைக் கண்டடைவார்கள்.

3. சமாதானத்தோடு நல் மரணமடைய விரும்புகிறவர்கள் பரிசுத்தமாய் நடப்பது அவசியம். இப்பேர்ப்பட்டவர்கள் மரணத்துக்கஞ்சாமல் வா நித்திரையின் தோழாவென்று அதை வருந்தி அழைப்பார்கள்.

4. குணப்படாதவர்களுடைய கல்லறை சிறைச்சாலைக்கொத்திருக்கிறது. சிறைச்சாலையில் கிடக்கிறவன் பல எண்ணங்களால் கலங்கி அலைசடிப்படுவான். குணப்படாதவர்களுடைய நிலைமையும் இப்படியே. உங்களுக்கோ அது நித்திரைக்கேற்ற இன்பஸ்தலமாயிருக்கத் தக்கதாக கிறிஸ்துவானவருக்கு இப்போதே சிநேகிதராகுங்கள்.

---

"இயேசு கண்ணீர் விட்டார்." யோவா. 11: 35.

---

இதுயாவிலுஞ் சிறிதான வசனம். இதைப்போல் சிறிதான வேறு சில வாக்கியங்களுமுண்டு. 1 தெச. 5: 16. 19: 25. இதுவோ எல்லாவற்றிலுஞ் சிறிது. இரண்டு வார்த்தைகள் மாத்திரம் இதிலுண்டு. பொருளோ மகா விஸ்தாரம். இயேசு மூன்று முறை கண்ணீர்விட்டார். (1) லாசருவின் கல்லறையண்டை. (2) எருசலேமுக்காக. லூக். 19: 41. (3) பாடுபடுதலின் காலத்தில். எபி. 5: 7. இவர் "மனுஷனாக" லாசருவின் கல்லறையண்டை கண்ணீர் விட்டார். "தீர்க்கதரிசியாக" எருசலேமருகே கண்ணீர் விட்டார். "ஆசாரியராக" பாடுபடுதலின் காலத்தில் கண்ணீர் விட்டார். முதல்விசை ஒரு குடும்பத்துக்காக அழுதார். அது நீரூற்றுக்குச் சரி. ஆதி. 49: 22. இரண்டாம் விசை ஒரு முழுப் பட்டணத்துக்காக அழுதார். அது நீர்க்கால்களுக்குச் சரி. சங். 119, 136. மூன்றும் விசை பாவிகளான சருவலோகத்தாருக்காக அழுதார். அது சமுத்திரத்துக்குச் சரி. மீகா. 7: 19.

இவ்வாக்கியத்தின்பேரில் இரண்டு காரியங்களைக் கவனிப்போம்.

I. இயேசுவானவர் எப்படிப்பட்டவராகக் கண்ணீர் விட்டார்.

1. மனிதனாக—அவர் தேவனாகயிருந்ததுமன்றி மனிதனுயுமிருந்தாரென்று நாம் தியானித்துக்கொள்ளவேண்டும். எபி. 3: 1. அவர் ஆதாமின் சந்ததியானும் ஆபிரகாமின் வித்தானுமாயிருக்கிறார். நமக்காகப் பாதபிக்கும்படி அப்படியிருக்கிறார். அப்படியிருப்பதால்தான் கண்ணீர்விட்டார்.

2. சிநேகிதனாக.—அந்நியருக்காக நாம் துக்கித்தாலும் கண்ணீர் விடுகிறது வழக்கமல்ல. சிநேகிதருக்காகவோ கண்ணீர் விடுவோம். இயேசுவானவர் லாசருவைச் சிநேகித்தவரானதால் அவனுக்காகக் கண்ணீர் விட்டார். வியாதியில் கிடக்கிற சிநேகிதனுக்காக ஐயோவென்போம். அவன் மரித்துப்போனால் கண்ணீரும் விடுவோமே. நமது கர்த்தர் லாசருவை மாத்திரமல்ல, மார்த்தாளையும் மரியாளையுஞ் சிநேகித்ததால் கண்ணீர் விட்டார்.



3. இரக்ஷகராக.—பாவத்தின் பலனாக மரணம் நேரிட்டதென்று தம்மில் உணர்ந்து இவ்வாறு அழுதார்.

பாவிகளே! தேவமைந்தனானவர் உங்கள் பாவங்களுக்காகக் கண்ணீர்விட்டிருக்க, நீங்கள் இன்னம் சிற்றின்பத்தில் பிரியங்கொண்டிருப்பீர்களோ? உங்கள் பாவங்களை நினைத்துக் கண்ணீர் விடுங்கள். அழுகிறவர்கள் பாக்கியவான்களென்று நமது ஆண்டவர் உரைத்த வசனத்தைச் சிந்தித்துக்கொள்ளுங்கள். "கண்ணீர் சொரியக் கருணைபுரியும், தேவனே" என்று அகுஸ்தீன் என்பவர் பிரார்த்தித்ததுண்டு. "உத்தம நெஞ்சத்தார் அழுது புலம்ப அகாவுகொண்டிருப்பார்கள்" என்று அம்புரோஸ் என்பவர் வசனித்திருக்கிறார். பாவம் நிறைந்த உலகை அழிக்கும்படி தேவன் வானத்தின் மதகுகளைத் திறந்ததுபோல, உத்தமர் தங்களிலுள்ள பாவமனைத்தையும் அழிக்கக் கண்ணீர் ஊற்றுகள் திறவுண்கச்செய்கிறார்கள்.

II. இயேசுவானவர் கண்ணீர்விட்டதால் நாம் கற்றுக்கொள்ளத்தக்க படிப்பினைகள்.

1. கிறிஸ்துவானவருக்கு உத்தம சிநேகிதராயிருப்பவர்கள் மரணத்துக்கு நீங்கினவர்களல்ல. மரணத்தின் மூலமாகவே நாம் அவரண்டை போய்ச் சேரவேண்டும்.

2. மரித்துப்போன நம்முடையவர்களுக்காக நாம் கண்ணீர் விடுவது நியாயந்தான். 1 தெச. 4: 13. தண்ணீர் தீயைத் தணிக்கும்; கண்ணீர் மனதின் தாபத்தைத் தணிக்கும்.

3. உத்தமரின் மரணத்தை ஆண்டவர் மறக்கமாட்டார். கர்த்தருக்குட்பட்டு மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்.

4. மரணமானது நமது ஆண்டவருடைய ஆளுகைக்குட்பட்டது. நானே உயிர்த்தெழுதலுஞ் சீவனுமாயிருக்கிறேன், மரணமே, உன் கூர் எங்கே. பாதாளமே, உன் ஜெயமெங்கே.

5. இயேசுவானவருடைய திருச்சமுகம் எப்பேர்ப்பட்ட நிலைமையிலுமுள்ளவர்களுக்கு ஆறுதலைத் தரத்தக்கது. வியாதியஸ்தனுக்குஞ் சாகக்கொடுத்தவனுக்கும் அவருடைய நாமமும் வசனமும் மகா ஆறுதலைத் தரும். லாசருவின் கல்லறையண்டை நின்று அவனுக்காக இரக்ஷகர் கண்ணீர் விட்டதைக் கண்டவர்கள். இதோ அவனை எத்தனையாய்ச் சிநேகித்தாரென்று சொல்லியிருக்க, சிலுவையில் நமக்காகத் தமது திருவிலாவிலிருந்து இரத்தமும் தண்ணீரும் பொழிந்திடச்செய்த அந்த இரக்ஷகர் நம்மை எத்தனை அதிகமாய்ச் சிநேகித்தாரென்று நாம் சொல்லவேண்டாமா?

அவர் எங்கே பிரசன்னமாயிருக்கிறாரோ அங்கே சந்தோஷமுஞ் சமாதானமுமுண்டு. சூரியன் உதிக்க இருள் பறப்பதுபோல சீவனின் கர்த்தர் வெளிப்படச் சாவின் அருக்களிப்புகளெல்லாம் அகன்றுபோய்விடும். ஆதலால் அவர் எப்போதும் நம்மண்டையிலிருக்கும்படி அவரை வருந்திப் பிரார்த்தித்துக்கொள்ளக்கடவோம்.

---

## இரோனியூசையரவர்கள் எழுதிய இரண்டு காகிதம்.

சீனிவாசகம்பிள்ளை உபதேசியாருடைய விசாரணைக்குள்ளாயிருக்கிற உபதேசிகளுக்கு கர்த்தாவினுடைய ஆசீர்வாதமுண்டாக வாழ்த்தி எழுதுகிற உத்தரவு என்னவென்றால்,

நீங்கள் நாள்தோறும் உங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற சபையாருக்குத் திவ்விய அறிவும் மோக்ஷகதியை அடைகிறதற்கு எதுவான பரிசுத்த நடக்கையுமுண்டாகும்படிக்கு நாடோறும் தேவவசனங்களையும் சன்மார்க்கப் புஸ்தகங்களையும் வாசித்துப் புத்திசொல்லிவருகிறதையும் நீங்கள் இருக்கிற இடத்தைச் சூழ்ந்திருக்கிற விக்கிரகபக்திக்காரர் முதலானவர்களும் இரக்ஷிப்பின் மார்க்கத்தை அறிந்து கர்த்தாவினிடத்துக்கு மனந்திரும்பும்படிக்குத் தேவவசனங்களைச் சொல்லி சிறு புஸ்தகங்களைக் கொடுத்து வருகிறதையும் நீங்களும் திவ்விய அறிவிலே அதிக மதிகமாய்த் தேறும்படிக்கு நாடோறும் இன்னின்ன புஸ்தகங்களைப் படித்தறிந்து வருகிறீர்களென்பதையுங் கிறிஸ்தவர்களிலும் விக்கிரகபக்திக்காரர் முதலானவர்களிலும் தேவவசனத்தினாலே உத்தம விசுவாசமுதலான நன்மைகளுண்டாயிருக்கிறதென்று நம்புகிறதற்கு விசேஷமான நன்மைகளுண்டாயிருக்கிறது என்பதையுங் குறித்து அறியவேண்டியதாயிருக்கிறபடியினாலே நீங்கள் நாடோறும் காலையிலும் மாலையிலும் ஜனங்களுக்கு வாசிக்கிற வேதவாக்கியமின்னதென்றும் இத்தனை ஜனங்கள் கோவிலுக்கு வந்தார்களென்றும் விசேஷமாய் ஓய்வுநாட்களில் நீங்கள் எந்தத் திருவசனத்தைக் குறித்து எவ்விதமாய்ப் பிரசங்கம்பண்ணினீர்களென்றும் அன்று எத்தனை ஜனங்கள் கூடிவந்திருந்தார்களென்றும் விக்கிரகபக்திக்காரரிடத்தில் திருவசனங்களைக்குறித்துப் பேசிக்கொண்டு அவர்களுக்கு என்ன புஸ்தகங்கொடுத்தீர்களென்றும் இத்தை நாடோறும் நீங்கள் செய்கிற வேலைகளை அதிக விரிவாயும் அதிகச் சுருக்கமாயும் எழுதாமல் ஷை வேலைகள் தெரியும்படிக்கு மாத்திரம் நிதானமாய் எழுதி உங்கள் விசாரணை உபதேசியிடத்தில் ஒப்புவிப்பீர்களாக.

௲௮௱௮௰௪ ஜனுவரிமீ ௮ௗ.
சி. இரோனியூஸ் ஐயர் என்று கையெழுத்து வைத்திருக்கிறது.

சுவிசேஷ போதக சங்கத்தைச்சேர்ந்த இரோனியுசையர் சீவானந்தபுரத்திலுள்ள உபதேசிக்கும் சபையாருக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையை வாழ்த்தி எழுதுகிறதென்னவெனில்,

நான் பண்ணைவிளையிலிருந்து உங்கள் ஊருக்கு வந்து உங்களுக்குச் சில ஞான நன்மைகளைச் செய்யும்படிக்கு விருப்பமாயிருந்தேன். அதற்குத் தடையுண்டாயிற்று. வேறொரு காலத்திலே அப்படிச் செய்யும்படிக்குக் கர்த்தர் கிருபைசெய்வாரென்று நம்புகிறேன். நீங்களெல்லாரும் அவரைப் பற்றும் விசுவாசத்திலேயும் அவருடைய வசனத்திற்கேற்ற நீதியுள்ள நடக்கையிலேயும் பெருகுவீர்களாக. அப்படிச்செய்தால் மரணம் உங்களுக்குச் சந்தோஷமான இடத்துக்குக் கொண்டுபோம். இவ்வுலகப்பொருளின்மேல் நம்பிக்கையை வையாதிருங்கள். அது காற்றுப்போல பறந்தோடிப்போகிறதே. பராபரன் இயேசுகிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தினாலே நமக்குக் கொடுக்கிற ஞான திரவியத்தையே அடையும்படி மிகவுஞ்



சாக்கிரதையாயிருங்கள். நித்திய மகிமையுடைய கிறிஸ்துநாதர் எளியவர்களாகிய நம்மை ஐசுவரியவான்களாக்கும்படிக்கு இவ்வுலகத்திலே எளியவரானாரென்று இந்தக் கிருபையை மறவாமல் நன்றாய் நினைத்து, அவருடைய திருவசனத்தை நாடோறும் கருத்தோடே படித்துக்கொள்வீர்களாக. உங்கள் கவலைகளெல்லாவற்றையும் அவருடைய பாதத்திலே வைத்துவிடும்படிக்கு உத்தரவுகொடுத்தாரே. அந்தப்படியே செய்யுங்கள்.

அன்புள்ள பராபரன் உங்களை என்றென்றைக்கும் காப்பாற்றக்கடவர்.

௲௮௱௮௰௩ அக்டோபர்மீ ௨௧ௗ, பாளையங்கோட்டை.
சி. இரோனியூஸ் ஐயர்என்று கையெழுத்து வைத்திருக்கிறது.

இதைச் சேர்வைகாரன்மடத்திலுள்ள சபைக்கும்போய் வாசித்துக் காட்டவேண்டும்.

இது சீவானந்தபுரத்திலுள்ள ஞானக்கண்ணுபதேசியாருக்குஞ் சபையார்க்குங் கொடுக்கப்படுவது என்று மேல்விலாசம்.

## கனம் சாப்ட்டர் ஐயரவர்கள் எழுதிய ஒரு காகிதம்.

கீழ் திசையிலிருக்கிற சுவிசேஷ போதக சங்கத்தைச் சேர்ந்த உபதேசிமார்களுக்கு எழுதுகிறதென்னவென்றால்,

இப்பவும் நம்முடைய அன்புள்ள சகோதரராயும் கிறிஸ்துவுக்குள் தகப்பனாகவுமிருந்த கனம் இரோனியூஸ் ஐயரவர்கள் நாளது மீ 5ௗ செவ்வாய்க்கிழமை சாயுங்காலம் ஆறு மணிக்கு மிகுந்த சமாதானத்துடனே கர்த்தருடைய இராஜ்யத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். இந்தப் பெரிய துக்கமான செய்தியை அறிந்துகொள்ளுகிற சகல உபதேசிமார்களும் சபையார்களும் (வருகிறவர்கள்) 6ௗ புதன்கிழமை மூன்று மணிக்குள்ளாக வரும்படி சாக்கிரதையாகவேண்டியது.

௲௮௱௮௰௪ ஜூன்மீ ௫ௗ, சிந்துபூந்துறை.
பி. சாப்ட்டர் ஐயர் என்று கையெழுத்து வைத்திருக்கிறது.

கீழ்திசையிலுள்ள சுவிசேஷ போதக சங்கத்தின் உபதேசிமார்கள் சபையார் பார்க்கிறவர்கள் மற்றவர்களுக்குத் துரிதமாய் அனுப்பவேண்டும் (என்று மேல்விலாசம்.)

கனம்பொருந்திய மில்லரையரவர்கள் சீமைக்குப்போகப் புறப்படும்போது சத்தியநகரம் விசாரணைச் சேகரத்துக்கு எழுதின பொதுவான நிருபம்.

பிரியமுள்ள உதவி விசாரணை பரமானந்தம் பிள்ளைக்கும் தம்முடைய சேகரத்திலிருக்கிற உபதேசிமார், உபாத்திமார், சபையாருக்கும் கர்த்தருடைய ஆசீர்வாதமுண்டாவதாக. இப்பொழுது உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி நாங்கள் கர்த்தருடைய சித்தத்தினால் உங்களைக் கொஞ்சக்காலத்துக்காக விட்டுவிடவேண்டியதாய் இருக்கிறபடியினாலேயும் இதைக் குறித்து உங்களெல்லாரையும் பார்த்துப் பேசிக்கொள்ளுகிறதற்குச் சமயம் நேரிடாததினாலேயும் இந்த வசனங்களை உங்களுக்கு ஆறுதலாக எழுதுகிறோம். கர்த்தரிடத்தில் நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள். இந்நாள் வரையில் அவர் உங்களை விசாரித்ததுபோல இனிமேலும் அப்படிச்செய்

வாவென்று விசுவாசித்துக்கொள்ளுங்கள். நம்மை இரக்ஷித்துக்கொண்டு வருகிற இயேசுகிறிஸ்துவை மரணபரியந்தம் உண்மையாய்ப் பற்றிக்கொண்டு அவருக்கு ஊழியஞ்செய்யுங்கள். சுவிசேஷ மார்க்கமாகிய சத்தியத்திலே நிலைத்திருங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களோடிருப்பார். மேலும் அவர் உங்களைத் திக்கற்றவர்களாக விடார். கனம்பொருந்திய சார்ஜென்று ஐயரவர்கள் உங்களை அன்பாய் விசாரிக்கும்படிக்குச் சித்தமாயிருக்கிறார்கள். ஷை ஐயரவர்கள் வரும்பொழுது அவர்களுடைய உத்தரவின்படி நடந்துகொண்டு கர்த்தருக்குள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து பொறுமையாயும் தாழ்மையுள்ள மனசுள்ளவர்களாயுமிருங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களையும் உங்கள் வேலையையும் ஆசீர்வதிப்பார். சகோதரரும் சிநேகிதருமானவர்களே எங்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபம்பண்ணி உங்களை அடிக்கடி நினைத்துக்கொள்வோம். கர்த்தருக்குச் சித்தமானால் இரண்டு மூன்று வருஷங்களுக்குப்பின்பு திரும்ப உங்களிடத்தில் வரவிரும்புகிறோம். நாங்கள் வந்தாலும் வராவிட்டாலும் கர்த்தரிடத்தில் நிலைத்திருக்கிறீர்களென்று நாங்கள் கேள்விப்படும்போது சந்தோஷமாயிருப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து உங்களைக் காத்தருளக்கடவர். கர்த்தர் தம்முடைய திருமுகத்தை உங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணி உங்கள்மேற் கிருபையாயிருக்கக் கடவர். கர்த்தர் தம்முடைய திருமுகத்தை உங்கள்மேல் ஏறெடுத்து உங்களுக்கு இப்பொழுதும் எப்பொழுதுஞ் சமாதானங் கட்டளையிட்டருளக்கடவர் ஆமென்.

இந்தக் காகிதத்தை ஒவ்வொரு உபதேசிமாரும் தங்கள் சபைகளுக்கு வாசித்துக் காண்பிக்கவும்.

௲௮௱௮௰௪ ஜனுவரி௴ ௰௯௨,<br>சுவிசேஷபுரம்.

மில்லர் ஐயர் என்று கையெழுத்து வைத்திருக்கிறது.

இந்தக் காகிதத்தை ஒவ்வொரு உபதேசிமாருந் தங்கள் சபைகளுக்கு வாசித்துக் காண்பிக்கவும்.

மில்லர் ஐயர் என்று கையெழுத்து வைத்திருக்கிறது.

குறிப்பு. திருநெல்வேலி திருச்சபையின் பிதாக்களாகிய அருமையுள்ள ஐயன்மார்கள் முதலியவர்கள் முன் நாட்களில் சபைகளுக்கு எழுதிய நிருபங்கள், சபையின் பூர்வ சரித்திரத்தை விளக்குவதற்கு உத்தம தஸ்தவேசுகளாம். இப்படிப்பட்ட காகிதங்கள் இதற்குமுன் அச்சிடப்படாமல் யார் வசத்திலாவது இருக்குமானால் அவைகளைப் பந்தோபஸ்தாய் எமக்கு அனுப்புவிக்கிற விஷயத்தில் அவைகள் நற்போதகத்தில் அச்சிடப்படும்.

நற்போதக பத்திராதிபர்.

## தெய்வ இரக்கத்துக்காக விண்ணப்பம்.

இராகம் மோகனம். தாளம், ரூபகசாப்பு.

பல்லவி.

இன்னமுன் மனதிரங்கலையோ நான்
எதுசெய்தாலும் என், தாதைநீ யிலையோ.— இன்



அனுபல்லவி.

பொன்னிலத்தவர் நிதம், போற்றியே புகழ்ந்திடும்
பூமனே ரக்ஷாபி ஷேகனன்னுமனே.— இன்

சரணங்கள்.

1 ஆசையோடுன்பதம் தேடி வந்தேன்
ஆனந்தமாகச் சங் கீதங்கள் பாடி ஆசை—டி
தாசனிடுங் குரல், காதினிலுறையாதோ
தாரணிமேல் வந்த காரணம் வேறேதோ.— இன்

2 பாவசாகரத்தினி லாழ்ந்தேன் பாவப்
பாரஞ்சுமந்துந்தன் பாதத்தில் வீழ்ந்தேன் பாவ—ன்
ஆவலாய்க் கைகொடுத் தாறுதல் சொல்லிடும்
அண்டினபாவிக்குன், ஆவியை நல்கிடும்.— இன்

3 சாமிபராமுக மாமா உன்னைத்
தன்னைனீவாவென்ற சொல்லும்பொய்யாமா சாமி—மா
பூமியிலுனையன்றிப் புகலிடம் வேறுண்டோ
போக்குவார்த்தை சொன்னாற் புத்திரனானன்றோ.— இன்

4 கேளுங்கள் தருவோமென்றீரோ சற்றுங்
கேட்காத பேர்க்குயிர், உதவிநின்றீரோ கே—ரோ
தாளும்சாம்பலுமாகத் தோஷி நான்பதத்தோரம்
தொழுதுகெஞ்சுறேன் கரம், தூக்கியேவெகுநேரம்.— இன்

5 தாசர்பலர் சத்தங்கேட்டீர் அவர்
தங்களைத் துன்பங்கள் யாவிலுமீட்டீர் தாசர்—ர்
நீசஅடியர்தம் நேசனே பாசனே
நின்பாதமே கதிவேறில்லை யீசனே.— இன்

## தீர்க்கதரிசனம், அருள்வேதத்திற்கு அத்தாக்ஷி.

(தொடர்ச்சி.)

10. இதரமத நாசம். இதரமதங்களியாவும் நொறுங்குண்டு பூமியில் இடங் கிடையாமற்போமென்றும் விக்கிரகங்கள் கட்டோடே ஒழிந்து போமென்றும் அளவிறந்த தீர்க்கதரிசனங்கள் வேதாகமத்திலுண்டு; கிறிஸ்துநாதர் திருஅவதாரமாகி கிறிஸ்துமத ஸ்தாபனம்பண்ணுமுன் யூத ஜாதியாரைத்தவிர உலகத்திலுள்ள ஜனங்கள் விக்கிரகாராதனைக்காராகவே இருந்தார்களென்றும் நரபலிமுதலிய கொடிய அநியாயங்களை நடப்பித்துவந்தார்களென்றும் பூர்வீக சரித்திரத்தை வாசிக்கும் எவருக்குந் தெரிந்த விஷயம். ஒளி வர இருள் போயிற்று என்றபடி கிறிஸ்துமதம்

பிரபல்யமான சகல தேசங்கள் தீவுகளில் விக்கிரகாராதனையும் அதோடு கலந்த தீமைகளும் நாசமாய்விட்டன; நாசமாகியும் வருகின்றன. அன்றியும் கிறிஸ்துமதஸ்தர் மத்தியிலும் அவர்களைச் சூழவும் இருக்கிற இதரமதஸ்தருடைய மனதிலே தம் சுயமதத்தைப்பற்றிய அபிமானமும் ஆசாரமும் நாளாரம்பத்தில் குறைந்துகொண்டே வருகிறது. இதை மறுக்கக்கூடியதார்?

1. மேற்காட்டியவைகளேபோலும், அனந்த நியாயங்கள் உண்டு. அவைகளையெல்லாம் எடுத்துரைக்கில் விரியுமாதலால் சுருக்கமாய்ச் சொல்லியிருக்கிறது.

2. வெகுகாலத்திற்கு முன்பாகக் கூறப்பட்ட தீர்க்கதரிசனங்கள் இக்காலத்திலும் நிறைவேறிவருவதைப் பார்க்கும்போது இன்னின்ன காரியங்கள் இன்னின்ன காலத்தில் நிறைவேறப்போகின்றனவென்று முன்னமே அறிவிக்கப்பட்டிருக்கிறதல்லாமல் எந்தத் தீர்க்கதரிசனமாவது சிலர் ஆக்ஷேபிக்கிறபடி சம்பவித்தபிற்பாடு எழுதப்படவே இல்லையென்று விளங்குகிறது.

3. நிறைவேறின தீர்க்கதரிசனங்களை வேதாகமத்தில் மாத்திரமல்ல, இதரமதஸ்தரான பலர் எழுதியிருக்கும் புஸ்தகங்களிலும் காணலாமாதலால் வேதாகம சங்கதிகள் யாவும் நிச்சயமாய் நடந்தவைகளேயன்றி பொய்யல்லவென்று தெரியவரும்.

4. விசேஷமாய் ஒரு காரியம் இன்னின்னவிதமாய்ச் சம்பவிக்குமென்று ஒரு தீர்க்கதரிசனம் முன் குறித்திருக்க, அதேபிரகாரம் அக்காரியம் நிறைவேறியும் இருக்க பிந்தியகாலத்தில் நடக்கும் சம்பவங்களையும் அந்தத் தீர்க்கதரிசனங் குறிக்குமானால் நாம் அதைப்பற்றி என்ன சொல்லலாம்? அத்தன்மைபொருந்திய தீர்க்கதரிசனங்கள் அனந்தம் வேதாகமத்திலிருக்கின்றன. ஆகையால் கிறிஸ்துமத தீர்க்கதரிசனங்கள் மனித சூழ்ச்சிகளேயல்ல, திவ்ய மகத்துவம்பொருந்தியவைகள்தான் என்று விளங்காமற்போகாது.

5. தீர்க்கதரிசிகள் முக்கியமாய் தெய்வஊழியக்காரராக இருந்து தாங்கள் உரைத்தவைகளை தெய்வநாமத்திற்கு மகிமையானவிதமாக உரைத்திருப்பதினாலே தேவனுடைய பரிசுத்த மனுஷர் பரிசுத்தஆவியினால் ஏவப்பட்டுப் பேசினார்கள் என்றெழுதியிருக்கிறபிரகாரம் அவர்கள் பொல்லாத ஆவியினாலல்ல கடவுளாலேயே ஏவப்பட்டு அவருடைய கடாட்சத்தினாலே தீர்க்கதரிசனங்களை எழுதினார்கள் என்று தெரிகிறது.

6. மேற்காட்டிய சகல நியாயங்களினாலும் கிறிஸ்துமத நூலிற் சொல்லப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள் சத்தியமும் தெய்வீகமுமானவைகளென்றும் அவைகளையும் அவைகளோடு சம்பந்தப்பட்ட யாவற்றையும் எழுதினவர்கள் தேவானுக்ரகத்தினாலேயே எழுதினார்களென்றும் இவ்வித தீர்க்கதரிசனங்களை விசேஷித்த அத்தாக்ஷியாகக் கொண்ட கிறிஸ்து மதம் சத்திய மதமேயென்றும் ரூபகாரமாகிவிட்டது.

---



# உபதேசங்கள், அருள்வேதத்திற்கு அத்தாட்சி.

கிறிஸ்துமத நூலில் மகத்வம்பொருந்திய உபதேசங்களடங்கியிருக்கின்றன.

விஸ்தாரமான பிரபஞ்சத்தைப்பற்றிச் சற்றுநேரம் ஆலோசனைபண்ணிப் பார்த்தால் சர்வஞானமும் சர்வவல்லமையுமுடைய ஒருவர் அதை அமைத்து வைத்திருக்கிறாரென்றும் அதில் நிகழ்ந்துவரும் பல காரியங்களைக் கவனித்தால் அவர் நற்சித்தமுள்ளவராயிருக்கிறார் என்றும் மனச்சாக்ஷியையும் அதன் போதனையையும் சற்று ஆராய்ந்துபார்த்தால் அதை உண்டாக்கி ஒவ்வொரு மனுஷனுடைய உள்ளத்திலும் அதைப் பதித்து வைத்தவர் மகா நீதிபரர் என்றும் விளங்காமற்போகாது. பிரபஞ்ச சிருஷ்டிகளையும் அவரது குணங்களையும்பற்றி இவ்விதமாய் மனதிற் படுகிற காரியங்கள் ரொம்பவும் சொற்பமும் பொதுப்படத் தெளிவில்லாமலுமிருக்கின்றன. ஆகையால் இயற்கை செயற்கை அறிவுகளாலுண்டாகிற இயல்வேதத்தினால் புலப்படுகிறதும் புலப்படாததுமான பல காரியங்களைக் கடவுள் தாமே மனுஷனுக்கு வெளிப்படுத்தவேண்டியதவசியமாக இருக்கிறது. இப்படி அருள்வேதமாகிய கிறிஸ்துமத நூலிற் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற வேதோபதேசங்கள் அநேகமாயிருக்கின்றன. அவைகள் யாவற்றையும் விவரித்தெழுதினால் பெருகுமாதலால் சிலவற்றை மாத்திரம் இங்ஙனம் சற்று சுருக்கமாய்ப் பார்ப்போம்.

1. கடவுளைப்பற்றி அவர் உண்டென்றும், ஒருவராகவும் அரூபியாகவும் ஒளியாகவும் இருக்கிறாரென்றும், சர்வவியாபகம், சர்வஞானம், சர்வவல்லபம், சம்பூரணம், ஆதியந்தமில்லாமை, மாறாமை, சுயம்பு, பரிசுத்தம், நீதி, விவேகம், சத்தியம், அன்பு, கிருபை, நீடியசாந்தம், இரக்கம், மனஉருக்கம் முதலிய குணங்கள் பொருந்தியவராகவும், ஆராயவுக்கெட்டாதவராகவும், மகிமையுள்ளவராகவும், மகா உன்னதமானவராகவும், பாவகாரணரல்லாதவராகவும், பாவங்களை மன்னிக்கிறவராகவும், பாவத்தினிமித்தம் துக்கப்பட்டு தாம் ஏற்படுத்திய பாதை வழியாகத் தம்மை ஜாக்கிரதையாய்த் தேடித் தம்மண்டைக்கு வருகிற பாவிகளை ஏற்றுக்கொண்டு இம்மையிலே அவர்களுக்கு வேண்டிய ஆசீர்வாதங்களையும், மறுமையிலே நித்தியஜீவனையும் அருளுகிறவராகவும் மற்றவர்களை நித்திய நரகத்தில் தள்ளுகிறவராகவும் இருக்கிறாரென்று சொல்லுகிறது.

2. ஆதியிற் கடவுள் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தாரென்றும், ரூபமில்லாமலும் வெறுமையாகவும் ஆழத்தின்மேல் இருளுமாயிருந்த இப்பூமியிலே புற்பூண்டு விருக்ஷங்களையும், நீந்துவன, பறப்பன, ஊர்வன, நடப்பனவாகிய சகல பிராணிகளையும் படிப்படியாய்ப் படைத்து அவைகளை ஆண்டுகொள்ளவும் பூமியைப் பயன்படுத்தவும் மனுஷனைச் சிருஷ்டித்தாரென்றும் அவனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினாரென்றும் சொல்லுகிறது.

3. கடவுளானவர் மனுஷனை ஆத்ம தேகியாக ஞானம், பரிசுத்தமாகிய தமது சாயலின்படி படைத்து, விவேகம், சித்தம், சுயாதீனம், வல்லமை முதலிய குணங்களையும் அவனுக்குக் கொடுத்தாரென்றும் சொல்லுகிறது.

4. மனுஷன் லௌகீக இன்பங்களையும், பாக்கியங்களையுமே தேடவல்ல, தான் தெய்வசாயலையும் சிறந்த குணங்களையும் உடையவனாகச் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதற்காகக் கடவுளை ஆவியினாலும் உண்மையினாலும் தொழுது ஸ்தோத்தரித்து, கனப்படுத்தி அவரிடத்தில் அன்புகூர்ந்து அவருக்குக் கீழ்ப்படியவும் இனிமேல் கிடைக்கப்போகிற நித்தியானந்தத்தையும் மகிமையையுந் தேடவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறானென்றும் இவ்வுலகமானது மனுஷன் மறுமைக்குப் போவதற்குத் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளும் ஸ்தலமாகவும் தான் பண்ணும் மோக்ஷப்பிரயாணத்திற்கு முதல் தங்கவிடமாகவும் இருக்கிறதென்றுஞ் சொல்லுகிறது.

5. நன்மை தீமை இன்னதென்றறிந்து இரண்டிலொன்றைச் செய்யும்படியான சுயாதீனத்தையுடைய அகத்துப் பிரமாணமென்றும் மனச்சாக்ஷியென்றும்பேர் வழங்கிய ஓர் பிரமாணத்தைக் கடவுள் மனுஷனுடைய உள்ளத்திற் பதித்துவைத்தது மாத்திரமல்ல, அந்தப் பிரமாணத்திற்கிசைவாக இன்னின்னபடி செய் என்ற ஒரு புறத்துப் பிரமாணத்தையும் அவர் மனுஷனுக்குக் கொடுத்திருந்ததாகச் சொல்லுகிறது.

## சமாசாரத்திரட்டு.

**ஆச்சரிய மரணம்.** திருநெல்வேலி ஜில்லா நான்குனேரித் தாலூகா இராதாபுரத்தில் நாளது மே௴ 5௳ சோமவாரத்தன்று மாலை 3-மணிக்கு அதிகமான காற்றும், மழையும், இடியும், மின்னலும் உண்டாயிற்று. அவ்விடத்தில் கட்டப்பட்டிருந்த போலீஸ் லயனில் ஒரு வீட்டிலே ஒரு போலீஸ் சேவகருடைய இறந்துபோன 1-வது தாரத்தின் 3-குழந்தைகளும், 2-ம் தாரஸ்திரீயும், அவள் வயிற்றில் பிறந்த 10-மாதத்துக் குழந்தையும் இருந்தார்கள். இடியும், மின்னலும் ஜாஸ்தியாயிருப்பதை 2-வது ஸ்திரீ அறிந்து குழந்தைகளை மேற்படி வீட்டின் மேல்பக்கத்தில் உள்ள ஓர் சிறிய அறையில்போய்ப் படுத்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டுத் தான் அசௌக்கியமாய் இருந்த தன்னுடைய கைக்குழந்தைக்கு கிஷாயம்போடுவதற்கு அடுப்பில் நெருப்பு மூட்டினாள். இடியும் மின்னலும், ஜாஸ்தியாயிருந்தது. அடுப்புமுன்னிருந்தவள் குழந்தைகளைப் பார்க்கவோ அல்லது எதற்காகவோ, அந்த அறைக்கு வரும்போது வீட்டின் உச்சத்தால் இடிவிழுந்தது. அந்த அதிர்ச்சியோடு பிள்ளைகள்மேலே போய்விழுந்தாள். குழந்தைகள் ஏதோ மேல்விழுந்ததாய் எண்ணி எழுந்திருந்து சத்தம் போட்டுத் தாயாரைக் காணோமென்று அழுதன. இந்தச் சத்தங்கேட்ட அடுத்த வீட்டுப் பெண்பிள்ளைகள் போய்க் குழந்தைகளை ஆறுதல்செய்துவிட்டு அந்த ஸ்திரீயைப் பார்த்தார்கள். மூர்ச்சையடங்கி விழுந்து கிடந்தாள். உடனே ஸ்டேஷனுக்கு ஆள் அனுப்பினார்கள். ஆஸ்பிட்டல் அசிஸ்டெண்டும் வந்தார்கள். சப். மாஜிஸ்டிரேட்டவர்களும், சப். ரிஸ்ஜிதராரவர்களும், இன்னும் நாட்டு வைத்தியம் பார்க்கிற சிலர்களும் வந்தார்கள். ஆஸ்பிட்டல் அஸிஸ்டெண்டு பார்த்த அரை நிமிஷத்துக்கெல்லாம் உயிர் பிரிந்துவிட்டதாய்ச் சொன்னார்கள். நாட்டுவைத்தியர்கள் கைநாடி பார்த்து உயிரிருப்பதாய்ச் சொன்னார்கள். ஆனால் உயிரில்லை. மருந்துகள் மேற்பூச்சாக அனேகஞ் செய்யப்பட்டன. மேற்படி போலீஸ் சேவகரான மேற்படியாள் புருஷன் ஊருக்கு 10-மயில் தூரத்திலுள்ள ஒரு ஊர் ஸ்டேஷனுக்கு தற்காவலத்துக்குப் போயிருந்தார். அவருக்கும் ஆள் அனுப்ப அவர் அன்று இரவு 12-மணிக்கு வந்தார். மறுநாள் காலையில் அவளை அடக்கஞ்செய்தார்கள். இந்தப் பரிதாப ஸ்திதியைப் பார்த்து யாவத்து ஜனங்களும் வருத்தமடைந்தார்கள்.



மலையாள தேச இடங்களில் ஒருவிதமான காய்ச்சல் வியாதியுண்டாயிருக்கிறதாம். அந்தக் காய்ச்சலுண்டான மூன்றாம்நாள் அறிவில்லாமல் போய் அடுத்த நாட்களில் இறந்துவிடுகிறார்களாம்.

பாம்புக் கடிக்குப் பரிகாரம். பாம்புக் கடித்தவுடன் மதார் புஷ்பத்தையும், கம்மார வெற்றிலையையுங் கலந்துகொடுக்க விஷந் தீருமாம். இது ஓர் ரசிகியினுடைய முறையென்று ஆங்கிலேய பததிரிகை ஒன்றில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இருபத்து மூன்றடி நீளமுள்ள ஓர் முதலை ரோகுஹாரி என்னுமிடத்தில் சுட்டு அதின் வயிற்றைப் பரிசோதிக்கையில் ரூபாய் 97-12-0 விலையுள்ள தங்கமூக்குத்திகள் வெள்ளிக்காப்புகள் இருந்தனவாம். இது பதின்மூவரைப் பட்சித்ததாம்.

டான்ஸ்காட் என்பவன் பெண்சாதி ஸ்காத்லாந்தில் மார்ச்சு௴ 29௳ 3-குழந்தைகளைப் பெற்றாள். எல்லாம் சவுக்கியமாயிருக்கின்றன. அவனுக்கு கலியாணமாய் 4-௵ 7-மாதமாயிற்று. இதற்குள் 7-குழந்தைகள் பிறந்திருக்கின்றன. ஒருதரம் 2. மற்றொரு தரம் 2. இப்பொழுது 3.

(க்ஷத்—னி.)

அதிசயம். உருஷியாவிலே ஒன்றரை வயசுடைய பெண்பிள்ளை ஒன்று பதினேழு பிராயமுடைய திடகாத்திர உருவமுடையவளாக வளர்ந்துவிட்டதாகவும், இன்னொரு சிறிய பையன் ஐந்து இராத்திரியில் இருபது பிராயத்து ஆண்பிள்ளையைப்போல் தேககாத்திரத்தை அடைந்ததாகவும்; டிரையூன் என்னப்பட்ட பத்திரிகை சொல்கின்றது. இது பெருத்த ஆச்சரியம்!

ரிப்ளை போஸ்ட் கார்டு. ரிப்ளை போஸ்டு கார்டின் முதல் பாகம், இரண்டாம் பாகம் (அதாவது எழுதாத பாகம்) இரண்டையும் தபாலில் போடவேண்டும். அப்படி இல்லாமல் எழுதின பாதியைப் மாத்திரம் போட்டு, மற்றொரு பாதியைப் போடாவிட்டால், தபாலில் போடப்பட்ட முதல் பாதிக்கு அரையணா சார்ஜ் செய்யப்படும் என்று உத்தரவு ஆயிருக்கிறது.

காயங்கள். காயம்பட்டவுடனே அடுப்புக்கரி, சர்க்கரை, குங்குமம் இவைகளை வைத்து அமுக்குவதை உடனே விட்டுவிடவேண்டியது. ஒரு கந்தைத் துணியைக் குளிர்ந்த தண்ணீரில் நனைத்துக் காயத்தின்மேல் போட்டால் மெத்த நன்மைசெய்யும்.

பர்மா தேசத்திலே அரசனுடைய குமாரத்திகளுக்கு அம்மைகண்டு அவர்களில் இரண்டுபேர் இறந்துபோய்விட்டார்கள். அவர்களுக்கு வைத்தியம் செய்தவர்களை இராஜா ஜெயிலுக்கு அனுப்பிவிட்டார்.

பார்சிக தேசத்து அரசன் விசேஷ தினங்களில் பிடிக்கும் சுருட்டு முழுதும் இரத்தினங்களிழைத்திருக்கிறதாம்.

(திரு—னி.)

ஜூலைமீ நாள்-30. வைகாசிமீ 21௨ முதல், ஆனிமீ 18௨ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
| --- | --- | --- | --- |
| ஞா | 1 | ௨௧ | தாவீதின் சிங்காசனத்தை...அவர் திடப்படுத்துவார். ஏசா. 9:7. |
| தி | 2 | ௨௨ | மேட்டிமையானவைகள் தாழ்த்தப்படும். 10:33. |
| செ | 3 | ௨௩ | பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். 11:9. |
| பு | 4 | ௨௪ | இதோ, தேவனே என் ரட்சிப்பு. 12:2. |
| வி | 5 | ௨௫ | கர்த்தர் வருகிறார். 13:5. |
| வெ | 6 | ௨௬ | நான் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும். 14:24. |
| ச | 7 | ௨௭ | கூக்குரல் மோவாபின் எல்லையெங்கும் சுற்றும். 15:8. |
| ஞா | 8 | ௨௮ | கிருபையினாலே சிங்காசனம் ஸ்தாபிக்கப்படும். 16:5. |
| தி | 9 | ௨௯ | தன்னை உண்டாக்கினவரையே நோக்குவான். 17:8. |
| செ | 10 | ௩௦ | கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவரப்படும். 18:7. |
| பு | 11 | ௩௧ | இஸ்ரவேலராகிய என் சுதந்தரமும் ஆசீர்வதிக்கப்பட்டது. 19:25. |
| வி | 12 | ௩௨ | எகிப்தியருக்கு வெட்கமுண்டாகும்படி, 20:4. |
| வெ | 13 | ௧ | நீங்கள் கேட்க மனதானால், திரும்பிவந்து கேளுங்கள். 21:12. |
| ச | 14 | ௨ | (எலியாக்கீம்)...மகிமையான சிங்காசனமாக இருப்பான். 22:23. |
| ஞா | 15 | ௩ | உனக்கு இளைப்பாறுதல் இல்லை. 23:12. |
| தி | 16 | ௪ | தேசம் தன் குடிகளின்மூலமாய்த் தீட்டுப்பட்டது. 24:5. |
| செ | 17 | ௫ | இதோ கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம். 25:9. |
| பு | 18 | ௬ | கர்த்தராகிய யேகோவா நித்தியகன்மலையாயிருக்கிறார். 26:4. |
| வி | 19 | ௭ | யாக்கோபின் அக்கிரமம் நிக்கிரகம்பண்ணப்படும். 27:9. |
| வெ | 20 | ௮ | கால் நீட்டப் படுக்கையின் நீளம் போதாது. 28:20. |
| ச | 21 | ௯ | சிறுமையானவர்கள் கர்த்தருக்குள் மிகவும் மகிழ்ந்து. 29:19. |
| ஞா | 22 | ௧௦ | அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள். 30:18. |
| தி | 23 | ௧௧ | நீங்கள் முற்றிலும் விட்டுவிலகின வரிடத்தில் திரும்புங்கள். 31:6. |
| செ | 24 | ௧௨ | நிர்விசாரமான குமாரத்திகளே, என் வசனத்துக்குச் செவிகொடுங்கள். 32:9. |
| பு | 25 | ௧௩ | கர்த்தாவே எங்களுக்கு இரங்கும் 33:2. |
| வி | 26 | ௧௪ | வானங்களில் என் பட்டயம் வெறிகொண்டது. 34:5. |
| வெ | 27 | ௧௫ | அவர் வந்து உங்களை ரட்சிப்பார் என்று சொல்லுங்கள். 35.4. |
| ச | 28 | ௧௬ | என்னோடே ராஜியாகி, காணிக்கையோடே என்னிடத்தில் வாருங்கள். 36:16. |
| ஞா | 29 | ௧௭ | நான்...இதற்கு ஆதரவாயிருப்பேன். 37:35. |
| தி | 30 | ௧௮ | உன் கண்ணீரைக் கண்டேன். 38:5. |

## விசேஷ நாட்கள்.

1. பரிசுத்தாவியின் திருநாள்.
8. திரித்துவ ஞாயிறு.
   பௌரணமி.
11. பரி அப். பர்னபாவின் திருநாள்.
15. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 1-ம் ஞாயிறு.
22. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 2-ம் ஞாயிறு.
   அமாவாசை.
29. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 3-ம் ஞாயிறு.
   பரி அப். பேதுருவின் திருநாள்.


# நற்போதகம்.

ஜூலைமீ. ௲அ௱ச[illegible].


## II. பாபிலோன் சிறையிருப்பு.

இது கி. பி. மு. 598-ல் யோயாக்கீன் காலத்தில் நடந்தது.

நேபுகாத்நேச்சார் தன் நாட்டு அதிபதிகளோடே எருசலேமைப் பிடித்து அதைத் தன் வசமாக்கிக்கொண்டு "கர்த்தருடைய ஆலயத்தின் பொக்கிஷங்களையும், இராஜாவுடைய அரண்மனையின் பொக்கிஷங்களையும் எடுத்துக்கொண்டான். விசேஷித்த பொன் பணிமுட்டுகளையெல்லாம் எடுத்துப்போனான். (2 இரா. 24: 13—16. 25: 14, 15.) சாலொமோன் செய்த பொன்தட்டுமுட்டுகளை உடைத்துப்போட்டான். (எரே. 20: 5.)

மேலும் அவன் இராஜாவாகிய யோயாக்கீனையும், அவன் தாயையும், இராஜாவின் மனைவிகளையும், பிரபுக்களையும் எருசலேமில் 19000–பராக்கிரமரையும், சகல தச்சரையும், கொல்லரையும் மற்ற இடங்களில் 7000–பராக்கிரமரையும், கொல்லர், தச்சரான தொழிலாளிகளில் 1000–பேரையும் சிறையாகக்கொண்டுபோனான். எருசலேம் பிடிபடுமுன் வெளிப்பிரதேசத்தில் 3023–பேர் சிறைப்பட்டுப்போயிருந்தார்கள். (எரே. 52: 28.) பராக்கிரமசாலிகளான சிறைகளை நேபுகாத்நேச்சார் தன் சேனையோடே சேர்த்துக்கொண்டான். தொழிலாளிகளை பாபிலோனைக் கட்டும்படி வேலைகொண்டான்.

இந்தச் சிறையிருப்பில்தான் ஆரோனின் வம்சமான பூசியின் குமாரன் எசேக்கியேல் (தேவபலம்) தீர்க்கதரிசியும், பாபிலோனுக்குச் சிறையாகக்கொண்டுபோகப்பட்டார். ஆகையால் எசேக்கியேல் தீர்க்கதரிசி தமது தீர்க்கதரிசனங்களில் இந்தச் சிறையிருப்புமுதலே கணக்கிடுகிறார். எசே. 1: 2, 3. 10: 1.

தேசத்தில் மீதியான ஏழை ஜனங்களின்மேல் அரசாளும்படி யோசியாவின் குமாரனாகிய மத்தனியாவை நேபுகாத்நேச்சார் இராஜாவாக்கி, தனக்கு உண்மையாயிருக்கும்படி ஆணையிடுவித்துக்கொண்டு, அவனுடைய சகோதரன் யோயாக்கீம் கலகஞ்செய்ததால் தேவகோபம் நேரிட்டதை அவன் நன்றாய் அறிந்து கலகஞ்செய்து தேவகோபத்தை வருவித்

துக்கொள்ளாதபடி எப்போதும் ஞாபகமாயிருக்கத்தக்கதாக அவனுடைய
பேரை "தேவநீதி" என்றருத்தமுள்ள சிதேக்கியாவென்று மாற்றினான்.
இதினால் அவன் உண்மைப்பேதகமாய் நடந்தால் தேவதண்டனை வரு
மென்று அறியச்செய்தான்.

சிதேக்கியா 21-வயதில் அரசாளத் தொடங்கி எருசலேமில் 11-வரு
ஷம் ஆண்டான். இவனும் யோயாக்கீமைப்போல கர்த்தரின் பார்வைக்
குப் பொல்லாப்பானதைச் செய்தான். இதினால் யூதேயாவின்மேலும், எரு
சலேமின்மேலும் பயங்கரமான ஆக்கினைகளை வருவித்துக்கொண்டான்.
(2 இரா. 24: 17. 2 நாளா. 36: 10.)

நேபுகாத்நேச்சார் எருசலேமைப் பிடிக்கும்படி உடனே வராத
முகாந்தரமென்னவென்றால், மேதியருக்கும் லீதியருக்கும் நடந்த சண்
டையில் ஆலீஸ் நதிவரை மேதியர் சித்தியரைத் துரத்தி ஆண்டுவரவே,
லீதியர் தங்களுக்கு அந்தப்பிரதேசம் உண்டென்று வழக்கிடவே இரு
பக்ஷத்துக்கும் மத்தியஸ்தம் நடப்பிக்கும்படி தாமதித்தான். இந்தச் சமை
யத்தில் யுத்தம் நடவாதபடி சூரிய கிரணமுமுண்டாயிற்று. நேபுகாத்நேச்
சார் மேதியாவின் இராஜாவாகிய குவக்சரேயின் மகன் அருஸ்துவாகே
யுக்கு லீதியரின் இராஜாவாகிய ஆலியாத்தீஸ் மகளாகிய அரியேனை
விவாகஞ்செய்து கொடுக்கும்படி செய்து சமாதானம்பண்ணினான். தானி
யேலின் புஸ்தகத்தில் மேதியரின் இராஜாவாகிய தரியுவேஷ் விவாகத்
தில் ஒரு வருஷத்துக்குள் பிறந்த குவக்சரேயாம். இது யோயாக்கீமின்
9-ம் வருஷத்தில் (கி. பி. மு. 601-ல்) நடந்த சங்கதி. இந்த குவக்சரே
தன் மகள் மந்தனை (Mandana.) பார்சுதேசத்து இராஜாவாகிய கம்புசே
யுக்கு விவாகம்செய்துகொடுத்து, அடுத்த வருஷத்தில் அதாவது யோயாக்
கீமின் 11-ம் வருஷத்தில் (Cyrus) கோரேஸ் பிறந்தான். இவனே பார்சு
இராஜ்யத்தை ஸ்தாபித்தவனும், பாபிலோனின் அடிமைத்தனத்திலிருந்து
யூதரை விடுதலைசெய்தவனுமாயிருந்தவன்.

இந்தக் காலத்தில்தான் எரேமியா அத்திப்பழங்களின் (2) கூடை
களின் அடையாளத்தினால் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போனவர்
கள் சுகத்தோடே திரும்பவருவதை நல்ல கனிகளின் கூடைக்கும் தேசத்
தில் மீதியாயிருக்கிறவர்களும் இராஜாவும் அழிவுக்கும் நிற்பாக்கியத்துக்
குமுரியவர்களாயிருப்பதைக் கெட்ட அத்திப்பழங்களின் கூடைக்கு ஒப்
பிட்டுத் தீர்க்கதரிசனமுரைக்கிறார். (எரே. 24-அதி.)

சிதேக்கியா இராஜாவுடைய இராஜ்யபாரத்தின் துவக்கத்திலே கர்த்தர்
எரேமியாவுக்கு திகிரிஸ் நதிக்குக் கிழக்கேயுள்ள ஊலா நதியின்மேலுள்ள
எலாம் இராஜ்யத்துக்கு வரும் அழிவை அறிவித்து, தீர்க்கதரிசனமுரைக்
கச் செய்கிறார். (எரே. 49: 34-39.) இதுவும் யூதேயாவைப்போல நேபுகாத்
நேச்சாரால் ஜெயிக்கப்பட்டது. பின்பு இது கோரேசோடே சேர்ந்து,
பாபிலோனியரை ஜெயித்து சூசானை தனக்குத் தலைநகரியாக்கிற்று.

நேபுகாத்நேச்சார் யூதேயாவையும் சீரியாவையும் விட்டுப்போனபின்
சிதேக்கியா தன்னைப் பலப்படுத்திக்கொண்டான். அப்போது அம்மோ
னியரின் இராஜாவும், மோவாபியரின் இராஜாவும், சீதோனின் இராஜா
வும், தீரியரின் இராஜாவும், சிதேக்கியாவுக்கு வாழ்த்துதல் சொல்லவும்,
தங்கள்மேலுள்ள பாபிலோனின் நுகத்தடியை உதறிப்போடவும், நேபு
காத்நேச்சார் திரும்ப வராதபடி செய்யவும் உடன்படிக்கை செய்யும்
படி தங்கள் தானாபதிகளை அனுப்பினார்கள். இதினால் தேவன் எரேமியா
வை கயிறுகளையும், நுகங்களையும் உண்டுபண்ணச்செய்து உங்கள் தேசம்



தேவனால் பாபிலோன் இராஜாவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள்
அவனைச் சேவித்தால் நீங்களும் உங்கள் தேசமும் நன்றாயிருக்கும். மற்
றப்படி கலகஞ்செய்வீர்களென்றால் நீங்களும் கெட்டு உங்கள் தேசமும்
சுட்டெரிக்கப்பட்டுப் பாழாய்ப்போகுமென்று அந்த இராஜாக்களுக்குச்
சொல்லும்படி வந்த தானாபதிகளுக்குக் கற்பித்தார். (எரே. 27-அதி.) இதி
னால் சிதேக்கியா வந்த தானாபதிகளோடே உடன்படிக்கை செய்யவில்லை.
பின்பு எகிப்தின் இராஜாவும் மற்ற ஜாதியாரோடே சேர்ந்து உடன்படிக்
கை செய்தபோது சிதேக்கியாவும் பாபிலோனின் நுகத்தடியைச் சுமக்க
மனமில்லாமல் மற்றவர்களைப்போல உடன்படிக்கைக்குள்ளானான். இதி
னால் தனக்கும் தன் இராஜ்யத்துக்கும் அழிவை வருவித்துக்கொண்டான்.

கி. பி. மு. 597-ல் சிதேக்கியாவின் 2-ம் வருஷத்தில் அவன் சாப்
பானின் குமாரனாகிய எலாசாவையும் இல்க்கியாவின் குமாரனாகிய கெ
மாரியாவையும், பாபிலோனுக்குத் தீருவைசெலுத்தும்படிக்கோ என்ன
முகாந்தரத்துக்கோ நேபுகாத்நேச்சாரிடத்தில் அனுப்பினபோது எரேமி
யா பாபிலோனில் சிறையிருக்கிற யூதர்களுக்கு அவர்கள் வசம் ஒரு காகி
தம் அனுப்பினார். (எரே. 29-அதி.) பாபிலோனிலே கிலாயாவின் குமார
னாகிய ஆகாபும், மாசேயாவின் குமாரனாகிய சிதேக்கியாவும், தங்களை
தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளாக பொய்யாக சாதித்து, அவர்
களுக்குச் சீக்கிரம் விடுதலையிருக்குமென்று பொய்யான வாக்குத்தத்தங்
களைச்செய்து, அவர்களுடைய குடியிருப்பைப் பெலப்படுத்தவொட்டா
தபடிக்கு வீடுகளைக் கட்டக்கூடாது என்றும் விபசாயமுஞ் செய்யக்
கூடாது என்றும் விவாகஞ்செய்யக்கூடாதென்றும் ஜனங்களைக் கலங்கச்
செய்துகொண்டு வந்தார்கள். இந்தப் பெரிய தீமையை விலக்கும்படியாக
எரேமியா அவர்களுடைய சிறையிருப்பு தேவனால் நியமிக்கப்பட்டபடி
(70) வருஷமிருக்குமென்றும், பொய்யாகத் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற
வர்களை நம்பக்கூடாதென்றும், எருசலேமிலும் யூதேயாவிலுமிருக்கிறவர்
கள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளை நோயினாலும் வாதிக்கப்பட
டும் பூமியின் நாலாதிசைகளிலும் துரத்தப்பட்டும் எல்லாருக்குள்ளும் சாப
மாகவும், பாழாகவும் நிந்தையாகவுமிருப்பார்கள். ஆதலால் நீங்கள் சிறைப்
பட்டுப்போன தேசத்தில் உங்களுடைய குடியிருப்பு ஆறுதலாயிருக்கும்
படி பெலப்படுத்திக்கொள்ளுங்கள் என்றும் பொய்யாய்த் தீர்க்கதரிசனம்
சொன்ன பொய்த்தீர்க்கதரிசிகள் சடுதியாய் தேவனால் பயங்கரமான அழி
வை அடைவார்களென்றும், தீர்க்கதரிசனமாய் எழுதியனுப்பினார். இவர்
களைப் பற்றிய சாபம் சீக்கிரம் நிறைவேறிற்று. நேபுகாத்நேச்சார் அவர்
கள் தங்கள் வீணான தீர்க்கதரிசனங்களால் ஜனங்களைக் கலகப்படுத்தி,
அவர்கள் தங்கள் வீடுகளைக் கட்டவொட்டாதபடிக்குத் தடைசெய்ததினி
மித்தம் அவர்களைப் பிடித்து, ஜனங்கள்முன்பாக அக்கினியினாலே சுட்டுப்
போட்டான். இந்த இரண்டு பொய்த்தீர்க்கதரிசிகளும் சூசன்னாளைக் கற்
பழித்த (2) தலைவர்களென்று யூதர் சொல்லுகிறார்கள். எரே. 29: 23-ல்
அவர்கள் அயலார் பெண்சாதிகளோடே விபசாரம்செய்ததால் நேபுகாத்
நேச்சார் அவர்களைச் சுட்டெரிக்கும்படி உத்தரவுசெய்திருப்பான்.

எரேமியா அனுப்பின நிருபம், பாபிலோனில் சிறையிருப்பவர்க
ளுக்கு வாசிக்கப்பட்டது. சொப்பனக்காரன் என்றருத்தமுள்ள நெகெலா
மியனாகிய செமாயா என்ற கள்ளத்தீர்க்கதரிசி வந்த தானாபதிகள்மூலமாய்
எருசலேமிலுள்ள 2-ம் ஆசாரியனாகிய மாசேயாவின் குமாரன் செப்பனி
யாவுக்கும், மற்றும் ஆசாரியர்களுக்கும் மற்றும் ஜனங்களுக்கும் எரேமி

யா எழுதிவிட்ட நிருபத்துக்காக அவனைத் தண்டிக்கும்படி நிருபம் எழுதி அனுப்பினான். இந்தக்காலத்தில் பிரதானஆசாரியன் செராயாவே. 2 இரா. 25: 18. செப்பனியா 2-ம் ஆசாரியன். (எரே. 52: 24.) செமாயா எழுதிவிட்ட காகிதம் எரேமியாவுக்கும் வாசிக்கப்பட்டது. இதினாலே எரேமியா அந்த செமாயாவும் அவன் வம்சமும் அந்தச் சிறையிருப்பின் தேசத்திலே அழிந்துபோவதைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியனுப்பினார். (எரே. 29: 24—32.) இப்படிப்பட்ட சாபம் அனனியாவுக்கும் சொல்லப்பட்டது. (எரே. 28: 16.) பேத்தேலின் பூசாசாரியாகிய அமத்சியாவுக்கும் சொல்லப்பட்டது. (ஆமோஸ் 7: 17.)

கி. பி. மு. 595-ல் சிதேக்கியாவின் 4-ம் வருஷம் 5-ம் மாதத்தில் கிபியோன் ஊரானாகிய அசூரின் குமாரனாகிய அனனியா கர்த்தருடைய நாமத்திலே பொய்யாய் இன்னம் இரண்டு வருஷத்துக்குள்ளாக கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளையும், எகோனியா இராஜாவையும் மற்றுஞ் சிறைகளையும் எருசலேமுக்குத் திரும்பிவரப்பண்ணுவேன் என்று கர்த்தருடைய நாமத்திலே தீர்க்கதரிசனஞ் சொன்னான். எரேமியா கடிந்துகொண்டதற்கு பாபிலோனின் இராஜாவுக்கு யூதரும் மற்றும் ஜனங்களும் கீழடங்கியிருக்கவேண்டுமென்பதற்கு அடையாளமாக மரநுகத்தடிபோட்டிருந்த எரேமியா அதோடே எருசலேம் தேவாலயத்துக்கு வந்தபோது அனனியா அதை அடமாய் உடைத்துப்போட்டான். (எரே. 28-அதி.) அதினால் எரேமியா இரும்பு நுகத்தடிபோட்டுக்கொள்ள கற்பிக்கப்பட்டார். அனனியா ஜனத்தைப் பொய்யை நம்பும்படி செய்ததால் இந்த வருஷத்தில் சாவானென்று எரேமியா தீர்க்கதரிசனமுரைத்தார். இப்படிச் சொலலி (2) மாதத்துக்குப்பிற்பாடு அனனியாவாகிய (ஆசாரியன்) செத்துப்போனான்.

இந்த வருஷத்திலேயே எரேமியா மேதியராலும், பார்சியராலும் கல்தேயர் பாபிலோன்மேல் வரும் தேவகோபாக்கினையைப்பற்றி தீர்க்கதரிசனமுரைத்தார். எரே. 50, 51-அதி. பாபிலோனின் மேல்வரும் எல்லாத் தீங்கையும், பாபிலோனுக்கு விரோதமாய் எழுதப்பட்ட எல்லா வசனங்களையும் எரேமியா ஒரு புஸ்தகத்திலெழுதி, சிதேக்கியா இராஜாவால் பாபிலோனுக்கு அனுப்பப்பட்ட பாருக்கின் சகோதரனும், நேரியாவின் குமாரனுமாகிய செராயாவிடத்தில் கொடுத்து, ஐப்பிராத் நதிக்கரையோரமாயிருக்கிற சிறையிருப்பவர்களுக்கு வாசித்துக் காண்பித்து, வாசித்தபின் பாபிலோன் எழுந்திருக்கமாட்டாமல் முழுகிப்போமென்பதற்கு அடையாளமாக அந்தப் புஸ்தகத்திலே ஒரு கல்லைக் கட்டி ஐப்பிராத் நதி நடுவில் எறிந்துவிடச் சொன்னார். (எரே. 51: 59—64.)

பாருக்கும் தன் சகோதரனோடே பாபிலோனுக்கு இந்தப் பயணத்தில் போனதாகத் தோன்றுகிறது. யோயாக்கீன் சிறைப்பட்ட 5-ம் வருஷத்தில் பாபிலோனிலுள்ள யோயாக்கீன், மூப்பர்கள், யூதஜனங்கள் இவர்களுடைய காதுகள் கேட்க அந்தப் புஸ்தகம் பாபிலோனில் வாசிக்கப்பட்டதாகத் தள்ளுபடி ஆகமத்தில் சொல்லியிருக்கிறது. (பாருக். 1: 1—4.) சிதேக்கியாவின் 11-ம் வருஷத்தில் கடைசியாக எருசலேம் பிடிபட்டபோது பாருக் பாபிலோனில்லை. அவன் எரேமியாவோடே எகிப்துவுக்குப்போய் அங்கே மரித்துப்போனான். அந்தப் பாருக்கின் புஸ்தகத்திலே அந்தப் புஸ்தகம் வாசிக்கப்பட்டபின் பாபிலோனிலுள்ள யூதர் பணம் சேர்த்து, எருசலேமிலுள்ள இல்க்கியாவின் குமாரன் யோயாக்கீமென்ற பிரதானஆசாரியனுக்கும் மற்றும் ஆசாரியர்களுக்கும் அனுப்பி,



தங்கள் தேவனாகிய கர்த்தருக்குச் சர்வாங்கத்தகன பலிகளையும், பாவம் போக்கும் பலிகளையும், தூபவர்க்கத்தையும் வாங்கிச் செலுத்தும்படி சொன்னதாக எழுதியிருக்கிறது. கல்தேயரால் எருசலேம் சுட்டெரிக்கப்பட்டபின் அங்கே ஆசாரியனுமில்லை, பலிபீடமுமில்லை, யூதஜனமுமில்லை. ஆகையால் பாருக்கின் புஸ்தகத்தில் சொல்லியது கட்டுக்கதையாம்.

கி. பி. மு. 594. சிதேக்கியாவின் 5-ம் வருஷத்திலே அல்லது யோயாக்கீனுடைய சிறையிருப்பின் 5-ம் வருஷத்திலே யோசியாவின் 18-ம் வருஷத்தில் நடந்த சீர்திருத்தலின் 30-ம் வருஷத்திலே பாபிலோனிலுள்ள சிறைகளுக்குள்ளே தேவன் எசேக்கியேலைத் தீர்க்கதரியாக அழைத்தார். ஐப்பிராத் நதியின் கிளையாகிய கேபார் நதியில் ஓர் ஓய்வுநாளில் (4) கேரூபின்களையும், (4) உருளைகளையும் பற்றிய தரிசனையடைந்தார். எசே. 1—3-அதிகாரங்கள்.

முற்றிக்கையின் அடையாளத்தினாலே எரோபெயாமின் பின்வாங்குதல்முதல் சிறையிருப்புவரைக்குமுள்ள 390-வருஷமாய் தேவன் இஸ்ரவேலருடைய பாவங்களைப் பொறுத்துக்கொண்டதையும், (40) வருஷங்களாய் (யோசியாவின் சீர்திருத்தமுதல் அல்லது மனாசேயின் அக்கிரமமுதல்) தேவன் யூதருடைய பாவங்களையும் பொறுத்துக்கொண்டதையும் தீர்க்கதரிசியினுடைய மயிரின் அடையாளத்தினாலே பெருவாரிக் காய்ச்சல், பஞ்சம், பட்டையம் எருசலேமுக்கு விரோதமாய் வருமென்பதையும், எசேக்கியேல் காட்டினார். எசே. 4—6-அதிகாரங்கள்.

இந்த வருஷத்திலே மேதியாவின் இராஜாவாகிய குவக்சரே 40-வருஷம் ஆண்டபின் மரித்துப்போக, வேதத்தில் ஆகாஸ்வேரொன்னப்பட்ட அகுஸ்துவாகே என்ற அவனுடைய மகன் அரசாண்டான். இந்த வருஷத்திலே எகிப்தின் இராஜாவாகிய சாமிஸ், எத்தியோப்பியரோடே செய்த சண்டையில் இறந்துபோனான். அந்த எகிப்து இராஜ்யத்துக்கு அவனுடைய மகன் (Apris) ஆபிரிஸ் பட்டத்துக்கு வந்தான். இவனே வேதத்தில் (Pharoah) பார்வோன் ஒப்பிரா என்னப்படுகிறான். இவன் 25-வருஷம் ஆண்டான்.

இந்த வருஷத்திலேதான் எசேக்கியேல் தரிசனத்திலே எருசலேமுக்குக் கொண்டுபோகப்பட்டு, யூதருடைய பலவகை விக்கிரகாராதனையை தேவன் காண்பித்து, எருசலேமிலுள்ள யூதருக்கு வரும் ஆக்கினையைக் கூறும்படி செய்கிறார். எசே. 8: 11—அதிகாரங்கள். அதே சமையத்தில் சிறையிருப்பிலுள்ள யூதர்கள் அந்த அருவருப்பைச் செய்யாமல், தேவாராதனையில் உண்மையாயிருந்தபடியால் அவர்களைச் சிறையிருப்பிலிருந்து திரும்பிவரப்பண்ணுவேனென்றும், தேவன் அவர்களுக்குப் பரிசுத்தஸ்தலமாக இருப்பாரென்றும் இப்படிப்பட்ட நல்ல வாக்குத்தத்தங்களைச் சொன்னார். (எசே. 11: 15—21.)

கி. பி. மு. 592-ல் அதாவது சிதேக்கியாவின் 7-ம் வருஷத்திலே தேவன் எசேக்கியேலின் பிரயாண அடையாளத்தினாலும் தமது வார்த்தையினாலும் கல்தேயரால் எருசலேம் பிடிபடுவதையும், சிதேக்கியா இரவில் ஓடிப்போவதையும், அவன் கண்கள் பிடுங்கப்படுவதையும் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டுபோகப்பட்டு அங்கே சாவதையும் யூதர் சிறைப்பட்டுப்போவதையும், தேசம் பாழாவதையும் அவனுக்கு முன்னறக் காட்டி தீர்க்கதரிசனமுரைக்கச் செய்தார். எசே 12-அதி இதற்குப்பின்னுள்ள (7) அதிகாரங்களிலும் இந்தக் காலத்தில் இதே சங்கதியாக தீர்க்கதரிசனமுரைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக்காலத்தில் தானியேல் பெரியவராகி, நீதியிலும் பரிசுத்தத்திலும் மெய்யான தேவபக்தியிலும் தேவனுக்குமுன்பாகவும் மனிதர்முன்பாகவும் பேர்பெற்றவரானார். இவர் பரிசுத்தவான்களாகிய நோவா, யோபு என்பவர்களைப்போல மற்றவர்களுக்காக ஜெபத்தில் தேவனோடே போராடி மேற்கொண்டவரென்று பேர்பெற்றார். இப்போது அவர் 32-வயதுள்ள வாலிபன். அவர் சிறைபிடிக்கப்பட்டுப்போகையில் 18-வயதாயிருந்து (3) வருஷம் படித்து இராஜாவின் சமுகத்தில் வேலைபார்த்து (11) வருஷமாயிருக்கலாம். எசே. 14: 14—20.

இந்தக்காலத்தில்தான் , சிதேக்கியாவுக்கு விரோதமாகவும், பொய்த்தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாகவும், யூதஜாதியாருக்கு விரோதமாகவும் எசேக்கியேல் தீர்க்கதரிசனமுரைத்தார். எசே. 12–19 அதிகாரங்கள்.

கி. பி. மு. 591–ல் சிதேக்கியாவின் 7-ம் வருஷத்திலே எகிப்தின் இராஜாவாகிய பார்வோன் ஒப்பிருவோடே உடன்படிக்கைசெய்து தனக்குக் குதிரைகளையும் ஆட்களையும் அனுப்பும்படி சிதேக்கியா ஸ்தானாபதிகளை அனுப்பினான். எசே. 17: 25. அடுத்த வருஷத்தில் கர்த்தருடைய நாமத்திலே நேபுகாத்நேச்சாரோடே பண்ணின ஆணையைச் சிதேக்கியா முறித்துப்போட்டு அவனுக்கு விரோதமாகக் கலகஞ்செய்தான. 2 இரா. 25: 1. அதினால் நேபுகாத்நேச்சார் எருசலேமை அதம்பண்ணிப்போடப் பிரயத்தனஞ்செய்தான். (2 நாளா. 36: 13. எரே. 52: 3.)

கி. பி. மு. 590–ல் சிதேக்கியாவின் 9–ம் வருஷத்தில் தனக்குக் கீழ்ப்பட்ட சகல ஜாதியாரிலுமிருந்து பெரிய படையைச் சேர்த்துக்கொண்டு சிதேக்கியாவுடைய கலகத்துக்காக அவனைத் தண்டிக்கும்படி நேபுகாத்நேச்சார் புறப்பட்டு வந்தான். (2 இரா. 25: 2. 2 நாளா. 36: 17. எரே. 39: 1. 52: 4.) வருகிற வழியில் அம்மோனியரும் எகிப்தியரோடே சமாதான உடன்படிக்கை செய்திருப்பதை அறிந்து, முந்தி யார்மேல் யுத்தஞ்செய்யப்போகலாமென்பதை அம்புகளினாலும் விக்கிரகங்களை உசாவுகிறதினாலும் ஈரலாலும் குறிபார்த்ததில் (எசே. 21: 19—24.) யூதருக்கு விரோதமாய் யுத்தஞ்செய்ய முந்திப்போகவேணுமென்று குறிகாரர் குறிப்பிட்டார்கள். அதினால் நேபுகாத்நேச்சார் கொஞ்சநாளைக்குள் லாகீஸ், அசேக்கா எருசலேமாகிய அரணான பட்டணங்கள் தவிர யூதேயாவின் எல்லாப் பட்டணங்களையும் பிடித்துக்கொண்டான். (எரே. 34: 7.) எருசலேமிலுள்ள யூதர் பலவித கஷ்டங்களையும் எருசலேம் முற்றிக்கையிடப்படுவதையும் அறிந்து தங்கள் தேவனாகிய கர்த்தரண்டை மனந்திரும்பி அவருடைய பிரமாணங்களின்படி நடப்போமென்று உடன்படிக்கை செய்து அதற்கு அடையாளமாக தங்களிலுள்ள எபிரேய வேலைக்காரனையும் வேலைக்காரிகளையும் சுயாதீனராகப் போய்விட விளம்பரஞ்செய்தார்கள். (எரே. 34: 8—10.) உபா. 15: 22.

சிதேக்கியாவின் 9-ம் வருஷம் 10-ம் மாதம் 10-ம் தேதியாகிய டிசம்பர்மீ கடைசியிலே நேபுகாத்நேச்சார் தன் சேனையோடே எருசலேமை முற்றிக்கைசெய்தான். (2 இராசா 25: 1.) ஆசாரியருடைய பாவங்களும், ஜனங்களின் பாவங்களுமே தேவனுடைய நியாயத்தீர்ப்பை வருவித்தது. 2 நாளா. 36: 14—21. யூதர்களுக்குள் 10-ம் மாதமாகிய தாபெத் மாதம் 10-ம் தேதியை யூதர்கள் ஞாபகத்துக்காக உபவாச நாளாக இதுவரையும் ஆசரிக்கிறார்கள். (எரே. 39: 1. எரே. 52: 4.) சகரி. 8: 19.

இந்த 10-ம் மாதம் 10-ம் தேதியிலே கல்தேயாவிலிருக்கிற எசேக்கியேல் கொதிக்கிற கொப்பரையின் உவமையினால் எருசலேமின் பயங்கர



அழிவைக் காட்டினார். (எசே. 24: 1, 2.) அந்த இரவிலே தீர்க்கதரிசியின் கண்களுக்கு விருப்பமான அவன் பெண்சாதி இறந்துபோகவும், அதற்குத் துக்கப்படாதபடி கற்பிக்கப்பட்ட அடையாளத்தினாலே (எசே. 24: 16—18.) யூதருக்கு விருப்பமான பரிசுத்த பட்டணமும், தேவாலயமும் சடுதியாய் அழிக்கப்படும், அதின் அழிவு பயங்கரமானதால் துக்கிக்கவும் ஏதுவில்லையென்று காட்டினார்.

கி. பி. மு. 589–ல் சிதேக்கியாவின் 10–ம் வருஷத்தில் எரேமியா தேவனால் சிதேக்கியாவண்டை அனுப்பப்பட்டு, சிதேக்கியாவும் நகரத்தாரும் சிறைப்பட்டுப்போவதையும் பட்டணம் சுட்டெரிக்கப்படுவதையும் சிதேக்கியா பாபிலோனுக்குப் பிடிபட்டுப்போய் அங்கே சாவதையும் நேபுகாத்நேச்சார் முற்றிக்கைபோட்டிருக்கையில் தீர்க்கதரிசனமாய் உரைத்தார். எரே. 34–அதி. இதினால் சிதேக்கியா வெறுப்படைந்து எரேமியாவைக் காவலில்போடச் செய்தான். (எரே. 32: 1—3.) எரேமியா காவலிலிருக்கையில் ஆனதோத்திலுள்ள தன் சிறிய தகப்பன் மகன் அனாமியேலிடத்தில் நிலத்தை வாங்கினார். (எரே. 32: 7—17.) இதினால் எருசலேம் பாழாகி, அதின் குடிகள் சிறைப்பட்டுப்போனாலும் இனி அவர்கள் திரும்பவருவதையும், அவர்களுடைய காணியாட்சியை நியாயப்பிரமாணத்தின்படி சுதந்தரிப்பார்களென்பதையுங் காட்டினார்.

பார்வோன் ஒப்பிரு சிதேக்கியாவுக்கு உதவிசெய்யும்படி எகிப்திலிருந்து தன் பெரிய சேனையோடே (எரே. 37: 5) வந்தான். எருசலேமை முற்றிக்கைபோட்டிருந்த நேபுகாத்நேச்சார் தான் எடுத்த 832–யூதரான சிறைகளை பாபிலோனுக்குச் சிறைகளாக அனுப்பிவிட்டு, எகிப்தின் இராஜாவுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்யப்போனான். (எரே. 52: 29.)

எருசலேமைவிட்டு கல்தேயர் போனபிற்பாடு எரேமியா காவலிலிருந்து விடுதலையாயிருந்தான். சிதேக்கியா யூகாலையும், ஆசாரியனாகிய செப்பனியாவையும் எரேமியாவண்டை அனுப்பி தனக்காகவும் ஜனங்களுக்காகவும் ஜெபிக்கும்படி கேட்டான். (எரே. 37: 3—10.) தன்னிடத்தில் இராஜா அனுப்பின ஆட்கள் வசம் இராஜா நம்பின எகிப்து திரும்பிப்போகும்; எகிப்தியர் எவ்வளவென்கிலும் ஒத்தாசைசெய்யக்கூடாதவர்களென்றும் கல்தேயர் திரும்பவந்து முற்றிக்கைசெய்து பிடித்து, பட்டணத்தைச் சுட்டெரிப்பார்கள் என்றும் எரேமியா செய்தி சொல்லியனுப்பினார்.

யூதர் சீர்திருத்தலுக்குரிய உடன்படிக்கைசெய்து தேவன் அண்டை மனந்திரும்பினபோது கல்தேயர் யுத்தஞ்செய்ய வராமல் போய்விடுவார்களென்று ஜனங்களுக்கு நல்ல எண்ணமிருந்தது. (எரே. 34: 11.) அவர்கள் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு விரோதமாய் மறுபடியும் அடிமைகளைச் சேர்த்துக்கொண்ட குற்றத்துக்காக எரே. 34: 17—22. அவர்களைக் கண்டித்து, அதற்காக இராஜாவும் குடிகளும் சத்துருக்கள் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவதைப்பற்றி தீர்க்கதரிசனஞ் சொன்னார்.

கல்தேயர் இன்னும் எருசலேமுக்கு வராதிருக்கையில் எரேமியா (37: 11—15.) தன் ஜெனன ஊராகிய ஆனதோத்துக்குப் புறப்பட்டுப்போக மனதாய் எருசலேமைவிட்டுப்போனான். அப்போது காவற்சேருவையின் அதிபதி எரியா எரேமியாவைப் பிடித்து கல்தேயரண்டை போகிறவனாகக் குற்றஞ்சாட்டினதினால், எரேமியாவை அடித்து யோனத்தான் வீட்டில் காவற்படுத்தினார்கள். அங்கே அநேகநாள் தங்கினான்.

எகிப்தியர், கல்தேயர் தங்களுக்கு விரோதமாய் வருகிறதை அறிந்து, அவர்களோடே எதிர்த்து நிற்கமாட்டாமல், (எரே. 38: 7.) சிதேக்கியா

வை கிற்பாக்கியனும் யுத்தத்தில் அழிந்துபோக விட்டுவிட்டு, தங்கள் தேசத்துக்குப்போய்விட்டார்கள். இப்படி எகிப்தியர் மோசம்பண்ணினதற்காக எசேக்கியேல் (29–அதி-ல்)எகிப்துவுக்கு விரோதமாய்த் தீர்க்கதரிசனமுரைக்கிருர். எகிப்தியர் சிறைப்பட்டுப்போய் 40–வருஷத்துக்குப்பின்பு விடுதலையாகி வருவதையும் அற்ப இராஜ்யமாயிருப்பதையும்பற்றி தீர்க்கதரிசனமுரைக்கிருர். எரே. 29: 13. எகிப்துதேசம் வெகுகாலம் பார்சருக்குக் கீழாகவும், பின்பு மக்கதோனியர் பின்பு ரோமர், பின்பு சரசேனர், பின்பு மாமுலுக்கர், இப்போது துருக்க இராஜ்யத்துக்குரிய நாடாயிற்று.

எகிப்தியர் போனபின்பு நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு வந்தான். (எரே. 37: 8.) அங்கே ஒரு வருஷமாய் முற்றிக்கைபோட்டிருந்தான். எருசலேமைத் திரும்பவும் முற்றிக்கைபோட்டிருக்கையில் சிதேக்கியா (எரே. 37: 37—21 ) எரேமியாவை அழைத்தனுப்பி, இப்போது தேவனுடைய வாக்கென்னவென்று விசாரித்தான். “பாபிலோன் இராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவீர்” என்று சொன்னர். எரேமியா தன்னைக் காவற்சாலையில்அனுப்பாதபடிக்கு இராஜாவை வேண்டிக்கொள்ள அவனைக் காவல்முற்றத்தில் வைக்கவும், நாடோறும் ஒரு அப்பங்கொடுக்கவும் கற்பித்தான்.

சிதேக்கியா கல்தேயருடைய முற்றிக்கையினல் நெருக்கப்பட்டபோது (எரே. 21: 1—14.) எரேமியாவண்டை ஆள் அனுப்பி கர்த்தரிடத்தில் விசாரிக்கக் கேட்டான். “அதற்கு நெகேமியா நிச்சயமாகவே தேவன் பாபிலோன் இராஜா கையில் இராஜாவையும் ஜனங்களையும் ஒப்புக்கொடுப்பார். நகரத்தில் மீதியாயிருப்பவர்கள் பஞ்சத்தினலும், பட்டையத்தினலும் சாவார்கள். கல்தேயரண்டை போகிறவர்களுடைய பிராணன் அவர்களுக்குக் கிடைத்த கொள்ளையுடைமைபோலிருக்குமென்று தேவவாக்காய்ச் சொல்லியனுப்பினர். (எரே. 38: 1—6 ) இதினல் பிரபுக்கள் வெறுப்படைந்து இராஜாவின் உத்தரவின்பேரில் எரேமியாவை மல்கியாவின் துரவிலே சாகும்படிக்குப் போட்டார்கள். (எரே. 38: 7—13.) சிதேக்கியாவின் அரண்மனையிலிருந்த அண்ணகனுகிய எபேத்மேலேக், எரேமியாவுக்காக இராஜாவிடத்தில் பரிந்துபேசி, அவனைத் துரவிலிருந்தெடுத்து காவற்சாலையின் முற்றத்தில் வைத்துப் போஷித்தான். (அண்ணகர்களைப்பற்றி 2 இரா. 9: 12. தானி. 1: 9. அப். 8: 27–ல் வாசிக்கிருேம்.) இந்தத் தருமமான செய்கைக்காக இரக்கமுள்ள தேவனல் அவனுக்கு விடுதலை கிடைத்தது.

இதற்குப்பின் சிதேக்கியா (எரே. 38: 14—23.) இரகசியமாய் எரேமியாவைக் கூப்பிட்டு தேவாலோசனையைக் கேட்க, “நீர் பாபிலோன் இராஜாவின் பிரபுக்களண்டை புறப்பட்டுப்போவீரானல் உம்முடைய ஆத்துமா உயிரோடிருக்கும் இந்தப் பட்டணமும் சுட்டெரிக்கப்படுவதில்லை” என்று சொன்னதைக் கவனியாமல், தன் இருதயத்தைக் கடினப்படுத்தி எரேமியாவைக் காவற்சாலைக்கு அனுப்பிவிட்டு, இதற்குப்பின் அவரிடத்தில் ஆலோசனையே கேட்கவில்லை.

கி. பி. மு. 588–ல் சிதேக்கியாவின் 11–ம் வருஷம் துவக்கத்தில் எசேக்கியேல் தீருவின்மேல் ஆக்கினை கூறுகிருர். எசே. 28: 3. எருசலேமுக்கு வந்த துன்பங்களைப் பார்த்து அவர்களைத் தீரியர் நிந்தித்தபடியால் அந்த நேபுகாத்நேச்சாராலேயே அந்தவகையான தீங்குகளே தீருவுக்குச் சம்பவிக்குமென்று தீர்க்கதரிசனமுரைத்தார். எசே. 26, 27, 28–அதிகா



ரங்கள். இக்காலத்தில் தீருவின் இராஜாவாகிய (Ithobal) இத்தோபால் தன் ஞானத்தைப்பற்றி “தானியேலைப் பார்க்கிலும் ஞானவான், இரகசியமானதொன்றும் எனக்கு மறைபொருளல்ல. எசே. 38: 3–என்று வீம்பாயும் மேன்மைபாராட்டினதால் தேவன் அவனைக் கடிந்துகொள்ளுகிருர். இதினல் தானியேலுடைய ஞானம் முக்கியமானதாக கிழக்கத்தியாருக்குள் பழமொழியாகப் பேசப்பட்டது. இந்தக்காலத்தில் தானியேல் (36) வயதாயிருக்கலாம். இந்த 28–அதி கடைசியில் இதுவே முகாந்தரத்துக்காக சீதோனுக்கு விரோதமாகவும் ஆக்கினை கூறப்பட்டது.

இந்த வருஷத்திலே எசேக்கியேல் தீர்க்கதரிசி பார்வோனுக்கு விரோதமாகவும் எகிப்தியருக்கு விரோதமாகவும் முன் அவர்களை ஒடுக்கின ஆருரியலைப் பார்க்கிலும், பலத்தவர்களான பாபிலோனியரின் இராஜாவான நேபுகாத்நேச்சரால் ஆக்கினையடைவதைப்பற்றித் தீர்க்கதரிசனமுரைக்கிருர். எரே. 30: 31–அதி.

## கேள்விகள்.

1. யூதர் குணப்படும்படி எரேமியா இந்தக்காலத்தில் சொன்ன தீர்க்கதரிசனங்களென்ன? அதினல் அவருக்கு வந்த துன்பங்களென்ன?

2. எருசலேமிலும், கல்தேயாவிலும் எரேமியாவுக்கு விரோதமாய்த் தீர்க்கதரிசனமுரைத்த கள்ளத்தீர்க்கதரிசிகளார்? அவர்களுடைய முடிவென்ன?

3. யோயாக்கீம், யோயாக்கீன் என்ற இராஜாக்களைப்பற்றியத் தீர்க்கதரிசனமும் முடிவுமென்ன?

4. எசேக்கியேல் தீர்க்கதரிசியை எப்போது எப்படி ஏன் தேவன் தமது ஊழியத்துக்குத் தெரிந்துகொண்டார்.

5. தானியேல் ஆர்? அவரைப்பற்றிய முக்கிய விஷயங்களென்ன?

6. நோவா, யோபு, தானியேலுடைய பேர்கள் என்ன முகாந்தரத்துக்காகச் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது?

7. பஸ்கூர், எபேத்மேலேக் என்பவர்களார்? அவர்களைப்பற்றிச் சொல்லிய ஆசீர்வாதங்களென்ன?

8. இந்த II–ம் சிறையிருப்பு சம்பவிக்கத்தக்க முகாந்தரமென்ன?

9. எகிப்து, தீருசீதோன், பாபிலோன் இவைகளுக்கு விரோதமாய் எப்படித் தீர்க்கதரிசனமுரைக்கப்பட்டது. ஏன்?

10. யூதரும், அக்கம்பக்கமான தேசத்தாரும், நேபுகாத்நேச்சாரைச் சேவிப்பார்களென்பதற்கு அடையாளமாக எரேமியா செய்ததென்ன?

## இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

உத்தரங் கிடைத்தமை வினவி உள்ளுளே
பத்திசெய் நிக்கதே மெனப்ப கர்ந்திடும்
உத்தமன் பரிமள உசித வர்க்கங்கள்
வித்தக உடற்கெனக் கொண்டு மேவினன். 1281

கோலைக்களத் திருவருங் குறுகி யொல்லையில்
தொலைக்கரும் பாவநோய் தொலைத்த யாக்கையை
நிலைக்குரு சகற்றிமே னிலவச் சாத்தினார்
விலைக்கரும் பூந்துகில் விரித்துமூடியே. 1282

விந்தைசே றொழிற்றிரு மேனி மீதெலரம்
கந்தநற் றிரவியம் புனைந்து கண்கணீர்
சிந்திமெய் யன்புடை ஜீவன் முத்தர்தாம்
தந்தம சென்னியிற் றாங்கிச் சென்றனர். 1283

வனக்குறும் பரம்பினோர் மருங்கு மட்டவிழ்
நனைக்குறு முகைவிரி நந்தனத் திது
வினைசுருசித் தாயயோ சேப்பு வேதியன்
தனக்கெனச் சமைத்த அச்சமாதி நண்ணினார். 1284

நன்முறை யகழ்ந்தவக் காமர் வைப்பினில்
தொன்முறை விதிப்படி தூய யாக்கையைப்
பொன்முறை போற்றிடும் புலமைத் தாமென
நன்முறை வுளர்த்தினார் நலங்கொண் மொய்ம்பினார். 1285

ஆர்வமிக் குடைய மெய்யடியர் மொய்ம்பினால்
வார்விழி புனலுக வாரிப் பெய்தனர்
தீர்வரும் பரிமள திரவியங்களை
சேர்வுறு கபாடக் கற் செறித்திட் டாரரோ. 1286

உலகெலாம் புரிந்ததீ வினையை உத்தரித்
தலகிலாப் புண்ணியம் அமைத்த ஆண்டகை
இலகுபே றொழிற்றிரு மேனி யீண்டொரு
சிலைகெழு சமாதியுஞ் செறிந்த தேயந்தோ. 1287

தைவிக மானிட தனுவெடுத்த நம்
தைவிக ரக்ஷகர் தணந்த மானிட
மெய்வசுந் தரையிடை விரவி மீண்டெழுந்
துய்வதின் றேற்புவிக் குய்வின் றாகுமால். 1288

நேசயோ சேப்பென நிக்க தேமெனப்
பேசிய தொண்டரும் பிறரும் நம்பிரான்
பூசமா திக் குறு புணர்ப் பெலாம்புரிந்
தீசனை மதிக்குள் வைத் தேத்திப் போயினார். 1369

அத்தனுக் கடித்தொழும் பமைந்த அன்புடைப்
பத்திமை வடிவெடுத் தனைய பாவைமார்
சிந்தசஞ் சலத்தொடு கலுழ்ந்து தேம்பியே
தத்தம துறையுள்போய்ச் சடைத் திருந்தனர். 1290

அஞ்சுறு காட்சிகண் டலமந் தாவிநைந்
தெஞ்சிய பாதகர் இயல் முறைப்படி
செஞ்செவே யுலகமைந் தொழுகுஞ் சீர்மைகண்
டெஞ்சமென் றுளம்வலித் தாங்கொண் டாரரோ. 1291



வேறு.

போங்க ருணைதன் பூதல ரக்ஷை புரிவான்வந்
தங்கம் வருந்தி யாருயிர் நல்கி அவனிக்குள்
மங்கி யடங்கக் கண்டு சகிக்க மாட்டான்போல்
வெங்கதி ருட்கிக் குடகட லிற்குப் புறவீழ்ந்தான். 1292

பாயொளி மட்கிப் போயது வெள்ளிப் பகலேனும்
மீயொளி மல்கி மேற்றிசை தூற்றி விரிசெக்கர்
நேய மிகுத்தோர் காய முகுத்த நிறைசோரி
தூய சினத்தீ மாய அடர்த்துத் தொகல்போலும் 1293

நன்றி மறந்து நட்பிடை நாளும் நயவஞ்சம்
துன்றிய கள்வர் நன்றியில் செல்வந் தொலைவெய்த
ஒன்றி வருத்தும் வன்மிடி போல வொளிர்செவ்வான்
நின்றில தாக வந்தது மாலை நிமிர்கங்குல். 1294

பூவணை யாகக் கண்படை கொள்ளும் புனிதற்கோர்
மேவு விதான மென்ன விரிந்தன மேல்வான்மீன்
ஓவற வெங்கும் பாயிருள் நக்கி யொளிகாலும்
தீவம தாக வுதித்தது கீழைத் திசைதிங்கள். 1295

சித்திர மாகச் செல்வன் உறங்குஞ் செயல்கண்டு
நித்திரை பங்க முறுதமை வுற்றிடு நெறிபோலும்
எத்திசை யும்முள வெப்பொரு ளும்முல கெல்லாமும்
அத்தின ராவி னிசத்தம தாய அருங்காட்சி. 1296

காலமி தாக வன்மன யூதர் கதித்தோடிச்
சீலமில் மன்னன் பாலணை வுற்றுத் திருட்டாகக்
கோலி யுயிர்த்தா னென்றவ னுக்கை கொடுபோகிச்
சால மருட்டிச் சீடர்பல் கேடு சமைப்பாரால். 1297

மண்டொரு மூன்று தினத்துயிர் பெற்றெழு வேனென்ன
மாண்டவ னோதிய றண்டு சமாதியை மற்றின்னே
காண்டரு காவல அமைக்கென ஒப்புரை கைக்கொண்டு
வேண்டிய வாறுபல் வீரரை வைத்தனர் வெங்காவல். 1298

இட்டனர் முத்திரை யேம முறத்தனி யீமத்தின்
முட்டி யடைத்தவோர் கற்கத வத்தினை முற்றாக
அட்ட திகாந்தமும் அம்பரமும் மிதோர அங்கைக்குள்
இட்டன முய்விலை யென்பவர் போன்மதி யில்லாரோ. 1299

கோலிய காவல ரோதிக ளோடு குழீஇச்சேம
வாலிய வைப்பை வளைத்தனர் நின்றிட வாராந்தக்
காலை கடும்பக லெற்படு காலை கடந்தந்தி
மாலை கழிந்த தியாமமும் வந்து மரீஇயிற்றால். 1300

வைவரு லௌகிக வேலை யொழிந்து கருத்தொன்றித்
தைவிக நாளனு சாரிகளா யுயர் சற்போதர்
உய்வரு ளுதன் உயிர்த்தெழு வேனென உய்த்திட்ட
மெய்வ்வச னத்திற முள்ளி யிருந்தனர் விழிதுஞ்சார். 1301

மாசில் மடந்தை மார்சிலர் கந்த வருக்கங்கள்
ஆசற ஈட்டி யாதி தினத்தின் அதிகாலை
ஈச னுடற்குப் பூஜிதை செய்வா மெனவெண்ணி
நேசம் வடிக்குங் கண்ணொ டிருந்தார் நிசிமுற்றும். 1302

உயிர்த்தெழுதல்.

இருநில முய்யக் கொண்ட எம்பிரான் ஆக்கை யீமம்
மருவிய வாறீ தாக மறுத்துயிர்த் தெழுந்த உண்மை
திருமுறை விளக்கும் வண்ணந் தெரிப்பலென் றமலற் போற்றிப்
பொருவரும் பத்தி யென்னும் புனிதையேற் புகல்வதானாள். 1303

மைந்த கேள் நம்பிரானிம் மாநிலத் துயிர்த்தெழுந்த
விந்தையைத் தரிசித் தேத்தும் விழைவினால் விபுதராவார்
அந்தரத் தீண்டிப் பல்லாண் டணியிசை யலர்த்து மாபோல்
சிந்துநீர்ச் சுனையுங் காவும் புள்ளொலி சிறந்த மாதோ. 1304

விண்ணுற நிவந்த நாறு வியன்சினைப் பொதும்பர் மென்பூஞ்
சுண்ணமும் மலருந் தீந்தேன் தொகுதியும் வானந்தூய
ஒண்ணிறப் பனிநீ ரோடு கலந்துமென் கால்கொண் டோச்சல்
புண்ணிய னெழுச்சிக் கோலம் புனைந்தெனப் பொலிந்ததன்றே. 1305

மருப்படி கமல வாவி மறிதிரை முழவ மார்ப்ப
அருப்புநாண் மலர்வாய் வண்டி யழிபசுந் தேறன் மாந்திச்
சுருப்பிசை சுருதிகாட்டப் புள்ளொலி யிசையிற் றுன்னத்
திருப்பள்ளி யெழுச்சி கூடுஞ் செவ்வியை யொத்த தம்மா. 1306

கோதிலாப் புனித அன்பு குலவுநீ ரகத்து நம்மான்
பாதபங்கஜ மலர்ந்த பரிசெனப் பளிங்கிற் றோன்றும்
சீதநீர்ப் பொய்கை யெங்குஞ் செழுங்கடி கமழுந்தூய
மாதர்மென் கமலப் போது வள்ளவாய் மலர்ந்த மாதோ. 1307

வையகம் புதைத்த கங்குல் வாருணி யற்ற நோக்கித்
துய்யதண் மதிய மென்னுந் துயல்வரு சுறவத்தோடு
மையற விளங்கும் வான மீனொளி மழுங்கி மாய
வெய்யவ னிலைஞன் றோன்றான் விடிவலை வீசினானால். 1308

மெய்கண்ட விடத்துப்பொய்மை வெருத்தென வெருத்ததிந்து
கைகண்ட களவி னூக்கங் கரந்தெனக் கரந்த விண்மீன்
பொய்கண்டு மருண்ட வுள்ளம் போலொளி யிழந்த தீபம்
மைகண்ட கங்குல் வாட்டும் வைகறை கண்டு கண்டே. 1309

இன்னதோர் அமையந் தன்னில் இருநில வுலகுக் கெல்லாம்
பன்னரு நலத்த வாய பரகதிப் பயனை யீட்டித்
துன்னிய ஜட வியோகத் துயிலுணர் சூழ்ச்சி யேபோல்
உன்னத தேவ மைந்தன் உயிர்த்தெழுந் தருளிப் போந்தார். 1310

வார்த்தையாய் நடுவராகி மன்னுயிர்க்கிரக்ஷை நல்க
மூர்த்தியாய்ச் சமாதிகூடி முறை வழாதுயிர்த்தெழுந்த
தீர்த்தனைத் தரிசித்தேத்தி ஜெயஜெய வென்று போற்றிக்
கீர்த்தன நறும்பூ மாரி பெய்தனர் கெழுமி விண்ணோர். 1311



தன்மமுந் தவமுமோங்கித் தழைத்தன அருள்மெய் வேத
கன்மமும் ஒழுக்கும் வல்லே கதித்தன கருணை பூத்த
நன்மையு மெய்ம்மை தானும் நடநவின் றுலகமெங்கும்
வன்மமும் பகையுந் தேய வளர்ந்தன மருவி மாதோ. 1312

அறந்தலை யெடுத்த தொல்லை யாரணத்துழனி யோங்கிச்
சிறந்தது ஜென்ம தோடத் தீக்கரு மத்தில் மூழ்கி
இறந்துபாழ் பட்டோர் ஆவிக் கிறிலா ஜீவன்வந்து
பிறந்தது சுகிர்த போதம் பிறங்கிய தவனியெங்கும். 1313

அலகிலா வுயிர்களெல்லாம் அரும்பெறல் மகிழ்ச்சிபூத்த
குலவுசோடாதி யாய கொழுங்கடி மலர்கள் பூத்த
விலகரும் அவித்தை நீங்கி மெய்யொளி யுளந் திகழ்ந்த
உலகுசூழ் கங்குல் நீங்கி யுதையமுந் திகழ்ந்த தெங்கும். 1314

வண்டுணை விரிந்த செந்தா மரைமுக மலர்ச்சி காட்டித்
தண்டலை தாழ்த்தி மென்பூத் தடஞ்சினைக் கரத்தால் நல்கி
எண்டகு புள்ளினுய இன்னிசை யெடுத்துப் போற்றி
மண்டல மடந்தை யீசன் மைந்தனை வணக்கஞ் செய்தாள். 1315

மயலுறும் பாவதோட மருங்கறக் கெடுத்து மாந்தர்
உயவரு நலங்கொள் ளடப்பன் உயிர்த்தெழ லூர்த்த நன்மை
வியனிலத் தெங்குமோடிப் பரந்துடன் விழாக் கொண்டென்னத்
துயிலுணர்ந் தெழுந்து ஜீவத் தொகுதிகள் களித்த மாதோ. 1316

நண்ணிய நிசிக்குள் ளாய கழிபெருந் துயிலை வீசி
எண்ணிலா வுயிர்கள் காலை யேம்பலோ டெழுந்தகாட்சி
மண்ணியல் வினையின் மாய்ந்த மன்பதை உயிர்த்தெழுந்த
புண்ணியர் தமக்குள் ளாகப் புத்துயிர் அடைந்தாற் போலும். 1317

எந்தவா றடையு நம்மில் ஈறிலா ஜீவ னென்னுஞ்
சிந்தனை மருளேல் நம்மான் புண்ணியஞ் ஜீவர்க் கெல்லாம்
சொந்தமாம் விசுவசித்தோர் சுவர்க்க பேரின்பந் துய்ப்பர்
அந்தரி யாமி யேசு என்பதை அயரேல் ஐய. 1318

வரைவின்றிக் கிருபை யார்க்கும் பொதுவென வழுத்தினாலும்
பரமன்முன் குறித்தோ னுள்ள மொன்றிலே பழுக்கும் பத்தி
தரணிவான் கிரண மெந்தத் தலத்தினுந் தங்குமேனும்
இரவிகாந் தத்தின் அன்றோ இருங்கனல் பிறக்கு மம்மா. 1319

ஒருநரன் வழியே பாவமுலகத்தை யுடற்று நிற்ப
ஒருநர தேவ னீட்டும் புண்ணிய முலகுக் கந்தப்
பருவரல் துடைத்து நித்ய பரகதிப் பயனை நல்கல்
திருவருள் மாட்சிக் சேற்ற திவ்விய முறையென் றோர்தி. 1320

(இன்னும் வரும்.)

# உபதேசங்கள், அருள்வேதத்திற்கு அத்தாட்சி.

(தொடர்ச்சி.)

6. ஆதியில் மேன்மையான ஸ்திதியாய் அனேகந் தூதர்கள் படைக்கப்பட்டார்களென்றும் அவர்களிற் சிலர் தங்களுடைய மேன்மையைக் காத்துக்கொள்ளாமல் தேவனுக்குப் பிரிய ஈனம் உண்டாகும்படி நடந்து தங்களுக்குரிய வாசஸ்தலத்தைவிட்டுப பாதாளங்களிற் தள்ளப்பட்டார்களென்றும் அவர்களுக்குள் தலைவனாகிய சாத்தானென்பவன் துர்ப்போதனைசொல்லவே அதைக் கேட்டு மனுஷனானவன் தீமைசெய்ய இணங்கித் தன் இருதயத்தில் கடவுள் வைத்திருந்த அகத்துப் பிரமாணத்தையும் அதற்கிசைவாய்க் கொடுக்கப்பட்டிருந்த புறத்துப் பிரமாணத்தையும் மீறி தான் படைக்கப்பட்டிருந்த தேவசாயலையும் இழந்து அவரது கோபாக்கினையைத் தன்மேல் வருத்திக்கொண்டதினால் தேவனுக்குச் சத்துராதியாகி நினைத்து முடியாத துன்பங்களுகும் மரணத்திற்கும் மரணத்திற்குப்பின் நித்திய நரகாக்கினைக்கும் உள்ளானானென்று சொல்லுகிறது.

மனுஷன் ஆதியிற் பரிசுத்தமான நிலைமையிற் படைக்கப்பட்டிருக்கப் பிற்பாடு பாவத்திலே விழுந்துவிட்டானென்ற உபதேசம் நிசந்தானென்று நமது அனுபவமே நமக்குப் போதிக்கிறது. உலகத்திற் சிலர் நல்ல சுபாவமுடையவர்களாகவும் சிலர் கெட்ட சுபாவமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். கெட்ட சுபாவமுடையவர்களாக இருந்தாலும், நல்ல சுபாவம் இல்லாமல்போகிறதுமில்லை. ஒன்று குறையாகவும் ஒன்று அதிகமாகவும் இருக்குமேயல்லாது இருவித சுபாவமும் இல்லாத மனுஷன் உலகத்திலில்லை. இது எதினாலே? கடவுளே இப்படி மனுஷனைச் சிருஷ்டித்திருப்பாரோ? நல்ல ஊற்றினின்றுங் கசப்பான ஜலம் வராததுபோலும் நன்மைச் சொரூபியும் நீதிபரருமாகிய கடவுள் ஒருவனை நல்லவனாகவும் மற்றொருவனைக் கெட்டவனாகவும் படைத்திருப்பாரோ இல்லை. தகப்பனுக்கிருக்கும் வியாதி பிள்ளைக்குமுண்டாவது இயல்புபோல, ஆதிதாய் தகப்பன்மார் செய்த தோஷமே அவர்கள் பிற்சந்ததியாராகிய மனுஷர் யாவரையும் இப்படிப் பிடித்திருக்கிறதேயல்லாமல் வேறல்ல. இதை யார் மறுக்கக் கூடும்.

அன்றியும் மனுஷன்தான் செய்கிறது தனக்கே பிரியமில்லாமலுமிருக்கிறது. நன்மைசெய்வது நலமென்று ஒப்புக்கொள்ளுகிறான். நன்மையே செய்யவேண்டுமென்ற விருப்பமுந் தன்னிடத்திலிருக்கிறது. தான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல் தான் வெறுக்கிற தீமையைச் செய்கிறான். நல்ல நல்ல காரியங்களைக் குறித்துச் சிந்திக்கிறான். அவன் செய்கிறவைகளோ நேர் விரோதமாயிருக்கின்றன. இதுவும் எதினாலே? மனுஷனல்ல, மனுஷனுடைய இருதயத்தில் ஒட்டியிருக்கும் பாவமே காரணமாக இருக்கிறது. மனுஷனானவன் ஆதியிலே ஞானம், பரிசுத்தம், பாக்கியமாகிய ஸ்திதியிலே படைக்கப்பட்டிருக்க, சத்துராதி ஒருவன் உட்புகுந்து அஞ்ஞானம், அசுத்தம், நிற்பாக்கியமாகிய பாவவிதையை விதைத்துவிட்டானென்று கிறிஸ்துமதநூல் சொல்வது நிஜமல்லவோ.



முன்னோரிடத்திற் காட்டியபடி பூமியின் சகல தேசங்களிலும் ஜனங்கள் பற்பல விக்கிரகங்களை ஏற்படுத்தி பலவகையான பலிசெலுத்திவருகிறார்கள். தங்கள் தேகங்களை மிகவாய் ஒடுக்குகிறார்கள். ஸ்தலயாத்திரை போகிறார்கள். அக்கினி முழுகுகிறார்கள். ஆறுகளிலும கிணறுகளிலும் தங்களை அமிழ்த்தி உயிரைப் போக்கடிக்கிறார்கள். பசிய இலைகளையும் கந்தமூலங்களையும் தின்றுகொண்டு மலைகளிலும் வனங்களிலும் வாசம்பண்ணுகிறார்கள். இவைபோலும் பல காரியங்களைக் கவனிக்குமபோது தாங்கள் ஏதோ ஒரு கொடிய தப்பிதத்திற்குட்பட்டிருக்கிறதுபோலும் அந்தத் தப்பிதத்திற்காகத் தங்களுக்கு ஏதோ ஒரு தண்டனை கிடைக்க இருக்கிறதுபோலும் இந்தத் தண்டனையினின்றும் மேற்கூறிய பிரயத்தனங்களினாலே தப்பிக்கொள்ளப் பார்க்கிறதுபோலவும் விளங்குகிறது. அவர்களுக்குட்பட்டிருக்கும் தப்பிதம் அவர்களுக்குள் வாசமாயிருக்கும் பாவந்தான் என்பதையும் அவர்கள் பயப்படுகிற தண்டனை பாவிகளுக்கு கடவுள் கொடுக்கும் நித்திய நரகதண்டனையே என்பதையும் மறுப்பவன் யார்?

7. மனுஷனானவன் கடவுள் தனக்குக் கொடுத்திருக்கிற பிரமாணத்தை மீறிப் பாவஞ்செய்து தான் விழுந்த பாவசாகரத்தினின்றுந் தன்னை மீட்டுக்கொள்ளச் சக்தியற்றவனாகி, நித்திய நரகாக்கினையையே அடையப் பாத்திரவானாகிப்போய்விட்டதினால் பாவியின் மரணத்தை விரும்பாமல் அவன் மனந்திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிற கடவுள் வேறெந்த வகையாயும் ஈடேற்றமற்ற பாவிக்கு ஒரு வழி உண்டாக்கும்படியாக அனாதி தீர்மானங்களின்படி திரித்துவத்திலொருவராகிய தமது குமாரனை மத்தியஸ்தராகவும் இரக்ஷகராகவும் குருவாகவும் அனுப்ப அவர் உலகத்தில் மனுஷாவதாரமெடுத்து ஏசுக்கிறிஸ்து என்ற நாமமுடையவராய் தெய்வ சித்தத்தை வெளிப்படுத்தி பரிசுத்த மார்க்கத்தைத் தமது நடத்தையாற் காட்டி, பாவி படவேண்டிய பாடுகளையெல்லாம் பட்டு பாவி அடையவேண்டிய மரணமுமடைந்து அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிரோடெழுந்து இரக்ஷிப்பின் வழியை உண்டாக்கினாரென்றும் தங்கள் பாவங்களுக்காக உண்மையாய் மனஸ்தாபப்பட்டு பாவநாசராய் விளங்கிய இந்த ஏசு இரக்ஷகரை நம்பி அவர்மூலமாய் மாத்திரம் தம்மிடத்திற்கு வருகிறவர்களை அன்போடு கடவுள் ஏற்றுக்கொண்டு அவர்களுடைய பாவங்களுக்கு விமோசனம் அருளுகிறாரென்றும் சொல்லுகிறது.

இப்படி தேவேத்தனமாய் உண்டான இரக்ஷிப்பைப்பற்றி அனேகர் கிறிஸ்துநாதர் பாடுபடவேண்டியதென்ன? அது புத்திக்கு விரோதமாயிருக்கிறதெனச் சொல்வார்கள். அப்படியல்ல மனுஷனுக்குத் தன்னாலேயாவது மற்றோராலாவது வேறெந்த வகையாகவாவது இக்கட்டு முதலியவை நேரிடும். தன்னைத் தானே மீட்டுக்கொள்ளச் சக்தியற்றவனாகவும் இருக்கிறான். அச்சமயத்தில் அவனுக்குச் சினேகிதனான ஒருவன் அவனைத் தனது பிரயாசத்தினால் அந்த இக்கட்டினின்து மீட்பது இயல்பே. அதுபோல மனுஷனானவன் இக்கட்டுப்பட்டவனாய்ப் பாவசாகரத்தில் அமிழ்ந்தி நிற்கதியாக இருக்கிறான். மோசத்துள்ளகப்பட்டுத் தவிக்கிறான். எம்மதவாதி இதை மறுக்கக் கூடும். அப்படியானால் நிராதரவாய் மதிமயங்கி வருந்தும் பாவிக்கிரங்குவார் ஒருவருமில்லையோ! மனுஷர் யாவரும் இப்படித் தவிக்கிறார்களே. அவர்களுக்குச் சிநேகிதர் ஒருவருமில்லையோ உண்டு. பூலோகத்தில் ஒருவருமில்லை. ஆனாலும் அன்பே சொரூபமாகக் கொண்ட கடவுள் மனுஷருக்கிரங்கி, அவர்கள் ஈடேறும்

படி ஜெகத்திருவாக ஒருவரை அனுப்பி அவரால் இரக்ஷண்ய வழி ஒன்றை உண்டாக்கியிருக்கிறார். இது புத்திக்கு விரோதமா இல்லையே.

அன்றியும் விக்கிரகாராதனைக்காரர் தங்கள் தேவர்களுக்கு ஆடு, மாடு, ப றி, கோழிமுதலிய ஜெந்துகளைப் பலியிடுகிறதல்லாமல் நரபலியும் செலுத்துகிறார்கள். தங்கள் பாவம் நீங்குகிறதற்காக தெரிந்தும் தெரியாமலும் இப்படிப் பலிசெலுத்துகிறவர்கள் இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பில்லை என்னுஞ் சத்தியத்தைத் தங்கள் கிரியையினாலே ரூபிக்கிறார்கள். வாஸ்தவமே. காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் மனுஷனுடைய பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாது. இடைவிடாமல் செலுத்தப்பட்டு வந்த பலிகள் யாவும் வரப்போகிற தெய்வ ஏக பலிக்கு நிழலகாமாத்திரமிருந்தன. ஆதலால் பொருளாகிய கிறிஸ்துநாதர் மனுஷனாகி, சர்வலோகத்தின் பாவங்களையும் சுமந்துத் தீர்க்கிற தேவாட்டுக்குட்டியாய் விளங்கி, பாவ பரிகாரத்தையும் மீட்பையும் உண்டாக்கும்படி தாமே பிரதான ஆசாரியராய் ஏற்பட்டு மிருகங்களின் இரத்தத்தையல்ல குற்றமற்ற தமது சொந்த இரத்தத்தையே அனேகந்தரமல்ல ஒரேதரம் சிந்தி பூரணபலி செலுத்தியிருக்கிறார். இதுவும் புத்திக்கு விரோதமோ இல்லையே. ஆகையால் கிறிஸ்துநாதர் மனுஷனுக்காய்ப் பிணைப்பட்டதும் அவனுடைய பாவத்திற்காய் இரத்தஞ் சிந்தினதும் ஆட்சேபனைக்கிடமற்றவைகளாகவே இருக்கின்றன.

7. பரிசுத்தஆவியானவரைப்பற்றி அவர் திரித்துவத்திலொருவரொன்றும் பாவநிலைமையிலிருக்கிற ஒருவன் தேவனிடத்திற்குத் திரும்பும்படியாக அவன் தன் பாவங்களை உணர்ந்து மனஸ்தாபப்பட்டு அறிக்கையிட்டு அரோசித்து, அவைகளை விட்டுவிடுவேனென்று உறுதியாய்த் தீர்மானம் பண்ணவும் தன் பாவங்கள் எல்லாம் ஏசுபகவானாலே மாத்திரம் நீங்குமெனத் தெளிந்து அப்பாவநாசரை உறுதியாய் நம்பிப் பற்றிக்கொள்ளவும் அவன் உள்ளத்தை ஏவி எழுப்புகிறாரொன்றும், அவனுடைய சுபாவகுணம், சித்தம், ஆசை, நடக்கைமுதலியவைகளை மாற்றி புதுஜீவனைகொடுப்பதினால் அவனுக்கு மறுஜனனம் வரப்பண்ணுகிறார் என்றும், கடவுளுடைய பரிசுத்த பிரமாணங்களை அவருக்குப் பிரியமானபடி நடப்பிக்கவும் பாவஇச்சைகளை அழிக்கவும், சோதனைகளை ஜெயிக்கவும், துன்பங்களைப் பொறுமையாய்ச் சகிக்கவும், சக்தியைக் கொடுக்கிறார் என்றும் நாடோறும் பரிசுத்தத்திலே நடந்து கிருபையிற் தேறி தெய்வசித்தத்திற்கும் தெய்வ வசனத்திற்குமிசைந்து தெய்வ சற்குணங்களை உடையவனாகும்படி செய்வதினால் அவனைப் பரிசுத்தமாக்குகிறாரொன்றும் மனச்சமாதானத்தையும், ஆறுதலையும் மறுமையில் தனக்குக் கிருபையாய்க் கிடைக்கப்போகிற பாக்கியங்களின் முன்ருசியையும் அருளுகிறாரொன்றும் சொல்லுகிறது.

9. கடவுளானவர் சிருஷ்டிக் காரணத்தால் சிருஷ்டிகளாகிய மனுஷருக்குப் பிதாவாக இருக்கிறார். ஆயினும் மனுஷர்கள் ஆதியிற் பாவத்தில் விழவே தாங்கள் படைக்கப்பட்டிருந்த தேவசாயலையும், தங்களுக்கு அருளப்பட்டிருந்த பரிசுத்தஆவியையும் இழந்துபோனதுமன்றி, கடவுளைப் பிதாவென்று அழைக்கும் சிலாக்கியத்தையும் அற்றுப்போய்விட்டார்கள். ஆதலால் கிறிஸ்துவை விசுவாசித்து அவரைத் தங்கள் இரக்ஷகராகப் பற்றிக்கொண்டு அவர்மூலமாகத் தம்மண்டைக்கு வருகிற பாவிகளை கடவுள் தமக்குச் சுவிகார புத்திரராக்கித் தமது சாயலையும் பரிசுத்தஆவியையும் அப்பா பிதாவே என்றழைக்கும்படி சிலாக்கியத்தையும் திரும்ப அவர்களுக்



குக் கொடுத்து கிறிஸ்துநாதர் சம்பாதித்ததும் தம் புத்திரருக்கென்று வைத்திருக்கிறதுமாகிய நித்தியஜீவ இராஜ்யத்திற்குரிய மகிமையான சுதந்தரத்தையும் அருளுகிறாரொன்றும் சொல்லுகிறது.

---

## POLYCARP THE MARTYR.

"Eighty and six years have I served Christ who has never done me any injury; how then can I blaspheme my King and Saviour."

"நான் இந்த எண்பத்தாறு வருடம் கிறிஸ்துவைச் சேவித்ததில் ஒரு நாளும் அவரெனக்கொரு பழுதுசெய்யவில்லையே. அப்படியிருக்க என் இராஜாவும் இரக்ஷகருமான அவரை எப்படித் தூஷிப்பேன்."

---

### விருத்தம்.

குற்றவிசாரணை முடிந்து தகிக்குந்தீயில்
கொடுமரண தண்டனையே யடைவீர் ஐயோ
சற்று நசரோயனை நீர் மறுதலித்து
சபித்துவிட்டுத் தரையதில் வாழப்போகாதோ
கற்றஉமக்கிது மதியோ தெரியேமென்று
கண்டவருங் கேட்பவருஞ் சொல்லக்கேட்டு
நற்றவத்திலுயர் போலிக்கார்ப்பு மாறி
நவிலுவாரிதுவசன நவலுவாரோ.

புன்னாகவராளி. ஆதிதாளம்

### பல்லவி.

எப்படி நான் மறுதலிப்பேன் என் ஆண்டவன்மேல்
என்னகுறை சொல்லி வெறுப்பேன்.

### அனுபல்லவி.

தப்பித துரோகியெனையுஞ் சட்டைசெய்தன்று குருசில்
ஒப்பில்லா உயிரளித்த உத்தமத்தைக் கண்டிருந்தும்.— எப்படி

### சரணங்கள்.

ஆகமங்கள் கூறுகின்றவர் உலகனைத்தும்
ஆசை வைக்கத்தகும் ரக்ஷகர்
தேகமெடுத்தென்னை மீட்கவே பிராணதியாகம்
செய்த நரதேவனானவர்
தாகமாய்ச் சிலுவையேறி, சாகநின்றபோதும் என்னைத்
தள்ளிட மனம்வராத வள்ளலையிப்போ துணிந்து.— எப்படி

2 பொன்னுலக வாழ்வை விடுத்தார் இழிந்த இந்தப்
பூவுலகந்தனை யடுத்தார்
என்னுரு வேணுமென்றெடுத்தார் சிலுவையினில்
ஏழையேற்காய் ஜீவன்கொடுத்தார்
புன்னுனிப்பனி யிவ்வாழ்வோர், பொருளோ யிதைமதித்து
என்னருமை நாதனை விட்டிங்கிருப்பேனோ பிழைத்து.— எப்படி

3 தீயநெறிசென்ற என்னையே தடுத்தடுத்து
செவ்விதுணர்த்தித் திருத்துதே
நேயதேவசெயலேயன்றி தற்செயலல்ல
நினைக்கப் புதுமையுமல்ல
காயுதண்டனையிதல்ல கனத்தபாரமுமல்ல
கர்த்தராலெனக்குத் துன்பம் நித்தியம் விளைக்கு தின்பம்— எப்படி

4 எண்பதுடன் ஆறுவருடம் அவரைச் சேவித்
இன்பமாயவர்க்குள் சுகித்தேன்
பண்பவர் மனமொழிமெய்யோர் பழுதெனக்குப்
பண்ணவில்லை யெண்ணவுமில்லை
புண்பொதி சடலம்விட்டு, பொன்பதியடையுமுன் நான்
புத்தியுணர்வற்றவனாய்ச் சற்றுநேரச் சோதனையில்.— எப்படி

5 ஏதமில்லா தேவபுத்திரர் அடிமையென்னை
இந்தமட்டும் ஆதரித்தவர்
போதஇதை யுத்தரிக்கவே, பெலன்பொறுமை
போந்தபடிதான் தருபவர்
தூதர்சங்கங் குழுகின்ற, தூய்ய சுத்தவான்களுடன்
பாதகனெனையுஞ் சேர்க்கு பக்ஷமுய ரக்ஷகனை.— எப்படி

6 இயேசுகிறிஸ்தின் பிதாவே, அவராலெங்கட்
கிவ்வறிவுதந்த தேவே
பேசநம்பிக்கை சமாதானம், உண்டுநானினிப்
பின்னுக்குப் பார்ப்பதோ ஞானம்
தாசனென்னை இந்நாள் ரத்த சாட்சிகளுடனிருக்க
தந்தபவிஷை நெகிழ்ந்து வந்தனஞ்செய மறந்து.— எப்படி

---

## சமாசாரத்திரட்டு.

சென்னையில் நியாயவாதியாயிருந்த மேஸ்தர் கரீன் என்பவர் 13-வருடங்களுக்குமுன் மகமதியனானொன்னும் சங்கதி எமதிஷ்டர் சிலருக்குத் தெரிந்திருக்கலாம். அவர் இப்போது இறந்துபோயினர். அவர் மரணப்படுக்கையில் குணப்பட்டதாகவும், கிறிஸ்த முறையின்படியே அடக்கம்பண்ணப்பட்டதாகவும் ஓர் பத்திரிகை சொல்லுகிறது.

"ஒரியென்டல் பான்க்" என்னும் வர்த்தக கஜானாசாலைக்கு இப்போது நேரிட்ட நஷ்டத்தின் வரலாறு.-மொரீசிலிருக்கும் மேற்படி நாமதேயத்தை உடைத்தான கஜானாசாலையிலிருந்து ஜோசப் டெர்ப்பிராதஸ் என்னும் துரை எண்ணிலடங்காத் திரவியங்களைத் திருடி மோசஞ்செய்ததினாலே ஒழிய வேறு முகாந்தரத்திற்கல்ல என்றும், மோசஞ்செய்து தன்



னைக் களவும் கையுமாய்ப் பிடிக்கக் கூடாத அன்னிய அரசாக்ஷியையுடைய தேசத்திற்குச் சென்றும் உலகத்தில் உள்ளவர்களில் அநேகர் கெட்டுப்போவதைக் கண்ட அன்னிய அரசர் அப்புண்யாத்மாவை பிடித்துக் கொள்ளும்படி உத்தரவளித்தனராம். இதுவரையில் போலீசார் செய்த வேதனையால் தன் வசம் 5-லட்சம் ரூபாய் இருக்கிறதென்று சொன்னானாம். இனி கொடுக்கப்போகிற வேதனையில் எத்தனை லட்சம் ரூபாய் இருக்கிறதென்று சொல்வானோ?

காபூல் தேசத்து அமீர் அப்லராஹிமான் ஒருவரும் சூதாடக்கூடாதென்று உத்தரவுசெய்திருக்கிறார். இதை மீறி நடக்கிறவர்களை வலது கையை வாங்கிப்போடுவதாய்க் கடுமையான தண்டனை விதித்திருக்கிறார்.

இத்தேசத்தினின்று சீமைக்குப்போயிருந்த ஸமஸ்கிருத பாண்டித்தியமுள்ள பண்டித ராமாபாயி அம்மாள் செல்டனஹாம் ஸ்திரீகள் கலாசாலை ஸமஸ்கிருத உபாத்தியாயராக நியமிக்கப்பட்டிருக்கிறாள்.

கடந்த மாதம் 10௳ வியாழக்கிழமையன்று பூர்வத்தில் நடந்த மாதிரியாய் நம்முடைய காருண்ணிய சக்கரவர்த்தினியாகிய விக்டோரியா அம்மாள் தன் பிராயத்தை நிகர்த்த 65-கிழவிகளைக் கைதிகளாயிருப்பதிலிருந்து விடுதலையாக்கினாராம்.

பிரான்சி எதியென் பிராடியா என்பவன் 108-வ்யதுவரையில் இருந்து இப்பொழுது இறந்தான். அவன் 100-வயதுக்குமேல் கலியாணம்செய்துகொண்டான். ஒரு பிள்ளை பிறந்தது. ஆனால் அது சீக்கிரம் இறந்தது.

இந்த மாதம் 5௳ டில்லியில் பூகம்பம் உண்டாயிற்று. காலை 11-மணி முதல் சாயங்காலம் 3-மணிவரையில் இடியைப்போல் சப்தமுண்டாகிக் கொண்டிருந்தது. இதுவரையிலும் சேதமொன்றும் நேரிட்டதாகத் தெரியவில்லை.

கல்கத்தாவில் ஒரு வேடிக்கையான சங்கதி நடந்தது. ஒரு பசியுள்ள கப்பல் வேலைக்காரன் ஒரு சோத்துக்கடையில்போய் வேண்டிய அளவு சாப்பிட்டான். அவன் போகிற காலத்தில் சாப்பாட்டுக்குள்ள கிரயத்தைக் கொடுக்கும்படி கேட்டார்கள். கப்பல் வேலைக்காரன் தன்னைக் கேட்டவனைப் பார்த்து உனக்குக் கிரயம் கையிலிருந்து வேண்டுமோ, காலிலிருந்து வேண்டுமோ என்றான். இதினுடைய அர்த்தம் தெரியாத சாப்பாடு போட்டவன் எப்படியாவது கொடுத்தால் சரியென்றான். அப்படியானால் காலிலிருந்து எடுத்துக்கொள்ளென்று விரைவில் ஒடி ஒளித்துவிட்டான். இன்னவிடம் போனானென்று தெரியவில்லை.

சில நாட்களுக்குமுன் சுமார் ஒரு மணிநேரம் வரையில் லங்காஷைர் என்னப்பட்ட விடத்தில் என்றைக்குங் காணப்படாத காரிருள் கவிந்திருந்தது. அவ்விடமெல்லாம் இருள் சூழ்ந்துவிட்டது. யாதோ சில ஹேதுவால் கரியமல வாயுக்கள் ஒன்றாய்க் கூடியதனாலேயே அவ்வந்தகாரம் சம்பவித்திருக்கலாமென்று சாஸ்திரிகள் காரணங் கற்பிக்கிறார்கள். பகல் பதினொன்றரை மணிக்கு பெரிய அச்செழுத்து படிக்க சாத்தியப்படவில்லையாம். பிறகு போகப்போக கொஞ்சங்கொஞ்சமாய் வெளிச்சம் உண்டாகியதாம். பின்பு தென்பாரிசத்தில் மஞ்சல் நிறமான மேகங் காணப்பட்டதாம். பின்னர் பெருமழை பொழிந்ததாம். மழைத்தண்ணீர் முற்றும் கரியைக் கழுவிவிட்டதுபோலிருந்ததாம். இதுவும் ஓர் அற்புதந்தான்.

---

ஜூலைமீ நாள்-31. ஆனிமீ 19உ முதல், ஆடிமீ 18உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| செ | 1 | க௯ | கர்த்தரின் வார்த்தையைக் கேளும். ஏசாயா 39: 5. |
| பு | 2 | உ0 | கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும். 40: 5. (39. |
| வி | 3 | உக | அவர்களுடைய விக்கிரகங்கள் காற்றும் வெறுமையுந்தானே. 41: |
| வெ | 4 | உஉ | என் துதியை விக்கிரகங்களுக்குக் கொடேன். 42: 8. |
| ச | 5 | உ௩ | நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை. 43: 11. |
| ஞா | 6 | உச | உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். |
| தி | 7 | உ௫ | என்னை நோக்கிப் பாருங்கள், அப்பொழுது ரட்சிக்கப்படுவீர்கள். |
| செ | 8 | உ௬ | தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானதுமுதல் உங்களைத் தாங்கினேன். |
| பு | 9 | உ௭ | உன் திரளான யோசனைகளால் நீ இளைத்துப்போனாய். 47: 13. (௭ |
| வி | 10 | உ௮ | உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்துகொண்டேன் |
| வெ | 11 | உ௯ | உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன். 49: 6. (48: 10. |
| ச | 12 | ௩0 | கர்த்தராகிய ஆண்டவர் என் செவியைத் திறந்தார். 50: 5. |
| ஞா | 13 | ௩க | என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன். 51: 16. |
| தி | 14 | க | பணமின்றி மீட்கப்படுவீர்கள். 52: 3. (5. |
| செ | 15 | உ | நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். 53: |
| பு | 16 | ௩ | நீதியிலே ஸ்திரப்பட்டிருப்பாய். 54: 14. |
| வி | 17 | ச | என் நினைவுகள் உங்கள் நினைவுகளல்ல. 55: 8. |
| வெ | 18 | ௫ | இதோ நான் பட்டமரமென்று சொல்லாதாக. 56: 3. (19. |
| ச | 19 | ௬ | அவர்களைக் குணமாக்குவேனென்று கர்த்தர் சொல்லுகிறார். 57: |
| ஞா | 20 | ௭ | நீ கூப்பிடுவாய், கர்த்தர் மறுஉத்தரவுகொடுப்பார். 58: 9 |
| தி | 21 | ௮ | கிரியைகளுக்குத்தக்க பலனை அளிப்பார். 59: 18. |
| செ | 22 | ௯ | எழும்பிப் பிரகாசி, உன் ஒளி வந்தது 60: 1. (வசன. 61: 3. |
| பு | 23 | க0 | ஒடுங்கின ஆவிக்குப்பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்க |
| வி | 24 | கக | கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படு |
| வெ | 25 | கஉ | என்னுடையவர்களை மீட்கும் வருஷம் வந்தது. 63: 4. (வாக். 62: 2. |
| ச | 26 | க௩ | மவுனமாயிருந்து அதிகமாய் எங்களைச் சிறுமைப்படுத்துவீரோ? 64. |
| ஞா | 27 | கச | நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன். 65 |
| தி | 28 | க௫ | உங்கள் சந்ததியும் உங்கள் நாமமும் நிற்குமென்று கர்த்தர்சொல் |
| செ | 29 | க௬ | உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன். எரே |
| பு | 30 | க௭ | ஜீவதண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள். 2: 13. (1: 8. |
| வி | 31 | க௮ | சீர்கெட்ட பிள்ளைகளே திரும்புங்கள் என்றுகர்த்தர்சொல்லுகிறார் |

## விசேஷ நாட்கள்.

6. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 4-ம் ஞாயிறு.
7. பௌர்ணமி.
13. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 5-ம் ஞாயிறு.
20. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 6 ம் ஞாயிறு.
22. அமாவாசை
25. பரி அப். யாக்கோபின் திருநாள்.
27. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 7-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

ஆகஸ்துமீ. ௲அஅச௵.

## THE ORDINATION STUDENT.

## குருப்பட்ட மாணாக்கன்.

1. கடவுளுக்கு பழையஏற்பாட்டிலும் விசேஷமாய் ஆதியாகமத்திலும் யேலோகீம், யெகோவா என்ற இரண்டு நாமங்கள் அதிகமாய் வழங்கியிருக்கிறது. அவற்றின் வரலாறென்ன?

ஆதி. 1: 1–ல் தேவன் என்பதற்கு எபிரேயு பாஷையில் யேலோகீம் என்றிருக்கிறது. யேலோகீம் என்பது தேவனுக்கு வழங்கிய பொதுப் பேர். யேலோகீம் என்ற பேர்: பயப்படுதல், வணங்குதல், தொழுதல் என்றர்த்தமுள்ள "அலாகா" என்ற அரபி மூலபதத்திலிருந்தாவது, அல்லது பெரும்பாலும் ஒப்புக்கொண்டிருக்கிறபடி பெலமாயிருத்தல் என்றர்த்தமுள்ள "அலா" என்ற அரபி மூலபதத்திலிருந்தாவது பிறந்த பேராம். இப்படியாக கடவுளுக்கு வல்லவர் என்று பேர் வழங்கினது. யேலோகீம் என்ற பேர் பன்மைப் பேர். வேதத்தின் மூந்தின ஆகமங்களில் பெரும்பாலும் இந்த வார்த்தை தேவர்கள் என்று பன்மையாகவே இருக்கிறது. இந்தப் பன்மை, தேவமகத்துவத்தையும் மாட்சிமையையும் காட்டுகிற பன்மை என்று தோன்றும். திருஷ். நீதி. 9: 1–ல் "ஞானம்" என்பது ஞானங்கள் (Chochmoth) என்று பன்மைப் பேராயிருக்கிறது. ஞானம், அறிவு என்பவற்றின் பொக்கிஷங்களெல்லாம் அந்த வார்த்தையில் மொத்தமாய் அடங்கியிருப்பதைக் குறிக்கும்படி அப்படிச் சொல்லியிருக்கிறது. அப்படியே தேவனை யேலோகீம் என்று பன்மையாய்ச் சொல்லும்போது, அஞ்ஞானிகள் தங்கள் தெய்வங்களுக்குச் சொல்லுகிற சர்வவல்லமை முதலிய மகத்தான லக்ஷணங்களையெல்லாம் சம்பூரணமாய் உடைத்தானவர் என்று சொல்வதற்குச் சரியாம். என்றாலும் யேலோகீம் என்பது ஒரு பேர் என்று சொல்வதைப் பார்க்கிலும் பட்டப்பேர் என்று சொல்வது அதிகத் திட்டமாயிருக்கும். யேலோகீம் என்ற பேர் மெய்த்தேவனுக்கு வழங்கியிருப்பதுபோல, அஞ்ஞான தெய்வங்களுக்கும் வழங்கியிருக்கிறது. இதினாலே இஸ்ரவேலரைச் சுற்றியிருந்த அஞ்ஞான ஜாதியார், யேலோகீம் உண்டென்றும் அவர் மெய்த்தேவன் என்றும் ஒப்புக்கொண்டிருந்தார்களென்று தோன்றும்.

யெகோவா என்ற பேரோ அதைப்போலல்ல, மெய்த்தேவனுக்கேயுரிய சொந்தப் பேராம். யூப்பித்தர், விஷ்ணு இந்தப் பேர்கள் எப்படி அவரவருடைய சிறப்புப் பேரோ அப்படியே யெகோவா என்பது வேறொருவரையும் குறியாமல் மெய்த்தேவனை மட்டும் குறிக்கிற சிறப்புப் பேராம். நம்முடைய வேதத்திற் சொல்லிய யேலோகீம் யெகோவா என்ற பேர்கள் ஒருவரையே குறிக்கிறதாக நெடுக வழங்கியிருக்கிறது. யாத். 6: 2, 3. வாசி.–யேலோகீம் என்பதை தேவன் என்றும் யெகோவா என்பதை கர்த்தர் என்றுபெரிய எழுத்திலும் தமிழ் திருப்பியிருக்கிறது.

பூர்வ சேமியர் (Semitic) பாஷைகளில் பிரதிப்பேரை அதிகமாய் வழங்காமல் பெயர்ச்சொல்லையே மாறி மாறி உபயோகிப்பது வழக்கம். திருஷ். சிருஷ்டிப்பைக்குறித்துச் சொல்லிய ஆதி. 1: 1—2: 3 வரை யேலோகீம் என்று 35–தடவை வருகிறது.

கவனிப்பு. எபிரேயு, கல்தேயு, சீரியா, அரபி, சமாரியா, எத்தியோப்பியா, பூர்வ பெனிக்கே ஆகிய இந்தப் பாஷைகள் சேமியர் பாஷைகள் என்னப்படும்.

**2.** திரித்துவம் உண்டென்று ரூபி?

(1) ஒரே தேவன் உண்டென்று வேதத்தில் எங்கும் சொல்லியிருக்கிறது.

(2) தேவத்துவத்தில் பன்மையிருக்கிறதாக பழையஏற்பாட்டில் தெளிவான குறிப்புகளுண்டு. புதியஏற்பாட்டில் பிதா தேவன், குமாரன் தேவன், பரிசுத்தாவி தேவன் என்று நேராயும் தெளிவாயும் சொல்லியிருக்கிறது.

(3) இந்தப் பன்மை, ஏகத்துவத்துக்கு விரோதமாகச் சொல்லப்படவில்லை. திருஷ். ஓரிடத்தில் ஒரே தேவன் உண்டென்றும் இன்னோரிடத்தில் மூன்று தேவர்கள் உண்டென்றும் சொல்லப்படவில்லை. இம்மூவரும் ஒரே தேவன் என்றும், அந்த ஒரே தேவனென்றும் சொல்லியிருக்கிறது.

(4) அப்படியிருக்க, பிதாவானவர் குமாரனல்ல என்பதும், பிதாவும் குமாரனும் பரிசுத்தஆவியல்ல என்பதும், இம்மூவரும் குணம் அல்லது லக்ஷணமாயிராமல், மூன்று தனித்தனி பர்சனாயிருப்பதும் பர்ஷ்காரமாயிருக்கிறது. ஆகையால் தேவன், வஸ்துவில் ஒருவராயும் பர்சனில் மூவராயுமிருக்கிறார் என்று ரூபகாரமாகிறது.

கவனிப்பு. (1) திரித்துவம் என்ற வார்த்தை வேதத்திலில்லை. இதை முதலாவது உபயோகித்தவர், கி. பி. 170௵த்தில் அந்தியோகியா பட்டணத்து தெயோப்பிலு கண்காணியார். இவர் எழுத்தில் 181௵ கிரேக் பாஷையிலும், தெர்த்துல்லியான் எழுத்தில் 192௵ லத்தீன் பாஷையிலும் இந்த வார்த்தையை முதல் முதல் வழங்கியிருக்கிறது. 317௵ அலெக்சந்தரியாவில் கூடின குருச்சங்கத்தில் இந்த வார்த்தையை வழங்கும்படி உத்தரவு பிறந்தது.

(2) ஞானஸ்நானக் கட்டளையில் திரித்துவ உபதேசத்திலுள்ள இரண்டு சத்தியங்கள் வெளியாகிறது.

a தன்மையில் ஒரே வஸ்துஎன்பது. எப்படியென்றால் மூவருக்கும் ஒரே நாமம் சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுக்கு மட்டும் இப்படியிருக்கக் கூடும். இதினால் பிதா எப்படி நம்முடைய விசுவாசத்துக்குப் பாத்திரரோ அப்படியே குமாரனும் பரிசுத்தாவியும் பாத்திரர் என்ற சத்தியம் வெளியாகிறது.



b. திரித்துவ வரிசை தெளிவாயிருக்கிறது.

யாரிலிருந்து சகலமும் புறப்படுகிறதோ அவர் முதலாவது.

யார் மூலமாய்ச் சகலமும் புறப்படுகிறதோ அவர் இரண்டாவது.

யாராலே சகலமும் புறப்படுகிறதோ அவர் மூன்றாவது.

வஸ்துவிலும் நாமத்திலும் சரிசமானம். அன்னியோன்னிய சம்பந்தத்திலும் உத்தியோகத்திலும் தணிவு.

**3.** கிறிஸ்துநாதர் தேவன் என்று ரூபி?

(1) கிறிஸ்துநாதர் மனுஷஅவதாரம் எடுக்குமுன் மெய்யாகவே இருந்தார். யோவான் 6: 62. 1: 15. 8: 58. 17: 5, 24. எபி. 1: 11.

(2) அவர் மனுஷ அவதாரம் எடுக்குமுன் சிருஷ்டிக்கப்படாத தேவத்தன்மையுடையவராயிருந்தார். எப்படித் தெரியுமென்றால்;

a. அவர் சிருஷ்டிகராயிருந்ததினாலே. யோ. 5: 17. சிருஷ்டித்தல் தேவனுக்கேயுரிய லக்ஷணம்.

b. பிலிப். 2: 6, 7. "அடிமையின் ரூபம்" என்பது மனுஷத்தன்மையைக் குறிப்பதுபோல், "தேவனுடைய ரூபம்" என்பது தேவத்தன்மையைக் குறிக்கிறது.

c. யெகோவா தம்மைக்குறித்து, "நான் முந்தினவரும் நான் பிந்தினவருமாமே" என்கிறார். எசா. 48: 12. குமாரனைக்குறித்தும் அப்படியே சொல்லியிருக்கிறது. வெளி. 1: 11.

d. யெகோவாவைப்பற்றி எசா. 6–அதி–ல் சொல்லப்படுவது, யோ. 12: 41. கிறிஸ்துநாதருக்குச் சொல்லப்படுகிறது.

c. அநேக வாக்கியங்களில் கிறிஸ்துநாதர் தேவன் என்று சொல்லப்படுகிறார். கொலோ. 2: 9. யோவான் 1: 1. எசா. 9: 6.

f. அநேக வாக்கியங்களில் அவருக்கு யெகோவா என்ற நாமம் வழங்கியிருக்கிறது. எரே. 23: 6. மல்கி. 3: 1. எசா. 40: 3. (இந்த வாக்கியங்கள் கிறிஸ்துநாதரைக் குறிக்கிறதாக புதியஏற்பாட்டில் எடுத்துக் காட்டியிருக்கிறது).

(3) இந்த தேவத்தன்மையை தான்தானாய் அவர் உடைத்தாயிராமல், பிதாவினாலே அடைந்துகொண்டார்.

a. ஒரே தேவவஸ்துவில் தானாய் தேவத்தன்மையை உடைத்தான இரண்டு திவ்ய ஆட்கள் (Person) இருக்கக் கூடாது.

b. தேவத்தன்மை பகுக்கப்படக் கூடாதது. ஆகையால் அதில் ஒரு பங்கு அல்ல, முழுவதுமாய் கிறிஸ்துவுக்குபிதாவினால் அளிக்கப்பட்டது. "நானும் பிதாவும் ஒன்று."–நீசேயா விசு. "ஜோதியில் ஜோதி. மெய்த்தேவனில் மெய்த்தேவன்."

(4) இப்படிப் பிதாவானவர் தம்முடைய திவ்ய சுபாவத்தை முற்றிலும் குமாரனுக்கு அளித்தது வேதத்தில் "ஜநிப்பித்தல்" என்று சொல்லப்படுகிறது. எபி. 1: 5.

மனுஷருக்குள் தகப்பனுடைய தன்மையில் மகன் ஒரு அம்சத்தை இடையில் கொஞ்சக்காலமானபின் பெற்று, தகப்பனுக்கு மகன் இளையவனும் அந்நியனும் குறைவுள்ளவனுமாயிருக்கிறான். ஆனால் தேவனோ, குமாரனாகிய தேவனுக்குச் சம்பூரண சம்பந்தமுடைய பிதாவாக தம்மில் ஒரு அம்சத்தையல்ல, தமது தன்மை அல்லது பதார்த்தத்தை பூரணமாக அநாதியாய் அளித்தார். மனுஷத்தன்மை பகுக்கப்படக்கூடியதால் அது குறைவுள்ளது, சடமுள்ளது. தேவத்தன்மையோ, சித்துப்பொருள், ஆவியானது, பகுக்கப்படாதது. ஆகையால் பூரணமாய் முற்றிலும் கொடுக்கப்

பட்டது. பிதா எப்படியோ குமாரனும் அப்படியே. பிதா எப்போ இருக்கிறாரோ அப்போ குமாரனுமிருக்கிறார். துவக்கமில்லாமல் அநாதியாயிருக்கிறார். அநாதியாய்ப் பிதாவோடே ஒரே தன்மை (Same substance) உடையவராயிருக்கிறார்.

இப்படியாக குமாரன் தேவனென்று ருசுவாயிருக்கிறது. ஆனால் "குமாரன் பிதாவினாலே இருக்கிறவர்" ஆனதினாலும், அநேக வாக்கியங்களில் சித்தத்திலும் செய்கையிலும் அவ்விருவரையும் தனித்தனியாகச் சொல்லியிருப்பதினாலும் (யோவா. 5: 30, 37. 16: 26, 27), பிதாவுடைய பர்சனும் குமாரனுடைய பர்சனும் ஒன்றல்ல என்று விளங்குகிறது.

பூர்வ ஆரியர், தேவகுமாரனுடைய வாக்குக்கெட்டாத உன்னத மகத்துவத்தை ஒப்புக்கொண்டாலும், தேவத்தன்மை மேற்காட்டியபடி அவருக்கு அளிக்கப்பட்டதை ஒப்பவில்லை. ஏனென்றால் . இதினால் அவர் பிதாவோடே ஒரே தன்மையுடையவராகிறாரோ. தேவத்தன்மை அல்லது பதார்த்தத்தில், அதே பதார்த்தம் உடையவரல்ல (Unlike substance) என்று அவர்கள் சாதித்தார்கள். செமி-ஆரியரோ இன்னம் ஒருபடி உயர்த்தி பிதாவுக்கு ஒத்த (Similar) தன்மையுடையவர் என்று ஒப்புக்கொண்டார்கள். பின்னும் ஆரியர்: அவர் இராத ஒருகாலமிருந்தது என்ற விதியையும் உண்டுபண்ணிக்கொண்டார்கள். அதினாலே வேதசித்தாந்தப் பிரமாணத்தில், அவர் பிதாவினாலே அநாதியாய் ஜநிப்பிக்கப்பட்டவர் என்று சாதிக்கிறோம். அவர் பிறக்கிறதற்குமுன்னே அவர் இருந்ததில்லை என்று சொசினியர் சாதிக்கிறார்கள். ஆனால் இந்தத் தூஷணத்துக்கு ஆரியரோ உத்தரவு சொல்வார்கள்.

4. பரிசுத்தாவியானவர் தேவனென்று ரூபி ?

(1) பரிசுத்தாவியானவர் ஒரு சக்தி அல்லது இலட்சணமாயிராமல் ஒரு பர்சனாயிருக்கிறார்.

a. பர்சன்களாயிருக்கிற கெட்ட ஆவிகளுக்கு அவர் எதிரிடையாய்ச் சொல்லப்படுகிறார். சவுல், மிகாயா இவர்கள் சங்கதியில் காணலாம். 2 நாளா. 18: 20, 21.

b, அவர் துக்கப்படக் கூடும் எபே. 4: 30.-வேண்டுதல்செய்கிறார் ரோ. 8: 26.-எல்லாவற்றையும் ஆராய்ந்திருக்கிறார் 1 கொ. 2: 10.-ஆவிக்குரிய வரங்களைப் பகிர்ந்துகொடுக்கிறார் 1 கொ. 12: 11.-பேதுருவோடும் (அப். 10: 19, 20) அந்தியோகியாவிலுள்ள தீர்க்கதரிசிகளோடும் (அப். 13: 2) பேசினார்.

அவர் அனுப்பப்படுகிறார், போதிக்கிறார், சாக்ஷியிடுகிறார், வருகிறார், கடிந்துகொள்ளுகிறார், நடத்துகிறார், பேசுகிறார். இதெல்லாம் ஒரு பர்சனுக்குரிய செய்கைகளாம்.

(2) பரிசுத்தாவியானவர் பர்சனாயிருக்கிறதுமல்லாமல், சிருஷ்டிக்கப்படாதவரும் தெய்வீகமானவருமாயிருக்கிறார்.

a. 1 கொரி. 2: 11.

b. பரிசுத்தாவிக்கு விரோதமாய்ச் செய்யப்படும் பாவம் மன்னிக்கப்படாத பாவமாம் மத். 12: 31. தேவனுக்கு விரோதமாய்ச் செய்யப்படும் பாவமெல்லாம் மன்னிக்கப்படாத பாவமல்ல. ஒரு சிருட்டிக்கு விரோதமாய்ச் செய்யப்படும் பாவம் மன்னிக்கப்படாத பாவமாயிருக்கக் கூடாது.



c. (யோவான் 1: 3.) சிருஷ்டிக்கப்பட்ட சமஸ்தமும் குமாரனால் உண்டானது. பரிசுத்தாவியானவர் ஆதியிலே இருந்ததால் (யோபு 26: 13) அவர் சிருஷ்டியல்ல.

d. (லூக். 1: 35) கன்னிமரியாளுடைய கர்ப்பத்தில் பரிசுத்தாவியினாலே யேசு உற்பவித்துப் பிறந்ததால் அவர் தேவகுமாரன் என்னப்படுகிறார். ஆகையால் பரிசுத்தாவியானவர் தேவனாயிருக்கவேண்டுமே.

e. 2 கொரி. 3: 15—17. அப். 5: 3, 4. 1 கொ. 6: 19. அப். 28: 25. அவர் தேவனும் யெகோவாவுமாம்.

f. சர்வஞ்ஞம், சர்வவல்லமை, சர்வவியாபகம் இந்தத் திவ்ய லக்ஷணங்கள் பரிசுத்தாவிக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

(3) பரிசுத்தாவியானவர் பர்சனும் தேவனுமாயிருந்தாலும், பிதாவுமல்ல, குமாரனுமல்ல.

a. அவர் பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவர். (யோவான் 15: 26.) ஆகையால் அவர் பிதாவல்ல.

b. அவர் குமாரனுடையதில் எடுத்து அவரை மகிமைப்படுத்துகிறவர். (யோவா. 16: 14. 14: 26. 16: 7.) ஆகையால் அவர் குமாரனல்ல.

c. பிதா, குமாரன் ஆகிய இருவரிலிருந்தும் அவரைப் பிரத்தியேகமாய்ச் சொல்லியிருக்கிறது. மத். 3: 16. எபே. 2: 18.

இப்படியாக பரிசுததாவியானவர் தேவன் என்று ருசுவாயிருக்கிறது. மேலும் இந்த ஒரே தேவத்துவத்தில் ஒரே தன்மையையும் வல்லமையையும் நித்தியத்துவத்தையுமுடைய பிதா குமாரன் பரிசுத்தாவி ஆகிய மூன்று பர்சன் உண்டு என்றும் ருசுவாயிருக்கிறது.

5. பரிசுத்தாவியானவர் "குமாரனிலும் நின்று புறப்படுகிறவர்" என்று ரூபி ?

பிதாவினின்று பரிசுத்தாவியானவர் புறப்படுகிற முகாந்தரத்தினாலே பிதாவுக்கும் பரிசுத்தாவிக்குமுள்ள சம்பந்தத்தை எந்த வார்த்தைகளால் சொல்லியிருக்கிறதோ அதே வார்த்தைகளால் குமாரனுக்கும் பரிசுத்தாவிக்குமுள்ள சம்பந்தத்தைச் சொல்லியிருக்கிறது. திருஷ். பரிசுத்தாவியானவர் 1 கொ. 2: 11, 12-ல் "தேவனுடைய ஆவி."-அப்படியே ரோ. 8: 9-ல் "கிறிஸ்துவின் ஆவி."-மேலும் யோவான் 14: 26 ல் பிதாவினாலே பரிசுத்தாவி அனுப்பப்படுகிறவர். அப்படியே 15: 26-ல் குமாரனால் அனுப்பப்படுகிறவர் என்று சரிசமான சம்பந்தம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் தேவனுடைய ஆவியும் பிதாவினால் அனுப்பப்படுகிறவருமாயிருக்கிற முகாந்தரத்தினாலே பரிசுத்தாவியானவர் பிதாவிலிருந்து புறப்படுகிறவர் என்று வேதத்தில் தெளிவாய்ச் சொல்லியிருக்க, அதே முகாந்தரத்தினாலே "குமாரனிலும் நின்று புறப்படுகிறவர்" என்று தாராளமாய்ச் சொல்லலாமே.-பிதாவை ஒருக்காலும் குமாரன் அனுப்பவில்லை. ஏனென்றால் தேவத்தன்மையை பிதாவுக்கு குமாரன் கொடுக்கவில்லை. குமாரனை பிதா அனுப்புகிறார். ஏனென்றால் தேவத்தன்மையை குமாரனுக்கு பிதா கொடுத்ததினாலே. அப்படியே பிதாவையாவது குமாரனையாவது பரிசுத்தாவியானவர் ஒருக்காலும் அனுப்பவில்லை. ஏனென்றால் இவ்விருவரில் யாருக்காவது தேவத்தன்மையை பரிசுத்தாவியானவர் கொடுக்கவில்லை. ஆனால் பிதா, குமாரன் ஆகிய இருவராலும் பரிசுத்தாவி அனுப்பப்படுகிறார். ஏனென்றால், பிதா குமாரன் ஆகிய இருவருக்கும் பொதுவான தேவத்தன்மையை அவ்விருவரும் பரிசுத்தாவியா

னவருக்குக் கொடுத்ததினாலேதான். "பிதாவினாலும் குமாரனாலும் பரிசுத்தாவி இருக்கிறவர்." (அதநாசி விசு.) ஆகையால் பிதாவிலிருந்து பரிசுத்தாவியானவர் புறப்படுகிறவர் என்று வேதம் தெளிவாய்ச் சொல்லியதுபோல, குமாரனிலும் நின்று புறப்படுகிறவர் என்று தெளிவாய்ப் போதிக்கிறது.

6. யோவான் சுவிசேஷம் 1: 1–ல் "ஆதி" என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்ன?

ஆதியாகமம் 1: 1. யோவான் சுவிசேஷம் 1: 1. யோவான் முதல் நிருபம் 1: 1. இந்த மூன்று வாக்கியங்களிலும் "ஆதி" என்ற வார்த்தைக்கு ஒரே அர்த்தந்தான், அதாவது காலமும் சிருஷ்டிப்புமுண்டான முதல் க்ஷணமாம். இந்த ஆதி: உலகம் (6000வருஷத்துக்குமுன்) ஒழுங்குப்படுத்தப்பட்ட காலத்தின் துவக்கத்தைக் குறியாமல், இதற்குக் கோடாகோடி வருஷங்களுக்கு முன்னாக வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட அதி பூர்வ பூர்வத்தைக் குறிக்கிற வார்த்தையாம். இந்த (3) புஸ்தகங்களிலும் இந்த ஆதியைத்தான் முதல் லக்காக வைத்துக்கொண்டு எழுதுகிறார்கள். வித்தியாசம் என்னவென்றால், மோசேயும், 1 யோவானும் இந்த ஆதியிலிருந்து கீழே இறங்கி, இந்த ஆதிக்குப்பிறகு இந்த ஆதிமுதலாக இப்பாலுள்ள தெய்வச்செயலின் சரித்திரத்தை எழுதுகிறார்கள். பரி. யோவான் சுவிசேஷகனோ, இந்த ஆதியிலிருந்து மேல்நோக்கிப்போகிறான். இந்த ஆதிக்குமுன்னாக இந்த ஆதிக்கு அப்பாலுள்ள உன்னத அநாதிக்கு நமது கவனத்தை இழுக்கிறார். எப்படியென்றால் ஆதியிலே வார்த்தை இருந்தது என் கையில், இந்த ஆதியின் முதல் லக்கிலே, காலமுண்டான முதல் க்ஷணத்திலே வார்த்தையானவர் இருந்தவர் என்கிறார். அப்படியானால் இந்த ஆதிக்கு முன்னே அவர் இருந்திருக்கவேண்டுமே. நீதி. 8: 23. யோவா. 17: 5–வாசி.

"வார்த்தை" என்ற பெயரைப் பிடித்து, இருந்தது என்ற கடந்த காலவினைமுற்றுச் சொல் மூன்று விசை வருகிறது.

(1) காலசம்பந்தமாய்....... "ஆதியிலே இருந்தது"
(2) இருந்த வகை..........."தேவனிடத்தில் இருந்தது."
(3) தன்மை ................"தேவனாயிருந்தது" என்கிறார்.

இந்த மூன்று வாக்கிய உறுப்புகளும், 14–வாக்கியத்தில் வார்த்தையானவர் மனுஷாவதாரம்செய்த வகையைப்பற்றிச் சொல்லிய மூன்று வாசகங்களைப் பிடித்து வருகிறது. எப்படியென்றால்,

தேவனாயிருந்தவர்–"மாம்சமானார்."

தேவனிடத்திலிருந்தவர்–"நமக்குள்ளே வாசம்பண்ணினார்." 1 யோ. 1: 2.

ஆதியிலே இருந்தவர்–(காலம் நிறைவேறினபோது) "ஆனார்." (Became).

ஆதியாகமம் 1: 3 முதல், "தேவன் சொன்னார்" என்று எழுதியிருக்கிறதைப் பிடித்து பரி. யோவான் சுவிசேஷகன் "வார்த்தை" என்று வழங்கியிருக்கிறதாக நிதானிக்கத்தகும். இந்தச் சுவிசேஷத்தை வாசிக்கிறவர்கள், "வார்த்தை" என்பதின் கருத்தை நன்றாய் அறிந்திருக்கிற பாவனையாய் எழுதுகிறார். அதினாலேதான் அதற்கு விளக்கம் சொல்லவில்லை. இதை வாசிக்கிறவர்கள் கிறிஸ்துவின் "ஒரேபேறான" அநாதிச் சுயம்புத் தன்மையை அறியும்படி அவர்களை உன்னதத்திற்கு இழுக்க சுவிசேஷ



கன் விரும்புவதால், குமாரன் என்ற நாமத்தை வழங்காமல், வார்த்தை என்ற நாமத்தை வழங்குகிறார்.

7. கிறிஸ்துநாதர் எடுத்த மனுஷாவதாரத்தின் தன்மையை யோ. 1: 14–ல் எந்த வார்த்தைகளால் காட்டியிருக்கிறது. அதிலடங்கிய உபதேசங்களெவை?

"அந்த வார்த்தை மாம்சமாகி" என்ற வார்த்தைகளால் காட்டியிருக்கிறது. இதிலடங்கிய முக்ய சத்தியங்களாவன:

(1) நமது கர்த்தருடைய மனுஷத்துவம் பூரணமானது.–அவருடைய மனுஷத்துவத்துக்குரிய மனுஷஆத்துமாவுக்குப் பதிலாக திவ்ய லாகாஸ் இருந்தது என்று அப்போலினாரியர் சாதித்தது தப்பிதம். (வார்த்தை மாம்சமானார். சரீரமானார் என்றில்லை).

(2) நமது கர்த்தருடைய மனுஷத்துவம் மெய்யானது, நிலைவரமானது.–அவருடைய மனுஷத்துவம் மாயாதோற்றமாய் ஒருகாலத்துக்குமட்டும் அவருக்கு அந்நியமாயிருந்தது என்று கினோஸ்திக்கர் சாதித்தது தப்பிதம். (வார்த்தை மாம்சம் ஆனார். மாம்சத்தினால் தரித்துக்கொள்ளவில்லை).

(3) நமது கர்த்தருடைய மனுஷத்தன்மையும் தேவத்தன்மையும் மாறுதலடையவில்லை.–அவருடைய மனுஷ சுபாவம் தேவசுபாவத்தில் லயமாகி விகாரப்பட்டு மூன்றாவதான ஒரு தன்மையாக மாறினதென்று ஐத்திக்கர் சாதித்தது தப்பிதம். (வார்த்தை மாம்சமாகி என்று இரண்டு வார்த்தையும் திட்டமாயிருக்கிறது).

(4) நமது கர்த்தருடைய மனுஷத்தன்மையும் தேவத்தன்மையும் ஒரே பர்சனில் சேர்ந்திருக்கிறது.–அவருக்கு மனுஷீக பர்சனும், தெய்வீக பர்சனும் ஆக இரண்டு பர்சன் உண்டு என்றும், அந்தந்தக் கிரியை அந்தந்த பர்சனைச் சாரவேண்டியதென்றும் சாதிக்கிற நெஸ்தோரியர் கொள்கை தப்பிதம். (அந்த வார்த்தை மாம்சமாகி வாசம்பண்ணினார் என்று எழுவாயை வினையோடு வித்தியாசமில்லாமல் சேர்த்துச் சொல்லியிருக்கிறது).

(5) வார்த்தையானவர் மனுஷாவதாரம் எடுத்ததினால் வேறொரு நூதன பர்சனை அடையவில்லை. அவருடைய பர்சன் தெய்வீக பர்சன்தான். அவர் தெய்வீகத்தோடு மனுஷீகத்தைச் சேர்த்துக்கொண்டார். வேதத்தில் அவருக்கு வெவ்வேறான குணங்களும் செய்கைகளும் சொல்லப்படுவது, சிலது அவருடைய தேவத்தன்மைக்கும் சிலது அவருடைய மனுஷத்தன்மைக்கும் அடுத்ததாயிருந்தாலும், அவைகள் எல்லாம் அந்த ஒரே பர்சனுக்குரிய குணங்களும் செய்கைகளுமாம். மற்றப்படி இரண்டு கிறிஸ்துகள், இரண்டு மத்தியஸ்தர்கள் உண்டென்று வேதத்துக்கு விரோதம் சாதிக்கவேண்டியதாய் வருமே. இதினாலேதான் வேதசித்தாந்தப் பிரமாணம் II–ல், "இரண்டு தன்மைகளும் ஒருக்காலும் பிரிக்கப்படாதபடி ஒரே பர்சனில் சேர்ந்திருக்கிறது" என்று பூர்வ நெஸ்தோரியருக்கு விரோதமாய் அறிக்கையிடுகிறோம்.

இந்த இரண்டு தன்மைகளும் கிறிஸ்துநாதர் மரித்தபோது ஒன்றை விட்டு ஒன்று பிரிந்ததில்லை. ஏனென்றால் அவர் ஒருக்காலும் பாவஞ்செய்யவில்லை. அதுவுமல்லாமல் அவர் மரித்ததில் தமது உன்னத கீழ்ப்படிதலைக் காட்டி, தேவசித்தத்துக்குப் பூரண திர்ப்தியை உண்டாக்கினார். இப்படிப்பட்ட புண்ணிய கிரியை நிறைவேறும்பொழுதா அவருடைய தன்மைகள் பிரிக்கப்படும். மேலும் அவருடைய மத்தியஸ்தத்துக்குரிய

இராஜ்ய காரியாதிகள் முடிவுபெறுகையில் அந்த இராஜ்யம் நின்றுபோம் என்று நாம் ஒத்துக்கொண்டபோதிலும், (1 கொரி. 15: 24, 28), அவருடைய இராஜரீகமாவது அவருடைய வல்லமை மகத்துவமாவது நின்றுபோகும் என்று நாம் நினைக்கவே கூடாது. வெளி. 11: 15–வாசி. அவர் தேவனும் மனுஷனுமாயிருந்து ஊழிஊழி காலம் அரசாளுவார். ஆகையால் அவருடைய தன்மைகள் சேர்ந்தேயிருக்கவேண்டும்.

8. "ஒரேகுமாரன்", "ஒரேபேறுன குமாரன்" (கொலோ. 1: 15), இந்த இரண்டு வாக்கியங்களின் தாற்பரியமென்ன?

முந்தினது, அவருக்கும் தேவனுக்குமிருக்கிற சம்பந்தம் சமமானதென்பதைக் குறிக்கிறது. பிந்தினது, அவருக்கும் சிருஷ்டிப்புக்குமுள்ள சம்பந்தத்தை அதாவது சிருஷ்டிப்புக்கு அவர் முந்தினவரும் சுயாதிபதியுமாயிருக்கிறதைக் குறிக்கிறது.

"பேறுன" என்று திருப்பியிருக்கிற கிரேக் மூல வார்த்தை, குமாரன் பர்சனுயிருந்ததைக் குறிக்குமேயல்லாது, மற்றப்படி அவருக்கு ஒரு ஆதி உற்பத்தியிருந்ததென்ற கருத்தைக் கொடுக்கமாட்டாது.

9. யோவான் 1: 17ஐ விஸ்தரி

மீட்பின் வகைப்பாட்டுடன் நியாயப்பிரமாணம் இடையில் கூட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. கலா. 3: 19. ரோ. 5: 20. அது விசேஷித்த நோக்கத்தையிட்டுக் "கொடுக்கப்பட்டது"(Given).–சுவிசேஷமோ "உண்டானது"(Came).–அதாவது திவ்ய ஒழுங்கின் சட்டதிட்டமான முறைப்பிரகாரம் தன்படியே வந்தது என்றர்த்தமாம். இந்த வாக்கியத்தில் சுவிசேஷத்துக்குப் பதிலாக கிருபை, சத்தியம் என்ற வார்த்தைகள் நிற்கிறது. சுவிசேஷமானது தேவனுடைய இலவசமான அன்பின் வெளிப்படுத்தலாயிருக்கிறபடியால் அது "கிருபை" என்றும், திவ்விய காரியங்களின் நிழல் அல்லது ரூபத்தை அல்ல, அவற்றின் பொருளை நிறைவேறுதலை உள்ளதன்மையை வெளிப்படுத்துவதால் அது "சத்தியம்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரு வகையிலும் சுவிசேஷத்தை நியாயப்பிரமாணத்துக்கு எதிரிடையாய்க் காட்டியிருக்கிறது. கீழ்ப்படிதலுக்கு நியாயப்பிரமாணம் பலனளித்ததால் (கலா 3: 12.) பாவத்தை அறிகிற அறிவைக்கொண்டு வந்தது (ரோ. 3: 20. 6: 14). இன்னொரு பட்சத்தில் அது வரப்போகிற நன்மைகளின் நிழலாய் மட்டுமிருந்தது. (எபி. 10: 1. கொலோ. 2: 17).

இப்படியாக பூரண மீட்புக்கும் பூரண வெளிப்படுத்தலுக்கும் வார்த்தையானவரே கர்த்தா என்பதை கிருபை, சத்தியம் இந்த இரண்டு வார்த்தைகளும் காட்டுகிறது. இந்த இரண்டும் 16–ல் "பரிபூரணம்" என்று சொல்லப்படுகிறது. மாம்சமான வார்த்தையாகிய கிறிஸ்துவினிடத்திலிருக்கிற எல்லா திவ்ய வல்லமைகள் கிருபைகள் ஆகிய இவற்றின் நிறைவான அளவுதான் இந்தப் பரிபூரணமாம்.–"கிருபையின்மேல் கிருபை" என்பது, உரித்தாக்கிக்கொண்ட ஒவ்வொரு ஆசீர்வாதமும் இன்னொரு பெரிய ஆசீர்வாதத்துக்கு அஸ்திபாரமாகிறது. ஓரளவு கிருபையைப் பிரயோகித்து அனுபவித்தால் அதற்குப் பதிலாக அந்த அளவு அதனிலும் பெரிய அளவான கிருபையை. ஆதாயப்படுத்திக்கொண்டே வருகிறது. ஒரு வழக்கச்சொல்லுண்டு. "ஒரு கட்டளைக்குக் கிடைக்கிற வெகுமதி இன்னொரு. கட்டளையாகிறது."

---



# III. பாபிலோன் சிறையிருப்பு.

இது கி. பி. மு. 588-ல் சிதேக்கியாவின் 11-ம் வருஷம் 4-ம் மாதம் 9-ம் தேதியில் நடந்தது.

நேபுகாத்நேச்சார் கிட்டத்தட்ட $1\frac{1}{2}$–வருஷம் முற்றிக்கைபோட்டிருந்து நகரத்தின் மதிலை உடைத்து திறப்புண்டாக்கினுன். (2 இரா. 25: 4. 2 நாளா. 36: 17. எரே. 39: 2—10. 52: 6—11.) அப்போது சிதேக்கியாவும், யுத்தமனுஷரும், கல்தேயருக்குப் பயந்து, சத்துருக்களுக்கு நடுவாக ஓடிப்போகையில், சத்துருக்கள் பின்றொடர்ந்து, எரிகோவின் சமனுன பூமியில் சிதேக்கியாவைப் பிடித்து கைதியாக்கி, சூரியாவிலுள்ள ரிப்லாவிலிருக்கிற நேபுகாத்நேச்சாரண்டை கொண்டுபோனுர்கள். அவனே அவன் மக்களையும் பிரபுக்களையும், அவன் கண்களுக்கு முன்பாக வெட்டிப்போடவும், சிதேக்கியாவின் கண்களைப் பிடுங்கி, வெண்கல விலங்கிட்டு, பாபிலோனுக்கு அனுப்பவும் உத்தரவுசெய்தான். அங்கே காவலில் அவன் செத்தான். இதினுல் எசேக்கியேல் (12: 13.) சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. "அவனைக் கல்தேயர் தேசமாகிய பாபிலோனுக்குக் கொண்டுபோவேன், அங்கே அவன் சாவான். ஆகிலும் அதைக் காணமாட்டான்."

5-ம் மாதம் 7-ம் தேதியிலே அதாவது, நேபுகாத்நேச்சாரின் 19-ம் வருஷத்தில், பாபிலோன் இராஜாவின் ஊழியக்காரன் நேபுசார்தான் என்ற சேனுபதி எருசலேமுக்கு வந்து, தேவாலயத்தையும் இராஜாவின் அரண்மனைகளையும் சுட்டெரித்து, கர்த்தருடைய ஆலயத்திலிருந்த சகல பணிமுட்டுகளையும் எடுத்துப்போனுன். (2 இரா. 25: 8—17.) சகல கட்டடங்களையும் பாழாக்கி, அநேகரைச் சிறைப்படுத்திப்போனுன். இதை நினைக்கும்படியாக யூதர் எருசலேமின் அழிவுக்காக சூன்மாதத்துக்குச் சரியான 4–ம் 17–ம் தேதியிலும், தேவாலய அழிவுக்காக 5–ம் மாதம் 9–ம் தேதியிலும் உபவாசஞ்செய்து வருகிறுர்கள். சகரியாவின் தீர்க்கதரிசனம் (8: 19–ல்) இந்த (2) உபவாசங்களையும் பற்றி காண்க. நேபுகாத்நேச்சார் தேவாலயத்தைச் சுட்டெரித்த நாளிலேயே தீத்துவும் பின்பு சுட்டெரித்தானென்று யோசேப்புஸ் சொல்லுகிறுன்.

நேபுசார்தான் தேவாலயத்தையும், பட்டணத்தையும் சுட்டெரித்த பின்பு, பிரதான ஆசாரியனுகிய செராயாவையும், 2–ம் ஆசாரியனுகிய செப்பனியாவையும், வேறே விசேஷித்த மனுஷர்களில் 70–பேரையும் பிடித்து, ரிப்லாவுக்குக் கொண்டுபோனதில் நேபுகாத்நேச்சார் உத்தரவுப்படி எல்லாரும் கொல்லப்பட்டார்கள். 2 இரா. 25: 18, 21. எரே. 52: 24–27. தன் பட்சத்தில் ஓடிவந்து விட்டவர்களையும் மற்றுஞ் ஜனங்களையும் சிறைப்பிடித்துப்போனுன். எரேமி. 39: 9, 10. மீதியான எழை ஜனங்களை நிலத்தைப் பயிர்செய்யவும், திராக்ஷத்தோட்டத்தை நாட்டவும், பின்வைத்துப் போனுன். இவர்களுக்கு அதிகாரியாக அகிக்காமின் குமாரனுகிய கெதலியாவை நியமித்தான். 2 இரா. 25: 22—25. எரே. 39: 9, 10. 52: 15, 16.

நேபுகாத்நேச்சார் எரேமியாவுக்கு ஒரு தீங்குஞ் செய்யக்கூடாதென்றும், எரேமியாவின் விருப்பப்படியே அவனுக்கு நன்மையானதைச்

செய்யவேணுமென்றும் நேபுசார்தானுக்குக் கெட்டியாய்க் கற்பித்திருந்தான். எருசலேமை அழிக்க உத்தரவுபெற்று வந்தவுடனே, நேபுசார்தான் சிதேக்கியா எரேமியாவைக் காவல்பண்ணி வைத்திருந்த இடத்திலேயே கட்டுண்டவனாயிருந்தவனை விடுதலையாக்கி, சேனாபதி நேச்சார் அண்டை திரும்புங்காலத்தில் ராமாவரைக்கும் அவரை இட்டு வந்தான். அங்கே அவர் மனப்படி பாபிலோனுக்குப் போக மனமானால், இராஜாவின் உத்தரவுப்படி நன்றாய் விசாரித்துக்கொள்வோம், இருக்க மனமானால் தேசத்தில் எங்கேயாவது இருக்கலாமென்று சொன்னதின்பேரில் எரேமி. 39: 11—14. 40: 1–6. எரேமியா தேசத்திலிருக்கச் சம்மதித்தான். அப்போது நேபுசார்தான், வழிக்குச் செலவையும் வெகுமதியையுங் கொடுத்து அனுப்பிவிட்டான். எரேமியாவைக் கவலையாய்ப் பார்த்துக்கொள்ள கெதலியாவுக்கும் உத்தரவுசெய்தான்.

நேபுகாத்நேச்சார் பாபிலோனுக்குப் போனபின் கல்தேயருக்குப் பயந்து அடுத்த தேசங்களில் போய் ஒளித்திருந்தவர்களும், சிதேக்கியாவின் படை எரிகோவில் சிதறிப்போனபின் வனாந்தரங்களிலும், கெபிகளிலும் தப்பியிருந்தவர்களும் தேசத்தின்மேல் கெதலியா அதிகாரியாக நியமிக்கப்பட்டதை அறிந்து அவன் அண்டைக்கு வந்தார்கள். எரே. 40: 7—11. அவர்களெல்லாரும் தன் ஆளுகையின் கீழ் சுகமாயிருப்பார்களென்று ஆணையிட்டு இஷ்டமான பட்டணங்களில் குடியிருக்கச்செய்தான். இவர்களில் முக்கியமானவர்கள் இஸ்மாவேல், கரேயாவின் குமாரராகிய யோக்னானும், யோனத்தானும், செராயாவும், அசரியாவுமே.

ஆனால் இஸ்மாவேல் (எரே. 40: 13—16.) இராஜ வம்சமானதால் தந்திரமாய்த் தேசத்தில் இராஜாவாகவிருக்க விரும்பி, கல்தேயர் போய்விட்டதால் கெதலியாவைக் கொன்றுபோட்டு, இராஜ்யத்தைப் பறித்துக்கொண்டான். அம்மோனின் இராஜாவாகிய பாலீஸ் அவனுக்கு உதவிசெய்தவனாயிருந்தான். இந்தத் தந்திரத்தை கரேயாவின் குமாரனாகிய யோக்னான் சொன்னாலும் அதை நம்பாமல், இஸ்மாவேலோடே பட்சமாயிருந்து விருந்துண்கையில், கெதலியாவையும் அவனோடிருந்த யூதரையும் கல்தேயரையும் கொன்றுபோட்டான். எரே. 41–அதி. மிஸ்பாவில் மீதியானவர்களைச் சிறைப்பிடித்துப்போனான்.

ஒருவரும் இதை அறியாதிருக்கையில் மறுநாளில் 80–பேர் தாடியைச் சிரைத்தும், வஸ்திரங்களைக் கிழித்தும், தங்களைக் கீறிக்கொண்டும், சீகேம், ஷீலோ, சமாரியாவிலிருந்து காணிக்கைசெலுத்தவும், தூபவர்க்கமிடவும் கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுபோக வந்தார்கள். எரே. 41: 4—11. அவர்களில் 10–பேரைத்தவிர மற்றவர்களையும் கொன்றுபோட்டான். தேவாலயம் அழிந்துபோனாலும் தேவாலயமிருந்தவிடத்தில் மீதியான ஜனங்கள் பலிசெலுத்தினார்கள். யோக்னானும் மற்றவர்களும் இந்தத் துற்செய்தியைக் கேட்டு இஸ்மாவேலை தொடர்ந்துபோய், கிபியோனில் சிறைகளை மீட்டு வந்தான். இஸ்மாவேலும் வேறே 8–பேரும் அம்மோனியரண்டை ஓடிப்போனார்கள்.

கெதலியா கொல்லப்பட்டது எருசலேம் தேவாலயமும், பட்டணமும் அழிக்கப்பட்டு, (2) மாசத்துக்குப்பின் 7–ம் மாதம் 30–ம் தேதி. இதை நினைக்க யூதர்களுக்குள் உபவாசமுண்டு. சகரி. 8: 19–ல் இதைச் சொல்லுகிறார். இது யூதருடைய அழிவின் முடிவான சங்கதியென்று 7–ம் மாசம் உபவாசஞ்செய்தார்கள்.

யோக்னானும் மீதியான ஜனங்களும், யூதேயாவில் பாபிலோன்



இராஜா அதிகாரியாக நியமித்த கெதலியா கொல்லப்பட்டதால், பாபிலோன் இராஜாவுக்குப் பயந்து, மிஸ்பாவைவிட்டு எகிப்துக்கு ஓடிப்போக பெத்லெகேமுக்கு வந்தார்கள். எரே. 42–அதி. அங்கே தங்களோடே வந்த எரேமியாவிடத்தில் கர்த்தரைக் கேட்கச் சொன்னான். அவர் (10) நாளுக்குப்பின் நீங்கள் தேசத்திலிருந்தால் பாபிலோன் இராஜா இரக்கஞ்செய்வார்; ஆனால் தேவவாக்கைக் கேளாமல் எகிப்துக்குப் போனால் அங்கே பட்டையத்தாலும், பஞ்சத்தாலும் சாவீர்களென்று சொன்னார். அவர்கள் தீர்க்கதரிசியின் வாக்கைக் கவனியாமல் எகிப்துக்குப்போனார்கள். இவர்களோடே எரேமியாவும், பாரூக்கும் போனார்கள். இப்படியாக எருசலேம் பட்டணமும் தேவாலயமும் அழிந்து யூதேயா தேசம் முழுதும் பாழாயின.

சிதேக்கியாவைப்பற்றி அவன் பட்டையத்தால் சாவதில்லையென்று எரேமியா 3–ம் 4–ல் சொல்லிய தீர்க்கதரிசனமும் அவன் "பாபிலோனைக் காண்பதில்லையென்று எசேக்கியேல் 12: 13–ல் சொல்லிய தீர்க்கதரிசனமும் இசைவாய் நிறைவேறிற்று. எரே. 39: 7. யூதேயா இராஜ்யம் அதின் முதல்இராஜாவாகிய ரெகோபெயாம் காலமுதல், 20–இராஜாக்களால் 380–வருஷம் நிலையாயிருந்து அழிந்துபோயிற்று. மற்ற 10–கோத்திரமோ சிறைப்பட்டுப்போய் 130–வருஷமாயிற்று. அது பிரிவினைக்குப்பின் 254–வருஷம் நிலைத்திருந்தது. பல குடும்பங்களிலுமிருந்து 19–இராஜாக்கள் ஆண்டார்கள். யூதாவின் இராஜாக்கள் எல்லாரும் தாவீதாகிய ஒரே குடும்பத்தாரே.

## கேள்விகள்.

1. யூதர்கள் பாபிலோனுக்கு எத்தனை விசையாக யார் யாருடைய காலத்தில் சிறைப்பட்டுப்போனார்களென்பதைக் காலக்கணிதத்தோடே வரை.

2. சிதேக்கியாவைப்பற்றி, எரேமியாவும், எசேக்கியேலும்சொன்ன தீர்க்கதரிசனங்கள் எப்படி நிறைவேறிற்று ?

3. எருசலேம் அழிவைப்பற்றியும், தேவாலய அழிவைப்பற்றியும், எரேமியா என்னசெய்தார்? இவைகளுக்குரிய வகையான சங்கீதங்களவை ?

4. எருசலேமின் அழிவுகளை ஞாபகப்படுத்தும்படி யூதர்களுக்குள் வழங்கிய சடங்கென்ன ? அதெப்படி உறுதிப்படுகிறது ?

5. எருசலேமின் அழிவில் நடந்த சங்காரங்களும் கொடுமைகளுமென்ன ? இதுபோல வேறெந்த சமையத்திலும் சம்பவித்தன.

6. யூதா இராஜ்யத்தை ஆண்ட இராஜாக்களார் ? அதெவ்வளவு காலம் நிலைத்திருந்தது.

7. கெதலியா, இஸ்மாவேல், யோக்னான், இவர்களுடைய வரலாறென்ன ?

8. யூதர் சிறையிருப்புக்குப் போவதற்கு அவர்கள் செய்த பாவங்களைப்பற்றி எசேக்கியேல் சொல்வதென்ன ?

9. பாபிலோன் இராஜா எரேமியாவுக்குப் பாராட்டின தயவென்ன? என் ?

10. எரேமியா எந்தக்காலமுதல், எவ்வளவு காலமாய் தீர்க்கதரிசன

முரைத்தவர்? அவர் வேலையினால் பட்ட பாடுகளுமென்ன? மென்ன?

---

கி. பி. மு. 587-ல் அல்லது நேபுகாத்நேச்சாரின் 18-ம் வருஷத்தில், யோயாக்கீனுடைய சிறையிருப்பின் 12-ம் வருஷத்தில் (எசே. 3: 21—29.) எருசலேமிலிருந்து ஒருவன் தப்பிவந்து, கல்தேயர் தேசத்திலிருக்கிற எசேக்கியேல் அண்டை வந்து, எருசலேமின் அழிவைப்பற்றித் தெரிவிக்க, எசேக்கியேல் யூதேயாதேசத்தின் மீதியான பட்டணங்களின் அழிவைப்பற்றியும், மீதியான யூதருடைய அழிவைப்பற்றியும் தீர்க்கதரிசனமுரைத்தார்.

இதே வருஷத்தில் எசேக்கியேல் எகிப்துக்கு விரோதமாகவும், அதின் இராஜாவாகிய பார்வோன் ஒப்ராவுக்கு விரோதமாகவும் தீர்க்கதரிசனமுரைத்தார். பாபிலோன் இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எகிப்துதேசத்தைப் பாழாக்கி, அதின் அக்கிரமங்களினிமித்தம் மற்றச் சாதியாரைப்போல எகிப்தியரையும் அழிப்பதாக (எசே. 32-அதி-ல்) சொல்லுகிறார்.

எகிப்துக்குப்போன யூதர்கள் மிக்தோலிலும், தகபானேசிலும், நோப்பிலும், பத்ரோஸ் சீமையிலும் வாசம்பண்ணினார்கள். எரே. 44: 1. மிக்தோல் சிவந்த சமுத்திரக் கரையோரமான பட்டணம். யாத். 14: 2. எண். 33: 7. நோப் என்பது இப்போது காயிரோவிருக்கிற மெம்பிஸ் பட்டணமே. ஏசா. 19: 13. எசே. 30: 13, 16. எகிப்துக்குப்போன யூதர்கள் வானராக்கினியையும், தேசத்தின் மற்ற விக்கிரகங்களையும் வணங்கி வந்தார்கள். எசே. 44: 8, 15—19. சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்களாகிய வானராக்கினிகளுக்குத் தூபங்காட்டி, பானபலிகளை வார்த்தார்கள். அப்போது எரேமியா (44: 1—15.) அவர்கள் நடுவிலிருக்கையில் (44: 15.) உரத்த சத்தமாய் அவர்களுடைய அவபக்தியைக் கண்டிக்கிறார். அப்போது அவர்களெல்லாரும் ஏகமாய் இனி நாங்கள் ஒருக்காலும் கர்த்தரைச் சேவியோம், விக்கிரகங்களையே வணங்குவோம், எருசலேமிலும், யூதேயாவிலும், நாங்கள் விக்கிரகங்களை வணங்குகையில் நன்றாயிருந்தோம். விக்கிரகங்களை விட்டபோதோ எங்களுக்கு இந்தத் தீங்கெல்லாம் சம்பவித்திருக்கின்றன. இனி கர்த்தருடைய நாமத்தில் ஒன்றும் அறிவிக்கவேண்டாமென்றார்கள். எரே. 44: 16—19.

இதினால் எரேமியா கர்த்தருடைய வாக்கினாலே எகிப்திலிருந்த யூதர் எல்லாரும் பஞ்சத்தாலும் பட்டையத்தாலும் சங்காரமாவதைப்பற்றியும், யூதேயாவுக்கு ஓடிப்போகிறவர்கள் மாத்திரம் தப்புவார்களென்றும் தீர்க்கதரிசனமுரைக்கிறார். எரே. 44: 26—30. அந்த யூதர் நம்பியிருந்த எகிப்தின் இராஜாவாகிய ஒப்பிரா, சிதேக்கியா நேபுகாத்நேச்சார் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டதுபோல ஒப்புக்கொடுக்கப்படும்போது, யூதர்களைப் பற்றிச் சொல்லிய சாபம் நிறைவேறும். எரே. 44: 29, 30. எரேமியா தீர்க்கதரிசனஞ்சொல்லி 18-வருஷத்துக்குள் நிறைவேறிற்று.

இது சங்கதிக்குப்பின்பு எரேமியாவின் பேரோ ஒரிடத்திலுஞ் சொல்லப்படவில்லை. இவர் எகிப்தில் மரித்திருப்பார். இவர் யோசியாவின் 30-வருஷமுதல் தீர்க்கதரிசனமுரைத்தபடியால், 41-வருஷம் தீர்க்கதரிசனம் உரைத்தவரென்கலாம். யூதருடைய விக்கிரகாராதனைக்கு விரோதமாய் எரேமியாப் பிரசங்கம்பண்ணினதால் யூதர் எரேமியாவைக் கல்லெறிந்து கொலைசெய்திருப்பார்கள். Tertellian, Jerom, Epiphanius எபி.



11: 37. வேறு சிலர் பார்வோன் ஒப்பராவுக்கு விரோதமாய்த் தீர்க்கதரிசனமுரைத்தபடியால் அந்த இராஜனே கொலைசெய்திருப்பான் என்கிறார்கள்.

---

# THE SECOND COMING OF CHRIST.

# கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.

மத்தேயு 24: 3.

“இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?”

இக்காலத்திலுள்ள கிறிஸ்துவின் பக்தர்கள் அவருடைய மரண புண்ணியத்தினாலுண்டான இரக்ஷிப்பை ருசித்துத் தாங்கள் வசிக்கும் இவ்வுலகத்தைச் சதமென்றெண்ணாமல், தங்களுக்கு நித்திய வாழ்வையும் சந்தோஷத்தையுங் கொடுக்கும்படியாக அதற்கேற்ற ஸ்தலத்தை எத்தனம்பண்ணப்போயிருக்கிற தங்களுடைய மீட்பர் எப்போது வருவாரென்றும், எப்போது அவர் ஆயத்தம்பண்ணின ஸ்தலத்தில்போய் ஆறுதலாயிருப்போமென்றும் ஆசித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

மேலும் அவர்கள் தங்கள் மீட்பருடைய வருகையின் பேரிலுள்ள வாஞ்சையைத் தங்களுடைய செய்கையினாலே காட்டுகிறார்கள். கிறிஸ்து ஏசுவானவர் மனிதரை இரக்ஷிக்கும்பொருட்டு, மனித அவதாரம்செய்து மனிதரின் இரக்ஷணியத்திற்கு அவசியமான யாவற்றையும் தம்முடைய பாடுகளினாலும், மரணத்தினாலும் முடித்து உயிரோடெழுந்து, தம்மை தேவகுமாரனென்று பலமாய் ரூபகாரப்படுத்தும்படியாக அந்தத் தேகத்தோடே உன்னதத்திற்கு ஏறிப்போனாரென்று எவர்களும் தாராளமாய் அறிவிக்கிறதுபோலவே, அவரையே தங்களுக்கு இரக்ஷகராக ஏற்றுக்கொண்டு விசுவாசித்தவர்களும், விசுவாசியாதவர்களுமான இவ்வுலகத்திலுள்ள மனிதர்களுக்கு அவரவர் செய்த கிரியைகளுக்குத்தக்க பதிலளிக்கும்படியாக போனவிதமாக அவர் தேகத்தோடு திரும்ப வருவாரென்று ஒலி வடிவினாலும், வரி வடிவினாலும் பிரசங்கித்து வருகிறார்கள்.

மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேனென்று உரைத்த நமது இரக்ஷகருடைய வருகையின் காலத்தை இன்ன நாளென்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடாது. மூன்று வருஷங்களுக்கு முன்னமே சில கிறிஸ்தவர்கள் ஆதாரமில்லாமல் மனதிலுண்டான தோற்றத்தை நம்பிக்கொண்டு, கிறிஸ்துவானவர் 1881-ம் வருஷத்துக் கடைசியில் வருவாரென்று பிதற்றினதுபோல நாம் ஒரு நாளைக் குறிப்பிட்டுச் சொல்லத் துணியாமல், நமது இரக்ஷகர் தம்முடைய திருவாக்கால் உரைத்த வசனத்தைக் கவனித்துப் பார்ப்பதே உத்தமம். மத். 22: 36. அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர, மற்றொருவனும் அறியானென்று சொல்லுகிறபடியினால் மனிதர்களால் அறியக்கூடாத அந்த நாளைக் குறிப்பிட்டுச் சொல்லுதல் தப்பிதமாகுமே. அப்படியே 42-ம் வாக்கியத்தில் “உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையில் வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிற

படியினாலே விழித்திருங்களென்றும் 44-ல் நீங்கள் நினையாத நாழிகை
யிலே மனுஷகுமாரன் வருவார். ஆதலால் நீங்களும ஆயத்தமாயிருங்கள்''
என்றும், மத். 25: 13-ல் மனுஷகுமாரன் வரும் நாளையாவது, நாழிகை
யையாவது, நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்களென்றும்,
மாற்கு 13: 35-ல் வீட்டெஜமான் சாயங்காலத்திலோ நடுராத்திரியிலோ,
சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்போது வருவாரென்று நீங்
கள் அறியீர்கள் என்றும், இரக்ஷகர் தாமே சொல்லியிருக்கிறதினாலே கிறி
ஸ்துவின் வருகையின் நாள் இதென்று குறிப்பிட்டுச் சொல்லுகிறது மனி
தர்களுக்கடுத்ததல்ல.

ஆனால் அது நினையாத நேரமாயிருப்பதால் கடைசி வாக்கியத்தில்
சொல்லியபடி இரவோ, பகலோ, நடுச்சாமமோ எந்த வேளையோ என்று
நாம் எப்போதும் காத்திருக்கவேண்டியதுதான் நமது கடமை. இதுவுமல்
லாமல், நம்மைப்போல கிறிஸ்துவின் ஆளுகையின்பேரில் ஆசித்திருந்த
சீஷர்கள் இக்காலத்திலா இராஜ்யத்தை இஸ்ரவேலருக்குத் திரும்பக் கொ
டுப்பீரென்று வரவேண்டிய இரக்ஷகரிடத்தில் கேட்டபோது பிதாவான
வர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளை
யும் அறிகிறது உங்களுக்கடுத்ததல்ல'' என்று அவர் உரைத்தபடியால்,
அப். 1: 6, 7. கிறிஸ்துவானவர் வருகையின் நாளைக்குறித்துக் குறிப்பிட்
டுச் சொல்வது நமக்கடுத்ததல்ல. நாம் நிமிஷந்தோறும் அவருடைய வரு
கைக்குக் காத்திருப்பதே நம்முடைய கடமையாம்

ஆனால் மனிதர்பேரில் சொல்லிமுடியாத அன்பு வைதத தேவன்
தம்முடைய குமாரனை இரக்ஷகராக இவ்வுலகத்திற்கு அனுப்புமுன் அவர்
மனிதனாக, இன்ன சந்ததியில் இன்ன வம்சத்தில் இன்ன ஊரில், இன்
னாரிடத்தில் பிறந்து இவ்வளவு காலத்தில் சங்கரிக்கப்படுவாரென்று முன்
னமே மனிதருக்குத் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தினதுபோல,
இனிமேலும் போனவிதமாகவே திரும்ப வருவோமென்று உரைத்த இர
க்ஷகர் தாம் வருகிறதற்குமுன் இன்னின்னது சம்பவிக்கும் இன்னவித
மாய் இன்னின்ன இடத்திற்கு வருவேன் இன்னவிதமாய் அரசாளுவேன்
என்று தம்முடைய திருவாயால் திட்டமாய் மொழி பகர்ந்திருக்கிறார்.
இப்போது பிரசங்க வாக்கியமுள்ள இந்த அதிகாரத்தில் இந்தச் சங்கதி
கள் முழுவதும் அடங்கியிருக்கிறதைப் பார்க்கலாம். மேற்குறித்த வாக்கி
யம், ஒரு கேள்வி, அல்லது வினாவாயிருக்கிறது.

கிறிஸ்துவின் சீஷர்கள் பரிசுத்தஆவியைப் பெறுமுன் சிசுக்களுக்
கொத்த புத்தியுள்ளவர்களாயிருந்ததினிமித்தம் எருசலேம் தேவாலயத்தின்
கட்டடங்கள் அவர்களுடைய பார்வைக்கு ஆச்சரியமாகத் தோன்றின
படியால், அவர்கள் தங்களுடைய எஜமானிடத்தில் அதை ஆச்சரியக்
காட்சியாகக் காட்டினார்கள். அதற்கு இரக்ஷகர் இப்படிப்பட்ட ஆச்சரியக்
காட்சியான கட்டடங்கள் சீக்கிரத்தில் அழிக்கப்பட்டுப்போமென்றும்
அதுபோலவே தாமும் பரமேறி, திரும்பிவருகிறதாயிருக்கும்; தேவனால்
வெகு விநோதமாய்ச் சிருஷ்டிக்கப்பட்ட இந்த உலகமும் அழிந்துபோகு
மென்றும் அவர்களுக்குச் சொல்ல, அவர்களோ இந்த வார்த்தைகள்
விசேஷித்த வார்த்தைகளாயிருக்கிறதே. இதற்குத் தாற்பரியம் கேட்கவே
ண்டுமேயென்று சமயம் பார்த்து, அவர் தனித்து ஒலிவமலையில் உட்கார்ந்
திருந்தபோது இவைகள் (நீர் சொன்னவைகள்) "எப்போது சம்பவிக்
கும், உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாள
மென்ன?'' எங்களுக்குச் சொல்லவேண்டுமென்று கேட்டார்கள்.



சீஷர்கள் இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள்.
(1) எப்போது? (2) என்ன அடையாளம்? அதாவது உம்முடைய
வருகையும், உலகத்தின் முடிவும் எப்போது சம்பவிக்கும் என்றும்,
2வது. உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாள
மென்ன என்றும் கேட்டிருக்கிறார்கள். இரண்டு கேள்விகளும் ஒரே பொ
ருளைக் குறிக்கிறதாயிருந்தாலும், "எப்போது'' என்பது காலத்தையும்,
"என்ன அடையாளம்'' என்பது சொல்லப்பட்ட அந்நேரமுதல் அவர்
வருகைவரைக்குமுள்ள காலங்களில் படிப்படியாய் நடக்குஞ் சம்பவங்
களையும் குறிக்கிறது. இவ்விரண்டு கேள்விகளுக்கும், நமது இரக்ஷகர்
சொல்லியிருக்கிற உத்தரவுகள் இந்த அதிகாரத்திலடங்கியிருக்கிறது.
"எப்போது'' என்ற முதற் கேள்வியைப் பின்னாகவும், "என்ன
அடையாளம்'' என்ற இரண்டாங் கேள்வியை முன்னாகவும் வைத்து
ஆராய்வோமாக.

I. கிறிஸ்துவின் வருகைக்கும், உலகத்தின் முடிவுக்குமுள்ள அடை
யாளங்கள் அல்லது கிறிஸ்துவின் வருகைக்குமுன் சம்பவிக்கவேண்டிய
வைகளைப்பற்றி வேதாகமத்தில் சொல்லப்பட்டவைகளை முதலாவது
பார்ப்போமாக. நமது இரக்ஷகருடைய வருகை நினையாத நேரத்திலிருக்
குமாப்போல, மனிதர்களுடைய ஆயுசும், புல்லைப்போலவும், புல்லின்
பூவைப்போலவுமிருப்பதால் நமது இரக்ஷகருடைய வருகையைக் குறித்
துள்ள சங்கதிகளை விபரமாய்க் காட்டுமுன்னமே, அவைகளின் பொருள்
கள் ஒவ்வொன்றையும் தொகுப்பாய்க் காட்டி, பின்பு ஒவ்வொன்றிற்கும்
விவரமெடுத்துச் சொன்னால் நன்மையாயிருக்குமென்று எண்ணங்கொ
ண்டு, பின்வருமாறு பொருள்கள் காட்டப்பட்டிருக்கிறது.

1. முதலாவது கிறிஸ்துவின் வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கு
முள்ள அடையாளங்கள் அல்லது அதற்குமுன் சம்பவிக்கவேண்டிய சம்
பவங்களாவன;

1 முதலாவது பரிசுத்தஆவியானவர் மாம்சமான யாவர்மேலும் ஊற்
றப்படவேண்டும். யோவேல் 2: 28—32.

2. யுத்தங்களும் கலகங்களும் அல்லது துன்பங்களும் நடக்கவேண்
டும். பஞ்சங்களும் பூமியதிர்தல்களும் உண்டாகவேண்டும்.

3. இராஜ்யத்தின் சுவிசேஷம் பூலோகமெங்கும் சாக்ஷியாகப் பிர
சங்கிக்கப்படவேண்டும். இவைகளெல்லாம் வேதனைக்கு ஆரம்பம்.

4. சிதறுண்ட யூதர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட கானான்தேசத்
தில் சேர்க்கப்படவும், எருசலேம் தேவாலயம் திரும்பக் கட்டப்படவும்
வேண்டும்.

5. பழையஏற்பாட்டுக் காலத்திலும், புதியஏற்பாட்டுக் காலத்திலும்
மரித்த பரிசுத்தவான்களும், உயிருள்ள பரிசுத்தவான்களும் இனி மேகத்
தில் காணப்பட்டும் தங்களுடைய மீட்பரும் மணவாளருமாகிய கிறிஸ்து
இயேசுவைச் சந்திக்க எடுத்துக்கொள்ளப்படவும் வேண்டும். இது முத
லாம் உயிர்த்தெழுதலின் ஒரு பாகம்.

6. அப்படி எடுத்துக்கொள்ளப்படுந் தருணத்தில் கிறிஸ்துவுக்கும்
அவருடைய பரிசுத்தவான்களுக்கும் எப்போதுஞ் சத்துருவாயிருக்கிற
வல்ல சர்ப்பமாகிய சாத்தானுக்கும் மிகாவேல் என்ற பிரதான தூதனைச்
சேர்ந்த தேவதூதர்களுக்கும் யுத்தமுண்டாகவேண்டும். இதுமுதல் யுத்தம்.

7. பரிசுத்தவான்களாகிய கிறிஸ்துவின் மனையாட்டியானவள் மண
வாளனோடு, காலம், காலங்கள், அரைக்காலமாகிய நாற்பத்திரண்டு மாச

மான 1260-நாளாகிய மூன்றரை வருஷக்காலம் மேகமாகிய வனாந்தரத்திலிருக்கவேண்டும்.

3. பாவமனுஷனாகிய கேட்டின் மகன் வெளிப்படவேண்டும்.

(a) அவன் வடக்கேயிருந்து வருவான்.

(b) அவன் பாம்பிலிருந்து எழும்புவான்.

(c) அவன் உடன்படிக்கையின்பேரில் எருசலேமில் வந்திருந்துகொண்டு ஆளுவான். அவன் சாதாரண மனுஷனாக மூன்றரை வருஷமும் அந்திக்கிறிஸ்துவாக மூன்றரை வருஷமாகவும் ஆளுவான்.

(d) அக்காலத்தில் அவனால் துன்பப்படுத்தப்படுகிற புத்தியற்ற கன்னிகைகளுக்கொப்பான மார்க்க வைராக்கியரான கிறிஸ்தவர்களைத் தேற்றும்படியாக இரண்டு சாக்ஷிகள் அனுப்பப்படுவார்கள்.

(e) அந்திக்கிறிஸ்துவின் முடிவுகாலமாகிய $3\frac{1}{2}$-வருஷத்தின் முடிவில் அவனுக்குள் புகுந்திருந்த அல்லது அவனுக்கு அதிகாரத்தைக் கொடுத்த வல்ல சர்ப்பமானவன் பரிசுத்தவான்களோடும் கிறிஸ்தேசுவோடும் இரண்டாந்தரம் யுத்தம்பண்ணுவான்.

2. இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்களோடே இவ்வுலகத்திற்கு வருவார். இதற்கிடையில் கிறிஸ்துவானவர் போனவிதமாகவே திரும்ப வருவார் என்பதற்கு விரோதமாக அவருடைய வருகை ஆவியின் பிரகாரமாக இருக்குமென்றும் இன்னும் பல ஆக்ஷேபனை சொல்வாருமுண்டு. அவ்வாக்ஷேபனைகளும் அவைகளுக்குச் சமாதானமான நியாயங்களும் சொல்லப்படும்.

(1) அவருடைய வருகையின் தன்மை மூன்று வருகை.

முதலாவது, இரக்ஷண்ய வருகை. எபி. 9: 26.

இரண்டாவது, பரிசுத்தவான்களைச் சேர்க்க வருகை. எபி. 9: 28.

மூன்றாவது, ஆளுகைசெய்து நியாயந்தீர்க்க வருவார். எபி. 9: 27.

(2) அவர் எருசலேமில் இறங்கி ஆயிரம் வருஷம் தம்முடைய மனையாட்டியாகிய பரிசுத்தவான்களோடும் அந்திக்கிறிஸ்துவினாலே துன்பப்படுத்தப்பட்டுச் சங்கரிக்கப்பட்ட பரிசுத்தவான்களோடும் அரசாளுவார். பரிசுத்தவான்கள் ஐந்து பட்டணங்களுக்கும் பத்துப் பட்டணங்களுக்கும் அதிகாரிகளாயிருப்பார்கள்.

3. பசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட வல்ல சர்ப்பம் சங்கிலியினால் கட்டப்பட்டு இந்த ஆயிரம் வருஷம் நிறைவேறுமட்டும் பாதாளத்தில் அடைபட்டிருப்பான். அந்திக்கிறிஸ்துவும் அவனுடைய கள்ளத்தீர்க்கதரிசியும் நரகத்தில் தள்ளப்படுவார்கள்.

4. கிறிஸ்துவானவருடைய ஆளுகை சமாதானமாயிருக்கும். அந்தக் காலத்தில் பிரசங்கமும் குணப்படுதலுமுண்டு.

5. மேலே சொல்லப்பட்ட 1000-வருஷத்தாளுகையின் முடிவில் சாத்தான் கொஞ்சக்காலத்திற்கு கட்டவிழ்த்துவிடப்பட்டு கோகு, மாகோகு என்பவர்களோடே சேர்ந்து கிறிஸ்துவோடும் பரிசுத்தவான்களோடும் மூன்றாவது யுத்தம்செய்வான்.

இரண்டாவது, இது எப்போது நடக்கும்?

காலம் திட்டமாய்க் குறிப்பிக்கப்பட்டு வேதத்தில் சொல்லப்படாவிட்டாலும் ஆறுநாள் சிருஷ்டிப்பையும், ஏழாம்நாளில் ஓய்ந்திருந்ததையும் கவனித்துப் பார்த்தால் கிறிஸ்துவின் ரக்ஷண்ய வருகையை அதிகமறைவாய் வெளிப்படுத்தியிருப்பதுபோல அவருடைய ஆளுகையின் வருகையையும் மறைவாய் வெளிப்படுத்தியிருக்கிறதைக் காணலாம்.



மூன்றாவது, கடைசி நியாயத்தீர்ப்பு.

1 இரண்டாம் உயிர்த்தெழுதல்.

2 ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிற நியாயாதிபதிக்கு முன்பாகக் குற்றவாளிகள் நிற்பார்கள். இன்ன குற்றம் விசாரிக்கப்படவேண்டுமென்று எடுத்துக்காட்டுகிற முக்கிய மத்தியஸ்தர்களுண்டு. (Petty Juries)

3. குற்றம் பாரிக்கிறவர்கள் அல்லது வாதிகள்.

4. குற்றவாளிகளுடைய குற்றங்களை ரூபகாரப்படுத்துகிற தஸ்தவேசுகள் (Documents)

5. குற்றங்களை ரூபகாரப்படுத்தத்தக்க சாக்ஷிகள்.

6. நியாயாதிபதி தமக்குமுன் நிற்கிற குற்றவாளிகளுக்குப் பிரசங்கித்தல் அல்லது குற்றங்களை எடுத்துச் சொல்லுதல்.

7. நியாயத்தீர்ப்பு.

முதலாவது, அடையாளங்களைப் பார்ப்போம்.

(1) பரிசுத்தஆவியானவர் மாம்சமான யாவர்மேலும் ஊற்றப்படவேண்டுமென்பதை விவரித்துப் பார்ப்போம். யோவேல் 2: 28—31.

## தேவகிருபைக்காக விண்ணப்பம்.

இராகம்தோடி. ரூபக தாளம்.

### பல்லவி.

சுதனே, சுதனே நின்றனது நீ
பதமே துதிசெய்கிறேன், தேவ

### அநுபல்லவி.

அதமேவைமுன் புரிந்த தீவினை
ஆற்றும் புவியினர் கோலா
சாற்றும் பரனருள்பாலா.— சுதனே

### சரணங்கள்.

1 வரையிலா தபொய்ப் பொருள்சத மென
மதித்துழன்றே னே இந்தத்
தரையில் வாழும்புன் னரர்தமை யனு
சரித்து நின்றே னே
பெரியவர் மொழியகன்றே னே
பிறரை யிகழ்ந்து புகன்றே னே
நிரயம்நல்கிடு, பாதகமேபுரி பாவி
உருகிநின்னிரு, தாள்மலரோ பெறமேவி.— சுதனே

2 காசினிமிசை ஈசனேதெனக்
கழறியாடினேன் கொடு

நீசனென்றல, கவர்வசைசொல
  நிதமுந் தேடினேன்
  வேசையர் தமைக்கூடினேன்
  வீணில் நரனைப்பாடி னேன்
தோஷிநான் விசு, வாசமதொடு மனம்வாடி
ஏசுவேகிர்பை, தாவென மருகிமன்றாடி.— சுதனே

3 பந்தபாவங்க, ளுணர்ந்து விரைந்துன்
  பாதந்தேட வும் நீர்
சிந்துதிரந்தனி லெந்தன் வினையெலாம்
  சிதறுண்டோடவும்
  உந்தனெறிவழி கூடவும்
  பந்தயமேபெற நாடவும்
எந்தனுக்கிது, வேளையில் வரமருள்வாயே
உந்தனைப்பணி யேழையெனுயர் கதிநீயே.— சுதனே

---

## சமாசாரத்திரட்டு.

### திருநெல்வேலி கலெக்டர் மெஸ்தர் அட்கின்ஸன் துரையின்மேல் தொடுதத வழக்கு.

கர்நெல் வெல்டன் துரையால் விசாரிக்கப்பட்டது. மெஸ்டர் டாரண்டு துரைத்தனத்தாருடைய வாதி. மெஸ்தர் அடகின்ஸன் பிரதிவாதி. அவருக்குதவி மெஸ்தர் ஸ்ரீநிவாச பாரிஸ்டர் அட்லா.

சாற்றிய குற்றங்கள்.

1. 1883ஞ ஜூலைமீ 6உ பாணமுத்துப் பிள்ளையிடம் கடனாக வாங்கின ரூ 1000.

2. 1883ஞ ஜூலைமீ 10உ முன் சொன்னவரிடத்திலேயே மறுபடி கடன் வாங்கின ரூ 1000.

3. 1883ஞ ஜூலைமீ 16உ மகமது தண்டியர்தாவிடத்தில் கடன் வாங்கின ரூ 2,500.

4. 1884ஞ எப்பிரல்மீ 17உ ஷெயானிடத்திலேயே கடன் வாங்கின ரூ 1000.

5. 1884ஞ எப்பிரல்மீ 17உ ஷெயானிடத்தில் கடன் வாங்கின ரூ 200.

6. 1884ஞ ஜனுவரிமீ 14உ அருணாசலம் செட்டியிடம் கடன் வாங்கினது ரூ 5000.

7. 1884ஞ பிப்ரவரிமீ 1உ சடகோப ஐயங்காரிடம் வாங்கின ரூ 1000.

8. இப்படி கடன் வாங்கிய குற்றமும், மெஸ்தர் கார்ஷ்டின் துரை 1884ஞ மேமீ 4உ கேட்டதில், கடன் தனக்கு இல்லையென்றும் வீட்டுக் குடிக்கூலி ஒரு மாசத்துக்கு கொடுக்கவேண்டியது என்றும் சொன்ன குற்றமும் மெஸ்டர் அட்கின்சன்மேல் சாற்றப்பட்டிருக்கின்றன. விசாரணை முடிவாய்விட்டதென்றே சொல்லலாம். விசாரணை முடிவானவுடனே கர்நெல் வெல்டன் துரையவர்கள் கவர்ன்மெண்டுக்கு ஒரு ரிப்



போர்ட்டு செய்வார். அதன்பிறகு துரைத்தனத்தார் இந்தியா செக்ரிடேரிக்கு அனுப்புவார்கள். முடிவு எவ்வாறாகுமென்று இனி விளங்கும்.

கடந்த 10உ வியாழக்கிழமையன்று பூர்வத்தில் நடந்த மாதிரியாய் நம்முடைய காருண்ணிய சக்கரவர்த்தினியாகிய விக்டோரியா அவர்கள் தங்கள் பிராயத்தை நிகர்த்த கைதிகளாயிருந்த 65-கிழவிகளை விடுதலையாக்கினார்களாம்.

பாரிஸில் இருக்கிற ஒரு ஜெர்மன் ரங்கூனில் ஒரு சினேகிதனுக்கு எழுதுகிறான்.—பிரென்சுக்காரர்கள் இந்தியாவில் தமக்கு சொந்தமாயிருக்கிற இடங்களை இங்கிலிஷ்க்காரருக்குக் கொடுத்து அதற்குப்பதிலாக பிரிட்டிஷ் பர்மாவை பெற்றுக்கொள்ளுகிறதாக இங்கே வதந்தி.

வெகுமதி பெறல்.—ஆப்கானிஸ்தான் அமீருக்கு ருஷிய கவர்ன்மெண்டார் தங்கத்தாலான ஜாடிகளும் தட்டுகளும் இனாம்கொடுக்க, அவைகளை அவர் பெற்றுக்கொண்டாரெனறு காபூலில் வதந்தி.

குதிரை பந்தயத்தில் சேதம்.—பெங்களூர் ஜூலைமாதம் 12உ பந்தயத்தில் ஒரு குதிரை ஒரு சிறுவனை மிதித்ததில் தலை உடைந்து அடுத்த நாள் ஆஸ்பத்திரியில் இறநதுவிட்டான். 17உ பந்தயத்தில் ஒரு குதிரை தட்டியைத் தாண்டும்போது விழுந்து முன்கால் ஒடிந்தது. உடனே அதை சுட்டுவிட்டார்கள்.

ஐந்து முகக் குழந்தை.—வடமேற்கு மாகாணத்திலே பாந்தா என்ற பட்டணத்துக்கு அருகான ஒரு கிராமத்திலே ஒரு ஸ்திரீ ஐந்து முகம் ஆறு கண்களுங் கொண்ட ஒரு மகளைப் பெற்றனளாம், சாதாரணமாயுள்ள ஒரு தலையின்மேல் நாலு தலைகளும், ஒவ்வொரு முகத்திலும் ஒவ்வொரு கண்ணும், அடியில் மற்ற முகத்தில் இரண்டு கண்ணும் இருந்தனவாம். முன்னெற்றியில் மயிர் நீண்டு வளர்ந்திருந்தது, மூக்கு நீண்டு தட்டையாயிருந்தது, வாயோ மிகப் பெரியது. குழந்தை உயிருடன் பிறந்தது. இது மிகவும் ஆச்சரியம்.

சென்ற மீ 28உ இரவு 11-மணி நேரத்தில் பெரியகுளந் தாலூகா ஆனைமலையான் பட்டியில் அகஸ்மாத்தாய் தீப்பிடித்ததாலும் காற்றின் அகோரத்தாலும் அரைமணி நேரத்துக்குள்ளாக 50-வீடுகள் பக்ஷிக்கப்பட்டன. நஷ்டம் 15,000-ரூபாய்க்கு மேலிருக்கும். 225-ரூ, 100-ரூ செலவுகளில் கட்டப்பட்ட அமேரிக்கன், லுத்தரன் மிஷன் சபை ஆலயங்களன்றி உபதேசிமார் வீடுகளும் வெந்துபோய்விட்டது. ஐயோ பரிதாபம்.

ஒரு இங்கிலீஷ் பிரயாணி வலென்ஷியா நகரிலிருக்கையில் அங்குள்ள ஒரு பெண்ணோடு வெகு நேசத்துக்குள்ளானான். அவள் தாய் அவனைப் பார்த்து, என் மகளைக் கட்டிக்கொள் என்க, அவன் நான் அவ்வளவுக்குப் பணக்காரனில்லையே என்றான். அந்த ஸ்திரீ இது கேட்டு ஆகாவென்று சிரித்து, என்ன? பணம்பெருத்த சீமையில் அவ்வளவுக்குப் பணக்காரன் இல்லையென்று சொல்லலாமா, என் மகளைப்போனற கெட்டிக்காரத் திருடி உண்டா? அவளை கலியாணம்செய்துகொண்டால் ஒரு வருஷத்துக்குள் நீ லட்சப் பிரபுவாய்ப் போவாயே என்றாளாம்.

புதுச்சேரியில் நடந்த ரோமான் கத்தோலிக்க திருவிளாவில் விடப்பட்ட ஒரு வாணம், அடுத்த வாணக்குவியலுக்குள் செல்ல, 13-பேர் மாண்டனர். அனேகர் காயப்பட்டார்கள்.

---

## ஆகஸ்டுமீ நாள்-31. ஆடிமீ 19உ முதல், ஆவணிமீ 18உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வெ | 1 | ௧௯ | எந்தமட்டும் அக்கிரம நினைவுகள் உன் உள்ளத்திலே தங்கும். |
| ச | 2 | ௨0 | உங்கள் பாவங்கள் உங்களுக்கு நன்மையை வரவொட்டாதிருக்கி |
| ஞா | 3 | ௨௧ | சமாதானமில்லாதிருந்தும் சமாதானம்சமாதானம் என்று சொல் |
| தி | 4 | ௨௨ | பொய்வார்த்தைகளை நம்பிக்கொள்ளாதிருங்கள் எரே. 7:4. (லி, |
| செ | 5 | ௨௩ | கிலேயாத்திலே பிசின்தைலம் இல்லையோ ? 8:22. (9:23 |
| பு | 6 | ௨௪ | ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம். |
| வி | 7 | ௨௫ | உம்முடைய கோபத்தினாலேயல்ல, மட்டாய்த்தண்டியும். 10:24. |
| வெ | 8 | ௨௬ | என் வழக்கை உமக்கு வெளிப்படுத்திவிட்டேன். 11:2). |
| ச | 9 | ௨௭ | ஆகாதவர்களின் வழி வாய்க்கிறதென்ன ? 12:1. |
| ஞா | 10 | ௨௮ | உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு மகிமையைச் செலுத்துங்கள். 13: (16 |
| தி | 11 | ௨௯ | உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தோம். 14: 20. |
| செ | 12 | ௩0 | கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டது 15: (16. |
| பு | 13 | ௩௧ | என் நாமம் யெகோவா என்று அறிந்துகொள்வார்கள். 16:21. |
| வி | 14 | ௧ | கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக்கொண்டிருக்கிற மனுஷன் பாக் |
| வெ | 15 | ௨ | உங்கள் வழிகளையும் உங்கள் கிரியைகளையும் சீர்ப்படுத்துங்கள் 18: |
| ச | 16 | ௩ | இந்த ஸ்தலத்தின்மேல் ஒருபொல்லாப்பை வரப்பண்ணுவேன். 19: |
| ஞா | 17 | ௪ | நீர் அவர்களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிறதைக் காண்பேனாக. 20: |
| தி | 18 | ௫ | நான் உங்கள் கிரியைகளின் பலனுக்குத்தக்கதாய் உங்களை விசாரி |
| செ | 19 | ௬ | நியாயமும் நீதியுஞ்செய்தபோது அவன் சுகமாய் வாழ்ந்திருக்கவில் |
| பு | 20 | ௭ | தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன். 23: 5. |
| வி | 21 | ௮ | அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்திற்குத் திரும் |
| வெ | 22 | ௯ | என் சொல்லைக் கேளாமற்போனீர்கள். 25: 7. (புவார்கள் 24: 7 |
| ச | 23 | ௧0 | கர்த்தர் . தீங்குக்கு மனஸ்தாபப்பட்டார். 26: 19. |
| ஞா | 24 | ௧௧ | உங்கள் நிமித்தகாரருக்கும் நீங்கள் செவிகொடாதிருங்கள். 27: 9. |
| தி | 25 | ௧௨ | கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம் உண்டாகப் பேசினாயே. 28: 16. |
| செ | 26 | ௧௩ | நான் என் ஜனத்துக்குச் செய்யும் நன்மையை அவன் காண்பதில்லை |
| பு | 27 | ௧௪ | இஸ்ரவேலே, கலங்காதே என்று கர்த்தர் சொல்லுகிறார். 30: 10. |
| வி | 28 | ௧௫ | உன் முடிவைப்பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு. 31: 17. |
| வெ | 29 | ௧௬ | அவர்களைக்குறித்துச் சொன்ன எல்லா நன்மையையும். 32: 42. |
| ச | 30 | ௧௭ | அவர்களுக்கு சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன். 33: 6. |
| ஞா | 31 | ௧௮ | இதுநான் சொன்ன வார்த்தையென்று கர்த்தர் உரைத்தார். 34: 5. |

### விசேஷ நாட்கள்.

3. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 8-ம் ஞாயிறு.
6. பௌரணமி.
10. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 9-ம் ஞாயிறு.
17. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 10 ம் ஞாயிறு.
20. அமாவாசை
24. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 11-ம் ஞாயிறு.
பரி அப். பர்த்தொலோமேயுவின் திருநாள்.
31. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 12-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

கூ. செப்தெம்பர்மீ. ௲௮௮௪௵.

## THE CANDIDATE FOR ORDINATION.

## குருப்பட்ட மாணுக்கன்.

(தொடர்ச்சி.)

**10.** ஆதியாகமம் 1: 2 ல் "தேவஆவியானவர்" என்பது காற்றைக் குறியாமல், திரித்துவத்தில் மூன்றும் ஆளைக் குறிக்கும் என்பதற்கு ஆதாரம் என்ன ?

காற்று இன்னம் சிருஷ்டிக்கப்பட்டிருந்ததில்லை. மேலும் "அசைவாடி" என்று திருப்பியிருக்கிற எபிரேயு வார்த்தை, ஒரு பர்சனுடைய செய்கையைக் குறிக்கிறது. எப்படியென்றால் பட்சிகள் தங்கள் கூட்டின் மேல் அசைவாடி சிறகடிக்கிறதை (உபா 32: 11) மட்டுமல்ல, தங்கள் முட்டைகள்மேல் உட்கார்ந்து அடைகாக்கிறதையும் குறிக்கிற வார்த்தையானதால், தேவஆவியானவர் பூமி சமுத்திரம் முதலிய சிருஷ்டிப்புகளுக்கு ஒளியையும் உயிரையும் கொடுத்து அவற்றை உயிர்ப்பிக்கிற ஒரு பர்சனாக அசைவாடிக்கொண்டிருந்தார் என்று இந்த உபமான வார்த்தையினால் காட்டப்படுகிறார்.

**11.** சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் உண்டாக்கப்படுமுன் வெளிச்சம் சிருஷ்டிக்கப்பட்டிருந்ததா? முதலாம் நாளின் வெளிச்சம் சூரிய வெளிச்சமா? அல்லவா?

சூரியன் முதலான சுடர்கள் உண்டாக்கப்படுமுன் வெளிச்சம் சிருஷ்டிக்கப்பட்டிருந்தாலும் இருக்கலாம். ஆனால் 1 ல் "வானங்கள்" என்ற வார்த்தையில், சூரியன் சந்திரன் நட்சத்திரங்களெல்லாம் அடங்கியிருக்கலாம் என்பதினாலே, 3 ல் சொல்லிய வெளிச்சம் சூரியவெளிச்சந்தான் என்று பெரும்பாலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. எப்படியென்றால், 1, 3, இந்த வாக்கியங்களில் சொல்லிய சங்கதிகளுக்கு இடையில் கோ

டாகோடி வருஷங்கள் சென்றிருக்கலாம். மோசே அதையெல்லாம் விட்டுவிட்டு இப்போது மனுஷன் வசிக்கப்போகிற பூமிக்குரிய சம்பந்தமாய்ச் சரித்திர நடையை ஆரம்பிக்கிறார். 2 ல் பூமியை இருள் மூடியிருந்ததாகவும், 3 ல் தேவ வார்த்தையினாலே இருள் நீங்கி, இருளிலிருந்து வெளிச்சம் பிரிக்கப்பட்டதாகவும், இரவும் பகலும் கிரமமாய் மாறிமாறி வரும்படி ஏற்படுத்தப்பட்டதாகவும் சொல்லியிருக்கிறது. என்றாலும் மூடுபனி மேக மந்தாரமுதலிய தடைகள் இன்னம் நீக்கப்படாமலிருந்ததினாலே சூரியனும் ஆகாயவிரிவும் பூமிக்குப் பூரணமாய்க் காணப்பட இடமில்லாதிருந்தது. நாலாம் நாளிலோ இந்தத் தடைகள் நீக்கப்பட்டதால், பகலில் சூரியனும் இரவில் சந்திரனும் நட்சத்திரங்களும் சுடர்களாகப் பிரத்தியட்சமாய்க் காணப்பட்டது.—மேலும் முதலாம் நாளில் வெளிச்சம் உண்டானதைச் சொல்லியிருக்கிறதல்லாமலும், அது இரவும் பகலும் கிரமமாய் மாறிமாறி வந்ததென்று சொல்லியிருக்கிற விபரம், சூரியன் ஆதியிலேயே படைக்கப்பட்டிருந்ததை ரூபிக்கிறதாய்க் காணப்படுகிறதே.

**12.** ஆதியாகமம் முதல் இரண்டு அதிகாரங்களிலும் தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரியையை விளக்கும்படி எபிரேயு பாஷையில் நாலு வெவ்வேறு வினைச்சொற்கள் வழங்கியிருக்கிறது; அவைகளெவை?

(1) சிருஷ்டித்தல் (Creating). "வானத்தையும் பூமியையும் (1 வா), மகா மச்சங்களையும்" (21 வா), தமது சாயலாக மனுஷனையும் (27 வா) சிருஷ்டித்தார்.

(2) உண்டாக்கல் (Making). முன்னமே சிருஷ்டித்த பதார்த்தத்திலிருந்து ஆகாயவிரிவு, சூரியன், நட்சத்திரங்கள், மிருகஜந்துக்கள் ஆகிய இவற்றை உண்டாக்கினார். (7, 16, 25).

(3) உருவாக்கல் (Forming). 2: 19.

(4) கட்டுதல் அல்லது சமைத்தல் (Building). ஏவாளை (2: 22).

இவற்றில் மூன்று வினைச்சொற்கள் ஏசா 43: 7 ல் ஒருமித்து வருகிறது. "நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கி உண்டாக்கி."

**13.** ஆதி. 1: 27. "தேவசாயல்" என்பதென்ன?

பரிசுத்தமும் குற்றமின்மையுந்தான் தேவசாயல் என்றும், ஆதாம் பாவஞ்செய்தபொழுது அதை இழந்துவிட்டானென்றும் அநேக வேதாசிரியர் சொல்லுகிறார்கள். இந்தச் சாயலில் பரிசுத்தம் அடங்கியிருந்ததென்று கொலோ 3: 10 னால் வருவிக்கலாம். ஆனால் ஆதி. 9: 6. யாக். 3: 9. இந்த வாக்கியங்களினால், ஆதாம் பாவஞ்செய்தபொழுது தேவசாயல் பூராவாய் அழிந்துபோகவில்லை என்று தெளிவாய்த் தோன்றுகிறது. அப்படியானால் பூரண பரிசுத்தம் மட்டும் அந்தச் சாயல் அல்லவே. மிருகங்களின்பேரில் ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட ஆளுகையைக் குறிக்குமென்று யூதரும் கிறிஸ்தவர்களுமான சிலர் நினைக்கிறார்கள்



சுயாதீன சித்தமே மிகவும் முக்கியமான சாயலாயிருந்ததென்பது சரியான வியாக்கியானமாய்க் காணப்படுகிறது. மிருகங்களுக்கு தானாய் நிர்ணயிக்கிற சித்தம், நன்மை தீமை பகுத்தறியும் சக்தி, தானாய்ப் படிக்கத்தக்க வல்லமை, சரியான சன்மார்க்க குணம் ஆகிய இவை இல்லை. ஆகையால் அவைகளுக்கு ஒரு சரியான பர்சனுக்குரிய சுபாவமில்லை. தேவனே முக்கியமான பர்சனாயிருக்கிறார். அழியாத ஆத்துமாவை மனுஷனுக்கு அவர் கொடுத்ததோடு ஒரு பர்சனுக்குரிய சுபாவத்தையும், தன்னறிவையும், சுயாதீனமாய்த் தெரிந்துகொள்ளும் சக்தியையும், பிரத்தியேகமான கடமைக்குரிய உத்தரவாதத்தையும் அவனுக்குக் கொடுத்தார். இதெல்லாம் முதலில் சுத்தத்தோடும் குற்றமின்மையோடும் கூடியிருந்தது. இப்படியாக மனுஷன் தன் சிருஷ்டிகரைப்போல புத்தியுள்ளவனும், அழிவில்லாதவனும், பர்சனும், முன்னறியுஞ் சக்தியும் சுயாதீனமாய்த் தெரிந்துகொள்ளும் திராணியுமுடையவனும், மாசில்லா பரிசுத்தனும் கறைப்படாதவனுமாயிருந்தான்.

**14.** மத். 22: 31, 32 எப்படி சரீர உயிர்த்தெழுதலை ரூபிக்கிறது?

(1) தேவனுடைய மனதை அறிந்தவர் இப்படிச் சொல்லுகிறார். ஆபிரகாமின் ஜீவகாலத்தில் அவனுடைய தேவனாயிருந்தவர் நானே என்று சொல்லாமல், இப்பொழுது ஆபிரகாமின் தேவனாயிருக்கிறேன், அவனுக்கும் எனக்குமுள்ள உடன்படிக்கை (ஆதி. 17: 17) இன்னமிருக்கிறது, ஆபிரகாம் எனக்கு இப்பொழுதும் உயிரோடிருக்கிற ஊழியக்காரனாயிருக்கிறான் என்று மோசேக்குக் காணப்பட்டு இந்த வாக்கியங்களை உரைத்தவரே வியாக்கியானம்பண்ணுகிறார்.

(2) தேவன் தம்மை "ஆபிரகாமின் தேவன்" என்று சொல்லும்போது, அழிந்துபோகிற மிருகங்களுக்கில்லாத இனமுறை சம்பந்தம் ஆபிரகாமுக்கும் தேவனுக்குமிருக்கிறதாக அந்த வார்த்தையில் அடங்கியிருக்கிறது. தேவன் மிருகங்களைச் சிருஷ்டித்துக் காப்பாற்றுகிறவராயினும் அவைகளின் தேவனல்ல. ஏனென்றால் ஒரு மனுஷன் இன்னொருவனை மனச்சாட்சியினால் அறிந்து நடக்கிற சம்பந்தமிருக்கிறதுபோல மிருகங்களுக்கும் தேவனுக்குமில்லை. மனுஷனோ தேவனை, என் தேவன் என்று சொல்லக்கூடிய பர்சனை உடையவனாயிருக்கிறான். என் தேவன் என்கையில், உலக ஜீவியத்தினால் திர்ப்தியடையக்கூடாத மனோதத்துவமும் பேராவலுமுடையவனாயிருக்கிறான் என்று அந்த "இன்" என்ற வார்த்தையில் அடங்கியிருக்கிறதே. ஆகையால் மனுஷப் பர்சன் மறுமையின் ஜீவனுக்குரிய சம்பந்தத்தைக் காட்டுகிறது எபி. 11: 16.

**15.** "ஏதேன்" தோட்டம் எங்கேயிருந்தது?

ஏதேன் என்ற வார்த்தைக்கு ஆநந்தம் என்றர்த்தம். ஏதேன் என்ற வார்த்தையை பரதீஸ் என்று மற்றப் பாஷைகளில் மொழி பெயர்த்திருக்

கிறார்கள். பரதீஸ் என்பது பார்சு வார்த்தை. இந்த வார்த்தைக்கு, மரம் செடிகளினால் அலங்கரிக்கப்பட்ட கண்காட்சிசாலை என்றர்த்தம்.

ஏதேன் என்பது ஒரு இடப்பேர். அதின் விஸ்தீரணம் நமக்குத் தெரியாது. ஏதேன் தோட்ட சம்பந்தமாய் வேதத்தில் இரண்டு தேசங்களின் பேர் வருகிறது. ஒன்று திகிரிஸ் நதிக்கடுத்த மெசொப்பொத்தாமியா. (2 இரா 19: 12. ஏசா 37: 12. எசே 27: 23).—மற்றது தமஸ்குவின் பக்கத்தில் (ஆமோஸ் 1: 5). ஆனால் இந்த இரண்டில் எதிலாவது பரதீஸ் இருந்ததாகக் குறிப்பில்லை. பரதீஸ் இருந்த இடத்தைப்பற்றி எவ்வளவோ எழுதப்பட்டிருந்தும், திட்டமாய்ச் சொல்வாரில்லை. 11, 12, 13, 14, இந்த வாக்கியங்களிற் சொல்லிய நதிகள் இன்னதென்று கண்டுபிடிப்பதுதான் பிரயாசமாயிருக்கிறது. பிராத் என்று ஒரு நதி ஐபிராத்து என்றும் (14 வா), இதெக்கேல் என்பது திகிரிஸ் என்றும் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. திகிரிஸ் நதிக்கு கல்தேயு பாஷையில் டிக்லாத் (Diglath) என்றும், சீரியா பாஷையில் டிக்லாத் (Diclath) என்றும், அரபியில் டிஜ்லாத் (Dijlath) என்றும் பேர். எல்லாம் இதெக்கேல் என்ற வார்த்தைக்கு இசைவாகவே வருகிறது. இவற்றில் ஒன்று கெட்டு திகிரிஸ் என்று வந்ததாக நினைக்கப்படுகிறது.

மேற்காட்டிய நாலு நதிகளையும் பரதீஸ் இருந்த இடத்தையும் பற்றி ஐந்து வியாக்கியானங்களுண்டு.

(1) கீகோன் என்பது நீல் நதி என்று யோசேப்புஸ் சொல்லுகிறார்.

(2) கல்வீன் முதலானவர்கள்: திகிரிஸ், ஐபிராத்து இந்த இரண்டு கவர்களும் ஒன்றாய்ச் சேர்ந்து, ஷாற்றல்–அரப் (Shat-el-Arab) என்று அழைக்கப்பட்டு பசோரா வழியாய் ஓடுகிற நதிதான் பரதீசின் நதி என்று சாதிக்கிறார்கள். அதின் நாலு கிளைகள் வடக்கே, பிரிந்தோடுகிற திகிரிஸ், ஐபிராத் என்ற கவர்களாம். தெற்கே, கீழ் கவராகிய கீகோனும் மேல் கவராகிய பைசோனுமாம். ஒன்றாய்ச் சேர்ந்த ஷை நதி கடலில் விழுமுன் பசோராவுக்குத் தெற்கே மறுபடி இரண்டாய்ப் பிரிந்து மேற்காட்டிய கீகோன் பைசோன் என்னும் கவர்களாகிறது. அப்போ அரபியின் வடகீழ் பாகம், ஆவிலாவாகவும், கிசியா, (சூசியானு அல்லது) கூசிஸ்ற்றான் திசையானது கூஷ் (எத்தியோப்பியா) ஆகவுமிருக்கும் என்றும் சொல்லுகிறார்கள். எத்தியோப்பியா என்பது எபிரேயு பாஷையில் கூஷ் என்றிருக்கிறது.

(3) மைக்கெலிஸ் முதலானவர்கள், அர்மீனியாவின் பரும்புகளில் பரதீஸ் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். பைசோன் என்பது பாசிஸ் அல்லது அரக்சீஸ் என்று சொல்லப்படுகிற நதியாம். கீகோன் என்பது ஒக்சஸ் நதியாம். ஆவிலா என்பது குவாலிசி (Chwalissi) தேசமாம்.

(4) ஐடிகர் என்பவர், பலஸ்தீனாவின் ஒரு பாகந்தான் பரதீசாயிருந்ததென்கிறார்.



(5) மற்றும் பேர், அது இந்தியாவிலிருந்ததென்றும், சர்க்காஷியாவிலிருந்ததென்றும் சொல்லுகிறார்கள்.

மேற்காட்டிய ஐந்தில், முதல் அபிப்பிராயத்துக்கு கொஞ்சமேனும் ஆதாரமில்லை. அலெக்சந்தரியா யூதர் தாங்கள் குடியிருந்த தேச மகிமைக்காக இப்படிச் சொல்லி, அவர்கள் செய்த செப்ற்றியுஜின்ட் திருப்புதல் எரேமி. 2: 18 லும் கொண்டுவந்து நுழைத்தார்கள். ("சீகோர்" என்பது நீல் நதி). கூஷ் என்பதை எத்தியோப்பியா என்று பிழையான மொழிபெயர்ப்புச் செய்ததே இதை உறுதிப்படுத்துகிறது. எகிப்துதேசத்தில் எவ்வளவோ புளக்கமான மோசே, திகிரிஸ் ஐபிராத்து நதிகளோடே நீல் நதியையும் சேர்த்து எழுதுவானென்று நினைப்பது கூடாத காரியம்.—இரண்டாம் அபிப்பிராயத்தில் ஒரு நதி என்பது இசைவாயிருக்கிறது. அது பூர்வகாலத்தில் நாலு கிளைகளாய்ப் பிரிந்தோடினதாக வழங்கியிருக்கலாம். மேலும் அரபியில் ஒரு திசை ஆவிலா என்றழைக்கப்பட்டது நிச்சயமாயிருக்கிறது. இந்த அரபி, மேல் கவருக்குச் சமீபமாயிருக்கிறது. கூஷ் என்பதற்கு இசைவான கூசிஸ்ற்றான் எல்லை கீழ்கவரை அடுத்திருக்கிறது.—மூன்றும் அபிப்பிராயத்தில், திகிரிஸ், ஐபிராத்து, ஒக்சஸ், அரக்சீஸ், இந்த நதிகள் ஒரே மலைத்தொடரில் உற்பத்தியாகியிருக்கலாம். ஒருவேளை பூர்வகாலத்தில் ஒன்றுக்கொன்று சம்பந்தமுள்ளதாகப் பேசப்பட்டுமிருக்கலாம். என்றாலும் இந்த நாலும் ஒரே நதியாய்ச் சேருவதை தற்காலத்தில் காணோம்.

இரண்டாவது அபிப்பிராயமே சரியானதாகக் காணப்படுகிறது. பேர் போன நவீன வியாக்கியானிகளும் இப்படியே சொல்லுகிறார்கள்.

**16.** ஆதி. 2: 17. இப்படிப்பட்ட பரீட்சை கொடுக்கப்படுவானேன்? இந்தக் கட்டளையினால் தேவனே பாவத்துக்குக் காரணராகிறாரே. ஒரு மரத்தின் சிறிய பழத்தைச் சாப்பிட்டதற்கு இந்தப் பெரிய தண்டனையா? என்று ஆக்ஷேபிக்கப்படுகிறது. இதற்கு என்ன உத்தரவுசொல்லுவாய்?

ஆதாம் தேவனுடைய சிருஷ்டி. ஆகையால் அவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியவனே அல்லவோ? அப்படியானால் அவனுடைய கீழ்ப்படிதலைச் சோதிக்க ஒரு விசேஷமான பரீட்சையிருக்க வேண்டியது அவசியந்தானே.

ஆதாம் குற்றமற்ற பாக்கியமான நிலைமையிலிருந்தான். அவனுடைய சரீரக் கட்டுமானத்திலாவது ஆத்தும ஆசாபாசங்களிலாவது யாதொரு தாறுமாறிருந்ததில்லை. ஆகையால் பாவத்தில் விழும்படி இயல்பான சோதனைகள் அவனுக்குள்ளிருந்து எழும்ப இடமில்லை. ஆதாம் ஏவாளும் அவர்கள் பக்கத்தில் அவர்களுடைய சிருட்டிகருந்தவிர வேறொருவருமிருந்ததில்லை. ஆகையால் அவர்களுடைய தேவனுக்கு அல்லது பிறருக்கு விரோதமாய் பாவஞ்செய்யும்படி அவர்களுடைய மனம் இயல்பாய்ச் சாயத்தக்க ஏதுக்கள் ஒன்றுமில்லை. சன்மார்க்கப் பிரமாணத்துக்கு மாதிரியாக 10 கற்பனைகளை எடுத்துக்கொள்வோம். இதில் எதை மீறும்படி அந்தக் குற்ற

மற்ற நிலைமையில் இயல்பாய் விரும்புவார்கள்? ஆனால் அவர்கள் நிலைமை சுயாதீனமானதாயிருந்தாலும் தேவனைச் சார்ந்து பிழைக்கவேண்டியவர்களாயிருந்தார்கள் இப்படிப்பட்ட நிலைமையிலிருந்தவர்களுக்கு ஒரு பழத்தை விலக்குவதைப்போன்ற லேசான கட்டளையிருக்கக் கூடாது. இது தேவனுடைய பொதுவான நடத்தலுக்கும் விரோதமல்லவே. ஆதி. 22: 1. மத். 19: 21.

ஒரு சிருஷ்டி தேவனைவிட்டு மருளவிழுவது மகா பெரிய துரோகம். உலகத்திலுள்ள சகலவித பாவங்களையும் கொடுமைகளையும் பிறப்பித்துவிட்ட தாய்ப்பாவம் இதுதான்.

"சாகவே சாவாய்" என்பது, அந்த மரத்தின் கனியை புசிப்பதினாலுண்டாகும் பலன் ஆத்துமா சரீரம் சேர்ந்த முழு மனுஷனுக்கும் கொல்லத்தக்க நஞ்சை இட்டால்போலிருக்கும்; சரீரம் சாவுக்கினமும் ஆத்துமா "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்ததும்" ஆகும் என்றர்த்தமாம். மீறின நாள்முதல் ஒரு ஜீவன் ஆரம்பிக்கிறது. அதென்னவென்றால், உயிரோடிருக்கிற சாவுதான். "மரணமானது எங்களிடத்தில் பெலன்செய்கிறது என்று பவுல் சொல்லுகிறார் (2 கொரி. 4: 12). என்றாலும் அவர்கள் அந்த க்ஷணத்திலே சாகாதபடி நினிவேப் பட்டணத்தாருக்குப்போல (யோனா. 3: 10) கொஞ்சம் மன்னிப்பிருந்தது. அதின்பேரில் ஒரு பிராயச்சித்தம் வாக்கருளப்பட்டது. ஆனால் அந்தத் தீர்ப்போ ஒருக்காலும் முழுவதுமாய் மாற்றப்படவில்லை. ஆக்கினை உடனே ஆரம்பித்தது.

17. எபிரேயு பாஷையே மூல பாஷை என்பதற்கு 2: 23ஐ ஒரு உதாரணமாக அநேகர் சொல்லுகிறார்கள். எப்படி? இது சரியா?

எபிரேயு பாஷையில், "இவள் இஷ்ஷாவில் எடுக்கப்பட்டபடியினாலே இஷ் என்னப்படுவாள்" என்றிருக்கிறது. அப்படியே ஏவாள், காயீன், ஆபேல் முதலான பேர்களுக்கும் எபிரேயு பாஷையில்தான் அதற்கேற்ற அர்த்தமிருக்கிறது என்கிறார்கள். ஆனால் இந்த நியாயத்தில் பலமில்லை ஏனென்றால் பேர்களை ஒரு பாஷையிலிருந்து இன்னொரு பாஷையில் திருப்பும்போது அந்தப் பேர்கள் மூல பாஷையில் கொடுத்த அர்த்தத்தையும் தாராளமாய் வைத்துக்கொள்ளலாமே.

18. (3: 1) ல் சர்ப்பம் என்பதென்ன?

சாத்தானே அந்தச் சர்ப்பம் வெளி. 12: 9. யோவா. 8: 44. சிலர், சர்ப்பம் உள்ளபடி காணப்படவே இல்லை, சர்ப்பம் என்றழைக்கப்படுகிற பிசாசுதான் காணப்பட்டது என்கிறார்கள். அப்படியானால், "சகல காட்டு மிருகங்களைப் பார்க்கிலும் தந்திரமுள்ளதாயிருந்தது" என்று அவனைக் குறித்துச் சொல்லவேண்டியதில்லையே. சாத்தான் தந்திரத்தில் பேர்போன ஒரு மிருக ரூபத்தை ஏன் எடுத்தானென்றால், தன் சோதனையை லேசாய் அறிந்துகொள்ளாதபடி ஏவாளைப் பாராமுகமாயிருக்கும்படி செய்யுதே. அவள் இப்பொழுது மற்றச் சிருஷ்டிகளுக்கெல்லாம் வாடிக்கைப்



படாத புதிய மனுஷியாயிருந்ததால், ஒரு மிருகம் பேசுவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டிருக்கமாட்டாள்.

ஏவாள் இந்தச் சோதனைக்குத் தப்பிக்கொள்ள இரண்டு வழியிருந்தது. (1) விலக்கப்பட்ட கனியைப்பற்றிப் பேச்சுவந்த க்ஷணத்திலே தன் புருஷனிடம் ஓடிப்போய் விடவேண்டும். அப்படிக்கில்லாமல் சம்பாஷணைசெய்ய ஏற்பட்டாள். (2) தேவன் இந்தக் கனியை விலக்கினது நிச்சயம், நாங்கள் புசிக்கவேமாட்டோம் என்று அவனோடே எதிர்த்து நிற்க வேண்டியதாயிருந்தது (யாக் 4: 7). அப்படிக்கில்லாமல் இணங்கினாள்.

"தேவன் அறிவார்." (5 வா) என்பதில், சிருஷ்டிகள் நன்றாயிருப்பதைப் பார்த்து தேவன் எரிச்சலடைகிறவராகச் சோதனைக்காரன் சொல்லுகிறான். தப்பான மார்க்கங்களும் அவிசுவாசமும் சொல்லுகிற போதனை இதுவே. பிற்பாடு அவன, ஏவாள் இதுவரையும்போல் தேவனைச் சார்ந்தல்ல, தன் பெலனை நம்பி தான்தானாய் நிற்கும்படி ஆசிக்க யோசனை சொல்லுகிறான். சகல பாவங்களுக்கும் மூலம் இதுதான். தேவனைச் சார்ந்து நிற்பதை விட்டுவிட்டு, வல்லமை, ஞானம், பாக்கியம் இவற்றை தன்னிலேதானே தேடுவது தன் பெலனை நம்புவதாம்.

சர்ப்பத்தின் வாக்குப்படி மெய்யாகவே அவர்கள் கண்கள் திறக்கப்பட்டது! ஆனால் எதை பார்க்கும்படி?—அவர்கள் தேவனைவிட்டுவிட்ட க்ஷணத்திலே மாம்சத்துக்கு அடிமைகளானார்கள்; இவர்கள் நாடின சுயாதீன சித்தம், சுயாதிபத்தியம், நன்மை தீமை அறிவது எல்லாம் கூடி பாவத்தின் வல்லமைக்கு இவர்களை ஒப்புக்கொடுத்துவிட்டது; தேவனைப்பற்றிய அறிவினாலும் அன்பினாலும் அவருக்குக் கீழ்ப்படிவதினாலும் உலகத்துக்கு சுயாதீன கர்த்தனாயிருப்பதை கீழ்ப்படியாமையினாலே விட்டுவிட்டு, தனக்குத்தானே எஜமானானான்; நன்மையை மட்டும் நாடின இவர்களுடைய உள்ளம் பாவத்தை மட்டும் நாடும்படி கெட்டுப்போனது. இதைப் பார்க்கும்படிதான் அவர்கள் கண்கள் திறக்கப்பட்டது.

19. "கர்த்தருடைய சத்தம்" என்பது (8 வா) யாரைக் குறிக்கும்?

சிருஷ்டிப்பு, விழுதல் இந்தச் சரித்திரங்களில் மனுஷனைப்போல் தேவன் செய்ததாகச் சொல்லியிருக்கிறது. திருஷ்:

மனுஷனை உண்டாக்குவோமாக என்று சிருஷ்டிகர் ஆலோசனைபண்ணுகிறார் (1: 26).

சிருஷ்டிப்பு நடந்தேறினதைப் பார்த்து ஆநந்தம் கூறுகிறார் (1: 31).

ஓய்ந்திருந்தார் (2: 2)

ஆதாமுக்கு ஒரு தோட்டத்தை உண்டாக்கினார் (2: 8).

அவன் பேரிடும்படி மிருகங்களைக் கொண்டுவந்தார் (2: 19.)

ஆதாமின் விலா எலும்பினால் ஏவாளை உருவாக்கி அவனுக்கு மணவாட்டியாகக் கொண்டுவந்தார் (2: 22).

பகல் குளிர்ச்சியான வேளையிலே உலாவுகிற அவருடைய சத்தத்தைக் கேட்டார்கள்.

இப்படியாக பூர்வ பிதாக்கள், தீர்க்கதரிசிகள் இவர்களுக்கு தேவன் காணப்பட்டதாகச் சொல்லுகிற ஒவ்வொரு காட்சியும் நித்திய குமாரனுடைய காட்சியென்று கிறிஸ்தமான . பிதாக்களெல்லாரும் சொல்லுகிறார்கள்.

**20.** (3: 14 ஐ) விஸ்தரி?

மனுஷனை முட்டிக்கொன்ற மாடு நியாயப்பிரமாணத்தின்படி ஒரு குற்றவாளியைப்போல் கொல்லப்பட்டதுபோல, மனுஷனை நாசம்பண்ண சாத்தான் சர்ப்பத்தைக் கருவியாக்கினபடியினாலே அதற்கும் இந்த சாபம் ஒருவாறு கூறப்பட்டது. சர்ப்பமானது சாத்தானுடைய புறம்பான வடிவமாய் மட்டுமிருந்தபடியினாலே புறம்பான விதமாய் சர்ப்பத்துக்குச் சொல்லப்பட்ட இந்தச் சாப வார்த்தைகள், ஆவிக்குரிய கருத்துப்படி அந்தச் சாத்தானைச் சபித்த சாபமாயிருந்தது. மனுஷனுக்காக அவனைச் சபித்தபடியினாலே மனுஷனுடைய விழுதலுக்கு முற்காரணமாயிருந்த அவன் பேரில் மனுஷ சாதியார் கடைசியாக அடையும் வெற்றியைக் குறித்த வாக்குத்தத்தமும் அந்தச் சாபத்தில் அடங்கியிருக்கிறது. இந்தச் சாபத்தினால் சர்ப்பம் தன் வடிவத்தில் ஏதோ ஒரு மாறுதலடைந்திருக்கிறதாக அந்தச் சாப வார்த்தைகளினாலேயே விளங்குகிறது. சர்ப்பம் எக்காலமும் இழிவாக்கப்பட்டதோடு மனுஷ ஜாதிக்கும் அதற்கும் தீராப்பகையும் ஓய்ாப்போராட்டமும் உண்டாயிற்று.

**21.** 3: 15. "வித்து" என்பது யாரைக் குறிக்கும்.

யேசு மேசியாவைக் குறிக்கும். அவரே சரியானபடி ஸ்திரீயின் வித்து. "உன் தலையை நசுக்குவார்" என்பதில், (உன் வித்தின் தலை என்றுமட்டுமல்ல) ஒரு விசேஷித்த சர்ப்பத்தின் தலையை நசுக்குகிறவராகச் சொல்லப்படுகிறார். வித்து என்ற வார்த்தைக்கு எபிரேயு பாஷையில் "அவர்" என்று ஆண்பால் பேராயிருப்பதை இலக்கணப்படி நாம் அழுத்திப் பேசக்கூடாவிட்டாலும், இந்த வாக்கியத்தில் ஒரு ஆள் இன்னொரு ஆளோடு நேராய் மல்யுத்தம்பண்ணி, ஆளின்மேல் ஆள் ஜெயமடைகிற காட்சியிருக்கிறது. இது மேற்படி ஆண்பால் பேரை வர்ஜிதப்படுத்துகிறது. மேலும் இந்த ஜெய வாக்குத்தத்தம் ஸ்திரீயின் வித்துக்கு அருளப்பட்டிருப்பது ஷ்டி சாதனையை இன்னம் உறுதிப்படுத்துகிறது. ஏவாளின் சந்ததியில் தகப்பனில்லாமல் பிறந்தவர் ஒரே ஒருவர்தானிருக்கிறார். "பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கு அவர் வெளிப்பட்டார்."–எருசலேம், யோனத்தான் இந்த இரண்டு தல்மூதுகளிலும், சர்ப்பத்தின் பேரிலுள்ள இந்த ஜெயம் "மேசியாவின் நாட்களிருக்கும் என்று அர்த்தம்பண்ணியிருக்கிறது.



# பாபிலோன் சிறையிருப்பு.

(தொடர்ச்சி.)

யூதருடைய யுத்தம் முடிந்தபின் நேபுகாத்நேச்சார் சூரியா பலஸ்தீனாவில் கிடைத்த கொள்ளைப்பொருளினால் தனக்குப் பெருமையும் மேன்மையுண்டாகவும், அவன் தன் தேவனாகிய பேலுக்குக் கனமாகவும், தூரா பள்ளத்தாக்கிலே 60–முழ உயரமும் 6–முழ அகலமுமான ஒரு பொற்சிலையை நிறுத்தி (தானி. 3–அதி.) அதை எல்லாரும் வணங்கும்படி செய்தான். வணங்கமாட்டோமென்று எதிர்த்த சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவை அக்கினிச்சூளையில் போட்டு, அவர்கள் அங்கே அதிசயமாய்க் காக்கப்பட்டதால், மேன்மையடைந்தார்கள். தானியேல் ஏன் அக்கினிச் சூளையில் போடப்படவில்லை. இவர் இராஜ காரியமாய் எங்கேயாவது போயிருப்பாரென்பார்கள். ஆனால் தேசத்தின் சகல தேசாதிபதிகளும் வந்திருக்கையில் இவர் வராமலிருக்கக் கூடாதே. தானியேல் எல்லாருக்கு மேலான அதிபதியானதால், சத்துருக்கள் அவர்மேல் குற்றஞ்சாட்டுவதை விட்டுவிட்டு, மற்ற (3) பேர்மேலும் பிரியாதுசெய்திருப்பார்கள்.

நேபுகாத்நேச்சாருடைய 21-ம் வருஷத்தில், கி. பி. மு. 586–ல் எருசலேமின் அழிவுக்கு (2) வருஷத்துக்குப்பின் தீருவுக்கு இதேபால் இராஜாவாயிருக்கும்போது, அதை நேபுகாத்நேச்சார் பிடிக்கும்படி 13–வருஷம் முற்றிக்கைபோட்டிருந்தான். இதுவரையும் தீரு வேறெந்த இராஜ்யத்துக்கும் கீழ்ப்பட்டிராத அரணும், ஐசுவரியமுமான பட்டணம். அந்நாட்களில் அது வியாபாரத்தில் பேர்போனது. (எசே. 26: 27–அதிகாரங்கள்) இதினால் குடிகளில் அநேகர் தங்கள் ஐசுவரியத்தினாலும், மகத்துவங்களினாலும் பிரபுக்களாயிருந்தார்கள். (ஏசா. 23: 8.) தீருபட்டணம், சாலொமோன் எருசலேமில் தேவாலயத்தைக் கட்டுவதற்கு (240) வருஷத்துக்கு முன்னே சீதோனியரால் கட்டப்பட்டதென்று யோசேப்புஸ் சொல்லுகிறார். சீதோன் பெலிஸ்தராகிய அஸ்கலோன் பட்டணத்தாரால் ஜெயிக்கப்பட்டு பிடிபட்டுப்போயிற்று. குடிகளில் அநேகர் கப்பல்களில் சிலர் தப்பியோடி தீருவைக் கட்டினார்கள். இதினால் (ஏசா. 23: 12–ல்) அது சீதோனின் குமாரத்தியென்னப்படுகிறது. அது சீக்கிரம், விஸ்தாரத்திலும், ஐசுவரியத்திலும், வல்லமையிலும் தாய் நகரிக்கு மிஞ்சிப்போனதால், இதில் வல்லமையுள்ள இராஜாவுக்கு அநேக இராஜ்யங்கள் கீழடங்கிப்போக தீருவே அநேக வருஷங்களாய் எதிர்த்து நின்றது.

கி. பி. மு. 584-ல் நேபுகாத்நேச்சார் தீருவை முற்றிக்கைபோட்டிருக்கையில், கெதலியாவின் மரணத்துக்குப் பழிவாங்கும்படி அவன் நேபுசார்தான் என்ற தன் காவல் சேனாபதியை இஸ்ரவேல் தேசத்துக்கு அனுப்பினான். நேபுகாத்நேச்சாருடைய 23–ம் வருஷத்திலே நேபுசார்தான் மீதியான ஜனங்களில் 745–பேர்களைச் சிறைப்பிடித்து, பாபிலோனுக்கு அனுப்பினான். மற்றவர்களோ எகிப்துக்கு ஓடிப்போய்விட்டார்கள்.

இந்தக் கடைசி சிறையிருப்பினால் தேசத்தின் அழிவு பூரணமாயிற்று. அதில் பூர்வீகக் குடிகளே இல்லாமற்போயிற்று. இத்தோடே எருசலே

மைப்பற்றி ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் சொன்ன தீர்க்கதரிசனங்களும் முடிவடைந்தது. (எசே. 4: 1—8.) இஸ்ரவேலரின் பாவங்களை (390) வருஷம் தீர்க்கதரிசி சுமந்தது, இந்த சிறையிருப்புவரைக்குமே. இஸ்ரவேலரின் விக்கிரகாராதனையை தேவன் இவ்வளவுகாலம் சுமந்தார். யூதாவின் வீட்டார் யோசியாவின் 18-ம் வருஷத்தில் தேவனோடே உடன்படிக்கைசெய்துகொண்டவர்கள், அதற்கு மாறுபாடாக நடந்ததால் அதுமுதல் இதுவரையும் (40) வருஷமாயிற்று. இந்தக் கடைசி சிறையிருப்பினால் யூதா வீட்டாரிலும், இஸ்ரவேல் வீட்டாரிலும் மீதியானவர்கள் சிறைப்பட்டுப்போனதால் இத்தோடே அந்தக்காலமும் முடிவடைந்தது. வேறு சிலர் எரேமியா, யோசியாவின் 13-ம் வருஷத்திலே யூதர்கள் குணப்படும்படி பிரசங்கம்பண்ணின காலமுதல் (2 நாளா. 34: 29—31.) சிதேக்கியாவின் 12-ம் வருஷத்தில் எருசலேம் அழிக்கப்பட்டதுவரையும், (40) வருஷமென்கிறார்கள். அப்படியே எரோபெயாமின் மருளவிழுதல்முதல், எருசலேமின் அழிவுவரை 390-வருஷமென்பார்கள். ஜலப்பிரளயத்தின் காலம் நோவா பிரசங்கம்பண்ணத் துவக்கினதுமுதல் 120-என்றிருப்பதுபோல், யூதருடைய அக்கிரமங்களைச் சுமந்த 40-வருஷமும் எரேமியா பிரசங்கம்பண்ணின 40-வருஷமென்கலாம்.

இதன்பின் நேபுசார்தன் கெதலியாவைக் கொலைசெய்வதற்கு அம்மோனின் இராஜா உதவிசெய்தபடியால் அவனைப் பழிவாங்க, ரப்பாவைப் பிடித்து அழித்து, தேசத்தை அக்கினியினாலும், பட்டயத்தாலும் பாழாக்கி, இராஜாவையும் பிரபுக்களையும் பாபிலோனுக்குச் சிறைகளாக அனுப்பிவித்தான். எரே. 49: 1—6. எசே. 25: 1—7. ஆமோ. 1: 14, 15.

தீரு முற்றிக்கைபோடப்பட்டிருக்கையில் பெலிஸ்தியரும், மோவாபியரும், ஏதோமியரும், சீதோனியரும் பாபிலோனியரின் படைகளினால் அலைக்கழிக்கப்பட்டு முறிந்துபோனார்கள். இவர்களுக்கு விரோதமாய்ச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களும் நிறைவேறிற்று. (எரே. 27, 28, 29-அதி. எசே. 25-அதி.)

எருசலேமின் அழிவுக்கு 14-வருஷத்துக்குப்பின் கி. பி. மு. 574-ல் நேபுகாத்நேச்சாரின் 31-வருஷத்திலே தேவன் வருங்காலத்துக்குரிய தமது திருச்சபையின் நிலைமையைப்பற்றி, எசே. 40-48-அதிகாரங்களில் சொல்லிய தரிசனைகளையும், தீர்க்கதரிசனங்களையும் எசேக்கியேலுக்கு வெளிப்படுத்தினார்.

கி. பி. மு. 574. தேவன் தமது தீர்க்கதரிசிகளைக்கொண்டு, பார்வோன் ஒப்பிரூவுக்கு விரோதமாய்ச் சொன்ன தீர்க்கதரிசனங்கள் நிறைவேறத் தொடங்கின. ஒப்பிரூ தன்னோடே விசனப்பட்ட சிப்பாயிகளைச் சமாதானப்படுத்தி அனுப்பின (Amasis) அமேசிஸ் என்பவன் தன்னை இராஜாவாக்கிக்கொண்டு, ஒப்பிரூவை ஓட்டம்பிடிக்கச் செய்தான்.

கி. பி. மு. 573-ல் நேபுகாத்நேச்சாரின் 32-ம் வருஷத்தில் யோயாக்கீனுடைய சிறையிருப்பின் 26-ம் வருஷத்திலே எருசலேமின் அழிவின் 15-ம் வருஷத்திலே நேபுகாத்நேச்சார் (13) வருஷம் முற்றிக்கைபோட்டு தீருவைப் பிடித்துக்கொண்டான். எசே. 29: 17. இந்தப் பட்டணம் பிடிபடுமுன், குடிகள் அரைமயில் தூரமான ஓர் தீவில் போய் ஒரு பட்டணத்தைக் கட்டி, தங்கள் மனுஷரையும் ஆஸ்திகளையும் கடத்திக்கொண்டுபோய் விட்டார்கள். நேபுகாத்நேச்சார் வெகுகாலத்துக்குப்பின், கொள்ளைப்பொருளைத் தன் சேவகருக்குப் பங்கிடலாமென்ற ஆசையோடே பட்டணத்துக்குள் போகையில், ஒன்றுங் கிடையாததால் கோப



மூண்டவனாகி பட்டணத்தைத் தரையாக்கி, மீதியாயிருந்த ஜனங்களைக் கொன்றுபோட்டான். தீரு பின்பு ஒருக்காலும் தன் பழைய மகிமையை அடையவில்லை. தீவில் கட்டப்பட்ட பட்டணமோ தீருவென்று அழைக்கப்பட்டு முக்கியமாயிற்று. எசேக்கியேல் 26: 8, 9-ல் சொல்லிய தீரு பட்டணம் நேபுகாத்நேச்சார் அழித்ததல்ல. அதற்கு இப்படிச் செய்யவேண்டியதில்லையே. ஏனெனில் எல்லாம் சமுத்திரத்தினால் சூழப்பட்டிருந்ததே. கரையோரமான பட்டணம் முழுவதுமாய் அழிந்துபோயிற்று. எசே. 27: 4—11. கடலிலுள்ள பட்டணம் தப்பிக்கொண்டது. இந்த யுத்தம் முடிந்தபின் அவர்களுடைய இராஜாவாகிய இதேபால் மரிக்க, (எசே. 28: 8-10.) பாகால் (10) வருஷம் அரசாண்டபின் நியாயாதிபதிகள் பலர் ஒருவர் பின் ஒருவர் இராஜ்யத்தை ஆண்டுவந்தார்களாம். நேபுகாத்நேச்சார் கரையோரமான தீருவை அழித்தபின், தீவிலுள்ள பட்டணத்தார் நேபுகாத்நேச்சாரோடே சமாதான உடன்படிக்கைசெய்து, பாலி இறந்தபின் நேபுகாத்நேச்சார் தற்காலத்துக்கு நியமித்த நியாதிபதிகளால் ஆளப்பட்டு வந்தார்கள். தரியுயுஸ்தஸ்பு என்பவன் அவர்களை விடுதலைசெய்யும்வரை அவர்கள் 70-வருஷமாக இப்படி ஆளப்பட்டு வந்தார்கள்.

நேபுகாத்நேச்சார் தீருவின் முன்னே யுத்தத்தின் நீண்ட வேலையினாலே "ஒவ்வொரு தலையும், மொட்டையாயும் ஒவ்வொரு தோள் பட்டையின் தோலும் உரிந்துபோகவுந்தக்கதாக உழைத்தும், அவனுக்கு ஒன்றுங் கிடையாததால், தேவன் அவனுக்கு எகிப்துதேசத்தின் ஆஸ்தியைக் கொள்ளைப்பொருளாகக் கொடுப்போமென்று எசேக்கியேல் தீர்க்கதரிசியைக்கொண்டு சொன்னார். எசே. 29: 18—20. அந்தப்படி இந்த வருஷத்திலே நேபுகாத்நேச்சார் எகிப்தில் அமேசிசுவாலுண்டான தேசகலகத்தை அறிந்து, (எசே. 30: 1—19.) எகிப்துவுக்குள் முதலாவது பிரவேசிக்கத்தக்க இடமாகிய மிக்தோல் துவக்கி எத்தியோப்பியாவின் எல்லையாகிய சேவெனெவரைக்குமுள்ள எகிப்துதேசம் முழுவதுமாய்ப் பரந்து, திரள் ஜனங்களைக் கொன்று அதின் ஆஸ்திகளைக் கொள்ளையடித்து, 40-வருஷம்வரை எழும்பக்கூடாதபடிக்கு அதைப் பாழாக்கிப்போட்டான். எசே. 29: 30—32. 33-அமேசசைத் தனக்குக் கீழ் கப்பங்கொடுக்கும்படி திட்டஞ்செய்து பாபிலோனுக்குப் போய்விட்டான். இந்த (40) வருஷம் எகோனியாவின் சிறையிருப்பின் 30-ம் வருஷத்தில் அல்லது நேபுகாத்நேச்சாரின் 35—37-ம் வருஷத்தில் நடந்தபடியால் கோரோசால் யூதர் விடுதலையான காலத்தில் இந்த 40-வருஷமும் முடியும்.

பாபிலோனியரால் எகிப்துதேசம் கொள்ளையடிக்கப்படுகையில் கெதலியாவைக் கொன்றபின் அவ்விடத்துக்குப்போயிருந்த யூதருக்குள்ளும், அநேகர் கொலைசெய்யப்பட்டும் (எரே. 44: 27, 28.) மற்றவர்கள் பாபிலோனுக்குச் சிறைகளாக்கப்பட்டும் போனார்கள். எகிப்திலிருந்து தப்பி ஓடிப்போனவர்களோ சிறையிருப்பின் கடைசிக்காலத்தில் தங்கள் சொந்த தேசத்தில் வந்து குடியேறியிருந்தார்கள்.

கி. பி. மு. 570-ல் நேபுகாத்நேச்சாரின் 35-ம் வருஷத்திலே நேபுகாத்நேச்சார் எகிப்தைவிட்டுப்போனபின், சமுத்திரக் கரையோரமாய் ஒளித்திருந்த எகிப்தின் முந்தின இராஜனாகிய ஆபிரிஸ் என்பவன் காரியர், ஐயோனியர் முதலானவர்களைக் கூலிக்குப் படையாகச் சேர்த்து, மெம்பிஸ் பட்டணத்தில் அமேசிசோடே யுத்தஞ்செய்ததில், சிறையாகப் பிடிக்கப்பட்டு, (Sais) சாயிஸ் பட்டணத்துக்குக் கொண்டுபோகப்பட்டு, அவன் சொந்த அரண்மனையில் அடைபட்டு, திக்குமுக்கடைந்து பரிதா

பமாய் இறந்துபோனான். இவன் பலவகையாய் இழுக்கப்பட்டு சாகும்படிக்குச் செய்தார்கள். இப்படியாக எரேமியாவும், (43, 44, 45–அதிகாரங்கள்.) எசேக்கியேலும் (29, 30, 31, 32–அதி.) இவனையும் இவன் ஜனங்களையும்பற்றி சொன்ன தீர்க்கதரிசனங்கள் இத்தோடே முடிவடைந்தன. எசே. 44: 30. “நதி என்னுடையது நான் அதை உண்டாக்கினேன்” என்று (எசே. 29: 9.) பெருமையாயும் அகந்தையாயும் நடந்துகொண்டதினாலும், தேவனுடைய வல்லமையை அசட்டைபண்ணினதினிமித்தமும் அவனுக்கு இந்தத் துன்பமுண்டாயிற்று. இவன் முதல் (20) வருஷங்களில் செல்வமாயிருந்து சீப்புரு தீவார், சீதோனியர், பெலிஸ்தர் முதலான ஜாதிகளை ஜெயித்து, தனக்குள் அடக்கின பெருமையினால் நிற்பாக்கியமாய் மரித்தான். இவனுடைய மரணத்துக்குப்பின், அமேசிஸ் என்பவன் யாதொரு தடையில்லாமல் எகிப்துக்கு இராஜாவாகி 44–வருஷம் அரசாண்டான். இது நடந்தது எருசலேமின் அழிவுக்கு (19) வருஷத்துப் பின்பே.

---

# THE SECOND COMING OF CHRIST.

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.

(தொடர்ச்சி.)

நரமாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்போது உங்கள் குமாரரும் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம்சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள்மேலும், அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன். வானத்திலும் பூமியிலும் இரத்தம், அக்கினி, புகைஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்குமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் ரத்தமாகவும் மாறும். அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரக்ஷிக்கப்படுவான் என்று கிறிஸ்து பிறக்க 800–வருஷத்திற்குமுன் யோவேல் தீர்க்கதரிசியைக்கொண்டு தேவன் முன்னறிவித்திருக்கிறார்.

தேவனாகிய பிதா தமது குமாரனாகிய கிறிஸ்துவைக்குறித்து “ஸ்திரீயின் வித்தானவர் பசாசின் தலையை நசுக்குவார் என்றது, (ஆதி. 3: 15.) கிறிஸ்துவின் முதல் வருகையாகிய இரக்ஷண்ய வருகைக்கு ஆரம்பமான வாக்குத்தத்தமென்று அறிந்திருக்கிறோம். இந்தத் தீர்க்கதரிசன விஷயம் நிறைவேறுகிறதற்கு முன்னாகிய காலம் செல்லச் செல்ல அதாவது அந்த இரக்ஷண்ய வருகை கிட்டி வரவர அதைப்பற்றிய சங்கதி அதிகத் தெளிவாயும் திட்ப நுட்பமாயும் அறிவிக்கப்பட்டு வந்ததைப் பார்க்கிறோம். எப்படியென்றால் ஸ்திரீயின் வித்தென்று பொதுப்படச் சொல்லியது காலஞ்செல்ல ஆபிரகாமின் சந்ததியிலென்றும் ஈசாக்கு யாக்கோபு வம்சத்திலென்றும், அப்பால் இயாக்கோபின் பிள்ளைகளில் யூதாவின் கோத்திரத்தில் என்றும், ஆதி. 12: 3—18. அப். 3: 25, 26. கலா 3: 16. அந்தக்



கோத்திரத்துள்ளும் ஈசாயின் வேரில் என்றும் அந்த வேரில் தாவீது சாலொமோன் இராஜ குடும்பத்தில் தோன்றுவாரென்றும் சொல்லப்பட்டது. வருகை இன்னம் கிட்டவே 70, 69, 62–வாரங்களென்று கால நுட்பமும் (தானி. 9: 24, 26.) அப்பால் எப்பிராத்தா பெத்தலேமென்ற இடநுட்பமுங் குறித்துக் கூறப்பட்டது. மீகா. 5: 2. எசா 7: 14. இன்னஞ் சில காலஞ்சென்றபின் தேவநீதிக்குத் திருப்திசெய்து பாவிகளை இரக்ஷிக்கும்படி இன்னம் 62-வாரத்தில் மேசியா சங்கரிக்கப்படுவாரென்று கிறிஸ்துவின பிராயச்சித்தச்செயல்கள் சற்று விவரமாய் எடுத்துக் கூறப்பட்டது. தானி. 9: 24, 26.

காலம்நிறைவேறித் தீரவே கடைசியாக தாவீதின் குடும்பக் கன்னியாஸ்திரீயாகிய மரியாளிடத்தில் பரிசுத்தாவியால் உற்பவித்துப் பிறக்கிறார் என்று முன்னுரைக்கப்பட்டு அப்படியே பிறந்து இரக்ஷிப்பின் கிரியையை முடித்தார்.

இதுபோலவே கிறிஸ்து இராஜரீக வருகையும் பரிசுத்தாவி ஊற்றப்பட்ட சங்கதியில் ஆரம்பித்து வரவர வளர்ந்து அதிகத் தெளிவும் திட்பநுட்பமான அடையாளங்கள் சம்பவித்து அவரது மகத்வ பிரசன்னத்தோடு முடியும் என்று பல நியாயங்களைக்கொண்டு நிதானிக்கலாம். எப்படியெனில்,

கிறிஸ்துவுக்கு 800–வருடத்துக்குமுன் தேவன் எசாயாவைக்கொண்டு “உன் சந்ததியின்மேல் என் ஆவியை ஊற்றுவேன்; அப்போது ஒருவன் நான் கர்த்தருடையவனென்பான். ஒருவன் யாக்கோபின் பெயரைத் தரித்துக்கொள்வான்; ஒருவன் தான் கர்த்தருடையவனென்று கையெழுத்துப்போட்டு இஸ்ரவேலின் நாமத்தைத் தரித்துக்கொள்வான்.” எசா. 43: 3-என்றும் கி. மு. 518–ல் சகரியாவைக்கொண்டு “நான் தாவீதின் குடும்பத்தின்மேலும் எருசலேங் குடிகள்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்போது தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரேபேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி ஒருவன தன் தலைச்சன்பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங் கசந்து துக்கிப்பார்கள்” என்றும், சகரி. 12: 10 வெளிப்படுத்தினார்.

யோவேல் 2–ம் அதிகாரத்தை இதோடு ஒத்துப்பார்த்துக்கொள்ளவேண்டும். அங்கே சபை உத்தம மனஸ்தாபத்தோடு தேவனிடத்தில் திரும்பி அவர் தங்கள் நடுவிலிருக்கிறவரென்று உணர்ந்தறியத் துவக்கியபின்பு “நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்.” இந்த ஆவியின் திருச்செயலால் பல அற்புத அடையாளங்களுண்டாகும். அவைகள் கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாளுக்கு முன்னெச்சரிப்பென்கிறார். யோவேல் 2: 27—31.

இரக்ஷகர் தமது முதல் வருகையின் முக்கிய நோக்கமாகிய பாடுபடுதலுக்கு முந்தின தினத்தில் தமது சீஷருடனே பரிசுத்தஆவியின் செயலைப்பற்றி வாக்குத்தத்தமாய் “பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்புகிறவரும் பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது அவர் என்னைக்குறித்துச் சாக்ஷி கொடுப்பார்” என்றும் யோவான் 16: 8. அவர் வந்து பாவத்தைக்குறித்தும் நீதியைக்குறித்தும் நியாயத்தீர்ப்பைக்குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் என்றும் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு தண்ணீரினாலும் பரிசுத்தஆவியினாலும் ஞானஸ்நானம்பெற்ற விசுவாசிகள் தம்மு

டைய நாமத்தினாலே பசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள் என்றும் முன்னுரைத்தருளினார். மாற்கு 16: 17.

இப்படி கி. மு. 800-தொடங்கி முன்னுரைக்கப்பட்டு வந்ததும் இரக்ஷகருடைய இராஜரீக வருகைக்கு ஆயத்த அடையாளமுமாகிய பரிசுத்தஆவி ஊற்றப்படுதலைப்பற்றிய தீர்க்கதரிசனங்களை இதுவரை காட்டினோம்.

இனி யவைகளின் நிறைவேறுதலைப்பற்றிச் சிந்திப்போம்.

---

# இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

ஆயபேரன்பு மல்கு மாழியி னுதித்து மாந்தர்
மீயுயர் விண்ணோ ரக விளங்கு புண்ணிய வேதாந்த
ஆயிரங் கரங்களோச்சி யலர்பரஞ் சுடரைக் காண்பான்
சேயொளி பரப்பிக் கீழ்பாற் றினகர னுதயஞ் செய்தான். 1314

நிருமல மூர்த்தி யேவ நிரைய பாதலம் புகுத்தி
வருமமிக் குரத்த பேயை வன்சிறைப் படுத்தி மீண்டு
கருமபூ மியிலே தம்மான் கழனிழல் கருதி வந்த
தருமசக கரமே யென்னத் தயங்கினன் தபனன் மாதோ. 1315

ஜெகமெலாங் கெடுத்த பேயைச் சிதைத் தழற் சிறைக்குள்ளாக்கிச்
சகலமும் அடிப்படுத்த தன்னொரு குமரேசற்குப்
பகவனும் பரமதாதை பரிவுடன் தரித்த வெற்றி
மகிமையொண் மௌலி போலுந் திகழ்ந்தனன் வயங்குவெய்யோன். 1316

(இம்மூன்று கவிகளையும் முந்தின மாஸத்து நற்போதகத்தில் 1313 ம் கவிக்குப் பின்னாகச் சேர்த்து வாசித்துக்கொள்க.)

(இனிவருவன 1323 ன் தொடர்ச்சி.)

நம்பிரா னுயிர்த்தெழுந்த நலம்பெறு முகூர்த்தந் தன்னில்
அம்புவி யதிர வஞ்சிக் காவல ரயர்ந்து வீழ
உம்பரின் றிழிந்த தேவ தூதரோ ரிருவ ரொல்லை
இம்பரிற் சேம வைப்பை யெதிர்ந்தனர் பகைவ ரஞ்ச. 1324

இருள்புலர் காலை கண்ட வேந்திழை மாரோர் மூவர்
தெருளுறீஇ யெழுஞ்செம் மையன் சேமவைப் பதனை யண்மி
மருளறச் சமாதி வாயில் திறவுண்ட மரபை நோக்கி
வெருளுறீஇக் கலங்கி நின்றார் வெய்துளந் திகைத்து மாதோ. 1325

ஆயிடை யருகர் நின்று மவிரொளி மின்னி னார்ந்த
தூயுடை பரித்த தேவ தூதரோ ரிருவர் தோன்றி
நீயிரிச் சேம வைப்பில் நேடுவ தெவன் கொல் ஜீவ
நாயகன் றன்னை முன்னம் நவின்ற வாசகத்தை யோர்மின். 1326

கண்டுளா ரல்லர் ஜீவ னியையந் தெழுந்தருளினாரக்
காண்டகு நம்பி நும்முன் கலிலேய நாடு சேர்வர்



பூண்ட மெய்யன்ப ருக்குப் புகலுமிப் புதுமை யென்னாச்
சேண்டலத் தெழுந்து போனார் நிகழ்ந்தவை தெரியச் செப்பி. 1327

வேறு.

உன்ன தேசன் உயிர்த்தெழுந் தானெனச்
சொன்ன சொல்லமு தஞ்செவி தோய்தலும்
மன்னு நித்திய வாழ்வுகை வந்தெனப்
பொன்ன னார்க்குட் சிறந்தது புத்துயிர். 1328

வள்ளல் சொற்ற வசனமும் வைகறை
பள்ளி நின்றெழு பான்மையுந் தம்முளே
உள்ளி யுள்ளத் துவட்டெழு மோகையும்
தெள்ளி தச்சமுங் கொண்டு தியங்கினார். 1329

உரை யிறந்த வுவகைப் பெருங்கடல்
கரை புரண்டு கதித்த துக்காக்கினி
விரைவின் மாய்ந்திட மெல்லிய லாரொழுந்
துரைசெய் வாந்திருத் தொண்டர்க் கென் றோடினார். 1330

தூதர் சொற்ற சுமங்கல வார்த்தைகொண்
டேத மில்லவ ரேகுழி யெம்முயிர்
நாதன் கண்ணெதிர் தோன்றி நலங்கிளர்
மாத ரீர்நன்கு வாழ்கென வாழ்த்தினார். 1331

அருளின் வாழ்வை யறங்கிளர் ஆரணப்
பொருளை யன்பின் புணரியைப் புங்கவர்
தெருளுஞ் சின்மய தேசிக மூர்த்தத்தை
மருளொன் றின்றி மடந்தையர் நோக்கியே. 1332

உழுவ லன்பொ ளெங்கனிந் தொல்லெனக்
கழுதின் வன்றலை யைத்தெறுகாற் றுணை
தொழுது வீழ்ந்தனர் பன்முறை தோத்திரித்
தெழுது பாவையன் னாரினி தேத்தினார். 1333

நன்று யாவும் நலிவுறு சீடருக்
கின்றி யம்பி யெனைக்கலி லேயநாட்
டொன்ற வின்னுமின் உள்ளங் கலங்கன் மின்,
என்று ரைத்துக் கரந்தன னெம்பிரான். 1334

ஓகை மாநற வுண்டு களித்தவத்
தோகை மார்பன் னொருதிருத் தொண்டர் பால்
ஏகி யீச னெழுச்சியும் யாவையும்
சோக நீங்க வகுத்தனர் சொல்லினார். 1335

அணங்க னாருரை கேட்டுமெய் யாரணக்
குணங்கள் பூத்த குருத்துவர் ஆருயிர்
உணங்கி மீண்டிங் குயிர்த்தெழல் ஒல்வதோ
இணங்கு றாதென வெய்தினர் ஐயமே. 1336

மூற்ற றிந்த முழுமுதல் முன்னுறச்
சொற்ற வாய்மையு முள்ளிலர் தொக்குடன்

இற்றி துண்மை யின்னே தனி ஈமத்தின்
உற்ற நிந்திடு வாமென ஓடினர். 1337

ஒன்று மீன்பன் உலம்பொரு பேதுரு
என்ற சீடர் இருவரும் ஈமத்திற்
சென்ற கத்துறத் தேடினர் காண்கிலர்
மன்றல் யாக்கையைச் சிந்தை வருந்தியே 1338

மீருமி யேகினர் சீடர்மகதலேன்
ஒரும டந்தைநம் உன்னத ஜீவனைக்
கரும பூமியிற் கண்டருள் பெற்றுடன்
தரும சீலனைச் சார்ந்தனள் சாற்றினள். 1339

காயை நாடிய கன்றெனத் தற்பரன்
சேயை நாடித் தவிக்கின்ற சீடனுந்
தூயன் மூழ்கு துயர்க்கடல் நீத்துய
நாயகன் றிருச் சேவையை நல்கினர். 1340

எம்ம ஆருக்கன் றேகிய சீடரின்
மம்மர் நீங்க மதிவிளக் கேற்றியும்
அம்ம அங்கவரோடுண வாற்றியும்
செம்மல் சிந்தை தெருட்டினர் செவ்விதின். 1341

ஈண்டு காட்சி யெதிர்ந்தவ ரொய்தியாம்
மீண்டெழுந்தருள் வித்தகன் றன்னைநேர்
காண்டல் செய்துடன் உண்டு களித்தனம்
மாண்ட போதன ரீரொன்று வாழ்த்தினர். 1342

தக்க சான்றிது வென்னினுந் தம்முளே
புக்க ஐயம் பொதிந்து புறஞ்செலா
தொக்க வாங்கொ ருறையுளின் உள்ளுறத்
தொக் கிருந்தனர் பன்னொரு தூயரும். 1343

ஆன போழ்த்தத் தடியவர் நாப்பணே
ஞானலந் திகழ் மேனியிற் றோன்றிநம்
தீன ரக்ஷக தெய்வத மெய்ச்சமா
தான மல்கித் தழைக்க வென்றாரோ. 1344

அண்டர் நாயகன் றோன்றி யலரிதழ்
விண்ட வாய்மொழி கேட்டும் விழிக்கெதிர்
கண்டு மின்னுங் கலங்கின தன்றிமெய்த்
தொண்ட ருள்ளந் துறந்தில தையமே. 1345

ஐயமுந் திகிலுங் கலந் தம்புவி
உய்ய வந்திங் குயிர்த்தெழுந் தூந்த
தெய் விகந்திகழ் மேனியைத் தேர்கிலார்
வெய்ய ஆவி யிதென்று வெருண்டனர். 1346

சிந்தை தேருந் திருத்தகு தெய்விக
மைந்த னோர்ந்து மனங்கலங் காதிர்நீர்
எந்த ஆவியும் யானுறு மானவ
விந்தை யாக்கை படைத்தில மெய்ம்மையால். 1347



பாரு மின் பரிசித்தென் பதாதியை
ஒரு முன்னுனா யானன்றி உண்மைவே
றொரு மில்லர்மற் றையுற லீரெனுத்
தேரு மாறு தெருட்டினர் சிந்தனை. 1348

மேலும் மேலும் பலமுறை வித்தகக்
கோலங் காட்டிக் குரவர்க்குக் கோதறு
சில மல்கத் தெரித்தனர் செம்பொருள்
ஞால மீதொரு மண்டல நாடியே. 1349

ஆதி மெய்யடி யார்திறத் தன்றியும்
பாதி யாயிர வர்க்கொரு பக்கலிற்
பூத லத்தி லுயிர்த்தெழு புண்ணிய
நாதன் சேவை யளித்தனர் நன்குற. 1350

இத்திறங் கிறிஸ் தியேசுவின் ஈறிலா
மெய்த் தவத்திரு மேனி விளங்கலிற்
சித்த சஞ்சல நீங்கித் திகழ்ந்தனர்
சுத்த மெய்விசு வாசத்தில் தோமிலார். 1351

அஞ்சி நெஞ்ச மழுங்கி யயர்ந்துவீழ்ந்
துஞ்ச காவல ரோடி யுலப்பிலான்
எஞ்சு றாத வெழுச்சியும் யாவையும்
வஞ்சகக் குரவர்க்கு வகுத்தனர். 1352

பங்கமுற்ற பதிதர் பலர்குழீஇச்
சங்க முற்று நந் தாபதரோகரந்
தங்கம் வெள்ளி யகன்றன ரொன்னவவ்
வெங்க ணார்க்கு வெறுக்கையை வீசினர். 1353

களியர் பொய்ப்படு கட்டுரை யோபுவி
தெளியுந் தெய்விக மெய்ம்மை சிதைத்திடும்
அளிய புன்மதி யாதி தருக்கனர்
ஒளி புதைந்திடு மோவிர லொன்றிலே. 1354

மன்ன னஞ்சி வறிதுள மாழ்கினன்
ஒன்ன லார்நெஞ் சுரங்கிழி பட்டனர்
பன்ன லாந்தரமன்று வெம்பாழ்மதி
துன்னி யோரெவ ருநதனுக் குற்றனர். 1355

பத்தர் யாரும் பவித்திர சிந்தையின்
உத்தம விசுவாசத் துரத்தலில்
மத்தர் வாயடைப் பட்டு மறங்கிளர்
சித்த மாழ்கி யடங்கிய செவ்விவாய். 1356

வேறு.

உம்பர் நாயக னுயிர்த்தெழுந் தருளிய உண்மை
இம்பர் மெய்ப்படுத் தீரிரு பதுதினத் திறுதி
செம்பொ றிருவிழிந் தொழுகொலி வாசலங் குறுகி
நம்பு தொண்டர்க்கு வேதியர்க் கிவையிவை நவிலும். 1337

நண்புளீ ருல கெங்கணு நரசமூஹங்கட்
கெண்பெ றுஞ்சுவி சேஷத்தை யியம்புமின் இதயக்
கண் படைத்தவன் கதிநலம் பெறுகுவன் காணும்
பண்பி லாதவ னுக்கினைத் தீர்ப்பினுட் படுவான். 1358

கண்டு கேட்டமெய்ச் சான்றுநீர் கருதில் என்றந்தை
விண்ட வாறினி யருட்பலம் விணடலத் திழிந்து
மண்டலத் துமை மருவுமட் டெருச லேமருவித்
தொண்ட ரீர்மலங் காதவண் தரித்திருந் துன்னி. 1359

ஒன்றி நம்முட னிருப்பன்யான் உலகமுள் ளளவும்
என்று வாய்மையி னிலகுசெவ் வாய்மலாந் தியம்பி
நின் றெழிற் றிருக் கரங்களை வானுற நிமிர்த்தி
நன்று மங்கல விடையரு ளாசியும் நவின்றார். 1360

(இன்னும் வரும்.)

---

## சமாசாரத்திரட்டு.

ரத்தப் பலகாரம்.—டென்மார்க்கு தத்துவ சாஸ்திரி ஒருவர் தேகம் புஷ்டியாகும்படியாய் ரத்தத்தை தின்பண்டமாய்ச் செய்துவருகிறாராம்.

அச்சிடும் வித்துவான்.—அமெரிக்கா தேசத்திலே கர்நல் ஹேறா என்பவர் மின் சாரத்தால் "பொட்டகிறப்" மாதிரியை அநுசரித்து மணி ஒன்றுக்கு நூறு பிரதிகளை அச்சிடக்கூடும் என்கிறார்.

பிரான்சில் ஒருவர் 5-வருஷத்திற்குமுன் ஒரு கல்லிற்குள் ஒரு தேரையை வைத்து அதை மூடிவிட்டார். இப்போ திறக்கவே அது உயிருடன் இருந்தது.

விநோதப் பிறப்பு.—சென்ற 22௳ மங்கள வாரத்தில் கிருஷ்ணன் குளத்துத் தெருவில் வசிக்கும் ஒரு ஸ்திரீ அமங்களகரமான சிங்கமுகமும் நாலு காலும், ஒரு வாலும் உள்ள ஒரு சிங்கக்குட்டியைப் பெற்றனள். சிங்கம் பிறந்த உடன் கீழே தங்கியிராமல் எழுந்து உலாவிக் குலாவினதாம். உடனே அதை வதைத்து சுடுகாட்டில் கொண்டுபோய் புதைத்துவிட்டார்களாம். இக்காட்சியும் கலிகாலத்தின் அத்தாட்சியே. மாதா செய்த பாவமோ மற்றெவரிட்ட சாபமோ!

லண்டனில் ஒரு வருஷத்தில் இறப்போர் எண்பதினாயிரம். பிறப்போர் ஒரு லட்சத்து இருபத்தையாயிரம்.

ஜோர்ச்சியா என்னும் இடத்தில் சில நாளுக்குமுன் ஒரு காட்டு மரத்தை ஒருநாள் காலமே தறித்து (Angusta) என்னும் இடத்திலுள்ள தொழில்சாலையில் அன்று சாயங்காலத்துக்குள் கூழாக்கி ஆறு மணிக்குமுன் காகிதமாக்கி அடுத்தநாள் காலமே ஆறுமணிக்குமுன் புதின பத்திரிகையாய் அச்சடித்து வெளிப்படுத்தப்பட்டதாம்.



மதப்பிரவேசம்—சென்னபட்டணம் முனிசிபல் வைஸ்பிரசிடென்று இராமசாமி செட்டியார் அவர்களின் இரண்டாவது குமாரரும் சில காலத்துக்குமுன் வைத்திய விற்பன்னராம்பொருட்டு எடின்பர்க் என்னும் இடத்திற்குப் போனவருமான பி. பார்த்தசாரதி செட்டியார் சென்ற ஜூன்௴ 23௳ சாயங்காலம் கிறிஸ்து மதத்தில் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றாராம். ஆ! சந்தோஷம்.

வாந்திபேதிக்கு நல்ல மருந்து—சென்னை பெத்துநாயக்கன் பேட்டை உப்பாடைக் கடைக்கடுத்த ஆறுமுகம் வீதியில் 40-வது நம்பர் வீட்டில் தற்காலம் வந்திருக்கும் கோவிந்தராஜ பிள்ளையவர்கள் மேற்படி வியாதியை தலைகாட்டா தோட்ட வல்லசெந்தூரம் வைத்திருக்கின்றனர். மேற்படி வியாதியால் வருந்திய அனேக பிணியாளரை அம்மருந்தினால் குணப்படுத்தியிருக்கின்றனர். இஃது திண்ணம் திண்ணம். யாவரும் அறியவேண்டியது.

இங்கிலாந்தில் மிஸ் மேரிக்ளாராடாவெஸ் என்பவள் எம். ஏ. பரீட்சை பாசு செய்திருக்கிறாள். இவள்தான் முதல் பெண் எம். ஏ. 50-பெண் பீ. ஏ-க்களும் அங்கே இருக்கிறார்கள்.

எருக்கலையின் மகத்துவம்.—இதின் பட்டையை குஷ்டம், மேகப்படை, மேகவிரணங்கள், சீதபேதி, பேதி, நாள்பட்ட கீல்வாதம், வாத நோய்க்கும் உபயோகிக்கலாம். இதின் பாலை வாதக்கட்டிகளுக்கும், வாத நோய்களுக்கும். வலிகளுக்கும், சுளுக்குகளுக்கும், எலி விஷத்துக்கும் பூசலாம். இதின் இலையை எலி விஷம், வலி, கீலவீக்கம், வாதநோய்க்கும் உபயோகிக்கலாம். இதின் பூவை பாம்பு கடிக்கும் உபயோகிக்கலாம். மணற்பாங்கில் முளைத்திருக்கிற செடியின் வேரை சித்திரை வைகாசி மாதங்களில் சேகரித்து கழுவி துண்டுகளை நீக்கி வெயில் படாமல் காற்றில் உலர்த்தி வடிகிற பால் சுண்டிப்போனபிறகு ஜாக்கிரதையாய் எடுத்து உலர்த்தி சூரணித்து பெட்டியிலிட்டு, செவ்வையாய் அடைப்பிட்டுக் கொள்ளவேண்டியது. மேற்கண்டபடி வேரைப் பக்குவப்படுத்தாவிட்டால் பிரயோஜனமிராது. (மாத்திரை—Dosc) வாந்திக்கு 30-முதல் 60 கிரேனும், மற்றதுக்கு 3-முதல் 10 கிரேன வரையிலும் திரிகாலம் கொடுக்கலாம். பாம்பு கடிக்கு மலராத எருக்கலம்பூ, இரண்டு அல்லது மூன்றும், கமமார வெற்றிலை சிலதும் எருக்கலம்பூவை ஒடிக்கும்போது வடியும் பால் இரண்டு மூன்று துளியும் சேர்த்து கொடுத்தால் விஷம் முறியும்.

செப்தெம்பர்மீ நாள்-30. ஆவணிமீ 19உ முதல், புரட்டாசிமீ 17உ வரை

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| தி | 1 | க௯ | உங்கள் நடக்கையைச் சீர்திருத்துங்கள். எரே 35: 15 |
| செ | 2 | உ0 | ஒருவேளை...தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்புவார்கள். |
| பு | 3 | உக | கர்த்தரை நோக்கி எங்களுக்காக விண்ணப்பம்பண்ணவேண்டும். |
| வி | 4 | உஉ | நீ சாவதில்லை. 38: 24. (37: 3. |
| வெ | 5 | உ௩ | நீ என்னை நம்பினபடியால், 39: 18. |
| ச | 6 | உ௪ | நான் உன்னைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்வேன் 40: 4. |
| ஞா | 7 | உ௫ | கோதுமை...புதையல்கள் எங்களுக்கு நிலத்தின்கீழ் இருக்கிறது. |
| தி | 8 | உ௬ | நான் உங்களுக்கு ஒன்றையும் மறைக்காமல் அறிவிப்பேன் 42: 4. |
| செ | 9 | உ௭ | எகிப்தின் தேவர்களுடைய கோவில்களை அக்கினியால் சுட்டுப்போ |
| பு | 10 | உ௮ | அவர்கள்மேல் நன்மைக்கல்ல தீமைக்கே ஜாக்கிரதையாயிருப்பே |
| வி | 11 | உ௯ | கர்த்தர் என் நோவைச் சஞ்சலத்தால் வர்த்திக்கப்பண்ணினார். (ன். |
| வெ | 12 | ௩0 | நான் உன்னுடனே இருக்கிறேன். 46: 28. |
| ச | 13 | ௩க | ஆ! கர்த்தரின் பட்டயமே, எந்தமட்டும் அமராதிருப்பாய். 47: 6. |
| ஞா | 14 | க | கர்த்தரின் வேலையை அசதியாய்ச்செய்கிறவன் சபிக்கப்பட்டவன் |
| தி | 15 | உ | அப்படியே ஏதோம் பாழாகும். 49: 17. (48: 10 |
| செ | 16 | ௩ | எனக்கு முன்பாக நிற்கப்போகிற மேய்ப்பன் யார்? 50: 44. |
| பு | 17 | ௪ | தேசத்திலே கொடிபேற்றுங்கள். 51: 27 (பட்டார்கள். 52: 27. |
| வி | 18 | ௫ | யூதர்கள் தங்கள் தேசத்திலிருந்து சிறைகளாய்க் கொண்டுபோகப் |
| வெ | 19 | ௬ | கர்த்தாவே பாரும், நான் நெருக்கப்படுகிறேன். புலம் 1: 20. |
| ச | 20 | ௭ | அவர்கள் இருதயம் ஆண்டவரை நோக்கிக் கூப்பிடுகிறது 2: 18 |
| ஞா | 21 | ௮ | கர்த்தர் என் பங்கு என்று என் ஆத்துமா சொல்லும் 3: 24 (4: 3. |
| தி | 22 | ௯ | என் ஜனமாகிய குமாரத்தியின்...தண்டனை பெரிதாயிருக்கிறது. |
| செ | 23 | க0 | கர்த்தரே, எங்களுக்கு நேரிட்டதை நினைத்தருளும். 5: 1. |
| பு | 24 | கக | தேவனுடைய தரிசனங்களில் இருந்தது. எசேக். 1: 1. |
| வி | 25 | கஉ | ஆவி...என்னைக் காலூன்றி நிற்கும்படி செய்தது 2. 2. |
| வெ | 26 | க௩ | என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக. 3: 17. (4: 5. |
| ச | 27 | க௪ | நீ இஸ்ரவேல் வம்சத்தாரின் அக்கிரமத்தைச் சுமக்கவேண்டும் |
| ஞா | 28 | க௫ | புறஜாதிகள் நடுவிலே நான் அதை வைத்தேன் 5: 5. (6: 11. |
| தி | 29 | க௬ | இஸ்ரவேல் வம்சத்தாருடைய...நிமித்தம் ஐயோ என்று சொல் |
| செ | 30 | க௭ | உன் வழிகளுக்குத் தக்கதை உன்மேல் வரப்பண்ணுவேன். 7: 9. |

## விசேஷ நாட்கள்.

4. பௌர்ணமி.
7. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 13-ம் ஞாயிறு.
14. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 14 ம் ஞாயிறு.
19. அமாவாசை
21. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 15 ம் ஞாயிறு.
    பரி அப். மத்தேயுவின் திருநாள்.
28. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 16 ம் ஞாயிறு.
29. பரி. மிகாவேல் மற்றும் சகல தேவதூதர்களின் திருநாள்.

# நற்போதகம்.



## THE CANDIDATE FOR ORDINATION.

## குருப்பட்ட மாணாக்கன்.

௨௫. மத்தேயு சொல்லுகிற மூன்று வகுப்புத் தலைமுறைகளுக்கும் காலம் சொல்லவும்?

ஆபிரகாம் பிறந்ததுமுதல் இரண்டாம் வகுப்பு ஆரம்பிக்கிற சாலொமோன் காலம்வரையும் வழக்கமான காலக்கணிதப்படி (963) வருஷம்.

சாலொமோன் பிறந்ததுமுதல் யோயாக்கீனாகிய எகொனியா வரையும் ஏறக்குறைய (416) வருஷம்.

எகொனியாமுதல் கிறிஸ்துவரையும் ஏறக்குறைய (617) வருஷம்.

26. (மத். 1: 20). கர்த்தருடைய தூதன் "உன் மனைவி" என்று சொல்வதின் கருத்தென்ன?

யூதருக்குள் கலியாணத்துக்கு நியமிக்கப்பட்ட மாப்பிள்ளை, பெண், நியாயப்பிரமாணத்தின்படி புருஷனும் மனைவியும் என்று சொல்லப்பட்டு வந்தார்கள் (உபா 22: 23, 24). இந்தக் கருத்தின்படிதான் யோசேப்புக்கு மரியாள் மனைவி என்றும், மரியாளுக்கு யோசேப்பு புருஷனென்றும் சொல்லப்படுகிறார்கள்.

27. மேசியா என்ற வார்த்தைக்கு அர்த்தமென்ன? அந்த வார்த்தை யாராருக்கெல்லாம் வழங்கியிருக்கிறது?

மேசியாஎன்ற வார்த்தைக்கு அபிஷேகம்பெற்றவர் என்றர்த்தம். அது,

(1) ஆசாரியனைக் குறிக்கும்படி வழங்கியிருக்கிறது. (லேவி. 4: 3. 6: 22. எண். 3: 3).

(2) இராஜாவைக் குறிக்கும்படி அடிக்கடி வழங்கியிருக்கிறது. (1 சாமு 16: 6. 26: 11, 16, 23. 2 சாமு 1: 16. 19: 21. ஏசா. 45: 1).

(3) ஒருவேளை தீர்க்கதரிசியையும் குறிக்கலாம். (1 இரா 19: 16). ஆனால் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட "பிரபுவாகிய மேசியாவைக்" குறித்து தானியேல் தீர்க்கதரிசி விசேஷித்த கருத்தாய் வழங்கியபின் (9: 25), வேறொருவரையும் குறியாமல் யேசுகிறிஸ்துவையே குறிக்கும்.

**28.** சுவிசேஷத்தில் காட்டிய யேசுதான் யூதருக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியா என்று ரூபகாரப்படுத்து?

(1) பழய ஏற்பாட்டில் மேசியாவைக்குறித்துச் சொல்லிய தீர்க்கதரிசனங்களும் முன் குறிப்புகளுமெல்லாம் (உபா. 18: 15. சங். 22: ஏசா11 அதி. 53 அதி. மீகா 5: 1), யேசுவிலேயே நிறைவேறியிருக்கிறது. அந்தத் தீர்க்கதரிசனங்களும் முன்குறிப்புகளும் தம்மைக்குறித்துச் சொல்லப்பட்டதென்றும் தம்மிலே நிறைவேறிற்றென்றும் யேசு தாமே சாட்சியிட்டிருக்கிறார் (லூக். 4: 21. 24: 26, 27, 44; 46. யோவான் 3: 14. 5: 39, 46. 6: 31, 32).

(2) யேசு தம்மை மேசியா என்று ஒப்புக்கொண்டார் (யோவான் 4: 26. 10: 24, 25. மத். 26: 63, 64. மாற்கு 14: 61, 62). "பிரதானஆசாரியன் அவரை நோக்கி: நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா என்று கேட்டான். அதற்கு யேசு: நான் அவர்தான் என்றார்."

(3) யேசு தாம் செய்த அற்புதங்களையும் உரைத்த தீர்க்கதரிசனங்களையும் தாம் மேசியா என்பதற்கு அத்தாட்சியாகச் செய்தார் (யோ 5: 36. 10: 24, 25). விசேஷமாய் அவர் உயிர்த்தெழுந்த அற்புதம் இதற்குப் பகிரங்கமான சாட்சியும் முத்திரையுமாயிருக்கிறது. எப்படியென்றால்;

யேசு தம்முடைய உயிர்த்தெழுதலை அடிக்கடி முன்னறிவித்ததுமல்லாமல், "தாம் மேசியா என்பதற்கு அடையாளமும் அத்தாட்சியுமாக அதை முன்னமே போதித்துமிருந்தார். (மத். 12: 39. 16: 4. யோ. 2: 19). அப்படியே "ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று தம்மைச் சாதித்ததினிமித்தம் "தேவதூஷணம் சொன்னான்" என்று அவரைக் கொலைசெய்தார்கள். ஆனால் அவர் போதித்ததும் சாதித்ததும் சத்தியமானவைகளென்று தேவன் அவரை உயிரோடெழுப்பினதினாலே பகிரங்கமாய்ச் சாட்சியிட்டார். மற்றப்படி நமது கர்த்தர் சொன்னது உள்ளபடி தேவதூஷணமாயிருந்தால் அவரை உயிரோடெழுப்பினது பொய்யை ஸ்தாபித்து உறுதிப்படுத்துகிறதாயிருக்குமே (ரோமர் 1: 5).

(4) யோவான்ஸ்நானன் கொடுத்த சாட்சி (யோ 1: 29—34). இதைக் கர்த்தர் ஒப்புக்கொண்டார் (யோ. 5: 33).

(5) பரிசுத்தாவியின் வரம்பெற்ற அப்போஸ்தலன்மார் சாட்சி பரி. பேதுரு (அப். 2: 36), பரி. பவுல் (அப். 17: 3. 18: 5).



(6) பரிசுத்தாவியானவரால் யேசு அபிஷேகம்பெற்றதும், பரிசுத்தாவியானவர் அப்போஸ்தலன்மாருக்குக் கொடுக்கப்பட்டதும் இதற்கு அத்தாட்சியாம். (மத். 3: 16. யோ. 1: 33. அப். 2: 33—35).

(7) பிதாவானவர் கொடுத்த சாட்சி (லூக். 9: 35, 36).

**29.** யூதருக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியா வந்தாயிற்றென்று ஒரு யூதனுக்கு எப்படிக் காட்டுவாய்?

(1) யாக்கோபு சொன்ன தீர்க்கதரிசனத்தின்படி, யூதருடைய இராஜ்யபாரம் ஒழிந்துபோகுமுன் மேசியா வரவேண்டும் (ஆதி. 49: 10). இப்பொழுது யூதருடைய இராஜாங்கம் அழிந்து அவர்கள் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(2) ஆகாய், மல்கி இந்தத் தீர்க்கதரிசிகள் உரைத்தபடி, இரண்டாம் தேவாலயத்துக்கு மேசியா வந்திருக்கவேண்டும் (ஆகாய் 2: 6—9. மல்கி. 3: 1). இப்பொழுது இரண்டாம் தேவாலயம் அஸ்திபாரம்வரையும் அழிக்கப்பட்டுப் போயிற்று.

(3) தானியேல் தீர்க்கதரிசனத்தின்படி, "எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல்" (70) வாரத்துக்குள்ளாக மேசியா சங்கரிக்கப்படவேண்டும் (9: 24—27). அந்தப்படி பார்சு இராஜாவாகிய அர்த்தசாக்சேலங்கிமனு கட்டளை பிறப்பித்து 70 வாரம் அல்லது (490) வருஷங்கள் நிறைவேறிப்போயிற்று.

(4) ஏசாயா முதலான தீர்க்கதரிசிகள் உரைத்தபடி, யூதாக்கோத்திரத்திலும் தாவீதின் வம்சத்திலும் மேசியா பிறக்கவேண்டும். இப்பொழுது கோத்திர வழியும் வம்ச வரிசையும் கண்டுபிடிக்கக் கூடாதவிதமாய் யூதர்கள் தேசாதேசம் சிதறப்பட்டுப்போயிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் வம்சவரிசை குலையாமலிருந்த காலத்திலேயே மேசியா வந்திருக்கவேண்டும்.

**30.** கிறிஸ்துநாதர் பிறந்த தெய்தியைக் கணிக்கிறதெப்படி?

ரோமாபுரி கட்டப்பட்ட (750) ஆல் வந்த பஸ்காப்பண்டிகைக்குச் சற்றுமுன்தான் மகா ஏரோது மரித்தான். அவன் மரித்ததற்குச் சில மாசங்களுக்குமுன், அதாவது ஷை (749) ஆண் கடைசியில் அல்லது 750)ன் துவக்கத்தில் நமது கர்த்தர் பிறந்திருக்கவேண்டும். இந்தக் காலம் கி. மு. 5 அல்லது 4 க்குச் சமம். ஆகையால் நம்முடைய வழக்கமான காலாப்தம் ஷை (754)ம் ஆண்டுக்குச் சரியாய் வருவதால் தவறுதலாக (4) ஆண்டை அதிகமாய்க் கூட்டி கணக்கிட்டிருக்கிறது. டிசம்பர், ஜனுவரி, பெபுருவரி இந்த மாசங்கள் ஒன்றில், விசேஷமாய் பெபுருவரி மாசத்தில் நமது கர்த்தர் பிறந்திருக்கவேண்டுமென்று ஒரு சாஸ்திரியார் (Wieseler) கணிக்கிறார். கர்த்தர் பெபுருவரிமீ ல் பிறந்தாரென்றால், அவர் பிறந்ததற்கும் ஏரோது மரித்ததற்கும் இடையில் இரண்டு மாசந்தானிருக்கிறது, நமது கர்த்தர் பிறந்ததுமுதல் ஏரோது மரித்ததுவரையும் சுவிசே

ஷத்திற் சொல்லிய சங்கதிகள் நடக்கிறதற்கு இரண்டு மாசம் போதாது. ஆகையால் கி. மு. 4 ம் ஹூன் டிசம்பர் மாசம் அல்லது கி. மு. 5 ம் ஹூன் ஜனுவரி மாசம் அதிக நிதானமான தேதியாய்க் காணப்படுகிறது. ஒரு சந்திர கிரகணமுண்டானதற்குச் சற்றுப்பின் ஏரோது மரித்தான். இந்தக் கிரகணம், ஷை (750) ஹூ மார்ச்சுஸ்ரீ 12 ம் 13 ம் தேதிகளுக்கு ஊடேவந்த இராத்திரியில் உண்டானது. அந்த வருஷத்துக்கு அடுத்த இரண்டு வருஷங்களில் பலஸ்தீனுவில் சந்திர கிரகணமுண்டாயிருப்பதில்லை.

31. யோவான்ஸ்நானனுடைய வம்சமென்ன?

அவன் தகப்பன் வழியிலும் தாய்வழியிலும் ஆசாரிய வம்சத்தான். ஆசாரிய வம்சம் யூதருக்குள் மிகவும் கண்யமாய் மதிக்கப்பட்டது. யோசேப்புஸ் தன்னைக்குறித்து, "என் குடும்பம் கௌரவம் அற்றதல்லவென்றால் நான் ஆசாரிய வம்சத்தான்" என்கிறார். ஆசாரிய முறை மாற்றப்படுவதை மேலான அதிகாரத்தோடு பிரச்சித்தப்படுத்தும்படியாக யோவான்ஸ்நானன் இருவகையிலும் ஆசாரிய வம்சத்தைச் சேர்ந்தவனாயிருந்தான்.

32. யோவான்ஸ்நானன் பிறந்த காலத்தைக் கணிக்க என்ன வகையுண்டு.

வாரந்தோறும் தேவாலயத்தில் வேலைசெய்யும்படி, ஆசாரியரை தாவீது இராஜா (24) வகுப்பாக வகுத்திருந்தான். (1 நாளா. 24: 3—19). அதில் அபியா, 8 ம் வகுப்பு. மேற்படி வகுப்பார் வேலைசெய்த முறையை வைத்துக்கொண்டு யோவான் பிறந்த தேதியைக் கணிக்கப் பார்க்கிறார்கள். கி. பி. 70 ஹூ ஆகஸ்துஸ்ரீ 4உ ல் தேவாலயம் சுட்டெரிக்கப்பட்டதாயும், இந்தத் தேதியில்தான் முதல் வகுப்பார் வேலை ஆரம்பித்ததாயும் தல்மூத்தில் சொல்லியிருக்கிறது. இது சரியென்றால், யோவான் பிறப்பைப்பற்றி தூதன் சகரியாவுக்கு அறிவித்தது மேய் மாசம் மத்தியிலிருக்கவேண்டும். ஆனால் இவ்வகைக் கணக்கை அதிகமாய் ஊன்றிப் பேசக்கூடாது.

சகரியா ஆசாரியன் என்றும், அபியா என்னும் ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவன் என்றும் எழுதியிருப்பதால், அவன் பிரதானஆசாரியன் அல்ல என்று தெரியும். திஸ்ரிஸ்ரீ 10உயாகிய பாவநிவர்த்தியின் பெருநாளில் அவன் ஊழியஞ்செய்கையில் தேவதூதன் அவனுக்குக் காணப்பட்டானென்று சொல்லப்படும். இந்தத் தேதியில்தான் பரி. யோவான்ஸ்நானன் பிறந்தான் என்று பாரம்பரை சொல்லுகிறது.

33. (லூக்கா 1: 9)ல் தேவாலயம் என்பது எதைக் குறிக்கும்?

தேவாலயத்தைக் குறிக்கும்படி மூல பாஷையில் இரண்டு வார்த்தைகள் வழங்கியிருக்கிறது. அவற்றில் ஒன்று: மகா பரிசுத்தஸ்தலம், பரிசுத்த ஸ்தலம், பிரகாரங்கள், ஆலயத்தைச் சூழ்ந்த கட்டடங்கள், சுற்றுமதில்



கள் முதலான சகல கோப்பியங்களையும் சேர்த்து மொத்தமாய்க் குறிக்கும். இன்னொரு வார்த்தையோ, இந்த வாக்கியத்தில் வழங்கியபடி (இங்கிலிஷில் Sanctuary என்ற வார்த்தையால் குறிக்கப்பட்ட) மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையுமட்டும் குறிக்கும். இது வனாந்தரத்தில் செய்யப்பட்ட மாதிரியாம். ஆசாரியர் தவிர வேறொருவரும் இதில் பிரவேசிக்கக் கூடாது. மகா பரிசுத்தஸ்தலத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் பிரித்த திரைக்குமுன்பாக தூபபீடமிருந்தது (யாத்தி. 30: 1—6. 40: 5: 26). இதில் காலையில் விளக்குகளை விளக்கும்போதும், மாலையில் தீபமேற்றும்போதும் தூபங்காட்டப்படும் (யாத்தி. 30: 7, 8).

பரிசுத்தஸ்தலத்தில் திரைக்கு நெருங்கியிருந்த ஷை தூபபீடமல்லாமலும், காபிரியேல் தூதன் நின்ற வலது (வட) பக்கத்தில் தேவசமுகத்தப்பம் வைக்கிற மேசையும், இடது பக்கத்தில் குத்துவிளக்குமிருந்தது. பழய ஏற்பாட்டின் காலத்திலும் அதற்குப் பின்னான காலங்களிலும் வலது பக்கம் நல்ல அதிஷ்டத்துக்குக் குறிப்பாக யூதருக்குள் வழங்கி வந்தது. பரிசுத்தஸ்தலத்துக்கு வெளியே ஆசாரியருடைய பிரகாரம் என்னப்பட்ட உள் பிரகாரத்தில் தொட்டியும், அதற்கப்பால் தகனபலிபீடமுமிருந்தது.

34. (லூக். 1: 19) காபிரியேல் என்னும் தேவதூதனைப்பற்றி என்ன தெரியும்?

காபிரியேல் என்ற வார்த்தைக்கு "தேவனுடைய மனுஷன்" என்றர்த்தம். தானியேலுக்கும் (தானி. 8: 16. 9: 21), கன்னிமரியம்மாளுக்கும் (லூக் 1: 26). காணப்பட்டவன் இவன்தான். தேவகுமாரனுடைய மனுஷாவதாரத்தைக்குறித்து இவன் கொண்டுவந்த செய்தியின் பொருளைக் காபிரியேல் என்ற பேர் காட்டுகிறது. வேதத்தில் இரண்டு தூதர்களுடைய பேர்மட்டும் வருகிறது. அதில் இந்தக் காபிரியேல், தேவனுடைய ஆலோசனைகளைத் தெரியப்படுத்துகிறவன். மிகாவேல், தேவனுடைய தீர்மானங்களை நிறைவேற்றுகிறவன்.

35. (லூக். 1: 18), "நான் கிழவன்" என்பதில் கவனிக்கத்தக்கதென்ன?

லேவியருடைய ஊழியம் (50) ம் வயதில் நின்றுபோம் (எண் 8: 25, 26). ஆனால் இந்தச் சட்டம் ஆசாரியருக்கில்லை. இவர்கள் (50) வயசுக்கு மேலாகவும் ஊழியஞ்செய்து வந்தார்கள்.

36. (லூக். 1: 25) எலிசபெத் ஐந்துமாதம் (26, 36) வெளிப்படாதிருந்த முகாந்தரமென்ன?

அவள் வயதுசென்றவளாயிருந்ததினாலே வெளிப்படாதிருந்தாளென்று ஓரிஜன் (Origen) அம்புரோஸ் (Ambrose) முதலான சிலரும், பக்தியை முயற்சிக்க ஆவலுற்றவளாய் வெளிப்படாதிருந்தாள் என்று மற்றும்

பேரும் சொல்லுகிறார்கள். பிந்தின அபிப்பிராயந்தான் அதிக நிதானமானதாய்க் காணப்படுகிறது.

(1) 24, 29,56 வாக்கியங்களைப் பார்த்தாலும்;

(2) கன்னிமரியம்மாள் செய்ததைப் பார்த்தாலும் (39 வா) தெரிய வரும்.

**37**. சகரியா கேட்டபடி அடையாளம் கொடுக்கப்பட்டதா?

கொடுக்கப்பட்டது. சகரியா அடையாளம் கேட்டது அவிசுவாசத்துக்குக் குறிப்பாயிருந்ததினாலே அவனுக்குக் கொடுக்கப்பட்ட அடையாளமே அவனுக்குத் தண்டனையாகவுமிருந்தது (20 வா).

**38**. "நான் எதினால் அறிவேன்'' (18 வா) என்று கேட்ட சகரியா அவிசுவாசக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டதும், "இது எப்படியாகும்'' (34 வா) என்று கேட்ட கன்னிமரியாளைக்குறித்து "விசுவாசித்தவளே பாக்கியவதி'' (45 வா) என்று சொல்லப்பட்டிருப்பதும் என்ன?

தூதன் சொன்ன வாக்குக்கு உறுதியாக சகரியா ஒரு அடையாளம் கேட்டான். ஆனால் கன்னிமரியாள் கேட்ட கேள்வியில் அவிசுவாசம் அல்லது சந்தேகங்கூட இல்லை. அது நீங்கற்ற ஆச்சரியத்தைக் காட்டுகிறது (38 வா).

**39**. நமது கர்த்தர் யூதருடைய சடங்குப்பிரமாணத்தைக் கைக்கொண்டார் என்பதற்குத் திருஷ்டாந்தங்களைச் சொல்லு?

(1) விருத்தசேதனம் அடைந்தார்.

(2) யூதருடைய பண்டிகைகளை ஆசரித்தார்.

(3) (30) வயதுவரை தமது ஊழியத்தில் பிரவேசிக்கவில்லை.

(4) தேவாலயத்துக்கு வரிசெலுத்தினார்.

(5) தாம் குணமாக்கின குஷ்டரோகிகளை ஆசாரியனிடத்தில் அனுப்பினார்.

(6) கதிர்களைக் கொய்து சீஷர் சாப்பிடச் சம்மதித்தார்.

**40**. சனகிரீம் சங்கத்தைப்பற்றி என்ன தெரியும்?

சனகிரீம் சங்கம் 71 அல்லது 72 பேர் கூடிய சங்கமாயிருந்தது. இவர்களுக்குள் மூன்று வகுப்பாரிருந்தார்கள்.

(1) பிரதானஆசாரியர்: 24 வகுப்பாக ஆசாரியர் வகுக்கப்பட்டிருந்தார்களே. ஒவ்வொரு வகுப்பின் தலைவனுக்கு பிரதானஆசாரியன் என்று பேர். இந்தவகையில் (24) பேர் வந்துகொண்டிருந்தார்கள்.

(2) வேதபாரகர் அல்லது நியாயசாஸ்திரிகள்: இவர்கள் யூதருடைய நியாயப்பிரமாணத்தில் தேறின சாஸ்திரிகளுக்குள் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்.

(3) மூப்பர்: இவர்கள் வயசாளிகளும் ஜனங்களால் கனம்பெற்றவர்களுமாயிருந்தவர்கள்.



மோசேக்கு உதவியாக (70) மூப்பர் நியமிக்கப்பட்டதை மாதிரியாக வைத்து சிறையிருப்புக்குப்பின் இந்த நிலையான சங்கம் ஏற்படுத்தப்பட்டதாகத் தோன்றும். யோவான் இற்கானு பரிசேயரைவிட்டுப் பிரிந்தபின் இந்தச் சங்கத்தை ஒழுங்குப்படுத்தினதாக யோசேப்புஸ் என்னும் யூதசரித்திராசிரியன் முதல் முதல் இந்தச் சங்கத்தைப்பற்றிச் சொல்லுகிறான்.

**41**. (மத். 2: 22) அர்கெலாயுக்கு யோசேப்பு பயந்த முகாந்தரமென்ன?

அர்கெலாயு தன் தகப்பனைப்போல் குரூரனாயிருந்ததினாலேதான். இவன் செய்துவந்த கொடுமையினால் இவன் ஆண்ட (10) ம் வருஷ காலில் தேசத்திலுள்ள வீயென் (Vienne in Gaul) பட்டணத்துக்குச் சிறையாக அனுப்பப்பட்டான்.

**42**. மகா ஏரோதின் இராஜ்யம் அவன் மக்களுக்குப் பங்கிடப்பட்ட வகையென்ன?

மகா ஏரோது மரித்தபின், அவன் எழுதிவைத்திருந்த உயில்ப்படி அவனுடைய மூன்று குமாரருக்கும் அகுஸ்து ராயன் பங்கிட்டுக்கொடுத்தான்.

அர்கெலாயுக்கு,-யூதேயா, இதுமெயா, சமாரியா நாடுகள். இவனுக்கு எத்னார்க் (Ethnarch) என்ற பட்டஞ்சூட்டினான்.

அந்திப்பாவுக்கு,-கலிலேயா, பெரேயா நாடுகள். இவனுக்கு கால் பங்கு தேசாதிபதி என்ற (Tetrarch) பட்டஞ்சூட்டினான்.

பிலிப்புக்கு,-இத்துரேயா உள்பட திராக்கோனித்திஸ், பத்தானியா, ஆரனித்திஸ் நாடுகள். இவனுக்கும் கால் பங்கு தேசாதிபதி என்ற பட்டந்தான்.

**43**. (மத். 3: 1) "அந்நாட்களில் என்பது எந்த நாட்களில்?

நமது கர்த்தர் நாசரேத்தூரில் வாசம்பண்ணிவந்த நாட்களில் என்றர்த்தம்.

**44**. (மத். 3: 2) "பரலோக இராஜ்யம்'' என்பதின் கருத்தென்ன?

மேசியாவுக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட இராஜ்யமாம். (சங்கீ. 2: 6. 110: 2), விசேஷமாய் (தானி. 2: 44. 7: 14. மாற்கு 15: 43. லூக் 23: 15. 17: 20). இந்த வாக்கியங்களில் அடங்கியிருக்கிற இராஜ்யமானது, தமது ஆவிக்குரிய இராஜ்யமாகிய திருச்சபையைக் குறிக்கிறதாக நமது கர்த்தர் தாமே அடிக்கடி சொல்லுகிறார்.

**45**. (மத். 2: 4) வெட்டுக்கிளியைக்குறித்து என்ன தெரியும்?

(லேவி 11: 22)ல் வெட்டுக்கிளியைப் புசிக்கலாம் என்று சொல்லியிருக்கிறது. அரபருக்குள் ஏழைச்சனங்கள் இந்நாள்வரையும் அதைப் புசித்து வருகிறார்கள்.

**46.** யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைக்குறித்து என்ன தெரியும்?

(1) அது தேவனுடைய நேரான கட்டளையினாலே ஏற்படுத்தப்பட்டது (யோவான் 1: 33).

(2) அதின் வெளியரங்கமான முறையைக் கவனித்தால் தீர்க்கதரிசன உத்தியோகம் பெறாதவன் அதை நிறைவேற்றக்கூடாதென்று காணப்பட்டது (யோவான் 1: 25).

**47.** (மத். 3: 11) பரிசுத்தாவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம்கொடுப்பார் என்பதின் கருத்தென்ன?

(1) பெந்தகொஸ்தே நாளில் பரிசுத்தாவியானவர் அற்புதமாய் ஊற்றப்பட்டதை இந்த வார்த்தைகள் தீர்க்கதரிசனமாய் முன் குறிக்கிறது. இதுதான் முதற் கருத்து. இப்படித்தானென்று நமது கர்த்தருடைய வார்த்தைகளினாலேயே தெரியும் (அப். 1: 4, 5). இத்தோடு (அப். 19: 2—6) ஒத்துப்பார்க்கவும்.

(2) யோவானுடைய ஞானஸ்நானத்துக்கும், பொதுவாக கிறிஸ்தவர்களுடைய ஞானஸ்நானத்துக்குமுள்ள பேதாபேதத்தை இரண்டாவது அர்த்தமாக குறிக்கிறது. எப்படியென்றால் யோவான் கொடுத்த ஞானஸ்நானம், மனந்திரும்புதலுக்கு அழைக்கிறதாயிருந்ததேதவிர, ஆவிக்குரிய கிருபையைப் பெறுவதற்கு எத்தனமாயிருந்ததில்லை. நம்முடைய ஞானஸ்நானமோ: வேதசித். பிர. 25, 27, வாசி.

பரிசுத்தாவியினாலே என்பது கிரேக் பாஷையில் பரிசுத்தாவிக்குள்ளே என்றிருக்கிறது (மாற்கு. 1: 8). "உள்ளே" என்பதில், பரிசுத்தாவியானவர் ஜீவ நதியாகக் காட்டப்படுகிறார். இதில் அவருடைய பர்சனைப் பார்க்கிலும், ஜீவனைக் கொடுக்கும் அவருடைய கிரியை அதிகமாய்க் காட்டப்படுகிறது. மேலும் உள்ளே என்ற வார்த்தை, ஞானஸ்நானம்பெறுகிற விசுவாசிகள் ஆவிக்குரிய கிருபையில் முழுவதுமாக அமிழ்ந்திருப்பதைக் காட்டுகிறதாயுமிருக்கிறது.

**48.** (யோவான் 3: 5). ஞானஸ்நானத்தைக் குறிக்குமென்று எப்படித் தெரியும்?

"ஜலத்தினால்" என்ற வார்த்தையில், ஆல் என்பது (மத். 3: 11) லிருப்பதுபோல, உள்ளே என்றிருக்கிறது. அப்படியே பிறக்கிறது என்ற உபமானச் சொல்லில், எழும்புகிறது அதாவது தண்ணீருக்குள்ளே முங்கி எழும்புகிறது என்ற கருத்து அடங்கியிருக்கிறது. இது ஆதிச்சபையில் தண்ணீருக்குள்ளே முக்கி ஞானஸ்நானம்கொடுக்கிறதைக் காட்டுகிறது.



# பாபிலோன் சிறையிருப்பு.

(தொடர்ச்சி.)

நேபுகாத்நேச்சார் தன் யுத்தங்களையெல்லாம் முடித்து, இளைப்பாறி தன் வீட்டில் சமாதானமாயிருக்கையில் பாபிலோன் கட்டடத்தை முடிக்கும்படி ஏற்பட்டான். இவனுடைய 19-ம் வருஷத்தில் எகிப்தின் யுத்தம் முடிந்தபின்பு பாபிலோனுக்கு வந்திருக்கையில் நேபுகாத்நேச்சார் கண்ட ஆச்சரியமான பெரிய விருக்ஷத்தின் சொப்பனத்தையும், அது வெட்டப்பட்டுப்போனதையும் பற்றி தானியேல் தீர்க்கதரிசனம் 4-ம் அதிகாரம் பார்க்க.

பாபிலோன் பட்டணத்தை முதலாவது சிம்ராமிஸ் என்பவளோ, பேலோ அதைக் கட்ட அஸ்திபாரம்போட்டதாக பலர் சொன்னாலும், நேபுகாத்நேச்சாரோ அதை உலகத்தின் அதிசயங்களில் ஒன்றாக சிறப்பாகக் கட்டி முடித்தார். அதிகமாய்ச் சிறப்பித்தார். (1) பட்டணத்தின் மதில் (2) பேலு ஆலயம்; (3) அவனுடைய அரண்மனை; (4) அதில் அவனுடைய தொங்கு தோட்டம். (5) ஆற்றின் கரைகள்; (6) சித்திர வேலையான ஏரி. (7) சித்திர வேலையான வாய்க்கால். பிந்தின இரண்டும் நதியின் தண்ணீரை வற்றும்படிக்குச் செய்யவே, இவனுக்கு முன்னாவது பின்னாவது ஒரு இராஜனும் இப்படிச்செய்யவேயில்லை.

நேபுகாத்நேச்சார் கட்டின கட்டடங்கள்.

(1) மதில்கள். பாபிலோன் பட்டணம் ஐப்பிராத்து நதியின் இருபுறங்களிலும் கட்டப்பட்டது. அதின் கோட்டை மதில்கள் 87-அடி அகலமும் 350-அடி உயரமும் 6-காத சுற்றளவுமுள்ளது. அந்தப் பட்டணம் சதுரங்கமாயிருந்தபடியால் ஒவ்வொரு பக்கத்து மதில் 1½-காத வழி நீளமாம். இந்த மதில்கள் செங்கல்லாலும் சுண்ணச் சாந்தாலும், பிசினாலும் கட்டப்பட்டன. மதில் கட்டும்படி எடுத்த பள்ளம் ஒழுங்காயும் ஆழமாயும் வெட்டப்பட்டு, மண் சரியாதபடி சுவரால் கட்டப்பட்டு, அகழாயிற்று. மதில்களில் ஒவ்வொரு பக்கத்துக்கு 25-வாசலாக 4-பக்கத்துக்கும் 100-வாசல்கள் வெங்கலத்தினால் செய்யப்பட்டன. ஒவ்வொரு பக்கத்துக்கும் 25-வாசல்களிருந்தபடியால் அவைகளுக்கு நேராகக் கிழமேலாக 25-தெருக்களும் தென்வடலாக 25-தெருக்களும் ஒன்றுக்கொன்று சரியான அளவாகக் கட்டப்பட்டன. கோரேஸ் பாபிலோனை ஜெயிப்பானென்று தேவன் ஏசாயாத் தீர்க்கதரிசியைக்கொண்டு சொன்னபோது, இப்படிப்பட்ட மதில்களைப் பற்றியே ஏசா. 45: 2, 3-ல் சொல்லியிருக்கிறது. ஐப்பிராத் நதி அந்தப் பட்டணத்துக்குள்ளாக வடக்கேயிருந்து தெற்கு முகமாயுருவப்போயிற்று. மத்தியிலே ஆற்றைக் கடக்கும்படியாக மிகுந்த சிறப்பாகவும், ஒரு பர்லாங் நீளமும் 30-அடி அகலமுமாக ஒரு பாலம் பெரிதாய்க் கட்டப்பட்டது.

(2) அந்தப் பாலத்தின் இருகரையிலும் அரண்மனைகளிருந்தன. கீழ் பக்கத்திலுள்ளது பழைய அரண்மனை. மேல் பக்கத்திலுள்ள அரண்மனை நேபுகாத்நேச்சார் கட்டினது. கீழ் அரண்மனை 3-நாழிகை வழிச் சுற்றளவுள்ளது. ஒரு அரண்மனையிலிருந்து மற்ற அரண்மனைக்குப் போகவும், வரவுமாக நதிக்குக் கீழே சுரங்கமிருந்தது. இந்தப் பெரிய பட்டணத்தில்

ஜனங்களைக் குடியேற்றும்படி யூதேயா முதலான ஜெயிக்கப்பட்ட பல தேசங்களிலிருந்து அநேகம் சிறைகளை கொண்டுவந்தான். நேபுகாத்நேச்சார் கட்டின அரண்மனை முந்தினதிலும் 4-மடங்கு அதிகம். 8-மைல் சுற்றளவுமுள்ளது. அது ஒன்றுக்குப்பின் ஒன்றாகக் கட்டப்பட்ட 3-மதிலால் சூழப்பட்டது. இதிலிருக்கிற ஆச்சரியம் தொங்கு தோட்டமே. இது மெத்லத வீடுகள்மேல் அடுக்கடுக்காய் மதிலின் உயரத்துக்குச் சரியாய்க் கட்டப்பட்டது. நேபுகாத்நேச்சாருடைய மனைவி (Amytis) அமித்தாஸ் என்பவள் மேதியா இராஜாவின் மகளானதால், அவள் தன் ஜெனன தேசத்திலுள்ள விருக்ஷங்கள்மேல் ஆசைப்பட்டவளாயிருந்ததையிட்டே நேபுகாத்நேச்சார் அவளுக்குச் சந்தோஷமுண்டாக இப்படிக் கட்டினான்.

(3) நேபுகாத்நேச்சார் கட்டின பெரிய வேலைகளில், பேலு ஆலயமும் ஒன்றே. இது பூர்வீகமாயுள்ளது. இந்தக் கோயிலுக்கு மத்தியில் பிரமாண்டமான ஒரு கோபுரங் கட்டினான். அந்தக் கோபுரத்தின் அஸ்திபாரம் சதுரமாய் ஒவ்வொரு பக்கம் 660-அடி நீளம். எகிப்திலுள்ள எந்தக் கோபுரத்திலும் பெரிது. பாஷை தாறுமாறாய்ப்போனதில் கட்டப்படத் தொடங்கியிருந்த கோபுரமென்று அநேகர் நினைக்கிறார்கள். ஆதி. 11: 3-ல் குறைவான வேலையை நேபுகாத்நேச்சசார் கட்டி முடித்தான். அதின்மேல் ஏறுகிற படி உள்ளேயிருந்து செல்லாமல், வெளியேதானே அந்தக் கோபுரத்தைச் சுற்றிக்கொண்டு மேலே எட்டுகிறவளாயில் 8-விசை அதைச் சுற்றியிருக்கும். இந்தக் கோபுரத்தின் மேல் தட்டிலே, பாபிலோனியர் நக்ஷத்திரங்களின் ஓட்டத்தைக் கவனித்து, கணக்கு ஏற்படுத்த ஏற்ற கருவிகளையுண்டாக்கி மற்ற ஜாதியாரிலும், இவர்கள் வானசாஸ்திரத்தில் அதிக முயற்சியாயிருந்தார்கள். 2 இரா. 20: 11-ல் சொல்லிய சூரிய கடியாரம் அங்கிருந்து வந்தது. இந்தக் கோபுரத்தை பார்சுதேசத்து இராஜாவாகிய சர்க்குசே அழித்துப்போட்டான். நேபுகாத்நேச்சார் இந்த ஆலயத்தை முன்னிலும் விசாலமாக்கி அநேக கட்டடங்களைக் கட்டிவைத்தான். எருசலேமின் தேவாலயம் 3000-அடி என்றும் இதுவோ 4800-அடி சுற்றளவென்றும் சொல்லுகிறார்கள். இந்த ஆலயத்தைச் சூழ 2½-மைல் சுற்றளவுள்ள மதில்கள் கட்டப்பட்டிருந்தன. எருசலேம் தேவாலயத்திலிருந்து எடுக்கப்பட்ட பரிசுத்த தட்டுமுட்டுகள் யாவும் இங்கே வைக்கப்பட்டிருந்தன. பேல் என்ற விக்கிரகம். பாபேல் இராஜ்யத்தை ஸ்தாபித்த நிம்ரோத்தை நினைக்கசெய்யப்பட்டதாம். பேல் என்றால் பாகால் ஆண்டவன் என்றர்த்தம். நிம்ரோத் என்றால் கலகம். அவன் தேவனைவிட்டுப் பிரிந்து கலகஞ்செய்ததால் அந்தப் பேர் வந்தது. தூராவில் நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையும் இங்கேயிருந்தது. அது 6-அடி அகலமும் 60-அடி உயரமுமுள்ளது. அதின் விலை 12½-கோடி ரூபாய்போலிருக்கும்.

(4) நேபுகாத்நேச்சார் ஆற்றின் இருகரைகளிலும் பலமான சுவர்களைக் கட்டினான். கால்வாய்களையும், பெரிய ஏரிகளையும் வெட்டுவித்தான். அர்மேனியா நாட்டு மலைகளில் பனிக்கட்டி உருகி தாராளமான வெள்ளம், சூன், சூலாய், ஆகஸ்து மாசங்களில் வரும்போது பட்டணத்தில் பிரவேசித்து சேதமுண்டாக்காதபடி பட்டணத்துக்கு வெகுதூரத்தில் ஆற்றின் தண்ணீரைக் குறைத்துப்போட அலைகளை வெட்டி திகிரிஸ் நதியில் கழிந்தோடச் செய்தான். அந்தக் கால்வாய்கள் கப்பல் ஓடத்தக்கதான ஆழமாம்.

கி. பி. மு. 569-ல் நேபுகாத்நேச்சாருடைய 36-ம் வருஷத்தில் நேபுகாத்நேச்சார், வானபரியந்தம் எட்டின பெரிய விருக்ஷத்தின் தரிசனத்



தைக் கண்ட (தானியேல் 4-அதி.) 12-ம் மாதத்தின் முடிவிலே, அவன் தன் அரண்மனையின்மேல் அதாவது தொங்கு தோட்டத்திலே உலாவிக்கொண்டிருக்கையில், தான் கட்டின வேலைகளின் மேன்பாட்டைக் கவனித்து, பெருமையடைந்து "இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால் என் மகிமைப் பிரதாபத்துக்கென்று, இராஜ்யத்துக்கு அரண்மனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா" என்று பெருமையாய்ப் பேசினான். (தானியேல் 4: 30.) இந்த வார்த்தைகள் இராஜாவின் வாயிலிருக்கையில், அவனுடைய பெருமையைக் கண்டிக்கும்படி "வானத்திலிருந்து நேபுகாத்நேச்சாரே இராஜ்யபாரம் உன்னைவிட்டு நீங்கிற்று; மனுஷரைவிட்டுத் தள்ளப்படுவாய், வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பாய், மாடுகளைப்போல புல்லை மேய்வாய். இப்படி ஏழு வருஷம் இருக்குமென்று சத்தமுண்டாயிற்று; உடனே அவன் புத்தி கலங்கி, மாடுகளைப்போல 7-வருஷம் புல்லை மேய்ந்தான். அவனுடைய தலைமயிர் கழுகுகளுடைய இறகுகள்போலவும், அவனுடைய நகங்கள் பட்சிகளுடைய நகங்கள்போலவும் வளருமட்டும் அவன் சரீரம் ஆகாயத்தின் பனியிலே நனைந்தது. இந்த இராஜா தேவசெயலை பரீக்ஷித்திருந்தும், அவனுடைய ஆங்காரம் மிஞ்சிப்போனதால் இப்படிச் சம்பவித்தது." (நீதி. 16: 18.)

கி. பி. மு. 563-ல் நேபுகாத்நேச்சாருடைய 42-ம் வருஷத்திலே, நேபுகாத்நேச்சார் புத்தி தெளிந்து, உன்னதமான தேவனைத் தோத்திரித்தான். திரும்ப இராஜ்ய பரிபாலனம்பெற்று தேவனுடைய கிரியைகள் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள். அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலாகுமென்று எழுதி பறைமுறை செய்தான்.

கி. பி. மு. 562-ல் நேபுகாத்நேச்சாருடைய 43-ம் வருஷத்திலே, நேபுகாத்நேச்சார் தன் இராஜ்யத்துக்குத் திரும்பவந்த ஒரு வருஷத்துக்குள் இறந்துபோனான். ஆகையால் நேபுகாத்நேச்சார் ஆண்ட காலம் பாபிலோனியர் கணக்குப்படி அவன் தகப்பன் மரித்தகாலமுதல் 43-வருஷம். யூதருடைய கணக்குப்படி சூரியாவுக்குச் சேனையோடே முதலாந்தரம் வந்த காலமுதல் 45-வருஷமாம். இது யோயாக்கீனுடைய சிறையிருப்பின் 37-ம் வருஷம் கீழ்தேசத்து இராஜாக்களில் அதிகக்காலம் ஆண்டவன் இவனே. அவன் சாகும்போது, பார்சியர் வந்து பாபிலோனியரைக் கீழ்ப்படுத்துவார்களென்று தீர்க்கதரிசனமாகச் சொன்னானாம். இது தானியேல் தீர்க்கதரிசியினால் அடைந்த போதனையினாலும், அவனுடைய தரிசனங்களின் அர்த்தங்களினாலும், அறிவடைந்து சொல்லியிருப்பான். அப்படியே அவன் மரித்து 33-வருஷத்துக்குப்பின் நிறைவேறிற்று.

கி. பி. மு. 561-ல் நேபுகாத்நேச்சார் மகன் (Evilmerodach) ஈவில்மெரோதோக் என்பவன் பட்டத்துக்கு வந்தான். இவன் இராஜாவானவுடனே யூதாவின் இராஜாவாகிய யோயாக்கீனைச் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கி, அவனோடே அன்பாய்ப் பேசி, அவன் வஸ்திரங்களை மாற்றி, நித்தம் தன்னோடே போசனம்பண்ணச் செய்தான். அவனுடைய செலவுக்காக வேண்டியது கொடுக்கும்படிக்கும் திட்டமுண்டாயிற்று. (2 இரா. 25: 27—30.) இப்போது யோயாக்கீனுக்கு 55-வயது. இவன் சிறையாகும்போது 18-வயது. இப்போது சிறைப்பட்டு 37-வருஷமாயிற்று. தாவீது, சாலொமோன் என்ற யோயாக்கீனுடைய முற்பிதாக்களுக்குக் கனமாகவோ, தானியேல்மூலமாய் மெய்த்தேவனைப்பற்றி அறிவடைந்திருந்ததினாலோ, சிறைப்பட்ட இராஜாக்களுக்கு மரியாதை செய்யவேணு

மென்ற பட்சத்திலோ இப்படி யோயாக்கினை உயர்த்தினன். நேபுகாத்நேச்சார்தான் புத்தியடைந்து, இராஜாங்கத்துக்கு வந்தபோது, அவன் இராஜாங்கத்தில் தானில்லாத காலத்தில் நடப்பித்த சில குறைவுகள் நிமித்தம் அவனைச் சிறைச்சாலையில் போட்டிருக்கையில், யோயாக்கீன் அவனுக்கு வெகு மாயாதையும் பட்சமும் காட்டினதால் அவன் பட்டத்துக்கு வந்தபோது யோயாக்கீனை அவன் விடுதலையாக்கி உயர்த்தினனென்று யூதருடைய பாரம்பரையுண்டு. எரே 52: 31—34. இவனுடைய சரியான பேர் மேரோதாக். இவன் நிதானமில்லாதவனும் துஷ்டகுணமுள்ளவனுமிருந்தபடியால் வீணன் என்றருத்தமுள்ள எவில் என்ற பேர் அவனுடைய பேரோடே சேர்க்கப்பட்டது. இவன் 2-வருஷம் ஆண்டபின் அவனுடைய கொடுமைகளையும், அவமார்க்கங்களையும் குடிகள் பொறுக்கமாட்டாமல், அவனுடைய சகோதரியின் புருஷனுகிய நெரிகிலிசார் கலகக்காரருக்குத் தலைவனுயிருந்து அவனைக் கொலைசெய்து இராஜபட்டத்தைக் கட்டிக்கொண்டான்

கி. பி. மு. 559-ல் (Neriglissor) நெரிகிலிசார் பட்டம்பெற்ற காலத்திலே, யோயாக்கீன் முன்னுடி மரித்திருக்கலாம் அல்லது அவன் சிநேகிதனோடே கொலைசெய்யப்பட்டிருப்பான். எரே. 52: 33. இவன் தன் நாட்களில் வாழ்வடையான் என்று எரேமியா (22: 30) சொன்ன தீர்க்கதரிசனப்படியே கொலைசெய்யப்பட்டிருப்பானென்று நினைக்கத்தக்கது. பின்பு இவன் மேதியரோடே செய்த சண்டையில் செத்தான்.

யோயாக்கீனுடைய மரணத்துக்குப்பின் யூதர்கள் தங்களுக்குள்ளே அவனுடைய மகன் சலாத்தியேலை இராஜபிரபுவாக ஏற்றுக்கொண்டார்கள். (எஸ்ரு. 5: 16.) இந்த சலாத்தியேல் சிறையிருப்பின் காலத்தில் தன் ஜனத்தை பாபிலோனில் நியாயம் விசாரித்து வந்தான் மேசியாவைப் பற்றிய அட்டவணை பழுதுபடாமலிருக்கவும், யாக்கோபு சொன்ன தீர்க்கதரிசனப்படிக்கும் நியாயம் விசாரிக்கிறவன் அற்றுப்போகவில்லை.

கி. பி. மு. 559-ல் எவில்மெரோதாக் கொல்லப்பட்டான். மேதியா தேசத்து இராஜாவாகிய அகுஸ்துவாகேயும், செத்தான். இவனுக்குப்பிறகு இவனுடைய மகனுகிய 2-ம் குவக்சரோஸ் துரைத்தன ஆளுகைக்கும், அவனுடைய மகள் மந்தேனுளுடைய மகன் கோரோஸ் (Cyrus) சேனைக்குரிய ஆளுக்கைக்கும் நியமிக்கப்பட்டார்கள். கோரேசுக்கு இந்தக்காலம் 41-வயதும் குவக்சரோசுக்கு 41-வயதுமாம். தானி. 5: 31-ல் சொல்லியபடி பெல்ஷாத்சார் மரித்தபின் தரியு, பாபிலோனுக்கு. இராஜாவாகும்போது 62-வயதென்றால், (70) வயதில் மரித்த கோரோசுக்கு (9) வருஷத்துக்கு முன் அது சம்பவித்தபடியால் அந்தக்காலத்தில் கோரோசுக்கு (61) வயதும் இப்போது (40) வயதுமிருக்குமே இந்தவகையாய் கோரேஸ் 30-வருஷம் அரசாண்டவன்.

கி. பி. மு. 559-ல் (Neriglissar) நெரிக்கிலிசார் பாபிலோனில் இராஜாவாகி மேதரோடு போர்செய்யும்படி மேல்திசையிலுள்ள லீதியர், பிரிகியர் முதலான பற்பல தேசத்தாரோடு உறவுசெய்து, மேதியரால் வரத்தக்க மோசங்களை அவர்களுக்குச் சொல்லிக் காட்டி, ஏகமாய்ப் படையெடுத்து அவர்கள்மேல் யுத்தஞ்செய்யவேண்டுமென்று ஏவினன். இதை மேதியரின் இராஜாவாகிய குவக்சரோஸ் அறிந்து பார்சுதேசத்திலிருந்த கோரேஸ் என்பவனைச் சேனையோடே உதவிக்கு வரவழைத்து, தனக்குள்ள இராணுக்களையும் அவன் வசம் ஒப்புவித்து, பாபிலோனியரை எதிராக அனுப்பினன். கோரேஸ் 30,000-பார்சியரோடும் மேதியரோடும்



போய் யுத்தஞ்செய்ததில் பாபிலோனியர் அபஜெயப்பட்டார்கள். நெரிகிலிசார் இராஜாவும் மாண்டான்.

கோரோஸ் என்பவன் அக்காலத்தில் ஞானத்திலும், வல்லமையிலும், பலத்திலும் பேர்பெற்றவனுயிருந்தான். இவன் பிறக்கிறதற்கு முன்னமே, அவன் தோன்றுவதையும், அவன் இஸ்ரவேலரை மீட்பதையும், அவன் பேரையும் பற்றி தேவன் ஏசாயா தீர்க்கதரிசியைக்கொண்டு முன்னறவெளிப்படுத்தியிருந்தார். ஏசா. 44: 28. 45: 1. இப்படிப்பட்ட கனம் யூதா இராஜாவாகிய யோசியாவுக்குத்தவிர (1 இரா. 13: 2.) வேறொருவருக்கும் கொடுக்கப்படவில்லை. இந்தக் கோரேஸ் யோயாக்கீம் மரித்த வருஷத்திலே பிறந்திருக்கிறன்.

---

# THE SECOND COMING OF CHRIST.

---

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.

(தொடர்ச்சி.)

---

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தம் பரிசுத்தஆவி ஊற்றப்படுதலுடன் துவக்கினது. பரிசுத்தஆவி திரித்துவத்திலொருவராய் பிதாவிலுங் குமாரனிலும் நின்று புறப்பட்டு கிறிஸ்துவின் திருரத்தத்தால் மீட்கப்பட்ட திருச்சபையை வரப்போகிற மணவாள மேசியாவுக்கு ஆயத்தப்படுத்துகிறர்.

இரக்ஷகர் பரத்துக்குப்போன 10-ம் தினம் பெந்தேகோஸ்தே என்னும் பண்டிகைநாளில் பரிசுத்தாவியானவர் அதிசயமானவிதமாய்த் திருச்சபையின்மேல் இறங்கினர். இதைப்பற்றி அப்போஸ்தலர் 2-அதிகாரத்தை வாசிக்க. 4-ம் வசனத்தில் “அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினர்கள்” பற்பல தேசங்களினின்றும் பண்டிகைக்கென்று வந்திருந்த அந்நிய பாஷை ஜனங்களுக்கு அவரவர்கள் பாஷையிலே சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறதற்காக இந்த அந்நிய பாஷைவரம் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. அதினாலே அங்கிருந்த பற்பல பாஷைக்காரர் தங்கள் தங்கள் பாஷையிலே சுவிசேஷ பிரசங்கத்தைக் கேட்டார்கள். (Eterois glossois வேறு பாஷைகள்.

இதுவன்றி தேவனுக்கு மாத்திரம் தெரியப்பேசி அவரைத் தோத்திரிக்கும்பொருட்டு ஒரு பாஷை வரம் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. இதைத் தேவபாஷையென்றுதான் சொல்லவேண்டும் திருஷ்டாந்தமாக; அப். 10: 45, 46-ல் கொர்நேலி வீட்டில் பாஷை பேசி தேவனைப் புகழ்ந்தார்கள் இங்கே பாஷைகளென்று மாத்திரமிருக்கிறது. (Glossois) இது வேறு மனிதர் அறியாத தேவபாஷையேயாம்.

இன்னங் கொஞ்சக்காலஞ்சென்று இரக்ஷகர் வருகை கிட்டவே அப். 19: 6-ல் எபேசுப் பட்டணத்தார் பவுல் அப்போஸ்தலன் பிரசங்கத்தைக்

கேட்டு ஆவிவரம்பெற்றுப் பாஷைபேசினார்களென்று பார்க்கிறோம். இதிலும் (Eterois அந்நியவென்கிற பதமின்றி (Glossois) பாஷைகளென்று மாத்திரம் வருகிறது.

மேலும் இங்கே யோவேலின் ஆகமத்தில் கூறிய வேறொரு தீர்க்கதரிசனமும் நிறைவேறியதாய்க் காண்கிறோம். அதாவது "தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்." இப்படி கிறிஸ்துவின் இராஜரீக வருகை சமீபிக்குமுன்னுரைக்கப்பட்ட சங்கதிகளொவ்வொன்றாய் நிறைவேறுகிறது. செசாரியாவில் பிலிப்புவின் 4-குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். அப். 21: 8, 9. இதற்கு உத்தேசம் 35-வருஷங்களுக்குப்பின் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்கள் பரிசுத்தஆவியின் பற்பல வரங்களுடன் அறியப்படாத அல்லது நூதன பாஷை வரத்தையும் பெற்றிருந்தார்கள்; அதினாலே அந்நிய அதாவது "அறியப்படாத பாஷையில் பேசுகிறவன் ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும் அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறதினாலே அவன் மனிதரிடத்திலல்ல தேவனிடத்தில் பேசுகிறானென்றும்" சொல்லப்பட்டிருக்கிறது. 2 கொரி. 14: 22. இங்கும் மூலவாக்கியத்தில் அறியப்படாதவென்ற பதமில்லாமல் பாஷையென்று மாத்திரங் கண்டிருக்கிறது. ஆவி வரங்களைப் பெற்றவர்கள் அவைகளை ஒழுங்காய்க் கையாடி வரும்படியாய் அப்போஸ்தலன் 1 கொரி. 14: 4, 5-ல் பல யுக்தியோசனை கற்பிக்கிறார். "பாஷைகளைப் பேசுகிறவன் மனிதருக்கல்ல தேவனிடத்தில் மாத்திரம் பேசுகிறான். தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் மனுஷருக்குப் பக்திவிருத்தியும் புத்தியும் ஆறுதலும் உண்டாகத்தக்காகப் பேசுகிறான். அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தியுண்டாகப் பேசுகிறான். அந்நிய பாஷைகளில் பேசுகிறவன் சபைக்குப் பக்திவிருத்தியுண்டாகும்படி அர்த்தத்தையும் சொல்லிவிட்டால் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவனென்று சொல்லுகிறார். 1 கொரி. 14: 4, 5. ஒருவன் அன்னிய அல்லது நூதன பாஷையில் பேசுகிற காரிய விஷயங்களை அறியவேண்டுமானால் வேறொருவன் அதற்கு அர்த்தஞ்சொல்லவேண்டியதாயிருக்கும். அப்படியே யாராவது அந்நிய பாஷையிலே பேசுகிறதுண்டானால் ஒருவன் அர்த்தத்தையுஞ் சொல்லவேண்டும். 1 கொரி. 14: 2—7. அர்த்தஞ்சொல்லாவிட்டால் அந்நிய பாஷையில் சபையில் பேசாதிருக்கக்கடவனென்றுஞ் சொல்லியிருக்கிறபடியினாலே கொரிந்து சபையார் பேசின பாஷை இவ்வுலகத்தில் வழங்குகிற பாஷைகளிலொன்றல்ல. இது நூதனமானதும் தெய்வ பாஷையுமாயிருக்கிறது. 1 கொரி. 14: 27, 28. இவர்கள் பேசின பாஷைகளுக்கும் அப்போஸ்தலன்மார் பேசின பாஷைகளுக்கும் வித்தியாசமுண்டு.

அப்போஸ்தலன்மார் மனிதர்கள் அறியத்தக்க பாஷைகளைப் பேசினார்கள். இவர்களோ மனிதருக்கல்ல தேவனுக்கு மாத்திரந் தெரியத்தக்க பாஷைகளைப் பேசினார்கள் என்று திட்டமாய்த் தெரியவருகிறது. கொரிந்தியரும் எபேசு பட்டணத்தாரும் கொருநேலியு வகையராக்களும் பேசின பாஷைகள் நம்முடைய இரக்ஷகர் பரலோகத்திற்கு போகிறதற்குச் சற்றுமுன்னதாக தம்மை விசுவாசித்து ஆவியினாலும் ஜலத்தினாலும் ஞானஸ்நானம்பெற்ற விசுவாசிகள் பேசுவார்களென்று சொன்ன நவமான பாஷைகளென்று திட்டமாய் விளங்குகிறது. மாற்கு 16: 17. (They shall speak with new tongues.) அப்போஸ்தலன் கொரிந்தியர் 12-ம் அதிகாரத்தில் ஆவியின் வரங்களைச் சொல்லுகிற வரிசையில் பாஷைகளைப்பற்றிச்



சொல்லும்போது சிலருக்குப் பற்பல பாஷைகள் பேசுதலும் வேறொருவனுக்கு வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. 1 கொரி. 12: 10. இங்கிலிஷில் (To another divers kinds of tongues, to another interpretation of tongues) என்று சொல்லுகிறதில் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுகிறது தேவஆவியானவராலே என்று காட்டுகிறதாலே நூதன பாஷையாய்த் தானிருக்கவேண்டும்.

இன்னம் அந்த நாள் சமீபமாய் வரவர இதற்கு உத்தேசம் 60, 70-வருஷங்களுக்கு முன்னமே அமேரிக்கா முதலான இடங்களில் தேவன் தம்முடைய ஆவியை யூற்றி அதால் அனேகர் குணப்பட்டார்களென்று கேள்விப்பட்டதுமல்லாமல் 1860, 61-ம் வருஷங்களில் இந்த திருநெல்வேலி ஜில்லாவிலுஞ் சில இடங்களில் தேவன் தமமுடைய ஆவியை யூற்றினதைக் கண்டுங் கேட்டுமிருக்கிறோம். அந்த நாட்களில் தேவகிருபையைப் பெற்றவர்கள் நூதன பாஷைகளைப் பேசினார்கள். அவர்கள் தேவனையே பாட்டினால் துதித்தார்கள். அப்போது தேவன் அவர்களுடைய நாவுகளைச் சுழற்றி திருத்தி அப்பால் பாஷைகளைப் பேசிக்கொள்ளும்படி செய்தார். பேசுகிறவர்கள் ஒருவருக்கொருவர் மாறிமாறிப் பேசிக்கொண்டதையும் தேவனைத் துதித்ததையுங் கண்டோம். சிலர் அந்தப் பாஷையில் தானே சிலேற்றில் எழுதவும் கொரிந்து சபையில் நடந்தபடிக்கு வேறு சிலர் அதற்கு வியாக்கியானம் எழுதவுங் கண்டோம். அவைகள் சபைக்கு எழுப்புதலையும் பக்திவிருத்தியையும் உணர்ச்சியையும் கொடுத்தது. சிலர் சபைக்கு பக்திவிருத்தியுண்டாகத்தக்கதாகத் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள். தீர்க்கதரிசனமென்று சொல்லும்போது வேதாகமத்தில் 1 கொரி. 14: 1. மார்ஜனில் கண்டபடிக்கு போதனையாகவேதானிருந்தது. சிலர் தங்கள் பாவங்களைக் கண்டு உணர்ந்து அதினால் வரப்போகிற மோசத்தை அறிந்து மகா கசப்பாய்த் துக்கப்பட்டார்கள். சகரி. 12: 10-ல் சொல்லியபடிக்குத் தாங்கள் குத்தின இரக்ஷகரையே நோக்கிப் பார்த்து அவரை காயத்தோடே தங்களுக்கு எதிரே நிறுத்திக்கொண்டு அவருடைய விலாவிலும் சரீரமுழுவதிலுமிருந்து வடிந்த இரத்தத்தைக் காண்கிறதாக வாயினால் அறிக்கையிட்டுப் புலம்பி தன்னுடைய ஒரேபேறானவனுக்காகத் துக்கித்துப் புலம்பினதுபோல புலம்பி அழுதார்கள். இதற்கு நானே சாட்சி, என்னுடைய சபையாருஞ் சாட்சி, என்னுடைய ஆலயமுஞ் சாட்சி. அக்காலத்தில் சுரண்டைச் சேகரத்தை விசாரித்துவந்த கனம் A. B. வால்ப்பி ஐயரவர்கள் இந்த எழுப்புதல் ஆவியானவராலுண்டானதோவென்று பரிசோதிக்கும்படியாகத் தாம், அக்காலத்தில் சுரண்டைச் சேகரத்தில் விசாரணை உபாத்தியாயராயிருந்து இப்போது பட்டம்பெற்று சுவிசேஷபுரம் சேகரத்திலிருக்கிற கனம் ஆசீர்வாதம் ஐயரவர்களைக் கூட்டிக்கொண்டு வந்து இரண்டு மூன்று நாளிருந்து பரிசோதித்ததில் தீர்க்கதரிசனமாகிய வேதவாக்கியங்களைக்கொண்டு புத்திசொன்னதையும் நூதன பாஷைகள் பேசினதையும் எழுதினதையும் கனம் ஐயரவர்கள் கவனித்ததுமன்றி அந்த நேரத்தில் தம்முடைய கை அசைக்கப்பட்டதையுங் கவனித்து இது மெய்யாகவே தேவஆவியானவருடைய செய்கைதான். கொரிந்து சபையாருக்குள் நடந்ததுபோல நடக்கிறது என்றறிக்கையிட்டு ஒருவரும் இதை அணைத்துப்போடக்கூடாது என்று சொல்லிப்போனார்கள்.

1874-ம் வருஷத்தில் சுரண்டைச் சேகரத்தை மேல்பார்த்து வந்த கனம் Honnis ஐயரவர்களும் ஒருநாள் ஒரு சபையான் வீட்டில் ஜெபக் கூட்டம் நடந்தபோது ரோ. 8: 26-ல் பரிசுத்தாவியானவர் நமக்காக பெரு

மூச்சுவிட்டு ஜெபம்பண்ணுகிறுரென்று சொல்லப்பட்டபடிக்கு ஒரு
சபையான் பரிசுத்தஆவியைப் பெற்றவனுய் எல்லாச் சபையாரும் அமை
தலாயிருக்க பெருமூச்சுவிட்டு வேதவாக்கியத்தோடு தீர்க்கதரிசனமாய்ப்
போதித்தைக் கண்டு மெய்யாய் இது தேவஆவியானவருடைய செய்கை
தானென்று ஒப்புகொண்டு, C. M. S. ரெக்கார்ட்டிலும் அச்சடித்திருக்
கிறுர். மலும் இந்த நாட்களிலும் அமெரிக்காக் கண்டத்திலும் இங்கிலாந்
துமுதலான தேசங்களிலும் அநேகர் ஆவியைப பெற்றவர்களாய் கிறிஸ்
துவின் வருகையைக்குறித்து வைராக்கியமாய்ப் பிரசங்கித்து வருகிறுர்
கள். இங்கிலாந்துதேசத்தில் இந்தக்காலத்தில் கனம் மூடி, சாங்கி என்னும்
இரண்டு போதகன்மார்கள் பரிசுத்தஆவியைப் பெற்றவர்களாய் வைராக்கி
யமாய் கிறிஸதுவின் பாடுகளையும் அதினுலுண்டான பலனுகிய இராஜ்ஜி
கத்தையும் பற்றி, பிரசங்கித்ததில் குணப்படாதவர்கள் குணப்பட்டு தங்
கள் பாவங்களைக்குறித்து நினைத்து சகரி 12:10-ல் சொல்லியபடி துக்கித்
துப் புலம்புகிறவாகள யிருக்கிறுர்களென்று கேள்விப்படுகிறேம்.

அப்படிப்பட்ட நடபடிக்கைகளைப் பார்க்கும்போது கிறிஸ்துவின்
வருகை சமீபித்துவருகிறபடியினுலே நாமெல்லாரும் எச்சரிக்கையாயிருக்
கவேண்டும் எப்படியெனுறல் ஒரு மனிதன் தன பாரியைவிட்டு தூர
தேசத்திற்குபோய் வெகுகாலம் யாதொரு செய்தியும் அனுப்பாமலிருந்து
அநேக நாளைக்குப்பின்பு நான் புறப்பட்டு வருகிறேன். ஆயத்தமாயிருக்க
வேண்டுமெனறு செய்தி எழுத்துமூலமாய் அனுப்பினுல் தன புருஷன்
எப்போது வருவாரென்று ஆவலாய்க் காத்திருந்த அந்த ஸ்திரீக்கு ஆவலும்
சந்தோஷமுமுண்டாய் தன் வீட்டையும், சகலத்தையும் ஆயத்தப்படுத்திக்
கொண்டு எதிர்பார்த்திருப்பாளல்லவா?

அப்படியே நமது மணவாளர் தம்முடைய வருகைக்கு நிச்சயமாக
தம்முடைய ஆவியானவரைக்கொண்டு நம்மை எச்சரித்திருக்கிறபடிக்கு
நம்மெல்லாரும் நம்மை ஆயத்தப்படுத்திக்கொண்டு விழிப்பாயிருப்போ
மாக.

இக்காலத்திலும் எசாயா 44: 3-ல் சொல்லியபடி புறமதத்திலிருந்து
புதிதாய் கிறிஸ்துமார்க்கத்திற்கு வருபவர்கள் கையெழுத்துப்போட்டு,
தேவனைத் தொழுதுகொள்ளுகிற சபையில் சேர்ந்துகொள்ளுகிறுர்கள்.
அந்த வாக்கியம் இவ்விதமாய் நிறைவேறிவருகிறதைப் பார்க்கிறேம்.

(இன்னும் வரும்.)

---

## சோபியாள் செல்வத்தின் பாக்கியமுள்ள மரணம்.

செல்வம், மெஞ்ஞானபுரத்தில் பிறந்தவள். இவளுடைய தகப்பனுர்
மாசிலாமணி உபாத்தியாயர். அவள் இளம்பிராயத்தில் மேற்படி ஊரிலி
ருக்கிற போர்டிங் பெண்பள்ளிக்கூடத்தில் வாசிப்பு, கணிதம், வேதம்
முதலிய பாடங்களைக் கற்றுவந்தாள். அப்புறம் அவள் அந்த ஊரிலுள்ள
அறிவும், விசுவாசமுமுள்ள ஓர் சமுசாரிக்கு உண்மையும் கீழ்ப்படிதலு
முள்ள துணைவி ஆனுள். அவள் தேவனையும் நமது கர்த்தராகிய யேசுகிறி
ஸ்துவையும் பற்றிக்கொண்ட உத்தமியாக நடந்துவந்தாள். விசேஷமாக
அவளுடைய பிந்திய ஜீவகாலத்தில் அவளுக்கிருந்த விசுவாசம் அதிகப்



பிரகாசமாய் விளங்கிற்று. கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்தாள்.
வேதவாசிப்பு ஜெபஐக்கியத்திற் சேர்ந்து, வேதத்தை ஒழுங்காய் வாசித்
தும், தியானித்தும், ஜெபித்தும் வந்தாள். தேவாலயத்தில் நடத்தப்படும்
காலை மாலை ஜெபங்களுக்கும் ஓய்வுநாள் மூன்று நேர ஆராதனைகளுக்கும்
மற்றும் ஜெபக்கூட்டங்களுக்கும் அவள் மிகவும் ஒழுங்கு. பெண்பிள்ளை
களுக்குள் யாருக்காவது கோவிலில் பண்ணப்பட்ட பிரசங்கம் விளங்கா
விட்டால் சோபியாள் செல்வத்திடத்திற் கேட்டு அறிந்துகொள்வார்கள்.
அவள் அவ்விடத்திலுள்ள தேவஊழியக்காரரோடும், உடன் கிறிஸ்தவ
சகோதரிகளோடும் மார்க்கத்தைப்பற்றி அடிக்கடி சம்பாஷணைசெய்து வந்
தாள். வீட்டுக்கடுத்த காரியங்களிலும், குடும்ப சம்ரக்ஷணைக்குரிய விஷ
யங்களிலும், சாலொமோன் பேசுகிற குணசாலிகளான பெண்களுக்கு
அவள் மேற்பட்டவள்போல நடந்துவந்தாள். ஏனென்றுல் தேவபயம்
அவள் நடத்தைக்கும் சம்பாஷணைக்கும் உயிர்கொடுத்தது என்று நினைக்
கலாம்.

அவள் தேவகிருபையால் குணப்பட்டதாக அறிந்ததுமுதல், தன்
பாவங்களை நன்குணர்ந்து, அவற்றை வெறுத்துத் தள்ளி, அருமை ரக்ஷ
கரிடத்தில் தான் பாவமன்னிப்பைப் பெற்றநுபவித்த சந்தோஷத்தைப்
பற்றிப் பிறருக்குமுன் தாழ்மையாய் அறிக்கையிடுவாள். மேலும் ரக்ஷகரு
டைய வருகையைப்பற்றியும், யூதர் தம் தேசத்திற்குத் திரும்பி வருதலைக்
குறித்தும் கேள்விப்பட மிகவும் விரும்புவாள். அவள் இம்மையிலிருக்கும்
போதே தேவனுடே சஞ்சரித்தாள் என்று சொல்லலாம். எப்பொழுதும்
கர்த்தருடனிருக்க ஆவலாய் விரும்பினுள். அவள் விரும்பினபடி ஆயிற்று.
எப்படியெனில் சில நாட்களுக்குமுன் அவளுக்கு விஷவியாதி உண்
டாகி மரணத்தறுவாயிலானுள். மருந்துமுதலிய சிகிச்சைகள் செய்யப்பட்
டும், அவள் "நான் மரிப்பது நிச்சயம். நரகத்துக்குப்போகமாட்டேன்.
மோக்ஷத்துக்கே போவேன் என்று நம்புகிறேன்" என்று சொன்னுள். மே
லும் நான் பிழைத்தாலும் கர்த்தருக்குள் மகிமை. மரித்தாலும் கர்த்தருக்கு
மகிமை; கர்த்தர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது; கிறிஸ்து எனக்கு
ஜீவன்; சாவு எனக்கு ஆதாயம் என்று இவ்வசனங்களையும் பின்னும் பல
வேதவாக்கியங்களையும் சொல்லிக்கொண்டிருந்தாள். அவள் தன் புருஷ
னும், பிள்ளைகளும் தங்கள் வீட்டில் முன் செய்துவந்தபடி தவருமற்
குடும்ப ஜெபம்செய்துவரவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள்.

அவள் மரித்துப்போன நாளின் முந்தின இரவில், தன் மகளை யோபி
ஞகமத்தில் ஆறு அதிகாரங்களை வாசிக்கச்சொல்லிக் கேட்டுக்கொண்டிருந்
தாள். அதற்கு ஐந்துநாட்களுக்குமுன் அவளின் அருமையான பிள்ளை
களில் ஒருவன் இறந்துபோயிருந்தபடியால் தேவனுடைய "பரிசுத்த வச
னத்தாலுண்டாகும் பொறுமையும் ஆறுதலும்" உண்டாகும்படி ஷ்டி வாக்
கியங்களை வாசிக்கச்சொன்னுளென்று காணப்படுகிறது.

மேலும் செல்வம் தான் பொதுவான சங்கத்திற்காகச் சேர்த்துவைத்
திருந்த 2-ரூபாயையும் தன் நேச புருஷனிடத்திற் கொடுத்து "கலய
சங்கத்தில்" தன் பெயர் வாசிக்கப்படுகையில் அதைக் கொடுக்கவேண்
டும் என்றும் கேட்டுக்கொண்டாளாம்.

அவளுடைய மகள் தாயிடத்தில் இங்கே கட்டப்படுகிற ஆலயத்தின்
மேற்கூரை முடிவாகும்போது சிறப்பாகக் கொண்டாடப்படும் பிரதிஷ்
டைக்கு இருக்க ஆசைப்பட்டாயே அம்மா! இப்பொழுது அதற்கு இரா
மற்போகிறீர்களே என்று சொல்லி அழவே, அவள் "நான் இதைப்பார்க்

ிலும் அதிக அலங்காரமுள்ள பரம எருசலேம் ஆலயத்துச் சிறப்பைப் பார்க்கப்போகிறேன். அந்த மகிமைக்கு இந்த ஆலயத்தின் மகிமை எம் மாத்திரம் என்றான். அவள் நாளது செப்றெம்பர்௴ 16உயில் கர்த்தருடைய ராஜ்யத்திற் சேர்ந்தாள். அவள் வயது 38. அவளுடைய பாக்கியமான மரணம் அநேகருக்குள் தேவகிருபையினால் நல்லுணர்வுண்டாக ஏதுவாயிருக்குமென்று நம்பலாம்.

"நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்." கலா. 2: 20.

---

## இடைவிடாமல் ஜெபம்பண்ணு.

நான் காலமே எழுந்திருக்கும்போதும் இராத்திரியிலே படுத்துக்கொள்ளும்போதும் கருத்தோடே ஜெபம்பண்ணுகிறேன் என்று சொல்லுகிறாய். மாயக்காரர்களும் அப்படிச் செய்கிறதில்லையா? அவர்கள் மிகவும் விரிவான ஜெபங்களை அடிக்கடி பண்ணுகிறார்கள். ஆகிலும் அந்த ஜெபத்தினால் அவர்களுக்கு யாதொரு பிரயோசனமும் உண்டாகமாட்டாது. அநேகர்களுக்குள் ஜெபம்பண்ணுதல் நாளுக்குநாள் குறைந்துபோகிறது. அவர்கள் ஜெபம்பண்ணுதலைப் பார்க்கிலும் அவர்கள் வாயிலிருந்து அசங்கியமும் வசையுமான வார்த்தைகள் மிகுதியாய்ப் புறப்படுகின்றன. காலையில் எழுந்திருக்கிறபோது அநேகருடைய வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தைகளில் முதல் வார்த்தை வசையாயிருக்கிறது. இராத்திரியில் படுத்துக்கொள்ளுகிறபோதும் அப்படிப்பட்ட வசையான வார்த்தையோடே படுக்கிறார்கள். ஆகையால் அப்படிப்பட்டவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்திற்கும் ஒரு ஆசீர்வாதமும் கிடைக்காது. துன்மார்க்கன் ஆசீர்வாதத்தை விரும்புகிறதில்லை. ஆகையால் அதுவும் அவனுக்குத் தூரமாயிருக்கிறது. அவன் வசையை உட்சட்டையைப்போல தரித்துக்கொள்ளுகிறான். அந்த வசை அவனுக்குள்ளே வேரூன்றியிருக்கிறது. பொல்லாதவர்கள் ஜெபத்தினாற் பிரயோசனமுண்டாகுமோ, உண்டாகாதோவென்று சந்தேகப்படுகிறதுமல்லாமல் அதைக்குறித்து மிகவும் தூஷணமாகவும் பேசுகிறார்கள். நம்முடைய அருமையான இரக்ஷகர் ஜெபத்தை மிகவும் மேன்மையாகவும் மகிமையாகவும் அங்கீகரித்து அதினால் மிகுந்த பிரயோசனமுண்டாவதைக் காண்பித்துமிருக்க அவர்கள் அதைக் குருமார்களுடைய பிதற்றலென்கிறார்கள். நீங்கள் ஜெபம்பண்ணும்பொழுது விசுவாசித்து எதைக் கேட்டாலும் அதையெல்லாம் பெறுவீர்களென்று இரக்ஷகர் சொல்லுகிறார். ஜெபமானது பரமண்டலத்திலிருக்கிற தேவனுடைய ஆசீர்வாதத்தை அடைகிறதற்கு நீட்டுகிற ஒரு கையைப்போலே இருக்கிறது. ஆகையால்,

உனக்கு இன்னம் ஒன்று குறைவாயிருக்கிறது. அதாவது, இடைவிடாமல் ஜெபம்பண்ணவேண்டுவதாம். காலையில் எழுந்திருக்கிறபோதும் இராத்திரியில் படுக்கிறபோதும் ஜெபம்பண்ணுகிறேனென்கிறாயே, அது போதாது. மேலும் சாப்பிடுமுன்னும் சாப்பிட்டபின்னும் ஜெபம்பண்ணுகிறதும் போதாது. நாள்முழுதும் இடைவிடாமல் ஜெபம்பண்ணவேண்டும். இடைவிடாமல் எப்போதும் ஜெபம்பண்ணவேண்டுமென்ப



தினாலே வேலையை நிறுத்திப்போடச்சொல்லுகிறேன் என்பாயாகில் அப்படியல்ல. வேலைசெய்தல் ஜெபஞ்செய்தலையும் ஜெபம்பண்ணுதல் வேலைசெய்தலையும் தடைபண்ணாது. நீ ஜெபம்பண்ணி அல்லது ஜெபபுஸ்தகத்தை வாசித்துப் பின்பு வைதல், திட்டுதல், மோசஞ்செய்தல், சோம்பலாயிருக்குதல், துன்மார்க்கமாய்த் திரிதல் முதலாகிய கெட்ட காரியங்களைச் செய்தால் அப்படிப்பட்ட உன்னுடைய ஜெபம் ஒன்றுக்கும் உதவாது. ஒருவன் ஜெபம்பண்ணினவுடனே நிந்தித்துத் திட்டினால் அவனுடைய ஜெபத்தை தேவன் கேட்கவேமாட்டார்.

(இன்னும் வரும்.)

---

## சமாசாரத்திரட்டு.

சீமைக்குப் போயிருக்கிற மதிக்கப்படத்தக்க கால்டுவேல் பிஷப் அவர்கள் தமது பத்தினியார் சகிதம் அடுத்த நொவெம்பர் மாசம் 5உ சீமையினின்று புறப்படுகிறதாக செய்தி வந்திருக்கிறது. இவ்விரு தேவதொண்டர்களையும் கடவுள் கடலிலும் தரையிலும் சேமமாய்க் காத்து தூற்றுக்குடியில் கொண்டுவந்து சேர்க்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

தலையில் ஒரு சதுர இஞ்சு இடத்தில் 1000-மயிர் உண்டென்றும், தலை முற்றிலுமுள்ள மயிர் ஒரு லட்சத்து 27,920-என்றும் ஒரு இங்கிலீசு டாக்டர் கணக்கிட்டிருக்கிறார்.

டில்லி.—இங்கே ஒரு குருட்டுப் பிள்ளை இருக்கிறதாம். அந்தப் பிள்ளை வெகு புத்திசாலி. எழுதுகிறதற்கு கண்களில்லாவிடினும் ஞாபக சக்தியால் எல்லா பரீட்சையிலும் தேறக்கூடிய சக்தியுள்ளதாம். கல்கத்தாவில் வக்கீல் பரீட்சைக்குப் போகலாமென்று கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்களாம்.

சென்னை விஜயநகரத்து மஹாராஜா பெண்கள் பாடசாலைகளுக்கு சென்ற வருஷம் செலவான ரூ. 14,388.

காதுவலிக்கு மருந்து.—சுகவிர்த்தி பத்திரிகையில் குறிப்பித்திருக்கிறதாவது.—"காதுவலியைப்போல் சகிக்கவும், விரைவில் சாந்தியாக்கவும் கூடாத பிள்ளைப்பிணி வேறொன்றுமில்லை. ஆகையால், கறுத்த மிளகுதூளில் ஒரு வெகு கடியை கொஞ்சம் பஞ்சிலே சுருட்டிக் கட்டி, வாசனையுள்ள எண்ணெயிலே அமுக்கி, காதினுள்ளே செலுத்திவிட்டு, அது எப்போதும் அனலாயிருக்கும்படி கம்பிளிகொண்டு கபாலத்தைச் சுற்றிக் கட்டி மூடிக்கொள்ளவே, அதிசீக்கிரம் சுகமாகும்" என்பதே.

நாளது நூற்றாண்டில் புரொட்டெஸ்டாண்டு மார்க்கத்தின் விருத்தி. ரோமான் மார்க்க அனுசாரிகள் வருஷந்தோறும் குறைந்துவர, புரொட்டெஸ்டாண்டு மார்க்க அனுசாரிகள் பெருகி வருகிறார்களென்று அறிக்கை பிறக்கிறது. எப்படியெனில் சென்ற நூற்றாண்டுக் கடைசியில் ரோமான் மார்க்க அனுசாரிகள் 12-கோடி. புரொட்டெஸ்டாண்டர் 4-கோடி. 1884-ம் ௵ ஆரம்பத்தில் கணக்கிட்டபோது ரோமானித்தார் 18-கோடி. புரொட்டெஸ்டாண்டர் 41-கோடியே 80 லட்சம் பேர். ஆகவே ரோமானித்தர் நூற்றுக்கு 50-வீதம் பெருக, புரொட்டெஸ்டாண்டர் நூற்றுக்கு 250-பேராகப் பெருகுகிறார்கள். இவர்களன்றி, கிரேக்கு அர்மீனியா, கோபதிக் சபைகளைச் சார்ந்தவர்கள் 10-கோடி.

---

**அக்டோபர்மீ நாள்-31. புரட்டாசிமீ 18உ முதல், ஐப்பசிமீ 17உ வரை.**

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| பு | 1 | ௧௮ | யூதா வம்சத்தார் செய்கிற அருவருப்புகள் அற்பமான காரியமோ? |
| வி | 2 | ௧௯ | இஸ்ரவேலில் மீதியானவர்களையெல்லாம் அழிப்பீரோ? எசே. 9: |
| வெ | 3 | ௨0 | ஒவ்வொரு கேருபின் அண்டையில் ஒவ்வொரு சக்கரமிருந்தது. |
| ச | 4 | ௨௧ | கேருபீன்கள் தங்கள் செட்டைகளை விரித்து எழும்பின. 11: 18. |
| ஞா | 5 | ௨௨ | இஸ்ரவேல் வம்சத்தாருக்கு உன்னை அடையாளமாக்கினேன். 12: |
| தி | 6 | ௨௩ | என் ஜனத்தை உங்கள் கைகளுக்கு நீங்கலாக்கிவிடுவேன். 13: 23. |
| செ | 7 | ௨௪ | உங்கள் நரகலான விக்கிரகங்களைவிட்டுத் திரும்புங்கள். 14: 6. |
| பு | 8 | ௨௫ | நான் தேசத்தைப் பாழாய்ப்போகப்பண்ணுவேன். 15: 8. (5. |
| வி | 9 | ௨௬ | நீ அருவருக்கப்பட்டதினால் வெளியில் எறிந்துவிடப்பட்டாய். 16: |
| வெ | 10 | ௨௭ | பட்டுப்போன விருக்ஷத்தைத் தழைக்கப்பண்ணினேன். 17: 24. |
| ச | 11 | ௨௮ | பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும். 18: 4. |
| ஞா | 12 | ௨௯ | பாலசிங்கங்களின் நடுவிலே தன் குட்டிகளை வளர்த்தாள். 19: 2. |
| தி | 13 | ௩0 | என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தமாக்குங்கள். 20: 20. |
| செ | 14 | ௩௧ | அது என் குமாரனுடைய கோல். 21: 10. மோ? (22: 14 |
| பு | 15 | ௧ | உன்னில் நியாயஞ்செய்யும் நாட்களில் உன் இருதயம் தாங்கு |
| வி | 16 | ௨ | அவர்களுடைய அருவருப்புகளை அவர்களுக்குத் தெரியக் காட்டு. |
| வெ | 17 | ௩ | உங்கள் அக்கிரமங்களில் வாடிப்போவீர். 24: 23. (23: 36 |
| ச | 18 | ௪ | நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள். 25: 17. |
| ஞா | 19 | ௫ | (திரு) அது ஜாதிகளுக்குக் கொள்ளையாகும். 26: 5. |
| தி | 20 | ௬ | உன்னை மிகவும் மகிமைப்படுத்தினாய். 27: 25. |
| செ | 21 | ௭ | உன் இருதயம் உன் செல்வத்தினால் மேட்டிமையாயிற்று. 28: 5. |
| பு | 22 | ௮ | எகிப்துதேசம் பாழும் வனாந்தரமுமாகும். 29: 9. |
| வி | 23 | ௯ | பார்வோனின் புயங்களோ விழுந்துபோம். 30: 25. |
| வெ | 24 | ௰ | விருத்தசேதனமில்லாதவர்களின் நடுவிலே கிடப்பாய். 31: 18. |
| ச | 25 | ௧௧ | இவர்கள் தங்கள் வல்லமையோடுங்கூடக் கிடத்தப்பட்டார்கள். 32: |
| ஞா | 26 | ௧௨ | உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்புங்கள். 33: 11. |
| தி | 27 | ௧௩ | நான் அவர்களுக்குக்கீர்த்திபொருந்திய ஒரு நாற்றை எழும்பப்பண் |
| செ | 28 | ௧௪ | என்னை அவர்களுக்குள் ... அறியப்பண்ணுவேன். 35: 11 (ணுவேன் |
| பு | 29 | ௧௫ | உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து. 36: 27. (37: 6 |
| வி | 30 | ௧௬ | நீங்கள் உயிரடைந்து நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள் |
| வெ | 31 | ௧௭ | கோபத்தினாலும் என் உக்கிரத்தின் அக்கினியினாலும் பேசினேன். 38: 19. |

## விசேஷ நாட்கள்.

4. பௌரணமி.
5. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 17-ம் ஞாயிறு.
12. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 18-ம் ஞாயிறு.
18. பரி. லூக்கா சுவிசேஷகன் திருநாள்.
,, அமாவாசை.
19. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 19-ம் ஞாயிறு.
26. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 20-ம் ஞாயிறு.
28. பரி. அப். சீமோன், யூதா என்பவர்களின் திருநாள்.

162394.
600 008.

# நற்போதகம்.



## THE CANDIDATE FOR ORDINATION.

## குருப்பட்ட மாணாக்கன்.

**71.** (மத் 5: 1) "சீஷர்கள்" என்பது யாரைக் குறிக்கும்?

சற்றுமுன் தெரிந்துகொள்ளப்பட்டதாக மாற்கும் லூக்காவும் சொல்லுகிற (12) அப்போஸ்தலன்மாரை மட்டுமல்ல, கர்த்தருடைய எல்லாச் சீஷரையும் "திரளான ஜனங்களையும்" கூடக் குறிக்கும் (லூக் 6: 17. மத் 8: 28. லூக் 7: 1). மத் 5ம் அதிகாரத்திலுள்ள ஒரு பாகம் (விசேஷமாய் வ 11—16) முக்கியமாய்ச் சீஷருக்கும், மற்றது பொதுவாய் ஜனங்களெல்லாருக்கும் சொல்லப்பட்டதாகக் காணப்படுகிறது.

**72.** (5: 3) "பரலோக இராஜ்யம்" என்பது எதைக் குறிக்கும்?

"இவ்வுலகத்தில் போராடுகிற கிறிஸ்து சபை அனைத்தையும்", மறுமையில் வெற்றிசிறந்திருக்கிற சபையையும் சேர்த்து மொத்தமாய்க் குறிக்கும். இந்த இரண்டு சபைகளிலும் கிறிஸ்துவின் சீஷருக்குப் பங்குண்டு. அவர்களுக்குச் சொல்லிய வாக்குத்தத்தங்களும் இம்மைக்கும் மறுமைக்குமுரியவை.

**73.** (5: 3, 6)ல் "ஆவியில் எளிமையுள்ளவர்கள்," "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள்" என்றும்; இணைவாக்கியங்களாகிய (லூக் 6: 20, 21)ல் "தரித்திரர்," "பசியாயிருக்கிற நீங்கள்" என்றும் வித்தியாசமாய்ச் சொல்லியிருப்பதற்குச் சமாதானமென்ன?

பரி. லூக்கா நமது கர்த்தர் சொன்ன வார்த்தைகளையே எழுதினார். (பரலோக இராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி அருள்பெற்ற

பன்னிருவரில் ஒருவனான) பரி. மத்தேயுவோ, நமது கர்த்தருடைய கருத்தின்னதென்று சொல்லுகிறார். எதுபோலென்றால், (மாற்கு 10: 23, 24)ல் "ஐசுவரியமுள்ளவர்கள்" என்பதை, "ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள்" என்று விளக்கியிருப்பதுபோலதான்.

5: 3 முதல் சொல்லிய வாக்குத்தத்தங்கள், விசுவாச அளவுக்குத்தக்கதாக இம்மையில் நிறைவேறினாலும், அவற்றின் பூரண நிறைவேறுதல், நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களிலும் புதிய பூமியிலுந்தான் இருக்குமென்று சந்தேகமில்லாமல் நாம் எதிர்பார்த்திருக்கவேண்டும்.

(5: 8)க்கு (1 யோ 3: 2, 3) திறவுகோலாயிருக்கிறது.

74. (மத் 5: 22)ல் மூன்று ஆக்கினைகளெவை?

"நியாயத்தீர்ப்பு" (The judgment): யூதருடைய நியாயப்பிரமாணத்தின்படி, தாழ்ந்த கோர்ட்டார் பட்டயத்தால் கொலைசெய்யத் தீர்ப்புச் செய்வார்கள்.

"ஆலோசனைச் சங்கத் தீர்ப்பு" (The council): சனகிரீம் சங்கத்தார் கல்லெறிந்து கொலைசெய்யத் தீர்ப்புச் செய்வார்கள்.

"எரிநரகம்" (The gehenna of fire): இன்னோம் பள்ளத்தாக்கில் உயிரோடே தேகத்தைச்சுட்டெரிக்கும்படி எறிந்துவிடுவதை உபமானமாக வைத்துச் சொல்லப்பட்டது (20: 14). இந்தக் கடைசி ஆக்கினை எப்போதாவது நிறைவேற்றப்பட்டதாகத் திருஷ்டாந்தமில்லை. யூதருக்குள் வழங்கி வந்த இந்த மூன்று படியான தண்டனைகள், இனிமேல் நடக்கப்போகிற இதற்கொப்புமையான படியுள்ள தேவதண்டனைகளுக்கு அடையாளங்களாயிருந்தன.

75. மத் (5: 24)ல் போதிக்கப்படுகிற இரண்டு பாடங்களெவை?

(1) எப்பேர்ப்பட்ட பரிசுத்த வேலையும் சகோதரனோடே ஒப்புரவாகிற கடமைக்குத் தடையாயிருக்கப்படாது.

(2) உன் சகோதரனுக்கு விரோதமான வர்மம் பகையை மனதில் வைத்துக்கொண்டு நீ தேவனுக்குக் காணிக்கை செலுத்தினால், அதை அவர் அங்கிகரிக்கமாட்டார்.—பரிசுத்த இராப்போஜனத்தை வாங்குமுன் விரோதப்பட்டவர்களோடு ஒப்புரவாகவேண்டுமென்று இந்தப் பிரமாணத்தை ஆதாரமாக வைத்தே நம்முடைய திருச்சபையார் சட்டம் கட்டியிருக்கிறார்கள். (ஜெபபுத். இரா—ஒழுங்கு).

76. (5: 25, 26)ன் பொருளென்ன?

இந்த வாக்கியங்கள் உபமானக் கருத்துள்ளவை. ஒரு சகோதரனுக்கும் நமக்கும் விரோதமுண்டாயிருக்கும்போது, நாம் மனந்திரும்பி அந்த



விரோதத்தை விட்டுவிடாவிட்டால், அந்த விரோதத்துக்குத் தண்டனையாக வருகிற தேவனுடைய நியாயத்தீர்ப்பைக்குறித்து நமது கர்த்தர் முந்திச் சொல்லியிருக்கிறார். அதைத் தெளிவாய் விளக்கும்படியாக, இந்த வாக்கியங்களில் பணக்கடன்களைக்குறித்து, உலக அதிகாரிகள் பிறப்பித்த சட்டப்படி, கடனைக் கொடுக்கவேண்டுமென்று கோர்ட்டில் எதிரி பிராதுசெய்திருக்கும்போது, முடிவான தீர்ப்புப் பிறக்குமுன் "வழியிலிருக்கும்போதே" எதிரியோடு சமாதானமாய்ப் போவது யுக்தியுள்ள காரியமாயிருப்பது எப்படியோ, அப்படியே ஒரு சகோதரனுக்கு விரோதமாக நாம் பாவம்செய்திருக்கும்போது, அந்தப் பாவத்துக்குத் தண்டனையாக தேவனுடைய கடைசியான நியாயத்தீர்ப்பு வருமுன், சமயம் இருக்கும்போதே அந்தச் சகோதரனோடு சமாதானமாய்ப் போவது யுக்தியான காரியமென்பதாய் நமது கர்த்தர் சொல்லுகிறார்.

77. மத் 5: 31 தள்ளுதல் சீட்டு ஏன் கட்டளையிடப்பட்டது?

யூதர் எந்த அற்ப முகாந்தரத்தையிட்டும் தங்கள் மனைவிகளைத் தள்ளிப்போடுவார்கள். இந்தப் பொல்லாப்புக்கு மட்டுக்கட்டும்படி தள்ளுதல் சீட்டுக்கு மோசே இடம்கொடுத்தான் (19: 8). தள்ளுதல் சீட்டுக்கு முகாந்தரம் காண்பிக்கவும், அதிகாரிகள் (உபா 22: 15) அதை ஒப்புக்கொள்ளவும், தள்ளுதல் சீட்டு எழுதவும், தள்ளவுமான நடபடிகளில் உண்மை துலங்கிவிடும்.—ஹில்லெல் (Hillel) பள்ளிக்கூடத்தில் வாசித்த சாஸ்திரிகள், உபாகமம் (24: 1)ல் "இலச்சையான காரியம்" என்ற வார்த்தைகளை எழுத்துப்படி அர்த்தம்பண்ணி, எப்பேர்ப்பட்ட அற்ப முகாந்தரத்தையிட்டும் தள்ளுதல் சீட்டைக் கொடுத்துவிடலாம் என்று போதித்து, விவாக நிலைமையை முற்றிலும் குலைத்துப்போட்டார்கள். ஷம்மாய் (Shammai) பள்ளிக்கூடத்தில் வாசித்த சாஸ்திரிகளோ அவர்களுக்கு எதிரிடையாக, ஷெ "இலச்சையான காரியம்" என்பது பூரா விபசாரம், அல்லது குறைந்த பட்சத்தில், கற்பில்லா நடக்கை என்று அர்த்தம்பண்ணிப் போதித்தார்கள். முந்திய கொள்கையே அதிகப் பிரபலமாயிருந்ததென்பதைப் பரிசேயர் கேட்ட கேள்வியினால் அறிந்துகொள்ளலாம் (மத் 19: 3).—நியாயப்பிரமாணத்தை எழுத்துப்படி வியாக்கியானம் பண்ணாமல், வழக்கமான நாட்டோடிய தாற்பரியம்செய்யவேண்டுமென்று நம்முடைய கர்த்தர் போதித்து வருகிற சம்பந்தத்தில் இதைச் சொல்லுகிறார். இப்படியாக (மத் 5: 31, 32) முந்திய வாக்கியங்களோடு நெருங்கின சம்பந்தமுள்ளவை.

32 ல் "தள்ளிவிடுகிறவன் அவளை விபசாரஞ்செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான்;" என்று சொல்லியிருக்கிறது. ஏனென்றால், தேவனுடைய பார்வையிலே அவள் செய்த முதல் விவாகம் ரத்தாகாமல் இன்னம்

அவளைக் கட்டுகிறதாயிருப்பதினாலே அவள் இன்னொருவனை விவாகஞ்செய்தால், விபசாரியாவாள். அப்படியே மனைவியைத் தள்ளிவிட்டவன் இன்னொருத்தியை விவாகஞ்செய்தால், அவனும் அதே பாவத்தைச் செய்கிறவனாயிருப்பான் (மத் 19: 9).

78. வேசித்தன முகாந்தரத்தினாலே நியாயமானபடி தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், மறுபடி இன்னொருத்தியை விவாகஞ்செய்துகொள்ளலாமா?

ஆதிச்சபையார்: குற்றமில்லாதவர்களுங்கூட மறுபடி விவாகஞ்செய்ய இடங்கொடாவிட்டாலும், அவர்கள் மறுவிவாகஞ் செய்யக் கூடாதென்று தீர்மானமாய்த் தடுக்கவில்லை. ஆதிச்சபைப் பிதாக்களில் சிலர், குற்றமில்லாதவர்கள் மறுவிவாகஞ்செய்துகொள்ளலாமென்றும், மற்றும் சிலர், செய்யக்கூடாதென்றும் அபிப்பிராயஞ் சொல்லியிருக்கிறார்கள்.

ரோமான் சபையார்: விவாகக்கட்டு வேசித்தனத்தினாலாகிலும்கூட பிரிக்கப்படக்கூடாதென்றும், இருவரில் எவராவது ஒருவர் உயிரோடிருக்கும்போது ஒருவர் வேறே விவாகஞ்செய்யக்கூடாதென்றும் திரெந்த் (Trent) சங்கத்தார் சொல்லியிருக்கிறார்கள்.

இங்கிலாந்து சபையார் (Church of England): வேசித்தன முகாந்தரத்தினாலும் விவாகக்கட்டைப் பிரிக்கிறதில்லை. அப்படியே பிரித்தாலும், பிரிந்தவர்கள் மறுவிவாகஞ் செய்யக்கூடாதென்று கண்டிப்பாய்த் தடுத்திருக்கிறார்கள் (கனோன் 107).

79. (5: 38)ன் தாற்பரியமென்ன?

நியாயாதிபதிகள் செய்யும் தீர்ப்பின்படி பதிலுக்குப் பதில் நடக்க வேண்டுமென்று நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருந்தது (யாத் 21: 22-25). ஆகையால் அநியாயஞ்செய்தவனுக்கு விரோதமாகத் தீர்ப்புச்செய்கிற நியாயாதிபதியின் மனசில் உள்பகை அல்லது பழிவாங்கும் குணமிருந்ததென்ற அர்த்தமில்லையே. துன்பஞ்செய்தவனுக்குந் துன்பப்பட்டவனுக்கும் நீதிசெய்கிறவனாக நியாயாதிபதி பதிலுக்குப் பதில்செய்வான். மேலும் நியாயாதிபதியினிடத்தில் பிராது வருமுன் துன்பப்பட்டவன் மன்னித்துவிடச் சுயாதீனமுள்ளவனாயுமிருக்கிறான் (லேவி 19: 18. நீதி. 24: 29). அப்படியே நமது கர்த்தருடைய வார்த்தைகள் நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாயல்ல, ஒருவனுக்கொருவன் தன் மனதின்படி பதிலுக்குப் பதில்செய்து பழிவாங்கலாம் என்ற கருத்து இந்தப் பிரமாணத்திலிருக்கிறதாக யூதர் நியாயப்பிரமாணத்தைப் புரட்டினதற்கு விரோதமாயே சொல்லப்படுகிறதென்றறிக.



80. (5: 40) "அங்கி" என்பதில் கவனிக்கவேண்டியதென்ன?

இது ராத்திரியில் மூடிக்கொள்ளுகிற போர்வையாம். இதை ஒருவன் ஈடாக வாங்கினால் பொழுதுபோகுமுன்னே அதைத் திரும்பக்கொடுத்துவிடவேண்டுமென்று நியாயப்பிரமாணம் கட்டளையிட்டிருந்தது (யாத் 22: 26, 27). "உன் அங்கியையும் விட்டுவிடு" என்று நமது கர்த்தர் சொல்லும்போது, உன்னைவிட்டு நியாயப்பிரமாணம் எடுக்கக் கூடாததையும் நீ விட்டுவிட ஆயத்தமாயிரு என்றர்த்தமாம்.

81. (5: 41) "பலவந்தம்" என்பதின் கருத்தென்ன?

மூலவார்த்தை, துரைத்தனத்தார் செய்யும் பலவந்தத்தைக் குறிக்கிறது. பார்சருடைய தபால்கட்டுகளைக் கொண்டுபோகும்படி, அதிகாரிகள் ஜனங்களைப் பலவந்தம் செய்வார்கள். அந்த வழக்கத்திலிருந்து இந்த வார்த்தை வந்தது. இரண்டாவது கருத்துப்படி இந்த வார்த்தை, எவ்விதமான கட்டாய ஊழியத்துக்கும் வழங்கியிருக்கிறது. திருஷ். நமது கர்த்தருடைய சிலுவையைச் சுமக்கும்படி சீமோனை "பலவந்தம்" பண்ணினார்கள் (மத் 27: 32).

82. (5: 43)ல் கவனிக்கவேண்டியதென்ன?

"உனக்கடுத்தவனைச் சிநேகி" என்ற பிரமாணம் நியாயப்பிரமாணத்திலிருக்கிறது. ஆனால் "உன் சத்துருவைப் பகைப்பாயாக" என்பது, ரபிகள் தப்பார்த்தம்பண்ணிக் கூட்டிக்கொண்டதுதான். ஆகையால் இது நியாயப்பிரமாணப் புரட்டென்று நமது கர்த்தர் கண்டிக்கிறார். நியாயப்பிரமாணத்தின் தாற்பரியத்துக்கு ரபிகளுடைய தப்பார்த்தம் எத்தனை விரோதமாயிருக்கிறதென்று இந்த வாக்கியங்களினால் தெரியவரும் (யாத் 23: 4, 5. யோபு 31: 29. நீதி 24: 17. 25: 21).

83. (5: 46) "ஆயக்காரர்" என்ற வார்த்தையின் கருத்தென்ன?

ஆயக்காரர் என்றால், ஆயம்சேர்க்கிறவர்களாம். வேதாகமத்தை இங்கிலிஷில் திருப்பினவர்கள், இந்த வாக்கியத்திலும் மற்றும் வாக்கியங்களிலும், பப்ளிக்கேனி Publicani) என்ற ரோமப் பேரை வழங்கியிருக்கிறார்கள். இந்தப் பேர், ஆயம் அல்லது வரிச் சேர்க்கிறவர்களைக் குறியாமல், தேசவரும்படிகளுக்காக ஒரு மொத்தத் தொகையை துரைத்தனத்தாருக்குக் கட்டுக்குத்தகையாகச் செலுத்திப்போட்டு, குடிகளிடத்தில் தீர்வையை வசூல்பண்ணித் தாங்களே எடுத்துக்கொள்ளுகிறவர்களைக் குறிக்கும். இவர்கள் பெரும்பாலும் பணக்காரராயிருப்பார்கள்.—ஆயம் சேர்க்கிறவர்களுக்குச் சரியான பேர், போர்ற்றிற்றர்ஸ் (Portitores) என்பதாம். இவர்கள் சிலவேளை சுயாதீனராயாவது அடிமைகளாயாவது இருப்பார்கள். சிலவேளை ஆயம்கொடுக்கிற நாட்டுச் சுதேசிகளாயிருப்பார்கள். ஜனங்களுக்கு

இவர்களுடைய வேலை வெறுப்பாயிருந்ததினாலும், இவர்கள் துர்க்கீர்த்தியான குண நடத்தையுள்ளவர்களாயிருந்ததினாலும், இவர்கள் ஒரு ஜாதியாராக மகா அருவருப்பாய் எண்ணப்பட்டு வந்தார்கள். விசேஷமாய் யூதர் வரிசெலுத்துவது ரோம அடிமைத்தனத்துக்குக் குறிப்பென்று அதின் பேரில் முழு வெறுப்புகொண்டிருந்தார்கள். யூதஜாதியான ஆயக்காரர் தங்கள் வேலையினிமித்தம் புறஜாதிகளோடு சகவாசஞ்செய்ய நேரிடுவதினாலே, யூதரான ஆயக்காரரையும் தீட்டுப்பட்டவர்களாக எண்ணிவந்தார்கள். அவர்களுடைய பேரை வேசிகளோடும் (மத் 21: 32), அஞ்ஞானியோடும் (மத் 18: 17), பாவிகளோடும் (மத் 9: 10) சேர்த்துச் சொல்லியிருப்பதே அவர்களுடைய அவகீர்த்திக்குப்போதுமான சாட்சியாயிருக்கிறது.

**84** (5: 48) "பூரணசற்குணராயிருக்கக் கடவீர்கள்" என்பதின் கருத்தென்ன?

இதற்கு இணமான வாக்கியத்தில், "இரக்கமுள்ளவர்களாயிருங்கள்" என்று லூக்கா சொல்லுகிறார் (லூக் 6: 36). இரண்டு வார்த்தைகளும் ஒரே அர்த்தமுள்ளவைகளென்று தோன்றும். 44 ம் வாக்கியத்தில் சொல்லிய கட்டளையை வற்புறுத்திக் காட்டுகிறவகையாய், தேவனுடைய அன்பின் சம்பூரணத்தை இந்த வாக்கியத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறது (5: 45). இப்படியாக தேவன் தம்முடைய அன்பை நல்லோருக்கும் தீயோருக்கும் காட்டுவது எப்படியோ, அப்படியே சிநேகிதரைப்போல சத்துருக்களையும் சிநேகிக்கிறதில் உங்கள் அன்பு நிறைவாயிருப்பதாக என்பதுதான் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள் என்ற வார்த்தைகளின் கருத்தாம்.

பெலாகியர் இந்த வாக்கியத்தைப் புரட்டி, மனுஷன் இந்த உலகத்தில் குறைவில்லாத பூரண நற்கிரியையைச் செய்யக் கூடியவன் என்று அவர்கள் சாதிக்கிற உபதேசத்துக்கு ஆதாரமாக, இந்த வாக்கியத்தை எடுத்துக் காட்டுகிறார்கள்.

**85** மத் 5 ம் அதிகாரத்துக்கும், 6 ம் அதிகாரத்துக்குமிருக்கிற சம்பந்தமென்ன?

(மத் 5: 20)ல் வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் சீஷருடைய நீதி அதிகமாயிருக்கவேண்டுமென்று நமது கர்த்தர் போதித்திருந்ததுமல்லாமல், பிந்தின வாக்கியங்களில் அதை விஸ்தரித்துக் காட்டியுமிருந்தார். அப்படியே 5 ம் அதிகாரத்தில், அந்த நீதியின் கிரியைகள் இன்னின்னதென்று விபரமும் சொல்லியிருந்தார். 6 ம் அதிகாரத்தில், அந்தக் கிரியைகளை எவ்வகையாய் எவ்வித நோக்கத்தோடே நிறைவேற்ற வேண்டுமென்று விளக்குகிறார். (6: 1)ல் தர்மம் என்ற வார்த்தைக்கு, மார்ஜினில் நீதி என்றிருக்கிறது. நீதி என்ற இந்த வார்த்தையில்தான் மேற்படி சம்பந்தம் அடங்கியிருக்கிறது.



**86.** (6: 1)ல் "தர்மம்" என்ற வார்த்தைக்கு அர்த்தமென்ன?

நீதி என்றர்த்தம். தானதர்மந்தான் நீதி என்று பிற்காலத்து ரபிகள் சொல்லிவந்தார்கள். ஆனால் இந்த வாக்கியத்தில் நீதி என்ற வார்த்தை, தானதர்மங்களை மட்டுமல்ல, ஜெபம், உபவாசம் முதலான நற்கிரியைகளை எல்லாம் சேர்த்து அடக்கமாய்க் குறிக்கிற பொதுவார்த்தை என்றறிக.

**87.** (6: 7) "வீண்வார்த்தைகள்" என்பதற்கு அர்த்தமென்ன?

கிரேக் வார்த்தைக்கு, "கொன்னிப்பேசுதல்" என்று அர்த்தம். ஆகையால் கொன்னையன் சொன்னதைத் திரும்பத்திரும்பக் கொன்னிப் பேசுவதுபோல, வீண்பக்தியான வார்த்தைகளை மாறி மாறி அலப்பவேண்டாம் என்று கருத்தாம். திருஷ்: "பாகாலே எங்களுக்கு உத்தரவு அருளும்" (1 இரா 18: 26), "எபேசியருடைய தியானாளே பெரியவள் (அப் 19: 34) என்று திரும்பத் திரும்பக் கூப்பிட்டுச் சத்தமிட்டுக்கொண்டிருந்தார்கள்". இந்துக்கள் ராமா ராமா என்றும், வேலுமயில் வேலுமயில் என்றும் ஓயாமல் மாறி மாறிச் சொல்வது இத்தன்மையுள்ளதுதான். இப்படி வீண்பக்தியாய் மாறி மாறி அலப்புகிறதை வாக்கியம் கண்டித்தாலும், ஆவலான ஜெபத்தைத் திரும்பத் திரும்பச் சொல்வதைக் கண்டிக்கவில்லை (லூக் 18: 11). ஆவலான நீண்ட ஜெபம்செய்யலாமென்பதற்கும், ஒரே ஜெபத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லலாமென்பதற்கும் நமது கர்த்தர் தாமே மாதிரி காண்பித்து அநுமதிகொடுத்திருக்கிறார் (லூக் 6: 12. மத் 26: 44).

**88.** பரி. மத்தேயு எழுதிய முறைப்படியும், பரி. லூக்கா எழுதிய முறைப்படியும் கர்த்தருடைய ஜெபத்தை எழுது?

பரி. மத்தேயு எழுதிய முறை.

மத்தேயு 6: 9—13 வாசி.

பரி. லூக்கா எழுதிய முறை.

"பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராஜ்யம் வருவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத் தாரும். எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்; நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே. எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாதேயும்" என்பதே.

அநேக பூர்வ நகல்களில், இப்பொழுது தமிழ் வேதாகமத்தில் அச்சிட்டிருக்கிறபடி கண்டிருக்கிறது (லூக் 11: 2—4).

**89.** *மத்தேயு சொல்லிய கர்த்தருடைய ஜெபமும், லூக்கா சொல்லியதும் ஒரே சமயத்தில் சொல்லப்பட்டதா?*

லூக்கா எழுதியது வேறே சமயத்தில் சொல்லப்பட்டதென்று தோன்றுகிறது. இது நமது கர்த்தருடைய ஜீவியத்தின் பிற்காலத்தில் சொல்லப்பட்டதாயிருக்கிறது (லூக் 11 அதி). முந்திய அதிகாரத்தில் சொல்லிய 70 சீஷரில் ஒருவனென்று நினைக்கப்படுகிற அவருடைய சீஷரில் ஒருவனுடைய கேட்டுக்கொள்ளுதலின் பேரில் இது படிப்பிக்கப்பட்டது. 70 சீஷர் மலைப்பிரசங்கத்துக்குப் பிற்பாடுதான் அழைக்கப்பட்டார்கள். ஆகையால் மத்தேயு சொல்லிய கர்த்தருடைய ஜெபமுறையை வேறாகவும், லூக்கா சொல்லியதை வேறாகவும் கவனிக்கவேண்டும்.

**90.** (6: 9) "எங்கள் பிதாவே" என்பதில் கவனிக்கவேண்டியதென்ன?

(உபா 22: 6 ஏசா 63: 16. 64: 8 எரே 3: 4, 19. மல் 1: 6) இந்த வாக்கியங்களில், தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்குப் பிதாவாயிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறது. (2 சாமு 7: 14 சங் 89: 26) இந்த வாக்கியங்களில் தனித்தனி ஆளுக்கு தேவன் பிதாவாயிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறது. (மத் 6: 9)லோ, பரலோகத்திலிருக்கிற பிதாவுக்குப் புத்திரரான (5: 45) சீஷர்கள் வழங்கவேண்டிய ஜெபத்தில், "எங்கள் பிதாவே" என்று கூப்பிடுகிற உறவை ஏற்ற முகவுரையாகச் சொல்லுகிறார்.

**91.** (6: 9) "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக." இந்த விண்ணப்பத்தின் கருத்தென்ன?

இந்த விண்ணப்பத்தின் வார்த்தைகளையும், இதற்கடுத்த விண்ணப்பத்தின் வார்த்தைகளையும், அப்பொழுது ஜெபஆலயங்களில் வழங்கின ஜெபங்களில் காணலாம். அவையாவன: "அவருடைய மகா நாமம் உலகத்தில் மகிமைப்படுத்தப்பட்டு பரிசுத்தமாக்கப்படுவதாக...உங்களுடைய ஜீவியத்திலும் உங்களுடைய நாட்களிலும் அவர் அரசாளும்படி தம்முடைய ராஜ்யத்தை வருவிப்பாராக" என்பதே. இதில் முந்தின விண்ணப்பத்துக்கு: பரிசுத்தமுள்ள தேவனை நம்முடைய உதடுகளினாலும் நம்முடைய நடக்கையினாலும் பரிசுத்தராகக் கனம்பண்ணவேண்டுமென்று அர்த்தமாம் (லேவி 10: 3. 22: 32. எண் 20: 12. 1 பேதுரு 3: 15). பிந்தின விண்ணப்பத்துக்கு யூதர் வழங்கின கருத்துப்படி, "மேசியாவின் ராஜ்யம் அதிதீவிரமாய் வருவதாக" என்று அர்த்தமாம். ஆனால் "உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்று கிறிஸ்தவன் விண்ணப்பம்பண்ணும்போது, மத் 5: 3—10 வாக்கியங்களில் காட்டிய ஆசீர்வாதங்கள் எப்படி இரண்டு அர்த்தமுள்ளவைகளோ, அப்படியே இந்த விண்ணப்பத்துக்கும் இரண்டு அர்த்தமுண்டு. அவையாவன:



# பாபிலோன் சிறையிருப்பு.

(தொடர்ச்சி.)

கோரேஸ் என்பவன் மேதியா தேசத்து இராஜாவாகிய அகுஸ்துவாகேயின் மகள் (Mandana) மந்தனாளுக்குப் பிறந்தவன். அவனுடைய தகப்பன் பார்சியனாகிய கம்புசே (Cambyses) இவன் பார்சியாவுக்கு இராஜனாயிருந்ததும், பொதுவான மனுஷனென்பதும் சரித்திரங்களில் ஒத்துமையில்லை. இவன் தன் தகப்பனிடத்தில் பார்சியாவில் (12) வயதுவரையுமிருந்து, சகல வேலைகளையும் படித்து வந்தான். அக்காலத்தில் பார்சு என்பது அத்தேசத்திலுள்ள ஒரு நாடாம். அப்போது பார்சியர் 12,000 மனிதருக்கு மிஞ்சியிராது. பின்பு கோரேசுடைய ஞானத்தினாலும் வல்லமையினாலும் அதை அதிக விஸ்தாரமாக்கிக்கொண்டான். கிழக்கே இந்துநதியும் மேற்கே திகிரிஸ் நதியும் வடக்கே கஸ்பியன் கடலும், தெற்கே இந்துசமுத்திரத்தின் அராபிக்குடாக் கடல்வரைக்கும் எட்டியிருக்கிற விஸ்தாரமான தேசம் பார்சு இராஜ்யமென்னப்பட்டது. இவன் 12-ம் வயதிலே மேதியா தேசத்தில் தன் பேரன் அகுஸ்துவாகேயால் வளர்க்கப்பட்டான். அங்கே (5) வருஷமிருந்தான். அங்கிருக்கையில் கோரேஸ் தன் இதமான குணத்தினாலும் தாராளமான நற்கிரியையினாலும், எந்த வேலையிலுமுள்ள முயற்சியினாலும், மேதியருடைய இருதயத்தைக் கவர்ந்துகொண்டான். பின்பு மேதியா இராஜ்யத்தையும் சம்பாதித்துக்கொள்ள நல்ல எத்தனமாயிருந்தது. இவனுக்கு (16) வயதாயிருக்கையில், பாபிலோன் அசூரியா தேசத்து இராஜாவாகிய ஏவில்மெரோதாக் வேட்டைப் பிரியனாயிருந்து, மேதியா தேசத்துக்குட் பிரவேசிக்கையில் அகுஸ்துவாகே அவனை எதிர்த்தான். அப்போதுதான் கோரேஸ் தன் பேரனோடே யுத்தத்துக்குப்போய் ஜெயங்கொண்டான். பின்பு அவன் 17-ம் வயதில் பார்சுக்குப்போய் அங்கே (40) வயதுவரைக்குமிருந்தான். அந்தக் காலத்தில்தான் அவனுடைய மைத்துனன் குவக்சரேஸ் தனக்கு உதவிக்கு பாபிலோனியாமேல் யுத்தஞ்செய்யப் படைசேர்த்து வரக்கேட்டான். இவன் 20-வருஷத்துக்குள் பார்சுதேசத்தை விஸ்தாரமாக்கி, அது 200-வருஷம் நிலைத்திருக்கும்படி ஞானமாய் அநேகம் ஏற்பாடுகளைச் செய்திருந்தான்.

கி. பி. மு. 558-ல் கோரேஸ் அதிகப் படையோடே தனக்கு விரோதமாய் வருகிறதை அறிந்து, நெரிகிலிச்சார் தன்னைப் பலப்படுத்தும்படிக்கு லீதியர், பிரிகியர், காரியர், கப்பதோக்கியர், கிலிக்கியர் முதலான ஜாதியாரின் இராஜாக்களுக்கு ஸ்தானபதிகளை அனுப்பி, சேனை சேர்த்துவரும்படிக்கு செய்தி அனுப்பினான். கி. பி. மு. 557-ல் அர்மேனியா தேசத்து இராஜா வழக்கம்போல மேதியா இராஜாவுக்குக் கப்பங்கொடாததால், கோரேஸ் போய் அவனை அடக்கிக் கப்பங்கொடுக்கச் செய்தான்.

கி. பி. மு. 556-ல் இருபட்சத்தாரும், (3) வருஷங்களாய்த் துணைப்படைகள் சேர்த்து நெரிகிலிச்சாரின் 4-ம் வருஷத்தில் யுத்தஞ்செய்ததில் பாபிலோனியர் முறிந்தோடிப் போனார்கள். நெரிகிலிச்சாரும் கொலை செய்யப்பட்டான். அசூரியாவின் சேனையும் ஓட்டம் பிடித்தது. கோரேஸ் ஜெயங்கொண்டான். நெரிகிலிச்சார் இறந்தபின்பு லீதியா தேசத்து இரா

ஜாவாகிய (Craeseis) கிரீசஸ் என்பவனே சிதறப்பட்ட சேனைக்குத் தலை
வனாயிருந்து, தன்னாலானமட்டும் யுத்தஞ்செய்தான். கோரேஸ் மறுநாளில்
அவர்களைப் பின்தொடர்ந்துபோய் அவர்களுடைய் கூடாரங்களையும்
சாமான்களையும் கொள்ளையடித்தும், முதல்நாள் இரவில் கலகஞ்செய்த
(Hyrcanians இரக்கானியருடைய உதவியினால் கோரேஸ் சத்துருக்களைத்
துரத்தி அடித்தான். கிரிசஸ் என்பவன் தன் பெண்சாதிகளையும், சாமான்
களையும் முந்தின நாள் இரவில் அனுப்பிவிட்டு, மறுநாளில் இவனும் அதி
சயமாய்த் தப்பிக்கொண்டான்.

நெரிகிலித்சாருடைய மரணம் பாபிலோனியருக்கு அதிக நஷ்டம்.
அவன் வெகு தைரியமும் பலமுமுள்ள பிரபு. இவன் மரித்தபின் அவனு
டைய மகனாகிய (Laborosoarchod) லாபொரொ சோவார்கோது என்ப
வன் பட்டத்துக்கு வந்தான். இவனோ கொடுமை, அநியாயம் துன்மார்க்
கங்களில் பழக்கமுள்ளவனாயிருந்தான். இவன் வேட்டையாடப்போன
ஒரு சமையத்தில் தன்னுடைய கைக்குத் தப்பின ஒரு காடியையும், சிங்
கத்தையும், தன்னோடே வேட்டையில் கலந்த (Gobrias காபிரியஸ் பிரபு
மகன் ஈட்டியினால் குத்திக்கொன்றதையிட்டுக் கோபங்கொண்டு அவனைக்
கொலைசெய்தான. ஒருதரம் தன் வைப்பாட்டி (Gadates) காதேடீஸ் என்ற
பிரபுவை அழகுள்ளவனென்றதால் அவனை அண்ணகனாக்கிப்போட்
டான். இந்தக் கொடுமைகளினால் அந்த (2) பிரபுக்களும், தாங்களாண்ட
நாட்டைவிட்டு ஓடிப்போய்க் கோரேசைச் சார்ந்துகொண்டதால் பாபி
லோனியர் அதிக நஷ்டம் அடைந்தார்கள். இதினால் கோரேஸ் பாபி
லோன் இராஜ்யத்துக்குட் சென்று, இரண்டு பிரபுக்களுடைய கோட்டை
களையும் பிடித்துக்கொண்டான். இதற்காக அந்தப் பிரபுக்களைப் பழிவாங்
கும்படி இராஜன் சண்டைக்கு வர கோரேஸ் அவர்களுக்காக யுத்தஞ்
செய்து பாபிலோனியரை ஓட்டம் பிடிக்கச்செய்தான். பின்னும் அவன்
அநேக வகைகளில் கொடுமைசெய்ததால் குடிகள் அவன் அரசாண்ட
9-ம் மாதத்தில் கலகம்பண்ணி அவனைக் கொலைசெய்தார்கள்.

கி. பி. மு. 555-ல் (Nabonadius) நாபோநாதியு 17-வருஷம் அர
சாண்டான். இவன்தான் வேதத்தில் (Belshazzar) பெல்ஷாத்சார் என்னப்
பட்டவன். சரித்திரக்காரருக்குள் பேரைப்பற்றி பலபல வித்தியாசமுண்டு.
சிலர் இவனை ஏவில்மெரோதாக் மகன் என்பார்கள். சிலர் இவன் நேபு
காத்நேச்சாருக்குச் சம்பந்தப்பட்டவனல்லவென்பார்கள். சிலர் அவனை
ஒரு பாபிலோனியன் என்றும், சிலர் மேதியனென்றும் சொல்வார்கள்.
இவன் நேபுகாத்நேச்சாருடைய பேரன் என்பதே பொதுக்கொள்கை.
இவன் பாபிலோனில் கடைசியானதாலும், (2) பெல்ஷாத்சாருடைய
மரணத்துக்குப்பின் உடனே (தானி 5: 28-31.) இராஜ்யம் மேதோ பார்
சருக்குக் கொடுக்கப்பட்டதாலும், (3) 2 நாளா. 32: 20 லும், தானி.
5-அதிகாரத்திலும், நேபுகாத்நேச்சார் மகனென்று சொல்லியிருப்பதாலும்,
(4) எரே. 27: 7-ல் கிழக்கத்தி சாதிகள் நேபுகாத்நேச்சாராலும், அவன் மக
னாலும், அவன் பேரனாலும் ஆளப்படுமென்று சொன்ன தீர்க்கதரிசனம்
நிறைவேறவேண்டியதாலும், பெல்ஷாத்சார் ஏவில்மேரோதாக்கின் மக
னே. பாபிலோன் இராஜ்யம் அவர்களால் மாத்திரம் ஆளப்பட்டது.
(5) நேபுகாத்நேச்சாருக்குப்பின் ஏவில்மெரோதாக்கும் அவனுக்குப்பின்
பெல்ஷாத்சாரும் ஆண்டார்கள். நெரிகிலிதசார் அவனுடைய மகளின்
புருஷன். லாபொரோகோதும் நெரிகிலிதசாரின் மகன். இவர்களிருவரும்
நேபுகாத்நேச்சாருக்கு மக்களுமல்ல, பேரன்மாருமல்ல, (6) பாபிலோன்



தேசத்து கடைசி இராஜா, பெரிய இராஜாத்தியாகிய (Nitocris) நித்தோ
கிரிஸ் என்பவளின் மகனென்று (Herodotus) எரோதோத்துஸ் சொல்லு
கிறான்.

மேற்காட்டிய நியாயங்களினால் பாபிலோனின் கடைசி இராஜா
வாகிய நாபோநாதியு என்பவனே பெல்ஷாத்சார் என்றும் அவன் ஏவில்
மெரோதாக்கின் மகனென்றும், நேபுகாத்நேச்சாரின் பேரனென்றும் தெரி
யவருகிறது. வேதமுறைப்படி இவனைத் தானியேல் 5-ல் நேபுகாத்நேச்சா
ரின் மகனென்னப்படுவது ஆச்சரியமல்ல.

ஏசாயா தீர்க்கதரிசி நேபுகாத்நேச்சராலும் அவன் வம்சத்தாராலும்
இஸ்ரூவேல் தேசத்துக்குண்டாகும் கொடுமைகளைக் காட்டுமிடத்தில்
நேபுகாத்நேச்சாரை பாம்புக்கொப்பாகவும், ஏவில்மெரோதாக்கைக் கட்டு
விரியனுக்கொப்பாகவும், பெல்ஷாத்சாரை பறக்கிற நெருப்புப் பாம்புக்
கொப்பாகவும் காட்டுகிறார். ஏசா. 14: 29.

மேதியாவின் இராஜாவாகிய குவக்சரோஸ் என்பவன் கோரேசுடைய
பாளையத்துக்கு வந்து, யுத்தகாரியங்களைப்பற்றி ஆலோசித்துக்கொண்ட
தில், பாபிலோனிலுள்ள தேசங்களைக் கொள்ளையடிப்பதினால் நம்மு
டைய தேசம் விஸ்தாரமாகமாட்டாதென்றும், இனி ஒவ்வொரு மதிலுள்ள
பட்டணத்தையும், நாடுகளையும் முற்றிக்கைபோட்டுப் பிடித்து ஆளுகை
செய்யவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார்கள். இப்படியே 7-வரு
ஷமாய் யுத்தம் நடந்தன.

இதற்கிடையில் Nitocris நித்தோகிரிஸ் என்ற இராணி, பட்டணத்
தின் மதிலையும், மற்றும் தேசங்களையும் அரணிப்பாக்கி, ஆற்றின் இரு
கரைகளையும் பழுதுபார்த்தாள். ஆற்றுக்குள் நிலவறையும் செய்துகொண்
டாள்.

கி. பி. மு 555-ல் இராஜாவுடைய 1-ம் வருஷத்தில் எருசலேமின்
அழிவின் 34-ம் வருஷத்தில் தானி. 7-அதி-ல் கண்ட 4-இராஜ்யங்களை
யும், கடைசியாக மேசியாவின் இராஜ்யத்தையும்பற்றிய தரிசனை வெளிப்
படுத்தப்பட்டது.

கி. பி. மு. 553-ல் பெல்ஷாத்சாரின் 3-ம் வருஷத்தில் தானியேல்
செம்மறிக்கடாவையும், வெள்ளாட்டுக்கடாவையுங் கண்டதரிசனை காட்
டியிருக்கிறது. இதில் பார்சு இராஜ்யம் மகாஅலெக்சந்தரால் அழிவதைப்
பற்றியும், சூரியாவின் இராஜாவாகிய அந்தியோகு எப்பிப்பானியுவால்
யூதருக்கு நேரிடுகிற துன்பத்தைப்பற்றியுங் குறிப்பாய் காட்டியிருக்கிறது.
தானி. 8-அதி

அந்தத் தரிசனம் சூசான் நகரியிலுள்ள அரண்மனையில் காணப்பட்
டதென்று சொல்லியிருப்பதால் அந்தக்காலத்தில் சூசான் நாடு பாபி
லோனியர் வசமாயிருந்ததென்று விளங்குகிறது. 3-வருஷத்துக்குப்பிற்
பாடு ஏலாம் நாட்டுக்கு அதிபதியான (Abradates) ஆபராதேடிஸ் கோரே
சோடே சேர்ந்துகொண்டான். சூசான் பட்டணம் ஏலாம் நாட்டுக்கு
இராஜதானி மேதியர் பார்சியரோடே ஏலாமியரும் பாபிலோனை முற்றிக்
கைபோட வந்திருந்தார்கள். (ஏசா. 21: 2.) பின்பு ஏலாம் பார்சியரால்
சுயாதீனமாயிற்று. எரே 49: 39.

# இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

ஆசி மங்கள சாதன மருளிய வமையம்
மாசி லாவருண் முகிலேயோர் மழைமுகில் வளைப்பத்
தேசு மல்கிய திருவுருக் காண்கிலார் சீடர்
மூசு பைம்புயல் விசும்புற முடுகுதல் கண்டார். 1361

மிக்க பேரதி சயத்தொடு மேலுற நோக்கித்
தொக்கு நின்ற வேதியர்மருங் கோரிரு தூதர்
புக்கிவ் வாண்டகை யேகிய புதுமையே போல
மைக் கரும்புயல் மீதுற மீண்டினி வருவார். 1362

என்கொல் வானுற நோக்கிநீர் நிற்பதிங் கென்று
மின்கு லாவிய வுடையினர் வெள்ளிடை கரப்பப்
புன்க ணோடி யவரெலாம் பொருப்பைவிட் டகன்று
நன் கொருப்படு மனதராய் நகரியின் மேவி. 1363

நம்பிரான்றிரு வாக்கினில் நலந்திக ழாவி
இம்ப ருற்றிடு காறுமா லயர்தரித் திருந்து
பைம் புயற்றிரள் நோக்குவான் பயிலெனக்குரவர்
உம்பர் நோக்கிய சிந்தையர் ஒருங்குதொக்கிருந்தார். 1364

மேக வாகன ரூடராய் விட்புலத்துருவி
மாக மீதுமீ துயர்பதம் யாவையும் வளைந்து
சோக நீங்கிய சுரகணந் தொழுதுவாழ்த் தெடுப்ப
ஏக நாயகன் சந்நிதி யடைந்தன ரெம்மான். 1365

ஒரு மகன்பர திரித்துவத் தொருத்தவர் உரிமைத்
திரு மகன்றம தாணையி னெழுகிய செல்வன்
கரும பூமியிற் பிரிந்துபோய்க் கடுந்துயர் அடைந்த
வரும கன்னெனிற் றந்தையி னுவகையார் வகுப்பார். 1366

புனித மாயுயர் போதமாய் விளங்கிய புத்தேள்
கனித னீர்மையிற் காதலற் குவந்துகை யளித்த
தனித மாரருள் பொழிகிரு பாசனந் தன்னில்
இனிது வீற்றிருந் தருளினர் கிறிஸ்துவா மீசன். 1367

சந்ததம் நரஜீவருக் கிரக்ஷணை சமையச்
சுந்தரத் திரு மேனியிற் றுலங்குமைங் காயம்
தந்தை யார்திரு விழிப்படுத் தின்னருள் தழைப்ப
விந்தை யாகமன் றூடலே நம்பிரான் வேலை. 1368

மூன்றொன் றாகிய முழுமுதல் முந்துநின் ணயம்போல்
தோன்றல் வேண்டலிற் றந்தையார் தூயநல் லாவி
ஆன்ற ஜீவகோடி களுய்ய மெய்யறி வளிப்பான்
என்று வந்தரு ளுநக்கொடு மகிதலத் திறுத்தார். 1369



கோதி லாத்தவம் புரிந்துதே வாலயங் குழீஇய
ஆதி தேசிக ரிடத்தனல் வடிவமா யமர்ந்து
பூத லத்தில்நங் கிறிஸ்துவின் புண்ணியம் பொலியக்
காத லாய்வர மளித்தனர் கதிவழி காட்டி. 1370

அன்று தொட்டருட் குருபரம் பரைநிய மத்தால்
இன்று காறுநின் றவித்தையை யிகலற றூறி
ஒன்றி யாலம்வித் தீண்டல் போலுலகெலாம் பரம்பிக்
குன்று றாதுமெய்த் திருச்சபை குலவுகின் றதுகாண். 1371

அனந்தர் நீக்கிமெய் யறிவினைக் கொளுத்தியாண்டகைபால்
மனந்தி ருப்பிர க்ஷணைவிசு வாசத்தை வளர்த்துத்
தினந்தினம் புதி தாக்கியான் மாக்களைத் தெருட்டல்
அனந்த மங்கள ஆவியின் அருட்செயல் அறிதி. 1372

வாழி வாழியோர் திரித்துவ நாமத்தின் மகிமை
வாழி மன்னுயிர்க் கிரக்ஷணை வழங்குவண் சுருதி
வாழி மெய்யடி யார்குழுஉந் திருச்சபை மரபு
வாழி மெய்க்குரு பரம்பரை யூழிய மாண்பே. 1373

வேறு.

மல்குக ஜீவர்க் கெல்லா மதிநலந் தருமெய்ஞ் ஞானம்
புல்குக அறங்க ளெங்கும் புரையிலாச் செங்கோ லோங்கி
வெல்குக மெய்ம்மை யென்றும் விளங்குக கல்வி செல்வம்
பல்குக உலகமெங்கும் பரம்புக நன்மை மாதோ. 1374

நன்றுல கனைத்துந் தந்து நலந்தருந் தந்தையாக
வென்றி சேர் மைந்த னாக விபுதாவி யாகவொன்றும்
மன்றல்சேர் திரியே கற்கு மகிமையுங் கனமு மாறா
தென்றுமுள் ளனபோ லின்று மென்றுமுண் டாகுமென். 1375

வேறு.

இத்திற நராத்தும இரக்ஷணை முடித்த
வித்தக சரித்திரம் விரித்தினி துரைக்க
உத்தம கிறிஸ்தவ னுணர்ச்சியொடு கேட்டே
பத்திமுக நோக்கிவிந யத்தொடிவை பன்னும். 1376

ஆசறு மனத்தினென தனை யருளாளன்
பேசரிய பாடுகள் பிறங்குசரி தத்தை
மாசில்விசு வாசம்நனி மல்கியுர மாக
நேசமொ டுணர்ந்தினையெ னெஞ்சிடை யழுந்த. 1377

பூவலய முய்யவரு புண்ணியமு நித்ய
ஜீவநிலை யுமினிது சித்திபெறு மாறும்
ஓவற விளக்கினை யிதோர்ந் தளியனுற்ற
ஆவதுகொல் நிற்கொருகைம் மாறுபிறி தம்மா. 1378

பண்டை மறை பன்முறை படித்துமுள னேனும்
ஒண்டொடிநின் வாய்மொழிக ளூட்பொரு ளுணர்த்தும்
எண்டகு விளக்கமித யத்தொளிர வைத்தாய்
அண்டருல கெய்துவரை யும்மவிவ தின்றால். 1379

நன்மை யளி யேமுற நலந்திகழு நம்பன்
கொன்மலி தருங்குருசி லேகுருதி சிந்தித்
தன்மன மூவந்துதலை சாய்த்ததிருக் கோலம்
என்மன விழிக்கெதிரி லெனறுமுள தெம்மோய். 1380

நொந்துவதை யுண்டதிரு மேனியு நொறுங்கிச்
சிந்துதிர மும்புனித ஜீவவுண வாகும்
சந்தத நுகர்ந்து வரு சாதகம் விளைக்கும்
விந்தையுறு சிற்சுக மிதேயெனவிசு வாசம். 1381

இற்றையிர வும்மிட மிறத்தரிய போதம்
உற்றது மகேசன்ரு ளூற்றுதவு பேறும்
நற்றவ நலத்தியென நன்றியறி தக்க
பெற்றியன் வணக்கமொடு பேசினன் வழுத்தி. 1382

ஏனையரும் நன்றிதெரி யின்னுரை இயம்ப
ஆனன மலர்ந்தனைவ ரும்மமுத மனன
போனக மமைந்துவர வுண்டுபுது வமைத்த
தானறிய சிற்சுவைய பானநறை துய்த்தார். 1383

மருந்தனைய தைவிக மகாகருணை மல்கும்
விருந்தினி தருநதியபின் மெய்யுணர்வி னுள்ளார்
திருந்தடியர் நன்றியொடு செம்மலை யிறைஞ்சிப்
பொருந்துதுதி தோத்திர முறைப்படி புகன்றார். 1384

மற்றிவை நிகழ்ந்தபின மாண்பினர் மகிழ்ச்சி
உற்றொருவ ருக்கொருவர் அன்பின் விடைஉய்ப்ப
நற்றவனும் அங்கவர் நயந்தினி தளித்த
விற்றவழு மாளிகையின் மேனிலை புகுந்தான். 1385

ஜீவவச னத்திரு விளக்கொளி திகழ்ந்து
மேவக இருட்டற விளக்க விசுவாசத்
தாவலொடு மாண்டையரு ளாசன மடுத்துப்
பாவலர டைக்கல இயற்றமிழ் படிப்பான். 1386

தேவாரம்.

கையடைப் பதிகம்.

ஓதியே சுருதி தினந்தினம் படித்து முணர்விலா துலகொழுக் குவந்து
தீதிலே பயின்று செந்நெறி யிகந்த தீயனே னுய்யுமா றறியேன
கோதிலா நீதிக் கொழுங்கதிர்ப் பிளம்பே குணிப்பருங் கருணைவா ரிதியே
ஆதியே யடியே னின்சர ணடைந்தேன் அஞ்சலென் றடைக்கல மருளே. 1

பத்தனாய்ப் பாடேன் சுத்தனா யொழுகேன் பகலெலாம் பாவமே பழகி
எத்தனைக் கழித்தேன் இன்னமு நாளை யிலனென வெண்ணவும்படுவேன்
பித்தனேற் குனது பேரருளல்லாற் பிழைக்குமா றில்லையா தலினால்
அத்தனே யடியே னின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கல மருளே. 2

கலைக்கணுக் கரிய காட்சியே சிரத்தைக் கண்ணினுக் கெளியகண் மணியே
புலைக்குடி லோம்பும் புன்மதி யதனாற் பொருவரும் பொழுதைவீண் போக்கி



உலைக்கம டம்போ லுலகமா யத்தை யுவந்தநின் மூடனென் றுளச்சான்
றலைக்கொருத் தடியே னின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கலமருளே.

மண்டலத் தெனைப்போற் பாவியுமில்லை மற்றெனைப் பொருவதோர் தெய்வம்
உண்டெனுக் காலென் றுணர்வுளா ரொவரு முரைத்திடா ருண்மையா தலி
தொண்டருக் கிரங்கி மநுவுரு வெடுத்த தொல்லைமூ லப்பரஞ் சுடரோ (னல்
அண்டருக் கரசே நின்சர ணடைந்தே னஞ்சலென றடைக்கல மருளே. 4

வெப்புறு பாவ விடத்தினைப் பருகி மெய்யறி விழந்துனை மறந்தேன்
அப்புற வுலக மடுக்கிலெ ன செயகேன் ஆண்டெனக் காதர வியாரோ
ஒப்பற வுயர்ந்த வொருதனி முதலே யுணர்வுடை யோலத்துக் குருகும்
அப்பனே யடியே னின்சர ணடைந்தேன ஞ்சலென் றடைக்கல மருளே. 5

எனுதியா னென்னு முடல்பொரு ளாவி யிவையொரு மூன்றையு மின்னே
உனதென வுனக்கே கையளித் தெளியே னுன்னருட் பற்றையே யுவந்து
மனுநிதத் துவங்கட் கதீதமாய் அன்பர் மனத்தவி சுகந்துவீற் றிருக்கும்
அநாதர க்ஷகனே நின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கல மருளே. 6

படித்தொழும் பாகிப் பதைத்துழல் வேனைப் பரிந்துன தருள்விழி பரப்பிக்
குடித்தெழும் பாக்கிக் கொண்டகோ மானே குன்றிடா விழுநிதிக்குவையே
மிடித்தொழும் பினையு மகற்றிடா தெனனே விநயமே துமபிறி துளதோ
அடித்தொழும் பலனே வப்பனே யடியேற் கஞ்சலென றடைக்கலமருளே 7

உருளுறு சகடம் போலவென் மனமு மொருவழி நிலையிலா துழலும்
மருளுறு முலகோ டலகையுங் கொடிய மாயமாம் வலையிடைப் படுத்தும்
தெருளுறு பொருளே நினனடிக் கபையு செய்குநா னுய்யுமா றெங்ஙன்
அருளுறு மென்தாய் நின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கல மருளே. 8

என்புதோல் போர்த்த யாக்கையைச் சதமென் றெண்ணியாத் துமத்தை
(யெட்டுணையும்
முன்பினெண் ணாது புரிந்ததீ வினையென் முன்புநின் றுடற்றலால் முதிர்
(பேர்
இன்பநாட் டரசே புண்ணியப் பொருப்பே யிருநிலம் புதைத்தெழுந் தோ
(ங்கும்
அன்பினர் கலியே நின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கல மருளே. 9

புறத்தொரு புகலு மிலையுனை யல்லாற் பொய்யுறு மலகையின் புணர்ப்பாம்
முறத்தினிற் புடையுண் டயருவேன் கருணை முளரியை மூடுதன்முறை
மறத்தியோ மாறு மெய்த்திரு வாக்கை வரதனே யபயனே வண்மை (யோ
அறத்தனி முதலே நின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கல மருளே.

மருண்மனே வாஞ்சைச் சுழலிலே யுழலும் வறியபுன் றிரணமென் னாவி
இருண்மலோ ததிபுக் கழுந்திடி லந்தோ வென்செய்கே னேழைநின் னடி
தெருண்மனோ கரமே ஜீவதா ரகமே திகழ்குண மேருவே சீர்சால் (மை
அருண்மகோ ததியே நின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கல மருளே.

வேதமே வேத விளக்கமே விளக்கின் விழுத்தகு ஜோதியே விமல
போதமே போதங் கடந்தமெய்ப் பொருளே பொருள்புலப் படவெளிவந்த
நாதமே யூத குலநரா திபனே நன்னெறி பிழைத்துல குழலும்
ஆதனே னடியே னின்சர ணடைந்தேன் அஞ்சலென் றடைக்கல மருளே.12

வாழியா ரணநூல் வரம்பெலா மிகந்து மதியிலாப் பேதையான் மயங்கிக்
கீழியான் பிழைத்த பிழையெலாம் பொறுத்துன கிருபைதந் தருளெனக்கெ
ஊழியா யூழிக் குறையுளா யெவையு மூலப்பினு மூலப்பிலாத் தரும ஞ்சி
ஆழியா யடியே னின்சா ணடைந்தேன் அஞ்சலென் றடைக்கல மருளே.

கையடைப்திக முற்றிற்று.

---

## HELP TO READING THE EPISTLE TO THE HEBREWS.

---

## எபிரோயர் நிருப வாசிப்புத் துணை.

i. எபிரோயர் நிருபத்திற்குரிய பிரதான குறிப்புகள்.
ii. இந்த நிருபம் எழுதப்பட்ட முகாந்தரம்.
iii. இந்நிருபத்தில் அடங்கிய அருமையான பொருள்.
இம்மூன்று காரியங்களைக் கவனிப்போம்.

i. இந்த நிருபத்தைப்பற்றிய குறிப்பு.

1. தேவஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டிருக்கிற புதியஏற்பாட்டு நிருபங்களில் ஆக்கியோன் பேர் இல்லாதிருக்கிற நிருபம் எபிரோயர் நிருபம் ஒன்றுதான்.

2. வாழ்த்துதல் அடங்கிய முகவுரையும் இதற்கு இல்லை. யோவான் எழுதின பொதுவான முதலாம் நிருபம் முகவுரை இல்லாதிருக்கிறது.

3. யூதக் கிறிஸ்தவர்களுக்குத் தேவன் தொடர்ச்சியாய் அறிவித்திருக் கிறவைகளுக்குள் இந்த எபிரோயர் நிருபமும் சேர்ந்தது. ஆகையால் இதை யாக்கோபு நிருபம் பேதுருவின் முதலாம் நிருபம், பேதுருவின் இரண்டாம் நிருபம் ஆகிய இவற்றோடு சேர்க்கத்தகும்.

4. எபிரோயர் நிருபம எருசலேம் தேவாலயம் அழிக்கப்படுமுன் எழுதப்பட்டதென்பதைக் காட்டும் அக அத்தாக்ஷி உண்டு. பேதுருவின் முதலாம் நிருபத்திற்கும் இரண்டாம் நிருபத்திற்கும் இடையில் அதை வாசிக்கவேண்டும். யூதக் கிறிஸ்தவர்களின் உண்மையான மனதை எழுப்பிவிடும்படி பேதுருவின் இவ்விரண்டு நிருபங்களும் எழுதப்பட்டிருக் கின்றன. 2 பேதுரு 3: 1, 2. அவ்வாறு எபிரோயர் நிருபத்திலும் அவர் களுக்கு அநேக புத்திமதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. எபி. 13: 22.

I இந்நிருபம் எழுதப்பட்ட முகாந்தரம்.

யூதக் கிறிஸ்தவர்கள் சீக்கிரத்துக்குள்ளாக மறுசலித்துப்போவதற்கேதுவான மோசத்திலிருந்தபடியால் அவர்களை உறுதிப்படுத்தும்படி எழுதப் பட்டது. மார்க்கத் தேர்ச்சி உண்டுபண்ணும் ஆவிக்குரிய ஜீவநீரோட்டம் முன்னுக்கு ஏருமல் பின்னுக்கு இறங்கத்தக்க சமயமாயிருந்தது. ஆகை யால் அப்போஸ்தலன் ஆவிக்குரிய வைராக்கியமுண்டவராய் அந்தக் கிறிஸ்தவர்களின் ஞானவளர்ச்சி வளராமல் அந்தப்படியேயிருந்தால் ஒரு நிமிஷத்திலே குறைந்துபோகுமென்றறிந்து அவர்களுக்கு இந்த நிருபத் தில் பின்வருகிறபடி எழுதுகிறார். "நாம் கேட்டவைகளை விட்டு வில காதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்.



நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்
ளுவோம். சகோதரரே.. நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். நாடோறும்
ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள். தைரியமாய்க் கிருபாசனத்தண்
டையில் சேரக்கடவோம். நீங்கள் கேள்வியில் மந்தமுள்ளவர்கள். பாலை
உண்ணத்தக்கவர்களானீர்கள். இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்
னும் எதிர்த்து நிற்கவில்லையே. உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதி
யை மறந்தீர்களே. நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்
கள் திரும்ப நிமிர்த்துங்கள்." இப்படி எழுதினாலும் அவர்களுடைய விசு
வாசத்திலிருந்தும் நற்கிரியைகளிலிருந்தும் விலகிப்போனார்களென்று தீர்
மானமாய்ப் பேசவில்லை. அவர்களுக்குள் "நன்மையான" காரியங்களி
ருந்ததாக தைரியங்கொண்டிருந்தார். ஆனால் அவர்களைப்பற்றித் தமக்
கிருந்த சமுசயத்தை அடக்கிக்கொள்ளவுமில்லை. "Lest" "போகாத
படிக்கு" என்ற வார்த்தையை அவர் எட்டுத்தரம் இதில் வழங்கியிருக்கிற
தை நாம் பார்க்கலாம். தவிரவும் மோக்ஷகரை சேர்ந்த விசுவாசிகளின் திரு
ஷ்டாந்தங்களைகொண்டு ஒருவராவது பின்வாங்கிக் கெட்டுப்போகாமல்
இரக்ஷிப்பு நிறைவேற விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படி அப்போஸ்தல
னுடைய இயல்பின்படியே "போராடிப் பிரயாசப்படுகிறார்."

---

## A GEM.

## முத்தாபரணம்.

இவள் திருநெல்வேலி ஜில்லா, பாளயங்கோட்டைப் பகுதியில்,
சற்குணன் சத்தியநாத ஐயருடைய அருமைக் குமாரத்தி. சுவிசேஷபுரத்
தில் பிறந்தவள். குழந்தைப்பிராயத்திலேயே சிறப்பாய் வாசிக்கவும் திருத்
தமாய் எழுதவும் சித்திரமாய்த் தைக்கவும், சிங்காரமாய்ப் பாடவும் பழகிக்
கொண்டாள். வேதாகமத்தில் அநேக வாக்கியங்களை அவதானமாய்ச்
சொல்வாள். தன் தகப்பனார் முதலில் வேதகவிஞர்கள் பாடிய கீர்த்த
னைகளில் அநேகத்தை மனப்பாடம்பண்ணிக்கொண்டு கேட்டவர்கள்
விடாய்தீரத்தக்கதாய்ப் பாடுவாள்.

தன் தகப்பனுருடைய சபையில் ஸ்திரீ ஜனங்களில் சிறியோர் பெரி
யோருக்கும் ஞானோபதேசவினாவிடைகளும் வேதபாடங்களும் ஞானப்
பாட்டு ஞானபத கீர்த்தனைகளும் பாடம்பண்ணுவித்து ஜெபக்கூட்டம்
வைத்து, இன்பமாய்ப் புத்திசொல்லி ஜெபம்செய்து அனுப்புவாள்.

எந்நேரமும் முகமலர்ச்சியாய் இருப்பாள். தகப்பனார் வீட்டுப்பணி
விடைகள் எல்லாம், அதது கருமம் அதது வேளை தப்பாமல் நிறைவேற்றி
வைப்பாள். எப்போ பார்த்தாலும் வீடுவாசல் எல்லாம் துப்புரவும் செவ்
வையுமாய் இருக்கும். யாரிடத்திலும் தயவுபாராட்டி, தன் நிருவாக அள
வில் வறிஞருக்கு உபகாரம்செய்ய சாக்கிரதையாய் இருப்பாள்.

அவள் பதினெட்டு வயதில் விவாகமாகி, கொழும்புக்கு வந்து இர
ண்டு வருடம் புருஷனோடு வாழ்ந்ததில், வேதவிஷயத்திலும், சன்மார்க்க
முயற்சியிலும், பணிவிடையிலும், கீழ்ப்படிதலிலும், அன்பின் கிரியை
களிலும் புருஷனுக்கு மாதிரியாய் இருந்தாள். நமது அருமை இரக்ஷகரின்

பாடுகள் மரணம் முதலியவற்றின் கவிகளே அவள் வாயில் எப்போதும் இருந்து, அவன் பணிவிடைகளின் ஆயாசத்தை ஒருவாறு லகுவாக்கிற்று. அவள் முறையாய் வேதம் வாசித்து, ஞானப்பாட்டுகளும் கீர்த்தனைகளும் படித்து ஜெபம்செய்வாள். எதுகாரணமாயேனும் ஜெபம்செய்யாமல் புருஷன் நித்திரைபோகக் கண்டால், எவ்விதமும் எழுப்பி ஜெபம்செய்விப்பாள். ஓய்வுநாளுக்குக் காத்திருப்பாள். சனிக்கிழமையே சகலத்தையும் ஆயத்தமாக்கி வைப்பாள். புருஷனுக்கு உடுப்புமுதலியவைகளை ஆயத்தமாய் எடுத்துவைப்பதோடு, காணிக்கைக்குப் பணமும் லேஞ்சியில் முடிந்து வைப்பாள். விசேஷகால ஆராதனைக்கு அதற்குத்தக்கபடி காணிக்கை முடிந்துவைப்பாள். வியாதி ஒழிய வேறொன்றும் அவள் ஆராதனைக்குப் போகத் தடையாய் இராது. சின்னம்சிறு காரணங்களை பொருள்பண்ணாள். கோவிலுக்கு ஆராதனை துவக்குமுன் போய்க் காத்திருக்க எப்போதும் தெண்டிப்பாள். ஞாயிற்றுக்கிழமை முழுவதும் அவளுக்குப் பரிசுத்தமாய் இருந்தது.

அவள் வியாதியாய் இருக்கையில், கூடியபோதெல்லாம் வேதம் வாசிப்பாள். புருஷனையும், தன்னைப் பார்க்க வருகிறவர்களையும் வாசிக்கும்படி கேட்டுக்கொள்வாள். தன் கண்ணுக்குமுன் வேதவாக்கியங்களை எழுதித் தூக்கும்படி புருஷனை அலட்டுவாள். தன்னைப் பார்க்க வந்தவர்களோடு இன்பமான வேதசம்பாஷணை பண்ணுவாள். அவர்கள் வரும்போதும் போகும்போதும் நன்றியோடு சலாம்செய்வாள்.

தான் மரணிக்கப்போகிறதை நிச்சயமாய் அறிந்து, கிறிஸ்துவுக்குள் தன்னை திடப்படுத்திக்கொண்டு, ஆறுதலும் சமாதானமுமாய்க் கர்த்தர் வருகைக்குக் காத்திருந்தாள். மரிக்க மூன்றுநாளைக்குமுன் அவளுக்குப் பரிசுத்த நற்கருணை பரிமாறப்பட்டது. மிகச் சந்தோஷமாய் வாங்கிச் சாப்பிட்டாள். தன் ஆவியைக் கர்த்தரிடத்தில் ஒப்புவிக்கும்வரையில், "கர்த்தாவே ஏழைப்பாவியாகிய என்மேல் இரக்கமாய் இரும்" என்று சொல்லிக்கொண்டிருந்தாள். 1883 ம் வருடம் மேமீ 2உ இருபது பிராயத்தில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தாள்.

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்று எழுது."

---

## சமாசாரத்திரட்டு.

ரிப்பன் பிரபுவுக்கு டியூக்கு பட்டம் மகாராணியவர்கள் கொடுக்கப்போகிறதாய்ப் பிரஸ்தாபம். அவருக்கு இந்தியா டியூக்கு என்ற பட்டம் கொடுக்கவேண்டியது அவசியமே.

லாட்டெரிகள் போடுவது தொந்தரவான காரியமென்றும், அதற்கு எவ்விதத்திலும் கவர்ன்மெண்டார் இசைந்துதவத்தகாதென்றும், நமது கவர்னர்ஜெனரலவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். ஐதராபாத்து லாட்டேரிக்குப்பின் வேறு லாட்டேரி இவ் இந்தியாவில் காண்பது அரிதாகும் போலும்.

அரவக்குறிச்சி டிரொஸ்ஸரால் நாலு காலுள்ள கோழி ஒன்று டாக்டர் துரைக்கு அனுப்பப்பட்டது. அதை டாக்டர் துரை பட்டணம் கண்காக்ஷி சபைக்கு அனுப்புவாராம்.



முயற்சியுள்ள ஒரு பிராஞ்சியன் புதுச்சேரியில் ஓர் தீக்குச்சு சாலை ஸ்தாபிக்க உத்தரவுபெற்றுக்கொண்டான். அப்போ இதுதான் இந்தியாவில் முதலாவது தீக்குச்சு சாலையாகும்.

பூலோகத்திலுள்ள 142 கோடியே 40 லட்சம் குடிஜனங்களில் ஏறக்குறைய 11 கோடியே 60 லட்சம் பேர் புரொட்டெஸ்டாண்டு கிறிஸ்தவர்கள். கிரேக்கு சபையைச் சேர்ந்தவர்கள், 8 கோடியே 40 லட்சம் ரோமான் கத்தோலிக் சபையைச் சேர்ந்தவர்கள், 19 கோடி. யூதர்கள், 80 லட்சம். இஸ்லாம் மார்க்கத்தார், 17 கோடி. மற்ற மார்க்கத்தார், 85 கோடியே 50 லட்சம். தினந்தோறும் உலக இரக்ஷகரை அறியாமல் சாகிறவர்கள் அறுபத்தாறாயிரம். இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்த மிஷியோன் சங்கங்கள் 7. இப்போதிருக்கிற சங்கங்கள் 100. 1800-ம் வருஷம் இருந்த மிஷியோனரிமார் 70. 1883-ல் மிஷியோனரிமார் ஆறாயிரம். 1883-ல் குருப்பட்டம் பெற்ற இருபத்தையாயிரம் பேரும், இருபத்தோராயிரத்து 500 சுதேசிகளும் கர்த்தருடைய வேலையைச் செய்தார்கள். இப்போதோ எத்தனையோ ஏராளம். 1883-ல் நற்கருணை பெற்றோர் ஏறக்குறைய 6 லட்சத்து இருபத்திமூவாயிரம், இவ்வருஷமோ அதிலும் பெருகியிருக்கின்றன. 1883-ம் வருஷ ரிப்போர்ட்டில் கண்டபடி, சென்ற வருஷத்திற்காக அன்னிய தேசங்களில் சுவிசேஷ ஊழியம் நடத்தப்பட புரொட்டெஸ்டாண்டரால் கொடுக்கப்பட்ட தருமம் ஒரு கோடியே 91 லட்சம் ரூபாய். கிறிஸ்தவ சகோதரரே! கணக்கைப் பாருங்கள், தைரியங்கொள்ளுங்கள், வாக்குத்தத்தங்களை நம்புங்கள். "நானே உலகத்தை ஜெயித்தேன்" என்று இரக்ஷகர் சொல்லுகிறார்.

சேலம் கலகத்தைப்பற்றி இப்போ தண்டனை அடைந்துகொண்டிருக்கும் எல்லோரையும் உடனே விட்டுவிடும்படியாய் மாட்சிமைபொருந்திய கவர்னர் துரையவர்கள் தயவு புரிந்து உத்தரவுசெய்கிறார்கள்.

இந்தியா கவனர்ஜெனரல்உத்தியோகத்தில் இப்போது நியமனம் பெற்றிருக்கிற டப்பிரின் பிரபு இந்த மாசம் 6உ லண்டனிலிருந்து புறப்பட்டு 24உ அல்லது 25உ பம்பாய்க்கு வந்து டிசம்பர்மீ 1உ-வரை கல்கத்தா வந்து சேருவார்.

காகிதம் செய்வதற்கு மூங்கில் குருத்துகளும், ரசம் பிழிந்த கருப்பங்கழிகளும் உதவியாகும்படி யோசித்திருக்கிறார்கள்.

பிராஞ்சும் சீனாவும் ஒரு ஒழுங்குக்கு வராது படுகளபாதாளமே
கதியென்று விரைந்துவிட்டனர்; பாக்கினிக்கு அப்பாலே நடந்த அம
ரில் பிராஞ்சு ஜெயங்கொண்டு சீனாவெல்லையை நோக்கிப் படைசெல்
கின்றதாம். சீனர் வெகு பலமாய் அரண்செய்யப்பட்டனர். ஆனால் அக்
டோபர்மீ 8உ பிராஞ்சு சீனாவுடன் நாலு மணி நேரம் சமர்புரிந்தும் கன
சேதப்பட்டு முறியடிக்கப்பட்டனர். (யுத்த செலவுக்காக பிராஞ்சிய மந்
திரி ஒரு கோடியே 8-லட்சம் பிராங்கிகள் கடன் கேட்கிறார்.) சீனர் தம்
தானம் விட்டு கடலில் வழுகி விழுந்து தப்பி ஓடாதபடி பிராஞ்சியர் தடு
படைசெய்கின்றனர். சீனர் துவிங்கியாங்கில் பிராஞ்சியரைத் தாக்கியும்
அதிசேதத்துடன் முறியடிபட்டுப் போயினர்.

---

## நவம்பர்ீ நாள்-30. ஐப்பசிீ 18உ முதல், கார்த்திகைீ 17உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ச | 1 | கஅ | அவர்களுக்குள் நான பரிசுத்தர் எசேக். 39:27 (ஏசா. 40: 4. |
| ஞா | 2 | ககூ | நான் உனக்குக் காண்பிப்பதெல்லாவற்றின்மேலும் உன் மனதை |
| தி | 3 | உ0 | மாளிகைக்குச் சுற்றிலும் இருந்த உயரத்தையும் பார்த்தேன். 41: |
| செ | 4 | உக | பரிசுத்தமானதற்கும் பரிசுத்தமலலாததற்கும் வித்தியாசம். 42: 20. |
| பு | 5 | உஉ | என் சிங்காசனமும் என் பாதபீடத்தின ஸ்தானமுமாயிருக்கிறது. |
| வி | 6 | உங | இஸ்ரவேலின தேவனுகிய கர்த்தர் இதற்குள் பிரவேசித்தார். 44: 2. |
| வெ | 7 | உச | உங்கள் உத்தண்டங்களை என் ஜனத்தைவிட்டு அகற்றுங்கள். 45: |
| ச | 8 | உரு | அதிபதி அவர்கள் நடுவிலே அவர்களோடேகூட உட்பிரவேசித்து |
| ஞா | 9 | உசு | தண்ணீர் நீச்சாழமும் கடக்கமுடியாத நதியுமாயிருந்தது. 47: 5. |
| தி | 10 | உஎ | நகரம் அதின் நடுவிலிருப்பதாக. 48: 15. (தானி. 1:17 |
| செ | 11 | உஅ | தானியேலைச் சகல தரிசனங்களையும்... அறியத்தக்க அறிவுள்ளது. |
| பு | 12 | உகூ | அவர் காலங்களையும் சமையங்களையும் மாற்றுகிறவர். 2: 21. |
| வி | 13 | ங0 | நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது. 3:25. |
| வெ | 14 | க | அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம். 4: 34. |
| ச | 15 | உ | தமக்குச் சித்தமானவனை உயர்த்துவார். 5: 19. |
| ஞா | 16 | ங | அவரே தப்புவிக்கிறவரும் ரட்சிக்கிறவரும். 6: 27. |
| தி | 17 | ச | சகல ஜனங்களும்...அவரையே சேவிக்கும்படி. 7: 14. |
| செ | 18 | ரு | கவனி; இந்தத் தரிசனம் முடிவுகாலத்துக்கு அடுத்தது. 8: 17. (9: |
| பு | 19 | சு | முடிவுபரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது. |
| வி | 20 | எ | அவருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேட்டேன். 10:9. |
| வெ | 21 | அ | அறிவாளிகளைப் புடமிடுகிறதற்கும். 11: 35. |
| ச | 22 | கூ | துன்மார்க்கரில் ஒருவனும் உணரான். 12: 10. |
| ஞா | 23 | க0 | யூதாவின் வம்சத்தாருக்கோ நான் இரக்கஞ்செய்வேன். ஓசி. 1: 7. |
| தி | 24 | கக | நீ கர்த்தரை அறிந்துகொள்ளுவாய். 2: 20. |
| செ | 25 | கஉ | கர்த்தரையும் அவருடைய தயவையும் நாடி. 3: 5. |
| பு | 26 | கங | நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய். 4: 6. |
| வி | 27 | கச | நான் என் ஸ்தானத்துக்குத் திரும்பிப்போய்விடுவேன். 5: 15. |
| வெ | 28 | கரு | யூதாவே, உனக்கு என்னசெய்வேன். 6: 4. |
| ச | 29 | கசு | தங்கள் இருதயத்தில் என்னை நோக்கிக் கூப்பிடுகிறதில்லை. 7: 14. |
| ஞா | 30 | கஎ | என் வேதத்தின்மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன |

### விசேஷ நாட்கள்.

1. சகல பரிசுத்தவான்களின் திருநாள்.
2. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 21-ம் ஞாயிறு.
,, பௌரணமி.
9. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 22-ம் ஞாயிறு.
16. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 23-ம் ஞாயிறு.
17. அமாவாசை.
23. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும் 24-ம் ஞாயிறு.
30. அட்வெந்தென்னும் நாட்களில் 1-ம் ஞாயிறு.
,, பரி-அப்-அந்திரேயாவின் திருநாள்.

# நற்போதகம்.

கஉ. டிசம்பர்ீ. ௲அ௱அச ௵.

## THE CANDIDATE FOR ORDINATION.

## குருப்பட்ட மாணாக்கன்.

(1) கிறிஸ்துவின் சபை இந்த பூமியில் பிரபல்யமாவதைக் குறிக்கும்.

(2) முக்கியமான பூரண கருத்துப்படி, இனிமேல் வரப்போகிற மேசியாவின் வெற்றிசிறந்த ஆளுகையைக் குறிக்கும் (வெளி 22: 17, 20). முந்தினது இந்த ராஜ்யத்தின் ஆரம்பமும், பிந்தினது இந்த ராஜ்யத்தின் நிறைவுமாயிருக்கிறது. இந்த இரண்டு அர்த்தங்களையும், இங்கிலாந்து சபை வழங்குகிற ஜெபபுஸ்தகத்தில் ஐக்யப்படுத்திக் காட்டியிருக்கிறது; அதாவது மரித்தோரை அடக்கம்பண்ணும் முறைமையில், "தேவரீர் தெரிந்துகொண்டவர்களின் தொகையை சீக்கிரத்தில் நிறைவாக்கவும், உம்முடைய ராஜ்யத்தைத் தீவிரமாய் வருவிக்கவும் கிருபைகூர்ந்து கட்டளையிட்டருளும்" என்பதே.

91. (6: 10) "உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக." இந்த மூன்றும் விண்ணப்பத்தைப்பற்றிக் கவனிக்கவேண்டியதென்ன?

இந்த மூன்றும் விண்ணப்பம் இரண்டாம் விண்ணப்பத்தின் விரிவாயிருக்கிறது. அதினாலேதான் லூக்கா எழுதிய சுருக்க முறையில் இந்த விண்ணப்பத்தைக் காணோம். நமது கர்த்தருடைய வாயிலிருந்து பிறந்த வார்த்தைகளை லூக்கா சரியானபடி எழுதுகிறார் என்று தோன்றும். தேவன் தம்முடைய ராஜ்யத்தைத் தீவிரமாய் வருவிக்கவேண்டுமென்று ஜெபம்பண்ணும்போது, மனுஷனும் அதற்குக் கைகொடுக்கவேண்டுமென்று தொக்கிருக்கிறதே. பூமியில் அவருடைய சித்தத்தின்படி செய்வதுதான் அதற்குக்

கைகொடுக்கிறதாம். மனுஷர் தேவதூதரைப்போல தேவசித்தத்தை நிறைவேற்றும்போது இந்த விண்ணப்பம் முடிவான பூரண நிறைவேறுதல் அடையும்என்பதை, ஒருவாறு பழய ஏற்பாட்டிலும் பூராவாகப் புதிய ஏற்பாட்டிலும் முன்னறிவித்திருக்கிறது (ஏசா 11: 9. 60: 19—21. 61: 11. வெளி 21: 3, 22–27. 22: 3).

**92.** (மத் 6: 11) "எங்களுக்குவேண்டிய" என்ற வார்த்தைக்கு அர்த்தமென்ன?

"எங்களுக்குவேண்டிய" என்று திருப்பியிருக்கிற கிரேக் வார்த்தை, முக்கியமாய் இரண்டு அர்த்தங்கொள்ளும்.

(1) போதுமானபடி (அல்லது தக்கபடி) என்றர்த்தம். இது மட்டுக்கு மிஞ்சின என்பதற்கு எதிரிடையானது.

(2) "வரப்போகிற நாளைக்கு" என்றர்த்தம். "போதுமானபடி" "வரப்போகிற நாளைக்கு" இந்த இரண்டு வார்த்தைகளும்: அவசியமான, தக்ஷணமான அல்லது உடனே வேண்டிய என்ற வார்த்தைகளுக்குச் சமமானவைகளாம். "இன்று" என்ற வார்த்தையும் இந்தக் கருத்தைக் காட்டுகிறதே.–இந்த வாக்கியத்துக்கும், 31 ம் 34 ம் வாக்கியங்களுக்கும் விகற்பமில்லை ஏனென்றால் நீர் எங்களுக்காகச் சம்பாதியும் என்று தேவனை நோக்கி ஜெபம்பண்ணுவதும், நமக்காக நாமே சம்பாதிக்கும்படி கவலைப்படுவதும் வெகு வித்தியாசமான காரியமாம்.

**93.** (மத் 6: 12) "கடன்கள்" என்ற வார்த்தைக்கு அர்த்தமென்ன?

பாவங்கள் என்றர்த்தம். 14 ம் வாக்கியத்தில் இதை விளக்கியிருக்கிறார். லூக் 11: 4 ல் நேராய்ச் சொல்லியிருக்கிறார்.–"நாங்கள் மன்னிக்கிறதுபோல" என்பதில், தங்கள் பிறருக்கு மன்னிக்கிற குணமுடையவர்கள்தான் இந்த விண்ணப்பத்தை உண்மையாய்ச் சொல்லக்கூடும் என்று போதிக்கிறார்.

**94.** (மத் 6: 13) "எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்" என்ற வார்த்தைகளின் கருத்தென்ன?

பாவத்துக்கேதுவான நிலைமையில் எங்களை வையாதேயும் என்றர்த்தமாம். தேவன் தமது சித்தத்தின்படி மனுஷரை உலகத்தில் வைத்திருக்கிற புறம்பான நிலைமையானது, பாவச்சோதனைகளுக்கு இடம்பண்ணலாம் (மத் 10: 23). ஆனால் அந்தச் சோதனைகளில் சிக்கிக்கொள்ளும்படி இருதயத்தை இணங்கச்செய்கிற உள்ளான சம்மதமோ, ஒருக்காலும் தேவனால் உண்டாகிறதில்லை (யாக் 1: 13, 14).



**95.** (6: 13) "தீமை" என்ற வார்த்தையின் கருத்தென்ன?

"தீமை" என்று திருப்பியிருக்கிற கிரேக் வார்த்தை, தீயோன் அல்லது பொல்லாங்கன் என்றும் திருப்பப்படும் (அப்படியே 1881ஆம் அச்சிட்ட புதுத்திருப்புதலான இங்கிலிஷ் புதிய ஏற்பாட்டில், "தீமையினின்று" என்ற வார்த்தைகளை, "தீயோனினின்று From the evil one" என்று திருப்பியிருக்கிறது). ஆகையால் "தீமையினின்று" என்பது, தீயோனாகிய சாத்தானுடைய சோதனைகளினின்றும், மனுஷனுடைய சொந்த இருதயத்தின் தீதான எண்ணங்களினின்றும், புறம்பான தீமைகளினின்றும் எங்களை இரக்ஷித்துக்கொள்ளும் என்று கருத்தாம்.

(2 தீமோ 4: 18)ல் "எல்லாத் தீமையினின்றும்" என்பது, இந்தக் கருத்துத்தான் (யோவா 17: 15. 2 தெச 3: 3).

**96.** (மத் 6: 33)ஐ விஸ்தரி?

"தேவனுடைய ராஜ்யம்" என்பது, கிறிஸ்துநாதருக்குச் செய்யும் ஊழியத்தையும், "அவருடைய நீதி" என்பது, அவருடைய ஊழியகாரர் அவர் கற்பித்திருக்கிற உத்தம ஆவியோடு அவருடைய நாமத்துக்காகச் செய்யக் கடமைப்பட்டிருக்கிற நற்கிரியைகளையும் குறிக்கும்.

**97.** (7: 3) "கண்" என்ற வார்த்தைக்கு அர்த்தமென்ன?

பாவத்தினாலே கெட்டுப்போயிருக்கிற சன்மார்க்கமும் வைதீகமுமான அறிவைக் குறிக்கிற உபமான வார்த்தையாம்.

**98.** (7: 6) "பரிசுத்தமானது" என்ன?

மாயக்காரருக்குக் கண்டிதம் சொன்னபின், இந்த வாக்கியத்தில் சீஷருக்குக் கற்பனைசொல்லுகிறார். பலியிட்ட மாம்சத்தை உபமானமாக வைத்து "பரிசுத்தமானது" என்கிறார். வெளியிலே பீறுண்ட மாம்சம் அசுத்தமானதாகையால், அதைப் புசியாமல் நாய்களுக்குப் போட்டுவிடுவதுபோல (யாத் 22: 31), பலியிட்ட பரிசுத்த மாம்சத்தைப் போட்டுவிடக்கூடாது. பன்றிகள் வழக்கமாய்த் தின்கிற பயறுகளைப்போல முத்துகள் இருக்கும். இந்த உபமானங்களினாலே, பரிசுத்தமானதென்பது, பேதுரு அப்போஸ்தலன் சொல்லுகிற பரிசுத்த கற்பனையைக் குறிக்கும் என்றறியலாம் (2 பேது 2: 21, 22).

**99.** (7: 7) "கேளுங்கள்" என்ற வார்த்தையின் சம்பந்தமென்ன?

தேவனுடைய ஈவுகளை அவமதிக்கிற தேவதூஷணக்காரருக்கு அவைகளைக் கொடுக்க தேவனுக்குச் சித்தமில்லாவிட்டாலும், அந்த ஈவுகளுக்காகத் தாழ்மையோடும் விசுவாசத்தோடும் வேண்டிக்கொள்ளுகிறவர்க

ளுக்கு அவைகளைக் கொடுக்கும்படி அவர் ஆயத்தமாயிருக்கிறார் என்ற சம்பந்தமாய்ச் சொல்லுகிறார்.

**100.** (7: 9)ன் கருத்து விளங்கும்படி எந்த வார்த்தையை அழுத்திப் பேசவேண்டும்?

"மனுஷன்" என்ற வார்த்தையை. பாவிகளான மனுஷர் தங்கள் பிள்ளைகள்பேரில் இப்படி அன்புபாராட்டுவார்களானால், தேவன் எத்தனை அதிகமாய் அன்புபாராட்டுவார் என்று, பாவமுள்ள மனுஷர் தங்கள் பிள்ளைகள்பேரில் வைக்கிற அன்பை தேவஅன்போடு ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

**101.** (7: 11) "நன்மையானவைகள்" என்பது என்ன?

பரிசுத்தஆவியாம் (லூக் 11: 13).

**102.** (7: 13: 14) "இடுக்கமான வாசல்," "நெருக்கமான வழி" இந்த வார்த்தைகளால் குறிக்கப்படுகிறதென்ன?

இந்த வார்த்தைகள்: கிறிஸ்துநாதரை உத்தமமாய்ப் பின்பற்றுகிறவன் வெறுக்கவேண்டிய தன்னயத்தையும், அவன் எதிர்நோக்கியிருக்கவேண்டிய துன்பங்களையுங் குறிக்கும் (10: 37, 38. 16: 24. யோவா. 7: 7. அப் 14: 22).

**103.** (7: 15) "கள்ளத்தீர்க்கதரிசிகள்" யார்?

இவர்கள் யூதப்போதகன்மாரா? அல்லது கிறிஸ்தவப் போதகன்மாரா? என்பதையிட்டுத் தர்க்கமுண்டு. யாராயிருந்தாலும் சரி. மேசியாவின் ராஜ்யத்தைவிட்டு மனுஷரைப் பிரிக்கிற இருவகைப் பேரும் கள்ளத்தீர்க்கதரிசிகளாம். மத் 24: 15, 24-ல் சொல்லிய "கள்ளக்கிறிஸ்துக்களும்," அப். 20: 29-ல் சொல்லிய "ஓநாய்களும்" இவர்களைச் சேர்ந்தவர்கள்தான்.

"கனிகள்" என்பது அவர்களுடைய உபதேசத்தையும் நடக்கையையும் குறிக்கும்.

**104.** (7: 21)ல் "பரலோக ராஜ்யம்" என்பது எதைக் குறிக்கும்?

இனிமேல் கிறிஸ்துநாதரோடு மறுமையில் அரசாட்சிசெய்யப்போகிற வெற்றிசிறந்த சபையை மாத்திரம் குறிக்கும். 22 ல் "அந்நாளில்" என்ற வார்த்தை, இந்த அர்த்தத்தைத் தெளிவாக்குகிறது. "அந்நாளில்" என்பது, பரம ராஜ்யத்தில் பிரவேசிக்கிறதற்கு முந்தி வருகிற கடைசியான மகா நியாயத்தீர்ப்பு நாளைக் குறிக்கும்.

13: 24 ல் "பரலோக ராஜ்யம்" என்பது, இந்த உலகத்திலிருக்கிற வெளியரங்கமான சபையை மாத்திரம் குறிக்கும். இந்தச் சபையில் நல்லோரும் தீயோரும் கலந்திருப்பார்கள்.



**105.** (7: 22)ன் சம்பந்தமென்ன?

இது விசேஷமாய் கள்ளத்தீர்க்கதரிசிகளையெல்லாம் பொதுவாகக் குறிக்கும். 15 ம் வாக்கியத்தோடு சம்பந்தமுள்ளது. பிசாசுகளைத் துரத்தவும் வியாதிகளை நீக்கவும் (10: 1) மற்ற அப்போஸ்தலன்மாருக்கொப்பத் தம் அதிகாரம்பெற்ற யூதாசைமட்டுமல்ல, அல்லது 1 கொரி 13: 2 ல் பவுல் சொல்லுகிறவனைமட்டுமல்ல; சீமோன் மேகசையும் (அப். 8: 13), மந்திரவாதிகளான பேயோட்டிகளையும், மற்றும் இவர்களைப்போலொத்தவர்களையும் (அப் 19: 13) குறிக்கும். இந்த எச்சரிப்பின் தன்மையைக் கவனித்தால், இப்போ சொன்ன விசேஷமான பேர்களை மட்டுமல்ல, போதிக்கிறவர்களானாலும் கேட்கிறவர்களானாலும் சரி, எந்தக் காலத்திலுள்ளவர்களானாலும் சரி; பரிசுத்தமான நடக்கையில்லாமல் கிறிஸ்துமார்க்க உபதேசங்களைப் பேருக்கு மட்டும் அறிக்கையிடுகிற எல்லாருக்கும் இந்த எச்சரிப்புச் சொல்லப்பட்டதென்றறிக.

**106.** (7: 28) "அதிகாரமுடையவராய்ப் போதித்தார்" என்பதின் கருத்தென்ன?

கிறிஸ்துநாதர் நியாயப்பிரமாணிக்கனுக்குரிய அதிகாரத்தோடே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று தம்முடைய சொந்த நாமத்தினாலே போதித்தாரென்று அர்த்தமாம். வேதபாரகர்: மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பாராயணம்பண்ணுகிறவர்களாகமட்டும் போதித்தார்கள்.-நியாயப்பிரமாணத்தைப் போதித்துவந்த ஒரு வகுப்பாரான மாணாக்கன்மாருக்கு வேதபாரகரென்று பேர். நியாயப்பிரமாணத்தை எழுதிப் பிரதிகள் செய்வதும், நியாயப்பிரமாணத்தைப் பாராயணம்பண்ணுவதும் இவர்களுடைய தொழிலாம். பாபிலோனிலிருந்து யூதர் திரும்பிவந்த காலத்தில் இந்த வேதபாரகர் உண்டானார்கள். அந்நிய தேசமாகிய பாபிலோனில் நியாயப்பிரமாணத்தின் ஏற்பாடுகளை யூதர் அநுசரியாததால், அந்த ஏற்பாடுகளை அவர்கள் மறந்துபோனார்கள். ஆகையால் அவர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பும்போது அவைகளைப் போதிக்கும்படி இந்த வேதபாரகர் ஏற்படுத்தப்பட்ட அவசியமுண்டாயிற்று. இந்தப்படி எஸ்றாதான் முதல் வேதபாரகன். ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தைப் போதிக்கும்படி மற்ற வேதபாரகர் இவனாலே நியமிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது (நெகே 8: 8, 12). இந்த வேதபாரகர் முதலில் ஆசாரியரிலும் லேவியரிலுமிருந்து முக்கியமாய்த் தெரிந்தெடுக்கப்பட்டார்கள் (நெகே 8: 9. ஆகாய் 2: 11). என்றாலும் வரவர ஆசாரியரும் லேவியரும் மட்டுமல்ல, மற்றவர்களும் வேதபாரகராயிருந்தார்கள். பிற்பாடு ஒரு ஒழுங்கான கல்விச்சாலையில் படித்தவர்கள் மட்டும் வேதபாரகரானார்கள். விசேஷமான சோதனை கொடுத்து ஒப்பேறினவர்கள்தான் அந்தக் கல்விச்சாலைக்கு மாணாக்கன்மாராகச் சேர்க்கப்பட்டார்கள். வேதபாரகருக்கு நியாயசாஸ்திரிகளென்

றும் பேர். அப்படியே வேதபாரகருக்கு நியாயசாஸ்திரிகளென்று லூக்கா பேர்சொல்லுகிறார். (இந்த இரண்டுபேரும் வெவ்வேறே வகுப்பாரென்பதற்கு லூக் 11: 44 ஆதாரமாகமாட்டாது). "வேதபாரகர்" என்பது இந்த வகுப்பாருடைய பட்டப்பெயராயும், "நியாயசாஸ்திரிகள்" என்பது அவர்களுடைய வழக்கமான நாடோடிய பெயராயுமிருக்கலாம்.

**107** (8: 1) குஷ்டரோகி குணமாக்கப்பட்டதைப்பற்றி முதல் மூன்று சுவிசேஷகரும் வித்தியாசமாய்ச் சொல்லியிருக்கிறதென்ன? அதற்குச் சமாதானமென்ன?

மாற்கு: குஷ்டரோகி சுத்தமாக்கப்பட்ட திட்டமான காலக்குறிப்புச் சொல்லவில்லை ஆனால் பேதுருவின் மாமி குணமாக்கப்பட்டதற்குப் பின்னாக எழுதுகிறார்.

லூக்கா: குஷ்டரோகி சுத்தமாக்கப்பட்ட இடம், ஒரு பட்டணத்தில் என்று சொல்லி (இந்தக் குறிப்பு மாற் 1: 45லும் அடங்கியிருக்கிறது), நாலு சீஷர் அழைக்கப்பட்டதற்குப் பின்னாகவும், மலைப்பிரசங்கத்துக்கு முன்னாகவும் இதை எழுதுகிறார்.

மாற்கும் லூக்காவும், இவன் சுத்தமாக்கப்பட்ட காலம் இன்னதென்று திட்டமாய்ச் சொல்லாததினாலேயும், மத்தேயு வித்தியாசமாய்ச் சொல்வது தெளிவாயிருப்பதினாலேயும், நமது கர்த்தர் மலையிலிருந்து இறங்கினபின் நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனைச் சொஸ்தமாக்கினதற்கு முந்தின அற்புதமாக மத்தேயு சொல்லுகிறபடிதான் இந்த அற்புதம் நடந்ததென்று சிலர் தீர்மானித்திருக்கிறார்கள். நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் மலைப்பிரசங்கம் முடிந்த உடனே சொஸ்தமாக்கப்பட்டதாக லூக்கா சொல்லுகிறார். ஆனாலும் மத்தேயு எட்டாம் அதிகாரம் முதலாம் வாக்கியத்தை முந்தின அதிகாரத்தோடு சம்பந்தப்படுத்திக்கொண்டு, இரண்டாம் வாக்கியம், கால ஒழுங்கின்றி வருகிற வேறே புதிய பொருளை ஆரம்பிக்கிறதாக வைத்துக்கொண்டால், மாற்கும் லூக்காவும் சொல்லுகிற ஒழுங்கைச் சரியானதாக எடுத்துக்கொள்ளலாம். மத்தேயு பிரத்தியேகமாய் எழுதுகிற அற்புதங்களில் இதுதான் முதல் அற்புதம் என்று கவனிக்கத்தக்கது. மத்தேயு கால ஒழுங்கைக் கவனியாமல் ஒரே மாதிரிச் சங்கதிகளைத் தொகுதி தொகுதியாய் எழுதுவது வழக்கமாதலால், இந்த அற்புதத்தையும் அப்படியே எழுதியிருக்கிறதாகத் தோன்றும் (வா 5, 14). இப்படியாக முதலாம் வாக்கியம் முந்தின அதிகாரத்தோடு சேரவேண்டியது. இந்த அதிகாரம் இரண்டாம் வாக்கியமுதல் ஆரம்பிக்கிறது.



**108.** (8: 3) நமது கர்த்தர் "எனக்குச் சித்தமுண்டு" என்று சொல்வதில் கவனிக்கவேண்டியதென்ன?

நமது கர்த்தர் தமது சொந்த நாமத்தினாலும், தமது சொந்த வல்லமையினாலே அற்புதங்களைச் செய்கிறவராகவும் பேசுகிறார் என்பதைக் கவனிக்கவேண்டும். பரி. பேதுரு சொல்வதை வாசி (அப் 3: 13). மேலும் சடங்காசாரத் தீட்டில்லாமல், குஷ்டரோகியையும் அவர் தொடத்தக்க வல்லமையுடையவர் என்பதையும் கவனிக்கவேண்டும்.

**109.** (8: 14) "நீ இதை ஒருவருக்கும் சொல்லாதபடி எச்சரிக்கையாயிரு" என்று நமது கர்த்தர் சொன்ன முகாந்தரமென்ன?

பிசாசுகள் தம்மை அறிந்திருந்ததைப் பிரசித்தம்பண்ணுதபடி எந்த முகாந்தரத்தையிட்டு இடங்கொடுக்கவில்லையோ (மாற்கு 1: 34), தம்மை இராஜாவாக்கும்படி மனதாயிருந்தவர்களைவிட்டு எந்த முகாந்தரத்தையிட்டு விலகினாரோ (யோவா 6: 15), அதே முகாந்தரத்தையிட்டு இவனிடத்திலும் இப்படிச் சொன்னார் என்று தோன்றும். அந்த முகாந்தரமென்னவென்றால், பொதுவான ஜனங்கள் தம்மை ஒரு உலக இராஜா என்று எண்ணும் எண்ணத்தை அவர்களுக்குள் எழுப்பிவிடத்தக்க விதமாய்த் தம்மை மேசியா என்று வெளியரங்கமாய்ப் பிரஸ்தாபமபண்ணுவது அவருடைய நோக்கமாயிருந்ததில்லை.

"அவர்களுக்கு" என்பது, ஆசாரியருக்கல்ல, ஜனங்களுக்கு என்றர்த்தம் (லேவி 14: 57).

**110.** (8: 5) "நூற்றுக்கு அதிபதி"யைக்குறித்து என்ன தெரியும்?

இவன் பிறப்பின்படி புறஜாதியானென்பது வா 10னாலும், லூக் 7 5னாலும் தெரியும். இவன் புரோசலுத்தாயிருந்தாலும் இருக்கலாம்; ஆனால் அப்படியிருந்தானென்று சரித்திரத்தில் சொல்லப்படவில்லை. வா 11, 12. அவன் புரோசலுத்தாயிருந்தான் என்பதற்கு எதிரிடையான குறிப்பைக் காட்டுகின்றன. அவன் ஒரு ஜெபஆலயத்தைக் கட்டினதும், யூத மூப்பரோடே பழக்கமாயிருந்ததும் அவன் யூத ஜனங்களையும் யூத மார்க்கத்தையும் குறித்து நல்லெண்ணமுடையவனாயிருந்தான் என்று மட்டும் காட்டும். இவன் முதலில் மற்றவர்கள் மூலமாய் இரக்ஷகரிடத்தில் விண்ணப்பம்பண்ணினதை மத்தேயு சுருக்கி எழுதுகிற ஷை விர்த்தாந்தத்தில் விட்டிருப்பது விகற்பமல்ல.

**111.** (8: 11, 12)ஐக் குறித்துக் கவனிக்கவேண்டியதென்ன?

இந்த வார்த்தைகள் லூக்காவில் இல்லை. ஆனால் இவற்றைப்போன்ற வார்த்தைகள் வேறே சம்பந்தத்தில் வருகின்றன (லூக் 13: 28, 29). இந்த

இரண்டு வாக்கியங்களும் இரண்டு வெவ்வேறான சமயங்களில் சொல்லப்பட்டவைகளாயும், வெவ்வேறே கருத்துள்ளவைகளாயுமிருக்கின்றன. (மத் 8: 11, 12)ல் பிறப்பின்படி அந்நியரான புறஜாதியாரை, ராஜ்யத்தின் புத்திரரான யூதரோடு ஒப்பிட்டுப் பேசுகிறார். யூதருக்குத்தான் விசேஷித்த வகையாய் மேசியா வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருந்தார். பரி. லூக்கா ஒரு ஜாதியாரை இன்னொரு ஜாதியாரோடல்ல, நீதிமான்களைத் துன்மார்க்கருக்கு எதிரிடையாய்க் காட்டுகிறார்.

**112**. (8: 14) மத்தேயு கால முறைப்படி சங்கதிகளை ஒழுங்குப்படுத்தவில்லை. கால முறைப்படி அவைகளை எழுதிக் காட்டு?

நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் சொஸ்தமாக்கப்பட்ட மறுநாள், நாயீனூர் விதைவையின் மகன் உயிரோடெழுப்பப்பட்டான் (லூக் 7: 11). இதின்பின் லூக்கா 7: 18 முதல் 8: 3 வரையும் சொல்லிய சங்கதிகள் ஒன்றின்பின் ஒன்றாய் வருகிறதாகத் தோன்றும். இவைகளுக்குப்பின் மாற்கு 3: 20 முதல் 6: 56 வரை மாற்கு சொல்லிய ஒழுங்கு சரியானதென்று தோனறும். மேற்காட்டிய சங்கதிகளையெல்லாம் மாற்கு விட்டுவிட்டு, நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் சொஸ்தமாக்கப்பட்டதற்கு முந்தி வருகிற நாலு சீஷர் அழைக்கப்பட்ட சங்கதி, மலைப்பிரசங்கம் ஆகிய இவற்றிலிருந்து சரித்திரத்தை ஆரம்பித்து, லூக்கா சொல்லுகிறபடி (லூக் 8. 1—3) நமது கர்த்தர் கலிலேயா வழியாய்ப்போன பிரயாணச் சங்கதிகள் வரையும் தொடர்ச்சியாய் எழுதிக்கொண்டுபோகிறார். இன்னொரு பட்சத்தில், மாற்கும் லூக்காவும், கப்பர்நகூம் ஜெபஆலயத்தில் பிசாசு பிடித்தவனைக் குணமாக்கின உடனே (மலைப்பிரசங்கம நடந்த சிலகாலத்துக்கு முந்தி) பேதுருவின் மாமி குணமாக்கப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். சொல்வதில் பரி. மாற்கு: பேதுரு அந்திரேயா யாக்கோபு யோவான் இந்த நாலு சீஷர் அழைக்கப்பட்டதற்குப் பிந்தியும், பரி. லூக்கா: அவர்கள் அழைக்கப்பட்டதற்கு முந்தியுமாக பேதுருவின் மாமி குணமாக்கப்பட்ட சங்கதியைச் சொல்லுகிறார்கள். நாலு சீஷர் அழைக்கப்பட்ட சங்கதியை பரி. லூக்கா பிந்தி எழுதவேண்டுமென்று நோக்கமாய் இருந்தார் என்று நினைப்பது இயல்பாயிருக்கிறது. ஏனென்றால் லூக்கா: நாலாம் அதிகாரத்தில், முதலாவது நாசரேத்திலும், பிற்பாடு கப்பர்நகூமிலும் ஓய்வுநாட்களில் நடந்த பல சங்கதிகளைத் தொடர்ச்சியாய் எழுதினபின், ஒரு சாதாரண நாளில் மத்திய காலத்தில் நடந்த சங்கதிகளை எழுதுகிறார். இப்படியாக இந்தச் சங்கதிகள் கால ஒழுங்குப்படி பின்வருமாறு நடந்திருக்கவேண்டுமென்று தோன்றும்.



## பாபிலோன் சிறையிருப்பு.

(தொடர்ச்சி.)

கி. பி. மு. 551-ல் பெல்ஷாத்சாரின் 5-ம் வருஷத்தில் மேதியர் பார்சியர் பாபிலோனிலுள்ள அநேக கோட்டைகளையும் பட்டணங்களையும், நாடுகளையும் பிடித்து, பாபிலோன் வசமான அநேக தேசங்களைக் கட்டிக்கொண்டார்கள். மேதோ பார்சர் மிஞ்சிப்போகிறதை இராஜா அறிந்து, லீதியர், எகிப்தர், கிரேக்கர், சிராசியர் முதலானவர்களோடு உறவுசெய்துகொண்டு பலத்த சேனையை எத்தனம்பண்ணி, லீதியாதேசத்து இராஜாவாகிய கிரோசஸ் என்பவனுடைய அதிகாரத்துக்குச் சேனையை ஒப்புக்கொடுத்து மேதியரையும் பார்சரையும் அழிக்க ஏவினான். கோரேஸ் இது செய்திகேட்டு, சேனையோடே எதிர்கொண்டுபோய் அவர்களை முற்றும் முறியடித்தான். கிரோசஸ் தன் இராஜதானியாகிய சருதைக்கு ஓடிப்போனான். அடுத்த வருஷத்தில் யுத்தத்துக்கு எல்லாரும் கூடிவரும்படியாக விளம்பரஞ்செய்து கூட்டாளிகளை அனுப்பிவிட்டவுடனே கோரேஸ் லீதியரோடே சண்டைக்கு வந்தான். அவர்களுடைய குதிரைகள் கோரேசுடைய ஒட்டகங்களைக் கண்டவுடன் பயந்தோட அவர்கள் குதிரைகளை விட்டிறங்கி ஓடி சருதையில் புகுந்து அடைகோட்டைப்படுத்திக்கொண்டார்கள். கோரேஸ் கிருசசுக்கு உதவிக்கு ஒருவரும் வரவொட்டாதபடிக்கு சீக்கிரம் அந்தப் பட்டணத்தைப் பிடித்து கிருசஸைச் சுட்டெரிக்க உத்தரவுசெய்தான். கிருசஸைக் கட்டி கட்டையில் கிடத்தின சமயத்தில் ஞானியாகிய சோலோன் தனக்குச் சொன்ன வார்த்தைகளை நினைத்து, சோலோன் சோலோன் சோலோன் என்று 3-தரம் அபயமிட்டதை கோரேஸ் அதென்ன என்று விசாரித்து விடுதலையாக்கினான்.

சோலோன் என்பவன் அத்தேனேப் பட்டணத்து ஞானி. ஒரு சமயத்தில் கிருசஸ் என்பவன் அண்டை வந்தபோது, தன் ஆஸ்திகளைப் பெரியோருக்குக் காண்பித்து அவர்களாலே புகழப்பட சமயம் பார்த்திருந்தான். ஏனென்றால் இவன் மிகுந்த ஐசுவரியமுள்ளவன். கிரைசு தன் அண்டை வந்த சோலோனுக்குத் தன் பொக்கிஷங்களையெல்லாம் காண்பித்து, இத்தனை ஆஸ்தியுடைய நான் எல்லா மனிதரிலும் பாக்கியனென்று நினைக்கிறதில்லையாவென்று கேட்க, சோலோன் இல்லை; உம்மைப் பார்க்கிலும் பாக்கியமுள்ள ஒருவனை அறிவேன். அவனென்றால் என் தேசத்திலுள்ள ஏழைக்குடியானவனே. மற்றவர்கள் இச்சித்து அநியாயமாய் எடுத்துக்கொள்ளத்தக்க பொருளில்லாதவனாய், தனக்குள்ளது போதுமென்று, எப்போதும் சந்தோஷமாயிருக்கிறபடியினாலே அவனே பாக்கியவானென்றான். கிருசஸ் இராஜா இதைக்கேட்டு நீர் இப்படிச் சொன்னாலும் நான் பொதுவான மனிதருக்குள்ளே மிகுந்த பாக்கியமுள்ளவனென்று ஒப்புக்கொள்வீரோ என்று சொல்ல, சோலோன் ஐயோ! மகா இராஜாவே! மனிதர் நிலைமை நினையாத காலத்தில் மாறிப்போகிறபடியால், உயிரோடிருக்குமளவும் நீர் பாக்கியனென்றும், நிற்பாக்கியனென்றுஞ் சொல்ல ஏதுவில்லையென்றான். இந்தச் சத்தியத்தைக் கிரைசுஸ் நன்றாய் உணர்ந்து தனக்கு ஆபத்து நேரிட்ட இச்சமயத்தில் சோலோனைக் கூப்பிட்டான். அதைக் கேட்ட கோரேசு, மேலே கண்ட சம்பாஷணையை

விசாரித்து கிருசலை விடுதலையாக்கி, தனக்கு பெரிய ஆலோசனைக்கார ஞக நியமித்தும், தான் மரிக்கையில் தன் மகன் கம்புசேயுக்கும் அவன் புத்திகேட்டு நடக்க உத்தரவுசெய்தான். இந்தச் சருதை பட்டணம் பிடிபட்டது, பெல்ஷாத்சாரின் 8-ம் வருஷமும் எருசலேமின் அழிவின் 41-ம் வருஷமுமாயிருந்தது.

கோரோஸ் என்பவன் சின்ன ஆசியாவின் எகியன் கடல் துவக்கி ஐப்பிராத்கதிவரையுமுள்ள நாடுகளைக் கீழ்ப்படுத்துவதில் சிலகாலம் கழித்த பின், சூரியா, அராபியா தேசங்களுக்கும்போய் அவைகளைத் தனக்குக் கீழ்ப்படுத்தி, மீதியான பாபிலோனைப் பிடிக்கப்போனான். இது கி. பி. மு. 540-ல் பெல்ஷாத்சாரின் 16-ம் வருஷத்தில் சம்பவித்தது. கோரோஸ், பெல்ஷாத்சாரை பற்பல யுத்தங்களில் துரத்தி பாபிலோனில் அடைபட்டுப்போகச் செய்து அதைப் பலமாய் முற்றிக்கைபோட்டான். இது சருதையைப் பிடித்த (9) வருஷத்துக்குப்பின் நடந்தது. இந்த முற்றிக்கை வெகு வருத்தமான வேலை. மதில்கள் உயரமும் பலமுமுள்ளவை. அதைக் காக்கும்படிக்கிருந்த மனிதர் வெகு பலசாலிகள். (20) வருஷத்துக்குப் போதுமான போஜனம் பட்டணத்துக்குள்ளிருந்தது. பட்டணத்துக்குள்ளிருந்த நஞ்சை, புன்செய், நிலங்கள் சாகுபடிக்கேதுவாயிருந்தன. ஆகையால் குடிகள் தங்கள் மதிலையும் பொக்கிஷத்தையும் நம்பிக்கொண்டு கோரோஸ் இதை எப்படியும் பிடிக்கக்கூடாதென்று நினைத்து அவனுடைய முயற்சிகளை ஆகடியம்பண்ணினார்கள்.

கி. பி. மு. 539-ல் பெல்ஷாத்சாரின் 17-ம் வருஷத்தில் ஒருநாள் அவன் தன் பிரபுக்களில் 1000-பேருக்கு பெரிய விருந்துபண்ணுவித்து, அவர்களுக்கு முன்பாக திராக்ஷரசத்தைக் குடித்துக்கொண்டு யூதரால் வணங்கப்பட்ட மெய்த்தேவனை தூஷிக்கிற வகையாக எருசலேம் தேவாலயத்திலிருந்து எடுத்துக்கொண்டு வரப்பட்ட பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களைத் தானும் தன் பிரபுக்களும், பெண்சாதிகளும் வைப்பாட்டிகளும் அவைகளில் குடிக்கிறதற்காகக் கொண்டுவரச்சொல்லி, அவைகளில் திராக்ஷரசத்தைக் குடித்து விக்கிரகங்களைப் புகழ்ந்தான். இப்படிச் செய்துவருகையில் தேவாக்கினை அவன்பேரில் கூறப்பட்டது. இராஜாவுக்கு எதிராக சுவரில் எழுதுகிற துண்டுக் கையை இராஜா கண்டு கலங்கி, அதை வாசிக்க ஞானிகளால் கூடாதபோது இராஜாவின் தாய் நித்தோகிரியால் தானியேல் வரவழைக்கப்பட்டு, அவன் அதை வாசித்து வியார்த்திசெய்தான். "மெனே மெனே தெக்கேல் உப்பார்சின்" அதாவது மெனே என்றால் தேவன் உன் இராஜ்யத்தை மட்டிட்டு முடிவுண்டாக்கினார். "தெக்கேல்" நீ தராசிலே நிறுக்கப்பட்டுக் குறையக் காணப்பட்டாய். "பேரோஸ்" என்பது உன் இராஜ்யம் பகிரப்பட்டு மேதியருக்கும் பார்சியருக்கும் கொடுக்கப்பட்டது என்றும் அர்த்தமாம். தானி. 5-அதி. அன்று இராத்திரியிலே பெல்ஷாத்சார் கொல்லப்பட்டான். அன்று இரவு கோரோசின் சேவகர் போய் நித்தோகிரி வெட்டுவித்திருந்த ஏரியில் ஆற்றின் தண்ணீர் ஓடும்படியாக அதின் வறறிப்போக நடு இராத்திரியில் அந்த வழியாய்ப் பட்டணத்தில் பிரவேசித்து அதைப் பிடித்துக்கொண்டான். குடிவெறியினால் வாசல்கள் அடைக்கப்படவில்லை.

இப்படியாக பாபிலோன் பிடிபட்டதோடு அது தோன்றி (209) வருஷத்துக்குள் அழிந்துபோயிற்று. பாபிலோனை முதலாவது ஸ்தாபித்தவனாகிய (Nabonessar) நாபோநாசர் (கி. பி. மு. 747) காலமுதல் பெல்ஷாத்சாரின் 17-ம் வருஷம் (கி. பி. மு. 538) வரை 209-வருஷமாயிற்று.



பாபிலோனின் வல்லமையும், பெருமையும், எருசலேம் பட்டணமும் தே
வாலயமும் அழிந்த (70) வருஷத்துக்குள் அழிந்துபோயின. இதற்கு
விரோதமாய் ஏசாயா, எரேமியா, ஆபகூக், தானியேல் சொன்ன தீர்க்கதரி
சனங்கள் நிறைவேறின. பாபிலோன் பட்டணம் மேதியர், ஏலாமித்தர்,
அர்மேனியரால் முற்றிக்கைபோடப்படுவதைப்பற்றி, ஏசா. 13: 17. 21: 2.
எரே. 51: 11, 27—30 சொல்லியிருக்கிறது. நதி வற்றிப்போவதைப்பற்றி
எரே. 50: 38-லும் 51: 36-லும் விருந்தின் காலத்தில் பட்டணம் பிடிபடுவ
தைப்பற்றி எரே. 51: 39, 57-லும் சொல்லியிருக்கிறது. "அவர்கள் என்
றைக்கும் விழிக்காத தூக்கமாய்த் தூங்கி விழுவார்களென்று சொல்லிய
படி பெல்ஷாத்சாரும் அவன் பிரபுக்கள் 1000-பேரும் அரண்மனையிலே
கொல்லப்பட்டார்கள். தேவன் பாபிலோனை முள்ளம்பன்றிகளுக்குச்
சுதந்தரமும் தண்ணீர் நிற்கும் பள்ளங்களுமாக்குவேனென்று (ஏசா. 14:
23)ல் சொல்லியபடி தேவன் வெள்ளம் பட்டணத்துக்குள் வாராதபடி
போட்டிருந்த அணையை வெட்டிப்போடச் செய்ததால் நிறைவேற்றி
னான். (ஏசா. 14: 22)ல் புத்திரனையும், பௌத்திரனையும் சங்கரிப்பேனெ
ன்று கர்த்தர் சொல்லியபடி நேபுகாத்நேச்சாருடைய மகன் ஏவில்மேரோ
தாக்கு அவன் வாலிபத்திலும், பெல்ஷாத்சார் பாபிலோனைப் பிடிக்கும்
போதும் கொல்லப்பட்டார்கள். பாபிலோன் இனி ஆளுகைசெய்யாத
படிக்கேதுவாய் தேவன் அதின் செங்கோலை முறித்துப்போட்டார். (ஏசா.
14: 5.) இங்கிலீஷ் திருப்புதலில் ஏசா. 14: 22-ல் சொல்லிய குமாரனும்,
(Neohew) சகோதரன் மகனென்றிருப்பதும் சரியல்ல. மூலத்தில் (Neked)
நெக்கேது என்ற வார்த்தை குமாரனுடைய மகன் என்று அருத்தங்கொள்
ளும். (ஆதி. 21: 23. யோபு 18: 19.)

கி. பி. மு. 538-ல் பெல்ஷாத்சார் மரித்தவுடனே கோரோஸ் என்ப
வன் பாபிலோன் இராஜ்யத்தைத் தன் மாமனாகிய தரியு என்பவனுக்குக்
கட்டிக்கொடுத்தான். தானி. 5: 31. பாபிலோனில் செய்யவேண்டிய ஒழுங்
குகளைச் செய்தபின் பார்சுதேசத்துக்குப்போய் அங்கே தன் தகப்பனையும்
தாயையுங் கண்டு, மேதியா தேசத்துக்குப்போய், தன் மாமன் குவக்சரோ
சுக்கு ஒரே மகளாயிருந்தவளை விவாகஞ்செய்து, அவன் இறந்தபின்பு சீத
னமாக மேதியா இராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டான். பின்பு அவன்
தன் மனைவியோடே பாபிலோனுக்குப் போனான். அங்கே தரியுவோடே
ஆலோசனைபண்ணிக்கொண்டு இராஜ்யத்தை 120-நாடுகளாகப் பிரித்து,
ஒவ்வொரு நாட்டுக்கும், தன்னோடே பிறந்தும், யுத்தங்களில் பேர்பெற்ற
வர்களுமான அதிபதிகளை நியமித்து, அவர்களெல்லாருக்கும் மேலாக
(3) முதலாளிகளை கோரோஸ் ஏற்படுத்தினான். இந்தத் தலையான முதலாளி
களில் தானியேல் முதல்வனானான். இது தானியேலுடைய பிரபலமான
ஞானத்தினாலும், இராஜ்ய காரியங்களில் வெகுகால அநுபோகசாலியாயி
ருந்தபடியால் இந்தக் கனங் கிடைத்தது. இவர் பாபிலோன் இராஜ்யத்
தில் நேபுகாத்நேச்சாருடைய 2-ம் வருஷமுதல் 65-வருஷமாக பிரதான
மந்திரி வேலையிலிருந்திருக்கிறார். இவர் முழு இராஜ்யத்துக்கும் இரண்
டாவது இராஜாபோலிருந்தார். தானியேல் 6-அதி. இதினால்தான் சத்து
ருக்கள் அவரைப் பகைத்து அவர் சாகும்படி சிங்கக்குகையில் போட,
தேவன் அதிசயமாய் அவரைக் காப்பாற்றினதால், மேன்மையடைந்தார்.
"தரியுவின் இராஜ்யபார காலத்திலும் கோரோசுடைய இராஜ்யபார காலத்
திலும் தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது." தானி. 6: 28.

# இரக்ஷணிய யாத்திரிகம்.

## காட்சிப் படலம்.

நையடை யெனப்புனை கவிக்கொள்பதி சத்தை
மெய்யுணர்வோ டுள்ளுருகி விண்டுமறை வாணன்
மையற விளக்குவிசு வாசஅணை மேவிச்
செய்யகண் முகிழ்த்தமைதி யோடுதுயில் செய்தான். 1

கண்டுயி லிலாதுலகு காவல்புரி கின்ற
அண்டர்பெரு மான்சர ணடைக்கல மமைந்து
தண்டரள வெண்ணகையர் தத்தம சரங்கில்
கண்டுயில் வதிந்தனரக் கங்குல்கழி காறும். 2

எண்ணில்பல கோடிய பிராணிகளு மெல்லாம்
கண்ணிமை யடைத்தன அடைத்தன கபாடம்
அண்ணலரு ளாலயின் அருங்கடி யமைந்த
விண்ணிலவு தாரகண மெய்சுறும் விராய. 3

பின்னுறுவ சோர்கிலர் பெருந்தன மிடுக்கர்
முன்னுற வியற்றுவர்பல் தீங்குமுறை பேணார்
துன்னிருளு மப்பரிசு தொல்கவி னழித்த
மன்னுலகை யென்றெதிரு மாறுணர்வி லாதே. 4

அற்புணரி கண்டியங்கி லந்திகழும் வண்ணம்
பிற்புணரும் வைகறை பிறங்கியுறு வஞ்சர்
சற்பனையின் வெவ்விடர் சகிக்கவரு மேனும்
தற்பரன் அருட்கெதிர் தரித்தியல்வ தேயோ. 5

சூழிக விருட்பகை துமித்தற வெறிந்து
பாழியுல கத்தினை விளக்குமோர் பதங்க
ஆழியர சற்குரிய கட்டிய மடுத்துக்
கோழிமுத லாயின விளித்தன குலாவி. 6

சஞ்சல முடித்தலை தரிக்கவச மின்றி
எஞ்சிய இருஞ்சுட ரொழுந்தது குணக்கில்
நஞ்சிருளி லேதனி நடந்தமறை வாணன்
அஞ்சரிதம் யாதெனை அடுத்தறிகு வான்போல். 7

வலிந்தொளி கிளம்பியுத யந்திகழ வல்லே
மெலிந்திரு ளிரிந்தன துயின்றன விழித்த
மலிந்தன வயின்றொறும் வழங்குபல வேலை
பொலிந்தன தராதலமோர் புத்தலக மேபோல். 8

பத்திமதி யூகிவிசு வாசிபர மார்த்தி
வித்தகி சிநேகிதயை வேதவதி யாதி
உத்தமிகள் உன்னத மகோபிதயை உன்னிச்
சித்தமொடு கீர்த்தனை தெளிந்தன ரெழுந்தார். 9



காலையெழு முன்னிரவு கண்டுயில் பொருத்திச்
சாலவருள் தந்துசம ரக்ஷணை சமைத்த
சீலமிகு ஜீவபதி சேவடி பழிச்சிக்
கோலமறை யோனுணர்வு கூடின னெழுந்தான். 10

### தேவாரம்.

#### காலைத்துதி. பண்காந்தாரம்.

எந்தையே ஸ்தோத்திரம் இகலில் மன்பொதுத்
தந்தையே ஸ்தோத்திரம் சருவ லோகமும்
விந்தையாய்ப் படைத்தருள் விமல ஸ்தோத்திரம்
அந்தணு ஸ்தோத்திரம் அனந்த ஸ்தோத்திரம். 1

பொருட்படு பொறிபுல னொடுங்கிப் பொன்றல்போல்
மருட்படு துயில்கொளீஇ மறந்திக் கங்குல்வாய்
இருட்பெருங் கடல்குளித் தேனைக் காத்தனை
அருட்பெருங் கடலனே அனந்த ஸ்தோத்திரம். 2

எத்தனை யோவிடந் திரவிற் றேர்கிலேன்
அத்தனை யுந்தூரந் தருள் விழிக்கடை
வைத்தெனைக் காருயிர் வழங்கிக் காத்தனை
அத்தனே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 3

எண்ணவெம் மாத்திர மேழை யானுன
புண்ணிய விழித்துணை பொருந் துறுதெனைக்
கண்ணிய துயிலிடைக் காத் தளித்தனை
அண்ணலே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 4

கனவிரு ளகற்றியிக் காலை யுய்த்தல்போல்
மனவிரு ளதனையு மாற்றி நீதியின்
தினகர னருள்வழி செலுத்தி யென்னையாள்
அனகனே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 5

கண்டுயி லீத்தருங் கருணை மைந்தனைக்
கொண்டெனை மீட்டதுங் குறிக்கொண் டன்பொடு
தொண்டனைக் கியற்றமெய்த் துணிவு தந்தருள்
அண்டர்நா யகவுனக் கனந்த ஸ்தோத்திரம். 6

மாதிரம் யாவையும் வளைந்த வல்லிருட்
போதிலே பலர்புக லுலகம் போகவும்
பேதையேற் கெமனொடும் பிழைப்பை யூட்டினை
ஆதியாய் நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 7

நேயமே விடமர ணுந்த காரம்வந்
தோய்வென மூடினின் றுடற்று மாயினும்
தூயபங் கயமுக ஜோதி காட்டியாள்
ஐயனே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 8

மைப்படு கங்குலைக் கடந்துன் வண்மையால்
இப்பகல் கண்டனை யேத்த நின்றனன்
எப்பரி சியான்கைம்மா றியற்று கேனென
அப்பனே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம். 9

திகிலுலாம் பவவிருள் சிதையத்திவ்விய
சுகிர்தமார் தருமொழிச் சுருதி வான்சுடர்
மகிதல மெங்கணு மலிய நல்குவாய்
அகிலலோ கேஸ்வர அனந்த ஸ்தோத்திரம். 10

காலைத்துதி முற்றிற்று.

காத்தருள் புரிந்தகரு ணைக்கடவுள் வேந்தன்
ஏத்தரிய சேவடி யிறைஞ்சியித யத்துப்
பூத்தவுணர் வோடுரிய பொற்புறு தவத்து
மாத்தகைய ரோடளவ ளாவினன மகிழ்ந்தே. 11

தம்மகவு கண்டுருகு தாயென அன்பின்
அம்மனைய ருங்கனி யகத்துவகை பொங்கிச்
செம்மொழி பகர்ந்துமறை யோய்சிறிது போழ்து
மம்மரக லிம்மனை வதிந்தகறி யென்றார்.

மாதவ வழிப்படுகை வல்ய வயி ராக்ய
வேதியனும் நன்றென விருப்புடன் விளம்ப
மேதகைய சிற்சுகம் விசித்தென விளங்கும்
போதமுறு புத்தக அரங்குழை புகுந்தார். 13

வரங்குலவு புத்தக மலிந்துமதி தோயும்
அரங்குலவு கேகைச டற்றெழில் அமர்ந்தே
உரங்குலவி நின்றதை யுணர்ந்துமறை வாணன்
பரங்குலவு ஞானமுறை பள்ளியறை யென்றான். 14

அருந்தவ மடந்தையர் அறப்புற மமைந்த
பெருந்தகைகுணுகிசய மாறிய பிறங்கித்
திருந்துமுறை சிற்சில திறந்தினிய செஞ்சொல்
விருந்தின ளுளங்கொள விரித்திடுவ தானார். 15

அலகில்புவ னங்களை யமைத்திய லறத்தை
நிலையுற நிறுத்தியருள் நீதிபுரி சீயோன்
மலைபரம னேர்குமரன் வந்தவ தரித்த
குலவரிசை யீதென விளக்கினளோர் கோதை. 16

நூக்கரிய சத்திரமி நாக்கிய வநாதி
கோக்குமர னீண்டிபுரி கோகில்கிரி யாதி
மீக்கருணை மீட்டவர் பெயர்த்திறம் விளங்க
வாக்கிய மெடுத்தினி துரைத்தனளோர் மங்கை. 17

மீட்சியுறு மன்பதைகள் வீட்டுலக மேவி
ஆட்சியுறு மாளிகை அனந்தமழி வில்லா
நீட்சியுறு சிற்சுக நிறைக்கநிறை வெய்தி
மாட்சியுறு மென்பதை வகுத்தனளோர் மாது. 18

சத்துரு புறக்கொடை தரச்சமரில் வென்று
பத்தர்சிலர் ராஜ்யபரி பாலன நடத்தி
முத்திநக ரத்திறை மொழிந்ததிரு வாக்குத்
தத்தவர முற்றபடி சாற்றினளோர் தையல். 19



அண்டருல கத்தரச னாணையி னமைந்த
தொண்டர்சில ரங்கியெரி சூளையு ளுலாவிச்
சண்டவரி மாவொடு தரித்ததை யெடுத்து
விண்டனள் மனங்கரைய மெல்லிய லொருத்தி. 20

நண்ணல ரடர்ந்துயிர் நடுங்கியுடல் நைய
எண்ணரிய வாதைக ளியற்றியடு போழ்தும்
அண்ணலடி யார்பலர் அறத்திற மிழுக்கா
வண்ணமிதி தென்றுரை வகுத்தனளோர் வல்லி. 21

வானமொடு பூமிநிலை மாறுகினு மாறு
மேனிகழ்வ தென்றுரைசெய் சம்பவ விதங்கள்
தானமிசை முற்றிமுறை சான்றுபடு மென்று
ஞானமிகு தீர்க்கமொழி காட்டினளோர் நாரி. 22

கோன்புலையர் பைப்பய வளர்த்தெரி கொளுத்த
என்புகரு கித்தனு வெரிந்துபடு போழ்தும்
மன்புதல்வர் அன்பையுள் மதித்திருவர் மாய்ந்த
அன்பின்வலி நன்குற விளக்கினளோர் அம்மை. 23

தற்பரகு மாரனதி சற்குண விகாசம்
அற்புத விதங்கள்பர மாச்சரிய ஞானம்
பற்பல சுகிர்தநிய பலங்கள் இவையெல்லாம்
பொற்புற விளக்கினர்பல் பூவையர்கள் மாதோ. 24

இத்திற மதங்கிய ரியம்புமொழி கேட்டும்
உத்தம மொழித்திற முணர்ந்துமறை வாணன்
வித்தக மறைப்பொருள் விளக்குமிதி காச
சத்திய மறிந்துமகிழ் வோடுதெரி கொண்டான். 25

போயதொரு நாள்மறு பகற்பொழுது போந்து
மேயதென மாதவிகள் வேதியனொ டேகித்
தூயதிரு மந்திர சுயம்பிரபை தோய்ந்த
ஆயுத வருக்கநிறை சாலையை அணைந்தார். 26

வேறு.

கண்கவருங் கவினார்ந்த கனகமணி மண்டபத்துப்
பண்கவரு மொழிமாதர் பலர்குழுமிப் பணிந்தேவ
விண்கவர மிளிர்பத்தி வேதியனன் முகநோக்கி
எண்கவரும் படைக்கலங்க ளியன்முறைமை யெடுத்துரைப்பாள். 27

பேராழி கரைபுரண்டு பிறழாமற் பவஞ்சத்தை
ஓராழி யெனவுருட்டி உதிதடொங்கித தினஞ்செய்வான்
ஏராழிக் கதிர்ஞாவி யியற்கைமுறை புரிதருமச்
சீராழிப் படையீண்டு திகழுகின்ற திறநோக்காய். 28

சலங்காட்டி யழிக்காது தயைகாட்டி யாசர்பிரான்
புலங்காட்டிப் புறச்சமயப் புரைகாட்டி யிரக்ஷணிய
நலங்காட்டிக் குணங்காட்டி நயங்காட்டிப் பகைப்புலத்தை
வலங்காட்டி யிழுக்கின்ற மணிப்பாச மிதை காணாய். 29

பாருதித்த இளவரசன் பகைப்புலத்துக் கொடுங்கூளி
காருதித்த தெனவெதிர்ந்து கைகலப்பக் கொழுங்குருதி
வேருதிக்கப் பொருதழித்து விறல்புனைந்த மேனளிக்
கூருதித்த படைக்கலங்கள் குறிக்கொண்ட படிகாணாய்.

இன்னும் வரும்.

## HELP TO READING THE EPISTLE TO THE HEBREWS.

## எபிரேயர் நிருப வாசிப்புத் துணை.

(தொடர்ச்சி.)

### III நிருபத்தின் பொருள்.

அக்காலத்து யூதபக்தர் எருசலேம் தேவாலயத்திலும், கிறிஸ்தவ ஆலயங்களிலும் தேவனை ஆராதித்தார்கள். அவர்கள் சனிக்கிழமையையும் ஞாயிற்றுக்கிழமையையும் ஓய்வுநாளாக ஆசரித்தார்கள். அவர்களுடைய ஒரு கால் யூதமார்க்கத்திலும், மற்றொரு கால் கிறிஸ்துமார்க்கத்திலுமிருந்தது. இப்படிப்பட்டவர்களுக்குப் பழமையானது ஒழிந்துபோகிறதென்றும், எவனாவது இரட்சணியத்துக்காக அதைப் பற்றிக்கொண்டால் அவன் அவநம்பிக்கையாகிய மோசத்தில் அகப்படுவானென்றும் காட்டியிருக்கிறானென்பது தெளிவாயிருக்கிறது. "புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார். பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது. ஒருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது." எபி. 8: 13. ஆகையால் அவர்களை உற்சாகப்படுத்தவும், அவர்களின் மாறுபாடுகளைக் குணமாக்கவும் வனாந்தரத்தில் அடிக்கப்பட்ட ஆலயக் கூடாரத்திலிருந்து முற்றுமுடிக்கப்பட்ட மகிமையான தேவாலயத்திற்கு வர பலத்த சத்தமாய் அழைக்கிறார். நிருபத்தை எழுதுகிறவர் தாமே மகா பரிசுத்தமான ஸ்தலத்திற்குட் சென்று மலையாகிய சீயோனிலிருந்து இக்கடிதம் எழுதுகிறார். மேலும் புது உடன்படிக்கையின் இரத்தத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறதால் அவர்கள் தாங்கள் அங்கே வந்து சேர்ந்திருக்கிறதாகவும் தெரிவிக்கிறார். எபி. 12: 22. வக்கணையுமின்றி வாழ்த்தலுமின்றி பரிசுத்தஆவியின் மேன்மையான பலமுடையவராய் உள்ளம் பொங்க இந்நிருபத்தை எழுதத் தொடங்குகிறார். இயேசு இங்கே மகிமையின் கிரீடமும் உறைந்த மழைபோல் வெண்மையான உடையும் தரித்தவராய்க் காணப்படுகிறார். கிறிஸ்தவர்களின் மெலிவுக்கு இயேசுவே பரிகாரம். அதாவது இயேசு மகிமையிலிருக்கிறார். அவர் பலிபீடத்தண்டையிலும் பலிபீடத்திலும் இருக்கிறார். இயேசு பரமேறியிருக்கிறார். இரக்கம் நிறைந்தவராயிருக்கிறார். யேசு திரும்பவும் வருவார் என்பதே. இதற்குமுன் ஒருபோதும் காணப்படாத வண்ணமாக ஏசுவின் மகத்துவத்தையும் ஏசுவின புண்ணியத்தையும் பிரஸ்தாபிக்கின்ற இப்படிப்பட்ட மகத்துவமான காட்சியோடு இந்நிருபம் தொடங்குகிறதென்று நாம் கவனிக்க



லாம். இவ்வாகம ஆக்கியோன் இயேசுவானவர் தமக்குமுன் இருக்கிறதாகப் பாவித்து யூதருடைய சரித்திரச் சுருளின் முக்கிய பாகத்தைத் திறந்து முற்காலத்திலுள்ள எந்தப் பெரிய மனிதனும் எந்தப் பரிசுத்த பொருளும் அவருக்கு ஒப்பல்லவென்று காட்டுகிறார். அவர் தம் இடது கையை எழுதப்பட்ட வேதத்துக்கும் அதிலுள்ள எல்லா ஆச்சரியமானமுன் அடையாளங்களுக்கும் நீட்டி வலது கையைக் கர்த்தராகிய இயேசுவுக்கு நீட்டி அந்தக் கால முழுவதிலுமுள்ள நியாயங்களையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து இம்மானுவேலின தோளில் வைக்கிறார்.

## BIBLE & PRAYER UNION.

## வேதவாசிப்பு ஜெப ஐக்கியம்.

வேதாகமத்தை ஐக்கிய முறைப்படி வாசித்துவரும் எம் இஷ்டர் யாவரும் இவ்வருஷத்து நாளது 29உயில் புதியஏற்பாட்டை வாசிக்கத் தொடங்குகிறார்கள். உலகமெங்குமுள்ள ஐக்கிய மெம்பர்களின் தொகை சென்ற வருடத்தின் கடைசியில் இரண்டு லக்ஷத்துக்கதிகம். இந்த ஜில்லாவிலிருந்தும் அநேகர் ஷெ ஐக்கியத்தின் மெம்பர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். இவ் ஐக்கியத்தில் இன்னும் அநேகம்பேரைச் சேரும்படி கேட்க, நாம் பரி: மத்தேயு சுவிசேஷம் 1-ம் அதிகாரத்தை வாசிக்கத் தொடங்கும் காலமாகிய ஜனுவரி 29உ ஏற்றகாலமென்று அறியவேண்டும். வேதவாசிப்பிற் சற்றும் பழக்கமில்லாதிருந்தவர்களும், கடமைக்காக மாத்திரம் வேதம் வாசித்து வந்தவர்களும் வேதவாசிப்பு ஜெபஐக்கிய ஒழுங்கை வழங்கினதின்பின்பு அதிகப் பலிதமடைந்திருக்கிறார்கள்.

ஆதிக்கிறிஸ்தவர்கள் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம், உபதேசம் முறைமைகள் ஆகிய இவற்றில் நிலைத்திருக்கும்படி அப்போஸ்தலன்மார், அவர்களை "தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும்" ஒப்புவித்தபிரகாரம் இக்காலத்திலுள்ள கிறிஸ்தவர்களையும் அவர்கள் தாங்கள் "கேட்டவைகளைவிட்டு விலகாதபடிக்கு" கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கே ஒப்புவிக்கவேண்டும்.

வேதாகம சங்கத்தாரால் வருஷந்தோறும் எத்தனை ஏராளமான வேதபுஸ்தகங்கள் அச்சடிக்கப்பட்டுப் பிரசுரமாகின்றன. வேதவசனத்தைப் பிரசங்கிக்கிறவர்களும் தற்காலத்தில் கிராமங்கள்தோறும் உண்டு. இப்படியிருக்க ஜனங்கள் வேதாகமத்தைக் கையாடாத விஷயத்தில், வேதாகமத்தினால் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகள் மட்டாகத்தானிருக்கும். ஆகையால் கர்த்தருடைய வசனம் இப்புது வருஷத்தில் முன்னைவிட அதிகமாய் மகிமைப்படவும் "அநேகர் அங்கும் இங்கும் ஓடி" அதை ஆராயவுந்தக்கதாக, கிறிஸ்தமான ஜனங்கள் யாவரும் சுவிசேஷ வசனங்களை வாசிக்கச் செய்வதில், நாம் எல்லாரும் மிகுந்த ஜாக்கிரதையுள்ளவர்களாயிருப்போமாக.

மேலும் எந்தச் சபையில் வேதத்தை வாசித்துத் தியானிக்கிறவர்கள் அநேகர் இருக்கிறார்களோ அந்தச் சபையில் பொதுவாகப் பிரிவினைகளும், மறுதலிப்பும் இல்லையென்று சில சுதேசப் போதகன்மார் பரீட்சையாய் அறிந்து மிஷனரி கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். ஆனபடியால்

சபையின் காரியஸ்தரும் விசேஷமாய் தேவஊழியக்காரரும் தங்கள் தங்கள் விசாரணைக்குட்பட்டிருக்கும் திருச்சபையின் ஜனங்களும், பாடசாலையிற் படிக்கிற பிள்ளைகளும், ஐக்கிய ஒழுங்கின்படியாவது, வேறெந்த ஒழுங்கின்படியாவது வேதம் வாசித்து வரும்படி செய்யப் பிரயாசப்படுவது அவர்கள் கடமையாயிருக்கிறது.

1885-ம் வருஷத்து ஐக்கிய வாசிப்பின் அட்டவணையாகிய கார்ட்கனம்: T. கெம்பர் ஐயரவர்களிடத்தில் வாங்கலாம்.

G S.

---

# நோட்டீஸ்.

---

## வித்தியா விஷயம்.

ரிசல்ட்டுகிராண்டு பள்ளிக்கூடங்களில் படிக்கிற மாணாக்கர்களுக்கு வாக்சிநேஷன் சர்ட்டிபிக்கெட்டுக் கொடுக்கவேண்டிய சங்கதியைப்பற்றி எடியுக்கேஷனல் டிப்பார்ட்டுமெண்டாருக்கும், வாக்சின் டிப்பார்ட்டுமெண்டாருக்கும் தெளிவாய்த் தெரிந்து அனுசரிக்கவேண்டியதற்காக அடியில் கண்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

(1) பள்ளிக்கூடம் டிப்ட்டி இன்ஸ்பெக்ட்டர் இ. பாரத்தில் வரப்பட்ட அப்பிளிக்கேஷன்களை அட்டவணைசெய்தவுடனே பரீக்ஷைக்கு ஏற்றுக்கொள்ளவேண்டிய பள்ளிக்கூடங்களின் ஜாபிதாவுக்கு ஒரு பிரதி வாக்சிநேஷன் டிப்ட்டி இன்ஸ்பெக்ட்டர்களுக்குக் கொடுக்கவேண்டியது.

(2) ஷை ஜாபிதா வந்ததின்பேரில் டிப்ட்டி வாக்சிநேஷன் இன்ஸ்பெக்ட்டரும், ஸ்பெஷியல் டியூட்டியில் ஒரு சீனியர் முதலாவது கிளாஸ் வாக்சிநேட்டரும் பரீக்ஷைத் தெய்திக்கு 2 வாரத்துக்குமுன் ஒரு லோக்கல்பண்டு டிஸ்பென்சேரியிலிருந்து 5 மயிலுக்கப்பாலிருக்கப்பட்ட எல்லாப் பள்ளிக்கூடங்களையும் பார்வையிடும்படிக்கானவிதமாய் அவர்கள் போகும் சர்க்கியூட்டுகளை நிச்சயஞ்செய்யவேண்டியது. 1883௵ மேமீ 5௳ போட்ட 887-நம்பர். கவர்ன்மெண்டார் உத்தரவுப்படிக்கு பள்ளிக்கூடம் ரிஜிஸ்தர்களில் அவர்கள் சர்ட்டிபை செய்யவேண்டியது. மேலும் வாக்சின் ஆபீசர் பள்ளிக்கூடத்துக்கு இன்ன தெய்தியில் வருகிறேனென்பதைப்பற்றி பள்ளிக்கூடம் மானேஜர்களுக்கு நோட்டீஸ் அனுப்பவேண்டியது. இந்த நோட்டீசுகளைக் கிராமத் தலைமை உத்தியோகஸ்தர்கள் வாங்கிக்கொண்டு பள்ளிக்கூட மானேஜர்களுக்கு அட்டியன்னியில் சேர்ப்பிக்கவேண்டியது. கிராமமுன்சீபு அவைகளில் கையெழுத்து வைத்து மானேஜர்கள் கையெழுத்தோடு வாக்சின் ஆபீசருக்கு அவைகளை வாபஸ் பண்ணவேண்டியது.

(3) 1884௵ செப்டெம்பர்மீ 6௳ ஜில்லா கெஜட்டின் 56-வது பக்கத்தில் பிரசுரஞ்செய்திருக்கிற விளம்பரத்தை மானேஜர்கள் கவனிக்கவேண்டியதுந்தவிர வாக்சின் ஆபீசர் வந்தகாலத்தில் வேண்டிய சர்ட்டிபிக்கெட்டுகளை பெற்றுக்கொள்ளும்படி, பள்ளிக்கூடத்து ரிஜிஸ்தர்களுடனும் மாணாக்கர்களுடனும் மானேஜர்கள் ஆஜராயிருக்கும்படி இதினால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சர்ட்டிபிக்கெட்டுக் கொடுப்பதில் தாமசம் நேரிடாதபடிக்கு வாக்சின் ஆபீசர் வருகிறதற்குமுன்னமே அம்மை



குத்தாத மாணாக்கர்களை அம்மை குத்தச்செய்யவேண்டியது ஒவ்வொரு மானேஜருடைய கடமையாயிருக்கிறது.

(4) மானேஜர்கள் சர்ட்டிபிக்கெட்டுகளை வாங்கிக்கொள்ளத் தவறிப்போனால் வாக்சின் ஆபீசர் அந்தச் சங்கதியை விவரமாய்க் குறிப்பிட்டு ஒரு கிராம உத்தியோகஸ்தருடைய கையெழுத்தை வாங்கி, பள்ளிக்கூடம் டிப்ட்டி இன்ஸ்பெக்ட்டருக்குத் தெரியப்படுத்தவேணும். அவர் அப்பேர்க்கொத்த பள்ளிக்கூடத்தை ஜாபிதாவிலிருந்து நீக்கி அச்சங்கதியை லோக்கல்பண்டு போர்டு ஆபீசுக்கு ரிப்போர்ட்டுச் செய்வார்.

(5) லோக்கல்பண்டு டிஸ்பென்சரியிலிருந்து 5 மயில் தூரத்துக்குளிருக்கப்பட்ட பள்ளிக்கூடங்களை மெடிக்கலாபீசர் பார்த்துக்கொள்ளுவாரென்ற முகாந்தரத்தின்பேரில் ஷை பள்ளிக்கூடங்களை வாக்சிநேட்டர்கள் பார்க்காமல் அஜாக்கிரதையாயிருக்கக் கூடாது. மெடிக்காலாபீசர்கள் சர்ட்டிபிக்கெட்டு மாத்திரம் கொடுக்கும்படி உத்தரவுசெய்திருக்கிறது.

---

162394

## சமாசாரத்திரட்டு.

---

இந்தியாவுக்கு கவர்னர் ஜெனரலாய் நியமனம்பெற்ற மாட்சிமை தங்கிய லாட் டப்ரின் அவர்கள் டிசம்பர்மீ 2௳ சாயங்காலம் மூன்று மணிக்கு கல்கத்தாவைச் சேருவார். அவ்விடத்தில் அநேக உத்தியோகஸ்தரால் அரச சின்னங்களோடும் அரச மரியாதைகளோடும் அழைக்கப்பட்டு அரச மாளிகைக்குப் போவாராம்.

ஒரு கோழி முட்டையில் இரண்டு தலை, நாலு கால், நாலு இறக்கை, இரண்டு வால், தேகம ஒன்று இவ்விதமாக ஜென்மித்தது. அநேகர் வந்து பார்த்து அதிசயித்தார்கள். குஞ்சானது சற்றுநேரம் இருந்து மரித்துப்போய்விட்டது. ஒரு பெரிய கோழியானது ஒரு சிறு குருவி முட்டையைப்போல முட்டையிட்டது. இது நடந்தது திருப்பத்தூரில்.

தேள் கொட்டுக்கு மருந்து.—மாங்கொட்டையிலுள்ள பருப்பை தூளாக்கி ஜலத்தில் கலந்து கொட்டிய இடத்தில் பூசி கொஞ்சம் அனல் காட்ட 15-நிமிஷத்தில் லெகுவாகும்.

அண்டமான் தீவுக்கு அனுப்பப்பட்டிருந்த சேலம் கைதிகள் அவ்விடம்விட்டு புறப்பட்டு இன்னம் இரண்டொரு தினத்தில் சென்னபட்டணம் வந்து சேர்வார்களாம்.

புதுத் தீவு.—பதினொரு மைல் நீளமுள்ள ஒரு தீவு ஐசிலாண்டுக்குக் கிட்ட கிளம்பி இருக்கின்றது.

சோதி விருக்ஷம்.—இது நீலகிரி மலையில் உள்ளதாம். இது உள்ள இடத்தில் அதிகப் பிரகாசம் வீசுகின்றதாம். அதில் ஒரு கிளையின் துண்டை ஒரு இருட்டு அறையில் வைத்தால் அதினுள் பிரகாசம் உண்டாகிறதென்றும், இரண்டுநாள் கழித்தால் பிரகாசம் மங்கிப்போகிறதென்றும், பரீக்ஷைசெய்து பார்த்த ஒரு இஷ்டர் பத்திரிகைக்குத் தெரிவித்தார். கொல்லி மலையிலும் திருப்பதி மலைகளிலுள்ள குகைகளிலும் இம்மரம் இருப்பதாகச் சொல்லுகின்றார்கள்.

---

டிசம்பர்மீ நாள்-31. கார்த்திகைமீ 18உ முதல், மார்கழிமீ 18உ வரைக்கும்.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| தி | 1 | ௧௮ | இனி அவர்களை நேசிக்கமாட்டேன். ஓசியா 9:15. |
| செ | 2 | ௧௯ | அவர்கள் சிலைகளை நாசமாக்குவார். 10:2. |
| பு | 3 | ௨௰ | எப்பிராயீமே நான் உன்னை எப்படிக் கைவிடுவேன். 11:8. |
| வி | 4 | ௨௧ | அழுது அவரை நோக்கிக் கெஞ்சினான். 12:4 |
| வெ | 5 | ௨௨ | என்னையன்றி இரட்சகர் ஒருவரும் இல்லை. 13:4. |
| ச | 6 | ௨௩ | திக்கற்றவன் உம்மிடத்தில் இரக்கம்பெறுகிறான். 14:3. |
| ஞா | 7 | ௨௪ | கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன். யோவே. 1:19. |
| தி | 8 | ௨௫ | என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. 2:26. |
| செ | 9 | ௨௬ | கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது 3:14. |
| பு | 10 | ௨௭ | கர்த்தர்.. எருசலேமிலிருந்து சத்தமிடுவார். ஆமோ. 1:2 |
| வி | 11 | ௨௮ | வேகமானவன் தன் கால்களால் தப்பிப்போவதுமில்லை. 2:15. |
| வெ | 12 | ௨௯ | பெரிய வீடுகளுக்கும் முடிவு வரும். 3:15. |
| ச | 13 | ௩௰ | நீங்கள் என்னிடத்தில் திரும்பாமற் போனீர்கள். 4:6. |
| ஞா | 14 | ௧ | கர்த்தரைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள். 5:6. |
| தி | 15 | ௨ | நீதியின் கனியை எட்டியாகவும் மாற்றினீர்கள். 6:12. |
| செ | 16 | ௩ | இனி அவர்களை மன்னிக்கமாட்டேன் 7:8. |
| பு | 17 | ௪ | அவர்களுடைய முடிவைக் கசப்பான நாளாக்குவேன். 8:10. |
| வி | 18 | ௫ | யாக்கோபின் வம்சத்தை முழுவதும் அழிக்கமாட்டேன். 9:8. |
| வெ | 19 | ௬ | ஏசா வம்சத்தாரோ வைக்கோல் துரும்பாயிருப்பார்கள். ஒப. 18. |
| ச | 20 | ௭ | எழுந்திருந்து, உன் தேவனை நோக்கி வேண்டிக்கொள். யோனா 1:6. |
| ஞா | 21 | ௮ | என் விண்ணப்பம்.. உம்மிடத்தில் வந்து சேர்ந்தது. 2:7. |
| தி | 22 | ௯ | தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்கள். 3:10. |
| செ | 23 | ௰ | தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்று அறிவேன். |
| பு | 24 | ௧௧ | உனக்கு இன்னும் ஒருசுதந்தரவாளியை வரப்பண்ணுவேன். மீகா |
| வி | 25 | ௧௨ | அவர்கள் இராஜா அவர்களுக்கு முன்பாகப் போவார். 2:13. |
| வெ | 26 | ௧௩ | கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும்...நிரப்பப்பட்டிருக்கிறே |
| ச | 27 | ௧௪ | உன் ஆலோசனைக்காரர் அழிந்துபோனார்களோ? 4:9. (3மன். |
| ஞா | 28 | ௧௫ | அவர்கள் நிலைத்திருப்பார்கள். 5:4. |
| தி | 29 | ௧௬ | இஸ்ரவேலோடே அவர் வழக்காடுவார். 6:2. |
| செ | 30 | ௧௭ | நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன். 7:9. (8. |
| பு | 31 | ௧௮ | கர்த்தர் நீடியசாந்தமும், மிகுந்த வல்லமையுமுள்ளவர். நாகூ. 1: |

## விசேஷ நாட்கள்.

2. பௌரணை.
7. அட்வெந்தென்னும் நாட்களில் 2-ம் ஞாயிறு.
11. அட்வெந்தென்னும் நாட்களில் 3-ம் ஞாயிறு.
17. அமாவாசை
21. அட்வெந்தென்னும் நாட்களில் 4-ம் ஞாயிறு
,, பரி. அப். தோமாவின் திருநாள்.
25. கிறிஸ்து ஜநநதிருநாள்.
26. பரி. ஸ்தேவான் இரத்தச்சாட்சி திருநாள்.
27 பரி. அப். போவான் சுவிசேஷகன் திருநாள்
28. கிறிஸ்து ஜநநதிருநாளுக்குப் பின்வரும் 1-ம் ஞாயிறு
,, குற்றமில்லாத பாலர் திருநாள்.